அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்

(பாகம் - 2)



அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்

(பாகம் - 2)

வெளியீடு :

தமிழ்க்கனி பதிப்பகம்

சென்னை - 600 004

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

894.811
TAM

விலை ரூ. **410/-**

ANNA CENTRE
CHENNAI - 6

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது

நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான ''திருக்குவளை'' உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை ''குளித்தலை தொகுதி''யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றி பெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர்

திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் ''அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி''யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் -

இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் – இவையிரண்டும்

கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

– தமிழ்க்கனி பதிப்பகத்தார்

பொருளடக்கம்

உரை எண்.	தேதி	பொருள்	பக்கம்
53.	15.03.1966	மதியழகன் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை	17
54.	31.8.1970	உரிமைக் குழுவின் விதி பற்றிய பிரச்சினை	21
55.	06.02.1973	அவை செத்து விட்டதா?	27
56.	21.03.1973	ஆற்காடு வீராசாமி கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை	30
57.	06.01.1978	எட்மண்ட் மீதான உரிமைப் பிரச்சினை	34
58.	09.03.1979	பத்திரிகைகள் மீதான உரிமைப் பிரச்சினை	36
59.	09.04.1979	உரிமைப் பிரச்சினை மீதான நடவடிக்கை	38
60.	25.03.1999	ஆலடி அருணா எழுப்பிய உரிமைப் பிரச்சினை	43
61.	24.10.1964	காங்கிரஸ் ஆட்சி மீதான நம்பிக்கையில்லா தீர்மானம்	48
62.	05.08.1966	நாவலர் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம்	68
63.	28.02.1969	கழக ஆட்சி மீது கண்டனத் தீர்மானம்	92
64	09.09.1970	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	112
65.	07.12.1972	நம்பிக்கைத் தீர்மானம்	156
66.	11.12.1972	நம்பிக்கைத் தீர்மானம் பதில் உரை	161

67.	10.08.1973	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	211
68.	17.08.1974	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	242
69.	18.12.1974	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	258
70.	30.10.1975	கண்டனத் தீர்மானம்	294
71.	04.01.1978	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	367
72.	07.01.1978	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	406
73.	26.02.1979	நம்பிக்கை இல்லாத் தீர்மானம்	458
74.	30.10.1979	கண்டனத் தீர்மானம்	507
75.	03.11.1979	கண்டனத் தீர்மானம்	511
76.	31.03.1962	பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு	555
77.	06.07.1977	பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு	557
78.	25.04.1984	பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு	560
79.	12.05.1990	பேரவைச் செயலாளருக்குப் பாராட்டு	566
80.	23.05.1996	பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு	569
81.	20.4.1998	சி. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பாராட்டு விழா	575
82.	29.10.1962	டாக்டர் சுப்பராயனுக்கு இரங்கல் தீர்மானம்	578
83.	21.02.1969	அண்ணா மறைவுக்கு இரங்கல் தீர்மானம்	581
84.	03.02.1973	ராஜாஜிக்கு இரங்கல்	585
85.	09.07.1977	பொன்னப்ப நாடாருக்கு இரங்கல்	591

86.	13.08.1977	முன்னாள் அமைச்சர் இராமையாவுக்கு இரங்கல்	594
87.	16.07.1996	சஞ்சீவ ரெட்டிக்கு இரங்கல்	596
88.	24.01.1997	டாக்டர் சென்னா ரெட்டிக்கு இரங்கல்	601
89.	13.10.1997	தங்க பாண்டியன் மறைவுக்கு இரங்கல்	607
90.	20.03.1998	ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் மறைவுக்கு இரங்கல்	610
91.	30.03.1999	ஆண்டி அம்பலம் மறைவுக்கு இரங்கல்	613
92.	12.04.1999	அப்துல் லத்தீப் மறைவுக்கு இரங்கல்	616
93.	18.05.1999	தேனி மாவட்ட கோவில் விபத்து	619
94.	17.11.1999	செங்கல்வராயன் மறைவுக்கு இரங்கல்	622
95.	6.11.2000	ரங்கராஜன் குமாரமங்கலம் மறைவுக்கு இரங்கல்	627
96.	8.11.2000	சி. சுப்பிரமணியம் மறைவுக்கு இரங்கல்	630
97.	20.01.2001	அபுல் ஹசன் எம்.எல்.ஏ., மறைவுக்கு இரங்கல்	634
98.	30.01.2001	குஜராத் நில நடுக்கம்	636

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

உரிமைப் பிரச்சினைகள்

மதியழகன் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை

உரை : 53 **நாள் : 15.03.1966**

கலைஞர் மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, நண்பர் திரு. மதியழகன் இந்த மன்றத்தின் முன் தங்களுடைய தீர்ப்புக்காக வைத்திருக்கின்ற மிக முக்கியமான இந்த உரிமைப் பிரச்சினையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 9-ஆம் தேதியன்று திரு. சா. கணேசன் அவர்கள் இங்கு எழுப்பிய வினாவுக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில் "திருச்சியைவிட்டு உமாநாத் அவர்கள் வெளியேபோகக்கூடாது என்பதுதான் நிபந்தனை; அந்த நிபந்தனையில் உமாநாத் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதன்படி பரோலில் விடப்பட்டது. அதன் பிறகு அவர்கள் பாராளுமன்றத்தில் கலந்துகொள்ள முடியுமா முடியாதா என்பது வேறு கேள்வி. அதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் இவ்வளவுதான் நடந்தது, வேறு ஒன்றுமில்லை. நேற்று இதைப் பற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது, "ஏதோ சப்-இன்ஸ்பெக்டர் போய் டெல்லிக்குப் போகக்கூடாது என்று உத்தரவு கொடுத்தார்கள் என்று சொல்வதெல்லாம் வெறும் அபாண்டம். அப்படி எந்த விதமான உத்தரவையும் இந்த அரசாங்கம் போடவில்லை. பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பது என்றால் இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்துகொண்ட பின்னால் கேட்டிருக்கவேண்டும். அதல்லாமல் அரசாங்கத்தைக் குறை கூறுவது என்பது தகாத காரியம். நான் முன்னால்

சொன்னதைத் தவிர வேறு இரண்டாவது எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை" என்று முதலமைச்சர் அவர்கள் இங்கு பதில் அளித்தார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள், சப்-இன்ஸ்பெக்டர் அப்படி ஒரு உத்தரவு அல்லது அறிவிப்பு வழங்கியது அப்போது தனக்குத் தெரியாது என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இதிலே வேடிக்கையான வாதம் என்னவென்றால் - அன்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பது என்றால் இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்துகொண்ட பிறகு கேட்டிருக்கவேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் களுக்குப் புத்தி சொன்ன அமைச்சர் அவர்கள், 'ஓரளவு தெரிந்து கொண்டு கேட்டிருக்கவேண்டும்' என்று கூறுகிற அமைச்சர், 'சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவு கொடுத்தாரா' என்பதைத் தெரிந்து கொண்டு இங்கு பதில் சொல்லியிருக்க வேண்டாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திடீரென்று 9-ம் தேதியன்று காலையில் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வியை எழுப்பினார்கள். உடனடியாக நான் பதில் சொன்னேன். அதையும் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : அது கிளப்பப்பட்ட வரலாற்றை நான் ஒருவாறு உணருவேன். எப்படிக் கிளப்பப் பட்டது என்பதெல்லாம் தெரியும். திடீரென்று கிளப்பப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு பாராளு மன்ற உறுப்பினர் டில்லிக்குப் போகக்கூடாது என்று தடை விதிக்கப்படுகிற அளவுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இந்த அரசாங்கத்திலே உரிமை பெற்றிருக்கிறார் என்றால் அது எப்படி என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நிபந்தனை இருக்கும்போது வெளியிலே போகக்கூடாது என்று சொல்லியிருக்கலாம். குறிப்பிட்டு டெல்லிக்குப் போகக் கூடாது என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? பாராளுமன்றத்தில், டெல்லியில் நடைபெறுகிற நடவடிக்கைகளில் திரு. உமாநாத் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பது அங்கு விவாதத்தில் இருக்கிற பிரச்சினை. அந்த நிலையில் யாருக்கும் இல்லாத ஒரு அக்கறை ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்டு, "நீ டெல்லிக்குப் போகக் கூடாது" என்று சொல்லவேண்டிய அவசியம் அவருக்கு எப்படி

ஏற்பட்டது என்பது முக்கியமான கேள்வியாகும். அது மாத்திரமல்ல. மாலை நேரத்தில் அல்லது ஒவ்வொரு நாளும் அங்கிருக்கிற காவல் நிலையத்திற்கு வந்து உமாநாத் அவர்கள் கையெழுத்து போடவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அப்படி ஒரு நிபந்தனை இருக்கும்போது, அவர் தானாக வந்து கையெழுத்து போடவேண்டும், இல்லாவிட்டால் பரோல் ரத்து செய்யப்படும் என்ற அளவிற்கு விரிவாக ஒரு நிபந்தனை இருக்கும்போது அவர் டெல்லிக்குப் போகக்கூடாது என்று ஒரு சப்-இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டு கூறியிருக்கிறார்கள் என்றால் அது அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமல் சப்-இன்ஸ்பெக்டர் அதை நிச்சயமாகக் குறிப்பிட்டிருக்க முடியாது. அது மாத்திரமல்ல. இது அரசாங்கம் செய்த முறைகேடான செயல் என்று இந்த மனறத்திலுள்ள நாங்கள் மாத்திரமல்ல, டெல்லி பாராளுமன்றத்தினுடைய சபாநாயகர் அவர்களேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை அரசினர் இதில் முறைகேடாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ற விளக்கத்தையும் அதனையொட்டி உரிமைப் பிரச்சினைக்கு வேண்டிய ஏராளமான ஆதாரங்களும் இந்தப் பிரச்சினையில் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது உரிமைப் பிரச்சினைக்குரிய ஒன்று அல்ல என்று யாரும் கூற முடியாது என்று அறுதியிட்டு கூறியதோடு கடைசியாக வருத்தம் தெரிவிக்கிற அளவிற்கு அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதுபற்றி கேள்வி கேட்கிற நேரத்தில் இந்த சபையிலே விவரங்கள் தருவதற்கு மாறாக இந்த சபை உறுப்பினர்களை வேறு பக்கம் திருப்புகிற அளவிற்கு ஒரு தவறான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு தந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களானாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களானாலும் அவர்களுக்கு ஒரு சரியான தகவலைத்தர கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாவிட்டால் அந்தத் தகவல் தரப்படுவதில்கூட ஓரளவிற்கு நாம் பொறுத்துக்கொள்ளலாம். தெரியாமல் கூறி விட்டார்கள், அவருக்கு விவரங்கள் தெரியாத காரணத்தால் இந்தப் பதில் வந்தது என்று எண்ணிவிடலாம். நான் முழுக்க முழுக்க குற்றஞ் சாட்டுகிறேன், வேண்டுமென்றே ஒரு தவறான தகவல் தரப்பட்டு, பாராளுமன்றத்தில் இவ்விஷயம் குறித்து பேச்சு வந்தபோது

அதை மறைக்கவேண்டுமென்ற உணர்ச்சி முதல் அமைச்சர் அவர்களுக்கு வந்து, அதுபற்றி ஒரு விளக்கம் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டு, 'நல்ல வேளையாகக் கேட்டீர்கள், அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று நன்றி தெரிவித்துவிட்டு அவ்வளவு அவசர அவசரமாகத் தரப்பட்ட விளக்கம் அல்ல. வேறு பாதைக்கு, ஒரு தவறான பாதைக்கு, சரியற்ற ஒரு பாதைக்கு ஒரு தவறான பதில் மூலம் இந்த சபையை முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்ற கண்டனத்திற்குரியதாகும். ஆகவே, அப்படி கண்டனத்திற்குரியதும், தவறான வழியில் உறுப்பினர்களை இழுத்துச்செல்வதும், உண்மை விளக்கம் தெரிந்திருந்தும் அது இங்கே மறைக்கப்பட்டதும் உண்மையாகவே உரிமைப் பிரச்சினைக்கு உரியதாகும். ஆகவே, திரு. மதியழகன் அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்சினையை தாங்கள் ஆராய்ந்து இதை உரிமைக்குழுவிற்கு விட வேண்டுமென்ற என் கோரிக்கையை தங்கள் முன்னால் வைக்கிறேன்.

உரிமைக் குழுவின் விதி பற்றிய பிரச்சினை

உரை : 54 **நாள் : 31.08.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் ஏற்கனவே உரிமைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, இந்த மன்றத்திலே அவைமுன்னவரால் வைக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைக்கு திருத்தத்தைத் தந்து, அது மீண்டும் உரிமைக் குழுவிற்கான மறுபரிசீலனைக்குச் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டு ஒரு நீண்ட உரையினை ஆற்றி இருக்கிறார்கள்.

கவர்னர் உரையின்போது எப்படி நடந்துகொள்ளவேண்டு மென்பதற்காக நம்முடைய சட்டப்பேரவைக்கான விதிமுறைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதைக் குறிப்பிடுகின்ற விதிதான் 12-வது விதி என்றும் நண்பர் திரு. சங்கரய்யா சுட்டிக்காட்டி, இந்த விதி 3 மாநிலங்களைத் தவிர, வேறு இடங்களில் இல்லை, நாடாளுமன்றத்தில், லோக்சபையில் இல்லை என்று எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். கவர்னர் அவர்களுடைய உரையின்போது அவர்கள் வெளிநடப்பு செய்ததற்கு என்ன காரணம் என்பதனையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். கீழ்வெண்மணியில் நடைபெற்ற கொடுமையைப்பற்றி விவாதிப்பதற்காக ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குத் தங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக தங்களுடைய உணர்ச்சிகளைக் காட்டிக்கொள்வதற்காக வெளிநடப்பிலே ஈடுபட்டோம் என்றும் அவர்கள் இங்கே வாதிட்டார்கள்.

அவர்கள் கவர்னர் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் இந்த இடத்திலே அமர்ந்து இருந்திருப்பாரானால், வெளி நடப்பிலே ஈடுபடாமல் இருந்திருப்பாரானால், கவர்னர் பெருமானுடைய உரையிலேயே இதுபற்றிக் குறிப்பிட்டிருந்ததைக் கேட்டிருப்பார்கள். It is a matter for regret that inspite of all

these efforts a serious tragedy should have taken place at Kizhvenmani in East Thanjavur. I am sure that the House will share with me the sense of shock and profound grief over this inhuman exhibition of violence and callousness, என்று கவர்னர் அவர்கள் இந்த மன்றத்திலே உரையாற்றிய நேரத்தில், தெரிவித்த கீழ்வெண்மணிச் சம்பவத்திற்கான ஆழ்ந்த அனுதாபத்தோடு மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், இருந்து தங்களுடைய அனுதாபங்களைப் பங்கிட்டுக்கொண்டு இருக்கமுடியும். ஆனால் அவர்கள் அன்றைய தினம் வெளியேறிவிட்டார்கள். அப்படி வெளியேறியது சரிதானா, அல்லவா என்று ஆராய்ந்து பரிந்துரை செய்ய, அந்த விவகாரம் உரிமைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது.

இப்போது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் எதிர்க் கட்சித் தலைவர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்று என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்குக் கொடுக்க முடியாமல், அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். உள்ளே இருந்து இருந்தால் என்ன கருத்தைச் சொல்லி இருப்பாரோ, தெரியாது. ஆனால், உரிமைக் குழுவில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கலந்துகொண்ட உறுப்பினர்கள், கவர்னர் உரையின்போது வெளிநடப்பு செய்தது தவறு என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் அந்த உரிமைக்குழுவின் பரிந்துரைக்கும், இப்போது நடக்கும் நிகழ்ச்சிக்கும் இடையில் கால இடைவெளி அதிகமாக இருக்கிற காரணத்தால், இன்று இருந்திருந்தால் என்ன பேசி இருப்பார்களோ தெரியாது.

நான் கூட கருதினேன். இருவரும் சேர்ந்து உரிமைப் பிரச்சினைமீது பேசி, உரிமைக் குழுவிற்கு மறுபரிசீலனை செய்ய அனுப்ப வேண்டுமென்று சேர்ந்து பேசிவிட்டு, இரண்டு கட்சிக் காரர்களும் வெளிநடப்பு செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். முதலில் அவர்கள் போய்விட்டார்கள்.

ஆனால், கவர்னர் உரையின் மீது, கவர்னருக்கு மதிப்பு கொடுத்துவிட்டு, கவர்னர் பற்றியோ, கவர்னர் பதவி பற்றியோ, எந்தவிதமான மாறுபாடான கருத்து இருந்தாலும், அவருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை, மதிப்பு மரியாதைகளை, அதை ஏற்றுக்கொண்டான பிறகு நாம் அளித்துத்தான் தீர வேண்டும்.

சில மாநிலங்களில் கவர்னர் வருகிறபோது எழாமல் இருந்தார்கள். கவர்னர் உரையாற்றுகிற நேரத்தில் கூச்சல் போட்டார்கள் என்று செய்தி வருகிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட செய்திகள் வரவில்லை. கவர்னர் வருகிறபோது எழாமல் இருப்பதோ, அல்லது கவர்னர் உரையின்போது வெளிநடப்பில் ஈடுபடுவதோ நம்முடைய மரபுக்கு ஏற்றது அல்ல என்பது மாத்திரமல்ல, கவர்னர் உரைக்கு நாம் உருவாக்கி இருக்கிற விதிமுறைகளுக்கு ஒத்தது அல்ல.

லோக்சபையில் அப்படி விதி இருக்கிறதா என்று திரு. சங்கரய்யா, கேட்டார்கள். லோக்சபையில் விதி இல்லை. ஆனால், அங்கே என்ன நடைபெற்று இருக்கிறது. லோக் சபையின் நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது

'On 18th February 1968 in the Lok Sabha when the President of India started reading his Address under Article 87 of the Constitution of India. (identical to Article 176 of the Constitution) to both the House of Parliament assembled together in English some Members interrupted the proceedings and staged a walk out. A Committee was appointed to consider their conduct and the Committee reported that any interruption and walk out during the President's speech would be considered grossly disorderly conduct and for such disorderly conduct a Member could be suspended for a period which may extend to one year. . . . . .

இப்படி அங்கே விதி இல்லாவிட்டாலும், அதற்குப் பிறகு அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையின்மீது வெளிநடப்புச் செய்தவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாகவேண்டும் என்று தன்னுடைய அபிப்பிராயத்தை வழங்கியிருக்கிறது என்பதையும் நான் மறந்துவிடுவதற்கில்லை. இங்கே அப்படியே இருக்கின்ற விதி, அந்த விதியை மீறுவது உரிமையை மீறுவது என்பதன்பாற்பட்டதுதான். அங்கே விதி இல்லாமலேயே, அது உரிமையை மீறுவது என்பதன்பாற்பட்டது என்ற அளவில், அங்கே அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதே கருத்தை அந்தக் குழு அறிவித்திருக்கிறது. இங்கே விதியை வைத்துக்

கொண்டு, விதியின்படி நடவாமல் உரிமை மீறப்படுகிற நேரத்தில், கவர்னர் உரைக்காக வகுத்துள்ள விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில், அதை உரிமைக்குழுவிற்கு அனுப்புவதிலும், அந்தக் குழு பரிந்துரை செய்வதிலும் எந்தவிதமான தவறும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

திரு. சங்கரய்யா அவர்கள் கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதை விவாதிப்பதற்கு இந்தச் சபையில் இடம் கிடையாது, எவ்வளவு பெரிய சம்பவம் என்றெல்லாம் கேட்டார்கள். அந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள் எவ்வளவு உருக்கமாகவும் உள்ள நெகிழ்ச்சியோடும் இருக்கிறார்களோ, அதைவிட அதிகமாக தி. மு. க.-வைச் சார்ந்த எங்களுக்குச் சங்கடமும் மனவருத்தமும் உண்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்வெண்மணியில்கூட பஞ்சாயத்துத் தேர்தலில் தி. மு. க.-வைச் சேர்ந்தவர்தான் வெற்றி பெற்றிருக்கிறார்.

அங்கத்தினர் அவர்கள் இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசுவதற்குத் தங்களுடைய உணர்வுகளைக் காட்டிக்கொள்ள இடமே தரப்படவில்லையா என்றால், தரப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தரப்பில் இந்த அரசின்மீது கீழ்வெண்மணி சம்பவத்திற்காக ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதன் பேரில் இங்கே நீண்ட நேரம் விவாதம் நடந்திருக்கிறது. அந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்டு திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது நடவடிக்கை குறிப்பில் இருக்கிறது. அது இப்பொழுது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.


"இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானம் அரசியல் முதல் பெறுவதற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களைச் சார்ந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினர் மூலமாகக் கொண்டுவரப்பட்டபோதிலும், உண்மையிலே இது நிலப்பிரபுக்களின் சார்பிலே கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்ற காரணத்தினால், இன்று நிலப்பிரபுக்களுக்கு எதிராக உள்ள இலட்சக்கணக்கான ஏழை எளிய உழைப்பாளி மக்களின் பெயரால் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம்"

என்று திரு. சங்கரய்யா அவர்கள் இங்கே பேசியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. உலகத்தில் பல விஷயங்கள் ஞாபகத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், காங்கிரஸ் கட்சி இந்தத் தீர்மானத் தைக்கொண்டு வருவதற்கு உரிமை இல்லை. ஏனென்றால், போலீஸார் மேற்கொண்டிருந்த பூந்தாழங்குடி வழக்கை தி.மு.க. அரசு திரும்பப் பெறுவதற்கு சம்மதித்த நேரத்தில் திரும்பப் பெறக்கூடாது என்று முட்டுக்கட்டை போட்டவர்கள் காங்கிரஸ் காரர்கள்தான். அவர்களுக்கு இந்தக் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று திரு. சங்கரய்யா அவர்கள் முழக்கிய முழக்கங்கள் இந்த மாமன்றத்தின் சுவர்களில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. அது வேறு விஷயம்.

இந்த விஷயத்தைப்பற்றி அவர் எடுத்துச்சொல்ல வேண்டுமென்று விரும்பினால், அந்த விஷயம் கவர்னர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலும், கண்டனத் தீர்மானத்தின் பேரில் நடந்த விவாதத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டு, விவாதிக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்களின் உரையின்பொழுது அவர்கள் அவசரப்படாமல், வெளிநடப்புச் செய்யாமல் அமர்ந்திருந்தால், கவர்னர் அவர்களுடைய உரையில் தொடக்கத்தில் நான் படித்துக்காட்டியபடி, அனுதாபத்தை இந்த மன்றம் முழுவதும் செலுத்தும்பொழுது தங்களுடைய பங்கையும் செலுத்தியிருக்கமுடியும்.

கவர்னர் உரையின்போது வெளிநடப்புச் செய்வது உரிமை மீறிய செய்கை. கவர்னர் உரைக்கு வராமலே இருந்தாலும், இருந்துவிடலாம். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த சமயத்தில் ஒரு முறை கவர்னர் உரைக்கு வராமல் இருந்தபொழுது. காங்கிரஸ் கட்சி சார்பிலே எங்கள்மீது உரிமை மீறிய பிரச்சினை கொண்டுவரப்பட்டு, அது ஆராயப்படுகிற நேரத்தில், மன்றத்தில் வந்து அமர்ந்திருந்து உரிமை மீறுகின்ற காரியத்தில் ஈடுபட்டால் தான் உரிமை மீறுகின்ற வகையிலே வரும், வராமலே இருந்து விட்டால், உரிமை மீறுகிற வகையிலே வராது என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். மன்றத்திற்கு வராமலேயே இருந்துவிடுவது என்பது வேறு, மன்றத்திற்கு உள்ளே வந்திருந்து,

கவர்னர் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் வெளிநடப்புச் செய்வது என்பது கவர்னர் அவர்களுக்கு நாம் தரவேண்டிய மரியாதை, நாம் அளிக்கவேண்டிய மதிப்பு இவைகளை அளிக்கத் தவறியதாகும் என்பதுமட்டுமல்ல, கவர்னர் உரைக்காக நாம் வகுத்திருக்கிற விதிகளை மீறுவதாகும் என்ற அளவில், அவர்கள் குறிப்பிட்டமாதிரி அவர்கள் தந்திருக்கிற திருத்தத்தை நான் நிச்சயம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறி, அமர்கிறேன்.



அவை செத்து விட்டதா?

உரை : 55 **நாள் : 06.02.1973**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.வீராசாமி அவர்கள், திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் "இந்த அவை செத்து விட்டது" என்று பத்திரிகைகளுக்கு அளித்த அறிக்கையை ஒட்டி உரிமைப் பிரச்சினை ஒன்றினை இங்கே கொண்டு வந்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இதிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் "இந்தத் தீர்மானத்தை முழுமையாக எதிர்க்கின்றேன்" என்று குறிப்பிட்டார்கள். திரு.கே.டி.கே தங்கமணி அவர்கள், அவர் அவருக்குத் தெரிந்த வார்த்தையை பயன்படுத்திவிட்டார் என்று குறிப்பிட்டு, அவருக்கு இப்படித்தான் சொல்லத் தெரியும் என்ற நிலையை இங்கே புலப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறதா, இல்லையா என்கின்ற ஆராய்ச்சியில் நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லாவிட்டாலும், "மறப்போம் மன்னிப்போம்" என்று அவர்கள் கூறியதிலிருந்து, மன்னிப்பது என்பது குற்றம் செய்தவர்களைத் தான் மன்னிக்க முடியும். ஆகவே "மன்னிப்போம்" என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். குற்றம் செய்தார், எனவேதான் மன்னிப்போம் என்று அவர்கள் கூறியதிலிருந்து, உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.


இந்த அவை செத்துவிட்டதா, இல்லையா என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. டாக்டர் ஹாண்டேகூட அழகாகச் சொன்னார்கள். செத்து இருந்தால், எப்படிச் சண்டை போட முடியும் என்று அவர்கள் கேட்டார்கள். திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களுக்கு டாக்டர் ஹாண்டே அவர்களே சரியான மறுப்பை

இப்பொழுது அவையிலே கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். இது உயிரோடு இருக்கிறது. அது மாத்திரமல்ல, அவர்களேகூட நேற்று சில பேர்களை அனுப்பி உயிரோடு இருக்கிறதா, இல்லையா என்று பார்த்துவரச் சொல்லி, உயிரோடு இருக்கிறது என்று செய்தியைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, நேற்று ஒரு நாளைக்குக்கூட எம்.ஜி.ஆர். கட்சியினர்கள்-அண்ணா தி.மு.க.-வினர்கள் இந்த அவைக்கு வந்ததன் மூலம் இந்த சட்டசபை சாகவில்லை என்பதை அவர்களும் ஒரு வழியிலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலபேர் தங்களுக்கு ஏதாவது வந்துவிட்டால் அது உலகத்துக்கே வந்துவிட்டதாக கருதுகிற பரந்த நோக்கத்தைக் கொண்டிருக் கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கதை சொல்வார்கள். ஒரு நரி நட்டாற்றில் அடித்துக்கொண்டு போகப்படும்பொழுது சத்தம் போட்டதாம். "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று கத்தியதாம், உலகம் போயிற்று, உலகம் போயிற்று என்று கத்துகிறதே என்று கரையில் நின்றவன் அவசரமாக ஓடி அந்த நரியைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று சொன்னாயே, ஏன்? என்று கேட்டானாம். நரி சொன்னதாம், "நான் ஆற்றோடு போய் செத்துப்போயிருந்தால், என்னைப் பொறுத்தவரையில் உலகம் போயிருக்கும் அல்லவா" என்று நரி சொன்னதாம். அதைப்போலவே சிலபேர் தங்கள் தங்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் செத்துப்போய்விட்டது என்று, மற்றவர்களைப் பார்த்து, ஒரு அவையைப் பார்த்து "செத்துப்போய் விட்டது" என்று கூறுகிறார்கள்.

ஆகவே, இங்கே பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதில் ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த அவையைப் பற்றி விமர்சிக்கின்ற உரிமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. ஆனால் எந்த வகையில் விமர்சிக்க வேண்டும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் இங்கே கேட்டது போல, இந்த அவையே செத்துவிட்டது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோமா, நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று அவர்கள் இங்கே கேட்டார்கள். அதை யாரும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்தது உரிமைப் பிரச்சினைக்கு உரியதுதான் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை.

இருந்தாலும், நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நடித்த ஒரு படத்தில் - நானே அதற்கு கதை எழுதியிருக்கிறேன் "செத்து பிழைத்தவன்டா'' என்று பாட்டு பாடியிருக்கிறார். இந்த அவையைப் பொறுத்த வரையில் நேற்று வரையிலே அவர்கள் செத்துப் பிழைத்திருக்கிறார்கள். பிழைத்தவர்கள் தொடர்ந்து வாழ்வார்களா, மறுபடியும் செத்துவிட்டது என்று சொல்லி சபைக்கு வராமல் இருப்பார்களா என்று நமக்குப் புரியாது. இருப்பினும், திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது போல,-''ஃபர்கெட் அண்டு ஃபர்கிவ்'' என்று சொன்னார்கள். "மறப்போம், மன்னிப்போம்" என்று சொன்னார்கள், அந்த வார்த்தைகளைக் கேட்ட நேரத்தில் என்னுடைய தலைவர் அண்ணா அவர்களின் ஞாபகம்தான் எனக்கு வருகிறது. பல நேரங்களில் அண்ணா அவர்கள் பயன்படுத்துகிற அந்தச் சொல் "மறப்போம், மன்னிப்போம்" என்பதாகும். குற்றம் உடையதாக இருந்தாலும், உரிமைப் பிரச்சினைக்கு உரியதாக இருந்தாலும், இது உரிமைப் பிரச்சினைக்கு உரியது அல்ல என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் வாதாடிய முறையில் வாதாடாமல், உரிமைப் பிரச்சினைக்கு உரியது என்பதை ஒத்துக்கொண்டு, மறப்போம், மன்னிப்போம் என்ற அண்ணா அவர்களின் வாசகத்திற்கேற்ப, இந்த ஒரு முறை மறந்து, மன்னித்து உரிமைப் பிரச்சினைக் குழுவிற்கு இதை அனுப்ப வேண்டாம் என்கின்ற கருத்தை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.



ஆற்காடு வீராசாமி கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை

உரை : 56 நாள் : 21.3.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் வீராசாமி அவர்கள் கொண்டுவந்த இந்த உரிமைப் பிரச்சனைமீது எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகையிலே வந்திருப்பதில், நான் இந்த அவையினுடைய உறுப்பினர்களை ஒன்றும் தெரியாத சாதாரணமானவர்கள் என்று கருதிக்கொண்டு திமிரோடு பதில் சொன்னேன் என்ற வாசகம் ஆகும். இந்த அவையில் கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் நான் எந்த அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறேன் என்பதும் எந்த நேரத்திலேயும் நான் திமிரோடு நடந்துகொண்டிருக்கிறேனா என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். மிகச் சூடான விவாதம் நடந்துகொண்டிருக்கும்பொழுது கூட சூடு தணியவேண்டும் என்ற முறையிலே மிகுந்த அமைதியோடும், அடக்க உணர்வோடும் நான் நடந்து கொண்டிருக்கின்றேன்.

1971-ஆம் ஆண்டு தேர்தலுக்குப்பிறகு பதவியேற்ற தற்குப் பிறகு இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் நான் பாராட்டி அவர்கள் எந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு இந்த அவையை நடத்திச் செல்கிறார்கள் என்பதையும், அவர்கள் துணையோடு இந்த அவையை நடத்திச்செல்ல வேண்டுமென்பதையும் குறிப்பிட்டு ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். இந்த அவையிலே உள்ள யாரையுமே சாதாரணமானவர் என்றோ ஒன்றும் தெரியாத நிலையில் உள்ளவர் என்றோ கருதியதே இல்லை என்பதையும் திமிரோடு நடந்துகொள்ள

வேண்டுமென்ற மனோநிலையே கிடையாது என்பதையும் இந்த அவையிலே உள்ள அனைவரும் அனைத்துக் கட்சிகளைக் சார்ந்தவர்களும் அறிவார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சனையைக் கட்சிக் கண்ணோட்டத்திலே நோக்காமல் இந்த அவையினுடைய மரபு, இந்த அவையினுடைய உரிமை, இந்த அவையினுடைய பெருமை இவற்றை நிறைந்த கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் இந்த நேரத்தில் ஒரு எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். நான் இங்கே எதிர்க்கட்சி துணைத்தலைவராக இருந்தபொழுது அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களைப்பற்றி அப்பொழுது நான் ஆசிரியராக இருந்த முரசொலிப் பத்திரிகையில் கடுமையான வாசகத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள் என்று சொல்லி ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் உரிமைப் பிரச்சனையைக் கொண்டு வந்தார்கள். முரசொலி பத்திரிகை என்று கேட்டதுமே நான் மிகுந்த ஆவலோடு அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதற்குப்பிறகு அதுபற்றி அப்பொழுதைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னாலேயே உரிமைப் பிரச்சனையைப் பற்றி மற்றவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே நான் அதன் ஆசிரியராக இருக்கிறேன், ஆசிரியரே தலையங்கம் எழுதுவது இல்லை, பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு இது தெரியும், ஆசிரியர் ஊரில் இல்லாத நேரத்தில் துணை ஆசிரியர்களும் எழுதுவது உண்டு. ஆகவே கடுமையான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்குத் துணை ஆசிரியர்தான் பொறுப்பு என்றாலும், ஆசிரியர் என்ற முறையில் நான் பொறுப்பேற்கிறேன், இப்படிப்பட்ட வார்த்தைகள் பத்திரிகையில் வருவது தவறு என்று நானே குறிப் பிட்டு அவையில் வருத்தம் தெரிவித்து, இப்படி முதலமைச்சர் பக்தவத்தசலம் அவர்களைப் பற்றிக் கடுமையான வார்த்தைகள் முரசொலிப் பத்திரிகையில் பயன்படுத்தியிருப்பதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, எப்படிச் சட்ட சபையைப் பற்றி பத்திரிகைகள் நடந்துகொள்ள வேண்டு மென்பதற்கு ஒரு வழி வகுத்துக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தேன். அந்நாள் முதலமைச்சர் பக்தவத்சலமும் மற்ற கட்சித்

தலைவர்களெல்லாரும் பாராட்டிப் பேசி, இதற்கு உரிமைப் பிரச்சினை தேவையில்லை என்று அந்தக் கருத்தை நிலை நிறுத்தினார்கள். அப்போதெல்லாம் பத்திரிகைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதிலே நான் வழிகாட்டியாக இந்த அவையில் இருந்திருக்கிறேன்.

இப்போது ஏதோ ஆளும் கட்சிக்கு விரோதமான பத்திரிகை, ஆகவே இதை ஆதரிக்க வேண்டுமென்ற எண்ணத் தோடு இதை விட்டு விடலாம். பொருட்படுத்த வேண்டாமென்ற எண்ணத்தோடு யார் பேசியிருந்தாலும் நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், அதில் குறிப்பிடப்பட்டு இருப்பது நான் உறுப்பினர்களைச் சாதாரணமானவர்கள் என்று கருதினேன் என்று ஒரு குற்றச்சாட்டு, திமிரோடு பேசினேன் என்று மற்றொன்று, அடுத்து தவறான தகவல் தந்தேன் என்பது. இதிலே திரு. கே.டி.கே. தங்கமணி கேட்ட கேள்வியை வைத்துக்கொண்டு நான் சொன்ன பதில் தவறான தகவல் என்பது இந்தப் பத்திரிகையில் குற்றச்சாட்டு. கே. டி. கே. தங்கமணி கேட்டது, ''நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு டில்லியிலே சொந்தவீடு இருப்பதால், அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு டிஸ்கரேஜ் செய்யப்படுமா'' இது தங்கமணி கேட்ட கேள்வி. நான் சொன்ன பதில் ''எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் டில்லியிலே சொந்த வீடு கிடையாது'' என்று. ''திரு. தங்கமணி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்'' என்று சொன்னேன். இது திமிரான பேச்சல்ல. நானும், அவரும், மற்ற உறுப்பினர்களும் சில நேரங்களில் மகிழ்ச்சியாகப் பரிமாறிக் கொள்கிற நகைச்சுவையே தவிர வேறு அல்ல.

நான் மேலும் சொன்னேன். ''வீடு சிலருக்கு இல்லாத காரணத்தினால் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும் உரிய கட்டணத்தைச் செலுத்தி, தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்'' என்று நான் சொன்னேன். இதிலே எங்கே திமிரின் வாடை இருக்கிறது, எங்கே நான் சரியான

தகவலைச் சொல்லவில்லையென்று உணர்ந்துபார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இது உள்ளபடியே நான் சொல்லாத ஒன்றை நான் தவறான தகவல் கொடுத்தேன் என்ற குற்றச்சாட்டுக்கு என்னை ஆளாக்கி இதிலே எழுதப்பட்டிருக் கிறது. திரு. ஹாண்டே அவர்கள் தன்னைப்பற்றி ஆளும் கட்சிப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். சட்டசபை உறுப்பினர்கள் பத்திரிகையில் எழுதுவது தங்கள் உறுப்பினர் உரிமையை பாதிக்கப்படுவதாக இருக்கிறது என்று கருதுவார்களானால் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் தவறு இல்லை என்று சொல்லி, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதுதான் சிலாக்கியமானது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எட்மண்ட் மீதான உரிமைப் பிரச்சினை

உரை : 57 **நாள் : 06.01.1978**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்களிடம் உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்கள்மீது ஒரு உரிமைப் பிரச்சினையை அளித்திருக் கின்றேன். அதை இங்கே எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்.

"1978ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5ஆம் நாள் காலை சட்டமன்றத்தில் மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது மீனவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் விசைப்படகுகள் வழங்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டினார். அப்போது நான் குறுக்கிட்டு அதற்கு உதாரணம் கூற முடியுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் தன்னிடம் அதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாகவும், அதில் ஒன்றிரண்டை கூறுவதாகவும் கூறிவிட்டு ஒரு விவரத்தைச் சொன்னார்கள்.

வேணுகோபால் என்கிற மாறன் என்பவருக்கு தி.மு.க. ஆட்சிக்காலத்தின்போது விசைப்படகு வழங்கப்பட்டது என்றும் அவர் மீனவர் இல்லை என்றும் குறிப்பிட்டார். விளக்கம் கேட்ட போதும் அவர் மீனவ வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரே நேரடியாக மீன் பிடிக்கும் தொழில் இல்லை என்று குறிப்பிட்டார். தி.மு.க. ஆட்சிக்காலம் என்றால் எந்த ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது என்று நான் மீண்டும் கேட்டேன். அப்போது 1967 முதல் 1969 வரை உள்ள புனிதமான அண்ணாவின் ஆட்சியில் இல்லை, அதற்கு பின்னால் 1969-க்கும் 1976-க்கும் இடையே நடைபெற்ற தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் இவ்வாறு வழங்கப்பட்டது என்றும் இந்தக் குற்றச்சாட்டிற்கு தான் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும் ஆணித்தரமாகக் கூறினார்.

அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிற்குப் பொறுப்பேற்றுக்

கொள்கிறேன் என்று கூறிவிட்டபடியால் அதில் மேலும் விவாதம் தேவை இல்லை என்று கூறி முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

உண்மையில் வேணுகோபால் என்ற மாறனுக்கு விசைப் படகு வழங்கப்பட்டது 1969-லிருந்து 1976 வரை என்ற காலத்திற்குள் இல்லை என்பது அரசு ஆவணங்களில் முறையாகப் பார்த்தாலே புரிந்துகொள்ள முடியும். அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இருந்தும் தற்காலிகமான வெற்றியை மனதில் கருதிக்கொண்டு, 1969-க்கும் 1976-க்கும் இடையேதான் நடைபெற்றதாக அழுத்தந்திருத்தமாக உண்மைக்குப் புறம்பான ஒன்றை அவையில் கூறி உறுப்பினர்களை திசை திருப்பியிருக்கிறார்.

அவைக்கு வேண்டுமென்றே தவறான தகவல்களைத் தருவது அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. வேணுகோபால் என்ற மாறன் என்பவருக்கு எப்போது விசைப்படகு வழங்கப்பட்டது என்ற விவரத்தை அவரே கைப்பட எனக்கு எழுதியுள்ள கடிதத்தின் நகலை இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்திருக்கிறேன்."

அதில் கூறியிருப்பது, 1962-ல்தான் வேணுகோபால் என்ற மாறனுக்கு விசைப்படகு வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டி ருக்கிறார். அந்தக் கடிதம் - "இன்று சட்டமன்றக் காலை நிகழ்ச்சியில் (5-1-1978) நான் மீனவனே இல்லை என்று மாண்புமிகு மீன் இலாக்கா அமைச்சர் அவர்கள் கூறியதைக் கேட்டு வருந்தி தங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

நான் மீனவ குடியில் பிறந்தவன். என் தந்தை தூண்டிலில் மீன் பிடித்து தொழில் செய்து வாழ்ந்து வந்தோம். எனக்கு 1962ஆம் ஆண்டில் மீன் இலாக்காவினால் ஐ.பி.66 என்ற விசைப்படகு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு மீன் இலாக்காவிலிருந்து எவ்வித படகும் நான் வாங்கவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

வேணுகோபால் என்னும் மாறன்."

இதை அவையின் முன் வைத்து இதை உரிமை மீறுகிற நிலையில் உணவு அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்து தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

பத்திரிகைகள் மீதான உரிமைப் பிரச்சினை

உரை : 58 **நாள் : 09.03.1979**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இங்கே தரப்பட்டிருக்கின்ற உரிமைப் பிரச்சினை குறிப்பிட்ட இரண்டு மூன்று பத்திரிகைகளைப்பற்றியது, அதாவது முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய ஏடுகளில் இங்கு எழுப்பப்பட்ட சிம்கோ மீட்டர்ஸ் தொடர்பான முழக்கங்கள் வெளிவந்துவிட்டன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே தரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள், அன்றைய தினம் முழக்கங்களுக்கிடையே பேசியது தெளிவாகக் காதுகளில் விழவில்லை என்ற குறிப்பினை முரசொலி, அலை ஓசை, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலே மாத்திரமல்லாமல் தினமணி ஏடுகூட அந்தச் செய்தியை வெளியிடுகிற நேரத்தில் அதனுடைய இறுதிக் குறிப்பிலே துணைத்தலைவர் என்ன சொன்னார் என்பது காதிலே விழவில்லை என்று கோடிட்டு காட்டியிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், அன்றைக்குப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதுகூட குழப்பத்திற்கிடையே யாருடைய காதிலும் விழவில்லை என்கிற அந்தக் குறிப்பும் இந்து, இன்டியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஏடுகளில்கூட வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல வெளியே மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் சில பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசியதைக் கண்டேன். குறிப்பிட்ட சில பத்திரிகைகளுக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். அவர்கள் எல்லா பத்திரிகை நிருபர்களையும் தன்னுடைய அறையிலே அழைத்து வைத்து இப்படி இப்படி நான் தீர்ப்புக் கூறினேன் என்று சொல்லியிருந்தால் அதற்கேற்ப பத்திரிகைகளிலே பிரசுரித்திருக்கக்கூடும். இதனை அரசாங்க செய்தித்துறை, இயக்குனர் அவர்களாவது செய்திருக்கலாம். எல்லா பத்திரிகை நிருபர்களையும் உடனடியாக அழைத்துச் சொல்லியிருக்கலாம். ஏனென்றால் செய்தித்துறை ரொம்ப

வேகமாகவும் விறுவிறுப்பாகவும் செயல்படுகிறது. அது எப்படி என்பதை விளக்குகிறேன்.

நான் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு மனு செய்திருந்தேன். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட விஷயத்தை அதாவது எனக்குப் பாதகமாக முடிந்துவிட்ட விஷயத்தை உடனடியாக செய்தித்துறை இயக்குநர் அவர்கள் எல்லா பத்திரிகைக் காரர்களையும் அழைத்து, அதிலும் அலை ஓசை போன்ற பத்திரிகைகளைத்தவிர மற்ற பத்திரிகைக்காரர்களை அழைத்து கருணாநிதி போட்ட கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்ற செய்தியை மிக விரைவாக வெளியிட ஏற்பாடு செய்தார்கள். அதாவது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எமர்ஜென்சி காலத்திலே எப்படி செய்திகளை விரைவாகவும், விறுவிறுப்பாகவும் தந்துகொண்டிருந்தார்களோ அதுபோன்று இந்த அரசின் செய்தித்துறை செயல்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட செய்தித்துறை அன்றையதினம் எல்லா நிருபர்களையும் அழைத்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் இதைத்தான் சொன்னார்கள். எனவே நீங்கள் இவற்றை வெளியிடக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கலாம். அல்லது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களாவது தன்னுடைய அறையிலே எல்லாப் பத்திரிகை நிருபர்களையும் அழைத்து நான் இப்படித்தான் சொன்னேன். அது உங்களுடைய காதுகளிலே விழாமல் போயிருக்கக் கூடும், ஆகவே என்னுடைய ஆணை இதுதான், எனவே இதனைப் பிரசுரிக்காதீர்கள் என்று சொல்லி இருக்கலாம். அது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் எழுப்பப்பட்ட முழக்கங்களுக்கு மேலாகவே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரைப்பற்றி, **** என்று திருச்சியில் தொழிலாளர்கள் குறிப்பிட்டதாக இந்த அவையிலே மாண்புமிகு அவை முன்னவர்கள் எடுத்துச்சொன்னார்கள், அவ்வாறு அவர்கள் எடுத்துச்சொன்னது நேற்றைய தினம் பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கிறது. அது உரிமைப் பிரச்சினையாகாதா? ஆகவே அதனையே உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாத நிலையில், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்கள் சொன்னது யாருடைய காதிலேயும் சரியாக விழாத காரணத்தால் இவ்வாறு பிரசுரிக்கப் பட்டிருப்பது உரிமைப்பிரச்சினை என்று சொல்வது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உரிமைப் பிரச்சினை மீதான நடவடிக்கை

உரை : 59 **நாள் : 09.04.1979**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே! பேசக்கூடிய நிலையில் இன்று நான் இல்லாவிட்டாலும் இன்று இந்தப் பிரச்சனை வரும் என்று நான் எதிர்ப்பார்க்கவில்லை. வெந்தப் புண்ணில் வேல் என்பார்கள். அதைப்போல நாங்கள் ஆழ்ந்த துயரத்தில் இருக்கிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் இங்கே முன்மொழியப்படுகிறது என்று கேள்விப்பட்டு நாங்கள் அவசரமாக வரவேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று காலை 8.30 மணி அளவில் தங்களோடு நான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். தொடர்பு கொண்டபோது இன்று மறைந்த ஆசைத்தம்பி அவர்கள் பற்றிய அனுதாபத் தீர்மானம் வருகிறதா, அதிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசுகிற நிலை உருவாக்கப்படுகிறதா, என்று தங்களிடத்தில் நான் விளக்கம் கோரினேன். நான் அப்படித்தான் எதிர்பார்த்தேன். ஒரு முக்கியமான, சுயமரியாதை வீரர், சமூகத் தொண்டர், தமிழ்நாடு பொது வாழ்வில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களோடு கலந்துபணியாற்றிய ஒருவர் மறைந்துவிட்ட நேரத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமா என்று தங்களிடம் கேட்டேன். ஆனால் தாங்கள் இன்று இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து படித்துவிட்டு, மௌனம் கடைபிடித்து, மீண்டும் சபை தொடர இருக்கிறது என்று அறிவித்து விட்டீர்கள். அதன் பிறகு இந்தத் தீர்மானம் வருவது பற்றியும் நம் இருவரிடையே உரையாடல் நடைபெற்றது தொலைபேசி வாயிலாக. அப்போது தாங்கள் என்னிடத்தில் குறிப்பிட்டீர்கள், ஏற்கனவே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் மற்றுமுள்ள கட்சித் தலைவர்களும் பேரவைத்

துணைத் தலைவர்களோடும் மாண்புமிகு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்களோடும் முன்னவர் அவர்களோடும் கலந்துபேசியதாகவும் இன்றும் கேள்வி நேரத்தில் நான் முன்கூட்டியே வந்துவிட்டால் அவை முன்னவர் அவர்களோடு பேச ஒரு வாய்ப்பு ஏற்படும். முடிவு எடுக்க தோதாக இருக்கும் என்றும் அறிவித்தீர்கள். நான் நீங்களும் இருக்க வேண்டுமே என்று தங்களை கேட்டுக்கொண்டேன். தாங்கள் சொன்னீர்கள், துணை சபாநாயகர் இன்று வர நேரமாகும். நான்தான் கேள்வி நேரத்தை நடத்த வேண்டியவனாக இருக்கிறேன். எனவே நீங்கள் கேள்வி நேரம் நடக்கிறபோதே வந்து விடுங்கள், அவை முன்னவர் அவர்களோடு அவரது அறையிலோ சபாநாயகர் அவர்களுடைய அறையிலோ நீங்கள் பேசலாம். எப்படி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம். இந்த மன்றத்தினுடைய மரபுகளை எப்படிச் செம்மைப்படுத்தலாம். எப்படி வழி வகுக்கலாம் என்பதை அறிவித்தீர்கள்.

அதை எதிர்பார்த்து இங்குக் கேள்வி நேரம் 10 மணி வரை நடைபெறும். அதற்குள் போய்விடலாம் என்று நினைத்து 9.35 மணிக்குப் புறப்பட்டு, 9.40 க்கெல்லாம் இங்கு வந்து சேர்ந்தேன். இங்கு வந்தால் திடீரென்று கேள்வி நேரம் 10 மணி வரை நடைபெறுவதற்குப் பதிலாகக் கால் மணி நேரம் முன் பாகவே முடிந்துவிட்டதால், அவை முன்னவர் அவர்களோடு கலந்து பேசுவத்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது இந்தத் தீர்மானம் இங்கு முன்மொழியப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் இவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவில் பல மாநில சட்டமன்றங்களிலும், பாராளு மன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் வழிகாட்டிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று கருதுபவனும் அல்ல விரும்புபவனும் அல்ல, தூண்டிவிடக் கூடியவனும் அல்ல என்பதை மாண்புமிகு முன்னவர் அவர் களும், தாங்களும் என்பால் நம்பிக்கைக் கொண்டவர்களும் நிச்சயமாக உணருவார்கள் என்று நம்புகிறேன். அண்மையில் கூட மாநிலங்கள் அவையில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கல்பனாத்ராய் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்

ரகுமான்கான் எதைத் தூக்கிக் காண்பித்தார் என்று கண்டிக்கப் படுகிறாரோ அதே கருவியைத் தூக்கிக் கல்பனாத்ராய் காண்பித்தார் என்று செய்தி வந்திருக்கிறது. அதற்காக யாரும் மன்னிப்பு கேட்டுக் கொண்டதாகவோ, இதற்காக ராஜ்ய சபாவில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் எனக்கு கிடைத்த தகவல். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் காரணங்கள் எதுவாக இருந்தாலும், தாங்கள் கண்டிப்பதற்கோ கொஞ்சம், வேகமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ, உரிய காரணங்கள் இருந் தாலும், நடைபெற்ற செயல்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை என்று நான் சொல்லமாட்டேன். நான் அன்றையதினம் உடல் நலக்குறைவு காரணமாக வீட்டில் இருந்தேன். எனக்கு இது தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கப்பட்டதும், பேராசிரியர் அவர்களோடு தொடர்பு கொண்டபோது, என்னிடத்தில் இதற் காக வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டதாகக் குறிப்பிட்டார்கள். வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்கு பின்னால் இந்தப் பிரச்சனை வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை அழைத்து அவர்களிடத்தில் என்னுடைய கண்டனங்களைத் தெரிவித்தேன். அப்படி நடக்கக்கூடாது என்றும் சொன்னேன்.

ஆனால் ஆளும்கட்சி தரப்பிலிருந்து என்ன சொன் னார்கள் என்பதை அவை முன்னவர் அவர்கள் சொல்ல வில்லை. பத்திரிகைகள் எதிலும் ஆளும் கட்சியினரைப் பற்றி எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

"A.D.M.K member was heard remarking that it was not worse than the lifting of the dhoti by a ruling party member."

என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தி இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையிலும் வடக்கே வெளியிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆளும் கட்சி சார்பில் ஆத்திரமான சொற்கள் பேசப்பட்டன. ஆளும் கட்சியிலிருப்ப வர்கள் அன்றைக்கும் அந்த அளவுக்கு மரியாதை குறைவான முறைகேடான சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதற்காக

எதிர்க்கட்சிகளும் உருவாக்கவேண்டும் என்றோ அல்லது எதிர்க்கட்சிகள் உருவாக்கினால் அதற்காக ஆளும் கட்சியிலிருப்பவர்கள் உருவாக்க வேண்டும் என்றோ முதலமைச்சர் அவர்களோ அல்லது முன்னவர் அவர்களோ விரும்ப மாட்டார்கள்.

எல்லாரும் சேர்ந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, மற்றுமுள்ள எதிர்க்கட்சிகள் தோழமைக்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்றவேண்டுமென்பதில் நான் கிஞ்சித்தும் வித்தியாசப்பட்டவன் அல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி மீண்டும் இதைப்பற்றிப் பேசுவோம் என்ற நிலை வந்த பிறகு, இப்படி அவசரப்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவது தேவையில்லை என்பதைத் தாங்களும், அவை முன்னவர் அவர்களும் அறிந்ததே. எனவே, இத்தகைய தீர்மானம் கொண்டு வந்ததைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாளைக்கு ஒருவிதமாக நிலைமை உருவாகிறது. என்னுடைய நண்பர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். இதைக் குற்றம் சாட்டுவதற்காகக் கூறவில்லை. ஒருநாள் அவர்கள் இந்த அவையிலே, ஒரு குறிப்பைப் படித்துக்காட்டி, இது ஆங்கிலத்திலே இருக்கின்றது என்ற காரணத்தினால், இதைக் கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அந்தச்செய்தி பத்திரிகையிலே வந்தது. அதைப்போலவே இன்னொரு நாள், எங்கள் கட்சி கொறடா கிட்டப்பா அவர்கள் ஒரு குறிப்பைப் படித்துக்காட்டி, அதைக் கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அப்படி கேள்வித் தாளைக் கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அது பத்திரிகையிலே வரக்கூடாது என்று அவைத்தலைவர் அவர்கள் ஆணையிட்டீர்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் மாறுபட்டு, முரண்பட்டு அமைந்து விடுகின்றன.

பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பது, ஒரு ஒழுங்குப் பிரச்னை என்று கேட்பது, அவைத்தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் கேட்க வேண்டும் என்றிருந்தாலும் அப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டவுடன்

என்ன என்பதைப் பற்றிக் கேட்டு, இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள் என்று தெரிவிப்பது அல்லது அடியோடு இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லி, அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்து விடுங்கள் என்று சொல்வது, ஏற்கனவே இந்த அவையிலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபாக இருந்து வந்திருக்கிறது. அதை அவைத்தலைவர் அவர்களோ, துணைத்தலைவர் அவர்களோ, பெயரைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. முனு ஆதி அவர்களையோ அல்லது திருநாவுக்கரசு அவர்களையோ பார்த்து, எந்த ஒரு உறுப்பினரும் இழித்துப் பேசுகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. அங்கிருக்கக் கூடிய புனிதமான நாற்காலியைப் பார்த்தும் பேசுகிறார்கள் என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும், உள்ளபடியே பொறுத்துக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல; கண்டனத்திற்குரிய ஒன்று. இனி மேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழாமல் இருக்க, புரை யோடிவிட்ட சில பிழைகளைப் பற்றி, விஷயங்களைப் பற்றி நாம் எண்ணிப்பார்த்து விவாதிப்பதற்கு அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப் பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பை, அவை முன்னவர் அவர்கள் அளிப்பார்களானால், நலமாக இருக்கும். அவர்கள் கூறினார்கள் இந்த மரபைக் காப்பாற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று. நிச்சயமாக ஒத்துழைப்பு உண்டு என்ற உறுதி மொழியைத் தருகிறேன்.

ஆலடி அருணா எழுப்பிய உரிமைப் பிரச்சினை

உரை : 60 **நாள் : 25.03.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள்மீது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் எழுப்பியுள்ள இந்த உரிமை மீறல் பிரச்சினை, நிச்சயமாகத் தங்களுடைய அனுமதியோடு உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படவேண்டிய ஒன்று என்பதை நானும் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமியைப் போன்றவர்கள் வெளியிலே எந்த அளவுக்கு இந்த அவையில் நடக்காத செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டிச் சொல்கிறார்கள், அபாண்டமாகப் புளுகுகிறார்கள் என்பதற்கு, கடந்த இரண்டு, மூன்று நாட்களின் ஏடுகளை எடுத்துப் பார்த்தாலே மிக நன்றாக நாம் புரிந்துகொள்ள முடியும். திரு. அருணா அவர்கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை என்பதற்காக மாத்திரமல்ல, நாட்டில் இன்று மூட்டிவிடப்படுகிற ஜாதி, மதச் சச்சரவுகள், கலவரங்கள், இவற்றிற்கு ஒரு தூண்டுகோலாக இந்த அபாண்டம், இந்த உண்மைக்கு மாறான செய்தி அமைந்துவிடக்கூடும்; அப்படி அமைந்துவிடக்கூடாது என்கின்ற அச்ச உணர்வின் காரணமாகவும் நான் இந்தப் பிரச்சினையிலே சில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

ஜாதியின் பெயரால், அதிலும் குறிப்பாக, கருப்பசாமி அவர்கள் சார்ந்த ஜாதியின் பெயரால், இழிவாக, ஓர் அமைச்சர் சட்டப் பேரவையிலேயே குறிப்பிட்டார் என்று, ஒரு கடைந்தெடுத்த, உண்மைக்கு மாறான செய்தியைச்

சொல்வதிலிருந்து, நியாயமாக வெளியிலே கடைப்பிடிக்கப்பட வேண்டிய P.C.R. சட்டம்கூட வலிமையிழந்து விடுமோ என்கிற பயமும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. இப்போது பலர், இந்த P.C.R. சட்டமே கூடாது என்று வாதிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கருத்து இந்த அரசுக்கு உடன்பாடான கருத்து அல்ல என்பதை வெளிப்படையாகப் பல முறை தெரிவித்திருக்கின்றோம். இருந்தாலும் இதுபோன்ற நிகழ்வுகள், ஒரு சட்டமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினரே, வேண்டுமென்றே, திட்டமிட்டு ஓர் அமைச்சர் மீது அவதூறு கூறுவது மாத்திரமல்ல, ஜாதிப் பிரச்சினையைக் கிளப்பிவிடக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவது நிச்சயமாக உரிமைப் பிரச்சினைக்கு உட்பட்ட ஒன்றேயாகும். இந்த நிகழ்வுகள் - தாமரைக்கனியினுடைய நிகழ்வுகள் சட்டப் பேரவையில் நடைபெற்ற பிறகு, தொடர்ந்து பல்வேறான அவதூறு செய்திகள், உண்மைக்கு மாறான செய்திகள் இந்த அவையைப் பற்றியும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், இங்கேயிருக்கின்ற அவை உறுப்பினர்களைப் பற்றியும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகைகளும் சற்றும் யோசிக்காமல், சாதியின் பெயரைச் சொல்லி அமைச்சர் திட்டினார் என்று சொன்ன ஒரு பொய்யான செய்தியை வெளியிட்டு, ஒரு பரபரப்பை உண்டாக்குவதற்கு, அவர்களும், பத்திரிகைகாரர்களும் காரணமாகிவிடுகிறார்கள் என்பதை எண்ணும்போது, பத்திரிகை தர்மத்தை எண்ணிச் சிரிப்பதா, அழுவதா என்றே எனக்குப் புரியவில்லை.

கருப்பசாமி அவர்கள் எந்த அளவுக்கு உண்மைகளைத் திரித்துக் கூறுபவர் என்பதற்கு, இரண்டு பத்திரிகைகளில் வந்த செய்திகளை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். என் கையிலே இருப்பது மாலை முரசு பத்திரிகை. 23-3-1999 செவ்வாய்க்கிழமை சென்னையிலே வெளிவந்த பத்திரிகை. வெளியூர்களிலே 24ஆம் தேதி வெளியிடப்பட்ட பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே, முதல் பக்கத்திலே Indian Express - ஸிலும், தினமணியிலும் வந்த படத்தை reproduce செய்து - மறுபிரசுரம் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் கை முழுவதும்,

மணிக்கட்டிலேயிருந்து, தோள்பட்டை வரையிலே ஒரு கட்டுப்போட்டுக்கொண்டு படுத்திருக்கின்ற அந்தக் காட்சி படமாக வெளியிடப்பட்டிருக்கிறது, மாலை முரசு பத்திரிகையிலே. இதே படம், Indian Express, தினமணி போன்ற ஏடுகளிலும் வெளிவந்தது. இதற்குப் பிறகு, 25ஆம் தேதி - இன்று வெளிவந்த 'கதிரவன்' பத்திரிகையில், அவர் குமரன் மருத்துவமனையிலிருந்து பேட்டி கொடுக்கிறார். குமரன் மருத்துவமனையைப் பற்றிய விவரங்களை நான் சொல்லவிரும்பவில்லை. அது யாருடைய மருத்துவமனை என்பதெல்லாம் அவையில் உள்ள விஷயம் தெரிந்த உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மருத்துவ மனையிலேயிருந்து பேட்டி கொடுக்கிறார். 23ஆம் தேதி போடப்பட்ட கட்டு கையிலே இல்லை. வெறும் கையாகத்தான் இருக்கிறது. 23ஆம் தேதி கை முழுவதும் போடப்பட்ட பேண்டேஜ், மணிக்கட்டில் இருந்து, தோள்பட்டை வரையிலே போடப்பட்ட பேண்டேஜை, காலையிலே 'கதிரவன்' பத்திரிகையிலே காணமுடியவில்லை. ஒருவேளை, கதிரவன் ஒளிபட்டு (சிரிப்பு) பனித்துளி காய்ந்துவிடுவதைப் போல, அந்தக் கட்டு காய்ந்து விட்டதோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. அதிலே சொல்கிறார் அவர் - 'என்னை அமைச்சர் அடித்தார். அவர் அடித்ததில், செருப்புக் காலால் மிதித்ததில் என் நடு முதுகில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது' என்று. (சிரிப்பு) நடு முதுகில் எலும்பு முறிந்தால், இப்படி உட்கார்ந்துகொண்டு பேட்டி கொடுக்க முடியுமா என்பதை உண்மையிலேயே டாக்டருக்குப் படித்தவர்கள்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், உண்மையிலேயே டாக்டருக்குப் படித்தவர்கள் என்பது வேறு; கையிலே இருக்கின்ற பணப் புழக்கத்தினாலே டாக்டர்கள் ஆனவர்கள் என்பது வேறு; நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து, போட்டோவுக்கு Pose கொடுத்துக் கொண்டு, என்னுடைய நடு முதுகில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது என்று அவர் சொல்லியிருக்கிறார். எக்ஸ்ரே எடுக்கப் பட்டதால், நடு முதுகிலே எலும்பு முறிவு ஏற்பட்டது தெரிய வந்தது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி இரண்டு நாட்களுக்குள்ளே ஒரு பெரிய பொய்யை, புனைசுருட்டை,

அவதூறை, அண்டப் புளுகை, ஆகாசப் புளுகைச் சொல்கிறவர்கள், அவர்கள் அ.தி.மு.க. காரர்களாகத்தான் இருக்க முடியும்; வேறு யாராகவும் இருக்க முடியாது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, காலையில்கூட, தங்களுடைய அறையிலே இரண்டு, நண்பர்களிடத்திலே - தாங்கள் இங்கு வந்த பிறகு, அங்கே பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்களிடத்திலே குறிப்பிட்டேன்.

மார்க்கபந்து என்கிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அவர் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அதுவும் கதிரவன் பத்திரிகையிலே வந்திருக்கிறது. தாமரைக்கனி எப்படி வீரபாண்டி ஆறுமுகத்தை அடித்திருக்க முடியும் என்று. அவர் - மார்க்கபந்து - நல்ல வக்கீல், Bar Council தலைவர்கூட, எப்படி அடிக்க முடியும் என்று கேள்வி கேட்டு, அமைச்சர்கள் அமர்ந்திருக்கின்ற வரிசைக்கு முன் வரிசையிலே தாமரைக்கனிக்கு இடமில்லை, தாமரைக்கனி பின்வரிசையிலே தான் அமர்ந்திருக்கிறார், அவர் எப்படி வீரபாண்டி ஆறுமுகத்தைப் போய் தாக்கி இருக்க முடியும் என்று ஓர் அருமையான கேள்வியை மார்க்கபந்து அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் இந்தச் சட்டசபைக்கே வந்து பார்த்ததில்லை போலும். அல்லது, ஒருவேளை அவர் பார்க்கவந்தபோது, தாமரைக்கனி வழக்கம் போல் தன்னுடைய முன்வரிசை இடத்தைவிட்டு, தன் நண்பர்களுடைய இடத்திற்குப்போய் உட்கார்ந்திருக்கக்கூடும். அதை வைத்துக் கொண்டு, அவருக்கு முன் வரிசையிலே இடம் இல்லை என்று அவர் சொல்கிறார். இப்படிப் போட்டிப் போட்டுக்கொண்டு, ஒருவருக்கொருவர் பொய்ச் செய்திகளை வெளியிட்டு, அவை பத்திரிகைகளிலும் வெளிவருவதைக் காணும்போது நான் உள்ளபடியே மிகுந்த வேதனைப்படுகிறேன்.

ஆலடி அருணா அவர்களானாலும் அல்லது வீரபாண்டி ஆறுமுகம் அவர்களானாலும், ஏன் இந்த அவையிலே இருக்கிற

யாரானாலும், யாருமே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பார்த்து, அந்தச் சமுதாயத்திலே பிறந்தவர்களைப் பார்த்து, அவர்களுடைய ஜாதியின் பெயரைக் குறிப்பிட்டுத் திட்டுகின்ற அளவிற்கு நாகரிகம் அற்றவர்கள் அல்லர். (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய நாத்தழும்பு ஏறியவர்களும் அல்லர். இன்னும் சொல்லப்போனால், எங்களைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களுடைய குருகுலத்திலே பயின்று, அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பழகி, அவர்களுடைய இனிய இலட்சியங்களையெல்லாம் இதயத்திலே ஏந்திக் கொண்டிருக்கிற நாங்கள், எங்களைப் போன்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்து ஜாதியின் பெயரால் வசைமாரி பொழிந்தோம் என்று கூறுவது, இட்டுக்கட்டிய, அவதூறான திட்டமிட்ட பொய் என்பதை நிரூபிக்கின்ற வகையில், அவரை அழைத்து, அவருக்கு வாய்ப்பளித்து விசாரிக்கின்ற வகையில் - இந்தப் பிரச்சினையை - மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் எழுப்பியிருக்கின்ற இந்த உரிமைப் பிரச்சினையை - உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று இந்த அவையின் சார்பாகத் தங்களை நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்பிக்கையில்லா தீர்மானங்கள்

காங்கிரஸ் ஆட்சி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்

உரை : 61 நாள் : 24.10.1964

கலைஞர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றச் செயலாளர் நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, கருத்துக்களை எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

நான் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பு, எனக்கு முன் பேசிய கனம் நண்பர் ராஜாராம் அவர்களுக்கு நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'பூம்புகார்' படத்திற்கான நல்ல விளம்பரத்தை அவர்கள் தந்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி இரண்டு நாட்களாக இரு தரப்பிலும் - ஆளும் கட்சியிலும் எதிர்த் தரப்பிலும் - உள்ள உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதில் பேசுகிற நேரத்தில், உள்ள படியே எங்களுக்கு நண்பர் கிருஷ்ணமூர்த்தி எடுத்துச் சொன்னது போல் ஒரு சின்ன நெருக்கடி, குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்களுக்கு ஏற்பட்டது போன்ற நெருக்கடி ஏற்பட்டது, காரணம், மிக இனிமையாகப் பழகிக்கொண்டிருக்கிற, நெருங்கி

உறவாடிக்கொண்டிருக்கிற, இந்த ஆளுங்கட்சியை சார்ந்தவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்க வேண்டியிருக்கிறதே என்ற கவலை, உள்ளத்தை ஒரு புறத்திலே உலுக்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும், பாண்டவர்களை உற்சாகப்படுத்தி, 'உறவினர் என்றாலும் பார்க்காமல் அவர்கள் மீது கணைகளைப் பொழிய வேண்டியதுதான் யுத்த தருமம்' என்று கூறிய கண்ணன் எங்களுக்குச் சொல்லாவிட்டாலும், ''கடமை'' எங்களுக்கு அறிவுறுத்த, நாட்டில் ஜனநாயகம் தழைக்கவும், சம தருமம் செழிக்கவும், நாடு வாழவும், நலிவு நீங்கவும், ஊழல் ஒழியவும், உண்மை ஒளி விடவும் நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம்.

போர்க்களத்திலே சுடு கணைகளை - அக்கினியாஸ்திரங் களை - விடுவது உண்டு. அதைப்போலவேதான் நான் இங்கு ஏவுகிற கணைகளும், அக்கிரமத்திற்குத் துணை போகிற நிலைமையிலே இருக்கின்ற, அமைச்சர் பெருமக்களுக்கு, அர்ஜுனன் கணைகள் எப்படி பீஷ்மாச்சாரியாரைச் சரப் படுக்கையில் படுக்க வைத்து மரியாதை செலுத்தியதோ, அதைப் போலவே இந்தச் சுடுகணைகளும் பாய்ந்திடும் என்று நான் நம்புகிறேன்.

'நம்பிக்கை இல்லை' என்று நாங்கள் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், நேற்றைய தினமும் இன்றைய தினமும் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஒரு விஷயத்தை மிகக் கவனமாகக் குறிப்பிட்டார்கள். ''எங்களில் 130-க்கு மேற்பட்டவர்களை இந்தச் சட்ட மன்றத்திற்கு வாக்காளர்கள் அனுப்பி வைத்திருக் கின்றார்கள். பெரும்பான்மையாக எங்களை அனுப்பி வைத்தப் போதே மக்கள் எங்களை நம்பித்தான் அனுப்பி வைத்திருக் கிறார்கள். அறுபது பேர்களாக அமர்ந்திருக்கின்ற நீங்களா, எங்கள் மீது நம்பிக்கையில்லை என்று கூறுவதற்கு அருகதையுள்ளவர்கள்?'' என்றெல்லாம் கேட்டார்கள்.

ஆனால், இந்த ஒரு விஷயத்தில், கிடைத்திருக்கின்ற இடங்களை மாத்திரம் பார்க்கக்கூடாது. வெற்றி பெற்றிருக்கின்ற

உறுப்பினர்களுடைய தொகையை மாத்திரம் பார்த்தால் நல்ல தல்ல. 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெற்றிருக்கிற வாக்குகள் 58,48,974. காங்கிரசை எதிர்த்து நின்ற கட்சிகளெல்லாம் பெற்றிருக்கின்ற வாக்குகள் 68,27,372. இதிலிருந்தே, வாக்காளர்கள் மத்தியில் காங்கிரசுக் கட்சி மீது நம்பிக்கை இல்லை என்பது புலனாகிறது. இந்தப் பத்து இலட்சம் வாக்குகள் வித்தியாசத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் 34 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளைச் சென்ற தேர்தலில் பெற்றிருக்கிறது. இது திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருகின்ற கட்சி என்பதை நாட்டுக்குப் புலப்படுத்து கின்ற ஒன்றாகும். இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கின்ற வாக்குகளை வைத்து, விகிதாசார முறையிலே இடங்களைத் தேர்ந்தெடுப்பது என்று பார்த்தால் எதிர் கட்சிகளுக்குத்தான் அதிக இடங்கள் கிடைத்திருக்க முடியும் என்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடக் கூடாது. ஆகவே, மக்கள் தம் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று தவறாகக் கருதிக் கொண்டு அந்த நினைப்பில் அரசினர் பல்வேறு தவறுகளைச் செய்வார்களானால் அது நல்லதல்ல என்று இடித்துக் காட்டத் தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

முதலில், சர்க்காருக்கும், கட்சிக்கும் இருக்கிற வேறுபாட்டை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். நாட்டைக் காங்கிரஸ் கட்சியினுடைய சர்க்கார் ஆளுகிறது என்றால் பரவாயில்லை. ஆனால், காங்கிரஸ் கமிட்டியேதான் ஆளுகிறது என்றால், அதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக, திரு. காமராஜரேதான் மறைமுகமாக ஆண்டுகொண்டிருக்கிறார் என்றால் இது உள்ளபடியே குற்றம் சாட்டப்படுவதற்குத் தகுதியான பொருளா? அல்லவா? நான் இதை ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. ஏனோதானோ என்று, 'மறைமுகமாக அவர் ஆளுகிறார்' என்று வார்த்தை அலங்காரத்தோடு முடித்துவிடவும் விரும்பவில்லை. சில நிகழ்ச்சிகளை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

18-10-1964 அன்று, உணவுப் பிரச்சினைப்பற்றி விவாதிக்க முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர்

திரு. வெங்கட்டராமன் அவர்களும், அமைச்சர் திரு. ராமையா அவர்களும் கூடுகிறார்கள். எங்கே? இங்கே, செக்கரடேரியட்டிலா? அல்ல. முதல் அமைச்சருடைய இல்லத்திலா? அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய வீட்டிலே கூடுகிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பற்றி அங்கே விவாதிக்கிறார்கள். சென்றவர்கள் மந்திரிகள் மாத்திரமல்ல, அதிலே குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டு என்னவென்றால், இந்தச் சர்க்காருடைய பிரதம காரியதரிசி திரு. செட்டூர் அவர்களே அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டினுடைய முதல் மெம்பர் திரு. வர்கீஸ் அவர்களும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். Code of Conduct of Government Servants என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதே அதற்கு மாறாக திரு. செட்டூர் அவர்களும், திரு. வர்கீஸ் அவர்களும் உணவுப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க ஒரு கட்சித் தலைவரின் வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள் என்றால் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று கூறுவதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். (எதிர்க்கட்சித் தரப்பில் ஆரவாரம்). நான் கேட்கிறேன், அது மாத்திரம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த கண்ணதாசன் அவர்களுடைய அன்னையார் இறந்து விட்டதற்காக அனுதாபக் கடிதம் எழுதிய போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் அதனால் பாதிக்கப்பட்டார். ஒரு அரசியல் கட்சியிலிருந்த உறுப்பினர் ஒருவருடைய தாயார் இறந்ததற்காக ஒரு சர்க்கார் சிப்பந்தி அனுதாபக் கடிதம் எழுதினார் என்பதற்காக எத்தகைய ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் இன்றைய தினம் நடந்திருக்கிற தவறை எண்ணிப் பாருங்கள். அதன் தொடர்பாக இன்னொரு குற்றச் சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். அருமைத் தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் விழா சென்னை நகரிலும் மற்ற இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழகத்தில் பிறந்த தமிழன் ஒருவனுடைய பிறந்தநாள் விழாவை அகில இந்தியாவிலும் கொண்டாடப்படுவது பற்றி நாங்களும் பெருமைப்படுகிறோம், வாழ்த்துகிறோம். அந்த வகையில்தான்,

அவருடைய பிறந்ததின விழாவின்போது, நாங்கள் எங்களுடைய பத்திரிக்கையில் வாழ்த்துச் செய்தி பிரசுரித்தோம். அவருக்கும் அனுப்பியிருந்தோம். எங்கள் அண்ணாவும் அவரை வாழ்த்திப் பேசினார். காமராஜ் வேண்டுமானால் அண்ணா அவர்களின் பிறந்த தின விழாவிற்கு வாழ்த்து அனுப்பாது இருந்திருக்கலாம். அவர்கள் கட்சியிலே அண்ணா பிறந்த நாள் விழாவைக் கேலி பேசும் பண்பாளர்கள் இருந்திருக்கக் கூடும். ஆனால் நல்ல பண்பாளர்கள் பாசறையில் வளர்ந்திருக்கக் கூடிய நாங்கள் இன்றைய தினம் காமராஜர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடியதைக் குறைகூற முன் வரவில்லை. ஆனால் அந்தப் பிறந்தநாள் விழா ஒரு கட்சித் தலைவருக்கு நடத்துகின்ற விழாவாக இருந்ததா? சர்க்கார் நடத்துகின்ற விழாவாக நடைபெற்றதா? என்றுதான் ஆராய வேண்டும். அது சர்க்கார் திருவிழாவாகத்தான் நடைபெற்றது. ஜனநாயக சோஷலிச வாரம் என்ற முறையில் நடைபெற்றது. பட முதலாளிகளும், சினிமா அதிபர்களும், மில் ஓனர்களும் அங்கங்கே பல இலட்சம் செலவில் சென்னை நகரில் வளைவுகள் போட்டார்கள். 'ஜனநாயக சோஷலிசம் என்றா சொல்கிறீர்கள். ஜனநாயக சோஷலிசம் என்றால் நாங்கள் போட்ட வளைவுகளுக்குள்ளே சற்று குனிந்து செல்லுங்கள்' என்று திரு. காமராஜரைப்பார்த்துச் சொன்னார்கள். அது பற்றி நான் கவலைப் படவில்லை! ஆனால் நடந்தது என்ன? அந்த விழாவுக்கு ஆயிரக்கணக்கான கொடிகள் பறக்கவிடப்பட்டன. அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் பறக்கவிடப்பட்ட கொடிகளை எங்கள் கட்சியிலுள்ள அன்றாடம் காய்ச்சிகள் மூங்கில் மரங்களில் பறக்கவிடுவது போல் பறக்க விட்டார்களா? ஒவ்வொரு கொடியும் 20 அடி உயரமுள்ள ஒரு பைப்பிலே பறக்க விடப்பட்டது. ஒரே மாதிரியாக 20 அடி உயரமுள்ள இரும்பு பைப்புகள், ஒரு அடி 2 ரூபாய் விலையுள்ள பைப்புகள் 980. ஆதாவது ஏறத்தாழ 30,000 ரூபாய் மதிப்புள்ள பைப்புகள் தருவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பைப்புகள் எங்கிருந்து வந்தன? அந்த மாதிரி பைப்புகள் சர்க்காரிடம் 80 இலட்சம் ரூபாய் காண்டிராக்ட் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கம்பெனியாருடையது என அறிகிறேன். அது ஊர்ஜிதமான செய்திதானா? அல்லது

வேறு ஒரு செய்தியும் காதில் விழுந்தது. அத்தனை பைப்புகளும் சர்க்காருடைய மராமத்து இலாகாவிலிருந்து வரவழைக்கப் பட்டது என்று சொல்லப்பட்டது. இந்த 30,000 ரூபாய் மதிப்புள்ள பைப்புகளும் அரசாங்க இலாகாவிலிருந்து தருவிக்கப்பட்டதுதானா? இந்த பைப்புகள் எங்கிருந்து வந்தன? மாயாபஜாரில் வருவதுபோல் வந்து மறைந்துவிட்ட இந்தப் பைப்புகளின் வரலாறு என்ன? அதுமட்டுமல்ல, ஊர்வலத்திற்கு மீன் இலாகா ஜீப் கார் எம்.எஸ்.வி. 6907 பயன்படுத்தப்பட்டது. டெல்லி பட்டின குடியரசு தின விழாவிலே எத்தகைய ஒரு அலங்காரத்தோடு அது வெளியே விடப்பட்டதோ அதே அலங்காரம் கலையாமல் இங்கே ஒரு கட்சித்தலைவருடைய பிறந்த தின விழாவிலே அலங்காரமாக பவனிவருவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றால் என்ன பொருள்? முதல் நாளே அமைச்சர் பூவராகன் அவர்கள் அந்த எம்.வி. 6907 நம்பருடைய அரசாங்க ஜீப் காரின் அலங்காரத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அது மறுதினம் சுற்றுலா விடப்பட்டுள்ளது. அன்றையதினம் கடற்கரையிலே பொதுக் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட கூட்ட மேடை லிப்ட் பொதுப் பணித்துறை இலாகாவிலிருந்து எடுத்துவரப்பட்ட லிப்டாகும். இன்னும், பொதுப்பணித்துறை டிராக்டர்கள் அலங்கரிக்கப்பட்டு பிறந்த தின விழாவின்போது ஊர்வலமாக விடப்பட்டிருக்கின்றன. இதோ அந்த டிராக்டர்களின் புகைப்படங்கள். இதைவிட இந்தச் சர்க்காரின்மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆதாரம் வேண்டுமா? இதற்கு சரியான பதிலை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

திரு. பழனி அவர்கள், 45 கோடி மக்களின் தலைவர் காமராஜ் என்று சொன்னார். நான் பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன். அத்தகைய மாபெரும் தலைவர் ஒருவருடைய விழா பொதுமக்கள் அனைவராலும் பெருமையோடும் பூரிப்போடும் கொண்டாடப்பட வேண்டியிருக்க அதை ஒரு அரசாங்க விழாவாக்கி அந்த விழாவிற்கே ஊனம் உண்டாக்கி விட்டீர்களே, அவருடைய விழாவிற்கே ஒரு களங்கத்தை உண்டு பண்ணி விட்டீர்களே என்று காமராசர் சார்பில் குற்றம்சாட்ட

விரும்புகிறேன். ஆகவே, இன்றைய தினம் காங்கிரஸ் கமிட்டி நாட்டை ஆளுகிறதா? காங்கிரஸ் சர்க்கார் நாட்டை ஆளுகிறதா? என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. தவறு செய்தவர்களும், கொள்ளை லாபம் அடிக்கிறவர்களும், கள்ளக் கணக்கு எழுது கிறவர்களும், பலர் காங்கிரஸ்காரர்கள் என்பதாலும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுகிறவர்கள் என்கிற காரணத்தினாலும் சரியான நடவடிக்கை இந்த அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய பாதுகாப்புக்குள்தான் இந்த அரசாங்கம் இன்றைய தினம் வாழ முடிகிறது, வாழுகிறது என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அருமை நண்பர் திரு. வீரபாகு அவர்கள் கேட்டார்கள், ஊழல்களைப் பற்றி பட்டியல் தருகிறீர்களே, அவற்றிற்கு ஆதாரம் காட்டுங்கள் என்று அவருடைய பெயருக்கேற்ப வீரத்தோடு கேட்டார்கள். நான் மரியாதையோடு ஏற்றுக்கொள்கிறேன். முதல் நாள் பேசிய புலவர் கோவிந்தன் அவர்கள், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு மத்திய பாங்கு தலைவரைப் பற்றிய குற்றங்களை குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்திலே அவர் ஒரு பெரும் காங்கிரஸ் தலைவர். இந்த சபையில் உதவி சபாநாயகராக வீற்றிருந்தவர். கூட்டுறவு மத்திய பாங்கு தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர். அவரைப் பற்றிய குற்றச்சாட்டுகளை ஆதாரங்களோடு அவர் கைப்பட எழுதிய கடிதத்தோடு திரு. கோவிந்தன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதன் தொடர்பாக இரண்டொரு ஆதாரத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமே வாங்கவேண்டுமென்று கூட்டுறவு பதிவாளர் உத்திரவு இருந்தும் அவர் தம் மைத்துனர் வாசுதேவன்மீது ஏஜெண்ட் எடுத்து ''சாம்ராஜ் ஆயில் மில்ஸ்'' என்ற பிண்ணாக்கு கம்பெனியிலிருந்து 10 இலட்சத்திற்குப் பிண்ணாக்கு வாங்கி 1 இலட்சம் லாபம் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன்.

அரக்கோணம் வட்டம், சித்தேரி கூட்டுறவு சொசைட்டியில் 1963 ஜூன் மாதம் குறுகிய கால நீண்ட கால

கடன் 36,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கிய கடனில் ரிசர்வ் பாங்க் கண்டுபிடித்ததில் 1957-இல் செத்தவர்களும் கடன் பெற்றிருக்கின்றனர். செக்ரடரி பழனி தலைவர் வீட்டில் பதுங்கியிருக்கிறார். அதே தலைவருடைய மற்றொரு சொந்தக்காரர் ஆதிகேசவலு நாயுடு என்பவருக்கு கொடுக்க சொசைட்டியில் 8,000-ம், செய்யார் வட்டம் கூட்டுறவு மானேஜிங் சொசைட்டியில் 12,000-ம் கடனாக தானியத்தின் மீது தரப்பட்டது. தானியக்கிடங்கை உடைத்தால் தானியமில்லை. கதவு இருந்தது, பூட்டு இருந்தது, அறை இருந்தது, தானியமில்லை, இல்லாத தானியத்தை உள்ளே இருப்பதாக வைத்துக் கடன் கொடுக்கப்பட்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அது விசாரணைக்கு வந்தபோது ஸ்டேட்மெண்ட் தரப் பட்டது. அந்த ஸ்டேட்மெண்டில் தலைவர் சொன்னார். 'நான் கார் வாங்க அந்தப் பத்தாயிரத்தை எடுக்கச் சொன்னேன்! பிறகு கார் வாங்குகிற தீர்மானத்தைக் கைவிட்டு விட்டேன்' என்று. அந்த சொசைடியின் செயலாளர் சொன்னார், 'ஜவுளிக் கடை வைக்க வேண்டுமென்று பத்தாயிரம் எடுக்கச் சொன்னார்! பிறகு வைக்க வேண்டாமென்று திருப்பிப் போட்டு விட்டோம்' என்று. கார் வாங்கப் பணம் எடுத்தது உண்மையா; அல்லது ஜவுளிக் கடை வைக்கப் பணம் எடுத்தது உண்மையா அல்லது காங்கிரஸ்காரர் என்பதற்காக அவர்மேல் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது உண்மையா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது மாத்திரமல்ல; நண்பர் ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி அவர்கள் துண்டு வெளியீடுகள் வெளியிட்டு கனம் அமைச்சர் ராமையா அவர்கள் அங்கு சென்றிருந்தபோது அவற்றை அவரிடமும் கொடுத்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கொடுத்தார். ஆனால் குற்றவாளி கைது செய்யப்படவில்லை; ஆனால் குற்றங்களைச் சுட்டிக் காட்டிய பரிதாபத்துக்குரிய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் கைது செய்யப்பட்டு பிறகு ஜாமீனில் வெளியே வந்தார்கள். இது நிலைமை. அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் தவறு செய்தால் ஏன் மன்னிக்கப்படுகிறார்கள்?

மெட்றாஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் லஞ்ச ஊழல் தாண்டவமாடிற்று என்ற காரணத்திற்காக சேர்மன் கைது செய்யப் பட்டார் (ஹவுஸ் அரெஸ்ட்); செக்ரடரி கைது செய்யப்பட்டார்; சூப்பரின்டென்டெண்டு கைது செய்யப்பட்டார். அவர்கள் கைது செய்யப்பட்டார்களே தவிர, இதுவரை அவர்கள்மீது வழக்கு பதிவுசெய்யப்படவில்லை. காரணம் கேட்டால் - ஊர் பேசுகிறது. . . .

கனம் உதவி சபாநாயகர் : 'ஊர் பேசுகிறது' என்றெல்லாம் கனம் அங்கத்தினர் பேசவேண்டாம்.

கலைஞர் மு. கருணாநிதி : 'எங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டால் நாங்கள் சில அமைச்சர்களைக்கூட இதிலே காட்டிக்கொடுப்போம்' என்று அந்த குற்றவாளிகள் மிரட்டியதாக வதந்திகள் உலவுகின்றன. அமைச்சர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள் என்ற களங்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காகவாவது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா; அந்த வழக்கு பதிவு செய்யப்பட வேண்டாமா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சொந்தக்காரர் விஷயம், வேண்டியவர் விஷயங்கள் கூட்டுறவுச் சங்கங்களோடு, சர்வீஸ் கமிஷனோடு போய் விட்டதா என்றால் இல்லை. அதையும் கடந்து அமைச்சர்கள் நிலையில் வந்திருப்பதற்கான ஆதாரங்களையும் இந்த மன்றத்தில் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுத் துறை, தனியார் துறை இரண்டையும் இந்தச் சர்க்கார் தங்களுடைய பொருளாதாரத் துறையிலே இலக்கணமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளிடமே ஏன் எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள்; ஏன் அவற்றையெல்லாம் பொதுத்துறையிலே எடுத்துச் செய்யக்கூடாது என்று கேட்டார் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள். 'நம்மிடத்தில் அவ்வளவு பணம் இல்லை; தனியார் துறையினர் முதலீடு செய்ய முந்திக் கொண்டு வருகிறார்கள்; அதைப் பயன்படுத்தி நாம் அந்தத் தொழில்களை வளர்க்க வேண்டாமா? என்று கேட்கிறார். அவர்களைப் பொறுத்தவரையில் வாதம் நியாயம். ஆனால்

நடைமுறையில் அப்படி நடைபெறுகிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஈரோட்டின் அருகில் இருக்கும் பள்ளிப் பாளையத்தில் சேஷசாயி பேப்பர் மில் என்ற மில் ஒன்று துவக்கப்பட்டது. அதன் முதலீடு ஆறு கோடி ரூபாய். அந்த மில்லுக்குத் தேவையான ஆறு கோடி ரூபாயில் அதன் டைரக்டர்களாக இருப்பவர்கள், தனியார் துறையினர் தருவதாக வாக்களித்திருப்பது 20 அல்லது 25 இலட்சம். ஆனால் பொதுப் பணத்திலிருந்து ஸ்டேட் கவர்ன்மெண்டு, இண்டஸ்ட்ரியல் கார்ப்போரேஷன் இவைகளின் மூலமாகக் கொடுக்கப்படுகிற பணம் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும். தனியார் துறை போடுகின்ற பணம் 25 இலட்சம்; பொதுப்பணத்திலிருந்து இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன், ஸ்டேட் கவர்ன்மென்ட் தருகிற பணம் ஐந்து கோடிக்கு மேல். 90 சதவிகிதம் பொதுப் பணத்திற்கு வழிகோலிவிட்டு, பிறகு தனியார் துறைக்குத் தருவானேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றிய உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு ஒரு கோடி ரூபாய் மெட்றாஸ் இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் கொடுத்திருக்கிறது; மூன்று கோடி ரூபாயை வொர்ல்டு பாங்கு மூலமாக வாங்கியிருக்கிறார்கள். ப்ரைவேட் எண்டர்ப்ரைசுக்குத்தான் வொர்ல்டு பாங்கியிலிருந்து கடன் கொடுப்பார்கள், நம்முடைய ராஜ்யத்தில் 70 டன் காகிதத் தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்காக எம்.ஐ.சி. மூலமாகப் பணம் கொடுத்திருக்கிறோம்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் ஆரம்பத்தில் இவ்வளவுதான் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. 20 அல்லது 25 இலட்சம் அவர்கள் போட்டிருக்கக்கூடும் என்று சொன்னேன். அதேபோல் ஐந்து கோடி ரூபாய் பொதுப் பணத்திலிருந்து இருக்கக்கூடும் என்று சொன்னேன். எனக்குச் சரியான புள்ளி விவரம் தெரியாத காரணத்தால் அவ்வாறு சொன்னேன். ஆரம்பத்திலேயே உலக பாங்கிலிருந்து வாங்குகிற கடனை தனியார் துறைக்கு என்று வாங்காமல் பொதுத்துறைக்கு என்று சொல்லி வாங்கி ஏன் இந்த அரசு நடத்த முன் வந்திருக்கக்கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுடைய பாலிசி அப்படி. வொர்ல்டு பாங்கு கவர்ன்மெண்டுக்குப் பணம் கொடுக்க மாட்டார்கள். கவர்ன்மெண்டுக்கு கவர்ன்மெண்டு லோன் கொடுக்கிறார்கள். வொர்ல்டு பாங்கு ப்ரைவேட் எண்டர்பிரைசுக்குத்தான் கடன் கொடுக்கிறார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : நமது பொதுத் துறையை பற்றி, அவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள் போலும், அடுத்து, சேலம் மாக்னசைட் ஏறத்தாழ 99 வருஷ காலம் வெள்ளைக்காரனிடத்திலே குத்தகைக்கு இருந்தது. அது நல்ல லாபகரமான தொழில், குத்தகை காலம் முடிந்ததும் அதை ஒப்படைக்கிற நேரத்தில் அந்தத் தொழிலைப் பொதுத்துறையில் சர்க்காரே ஏற்று நடத்தி இருக்கலாம். அதற்குப் பதிலாக கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு, தனியார் துறைக்கு, சேலம் மாக்னசைட்டை நடத்துகிற உரிமை கட்டிடங்கள், மெஷினரிகள் உட்பட மூன்று கோடி ரூபாய் விலைக்கு விற்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் சர்க்கார் ஆண்டு தோறும் அடையவேண்டிய லாபத்தை இழந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் ஏறத்தாழ 10 மாவட்டங்களில் இருக்குமென்று வைத்துக்கொண்டால் ஒரு ஸ்பின்னிங் மில்லுக்கு போட வேண்டிய மூலதனம் 50 இலட்சம் ரூபாய். எல்லா ஸ்பின்னிங் மில்களுக்கும் தேவையான அளவுக்கு மெஷினரிகள் வாங்க கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய முதலீடு செய்யப் பட்டிருக்கிற ஸ்பின்னிங் மில்களுக்குத் தொடர்பு கொண்டிருக்க வேண்டிய இலாகா அதிகாரிகள் ஒன்று டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரிஸ் ஆக இருக்கவேண்டும் அல்லது கூட்டுறவு ரிஜிஸ்ட்ராராக இருக்கவேண்டும். ஆனால் இந்தத் தொடர்பு இன்று டைரக்டர் ஆப் ரிஜிஸ்ட்ராரிடமும் இல்லை; கூட்டுறவு ரிஜிஸ்ட்ராரிடத்திலும் இல்லை; இந்தத் தொடர்பு டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் என்ற பதவியோடு ஒட்டவைக்கப்பட்டிருக் கிறது. அதற்கு காரணம் அதன் தலைவர் மகாதேவன், ஐ.ஏ.எஸ். அவர்கள் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுக்கு மிக வேண்டியவர் என்று சொல்லப்படுகிறது.

THE HON. SRI R. VENKATARMAN : I expect the hon. the Deputy Leader of the Opposition to make statement with a full sense of responsibility. Does he impute improper motive?

கலைஞர் மு. கருணாநிதி : அது இணைக்கப்பட வேண்டியது டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அல்லது கூட்டுறவுப் பதிவாளர்.

THE HON. SRI. R. VENKATARAMAN : I want a very definite answer. The Director of Handlooms is the ex-officio Registrar of Co-operative Societies, perhaps the hon. Member may not know it. But if he imputes any motive againt me or the officer (Mahadevan) he must be able to prove it. Otherwise, it is improper. The hon. Deputy Leader of the Opposition should be prepared to substantiate his statement immediately. I do not want any vacillation on this point.

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : மூன்று கோடி ரூபாய் மெஷினரியில், உள்நாட்டில் வாங்கியது போக வெளி நாட்டில் வாங்க ஜப்பான் நாட்டுக்குச் சென்றார்கள். மெஷினரி வாங்கச் செல்கின்ற நேரத்தில்:

THE HON. SRI. R. VENKATARAMAN : I want a very definite answer.

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவரது குற்றச் சாட்டைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : நான், டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரிஸ் அல்லது கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்களும் ஸ்ப்பின்னிங் மில்களுடன் தொடர்பு இருக்க வேண்டியிருக்க, டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் - இடம் அந்தத் தொடர்பை ஏற்படுத்த என்ன காரணம் என்ற கேள்வியைத்தான் எழுப்பினேன். மகாதேவன் அவர்கள் . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கேள்வி தவறு என்று சொன்னேன். Mr. Deputy Speaker Sir, I want a

straight answer to my objection. I do not want any vacillation on this இப்போது, மகாதேவன் எனக்கு வேண்டியவர் என்று சொன்னது. . . (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் சில தி.மு.க. உறுப்பினர்கள் குறுக்கீடு) கருணாநிதியைவிட நீங்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள் அல்ல. அவருக்கு என்ன பேசுகிறோம், என்ன பதில் சொல்ல வேண்டும் என்பது நன்றாகத் தெரியும். அவரைத்தான் நான் கேட்கிறேன். 'வேண்டியவர்' என்று சொன்னதிலே 'இம்ப்ராப்பர் மோட்டிவ்' இல்லையா என்று கேட்கிறேன், The Hon. Member Sri. M. Karunanidhi, will take care of himslef.

கலைஞர் மு. கருணாநிதி : வேண்டியவர் என்ற காரணம் கற்பிக்கப்பட்டு அது அமைச்சர் அவர்களுக்குக் களங்கத்தைக் கொண்டு வந்து சேர்க்குமே என்ற காரணத்தால் ஏன் அந்தப் பொறுப்பு மாற்றப்பட்டது என்று கேட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : It goes further. I want to know whether the hon. Member, Sri Karunanithi, honestly, sincerely and personally thinks that there is somthing improper. . . .

கலைஞர் மு. கருணாநிதி : அவர் இருப்பதால் வேண்டியவர் என்று கருதினேன். அவர் வேண்டியவர் அல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களேயானால் நான் நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

THE HON SRI. R. VENKATARAMAN : This is not proper.

கலைஞர் மு. கருணாநிதி : வேறு உள்நோக்கத்தோடு சொல்லவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று கோடி ரூபாய்க்கு மெஷினரி வாங்குவதிலே உள் நாட்டிலே வாங்கியது போக மிச்சத்தை ஜப்பான் நாட்டிலே வாங்கவேண்டும். . . .

(There was noise in the House.)

894.8115
TAM
G0140

MR. DEPUTY SPEAKER : When an hon. Member is speaking, other hon. Members should keep silence.

கலைஞர் மு. கருணாநிதி : அப்படி ஐப்பான் நாட்டிலே சென்று வாங்குவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரை அனுப்பியதற்குப் பதிலாக அவருடன் ஒரு எஞ்சினியரை அனுப்பி இருக்கலாம்.

அப்படிப்பட்ட ஒரு அதிகாரி எதற்காக அனுப்பப்பட வேண்டும் என்கின்ற சந்தேகத்தை எழுப்புகின்ற பிரச்சினையாக அது அமைகின்ற காரணத்தினால் இதைப்பற்றி அமைச்சர்கள் சரியாக நடந்துகொள்ள தவறியிருக்கிறார்கள் என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மெஷினரிகள் வாங்குகின்ற நேரத்தில் கிடைக்கவேண்டிய 'உள் கமிஷன்' இந்த ஸ்பின்னிங் மில்களுக்கு சேர்ந்திருக்கிறதா என்பது தெரியவில்லை.

MR. DEPUTY SPEAKER : If the hon. Member is making a definite allegation, he should make hold to say that it is so otherwise, he need not go into details.

கலைஞர் மு. கருணாநிதி : தனியார்களுக்கு கொடுக்கப் படுகின்ற ஸ்பின்னிங் மில்களுக்கான லைசன்ஸ் 13 பேருக்குத் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கொடுக்கப்பட்ட 13 லைசன்ஸ்களும் காங்கிரஸ்காரர்களுக்கே கொடுக்கப்படுகிறது என்கின்ற குற்றச்சாட்டை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மூன்று கோடி ரூபாய் மூலதனம் போடவேண்டிய ஒரு டயர் உற்பத்தி தொழிற்சாலைக்கான லைசன்ஸ் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கான லைசன்ஸ் வாங்கியவர் இதற்கான மூலதனத்தை போட முடியாமல் இன்றைக்கு பலரிடம் மூலதனத்திற்காக அலைந்துகொண்டிருக்கிறார். தனியார் துறை என்ன வாழ்கிறது? தனியார் துறையில்தான் பெருமளவில் மூலதனம் போடக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே பல பெரிய தொழில்களை அவர்களிடம் ஒப்படைக்கிறோம் என்று சர்க்கார் சொல்லுகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு தனியாரிடம் லைசன்ஸ் கொடுத்து ஒன்றரை வருடம் ஆகிறது. தனக்கு முதலீடு செய்ய முடியாமல் இன்றைக்கு பல பாகங்களிலும் அலைந்து கொண்டிருக்கிறார். தனியார் துறையில்தான் மூலதனம் போடக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான்

அவர்களிடம் பெரும் தொழில்களை எல்லாம் ஒப்படைக்கிறோம். சர்க்காரே எல்லாவற்றுக்கும் பணம் போடுவதென்றால் முடியக்கூடிய காரியமா என்று நமக்கு சர்க்கார் எடுத்துக் கூறுகின்றார்கள். இப்போது சர்க்கார் என்ன சொல்லுகிறது? இதில் சர்க்காருடைய பொருளாதாரக் கொள்கை சேதப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை சர்க்கார் ஆராய வேண்டும்.

மற்றொன்று, சென்னையில் சாக்கடைத்திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஐந்தாவது வட்டார (5-வது ஸோன்) சாக்கடைத் திட்டம் ஒன்றை அரசினர் அங்கீகாரம் செய்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசாங்கம் இதற்கான நிதியையும் மாநகராட்சிக்கு வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் சாக்கடைத் திட்டம் போடுவதற்காக பைப்புளும் வாங்கி தரையில் போடப் பட்டிருக்கின்றன, இந்தச் சாக்கடைத் திட்டம் திருவான்மியூர் பக்கத்தில் நீலாங்கரை கிராமத்தில் இருக்கின்ற சுமார் 400 ஏக்கர் நிலத்தில் நிறைவேற்றவேண்டிய திட்டம். இந்த நிலத்தில் சாக்கடைத் தண்ணீரை சுத்தம் செய்து, பின்னால் அதை பக்கீம்காம் கால்வாயில் இணைக்க வேண்டும் என்பதுதான் திட்டம். இந்த 400 ஏக்கர் நிலத்திற்குள் சாக்கடையை சுத்தப் படுத்தவேண்டும். இதை மதிப்பிற்குரிய அமைச்சர் மஜீத் அவர்களும், மதிப்பிற்குரிய ஜோதி அம்மையார் அவர்களும் போய் அங்கீகாரத்திற்காக பார்வையிட்டதாகவும் கேள்விப் பட்டேன். அப்படிப்பட்ட இடம் கடந்த மூன்று ஆண்டு காலமாக கார்ப்பரேஷனுக்கு கிடைக்காத காரணத்தால் இந்த ஐந்தாவது வட்டார சாக்கடைத் திட்டம் நிறைவேற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. இந்த 400 ஏக்கர் நிலத்திற்கு 'ஆர்.வி. அவின்யூ' என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அமைச்சர் ஆர். வெங்கட்டராமன் அவர்களுடைய நிலம் என்று சொல்லப்படுகிறது! என்னால் இதுபற்றி அறுதியிட்டுக் கூற இயலாவிட்டாலும், ஏன் 'ஆர்.வி. அவன்யூ' என்று போடப் பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சர் அவர்களுடைய பெயரிடப்பட்டிருப்பதால் இத்திட்டம் நிறைவேறாமல் தாமதப்படுகிறதா என்கின்ற சந்தேகம் பலருக்கு ஏற்படுகிறது. இந்த நிலையில் கார்ப்பரேஷன்

நாறுகிறது என்று சொல்கிறார்கள். இப்போது எது நாறுகிறது? கார்ப்பரேஷனா அல்லது சர்க்காரா, உண்மையிலே சர்க்கார்தான் நாறுகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாற்றத்தை தொடர்ந்து இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். பல நல்ல அதிகாரிகள் கண்டுபிடித்த கள்ளக் கணக்குகளை எல்லாம் வைத்திருக்கின்ற வியாபாரிகளுக்கு அரசினர் பாதுகாப்பு வேலி அமைக்கின்ற வகையில் இன்னும் இரண்டுமாத தவணை கொடுக்கிறார்கள். இப்படி இரண்டு மாத தவணைக் கொடுத்திருந்தால் எங்கே அவர்கள் இனி கள்ளக் கணக்கை சரி செய்யாமல் வைத்திருக்கப் போகிறார்கள்? 'இன்று போய் நாளைவா' என்று ராமாயணத்தில் ராமன் ராவணனிடத்தில் கூறியதாக பார்த்தோம். ராமாயணம், பௌராணிகர்களால் எழுதப்பட்ட போதிலும், ராவணன் நேர்மையாக இருந்ததன் காரணமாக அதேபோன்று நடந்து கொண்டான், நேர்மையற்றவனாக இருந்திருந்தால், அன்று இரவே சீதையையும் அசோகவனத்திலிருந்து எடுத்துக்கொண்டு வேறு எங்காவது ஓடிப் போயிருப்பான், ராவணன் நேர்மையாக இருந்ததால் சீதைக்கும் பாதுகாப்பு கொடுத்து, அடுத்த நாள் போருக்கு வந்தான், உயிர் விட்டான். அந்தக் கதை வேறு விஷயம். ஆனால் இந்த ராவணன்கள் 'இன்று போய் நாளை வா' என்பதை வைத்துக்கொண்டு கள்ளக் கணக்கு எனும் சீதையையும் தூக்கிக்கொண்டு இரவோடு இரவாக மறைந்து விடுவார்கள் என்பதை இந்த அரசுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க முற்படலாமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் பற்றி இதுவரை சொன்னேன். வேண்டாதவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் என்ன என்பதைப் பற்றியும் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய முதமைச்சர் அவர்களுடைய தேர்தல் வழக்கு நடக்கும்போது முதலமைச்சர் அவர்களுக்கு எதிராக சாட்சியம் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக ஆவடி போலீசார் சிலரின் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை கூறுகிறேன். இவைகளை எல்லாம் முதலமைச்சர் அவர்கள்

நேரடியாகச் செய்தார் என்று நான் குறிப்பிடமாட்டேன். இவ்விதம் செய்தால் முதலமைச்சர் அவர்கள் திருப்தியடைவார்கள் என்ற நோக்கத்தோடு சிலர் செய்திருக்கலாம். அவர்கள் அவ்விதம் கருத முதலமைச்சர் அவர்கள் காரணமாக இருந்திருப்பார்களேயானால் அதுவும் முதலமைச்சர் அவர்களைச் சார்ந்த குற்றம் என்பதையே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆவடியில் திருமால் என்பவர், பி.சி. நம்பர் 560, 1-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு நேபா பகுதிக்கு அனுப்பப் பட்டிருக்கிறார். அடுத்து, துரைசாமி, லான்ட்ஸ்நாயக் நம்பர் 819, எஸ்.ஏ.பி.-யில் இருந்தவர், எம்.எஸ்.பி.-யில் 3-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு நேபா பகுதிக்கு அனுப்பப் பட்டிருக்கிறார், அடுத்து மதுரைப்பிள்ளை என்பவர், பி.சி. 739, எஸ்.ஏ.பி.-யில் 1-வது பட்டாலியனிலிருந்து எஸ்.ஏ.பி.-க்கு 2-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு ஒரிசாவுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார். நேர்மாறாக முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் சொன்னவர்களில் 49 பேர்களில் 20 பேர்களுக்கு லான்ட்ஸ் நாயக், நாயக், ஹவில்தார் இவ்விதமாக பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை முதலமைச்சர் அவர்கள் திருப்தி அடைவார் என்ற காரணத்திற்காக யாராவது செய்திருப்பார்களேயானால் அதற்கு காரணமாயிருந்தது முதலமைச்சர் அவர்களுடைய குற்றமா இல்லையா என்பதை கேட்க விரும்புகிறேன். இவ்வளவும் செய்துவிட்டு, நேர்மையான நிர்வாகம் நடக்கிறது என்றால் எப்படி அதை ஒப்புக்கொள்ள முடியும்?

இன்னும், இதே சட்டமன்றத்தில் மொழிப் பிரச்சினையைப் பற்றி பல நேரங்களில் விவாதிக்கிறோம். தமிழ் மொழியை அழிக்கின்ற வகையில் இந்தி மொழி புகுத்தப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு இதைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் இந்தி என்பது நமக்கு கள்ளிப்பால் போன்றிருக்கிறது என்று நான் சொன்னபோது, பதில் அளித்த நமது முதலமைச்சர் அவர்கள் இந்திமொழி 'கள்ளிப்பால்' அல்ல 'கழுதைப்பால்' என்று குறிப்பிட்டார்கள். இதே முதலமைச்சர் அவர்கள் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தபோது, அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தொன்றில் ஒட்டகப்பால் வழங்கப்

பட்டது என்றும், உடம்புக்கு ஒட்டகப்பால் மிகவும் நல்லது என்ற போதிலும், அது எனக்கு பிடிக்கவில்லை என்றும் உபயோகிக்க வில்லை என்றும் அமைச்சர் அவர்கள் ஒரு விருந்தில் சொன்னார்கள். அவ்விதம் உடம்புக்கு நல்லதாக இருந்த ஒட்டகப்பால் பிடிக்காத நேரத்தில், இந்த கழுதைப்பால் மட்டும் எப்படிப் பிடித்தது என்பது தெரியவில்லை. மொழிப் பிரச்சினைக்காக தமிழர்களுடைய உயிர் பறிக்கப்படுகிறது. தமிழர்கள் எல்லாம் கொடிய அடக்குமுறைக்கு ஆளாக்கப்படு கிறார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் எல்லாம் விலங்கிட்டு சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இது அடக்கு முறை அல்லவா? இது கொடுமை அல்லவா? தமிழ் பாட மொழியாக இருக்கவேண்டும் என்று போராடுகிற தமிழரசுக் கழகம் அடக்குமுறைக்கு ஆளாகிறது. அது கொடுமை அல்லவா? மொழிப்பிரச்சினைக்கு அடுத்ததாக மற்றொரு பிரச்சினையை இறுதியாகக் குறிப்பிட்டுப்பேச விரும்புகிறேன் அதுதான் உணவு நிலைமை. அரிசி வாங்க க்யூ வரிசையில் இன்றைய தினம் ஆண்களும் பெண்களும் நிற்கிற கோரக் காட்சியை ஏற்படுத்தியதற்கு யார் காரணம்? பற்றாக்குறை என்கிறார்களா? இல்லை என்கிறார்கள். பதுக்கல் இருக்கிறதா? இல்லை என்கிறார்கள். சரியாக வினியோகிக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த நிலைமையில்தான் இன்றையதினம் பல தரப்பட்ட கருத்துக்கள் எடுத்துச்சொல்லப்படுகின்றன. இதற்காக எத்தனை பேர்கள் பலியிடப்பட்டார்கள். மக்கள் க்யூவில் நிற்பதைப்பற்றி அமைச்சர் பூவராகன் அவர்கள் பேசும்போது க்யூவில் நிற்பது நாட்டு முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் கோவை மாவட்டத்தில் பில்லூர் அணைக்கட்டில் மக்கள் புகுந்து கொள்ளை அடித்தார்கள் என்றால், அது மக்களுடைய சுதந்திர உணர்ச்சியைக் காட்டுகிறது என்று சொல்லக்கூடும். மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களே என்று சொன்னால், அது போலீசாருடைய வீரத்தைக் காட்டுகிறது என்று சொல்லக்கூடும். ஆனால் இது எதையும் காட்டவில்லை, உங்களுக்கு வாக்களித்த மக்களுடைய இளிச்சவாய்த்தனத்தைத்தான் காட்டுகிறது. உணவுப் போராட்டதில் ஈடுபட்ட அர்ச்சுனன் கொலை செய்யப்பட்டார். அர்ச்சுனன் என்று சொல்லும்போது நம்முடைய உணவு

அமைச்சர் ஞாபகம் வருகிறது. அவருக்குக்கூட அருமைத் தம்பி ஒருவர் இருந்தார் அர்ச்சுனன் என்று, அதே கோவை மாவட்டத்தில்தான் இந்த அர்ச்சுனன் சுட்டுக் கொல்லப்பட்டார். அர்ச்சுனன் என்றால் அத என்ன சாதாரண ஜந்துவா? நாயா? நரியா? அவனும் இந்த நாட்டில் வாழப் பிறந்த பிரஜை அல்லவா? அவனுடைய மனைவி மஞ்சள் குங்குமம் இழக்க, மக்கள் கதறக் கதற, தற்காப்புக்காகச் சுட்டேன். ஆர்ப்பாட்டக் காரர்களை நோக்கிக் கூட அல்ல, தொண்டைக்குழிக்கு நேராகச் சுட்டேன் என்று போலீஸ் அதிகாரி சொல்ல, பொது விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம் இந்த மன்றத்தில், ஆனால் அது மறுக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சம், மொழிப் பிரச்சினையில் பிடிவாதம், பல்வேறு நிர்வாக ஊழல்கள் இத்தனையும் சேர்ந்து இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை யில்லை என்ற வாதத்தை வலுப்படுத்துகின்றது.

கடைசியாக ஒன்று, 1943-44-ம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப்பற்றி நேரு அவர்கள் அன்று குறிப்பிட்ட வாசகம் டிஸ்கவரி ஆஃப் இண்டியா என்ற புத்தகத்தில் குறிப்பிட்ட வாசகம் - அதைப் படித்தால் அமைச்சர்கள் சொல்லுகிற எல்லா வாதங்களுக்கும் பதில் இருக்கின்றன. ‘‘இயற்கையில் கொடுமையோ வேறு நிலைமைகளோ இந்தப் பஞ்சத்திற்குக் காரணமல்ல. வரும்பொருள் உணர்ந்து முன் எச்சரிக்கையுடன் செயலாற்றியிருந்தால் இதைத் தடுத்திருக்கலாம். அதிகார வர்க்கத்தின் அலட்சியமும், ஆற்றல் அற்ற தன்மையும் அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். கடைசி வினாடி வரை தெருக்களில் பிணங்கள் விழுந்த பின்னரும், பற்றாக்குறை, பஞ்சம், இவை இல்லவே இல்லை என்று அரசினர் சார்பில் மறுத்தனர். நெஞ்சுருக்கும் படங்களை ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை வெளியிட்டபோது அதை அரசினர் சார்பில் மறுத்த ஒரு பிரமுகர் ‘நிலைமையை மிகைப்படுத்தி நாடகமாடுகின்ற துரோகத் தன்மையில் பத்திரிகைகள் இறங்கிவிட்டன’ என்று வர்ணித்தார் - பத்திரிகைக்காரர்களைத் திட்டுகிற காங்கிரஸ் காரர்களுக்கு அப்போதே பதில் சொல்லியிருக்கிறார் பண்டிதர் நேரு. ‘‘பரவலான பஞ்சம் இருக்கிறது என்ற உண்மையை மறுக்க இயலாத நிலைவந்தபோது, மேல்மட்டத்தில் ஒருவரை ஒருவர்

வெளிப்படையாக குற்றம்சாட்டிக் கொண்டனர்'' இங்கேயும் அது நடந்திருக்கிறது. ''எந்த ஜனநாயக நாடாக இருந்தாலும், இந்த நிலமை அரசாங்கத்தையே தூக்கி எறிந்து சின்னாபின்னப் படுத்தியிருக்கும். இங்கே அனைத்துமே வழக்கப்படி நீடித்தன. ஆகவே, இந்த அரசாங்கமும் நீடித்தது'' என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நாங்கள் சொல்லுகிறோம் என்பதற்காக அல்ல - நேரு சொல்லி யிருக்கிறார் என்பதற்காக தயவுசெய்து ராஜினாமா செய்து விடுங்கள்.

இறுதியாக, இந்த அரசு, சொந்தக் கட்சி நலத்திற்காக நடைபெறுகிறது; கட்சிக்கும் சர்க்காருக்கும் வேறுபாடு தெரியவில்லை; அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது; உற்றார், உறவினர், நண்பர் இவர்களுக்குச் சலுகைகள் வழங்குகிறது; மர்மம் நிறைந்த சில லாபங்களுக்காகத் தனியார் துறையை வளர்த்துப் பொதுத்துறையை சவலைப் பிள்ளையாக்கி வைத்திருக்கிறது; ஆளும் கட்சியினர், லஞ்சம் போன்ற ஊழல்களுக்குத் தக்க நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, ரகசியப் பாதுகாப்பும் அளித்து வருகிறது; உணவு விஷயத்தில் நிலையான கொள்கை இல்லாத காரணத்தினாலும், எதிர்க் கட்சிகளின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தி னாலும், ஒரு சர்வகட்சிக் குழுவின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன் வராததாலும் உணவுப்பஞ்சத்தை உருவாக்கி விட்டிருக்கின்றது; தமிழை ஆட்சி மொழியாக்கவும், பயிற்சி மொழியாக்கவும், அளித்த உறுதிமொழிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டது; ஆகவே, எனக்கு இந்த மந்திரி சபை மீது, தெளிவாகச் சொல்லுகிறேன், நிறைந்த நம்பிக்கை இருக்கிறது, நீங்களாக ராஜினாமா செய்து விடுவீர்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

நாவலர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்

உரை : 62 **நாள் : 05.08.1966**

கலைஞர் மு. கருணாநிதி : கனம் அவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளின் சார்பில் எங்கள் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் 'இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை' என்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, இங்கே பேசிய நண்பர்கள் அத்தனைபேரும் ''இவ்வளவுதானா குற்றச் சாட்டுகள், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குத்தானா நம்பிக்கை யில்லாத் தீர்மானம்'' என்று இரண்டு நாளாகப் பேசியிருக் கிறார்கள். அவர்கள் பேசியதை பார்க்கிற நேரத்திலே உள்ளபடியே எனக்கு வருத்தம் ஏற்படவில்லை. அவர்களே மிக்க வருத்தத்தோடு குறிப்பிடுகிறார்கள் என்றும், ''ஏராளமான குற்றங்கள் இருக்கின்றனவே, அவற்றையெல்லாம் ஏன் எடுத்துச் சொல்லவில்லை'' என்ற தோரணையில், ''இவைகள்தானா? இவைகள்தானா?'' என்று தாங்கள் அடக்கிவைத்திருக்கும் பெருமூச்சை வெளியிட்டார்கள் என்றும் எண்ணிக்கொண்டேன் (சிரிப்பு). காங்கிரஸ் கட்சியிலே அங்கம் வகிக்கும் அநேகருக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று மனதார எண்ணம் இருந்தாலும்கூட, கட்சிக் கட்டுப் பாட்டுக்கு அடங்கி, அதன் காரணமாக, வெளிப்படையாகக் காட்ட முடியாமல் தவிக்கிறார்கள் என்பது நன்கு வெளிப் படுத்தப்பட்டது. அதற்கு மிக, மிக எடுத்துக்காட்டாக, காங்கிரஸ்

தலைவரின் தேர்தல் கடவுளாக இருக்கும் பெரியார் ராமசாமி அவர்களே, இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லைஎன்று 10-5-1966-ம் நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்லி, துக்க நாள் கொண்டாடிவிட்டு, மறுநாளே காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களே, காங்கிரஸ் கட்சிக்காரர்களே, மறைமுகமாக ஆதரித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். பெரியார் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய மந்திரிசபையைப் பற்றித் துக்க நாள் கொண்டாட வேண்டும் என்று அறிக்கைவிட்ட நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். ''காங்கிரசின் பேரில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, வரும் தேர்தலில் காங்கிரஸ் தோற்க வேண்டும் என்பதற்காகப் பக்தவத்சலம் பல காரியங்களைச் செய்கிறார்'' என்று பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே காங்கிரசை வாழவைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் அவர்கள் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதற்காக அவர்கள் பின்னால் இன்றையதினம் காங்கிரசிலே இருக்கும் பலர் போய்க் கொண்டிருக்கிற நேரத்தில், காங்கிரஸ் வரும் தேர்தலில் தோற்கடிக்கப்படவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு முதல் அமைச்சர் பக்தவத்சலம் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார் என்று பெரியார் அவர்கள் கூறிவிட்ட பிறகு, உள்ளபடியே உண்மையான காங்கிரஸ்காரர்களுக்கு இந்த மந்திரிசபை மீது நம்பிக்கை இருக்குமா? என்று எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு விடவில்லை பெரியார் அவர்கள், துக்க தினத் தீர்மானமாக ஒரு வாசகம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். காமராஜ் முதலமைச்சர் பதவியை விட்டு விலகி, தமது இடத்தில் பக்தவத்சலத்தை முதலமைச்சராக வைத்துவிட்டுப் போனது மாபெரும் - அதற்குமேல் நா வரவில்லை - அவர்கள் சொல்வார்கள் இவர்கள் கேட்டுக்கொள்ளுவார்கள் என்றாலும் - அவர் சொன்னார், 'மாபெரும் முட்டாள்தனமாகும்' என்று. பெரியார் அவர்கள் தன்னுடைய பத்திரிக்கை மூலமாகவும், வேறு ஏடுகள் மூலமாகவும், துக்க தினத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, பெரியார் அவர்களே, காங்கிரசுக்குத் தேர்தல் நேரத்திலே தீவிரமாக வேலை செய்யக்கூடிய பெரியார் அவர்களே, இந்த மந்திரிசபையின் மீது நம்பிக்கை இல்லை, துக்கதினமாகக் கொண்டாட வேண்டும், இந்த ஆட்சி அகற்றப்பட்டே தீரவேண்டும் என்று காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். ''அவர்கள் நாத்திகப் பெரியார், ஆகவே இப்படிப் பேசினார்'' என்று வாதிக்கக்கூடும். காங்கிரஸ் பிரசாரத்திற்காக திரு. காமராஜ் அவர்களாலும், மற்றவர்களாலும் தயாரிக்கப்பட்ட ஆஸ்திகப் பழமான திரு. கிருபானந்தவாரியார் அவர்களும், இந்தக் காங்கிரஸ் ஆட்சி அகற்றப்படவேண்டும் என்று அண்மைக்காலமாகப் பேசிக்கொண்டு வருகிறார். ஆக, இங்கே அமர்ந்திருக்கிற எதிர்க்கட்சிகள் மாத்திரமல்லாமல், வெளியிலே இருக்கிற, காங்கிரஸை ஆதரிக்கக்கூடியவர்களும் கூட, இந்த ஆட்சி அகற்றப்படவேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக, வெகு அக்கறையோடு இன்றையதினம் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முக்கியமாக, ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசிக் கொண்டு வருகிற இந்த அரசு, ஜனநாயகத்தின் முக்கிய இலட்சணமாகவுள்ள எதிர்க்கட்சிகளுக்குத் தரப்படவேண்டிய மதிப்பையும் மரியாதையையும் அளிக்கின்றதா என்ற கேள்வியை நான் இந்த மன்றத்திலே எடுத்துரைக்க விரும்புகிறேன். உடனே, சில நண்பர்கள் கேட்கலாம், ''நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை இங்கிலாந்திற்கு அனுப்பவில்லையா?'' என்று. அவரை இங்கிலாந்திற்கு அனுப்பியதையோ அல்லது என்னை மலேயாவிற்கு அனுப்பாமல் தடை செய்ததையோ வைத்துக்கொண்டு ஜனநாயகத்தை எடை போட்டுவிட முடியாது. இங்கிலாந்திற்குச் சென்று சுற்றிப்பார்த்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே கூட, அங்கே எதிர்க்கட்சிகள் எப்படி நடத்தப்படுகின்றன, இங்கே எதிர்க்கட்சி எப்படி நடத்தப்படுகிறது என்று மிக்க வேதனையோடு அப்போதே குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

ஜனநாயகம் செயல்படவில்லை என்பதற்கு இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பல்வேறு உதாரணங்களை எடுத்துச் சொன்னார்கள். தொகுதிகளிலே வெற்றி பெற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், ஆங்காங்கு அமைக்கப்படுகின்ற கல்லூரிக் குழுக்களிலேகூட இடம்பெற முடியவில்லை என்ற சோகச் செய்திகள் இங்கே எடுத்துக்காட்டப் பட்டன. என்னைப் பொறுத்தவரையில், தஞ்சாவூரில் மக்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நான், அங்கே இருக்கின்ற கல்லூரிக் குழுவிலே இணைக்கப்படாமல், திருவையாறுச் சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ்காரர் என்ற காரணத்தால், அந்தக் கல்லூரிக் குழுவிலே இணைக்கப் பட்டிருக்கிறார்.

ஜனநாயகத்தில், எதிர்க்கட்சிகள் அமைதியான முறையில், ஆர்ப்பாட்டம் செய்யலாம், கிளர்ச்சிகள் நடத்தலாம், கறுப்புக் கொடி காட்டுவது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடலாம் என்று உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஜனநாயக உரிமையைக் கேரளத்தில் இருக்கின்ற அரசு கடைப்பிடித்திருக்கிறது. இந்தியாவின் மதிப்பிற்குரிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கேரளத்திற்கு வந்த நேரத்தில், அங்கே கறுப்புக் கொடி காட்டிய கம்யூனிஸ்டு தோழர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால், அவர்கள் இங்கே வருவதற்கு முன்பாகவே, தமிழ் நாட்டில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி மெம்பர்கள் ஏறத்தாழ 1,400 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்திரா காந்தி அவர்களேகூட, தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு சொன்னார்கள், ''இவர்களை யெல்லாம் கைது செய்திருக்கத் தேவையில்லை, கேரளத்தில் விட்டுவிட்டதைப் போலவே இங்கும் விட்டு விட்டிருக்கலாம்'' என்ற கருத்தைப் பிரதமர் அவர்களே கூட குறிப்பிட்டார்கள். ஆகவே, கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் இந்தியாவின் பிரதமருக்கும், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்குமே கூட இப்படிப்பட்ட கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. ஆளும், கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சி கறுப்புக்கொடி காட்டினால் இப்படியெல்லாம் அடக்கு முறையைப்

பயன்படுத்துவது உண்டு. ஆனால், எதிர்க்கட்சிக்கு ஆளும் கட்சி கறுப்புக் கொடி காட்டுகிறது, நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நான் மிகவும் உயர்வு செலுத்துகிற, அன்பு செலுத்துகிற, மதிப்பு செலுத்துகிற கைத்தறி நெசவாளர்களைப் பற்றி ஏதோ ஒன்றுச் சொன்னேன் என்று கற்பனையாகக் கயிறு திரிக்கப்பட்டு, அந்த வகையிலே எல்லா இடங்களிலும் காங்கிரஸ்காரர்கள் கறுப்புக்கொடி, காட்டினார்கள். அந்த நிகழ்ச்சிகளிலே ஒன்றாக, மதுரை மாவட்டத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது, சின்னாளப்பட்டியிலே உள்ள காங்கிரஸ்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டார்கள். மாலை ஏழு மணிக்குக் கறுப்புக் கொடி என்றால், காலை 9 மணிக்கு திண்டுக்கல் டிராவலர்ஸ் பங்களாவில் நான் தங்கியிருந்தபோது போலீஸ் அதிகாரி லாங்கிடன் என்பவர் என்னைச் சந்தித்து, இன்று கறுப்புக் கொடி காட்டுகிறார்கள், நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம். அவர்கள் எங்களைப் பாதுகாப்பு கேட்கிறார்கள்'' என்று சொன்னார்கள். அவர்களுக்கு இவர்கள் பாதுகாப்பு அளிக்கிறார்களாம். அது மாத்திரம் அல்ல என்னிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்; ''அவர்கள் கறுப்புக் கொடி காட்டுகின்ற இடம் பார்த்து நீங்கள் வரவேண்டும்; வேறு வழியாக வந்து விடக்கூடாது'' என்று அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன் ''இப்படிப்பட்ட எதிர்ப்பு களையெல்லாம் சமாளித்து நாங்கள் பழக்கப்பட்டவர்கள்தான். ஆகவே, அந்த வழியாகவே வருகிறேன்'' என்று சொல்லி, குறிப்பிட்ட நேரத்தில் அந்த வழியாகச் சென்றேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஆளுங்கட்சிக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி கருப்புக் கொடி காட்டுகிறார்கள். அவர்கள் கைது செய்யப்படவில்லை; அது அடக்கப்படவில்லை. ஒரு சமயம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லலாம் - இவர்கள் 1,400 பேர்கள்; ஆகவே கைது செய்தேன். அவர்கள் 40, 50 பேர்கள் தானே? ஆகவே, கைது செய்யவில்லை என்று குறிப்பிடலாம். ஆனால், எங்களுக்குள்ள மகிழ்ச்சியெல்லாம், இப்போதே ஆளுங்கட்சியினர் தயாராகிக் கொள்ளுகின்றார்கள் கறுப்புக் கொடி காட்ட என்பது தான். இவர்கள் ஆளும் கட்சியாக வருவார்கள்; நம் அப்போது கறுப்புக் கொடி காட்ட வேண்டும்

என்பதற்கு இப்போதே ஒத்திகைப் பார்த்துக்கொள்ளு கிறார்களோ, என்னவோ நாங்கள் அதையெல்லாம் இன்றைய தினம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறோம்.

ஜனநாயகம் இந்த ஆட்சியிலே பேணிப் பாதுகாக்கப் படவில்லை, கொலைசெய்யப்படுகிறது என்பதற்கு, அருப்புக் கோட்டை, நெல்லை நகர மன்றங்கள் கலைக்கப்பட்டதை மன்றத்திலே பேசிய தலைவரும், மற்றவர்களும் வெகு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தின் முன் இருக்கின்ற காரணத்தால், நெல்லை, அருப்புக் கோட்டை பற்றிய விவரங்களுக்கு நான் சொல்ல விரும்பவில்லை. தலைவர் அவர்கள், இங்கே வேறு பல நகரசபைகளைப் பற்றிப் பல எடுத்துக்காட்டுகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மேற்கொண்டு பல விவரங்களை அந்த நகரசபைகளைப்பற்றி இந்த மன்றத்தின் முன் வைத்து, ஜனநாயகம் நெல்லை நகர மன்றத்தைப் பொறுத்தும், அருப்புக்கோட்டை நகர மன்றத்தைப் பொறுத்தும் செயல்படுத்தப்பட்டிருக்கிறதே, அதுதான் எங்களுடைய ஜனநாயகப் பணி என்று அமைச்சரவை கூறுமேயானால், அந்த ஜனநாயகப் பாணி நான் இங்கே எடுத்துக் காட்டுகின்ற இந்த நகரமன்றங்களைப் பொறுத்தவரையில் ஏன் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை இங்கே நான் வெகு தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இராணிப்பேட்டை நகர சபையை எடுத்துக் கொள்ளுவோம். அதில் ஒரு காண்ட்ராக்ட் விடப்பட்டது. பொதுவாக, ரூ 1,500 க்கு மேற்பட்ட காண்டிராக்டர்கள் எல்லாவற்றிற்கும் டென்டர் மூலம் விடப்படவேண்டும், ஸீல் போட்ட டென்டர்கள் தருவிக்கப்பட வேண்டும். 12,000 ரூபாய் காண்டிராக்ட், இந்த 12,000 ரூபாய் காண்டிராக்ட் ஒருவருக்கே தரப்பட்டிருக்கிறது. அப்படி ஒருவருக்கே தந்தால், சந்தேகப் படுவார்கள் அல்லவா? ஸீல் போட்ட டென்டர்கள் கொடுக்க வேண்டும் என்றால், வேறு பலரும் அந்தக் காண்டிராக்டுக்குப் போட்டா போட்டியாக வரக்கூடும் என்ற பயத்தின் காரணமாக, ஒரே ஆளுக்கு ஒரே கட்டடத்தை பல பகுதிகளாகப் பிரித்து கொடுத்தார்கள். டீ கடைக்கு ரூ. 1,750. அதே கட்டடத்தில் இன்னொரு டீ கடை கட்ட ரூ. 1,750: அதே கட்டடத்தில்

இன்னொரு டீ கடை கட்ட ரூ. 1,500. இன்னொரு டீ கடை கட்ட ரூ. 1,500; இன்னொரு கடை கட்ட 1,500; அதே கட்டடத்தில் ஸ்டால்கள் கட்ட ரூ. 750 இரண்டு ஓட்டல்கள் கட்ட ரூ. 1,750; இரண்டு ஸ்டால்கள் கட்ட ரூ. 1,500; என்ற முறையில் இப்படி மாற்றப்பட்டு, வகாகான் என்ற காண்டிராக்டருக்கு ஏறத்தாழ ரூ.12,000-க்கு காண்டிராக்ட் விடப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட பல மோசடிகள் இராணிப்பேட்டை நகரமன்றத்தில் நடைபெற்றன என்ற காரணத்திற்காக, ஆறு நகரமன்ற உறுப்பினர்கள் கூடி 28-12-1964 அன்ற ஒரு தீர்மானத்தைப் போட்டு அதை அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் எழுதப்பட்ட மினிட் புக் அங்கே கிழித்து எறியப்பட்டது. அது சம்பந்தமாக சர்க்காருக்கு அந்த ஆறு உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதினார்கள். சர்க்காரிடமிருந்து கமிஷனருக்கு விளக்கம் கேட்டு கடிதம் போயிற்று. அதற்குக் கமிஷனர் எழுதினார். 15-ந் தேதி அன்று, 28-ம் தேதிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அவர்கள் கேட்ட விஷயம் மினிட் புக்கிலே இருக்கிறது. பிறகு 30-ந் தேதியன்று, அதுபற்றி பிரச்சினை சபையிலே பேசப்பட்டிருக்கிறது. ''இவ்வளவும் சொல்லிவிட்டு, நான் மொத்தமாகச் சொல்லுகிறேன் நான் அந்தச் சபையிலே நுழைகிற நேரத்தில் அந்த நகரசபை 'பெல்மல் கண்டிஷன்' இல், அதாவது மிகக்குழப்பமான நிலையில் இருந்தது'' என்று கமிஷனர் அவர்கள் சர்க்காருக்குப் பதில் எழுதியிருக்கிறார். 10-5-1965 அன்று அந்தப் பதில் எழுதப்பட்டிருக்கிறது. ''நான் நுழைகிற நேரத்தில் அந்த நகரசபை குழப்பமான நிலையில் இருந்தது'' என்று கமிஷனர் எழுதியிருக் கிறார்கள். அப்படிப்பட்ட மோசடிகள் நடைபெற்ற பிறகும், இந்த ஜனநாயகப் பாணி ஏன் இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்தை தொடவில்லை? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நேற்றையதினம் கனம் உறுப்பினர் திருமதி குழந்தை யம்மாள் பேசுகிற நேரத்தில், ''திருநெல்வேலி நகரசபை உறுப்பினர்களுக்குச் சொல் புத்தியும் கிடையாது, சொந்த புத்தியும் கிடையாது'' என்று சொன்னார்கள். 'சொற்புத்தியும் கிடையாது, சொந்த புத்தியும் கிடையாது' என்று சொன்னபிறகு, வேறு எங்கெங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்தேன்.

சேலத்தில் காங்கிரஸ் கட்சியின் நகரசபை நடந்துகொண்டிருக்கிறது. அந்த நகரசபையில் ஒரு தீர்மானம் போட்டார்கள். நகரசபைத் தலைவர் ராமகிருஷ்ணன் படத்தை திறந்து வைப்பது என்றும், அவர் பேரிலே ஒரு மன்றத்தை ஏற்படுத்துவது என்றும் தீர்மானம் போட்டார்கள். அப்போதே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. மெய்யப்பன் என்பவர் எடுத்துக்காட்டினார்கள். அரசாங்கம் 1792 எண்ணுள்ள ஜி.ஓ. போட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ. 13-8-1963-இல் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ.-ப்படிஒரு தலைவருடைய படத்தை அவருடைய காலத்திலே திறந்து வைப்பது என்பது கூடாது. ஒரு தலைவருடைய படத்தை அவருக்குப் பின்னே வருகிற தலைவர் காலத்தில் வேண்டுமானால், திறந்து வைக்கலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். சேர்மென் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். இப்போதைக்கு வேண்டுமானால் அவர் பெயராலே மன்றத்தை வைக்கலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு திருத்தப் பிரேரணை கொடுத்தார்கள். அந்தத் திருத்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அந்தத் திருத்தப் பிரேரணையில் லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய படத்தைத் திறந்து வைக்கலாம் என்றுதான் கோரப்பட்டது. அதைத் தோற்கடித்துவிட்டார்கள். நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். அதைத் தோற்கடித்துவிட்டு நகரசபைத் தலைவர் படத்தைத் திறந்து வைக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர் தர்மலிங்கம் அவர்கள் கொடுத்திருந்த தீர்மானத்தையே மறுபடியும் எடுத்துக்கொண்டு சபையில் 19 வோட்டுகளில் வெற்றிபெறச் செய்து நிறைவேற்றியிருக்கிறார்கள். முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழரின் ஆட்சேபணையை சேர்மென் ஏற்றுக் கொணடார்கள். இருந்தும் மறுபடியும் நகரசபைத் தலைவரின் படத்தைத் திறந்து வைப்பது என்ற பழைய தீர்மானத்தையே எடுத்துக்கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள் யாருக்குச் சொந்த புத்தியும் இல்லை, சொற்புத்தியும் இல்லை என்று. சொற்புத்தியைக்கூடக் கேட்காமல் காரியங்களைச் செய்தார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? 'இங்கு இருப்பது காங்கிரஸ் கட்சியின் நகரசபை. ஆகவே ஆபத்து வராது' என்பதைத் தவிர வேறு என்ன காரணம்?

நெல்லை நகரசபையினர் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜைக் கேட்காமல் ஒரு ஆளை நியமித்ததுதான் குற்றம். அது சரியா, இல்லையா என்கிற பிரச்சினைக்குப் போகவில்லை. அது நீதிமன்றத்தில் இருக்கிற விஷயம். ஆனால் இந்தச் செய்தி மே மாதம் 29-ம் தேதி பத்திரிகையிலே வந்தது. கும்பகோணம் நகரசபையில் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜைக் கேட்காமல் 32 பேர்களை நியமித்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், 'ஒருவரை நியமித்தால்தான் குற்றம். முப்பத்திரண்டு பேர்களை நியமித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரசபை இருக்கலாம்' என்று குறிப்பிடலாம். எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜைக் கலக்காமல் 32 பேர்களை வேலைக்கு அமர்த்தி அதற்குப் பிறகு கமிஷனர் அவர்கள், 'நீங்கள் எல்லாம் வேலையிழக்க வேண்டும்' என்று உத்தரவு பிறப்பித்து, அதற்குப் பிறகு அப்பாயின்ட் மெண்ட் கமிட்டியில் வைத்து 'இனி அவர்கள் எங்கே வேலைக்குப் போக முடியும்? அவர்களுக்கு வயதாகி விட்டது- வயதானவர்களையும் கூட நியமித்திருக்கிறார்கள் - ஆகவே, இந்த நிலைமையே நீடிக்க வேண்டும்' என்பதாக அரசாங்கத்திற்கு மனு போட்டியிருக்கிறார்கள். இந்தச் செய்தியும் பத்திரிகையில் வந்திருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. திருநெல்வேலிக்குச் சொல்லப் பட்ட காரணங்கள் தூத்துக்குடியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்குக்கூட விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக 98 குறிப்புகள் ஜூன் 30-ம் தேதி வைக்கப்பட்டன. அவற்றில் 48தான் சாச்சைக்கு வந்தன. அதற்கு 9 தடவை ஓட்டெடுப்பு நடந்தது, தலைவர் கட்சிக்கு 15 ஓட்டும், எதிர்கட்சிக்கு 16 ஓட்டும் கிடைத்தன. இப்படி 9 முறை தலைவர் கட்சித் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது தடவையும் தலைவர் கட்சிக்கு 15 ஓட்டுதான். எதிர்க்கட்சிக்கு 16 ஓட்டும் கிடைத்தன. அதற்குப் பிறகு கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் கொண்டு வந்தத் தீர்மானத்திற்கு 16 ஓட்டும், நடத்த வேண்டுமென்ற தலைவர் கட்சிக்கு 15 ஓட்டும் கிடைத்தது. இருந்தும், போலீஸ் பாதுகாப்புடன் கூட்டம் நடத்தப்பட்டது ஏன்? இரண்டு நாளைக்கு முன்பு தலைவர் இல்லை. துணைத் தலைவர் இல்லை.

உறுப்பினர் தலைமையில் தகராறு - பாதுகாப்பட்டாபிஷேகம் வரையில் தூத்துக்குடி நகரசபையின் நிலைமை போய்க் கொண்டிருக்கிறது.

அடுத்து, நெல்லைக்குப் பக்கத்தில் 3 ஆவது மைலில் இருப்பது நான் சிறை வைக்கப்பட்டிருந்த பாளையங்கோட்டை, அந்தப் பாளையக்கோட்டை நகரசபை எந்த லட்சணத்தில் இருக்கிறது? அதனுடைய ஆடிட் கணக்கை எடுத்துப் பார்த்தால் தெரியும். 1963-64-வது ஆண்டுக்கான அந்த நகராட்சிக் கணக்கை ஆடிட் செய்தபோது பல ஆட்சேபங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. பயணச் செலவு முன் பணத்தில் கணக்குச் சரிசெய்யப்படாதது, 733 ரூபாய். அதில் தலைவர் மகராஜன் பிள்ளை மாத்திரம் 4-7-1962-ல் 200 ரூபாய், 14-7-1963-இல் 150 ரூபாய் கணக்குத் தரப்படவில்லை. இன்னும் நகராட்சியில் தொலைபேசி இருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் ஜனநாயக சோஷலிசம் சரியான முறையில் பின்பற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். பாளையங் கோட்டை நகரசபைக்குச் சொந்தமான தொலைபேசியில் நிறைய டிரங்க்கால் போடப்பட்டிருகின்றன. டிரங்க்கால் கட்டணம் ஆடிட் செய்யப்படும்வரை உரியவர்களிடமிருந்து பெறப்படவில்லை. நகர சபைச் சேர்மன் பெயரில் டிரங்க்கால் புக் செய்யப் பட்டிருக்கின்றது. பியூன் பெயரில் புக் செய்யப்பட்டிருக்கிறது. பட்லர் பெயரில் செய்யப்பட்டிருக்கிறது. மானேஜர் பெயரில் செய்யப்பட்டிருக்கிறது. அத்தனை பேர்களும் டிரங்க்கால் போட்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல, அந்தத் தொலைபேசி மூலம் டிரங்க்கால் போட்டதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பெயரில் இன்னும் 160 ரூபாய் பாக்கி இருப்பதாக அந்த ஆடிட் ரிப்போர்ட்டிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிற பாளைங்கோட்டை நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதா? அங்கே நடப்பது காங்கிரஸ் கட்சி நகரசபை. அந்தப் பக்கம் இந்தக் காங்கிரஸ் அரசின் பார்வை செல்லாமல், அருப்புக்கோட்டைக்கும், நெல்லைக்கும் ஓடுவானேன் என்பதை நாம் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள முடியும். இப்படி ஜனநாயகத்திற்கு முரணாக

நடைபெற்று வருகிற காரியங்களில் இன்னும் இரண்டு காரியங்களை இந்தத் தலைப்பில் எடுத்துச்சொல்ல நினைக்கிறேன்.

தேர்தலில் உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சினிமா ஸ்லைடு போடப்பட்டது - இவர்கள் மாட்டுச் சின்னத்திற்கு ஓட்டு போடுங்கள் என்பதற்கு இரண்டாயிரம் அடிக்கே படம் எடுத்தார்கள். அதில் யார் யாரை எப்படி கிண்டல் செய்யவேண்டும் என்பதாக - என்னைக்கூட ஓர் உருவகப்படுத்தி கிண்டல் செய்து படம் எடுத்தார்கள். ஆனால் ஒரு சிலைட் - அறிஞர் அண்ணாவின் உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்பதாகத் தயாரித்து திருப்பூர் சினிமாத் தியேட்டர் ஒன்றிலே ஓடியது. அந்தப் பகுதி தாசில்தார் அவசரம் அவசரமாக ஓடி, அந்த சினிமா சிலைடைப் பறிமுதல் செய்து, அந்த சினிமா சிலைடைப் போடக்கூடாது என்று தடுத்தார்கள். சினிமா சிலைடு ஒன்றுக்குத்தானா இந்தத் தடை? சென்னையிலே திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைக்க இந்திய குடியரசுத் தலைவர் வந்திருந்தார்கள். இதையொட்டி பல விழாக்களிலே அவர் பங்கெடுத்துக் கொண்டார்கள். எல்லாம் படமாக எடுக்கப்பட்டன. ஆனால் அந்த படத்திலே இந்திய குடியரசுத் தலைவர் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த காட்சி வெட்டப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் காட்சி மாத்திரம் சினிமாப் படமாக வரவில்லை. காரணம் என்ன? சென்னை மாநகராட்சி திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்திருந்தது. ஆகவே, அந்த விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரோடுகூட சென்னை மாநகராட்சித் தலைவர் மைனர் மோஸஸ் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் படத்தைக் காட்டினால் 'குடியரசுத் தலைவருக்குப் பக்கத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த திரு. மோஸஸ் இருக்கிறார், பார், பார்,' என மக்கள் சுட்டிப் பேசிக்கொள்ள முடியும் என்றே விடப்பட்டிருக் கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரை விட வேண்டும் என்பதற்காக திருவள்ளுவர் சிலையும்கூட விடப்பட்டு விட்டது. இதிலிருந்தே ஜனநாயக முறை எப்படிக் கையாளப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

நாவலர் அவர்கள் 'இந்த அரசு உணவு நிலையைச் சீராக்கவும், விவசாய வசதிகளைச் செய்து கொடுக்கவும் தவறிவிட்டது' என்ற கருத்தை இந்தச் சபைமுன் வைத்த நேரத்தில்

அதனை மறுத்து அருமைச் சகோதரி குழந்தையம்மாள் அவர்கள் மிக ஆவேசமாகப் பேசினார்கள். 'விவசாயிகள் வசதி பெறவில்லை என்று நீலிக் கண்ணீர் வடிக்காதீர்கள். விவசாயிகள் தேர்தலில் உங்களை தலைகுனிய வைப்பார்கள்' என்று சவால் விட்டார்கள். கனம் அம்மையார் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் கோயம்புத்தூரைச் சார்ந்த ஓர் உறுப்பினர் இதே மன்றத்தில் பேசிய பேச்சை படித்துக்காட்ட விரும்புகிறேன்.

''விவசாயப் பெருங்குடி மக்களின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னால் இந்தச் சபையே அனுதாபப்படும் என்று சொல்லலாம். அங்கு அதிகமான அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மிக இன்றியமையாதது தண்ணீர். இவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு எந்தவிதத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதை நான் சொல்லக்கூடிய நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். காலை ஐந்து மணியிலிருந்தே பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் எல்லாம் தலையில் பானையை வைத்துக்கொண்டு குடி தண்ணீருக்காக மணிக்கணக்காகக் காத்து நிற்க வேண்டும். பல கிராமங்களில் பிப்ரவரி மாதத்தில் இருந்தே குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. குடி தண்ணீருக்கே இந்த நிலைமை என்றால், விவசாயத்திற்குத் தண்ணீர் எங்கே கிடைக்கும்.

விவசாயத்திற்கு உதவியாக பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி நாம் செலவு செய்து வருகிறோம். இதற்காக பல எஞ்சினியர்களை எல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால் வேலை எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்த்தால், ஒவ்வொரு ஆண்டும் சில குளம் குட்டைகளை எடுத்து அதற்காக எஸ்டிமேட் போட்டு போர்ட் ஆபீசுக்கு அனுப்புகிறார்கள். இவ்விதம் அனுப்பி ஆறு மாதங்களுக்குப் பின்னால் அல்லது ஒரு வருடத்திற்குப் பின்னால் திரும்பி கோயம்புத்தூருக்கே வந்துவிடுகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் எஸ்டிமேட் போடுவதும், போர்ட் ஆபீசுக்கு அனுப்புவதும், திரும்பி அனுப்பப்படுவதும்தான் நடந்து கொண்டிருக்கிறது என்றால் எப்படி விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். ஆக, ஏழு ஆண்டுகளாக இவ்விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர, வறண்ட பிரதேசமாக இருக்கக் கூடிய என் பகுதிகளுக்கு எந்தவிதமான வசதியும் கிடைக்கவில்லை.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் அதிகப்படியான அளவில் பருத்தி விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பருத்திச் சாகுபடியில் ஏற்படுகின்ற புழு பூச்சிகளை அடியோடு ஒழிப்பதற்காக நம்முடைய விவசாய இலாகா என்ன செய்திருக்கிறார்கள் என்பதை கேட்க விரும்புகிறேன். பருத்தியில் புழு விழுந்துவிட்டால், இதைப்பற்றி உடனே அதிகாரிகளுக்குத் தெரிவித்தவுடன் 24 மணி நேரத்திற்குள்ளாக 3 ஜீப்புகள் வருகின்றன. அதற்கு அடுத்த நாள் 2 ஜீப்புகள் வருகின்றன. கடைசியில் ஒருவருமே வரமாட்டார்கள். இதற்காகக் கொடுக்கப்படும் மருந்தை கலக்கிப் பார்க்கும்போது அதில் உள்ள 100 புழுக்களும் மேலே மிதந்து வந்துவிடுகின்றன. நாற்று விடும்போது இந்தப் புழு விழுந்துவிட்டால், இதற்காக ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் வரை கடன் வாங்கி செலவு செய்தவைகள் எல்லாம் வீணாகிவிடுகிறது. பின்னால் 6 மாதங்களுக்கு இதற்கான வட்டியைக்கூட கொடுக்க முடியாமல் விவசாயிகள் திணறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சொஸைடி மூலமாக பால் வாங்குகிறார்கள். அங்கே வாங்கப் படுகிற விலைக்கும் டவுனில் விற்கப்படும் விலைக்கும் பார்த்தால் 18 நயா பைசா வித்தியாசம் இருக்கிறது. விவசாயி களுடைய ரத்தத்தைப் பிழிந்து குறைந்த விலைக்கு அவர்களிடமிருந்து பாலை வாங்கிக்கொண்டுவந்து, நகரத்தில் இருக்கிறவர்களுக்காவது நல்ல பால் கிடைக்கிறதா என்றால் தண்ணீர்பால்தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. விவசாயிகள் சாபத்திற்கு ஆளாகக்கூடாது. இப்படிப் பேசியவர் அதே திருமதி குழந்தையம்மாள் அவர்கள்தான், இதே மன்றத்தில் 1964-லே பேசியிருக்கிறார்கள். நேற்றைய தினம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விவசாயிகளுக்குப் போதுமான நன்மைகள் செய்யப் படவில்லை, அவர்களுடைய குறைகள் கவனிக்கப்படவில்லை

என்று இங்கே பேசியதும் அந்த அம்மையார் அவர்கள், அப்படிச் சொன்னால் நீங்கள் எல்லாம் விவசாய மக்கள் முன் தலைகுனிந்து நிற்கவேண்டும், அவர்கள் உங்களுக்கு ஓட்டுப் போட மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

விவசாயிகளுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதுபற்றி பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் ராஜபாளையத்தில் 3-7-1966-ம் தேதி நடந்த வியாபாரிகள் சங்கத்தில் ''நமது நாட்டில் விவசாயத் துறையிலானாலும் சரி; தொழில் வளர்ச்சித் துறையிலானாலும் சரி; தன்னிறைவுபெறும் அளவுகூட முன்னேறவில்லை'' என்றும் ''நாட்டிலே நிர்வாகம் சரியாக இல்லை, வருடக்கணக்கில் முடிவுபெறாத 'ஃபைல்'களும் இருக்கின்றன'' என்றும் கூறியிருக்கிறார்.

தென்காசியில் காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகமல்ல, சுதந்திராக் கட்சியல்ல, கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சியல்ல, காங்கிரஸ் கட்சியே போட்டு அனுப்பியிருக்கிறது. ''தென்காசி தாலுக்காவில் மக்கள் வேலைவாய்ப்பின்றி பெரிதும் கஷ்டப் படுகிறார்கள். உணவு தானிய ரேஷன் கடைகளில் போதிய உணவு தானியமிருந்தாலும், அதை வாங்க மக்களிடம் பணவசதி இல்லை'' என்ற அளவில் ஜூலை 6-ஆம் தேதி ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். கனம் உள்துறை அமைச்சர் சொல்லலாம், பணம் குவிந்து கிடக்கிறது; டர்லின் ஷர்ட் எல்லாம் போடுகிறார்கள், காரிலே போகிறார்கள்; கருணாநிதி காரிலே போகிறார்; அண்ணாதுரை காரிலே போகிறார்; நெடுஞ்செழியன் காரில் போகிறார்; மதியழகன் காரில் போகிறார்; பார்த்தீர்களா என்று எல்லாம் கூறுவார்கள். ஆனால் நிலைமை எப்படியிருக்கிறது என்றால் அங்கேயிருக்கின்ற தென்காசி தாலுக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ரத்தினசாமி நாடார் ''உணவுதானிய ரேஷன் கடைகளில், போதிய உணவு தானிய மிருந்தாலும் அதை வாங்க மக்களிடம் பணவசதி இல்லை. பெரும்பாலோர் பட்டினி கிடக்கிறார்கள். உடனடியாக அந்தக் கிராமங்களில் கஞ்சித்தொட்டி திறந்து பசிப்பிணியைப் போக்க

வேண்டும்மென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது'' என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார். அதைச் செய்யப் போகிறார்களோ, இல்லையோ கஞ்சித்தொட்டி காங்கிரஸ் என்று சொன்னால் அதை வரவேற்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது.

இவ்வளவு ஏன்? நடுநிலையில் இருக்கின்ற மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் குருவிக்குளம் யூனியனைச் சேர்ந்த உமையத் தலைவன்பட்டி விழாவில் பேசுகின்றபோது ''சர்க்காரில் மாடு பிடிக்க, கிணறு வெட்ட, கடன் வாங்குவதில் பாதிக்கு மேல் செலவாகிறது. பல இடங்களில் நல்லமுறையில் நடைபெறவில்லை, விவசாயிகள் வாழவில்லை, நன்மையடைய முடியவில்லை, இந்த நிலைமாறவேண்டும்'' என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் அளவில் இந்த நிலைமை மாறவேண்டும் என்றுதான் சொல்லமுடியும். நாம் இந்த ஆட்சி மாறவேண்டும் என்று சொல்லமுடியும். ஆனால் அவர்கள் நிலைமையில் அவர்கள் அப்படித்தான் கூறவேண்டும்.

சோழநாடு சோறுடைத்து என்று சொல்வார்கள். தஞ்சையை நெற்களஞ்சியம் என்று சொல்வார்கள். நெற்களஞ்சியமான தஞ்சை பஞ்சத்திலே அடிப்பட்டுக் கிடக்கிறது. மாயூரத்தில் ரேஷன்கார்டு முறை இருந்து வருகிறது, அதுபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே பற்றாக்குறையில்லை, உணவு நிலைமையை நாங்கள் சமாளிக்கவில்லையா என்றெல்லாம் கேட்பார்கள். எங்கே சமாளித்தார்கள்? பட்டினி கிடந்து செத்தாலும் சாவோம், மானத்தை இழக்க மாட்டோம் என்று அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கூறிய ஐந்தாவது நாளே மானத்தை இழக்க மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்காவுக்கு மடிப்பிச்சை எடுக்கப்போனாரே! இந்திய மக்களை நான் பட்டினி போடமாட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன்தான் கூறியிருக்கிறார், திருமதி இந்திரா காந்தி அவர்களோ அல்லது நம்முடைய முதலமைச்சர் அவர்களோ சொல்லவேண்டியதை அமெரிக்க ஜனாதிபதி சொல்லியிருக்கின்றார். அதேபோல் அமெரிக்கத் தூதர்

திரு. செஸ்டர் பௌல்ஸ் அமெரிக்காவில் 14 பேர்களுக்கு ஒரு விவசாயி இந்திய மக்களுக்காக வேலைசெய்துகொண்டிருக் கிறார் என்றும், கேரள மாநில அளவைப்போல் உள்ள ஒரு மாகாணம் அமெரிக்காவில் இந்தியாவுக்காக உணவு உற்பத்தி செய்கிறது என்றும் கூறியிருக்கிறார். ஏன் இந்த நிலைமை? மாயூரத்தில் நியாயவிலை கடைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு வார்டுக்கு 5 மூட்டை வீதம் கொடுக்கப்படுகின்றது. ஒரு குடும்பத்திற்கு ஒரு லிட்டர்தான் ஒரு நாளைக்குக் கொடுக்கப் படுகிறது. அந்தக் குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தாலும் சரி, இரண்டு பேர்கள் இருந்தாலும் சரி ஒரு லிட்டர்தான் கொடுக்கப் படுகிறது. சோஷலிசம் அல்லவா? இதை வாங்கிக்கொண்டு அங்கிருக்கின்ற மக்கள் படுகின்ற அவதியை நானே கண்ணாலே கண்டேன். ஒரு வார்டுக்கு ஐந்து மூட்டைகள்தான் கொடுக்கப் படுகின்றன. அந்த வார்டு 500 பேர்களைக் கொண்ட வார்டாக இருக்கலாம், அல்லது இரட்டை மெம்பர் தொகுதியாகக்கூட இருக்கலாம். எப்படியிருந்தாலும் கொடுக்கப்படுவது ஐந்து மூட்டைகள்தான். ஏன் இப்படிக் குறைத்துக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டால், அவர்கள் எங்களுக்கு உத்தரவு இப்படித்தான் என்று சொல்கிறார்கள். ஆனால் ஜனநாயக சோஷலிசம் செயல்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

உணவு நிலை இவ்வாறு இருக்கிறது. கல்வி நிலை எவ்வாறு இருக்கிறது? மருத்துவக்கல்லூரிபற்றியெல்லாம் நண்பர்கள் எடுத்துச் கூறினார்கள். என்னுடைய தொகுதியிலே, நடந்த ஒரு நிகழ்ச்சி என் தொகுதியைச் சேர்ந்த குமாரி பீனாபால் இன்டக்ரேட்டட் எம்.பி. பி.எஸ். சேருவதற்குக் கோரி ஒரு விண்ணப்பம் செய்தார் மனு எண்:2080. 1966 ஜூனிலே விண்ணப்பம் செய்திருக்கிறார். அவர் முதல் வகுப்பிலே தேறியிருக்கின்றார். ரசாயனம் D+ இயற்கை விஞ்ஞானம் A+ பௌதீகம் B+ வாங்கியிருக்கிறார். சரபோஜி கல்லூரியிலே என்.ஸி.ஸி. மாணவி. அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இப்படிப் பலபேர்களுக்கு A+A பெற்றவர்களுக்கும்கூட கிடைக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒருவர் C, C+ தான் பெற்றிருக்கிறார். பி.யூ.சி.-யில் இரண்டாம் முறையில் தேறியவர். அவருக்கு இண்டர்வ்யூகூட கொடுக்கப்பட

மாட்டாது. ஆனால், அவருக்கு இடம் கிடைத்திருக்கிறது. அவர் பெயர் அருணாசலம். அவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரல்ல, நாடடுக்கோட்டைச் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். காரணம் அவர் பழைய எம்.பி.யின் மகன். 'நிரூபிப்பாயா? என்று கேட்பார்கள். அப்படியென்றால், ஒவ்வொரு ஆண்டும் மருந்துவப் படிப்புக்குச் சேர்க்கப்பட்டவர்களின் பட்டியலை இந்த மன்றத்திலே வையுங்கள். யார், யார், எந்தெந்தக் காரணங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், யார், யார் தேர்ந் தெடுக்கப்படவில்லை என்று பார்ப்போம். ஆகவே, அதை மாசுமறுவற்ற தன்மையிலே இந்த மன்றத்திற்கு கொடுங்கள். அதைவிட்டுவிட்டு, 'நிரூபிப்பாயா?' என்று கேட்டால் மாத்திரம் போதாது. நிரூபிப்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்காத எதிர்க்கட்சி என்ற காரணத்தாலே, குற்றங்கள் குற்றங்கள்தான். C+ பெற்ற மாணவனுக்குக்கூட, பி.யூ.சி.யில் முதல்முறை தோல்வியுற்று இரண்டாம் முறை தேறியவருக்குக் கூட இடம் கிடைத்திருக்கிறது என்றால் புகை இருக்கிறது. ஆகவே நெருப்பு இருக்கத்தான் செய்யும். இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அதிகாரங்கள் துர்விநியோகப்படுத்தப்படுகின்றன என்ற இந்தக் காரணமும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

அரசு வேறு, கட்சி வேறு, ஆனால் கட்சி நலனோடு காரியங்கள் நடத்தப்படுகின்றன. கீழ்வேளூர் என்ற ஊரில் தேர்தல்பற்றி ஒரு நோட்டீஸ் அச்சடித்து இருக்கிறார்கள். அதிலே காந்தி படம், தேசிய கொடி, இரண்டு பக்கங்களிலும் அசோகச் சக்கரம், இப்படி இருப்பதால் காங்கிரஸ் கட்சிதான் சர்க்கார் கட்சி என்று நினைத்துக்கொண்டு, சர்க்காரே வோட்டுக் கேட்கிறார்கள் என்று பயப்படுகின்ற அளவுக்கு அரசு, கட்சி என்ற வேறுபாடு இல்லாத அளவில் நிலைமைகள் ஏற்படுகின்றன.

கல்விப் பணிமனைகளில் அரசியலே நுழைதல் கூடாது என்பது முதலமைச்சர் அவர்களுடைய அருமையான வாதம் ஆகும். ஆனால் அதே சமயத்தில் முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜுக்கு இதுவரை காங்கிரஸ் எம்.எல்.சி.யாக இருந்த வித்வான் முத்துக்

கண்ணப்பன், அவர்களைப் பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கேட்காமல்கூட நேரடியாகவே நியமனம் செய்திருக்கிறார்கள். அவர் இப்பொழுதும் காங்கிரஸ் உறுப்பினர்தான். அரசியல், கல்வி ஸ்தாபனங்களுக்குள் நுழையக்கூடாது என்ற முதலமைச்சர் அவர்களுடைய வாதம் இந்த நியமனத்தின் மூலம் பொடிப்பொடியாக்கப்பட்டுவிட்டது.

மந்திரிகள் எதையும் செய்யலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு கூறவிரும்புகிறேன். எதையும் செய்யலாம் என்ற அந்தக் காரியத்தில்கூட அமைச்சர்களுக்குள்ளே ஒற்றுமை கிடையாது. கவர்ன்மெண்ட் பிரஸ்களை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் வைக்க வேண்டுமென்றிருந்தது. ஆனால் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை சென்னை, திருச்சி என்ற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். தென் ஆற்காட்டிற்கு ஒரு அரசாங்க அச்சகம் நிறுவப்படுகிறது. தென் ஆற்காடு என்றால் கடலூரில்தான் நிறுவப்படும் என்று கருதப்பட்டது. ஆனால், அந்த ஊர் மந்திரியினுடைய ஊர் அல்லவே, அந்தப் பாவத்தைச் செய்ய வில்லையே, ஆகவே விருத்தாசலம் என்ற பெரிய நகரத்தில் நிறுவுகிறார்கள். பத்து, பதினைந்து லட்சம் ரூபாய் செலவிடப் பட்டுக் கட்டப்படுகின்ற பெரிய நிறுவனம் அது. ஏற்கனவே அங்கே இருக்கிற ஓட்டை உடைசல் பிரஸ்களுக்குக்கூட இப்பொழுது வேலை கிடைக்கவில்லை. திரு. பூவராகன் கெட்டிக்காரர், ஆகையால் முதலமைச்சர் அவர்களைக் கொண்டே 'நீங்களே திறந்துவையுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். . . .

கனம் திரு. கோ. பூவராகன் : பதினைந்து, பதினாறு லட்சம் செலவில்லை. ஏற்கனவே பட்ஜெட்டில் மூன்று இடங்களில் வைக்க வேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலே ஒன்றும், திருச்சியிலே ஒன்றும், தென் ஆற்காடு ஜில்லாவில் ஒன்றும் வைக்கப்பட்டது. சென்னையில் மவுண்ட்ரோடிலே மொத்தமாக இருந்த அச்சகத்தைப் பிரிந்து 4, 5 இடங்களிலே வைக்கவேண்டுமென்று இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையிலேதான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி : ஆகவேதான் பத்து லட்சமோ, பதினைந்து லட்சமோ என்று குறிப்பாகச் சொன்னேன். திருச்சி மாவட்டத்திலே திருச்சியிலே வைக்கப்பட்டிருக்கிறது; சேலம் மாவட்டத்திலே சேலத்திலே வைக்கப்பட்டிருக்கிறது; தென்னாற்காடு மாவட்டத்திலே விருத்தாசலத்திலே வைக்கப் படுவானேன் என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, வேறு அல்ல. அந்தப் பிரஸ்ஸை வைப்பதற்கு ஒதுக்கிய இடம் இருக்கிறதே அது, தேர்தலிலே மிகவும் பயன்படக்கூடிய ஒருவரிடம் இருந்து, அந்த இடத்தைத் தேர்ந்தேடுத்து, இப்போதே அச்சாரமாக அந்த இடத்தை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் அதிகாரம் இந்த வகையில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

ஸ்டேட் கோவாப்ரேட்டிவ் பாங்குக்கு மாநிலம் முழுவதிலிருந்தும் மொத்தம் 15 டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இதிலே 13 பேர் 11 மாவட்டங்களில் இருந்து 10,000 உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்டேட் கோவாப்பரேடிவ் பாங்கு டைரக்டர்களாக வருகிறார்கள். மிச்சம் இரண்டு பேர்கள் பதின்மூன்று பேரைப் பத்தாயிரம் பேர் தேர்ந்தெடுக்க வேண்டும்; அதே சமயத்தில் மிச்சமிருக்கும் இரண்டு உறுப்பினர்கள் 109 தனிப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி 10,000 பேரால் 13 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிற அதே நேரத்தில் 109 பேரால் இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது முறையல்ல என்று கருதி, கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் ஒரு உத்தரவு போட்டார். வழக்கமாக இருக்கின்ற அந்த இரண்டு பிரதிநிதிகளிலே ஒருவர் காங்கிரஸ்காரர்; இன்னொருவர் முக்கால் காங்கிரஸ்காரர், திரு. காமராஜர் அவர்களுடைய நிழலாக இருப்பவர். இந்த இரண்டு பேர்களுந்தான் அந்த இரண்டு இடத்திற்கு வரப் போகிறார்கள். ரிஜிஸ்ட்ரார் அவர்கள் உத்தரவு வந்ததும் அந்த இரண்டு பேரும் யாரைப் போய்ப் பார்த்தார்களோ, யார் யாரைக் கேட்டார்களோ தெரியவில்லை. கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் நவம்பரில் உத்தரவு போடுகிறார். டிசம்பரில் அதே உத்தரவு திரும்பப் பெறப்பட்டு 'இல்லை, இல்லை இரண்டு பேர்கள்

இருக்கவேண்டும்' என்ற அளவுக்கு உத்தரவு மாற்றப்பட்டிருக் கிறது. இவ்வாறு நிர்வாகத்தில் கட்சி தலையிடுகிறது; கட்சியின் தலைமை குறுக்கிடுகிறது. இதற்கு இன்னும் பல ஆதாரங்களைச் சொல்ல முடியும். சேலம், ஆத்தூர், அவனாசி போன்ற இடங்களில் வர்த்தக நிலையங்களில் சோதனை நடைபெற்று, இன்னும் பெரிய புள்ளிகள் தாக்கப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட்டவுடன் விற்பனைவரிச் சோதனையே டிநிறுத்தப் படவில்லையா? இது அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லவா? அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் இந்த மந்திரிசபையின் மீது நம்பிக்கை இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் மந்திரிகளின் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக்கொள்வது ஒரு புறம் இருக்க, மந்திரிகள் ஒருவருக் கொருவர் நம்புகிறார்களா என்றால் அவர்களுக்குள்ளாகவே நம்பிக்கையின்மை இருக்கிறது. ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பைக் குறிப்பிட்டு கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்ன சொன்னார்கள்? 'மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் கிடைக்கவும், விலைவாசி ஏறுவதைத் தடுக்கவும் பயன்படும்; இதனால் மக்களுக்குப் பாதகம் ஏற்படாது' என்று மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் என்ன சொன்னார்கள்? திரு. வெங்கட்டராமன் அவர்களும் ஒரு அமைச்சர்தான். 'ரூபாய் மதிப்பைக் குறைப்பது அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் புத்திசாலித்தனமான முடிவு அல்ல' என்று கூறியிருக்கிறார். அவர் கொஞ்சம் நாகரிகமாகப் பேசக்கூடியவர்; பெரியாரைப்போல் வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார்; 'புத்திசாலித்தனமான முடிவு அல்ல' என்று கூறியிருக்கிறார். 'சாதகங்களைவிடப் பாதகமே அதிகம்' என்று கூறியிருக்கிறார். மந்திரிகளுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை கிடையாது. இதே திரு. வெங்கட்டராமன் அவர்களைப்பற்றி ஒரு ஏடு தாறுமாறாக எழுதிற்று; எவ்வளவோ குற்றச்சாட்டுகளைக் கொட்டிக் காட்டிற்று, அதே ஏட்டில் ஐந்து வாரங்களுக்குப் பிறகு கனம் முதலமைச்சர் அவர்களுடைய

அழகான பேட்டி இரண்டு பக்கங்களில் வெளியிடப்படுகிறது என்றால், அது மந்திரிகளுக்கிடையேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லையென்பதைத்தானே காட்டுகிறது. ஒருவருக்கொருவர் மட்டுமல்ல, அவர்களுக்குள்ளே நம்பிக்கை இல்லை.

திரு. பூவராகன் அவர்கள் சிறை இலாகா மந்திரி; மீன் இலாகா மந்திரியும்கூட. மீன் இலாகா மந்திரி படகுகள் கட்டுவதற்காகக் கட்டைகள் வாங்குகிறார்; மிச்சமிருக்கும் கட்டைகளை ஏலம் விடுகிறார். அதை ஒருவர் 20 ரூபாய்க்கு ஏலத்திற்கு எடுக்கிறார்; அவ்வாறு அந்தக் கட்டைகளை ஏலத்திற்கு எடுத்தவர் அதை அப்படியே சிறைச்சாலைக்கு விறகாகக் கொடுக்கிறார். ரூபாய் 20-க்கு ஏலத்திற்கு எடுத்து சிறைச்சாலைக்கு 80 ரூபாய்க்குக் கொடுக்கிறார். இந்த மந்திரி சபையிலே ஒரு மந்திரி இன்னொரு மந்திரியை நம்பவில்லை; ஒரே மந்திரி தன்னையே நம்பவில்லை. இவ்வாறு 20 ரூபாய்க்கு விற்ற அதே கட்டைகளை 80 ரூபாய்க்குச் சிறைச்சாலைக்காக வாங்குகிறார்.

நாவலர் அவர்கள் ஆட்சிமொழிபற்றிக் கூறினார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, 'சட்டம் வந்தால் ஏற்றுக் கொள்வீர்களா?' என்று கேட்டார். பிறக்கப் போவது, பிள்ளையா? பெண்ணா? இரண்டுமில்லையா? பெறுவீர்களா - தெரியவில்லை. மாதம் பத்து முடித்து பல மாதமாகிறது. மாட்டைத் தண்ணீரில் போட்டுக்கொண்டா விலை பேசுவது? சட்டம் வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டார்கள், சட்டத்திலே எது வரப்போகிறது?

இதே முதலமைச்சர் அவர்கள், இந்த நாடு ரணகளமான நேரத்தில், பிணங்கள் விழுந்த நேரத்தில், மாணவர்களுடைய மார்புகள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நேரத்தில், என்ன பேசினார்கள்? ''ஆங்கிலமும் இந்தியும் நிரந்தர ஆட்சி மொழிகளாக இருக்கலாம்'' என்று பேசினார். இவ்வாறு கூறிவிட்டு, ''இந்த என்னுடைய யோசனையைக் கல்கத்தாவில் பேசிய மத்திய அமைச்சர் திரு. சி. எஸ். வரவேற்றுள்ளார்'' என்று முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். நீங்கள் கொண்டு வருகிற ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்திலே

இந்தக் கருத்து இடம் பெறுமா? முதலமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லியே தீர வேண்டும். ஆனால் இது சட்டத்திலே இடம் பெறாது என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவேதான் இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லையென்று சொல்லுகிறோம் நாங்கள்.

இதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். டில்லிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள், மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வில் இந்தி கட்டாயத் தேர்வை ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் மீது எப்படி நம்பிக்கை வைப்பது? சென்ற ஆண்டு போராட்டம் ஏற்பட்ட நேரத்தில், ரத்தச் சகதியில் தமிழக மக்கள் வீசி ஏறியப்பட்ட நேரத்தில், 'இந்தியும் ஆங்கிலமும் நிரந்தரமாக ஆட்சி மொழியாக இருப்பதை விரும்புகிறேன். இந்தக் கருத்தை, கல்கத்தாவில் பேசிய திரு. சி.எஸ். அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று மகிழ்ச்சிப் புன்னகையோடு தெரிவித்தார். ஆனால் இப்போதோ மத்திய சர்வீஸ் கமிஷன் பரீட்சையில் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஏற்றுக்கொண்டு திரும்பியிருக்கிறார்கள். எப்படி இவர்களை நம்ப முடியும்?

''விலைவாசி உயர்வைப் கட்டுப்படுத்துவதில் நாம் தோற்றுவிட்டோம் என்று நாங்கள் அல்ல, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலையை அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். ''மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகத் தேசீய வருமானம் கணிசமாக உயர்ந்திருக்கிறது; ஆனால் அபிவிருத்தித் திட்டங்களின் பலன்கள் சாதாரண ஏழை மக்களுக்குக் கிடைக்கவில்லை'' என்று திரு. காமராஜர் பேசியிருக்கிறார்.

இந்தப் பலன்கள் சாதாரண ஏழை மக்களுக்குக் கிடைக்காத காரணத்தால்தான் ஜூலை மாதம் 29-ம் தேதி இந்த உலகத்தில் இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. உலகம் என்று நான் சொல்லக் காரணம், இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் ரஷ்யாவில் சுற்றுப் பயணம்

செய்துகொண்டிருக்கிறார்கள். ரஷ்யாவுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்குப் போகட்டும், ஜப்பானுக்கும் செல்லட்டும். அவர் வெளிநாடுகளிலே வெற்றி உலா வருகிறார் என்றால், ஒரு தமிழனுக்குக் கிடைக்கிற பெருமையைக் கண்டு நாங்கள் மன மகிழ்வு அடைகிறோம். அவர் அங்கு ஒரு விவசாயப் பண்ணையைப் பார்வையிட்ட நேரத்தில் ஒரு விவசாயப் பெண் 'எங்கள் நாட்டைப் போல் உங்கள் நாட்டிலும் பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா?'' என்று கேட்டார்கள். 'எங்கள் நாட்டில் பெண்களுக்குப் பெருமையளிக்கிறோம்; அதன் காரணமாகத்தான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருக்கிறார்கள்'' என்று திரு. காமராஜர் கூறியிருக்கிறார். இவ்வாறு பெண்ணுக்குப் பெருமையளிக்கும் துணைக் கண்டத்தில், குறிப்பாகத் தமிழகத்திலே வறுமை இல்லை, வாட்டம் இல்லை, தற்கொலைச் சாவுகள் என்று கூறப்படுவனவெல்லாம் கற்பனைக் கதைகள் என்று ஆளும் கட்சியினர் பேசுகிறார்கள். இந்தத் தமிழ் மண்ணில், குரோம் பேட்டையில் தங்கவேலு நாயக்கருடைய மனைவி பாஞ்சாலம்மா, மகன் இன்பவடிவேல்; சக்தி வடிவேல், மகள் அமுதவல்லி; கனகவல்லி - இவர்கள் பிழைப்புக்கு வழி இல்லாமல், இருந்த சைக்கிளை விற்று, கடைசியாக வேறு வழி இல்லாமல், வறுமை மேலிட்டு, வாட்டம் தேங்கிய விழியோடு, பாஞ்சாலம்மா மூன்று குழந்தைகளுடன் ரயில்வே கேட்டுக்கு அருகில் வந்து ஒளிந்து நின்று ரயில் வருகின்ற நேரத்தில் எட்டு வயது இன்ப வடிவேல், ஐந்து வயது நிரம்பிய அமுதவல்லி, சின்னஞ்சிறு குழந்தை கனகவல்லி ஆகியோருடன் தண்டவாளத்தை நோக்கிப் பாய்ந்தவுடன் அவர்கள் சில்லி சில்லியாகப் பிறித்தெறியப்பட்டனர். கைகள் கால்கள் சின்னாபின்னம் செய்யப்பட்டன. வாழவேண்டுமென்று கணவன் கரம்பிடித்தவள், தன்னுடைய குழந்தைகள் எதிர்காலத்தில் ஏற்றம் பெறவேண்டுமென்று கொஞ்சி மகிழ்ந்தவள், தன்னுடைய வயிற்றிலே சுமந்த பெற்ற ரத்தினங்களைத் தானே ரயிலடியில் தள்ளி தானும் விழுந்து இறந்திருக்கிறாள். ஒரு பையனுடைய மூளை மட்டும் தனியாகச் சிதறிக் கிடந்ததாம். ஒருவேளை அவள் அதை ஆட்சியாளர் களுக்காக விட்டுப் போயிருப்பாள்.

இப்படிப்பட்ட அக்கிரமங்கள் இந்தப் பதினெட்டாண்டுகள் காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. புள்ளிவிவரங்களைக் காட்டிப் பயன் இல்லை, திட்டங்களை வைத்துப்பயன் இல்லை, அணைக்கட்டுக்களை கட்டிப் பயன் இல்லை, ஏழை மக்களின் முகத்தைக் காட்டுங்கள், அதில் புன்சிரிப்பு இருக்கிறதா? ஏழைகள் சொல்கிறார்கள், அவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று. அதைத்தான் நாங்கள் எதிரொலிக்கிறோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

கழக ஆட்சி மீது கண்டனத் தீர்மானம்

உரை : 63 நாள்: 28.2.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள், இந்த அரசாங்கத்தை விட்டு நாங்கள் போகவேண்டாமென்ற நல்ல வாழ்த்துக்களோடு எதிர்க்கட்சித் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி முடித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே அளிக்கப்பட்டுள்ள இந்தக் கண்டனத் தீர்மானத்தில் சில வாசகங்கள் மாற்றப்படுமேயானால், நாங்கள் கூடச்சேர்ந்து அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்குத் தயாராக இருப்பவர்கள்தான். தீர்மானத்தினுடைய வாசகம்'' குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தத் தவறியதன் விளைவாக, 25.12.1968ல் அம்மாவட்டத்தி லுள்ள கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்குத் தீ வைக்கப் பட்டு ஏதும் அறியாத பெண்டிர், சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ்செயல் காரணமாக இப்பேரவை அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிப்பதோடு அதனை ஏற்கவும் மறுக்கிறது'' என்று எதிர்க்கட்சியின் தரப்பில் அளிக்கப் பட்டிருக்கிறது. இதே தீர்மானம் ''தஞ்சை மாவட்டத்தில் 25-12-1968ல் கீழ்வெண்மணி கிராமத்தில் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டு ஏதும் அறியாத பெண்டிர் சிறுவர், முதியோர் உட்பட 42 பேர் இறந்துள்ள கொடுஞ்செயலை இம்மாமன்றம் கண்டிக்கிறது'' என்ற அளவிலே இருந்திருக்குமானால் அனைவரும் சேர்ந்து இந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு நம்முடைய ஆதரவைத் தந்திருக்க முடியும்.

ஆனால், இங்கே தீர்மானம் கொண்டு வந்த நண்பர் அவர்களும், கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சியினுடைய

தலைவர் அவர்களும், இந்தச் சம்பவங்களுக்கு முழுப் பொறுப்பும், தொடர்ந்து இந்தச் சர்க்கார் கடைப்பிடித்து வருகின்ற காரியங்கள்தான் என்று எடுத்துக் கூறினார்கள். கண்டனம் யார் மீது என்பதைத்தான் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்த அருமை நண்பர் மாண்புமிகு திரு.ஜெயராஜ் அவர்கள், தீ வைக்கப்பட்டு கொளுத்தப்பட்ட, பெண்டிர், குழந்தைகள், அடிபட்டவர்கள் அத்தனை பேருக்கும் கண்ணீர் வடித்தார்கள். தன்னுடைய ஆழ்ந்த சோகத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அதே நேரத்தில், அப்படித் தீ வைத்துக் கொளுத்திய கொடும்பாவிகளைப்பற்றி ஒரு வார்த்தை கூட அவர் கூறவில்லை. ஆக, அவர்களுடைய கண்டனம் அந்த அளவோடு நின்று விட்டது. சர்க்கார் இந்தச் செயலுக்கு உறுதுணையாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார். நிலப் பிரபந்தங்கள் செய்ததாகச் சொல்லப்படுகிற அந்தக் கொடுமைக்குச் சர்க்கார் உறுதுணையாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டாரா அல்லது ஏதோ மேலெழுந்தவாரியாக சர்க்கார் உறுதுணையாக இருந்தது என்று சொல்ல வேண்டுமென்று விரும்பினாரா என்று புரியவில்லை.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஆண்டு காலமாகவே விவசாயப் பிரச்சினை இருந்து வருகிறது. அது நாடறிந்த உண்மை. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு ம.பொ.சி.அவர்களும் தன்னுடைய உரையிலே விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அவ்வப்போது தேடப்பட்ட பரிகாரங்களையும் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, கடந்த இரண்டாண்டுக் காலத்தில் அங்கு ஏற்பட்ட நிலைமை களுக்காக எந்தப் பரிகாரமும் காணப்படவில்லையா? எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லையா என்பதற்கான கேள்விக்கு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1967-ம் ஆண்டு ஜூன் திங்களில் விவசாயப் பிரச்சினை குறித்து ஆராய கீழ்த்தஞ்சையில் ஒரு கூட்டம், மாநாடு என்ற பெயரால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூட்டப் பட்டது. அதிலே, தொழிலாளர்களுடைய தலைவர்கள்,

நிலவுடைமையாளர்கள், அதிகாரிகள் ஆகிய இந்த மூன்று தரப்பினரும் முத்தரப்பு மாநாடு என்ற பெயராலே கூடி சில முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவின்படி, பயிரிடும் பருவத் திலும், அறுவடைப் பருவத்திலும் கூலி விகிதங்கள் எப்படி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் நெல்லும், ரூ.1.30 காசு பணமும் தரப்பட வேண்டுமென்றும், பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மரக்கால் நெல்லும், 37 காசும் தரப்பட வேண்டு மென்றும் கீழ்த் தஞ்சையில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டிலே முடிவு எடுக்கப்பட்டது.

1967 அக்டோபர் திங்கள் மன்னார்குடியில் விவசாயப் பிரச்சினை குறித்து எழுந்த சில நிலைமைகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் ஒரு முத்தரப்பு மாநாட்டைக் கூட்டினார்கள். அதில், அறுவடை செய்த நெல்லில், கலம் ஒன்றுக்கு நெல் அறுவடை செய்வதற்கான கூலி, உள்ளூர் படியில் அரைப்படி. அதிகரிக்கப்பட்டது. இவ்வாறாக 4 உள்ளூர் படியாக வழங்கப்பட்ட இடத்தில் 4½ உள்ளூர் படியாக உயர்த்தப்பட்டது. 5 படி 5½ படியாக உயர்த்தப்பட்டது. கலம் ஒன்றுக்கு 6 உள்ளூர் படியாகக் கொடுக்கப்பட்ட இடங்களில் அந்த அளவே நீடிக்கும், அதை அதிகரிப்பதாக இல்லை என்ற அளவிலே மன்னார்குடியில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டிலே 1967 அக்டோபர் திங்களிலே முடிவு எடுக்கப்பட்டது.

1968 ஜூன் திங்களில், அடுத்த பயிரிடும் பருவத்தில் மறுபடியும் சில கோரிக்கைகள் எழுதப்பட்டன. ஜூன் திங்கள் 1968-ம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டில் கீழ்க்கண்டவாறு கூலி விகிதம் முடிவு செய்யப் பட்டது. ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல், ஒரு ரூபாய் பணம்; பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் நெல், 25காசு பணம் வெளியிலிருந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாக உள்ளூர் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டுமென்றும், கீழ்ப்படியாத திறமையற்ற தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்பட வேண்டியதில்லை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. கிழக்குத்

தஞ்சை மாவட்டத்தில் தாசில்தார்களும், கோட்ட அதிகாரிகளும் அவர்களுடைய நாட்டத்திற்குக் கொண்டு வரப்படுகிற கூலித் தகராறுகளை அவ்வப்போது அமைதியோடு தீர்த்துவைக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டின் விளைவாக கிழக்குத் தஞ்சையில் 1968-ம் ஆண்டு குறுவைப் பயிர் சாகுபடி அமைதியாக முடிவுற்றது. அதே ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளுக்குப் பிறகு நவம்பர் 20-ம் நாளுக்கு இடையே குறுவை அறுவடை செய்யப்பட்டபோது அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. கிளர்ச்சிகள் நடைபெறக் காரணம்- ஏற்கனவே ஒத்துக்கொள்ளப் பட்ட மன்னார்குடி மாநாடு, திருவாரூர் மாநாட்டின் தீர்மானப்படி உள்ள கூலி உயர்வைத்தான் தரமுடியுமென்று மிராசுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டதாகவும், இங்கே ஏற்கனவே தரப்பட்டது. 6 படிதான்- அதைத்தான் தரவேண்டும் என்று தொழிலாளர்கள் தரப்பில் கூறப்பட்டதாகவும், இடையிலே ஏற்பட்ட சர்ச்சைகளின் காரணமாக பாதுகாப்பை முன்னிட்டு, சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்படவேண்டுமென்பதை முன்னிட்டு புதுச்சேரி, ஆதமங்கலம், கருவேலி ஆகிய இடங்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க உடனடியாக இயங்கும் காவல்படைப் பிரிவினர் அனுப்பப்பட்டனர். தொடர்ந்து, அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க சிக்கல், வலிவலம், கீவளூர், கொரடாச்சேரி, திருவாரூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, ஆதமங்கலம் ஆகிய இடங்களில் படைக்கலன் தாங்கிய காவல் படையினர் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

இவைகளுக்கிடையேதான் திடீரென்று கீழ்வெண்மணிச் சம்பவம் உருவாயிற்று. கீழ்வெண்மணிச் சம்பவம் கூலிப் பிரச்னையால் ஏற்பட்டதா, கம்யூனிஸ்டு நண்பர்கள் குறிப் பிட்டது போல் வர்க்கப்போராட்டத்தின் உணர்ச்சி வடிவமா, அல்லது அனைவரும் சேர்ந்து தீர்வுகாணவேண்டிய ஒரு பிரச்சினைக்கான அறிகுறி என்று திரு.ம.பொ.சி. அவர்கள் குறிப் பிட்டார்களே, அதுபோன்ற சம்பவமா என்பவைகளையெல்லாம் நாம் எண்ணிப்பார்த்திட வேண்டும். எந்த ஒரு அரசாங்கத்திலும், திடீர் திடீரென்று- இந்த மாமன்றத்திலே முதலமைச்சர் பேரறிஞர்

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல- மின்வெட்டென சில காரியங்கள், நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுவதுண்டு. அதற்கு முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று குறிப்பிடுவது ஓரளவுக்கு அரசியல் லாப நோக்கோடு குறிப்பிடப்படுகிற வாதமாகத்தான் இருக்க முடியுமே தவிர, வேறல்ல. வெண்மணிச் சம்பவம் திடுக்கிடத்தக்க, நெஞ்சை உலுக்கத்தக்க, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மனதை நோகச் செய்யக்கூடியது; மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டது. அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றொணாத் துய ரடைந்தார்கள் என்பதையும், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும், சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும், அரிசன நலத் துறை அமைச்சர் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றோம் என்பதையும் அனைவரும் அறிவர். அவ்வாறு நேரிடையாகச் சென்று செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்திருக்கிறார்கள், நஷ்ட ஈடு தருவதற்கான காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள், தொழிலாளர் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். மேலும், அமைதி குலையாத அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் அங்கு வெகு தீவிரமாகப் பலப்படுத்தப்பட்டன.

வெண்மணிச் சம்பவத்தைப் பற்றி ஏற்கனவே அறிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று கேட்கிற நேரத்திலேதான் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கும் போலீஸ் படையின் அளவு, போலீஸ் காவலர்களின் அளவு, கிராமங்களுடைய அளவு இந்த இரண்டையும் எண்ணிப்பார்க்க வேண்டும். வெண்மணி தஞ்சை மாவட்டத்தில், நாகை தாலுகாவில் கீவளூர் என்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு அப்பால் 4½ மைல் தூரத்திலுள்ள ஒரு குக்கிராமம். அந்தக் கிராமத்தில் நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி ஆறு மணிக்கு ஒன்றும், தொடர்ந்து எட்டு அல்லது ஒன்பது மணிக்கு ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்று அதற்குள்ளாக, போலீஸ் விரைந்து

செல்வதற்குள்ளாக சகிக்க முடியாத சில கொடுமைகள் அங்கு நடைபெற்று முடிந்துவிட்டன. அந்தக் கொடுமைகள் நடந்து முடிந்து விட்டதும் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறியதா என்றால் இல்லை. அதில் இரண்டு தரப் பிலும், மிராசுதார்கள் தரப்பிலும், விவசாயத் தொழிலாளர்கள் தரப்பிலும் பலர் கைது செய்யப்பட்டு, அவர்களில் ஏறத்தாழ இரு தரப்பிலும் 46 அல்லது 48 பேர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக் கிறார்கள். அதில் கோபாலகிருஷ்ண நாயுடு என்பவர் முதல் எதிரியாக, அந்தக் குடிசைகளை தீ வைத்த சம்பவத்தில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டு, அவர்கள்மீது வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதை இந்த நேரத்தில் இங்கு விவாதத்திற்கு எடுத்துவைக்க நான் விரும்பவில்லை. அது தஞ்சை மாவட்ட மக்களுக்குத் தெரியும். இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த அரசியல் நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதேபோல், அரசியல் நோக்கோடு அவர் யார் என்று இங்கு கூறி அந்த அரசியல் லாபத்தைச் சம்பாதிக்க நிச்சயமாக நான் எண்ணவில்லை. அவர் யார், எப்படிப்பட்டவர், எந்த நிலையில் உள்ளவர் என்பதை யெல்லாம் நிச்சயமாகத் தஞ்சையில் உள்ளவர்கள் அறிவார்கள். ஆக, கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்துள்ள காங்கிரஸ் தரப்பினர் அவர்களை அறியாமலேயே அந்தக் கொடுமையைச் செய்த பாவிகளை கண்டிக்கிறார்களே என்று எண்ணி எண்ணி அவர்களுக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (ஆரவாரம்.)

தீ வைப்பு சம்பவம் என்பது சாதாரணமானதல்ல. நாங்கள் நேரில் பார்த்தோம். எவ்வளவு பயங்கரமான கொடுமை என்பதை நாங்கள் கண்ணீர் வடிய வடியப் பார்த்தோம். ஒரு சிறிய வீட்டிற்குள்ளாக, அதிலும் அடுக்களை என்று அவர்கள் கட்டிய பகுதியிருக்கிறதே அதற்குள்ளாக நாற்பதுக்கு மேற் பட்டவர்கள், தாய்மார்களும், குழந்தைகளும் உட்பட, திரு.ஞானசம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு குழந்தை தன் தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிற குழந்தையின்

எலும்புக்கூடும், தாயின் எலும்புக்கூடும் கருகிக் கிடக்கிற அந்தக் கோரக் காட்சிகளையெல்லாம் நாங்கள் பார்த்தோம். இதிலிருந்து என்ன புரிகிறது? சமுதாயத்திலே நாம் எந்த அளவிற்கு மிருக உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம், வெறித்தனங்களையெல்லாம் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர முடிகிறது.

ஆறு மணி அளவில் பக்கிரி என்ற ஒரு குடியானவ நண்பர் அங்குப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது போலீசும், சட்டமும், ஆனால், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீசுக்கு அவகாசம் தராமல், சட்டத்திற்கு இடம் தராமல், சிலர் கூடிக் கொண்டு, சில மிராசுதாரர்கள் கூடிக்கொண்டு அப்போதே தீர்ப் பளி0ப்பது என்று கையில் கொள்ளிக்கட்டைகளையும் துப்பாக்கி ரவைகளையும் வைத்துக் கொண்டு மிரட்டினார்கள் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து பத்தாண்டுகளுக்குப் பின்னால் என்னோடு வாருங்கள். அது பயங்கர ஆண்டு அல்ல. பின்னால் வந்தால் நீங்கள் ஆளும் கட்சியில் இருப்பீர்கள். ஆகவே நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கக்கூடிய ஆண்டுதான் 1957-ம் ஆண்டில், முதுகுளத்தூரில், இராமநாதபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் அன்றையதினம் போலீஸ் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் என்ன சொன்னார்கள்?

1957 ஜூலை 4-ம் தேதி முடிவுற்ற உபதேர்தலின் காரணமாக அந்தப் பிரதேசத்தில் பகை எழுந்தது. தேவர் மக்கள் அரிஜன மக்களில் ஒரு பகுதியினர் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து தேவர் மக்களை தோற்கடித்து விட்டனர் என்ற எண்ணத்தில் பகை ஏற்பட்டது. இதன் காரணமாக தேவர்களில் பலர் அரிஜன மக்களைத் தாக்கினர். அரிஜன மக்கள் அதிகமாக இருந்த இடத்தில் அரிஜனங்களும் தேவர்களைத் தாக்கினர்.

முதலில் நடைபெற்ற குற்றத்திற்கு மேலும் இன்னொரு குற்றத்தைச் செய்வது, அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் ஒரு பயங்கரமான, பிரளயம் என்று எண்ணத்தக்க அளவிற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்குவது என்பதை இந்த அரசு நிச்சயமாக விரும்பவில்லை.

நான் இந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர் களிடத்தில் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு நீதி விசாரணை கிடையாதா, இதற்கு சர்க்கார்தான் பொறுப்பு, மந்திரி களே நீங்கள்தான் பொறுப்பு, நீங்கள் எல்லாம் உடனடியாக அராசங்கத்தை விட்டு வெளியே ஓடுங்கள் என்றெல்லாம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, சபாநாயகர் அவர்களே தங்கள் இதிலிருந்து செப்டம்பர் மாதம் 10-ம் தேதி வரை அப்பகுதியில் கொள்ளையடித்தல், சட்ட விரோதமான முறையில் சிறைவைத்தல், களவு, சொத்துக்களை கவர்ந்து கொள்ளுதல் இதுபோன்ற பல வழக்குகள் நடந்து கொண் டிருந்தன'' இப்படிப்பட்ட சம்பவங்களின் காரணமாக ஏற்பட்ட நிலைமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சிகளை நாம் ஆராய வேண்டும்.

''1957 செப்டம்பர் 10 ம் தேதியன்று ராமநாதபுரம் கலெக்டர் அவர்கள் அப்பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக் கின்ற சம்பவங்களினால் ஏற்பட்ட நிலைமைகளை சரிப்படுத்து வதற்காக நடத்திய சமாதான மாநாட்டில்தான் சட்டத்திற்கு முரண்பட்ட நிலைமை (அமளி) ஏற்பட்டது.'' கவனிக்க வேண்டுகிறேன். ''1957 ஜூலை திங்கள் 4-ஆம் தேதி முடிவுற்ற உபதேர்தல்களை முன்னிட்டு தீ வைத்தல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்ற காரியங்கள் நடைபெற்றபோது செப்டம்பர் 10-ம் தேதிதான் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மாவட்ட கலெக்டர் அவர்கள் ஒரு சமரச மாநாட்டைக் கூட்டினார்கள். அதில் அமளி ஏற்பட்டது'' அதன் தொடர்பாக இமானுவேல் என்பவர் பரமக்குடியில் கொலை செய்யப்பட்டார். செப்டம்பர் 13-ம் தேதி பகல் 11 மணிக்கு ஒரு கூட்டம் வேல்-கம்பு- அரிவாள் இவைகளுடன் அருங்குளத்திலுள்ள மக்களைத் தாக்கினார்கள். ஐந்து பேர்களைக் கொலை செய்தார்கள். இந்த

ஐந்து பேர்களில் ஒருவர் பெண், மேலும் 24 அரிஜன வீடு களுக்குத் தீ வைத்தார்கள். அதோடு நான்கு பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தார்கள். இவ்வித சம்பவம் ஏற்பட்டதற்கு உடனடியான காரணம் அப்பகுதியில் நடைபெற்ற ஒரு நாடகத்தில் திரு. முத்துராமலிங்கத் தேவரை பாராட்டிப் பாடிய பாட்டுக்களை அப்பகுதியிலுள்ள அரிஜன மக்கள் எதிர்த்தார்கள் என்பதே. இந்தச் சம்பவம் நடந்தவுடன் அரிஜன மக்கள் எல்லாம் கோபம் கொண்டு திரண்டு எழுந்தார்கள். தேவர்களைத் தாக்கினார்கள். மூன்று பேர்களைக் கொலை செய்தார்கள். அவர்களில் இரண்டு பேர் பெண்கள். அவர்களுடைய வீட்டுக்கும் தீ வைத்தார்கள். அதோடு பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தார்கள்.'' ''செப்டம்பர் 14-ம் தேதி காலையில் ஓரக்குடி கிராமத்தில் தேவர்களுக்கும், அரிஜன மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதில் நான்கு பேர் காயமுற்றனர். அதே நாளில் கீழ்த்தாவல் என்ற கிராமத்திற்கு இமானுவேல் கொலை வழக்கு சம்பந்தமாக குற்றவாளிகளைத் தேடுவதற்காகப் போலீஸ் பார்ட்டி சென்றபோது நூற்றுக்கணக்கானவர்கள் அடங்கிய ஒரு கூட்டம் போலீசைத் தாக்கியது. போலீஸ் பார்ட்டி தப்பித்துக் கொள்வதற்காகச் சுட்டார்கள். அதில் ஐந்து பேர், மறவர்கள் கொல்லப்பட்டனர்'' இது அன்றைய போலீஸ் அமைச்சர் அவர்களின் வாக்குமூலம். ஆனால் ஐந்து மறவர்கள் கட்டி வைக்கப்பட்டு சுடப்பட்டார்கள் என்பது எதிர்த்தரப்பிலுள்ள வாதம். ''1957 செப்டம்பர் 16-ந் தேதி காலை 6 மணிக்கு இலஞ்சம்பூர் என்ற இடத்தில் உள்ள தேவர்களுக்கும் வீராம்பள் என்ற இடத்திலுள்ள அரிஜன மக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அதில் நான்கு தேவர்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் பெண், இரண்டு அரிஜன நபர்களும் கொல்லப்பட்டனர்''. அரிஜன நபர்களும், இரண்டு தேவர்களும் காயம் அடைந்தனர். அதே நாளில் ஆயுதம் தாங்கிய கூட்டமொன்று இருளாண்டிப்பட்டி, சேந்தகோட்டை முதலிய கிராமங்களிலுள்ள சுமார் 60 வீடுகளைக் கொளுத்தினர். இதில் மூன்று அரிஜன நபர்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் பெண். ஒரு அரிஜன பெண் அபாயகரமான முறையில் காயம் அடைந்தார். ''1957- 17-ம்

தேதி மாலை கீரந்தை என்ற கிராமத்தில் ஆயுதங்களோடு சுமார், 1000, பேர்கள் கூடி பக்கத்திலுள்ள கிராமங்களைத் தாக்கினார்கள். அங்கு வந்திருந்த ஆயுதந்தரித்த விசேட போலீஸ் படையையும் கூட்டம் எதிர்த்தது. பின்னால் போலீஸ் ஏழு ரவுண்ட் சுட்டது. அதில் மூன்று பேர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு பேர் காயம் அடைந்தனர். இக்கூட்டம் கீரந்தைக்கு செல்லும் வழியில் கூட்டத்தில் ஒரு பகுதியினர் முத்தானந்தல் கிராமத்திலுள்ள வீடுகளுக்கும் தீ வைத்தனர். ''இந்த அசம்பாவித சம்பவங்கள் எத்தனை உயிர்களை மாய்த்திருக்கின்றன என்பது பற்றியும், எர்வளவு சொத்துக்கள் இதனால் அழிந்திருக்கின்றன என்பது பற்றியும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்'' நான் அல்ல இப்படிக் கூறுவது, திரு.பக்தவத்சலம் அவர்கள் கூறுகிறார்கள். ''இரண்டு பிரிவினருக்கும் நேரிடையாக ஏற்பட்ட தாக்குதல் களின் காரணமாக 18 அரிஜன மக்களும் 8 தேவர்களும் கொல்லப்பட்டனர். அதன்பின் மிகவும் கவலைக்கிடமாக இருந்தவர்களில் 13 பேர்கள் இறந்தனர். அந்த 13 பேர்களும் தேவர்கள். மற்றும் ஒருவர் ஆஸ்பத்திரியில் இறந்தார். ஆக இறந்தவர்கள் 40 பேர்கள். எரிந்த வீடுகள் 2,842. சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம், பரமக்குடி தாலுகாவில் 11,000 ரூபாய். முதுகுளத்தூர் தாலுக்காவில் ரூ.25,000 சிவகங்கை தாலுகாவில் ரூ.2,51,353 அருப்புக்கோட்டை தாலுக்காவில் ரூ.86,350 ஆக ரூ. 3,73.703'' இவ்வளவிற்கும் பிறகும் பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள், ''பொதுவாக நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது அரசாங்கத்தின் முக்கிய கடமை என்பது ஒரு பக்கம் இருப்பினும், கஷ்டமடைந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்ப தற்காக அரசாங்கம் இதற்கென்று அமைப்புகளை ஏற்படுத்தி யுள்ளது'' என்று குறிப்பிட்டார்கள். அவரையடுத்து சட்ட சபையில் ஒரு அம்மையார் பேசுகிறார். அந்த அம்மையார் என்ன சொன்னார்கள் தெரியுமா? ''வீராம்பனில் நடந்த விழாவில் கூட்டம் கூட்டமாக வந்து வீடுகளுக்கு நெருப்பு வைத்தார்கள். கிராமம் கிராமமாகச் சென்று கன்னிப் பெண்களைக் கெடுத்தும், விதவைகளை மானபங்கம் செய்தும், பெண்களை நிர்வாணமாக ஆக்கியும் பல அக்கிரம காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்களைக் கற்பழித்திருக்கிறார்கள். கிராமத்தில் 137 வீடுகளை

எரிய விட்டிருக்கிறார்கள். மனிதர்களை மனிதர்களாக இருப்பார்கள் என்று நம்பி போதுமான போலீஸ் படை வைக்காமல் இருந்தது, ஜனங்களை நம்பியிருந்தது ஒரு குற்றம் என்றால் நமது சர்க்கார் குற்றம் செய்திருக்கிறது'' இப்படிப் பேசியது வேறு யாரும் அல்ல. சௌந்தரம் ராமச்சந்திரன் என்ற காங்கிரஸ் உறுப்பினர் அன்று இந்தச் சட்டமன்றத்திலே விளக்கிப் பேசினார்கள் இவ்வளவுக்கும் பிறகு நான் மற்றொன்றை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விஷயமெல்லாம் பேசப்பட்டு, எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள் இவைகளுக்கு காங்கிரஸ் மந்திரிகள் தான் பொறுப்பு, ஆவே அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டு மென்று கூறி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், எங்களுடைய கட்சியின் தலைவராக அன்று வீற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் எப்படி நடந்து கொண் டார்கள் என்பதை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டபொழுது திரு.சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். ''இது துக்ககரமானது மட்டுமல்ல, வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

இந்த நிகழ்ச்சியின் காரணமாக தமிழ் மக்களின் மானமே பறிபோயிருக்கிறது.

தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று வந்திருக்கும் கனம் முதலமைச்சர் காமராஜ் கலகங்களில் பங்கெடுத்துக் கொண்டார் என்று குற்றம் சாட்டினால் மற்ற சபைகளில் என்ன பேசுவார்கள் என்பதையும் இதைப்பற்றி வெளிநாடுகளில் என்ன பேசுவார்கள் என்பதைப் பற்றியும் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் யோசித்துப் பார்த்தாரா? பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டுகிறேன் என்று சொன்னார்கள். இதுதானாமுறை?

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எப்படி வேண்டு மானாலும் பேச உரிமையிருக்கிறது. அந்த உரிமையைப் பயன் படுத்தும்போது மானம் கப்பல் ஏறிப்போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டாமா?'' என்று பேசிய திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள்.

''கலவரம் குழப்பம் இருந்தால் முன்னேற முடியாது. நாங்கள் இங்கே சாசுவதமாக இருப்போம் என்று கருதவில்லை.

நாங்கள் அந்தப் பக்கம் வந்து உட்காருவோம் என்று கனம் அண்ணாத்துரை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யாரும் நிர்வாகம் நடத்தலாம். யார் நிர்வாகம் நடத்தினாலும் அமைதி, ஒழுங்கு என்ற அடிப்படையில்தான் நடத்த முடியுமே தவிர கலவரம், குழப்பம் என்ற அடிப்படையில் நடத்த முடியாது. கலவரங்களை அடக்க இப்போது இருக்கிற சூழ்நிலையில் போலீஸ் படையை அனுப்புவது என்கிற அந்த முறைகள் எங்களுக்குத் தெரியும். மக்களுடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது போல், போலீஸ்காரர்களுடைய உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும்.

''எந்த' சுடக்கூடிய சம்பவமாக இருந்தாலும் உடனே நீதிபதியைப் போட்டு அந்தப் போலீஸ்காரர்களை குற்றவாளி களைப் போல் கூண்டில் ஏற்றி விசாரிப்பது என்றால் இந்த வேலையைப் பார்ப்பதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். இதற்கு இந்தப் போலீஸ் படையையே கலைத்து விடலாம்'' என்று பேசியிருக்கிறார்கள். 30 நாட்கள், ஒருநாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல, 1957-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 10-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரை 20 நாட்கள் முதுகளத்தூரில் நடந்த அந்தக் கோர விளையாட்டுக்கு வெறித்தனம் மிகுந்த விளையாட்டுக்கு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்ட பொழுது திரு.சுப்பிரமணியம் அவர்கள், எந்தச் சுடக்கூடிய சம்பவமாக இருந்தாலும் நீதிபதி போட்டு போலீஸ்காரர்களைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றி விசாரிப்பது என்றால், போலீஸ் வேலையைப் பார்பதற்கே யாரும் வரமாட்டார்கள் என்று கூறிய அவர். ''இவ்வளவு கலவரம் ஆகும்போது, கலவரத்தை அடக்க முயலுகிற நேரத்தில் நாம் இவர்கள் செய்யவேண்டியதை எல்லாச் சூழ்நிலை காரணமாக வரம்புக்கு மீறி நடக்காமல் இருக்க வேண்டி, உறுதியான உத்திரவுகளைப் போட்டிருக்கிறோம்.

ஆக இன்றைக்கு நீதிபதி விசாரணை தேவையில்லை என்று சொன்னது ஏதோ அவர்கள் அக்ரமம் செய்து விட்டார்கள்,

அதை மறைக்க வேண்டுமென்றல்ல'' என்று கூறி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நீதிவிசாரணைக்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள், ''ஒன்றைப் பற்றி எழுதினால், ஒன்றைப்பற்றி பேசினால் அதன் விளைவாக அந்தப் பகுதியில் மீண்டும் ஒரு அமளி ஏற்படுமானால், சீக்கிரத்திலே உணர்ச்சிவசப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களானால், அதற்கு நாமே பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கை உண்டு பண்ணாமல் அமைதியாக-புண்ணை ஆற்ற நியாயமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில் பேசாமலிருந்தேன். இப்போதும்கூட இந்தத் தீர்மானத்தின் மீது பேச எனக்கு விருப்பம் இல்லைதான்'' என்று ஆரம்பித்தார் அண்ணா. காம ராசரும் பக்தவச்சலமும்தான் கலவரங்களுக்குப் பொறுப்பாளி-தூண்டிவிட்டவர்கள் என்று சட்டசபையில் பேசப்பட்ட போது-இறுதியாக அங்கே அண்ணா என்ன பேசினார் தெரியுமா?

''இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததின் நோக்கம் முதலமைச்சர் அவர்களின் பேரிலும் போலீஸ் அமைச் சரின் பேரிலும் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதற்கு மாத்திரம்தான் என்று நமது நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக் கின்ற இந்த நேரத்திலே பேசுகின்றபொழுது என்ன கூறினோம் என்பது நினைவிலே இருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு இரண்டு மந்திரிகள் பொறுப் பாளிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒப்பவில்லை.'' என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

அந்தப் பெருந்தன்மை வாய்ந்தவர் உட்கார்ந்திருந்த இடத்தில் நம்முடைய கருத்திருமன் அவர்கள் உட்கார்ந்து கொண்டு, போலீஸ் தலையீடு இல்லாத, போலீஸ் யாரையும் சுட்டுப் பொசுக்காத, போலீஸ் கொன்று குவிக்காத ஒரு

நிகழ்ச்சிக்கு, இருதரப்பார், இரு வர்க்கத்தார் நடத்திக்கொண்ட ஒரு போராட்டத்திற்கு, மின் வெட்டென நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சிக்கு அரசாங்கமே வெளியே போ என்று கூறுகிறார்கள் என்றால் நான் அந்தக் காலத்தையும் எண்ணிப் பார்க்கிறேன், இந்தக் காலத்தையும் எண்ணிப்பார்த்துக் கொள்கிறேன், இதற்காக வருத்தப்படுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

சட்டம், அமைதி கெட்டுவிட்டது, உங்களுடைய இரண்டாண்டு கால ஆட்சியிலே எவ்வளவு கொலைகள் விழுந்துவிட்டன என்று நண்பர் ஜெயராஜ் அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இரண்டாண்டு காலமாகத்தான் கொலைகள் வீழ்ந்தனவா? அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே விழுந்ததெல்லாம் கொலைகள் இல்லையா? அவைகள் வெறும் குலைகளா? என்று எண்ணிப்பார்த்தேன்.

நண்பர் திரு. ஜெயராஜ் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியிலே கொலைகளே நடக்காதது போலவும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகுதான் கொலைகள் நடந்தன என்பதுபோலவும் கூறினார்கள். 'அதற்காகத்தான்' கூறுகிறேன். 1958- ஆம் ஆண்டு சென்னை நகரம் உள்ளிட்ட தமிழகத்தில் நடைபெற்ற கொலைகள் 755. 1959-ல் 751 கொலைகள், 1960-ல் 717, 1961-ல் 727, 1962-ல் 659, 1963-ல் 661, 1964-ல் 761, 1965-ல் 68, 1966-ல் 712 கொலைகள் இந்த 9 ஆண்டுக் காலத்தில்- இருபது வருஷங்களுக்குக் கூடப் போகவில்லை- 6,430 கொலைகள் தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்திலே நிகழ்ந்திருக்கின்றன. கொலைகள், கொள்ளைகள், திருட்டுக்கள் இப்படிப்பட்ட சம்பவங்கள், எந்த ஆட்சி நடைபெற்றாலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுவதும், உடனடியாகப் போலீஸ் நடவடிக்கை எடுப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்காமல் தீர்மானத்தைக் கொண்டுவந்த நண்பர் திரு. ஜெயராஜ் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் கொலைகள் ஏற்பட்டன என்பதுபோல் சொன்னதற்காகத்தான் இந்தப் பதிலை சொன்னேனே தவிர வேறு அல்ல.

முதுகளத்தூர் சம்பவம் பற்றி நடந்த விவாதத்தில் எதிர்க்கட்சிகளில் ஒருகுழுவின் தலைவராக இருந்த அண்ணா அவர்கள் அன்றைய தினம், இந்தச் சம்பவங்களுக்கும் மந்திரி களுக்கும் சம்பந்தம் இல்லை, இது சமுதாயத்திலே ஏற்பட்ட புரையோட்டத்தின் காரணமாக ஏற்பட்ட சூழ்நிலை, அதற்கு மருந்து போட வேண்டுமே தவிர, மீண்டும் கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட இடமளிக்கக்கூடாது என்ற கருத்தைச் சொல்லி, எல்லாக் கட்சிக்காரர்களும், மந்திரிகள்தான் காரணம் என்று சொன்னாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் மந்திரிகள் காரணம் அல்ல என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறோம் எனக் கூறினார். நான் இதற்கும், அதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கிறேன். இவர்கள் பேசுகிறார்கள் இங்கு மட்டுமல்ல, வெளியிலும் எங்கேயுமே இந்த ஆட்சியிலே நடைபெறுவதைப்போல நடைபெறவே இல்லை, என்று பேசுகிறார்கள். அண்ணா அவர்கள் மறைந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. பத்திரிகைகளிலே எழுதுகிறார்கள். மேடைகளிலே பேசுகிறார்கள். திரு.கருத்திருமன் அவர்கள்கூட பேசியதாக ஒரு பத்திரிகையிலே மிக முக்கியமான பத்திரிகையிலே பார்த்தேன், இரண்டாண்டு காலமாக அராஜக ஆட்சியாகத்தான் இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாண்டு கால அராஜக ஆட்சி என்று குறிப்பிடும் நேரத்தில், 20 ஆண்டுகளாக நடந்த அராஜக ஆட்சியை இந்த மக்கள் மறந்துவிட்டார்களா? மறக்காத காரணத்தினால்தானே உங்களை 1967-லே வீட்டிற்கு அனுப்பினார்கள். (ஆரவாரம்) இங்கு அராஜகம் நடந்து விட்டது, சட்டம், அமைதியை மீறுகிறார்கள் என்றால் அதற்கு வழிகாட்டி யாக யார் இருக்கிறார்கள். மதுரையிலே ஒரு சாதாரண சம்பவம். நாகர்கோவில் தேர்தல் முடிந்து இரண்டு கட்சியினர்களிடையே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், காங்கிரஸ் தோழர்கள் இவர்களிடையே ஒரு சிறு சச்சரவு. அதன் காரணமாக அந்தத் தரப்பிலே 11 பேரும் இந்தத் தரப்பிலே 11 பேரும் பிடிக்கப் பட்டு அந்த 22 பேர் மீது வழக்கு போடப்பட்டது. வழக்கு கூட அல்ல, 107 என்கின்ற பிரிவின்படி அந்தப் பகுதியிலே அவர்க ளெல்லாம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக

ஓர் உத்திரவு. அந்தப் பிரிவின்படி 11 காங்கிரஸ்காரர்களிலே 10 பேர் கோர்ட்டுக்கு வந்தார்கள். கோர்ட்டின் அழைப்பின்படி 11 திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் கோர்ட்டுக்கு வந்தார்கள். ஒரு நபர் மாத்திரம்நான் கோர்ட்டுக்கு வர முடியாது என்று மறுப்புச் சொல்லிவிட்டார். மறுப்புச் சொல்லியது மாத்திரம் அல்ல, ஒரு பெரிய பொதுக்கூட்டமே போட்டு, நான் கோர்ட்டுக்குப் போகாத வீரத்தைப் பார்த்தீர்களா என்று 23-ம் தேதியன்று பேசியிருக்கிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஐ.ஜி.-யைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? ஐ.ஜி.யைவிட அதிகமான வருமான வரியைக் கட்டுகிறேன். எங்களுக்கு இந்த சமுதாயத்தில் மரியாதை அதிகம். அவன் சம்பளத்திற்கு வேலை செய்கிறான். ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் காக்கி சட்டையும் மேலே போட்டு இருக்கிற தொப்பியும் பறந்து போகும். எனவே நான் திரும்பச் திரும்பச் சொல்கிறேன். கடமையை ஆற்றுகிற வரைக்கும் மரியாதை. இல்லாவிட்டால் தொப்பி பறந்து போகும். இதையே தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். 'எப்படி சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பாற்றப்படுவதற்கு காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டுமென்றுதான் கேட்கிறேன். ஒரு நண்பரைப் பற்றி அதே கூட்டத்திலே பேசிய ஒரு தலைவர் கூறி இருக்கிறார்கள், 'இந்த வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். சம்மன் அனுப்பப்பட்டது. நண்பர் நெடுமாறன் ஒல்லியாக இருந்தாலும் அவர்தான் சம்மனை மறுத்தவர்கள்- இந்த நேரத்தில் பெரிய ரௌடி ஒருவரை கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கியதை நான் பார்த்தேன். காய்கறி சாப்பிடுகிற குடும்பத்திற்கு இந்த பலமா என்று எண்ணினேன். எங்களுக்கு இல்லாத தைரியம் நெஞ்சு உரம் உண்டு என்பதால் அவர் சம்மனை வாங்காமல் திருப்பி அனுப்பினார். இரண்டாவது வாய்தாவில் சம்மனை வாங்க மறுத்தார். அதை வீட்டு வாசலில் ஒட்டினார்கள். மூன்றாவது வாய்தாவில் கைது செய்து வரவேண்டுமென்று வாரண்டு பிறப்பித்தார்கள். அதற்கும் கோர்ட்டுக்குப் போக வில்லை. கைது செய்யப் போலீஸ் வரவில்லை. நீங்கள்

கோர்ட்டுக்குப் போகலாம். எங்கள் மீது என்ன குற்றம் என்று கேட்கலாம்.' என்று இப்படிக் கூறப்பட்டு மக்கள் தூண்டப் பட்டிருக்கிறார்கள். எப்படி சட்டம், அமைதி, ஒழுங்கு பாது காக்கப்படும்? அதற்கு காங்கிரஸ்காரர்கள் உத்திரவாதம் அளிக்க முடியும் என்று கூற முடியுமா? அது மாத்திரமல்ல, நம்முடைய கருத்திருமனிடத்திலே சொல்லியிருப்பதாகவே அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

'நான் நம்முடைய எம்.எல்.ஏ.க்களுக்குச் சொல்கிற யோசனை நீங்கள் சட்டமன்றத்தில் ''வாக்கவுட்'' செய்யுங்கள். பதில் வரவில்லை என்றால் ரகளை பண்ணுங்கள். இதற்கு ஒரு முடிவு தேட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பி.ஜி. கருத்திருமன் அவர்களிடம் சொன்னேன். மானை அடிக்க ஒரு மெல்லிய பிரம்பு. மாட்டை அடிக்கும்போது பெரிய பிரம்பு. யானையை அடிக்கும் போது ஒரு தடி. எங்கே எந்தத் தோலுக்கு உறைக்குமோ அந்த அளவுக்கு தட்டினால்தான் விஷயம் புரியும்'' என்று பேசி இருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, இன்னும் ஒரு பயங்கரமான விஷயத்தைப் பேசி இருக்கிறார்கள். ''1963ல் இன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் மைத்துனர் சி.எஸ்.ஜெயராமன் ஏப்ரல் மாதத்தில் இலங்கை சென்று இருந்தார். அங்கே அவர் பேசியதாவது; '1969 ஏப்ரல் மாதத்திற்குள் கருணாநிதி முதலமைச்சர் ஆவார்' என்று, ஆகவே இதிலிருந்து திட்டம் இட்டு அண்ணாதுரை கொல்லப்பட்டிருக்கிறார் என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது'' என்ற அளவுக்குப் பேசுகிறார்கள்? பேசி விட்டு, சட்டம், ஒழுங்கு அமைதி பாதுகாக்கப்படவேண்டு மென்று கூறுகிறார்கள் என்றால் உள்ளபடியே அவர்களுக்கு அப்படி சட்டம், ஒழுங்கு, அமைதி பாதுகாக்கப்படவேண்டு மென்பதிலே நாட்டம் இருக்கிறதா என்பதைத்தான் நான் எதிர்க் கட்சித் தலைவரை கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்தக் கருத்துக்கள் உடன்பாடானவைகள் அல்ல. ஆனால் உடன்பாடு மாறியவர்கள் தன்னுடைய கட்சியிலே இருப்பதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. நான் அவரிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலே நல்லவர்கள் இருக்கிறார்கள், நாணயமானவர்கள் இருக்கிறார்கள், நேர்மையானவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தலையிட்டு இந்தக் காரியங்களுக்கு ஒரு முடிவு காண வேண்டும்.

நான் முதலமைச்சரானதையொட்டி கறுப்புப் பார்டர் கட்டி ''கெட்டகாலம்'' என்று தலையங்கம் எழுதப்படுகிறது. பரவாயில்லை. கருணாநிதி காரில் 'கருமாதி' சங்கு!! என்று தலைப்புக் கொடுத்து எழுதப்பட்டது. பரவாயில்லை. அவர்கள் கூறினார்கள், 'நீங்கள் வளர்த்துவிட்டது உங்களையே தாக்கும்' என்று. நீங்கள் வளர்த்து விட்டவர்கள் உங்களையே தாக்கி இருப்பதை நான் காட்டுகிறேன். கருணாநிதியின் தூதராக பக்தவத்சலம் போனார்''- இது தலைப்பு. 'கருணாநிதியின் அமைச்சரவையில், அவருக்குக் கீழே அமைச்சராக இருக்க மறுத்த நெடுஞ்செழியனைச் சரிக்கட்டி, எப்படியாவது தன் மந்திரிசபையில் உட்கார வைத்தால்தான் கழகம் பிழைக்கும் என்று கருணாநிதி அதற்கான வேலைகளைச் செய்துள்ளார்.

பலரைத் தூது அனுப்பி, நெடுஞ்செழியனைச் சரிக்கட்டும் வேலை நடந்துள்ளது.

அதிலே ஒரு தூதுவர்- பழைய முதல் மந்திரி பக்தவத்சலமாம்!

'காலக்கொடுமை'- ''பக்தவத்சலத்திற்கு சென்னையில் இப்போது இந்த வேலைதான் இருக்கிறது.'' அடுத்து வருத்தமான எவ்வளவு அசிங்கம் பாருங்கள்? 'ராம தூதுவர்' என்பதைப் போல கருணாநிதியின் தூதுவராக நெடுஞ்செழியனிடம் பக்தவத்சலம் போய் 'சமரசம்' பேசியும்கூட, அவர் கண்டிப்பாக மந்திரிசபையில் சேர மறுத்து விட்டாராம்! தூதுவரையும் அனுப்பி விட்டாராம்!

பாவம் மந்திரி வேலை போனபின்பு, மந்திரிக்குத் தூது போகும் வேலையாவது நமது பழைய முதல்வருக்கு கிடைத்ததே என்று அமைதி கொள்வோமாக!''

யார் வளர்த்து விட்டது யார் மீது பாய்கிறது? அவர் களுடைய பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன இவ்வளவும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையாவது விட்டார்களா? அவர் அண்ணியார் அவர்களுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அதைப்பற்றி அவர்களுடைய பத்திரிகையில் எழுதுகிறார்கள். ''..... இந்த நிலையில் அண்ணாதுரை, தனது குடும்பத்தாரை 'நிர்க்கதியாய்' விட்டுச் சென்று விட்டார் என்றோ, அந்தக் குடும்பம் ஜீவிக்க, சர்க்கார் 'மானியம்' தரவேண்டும் என்றோ சொல்வது அற்பத்தனமாகும்!'' மானியம் தரவேண்டு மென்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். அவருக்குக் காங்கிரஸ் கட்சியினுடைய ஏடு அளிக்கின்ற மரியாதை 'அற்பத்தனமாகும்' என்பதாகும். (ஆரவாரம்) இது கை தட்டுவதற்காகச் சொல்வதல்ல. உனள்ளபடியே உள்ள உருக்கத்தோடு சொல்கிறேன். அவரைப்பற்றி அந்த வார்த்தைகள் வருகின்றன என்றால் நாளையதினம் காமராஜரைப்பற்றி வர எவ்வளவு நேரமாகும்? இப்படி எழுதுவது, பேசுவது, சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்படுவதற்கு எந்தவகையிலே பயன்படும் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் தயாராக இருக்கிறோம், எங்களு டைய கட்சியிலே உள்ள தலைவர்கள் தயாராக இருக்கிறார்கள், நீங்கள் முன் வரவேண்டும். அல்லது நீங்கள் முன்னின்று துணை புரிந்து நாம் அனைவரும் ஒன்று கூடி பேசுவோம், ஒரு நாகரீகமான அரசியலைத் தமிழகத்திலே நடத்துவதற்கு அதுதான் பயன்படும், ஒரு நல்ல பாதையை வகுத்துக் கொள்வோம் என்பதற்குத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறு எதற்கும் அல்ல.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு அரசின் சார்பாக ஒரு நீதிபதியினுடைய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கிடையிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தொழி லாளர்களுடைய தலைவர்களையும், நிலச்சுவாந்தார்களையும் அதிகாரிகளையும் அழைத்து முறைப்படி ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டிலே 4 படி என்று இருந்த இடத்திலே ½ படி கூட்டி, 4½ என்றும், 4½ படி என்ற இருந்த இடத்திலே ½ படி

கூட்டி, 5 படி என்றும் , 5 படி என்று இருந்த இடத்தில் ½ படி கூட்டி 5½ என்றும் 5½ என்று இருந்த இடத்தில் ¼ படி கூட்டி 5¾ படி என்றும் 6 படியில் ஒன்றும் மாற்றம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ¼ படி என்றும் சொல்லப் படுவதுகூட ஒரு கையால் அள்ளிப் போடுகின்ற அளவுதான். அதைக்கூட சில பேர் மறுத்து அதற்கு அரசியல் முலாம் பூசி அங்கே, தஞ்சை மாவட்டத்திலே மறுபடியும் கிளர்ச்சிக்கு வித்திடத் தொடங்கினார்கள். நல்ல காலம், அவைகளெல்லாம் அமிழ்த்தப்பட்டு சாதாரண நிலையே இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே மாத்திரம் அல்லாமல் தமிழகம் முழுவதும் இந்த நல்ல நிலை உதாரணமாக விளங்க வேண்டும்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் குறிப் பிட்டதைப்போல் அனைவரும் ஒன்றுபட்ட சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டுமே அல்லாமல் வேறு அல்ல என்று கூறிக்கொண்டு, மற்றொன்றையும் கூற விரும்பு கிறேன். கூட்டு சேர்ந்திருக்கிற கட்சிக்கு ஒரு சலுகை என்ற கெட்டப்பெயரை இந்த அரசு வாங்கக்கூடாது என்று அவர் குறிப்பிட்டார். தோழமைக் கட்சிகளுக்கு சலுகை என்பது மாத்திர மல்ல, சொந்தக் கட்சிக்கேகூட நிச்சயமாக தவறு செய்தால் அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட மாட்டாது என்பதையும் நான் உறுதியாக உங்களிடையே தெரிவித்துக்கொண்டு இந்தக் கண்டனத் தீர்மானம் ஏற்படுத்தவேண்டிய உணர்ச்சியை, ஒரு சமுதாய உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தால் அதை ஏன் கொண்டு வந்தோம் என்பதை திரு.கருத்திருமன் தெளிவாக விளக்கியதற்கு நன்றி கூறி இந்தக் கண்டனத் தீர்மானத்தை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதை திரு. ஜயராஜ் அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 64 **நாள் : 09.09.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் பூவராகன் மன்னிக்கவும் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றும், ஏனைய கட்சிகளின் சார்பில், குறிப்பாக இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் கண்டனத் தீர்மானம் ஒன்றும் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு அந்தத் தீர்மானங்களின் மீது 36 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் இதற்கு முன்பு ஒருமுறை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டது. அப்போது அவர்கள் 50 பேர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த பிறகு, அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று எட்டு பேர்கள் அவர்களை விட்டு விலகிச் சென்று விட்டார்கள். இப்போது மிச்சமிருக்கும் 42 உறுப்பினர்களைக் கொண்ட பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் எங்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்று எடுத்துக் காட்டுவதற்கு அவர்களுக்கு எந்த அளவு பயன்படுகிறதோ, அதே அளவுக்கு எங்கள் மீது இந்த நாடும், இந்த மன்றத்திலே உள்ள பெரும்பான்மை உறுப்பினர்களும் நம்பிக்கை கொள்ளுகிறார்கள். மேலும் நம்பிக்கை கொள்ளுவார்கள், நம்பிக்கை கொள்ளுவதற்கான காரணங்கள் இவை இவை என்று எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பத்தையும் எங்களுக்கு அளிக்கிறது.

ஏனென்றால், குறைகளை வெளியிடங்களில், பொதுக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், அந்த இடத்திலே வந்து மறுத்துரைப்பதற்கு, நேரடியாக விளக்கங்கள் அளிப்பதற்கு எங்களால் இயலாத நிலையில் என்னென்ன குற்றங்களோ சாட்டப் பட்டு விடலாம். ஆனால் அவைகள் எல்லாம் நேருக்கு நேர் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் நாங்கள் நேரடியாக விளக்கங்களை அளிப்பதாலே தமிழ் நாட்டில் இருக்கும் நான்கு கோடி மக்களும் உண்மைகளை உணருவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒருவகையிலே எங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுகிறது என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற கட்சியினர், எங்களை, இந்த அரசை அல்லது இந்த அரசினுடைய அதிகாரத்தின்கீழ் இயங்குகின்ற காவல்துறையின் போக்கைக் கண்டித்து பலத்த விவாதங்களை இங்கே நடத்தியிருக்கிறார்கள். அவர்கள், இந்த அரசு காவல்துறையைப் பொறுத்தவரையிலே மேலும் நல்ல திருத்தங்களைச் செய்து, இப்போது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்பட்டு விடுகின்ற சில அசம்பாவிதங் களைக் கூடத் தடுத்து, நல்ல முறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இடதுசாரி எண்ணமுடைய ஆட்சி வலுப்பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரணமாகத்தான் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, பி.எஸ்.பி., எஸ். எஸ். பி., ஆகிய கட்சிகளின் சார்பில் இன்று கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, நான் அதனையும் மறுத்து, அல்லது வன்மையாகக் கண்டித்துப் பேச முற்பட எண்ணிடவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், மாண்புமிகு புதிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், கொள்கைகளைச் சொல்லித் தாக்கினார்களா, நடைமுறைத் திட்டங்கள், நாங்கள் வகுத்திருக்கிற வேலை முறைத் திட்டங்கள் இவைகளில் இருக்கும் தவறுகளைச் சொல்லித் தாக்கி னார்களா என்றெல்லாம் பார்த்தால் இல்லை. குறிப்பாக, அமைச்சர்கள் அல்லது அளிக்கப்பட்ட அலுவல்கள் அல்லது

கார் பரிசளிப்பு விழாக்கள் என்ற இந்த வகையிலேதான் எதிர்க் கட்சியில் இருந்து பெரும்பாலான தாக்குதல்கள் இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் அடிப்படையிலே இடம்பெற்றன என்பதனை இந்த மன்றத்திலுள்ள நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வெளியிடப்பட்ட நேரத்தில் எல்லாம் அந்தந்தப் பொறுப்புக்குரிய அமைச்சர்கள் எழுந்து தக்க விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அந்த விளக்கங்கள் அத்தனையும் பத்திரிகா தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற போக்குக் கொண்ட எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. 'பத்திரிகா தர்மத்தைப் பற்றிக் கவலை இல்லை, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு இழுக்கை உண்டாக்க வேண்டும், இவர்கள் ஆளுவதா? இவர்கள் யார்? சாதாரணமானவர்கள், சாமானியமானவர்கள், ஆளுவதற்குத் தகுதிபடைத்த அந்தஸ்த்துள்ள குடும்பங்களில் பிறக்காதவர்கள்; பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்கள் ஆண்டாண்டு காலம் அடிமைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்; இன்று ஆளும் கட்டிலை அலங்கரிப்பதா? என்று ஆத்திரம் கொண்ட சில ஏடுகள் வேண்டுமானால் நாங்கள் அவ்வப்போது அளித்த விளக்கங்களை எல்லாம் வெளியிடாமல் மறைத்திருக்கலாம். அவர்களையும் நான் தாக்கிட விரும்பவில்லை. எங்களை ஆளாக்கிய அண்ணன் கற்றுத் தந்த மொழியின்படி 'வாழ்க அவர்கள்' என்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நானோ அல்லது அமைச்சர்களோகூட பதில் சொல்லத் தேவையில்லை என்ற அளவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரிய பல உண்மைகளை வெளியிட்டு, அழுத்தந்திருத்தமான பதில்களை அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் மிகத் திறமையோடு வாதாடிய ஆளும் கட்சி உறுப்பினர்களையெல்லாம் நான் சட்டசபையில் உள்ள ஆளும் கட்சியின் தலைவன் என்ற முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் மிகுந்த கண்ணியத்தோடும், இந்த அவையின் மரபு கெடாத

வகையிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள், கண்டனத் தீர்மானத்தின் மீது பேசிய மற்றக் கட்சியினர், இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரிக்காத நிலையிலே பேசிய வேறு கட்சியினர் அத்தனை பேரும் இந்த அவையின் மரபு காப்பாற்றப்படவேண்டு மென்பதிலே அழுத்தமான நம்பிக்கை வைத்து விவாதங்களிலே கலந்து கொண்டதற்காக அவர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து விடுகின்ற காரணத்தால், வெளியில் இருக்கும் தமிழ்நாட்டு மக்கள் எங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி விடுவார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களோ எண்ணுவது சரியாகாது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட சட்டமன்றத்தில் 7-3-1970 அன்று பேசுகின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "பிற மாநிலங்களில் கூட்டணி ஆட்சிகள் நடைபெறுகின்றன, திடீரென்று கவிழ்கின்றன; இடையிலே யார் மந்திரிசபை அமைப்பது என்ற நிலை எல்லாம் இருக்கும்போது இங்கே ஒரே ஆட்சி, நிலையான ஆட்சி இருக்கிறது. இதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நிலையான ஆட்சி தொடர்ந்து இருக்கும் என்ற நல்ல நம்பிக்கையுடன் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே, அந்தப் பாராட்டை அவர்கள் நிச்சயமாகத் திரும்பப்பெற மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தமிழ்நாட்டு பெருமக்கள், வாக்காளப் பெருமக்கள் இந்த கட்சியின் மீது அல்லது இந்தக் கட்சியோடு தோழமை கொண்டிருக்கிற கட்சிகள் மீது அளவுகடந்த அன்பினைச் செலுத்தினார்களா இல்லையா, நம்பிக்கை வைத்தார்களா இல்லையா என்பதை நாம் உன்னிப்பார்த்திட எவ்வளவோ அளவுகோல்கள் இருக்கின்றன.

நாங்கள் அரசுப் பொறுப்பேற்று ஆறு ஏழு மாதங்களில் தென் சென்னை பாராளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தொகுதியிலிருந்து பதவி விலகியதால் ஏற்பட்ட அந்த இடைத் தேர்தலில், இவர்களுக்கு எப்படியோ மக்கள் தப்பித் தவறி வோட்டு போட்டுவிட்டார்கள். இந்தத் தேர்தலில் மக்கள் இவர்களைத் தோற்கடித்து விடுவார்கள் என்றெல்லாம் பேசப்பட்டன. ஆனால் தென் சென்னை பாராளுமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நின்ற வேட்பாளர் அபரிமிதமான வாக்குகளைப்பெற்று பெரிய வெற்றியை அடைந்தார்கள். அது ஆறாவது மாதத்தில் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும்.

அதைத் தொடர்ந்து தென்காசியில் நடைபெற்ற இடைத் தேர்தல். அது காங்கிரஸ் கட்சியின் இடமாக இருந்தாலும் 500 வாக்குகள் வித்தியாசத்தில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தோற்றிருந்தாலும் பிறகு நடைபெற்ற தென்காசி இடைத் தேர்தலில் ஏறத்தாழ 20,000 வோட்டுகள் வித்தியாசத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அங்கு வாகை சூடியது என்பது மக்கள் கழகத்தின் மீது, கழக அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கைதான் காரணமாகும்.

பின்னர் சாத்தூரில் நடைபெற்ற இடைத்தேர்தல். அங்கு எங்கள் தோழமைக் கட்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளித்தது. அங்கேயும் தோழமைக் கட்சியான சுதந்திராக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

மாநகராட்சி மன்றத்திலும் இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றபிறகு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்கிற அளவிற்கு பெரும்பான்மையான இடங்களைப் பெற்றதையும் யாரும் மறந்திருக்க முடியாது. நகராட்சி மன்றங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஏழெட்டு இடங்கள்தான் அங்கு இருந்தன, இப்போது ஐம்பதுக்கு மேற்பட்ட நகராட்சி மன்றங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் வீற்றிருக்கிறார்கள். இது மக்களுக்கு இந்த அரசின் மீதுள்ள நம்பிக்கைக்கு அடையாளம்தான்.

புதுவை மாநிலத்தில் ஒரு காலத்தில் நாங்கள் போட்டியிட்டு கட்டிய பணத்தைக்கூட திரும்பப் பெறமுடியாத நிலை இருந்ததும் உண்மை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே அமைந்த பிறகு புதுவை மாநிலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமும் வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் சேர்ந்து ஒரு கூட்டணி ஆட்சி உருவாக்கி முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் அங்கு முதல் அமைச்சராக வீற்றிருக்கிறார்கள் என்பதும் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நல்லமுறையில் நடைபெறுகிறது என்கிற அந்த இனிய காற்றின் வாடை அங்கு வீசிய காரணத்தினால்தான் புதுவையில் முன்னேற்றக் கழகத்திற்கு அப்படிப்பட்ட வெற்றி கிடைத்திருக்கிறது.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஏதேதோ பட்டியல்களை எல்லாம் போட்டுக் காட்டுகிறார்கள், தவறான கணக்குகளை எல்லாம் காட்டுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இது கட்சி சார்பில் நடைபெறுவதல்ல, என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் கட்சிக் கணக்கைக் காட்டுவதாகச் சொன்னார்கள். எனது பணிவன்பான வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொண்டு இரண்டு கட்சிப் பத்திரிகைகளையும் எடுத்து தேதிவாரியாக அவர்கள் பார்க்கட்டும், ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் காங்கிரசுக்கு வெற்றி, காங்கிரசுக்கு வெற்றி என்று முதலில் அப்படிச் செய்திகளை வெளியிட்டவை காங்கிரஸ் கட்சிப் பத்திரிகைகளா அல்லது கழக ஏடுகளா என்பதை அவர்களே எடுத்து ஆராய்ந்து பார்ப்பது நல்லது. அப்படிச் செய்திகள் வெளிவந்த பிறகுதான் கழக ஏடுகளிலும் அப்படிச் செய்திகளை வெளியிட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 178 இடங்களைப் பெற்றிருக்கிறது. அவர்களில் எட்டு அல்லது பத்து பேர்கள் கழக ஆதரவோடு வெற்றிபெற்ற சுயேச்சைகளாக இருக்கலாம், இப்படி 178 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வது உண்மை அல்ல. உண்மைக்கு மாறாகச் சொல்கிறார்கள் என்றெல்லாம் மீண்டும் மீண்டும் எடுத்துச்

சொல்லியும் மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதினால் இப்போது ராம்சுபாக் சிங்-ஐக் கொண்டு சொல்லச் சொல்லி அவர்கள் ஓர் அறிக்கை விட்டபிறகு அதற்கு நான் தந்த விபரப்படி 178 பேர்கள் வென்றிருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறார்களா? இல்லை என்றால் இன்னும் இரண்டு நாட்களில் மாநில சுயாட்சி மாநாட்டில் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறார்கள். அதன் பிறகாவது நம்புவார்களா, இல்லை, ஆள் மாறாட்டம் செய்து விட்டார்கள், இவர்கள் அந்த ஆட்கள் இல்லை என்று சொல்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆகவே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தலில் இருந்து இந்த அரசின்பால் மக்களுக்கு நல்லவகையில் நம்பிக்கையிருக்கிறது என்பதை மக்கள் நல்லமுறையில் மெய்ப்பித்திருக்கிறார்கள். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மூலம் பேசிய நேரத்தில் துப்பாக்கிச் சூடுகள் பற்றியெல்லாம் பேசப்பட்டது. கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவாக எழுந்து நின்று அதற்குப் பிறகு அதையொட்டிப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என் அருமை நண்பர் கருத்திருமன் அவர்கள் பேசும்போது போலீஸ் அடக்குமுறை அத்துமீறி விட்டது, அத்துமீறி விட்டது என்றெல்லாம் சொன்னார்கள்.

இருபதாண்டுக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் எவ்வளவு என்றால் - கிடைத்திருக்கிற தகவலை வைத்துச் சொல்கிறேன். இன்னும் சேகரித்தால் அதிகமாகக் கிடைக்குமே தவிர குறையாது - 108 துப்பாக்கிப் பிரயோகங்கள். அந்த அரசு கொடுத்த கணக்கின்படியே அதில் ஏற்பட்ட சாவு 155 பேர்கள். ஆக 108 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்து 155 பேர்களைக் கொன்று குவித்த அந்தக் கட்சி இன்றையதினம் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்துகொண்டு கழக ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் அத்துமீறி விட்டது என்று பேசுவது நியாயமாகாது.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான் செய்தார்கள் என்றால் அதை நீங்களும் செய்யலாமா என்று கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கேட்கலாம். கம்யூனிஸ்ட்கள் ஆண்ட

கேரளாவில், தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் ஆட்சி செலுத்திய நேரத்தில் 58 ஜூலை முதல் 59 ஜூலை முடிய ஒரு ஆண்டுக் காலத்தில் நான்கு துப்பாக்கிப் பிரயோகங்கள், 19 பேர்கள் சாவு. அதே கேரளத்தில் 1967 முதல் 1970 வரையில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் 15 துப்பாக்கிப் பிரயோகங்கள் 19 சாவுகள் ஏற்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை என்று நான் மறுக்கவில்லை. நடைபெற்றிருக்கிறது. தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது என்பதையும் அப்படி நடைபெற்ற நேரத்திலெல்லாம் அரசுக் கட்டிலில் வீற்றிருக்கும் நாங்கள் அதிர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதையும், ஆனால் முன்பெல்லாம் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்ற நேரங்களில் அதைப்பற்றி அவர்கள் அதிர்ச்சியடையாமல், "சுடுகிற இடத்திற்குப் போனால் சுடாமல் என்ன செய்யவேண்டும்?" என்கிற அளவிற்குப் பதில்கள் தரப்பட்ட ஆட்சி அந்தக் காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. எவ்வளவோ கிளர்ச்சிகள் நடைபெற்றன.

தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள், தொழிலாளர் களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட பிறகு கிளர்ச்சிகள் நடைபெற்றன என்று. இதில் வேடிக்கை என்னவென்றால், குறிப்பிட்ட சில கிளர்ச்சிகளும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் இந்த அரசால் கவனிக்கப்பட்டு அவர்களுடைய முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேச்சுவார்த்தைகள் முடிவுற்று அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் தொடங்கியிருக் கின்றன. இதை மிக நன்றாக உணருவீர்கள் என்று கருதுகிறேன்.

மின்சாரவாரிய ஊழியர்களை எடுத்துக்கொள்ளுங்கள். மின்சாரவாரிய ஊழியர்கள் ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்ட நேரத்தில் நான் அவர்களோடு நான்கைந்து நாட்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தி, மின்சார வாரியத்துறை அமைச்சர் அவர்கள், நான், வாரியத் தலைவர் அவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் – அதில் கழகப் பிரதிநிதிகளும் உண்டு, வலதுசாரி கம்யூனிஸ்ட்

கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளும் உண்டு - ஆக எல்லோரும் கூடி பேச்சுவார்த்தை நடத்தி பத்து பதினைந்து ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த ஊதியத்தினை அவர்களுக்கெல்லாம் போதும் போதும் என்கிற அளவில் உயர்த்திக்கொடுத்து அதன் காரணமாக 4 கோடி ரூபாய் அதிகச் செலவை மின்சார வாரியம் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு அவர்களுடைய முறையீடுகள் கவனிக்கப்பட்டிருக்கின்றன.

ஊதிய உயர்வை அறிவித்தபோது என்னுடைய கையைக் குலுக்கிவிட்டு நன்றிதெரிவித்துவிட்டுச் சென்ற பொறியாளர்கள் இரண்டு நாட்களில் எல்லாம், என்ன காரணமோ நான் அறியேன், அவர்கள் திடீரென்று வேலைநிறுத்தம் செய்யப்போகிறோம் என்றார்கள். எல்லோரும் அல்ல. பொறியாளர்கள் மாத்திரம். இரவு 12 மணிக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றார்கள். ஆனால் மாலை 5 மணிக்கே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு மின் விளக்குகள் எல்லாம் எல்லா நகரங்களிலும் அணைந்து போகிற அளவிற்கு ஒரு கொடிய செயலில் ஈடுபட்டு யாரும் வந்து இயந்திரத்தை மறுபடியும் இயக்க முடியாத அளவிற்கு அவைகளைப் பாழ்படுத்திவிட்டு அவர்கள் வெளியேறினார்கள். அப்படி ஒரு சதித்திட்டம் நடைபெற்றால் இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்குமா என்று நிருபர்கள் கேட்ட நேரத்தில் சதித் திட்டங்களை இந்த அரசு அனுமதிக்காது, சதித் திட்டங்களை இரும்புக் கரங்களைக் கொண்டு அடக்குவோம் என்று சொன்னேன். அப்படிச் சொன்னதில் சில அரசியல்வாதிகள் சதித்திட்டங்களை எடுத்துவிட்டார்கள். இரும்புக் கரத்தை மாத்திரம் பிடித்துக் கொண்டார்கள். சதித்திட்டங்கள் நடைபெற்றால் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று சொன்னேன். முன்னாலே சொல்லப்பட்ட வார்த்தைகளை விட்டு விட்டு, இரும்புக்கரம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு, விவசாயிகள் போராட்டமா, இரும்புக்கரம், நிலப்பறி இயக்கமா இரும்புக்கரம், இப்படி எந்த போராட்டம் நடைபெற்றாலும் இரும்புக்கரம், இரும்புக்கரம் என்று இந்த இரும்புக்கரம் கொஞ்ச நாள் மிக அதிகமாக அரசியல் வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்தது. ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 9 பேர் மீது

நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒன்பது பேர் கைது செய்யப் பட்டார்கள். உடனடியாக அவர்கள் வேலைக்குத் திரும்புவதற்கு, எழுதிக் கொடுத்த பிறகு அத்தனை பேரும் மன்னிக்கப்பட்டு, அத்தனை பேரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் யாரும் பழிவாங்கப்படவில்லை பழிவாங்குகிற செயலில் அந்த வாரியம் ஈடுபடவில்லை. ஆகவே, இதிலே மிகுந்த இரக்கச் சுபாவத்தோடு பார்க்கவேண்டும். இது பொதுமக்களின் பிரச்சினை. இது மிக மிக முக்கியமான விஷயம் நம் உபயோகத்திற்குத் தேவையான ஒன்று. ஆகவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது அபாயம் என்று கருதியதால் அவர்கள் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டவர்கள் அத்தனை பேரும் விடுதலை செய்யப் பட்டார்கள். ரூ. 4 கோடி அளவுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்ட பிறகு அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகுதான் சில அரசியல் நோக்கங்களுக்காக அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதை அனைவரும் மிக்க பெருந்தன்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும்.

இதைப்போலவே நெய்வேலியில் நடைபெற்ற போராட்டத்தில்கூட நெய்வேலித் தொழிலாளர்கள் அங்கே போராட்டம் நடத்துவதற்கு முன்பு என்னைச் சந்தித்தார்கள். அப்போது நான் கண்வலியால் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டு இருந்தேன். மூன்று நான்கு நாட்கள் உட்கார்ந்து பேசி 92 இலட்ச ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் உயர்த்துவதற்கான நிலை உருவாக்கப்பட்டது. மே 1-ம் தேதி அவர்கள் விழாவைக் கொண்டாடிவிட்டு, அன்றையதினம் ஏற்பட்ட சில சந்தேகங்களின் காரணமாக மறுநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிறகு அவர்களே ஒப்புக் கொண்டார்கள், அந்த வேலைநிறுத்தம் சட்ட விரோதம்தான். நாங்கள் சட்டப்படி அறிவிப்பு செய்யவில்லை என்று சொன்னார்கள். அந்த வேலைநிறுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சில அசம்பாவிதத்தால் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். தேவன்பு என்றவர் இறந்து விட்டார். உள்ளபடியே இந்த அரசிலே இருக்கிற அத்தனைபேரும் ஆழ்ந்த அனுதாபத்தோடு அதற்கு வருத்தம் தெரிவித்தோமே, தவிர

போராடினார்களா, தேவன்பு சுடப்பட்டானா, சரிதான் என்று போலீசைத் தட்டிக்கொடுக்கவில்லை. விசாரணை வைத்தோம். அப்படி வைக்கப்பட்ட விசாரணை அறிக்கையிலேகூட குறிப்பிட்ட அதிகாரி குப்பத்திலே போய் நுழைந்தது தவறு என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அந்த விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்வோம் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை விவசாயிகள் கிளர்ச்சியைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு அறியும். அதில் என்ன சங்கடங்கள் இருக்கிறது என்பதும் தெரியும். இது பற்றி திரு. பூவராகன் அவர்கள் என்னிடத்தில் வந்து பேசினார்கள். அவர் அமைச்சராகப் பதவியில் இருந்த காரணத்தால் அவர்களிடத்தில் இருக்கிற சங்கடங்களை விளக்கினேன். திரு. மன்றாடியார் தலைமையில் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். ஒரு முடிவை வெளியிட்டோம். அதற்குப்பிறகு இதே அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், 'பாதி கிணறு தாண்டி இருக்கிறீர்கள் என்றாலும் பரவாயில்லை, முழுக்கிணறு தாண்டுங்கள்' என்று சொல்கிற அளவுக்கு நான் அந்த விவசாயிகள் பிரச்சினையைக் கவனிக்க முடியாது என்று மறுத்துவிடவில்லை. அவர்களுக்கு மான்யமாகக் கொடுப்பது பல கோடி ரூபாயாக ஆகிறது. 75 அடிக்குமேலே உள்ள கிணற்றிற்கு 9 பைசாவும், அதற்குக் குறைவாக உள்ள கிணறுகளுக்கு 10 பைசா வசூலிக்கலாம் என்று சொன்னோம்.

விவசாயச் சங்கத்தின் செயலாளர் எனக்கு எழுதிய கடிதத்தில் என்ன குறிப்பிட்டு இருந்தார். அந்தக் கடிதத்தில், நீங்கள் அந்தச் சலுகை அளித்து இருப்பதற்கு நன்றி, ஆனால் 75 அடி ஆழத்திற்குமேல் உள்ள கிணறுகள் கோவை மாவட்டத்தில் 15 சதவிகிதம் இருக்கின்றன. ஒன்பது பைசா வீதம் 85 சதவிகிதம் பயன் அடைந்து இருக்கின்றனர். ஆகவே இந்த மீதமுள்ள 15 சதவிகிதக் கிணறுகளுக்கும் 9 பைசாவாக ஆக்கவேண்டுமென்று கேட்டார்கள். உங்கள் மாவட்டத்திற்கு மட்டும் 9 பைசா என்று நிர்ணயிக்க முடியாது. தமிழகத்திலே இருக்கிற வேறு பல மாவட்டங்களிலும் இது போன்று குறைக்க வேண்டிவரும், அதன்

காரணமாக மேலும் சில கோடி ரூபாயை இழக்க நேரிடும். இப்போது தேவையில்லை. கொஞ்சம் பொறுத்து இருங்கள் என்று சொன்னேன். அவர் பார்த்துவிட்டுச் சென்ற சில நாட்களுக்குள் ஓர் அறிக்கை விட்டார்கள். வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபடுவோம் என்று எழுதினார்கள். அதற்குப்பின்னாலே அவர்களே, அது தவறு என்று குறிப்பிட்டு கடிதம் எழுதிவிட்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

அந்தக் கிளர்ச்சியின் காரணமாக 3 பேர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார்கள் என்ற செய்தி வந்தது. மூன்று பேர் என்ன, 30 பேர் செத்தாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு இந்த அரசு இல்லாமல், இதை அரசு கௌரவப் பிரச்சினையாகப் பார்க்காமல், ஆணவத்தோடு பதில் சொல்லாமல், 3 பேர் உயிர் துப்பாக்கிக் குண்டால் பிரிக்கப்பட்டது என்று செய்தி வந்ததும் உடனடியாக நீதி விசாரணை வைக்கவேண்டுமென்று கேட்பதற்கு முன்னாலே, வைக்கப்பட்டது. நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப் பட்டது. வாங்கமறுத்தார்கள், அல்லது மறுக்கும்படி செய்யப் பட்டார்கள். நஷ்ட ஈடு கேட்காமலேயே நஷ்ட ஈடு வழங்குவதற்கு இந்த அரசு முன்வந்தது. அவர்களுக்கு அனுதாபம் காட்டினோம். தவிர்க்க முடியாத அளவுக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு விட்டது என்று உணர்கிறோம். அந்த உணர்வுடன் ஏற்கெனவே ஆண்டு கொண்டு இருந்த காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி என்று சொன்னால் திரு. கருத்திருமன் அவர்கள் பக்தவத்சலம் என்று நினைக்கலாம், ஆனால் மதிப்பிற்குரிய திரு. காமராஜர் காலத்திலிருந்து நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சி அப்படிப்பட்ட உடனடியாக செய்யவேண்டிய காரியங்களை செய்து இருக்கிறதா. வரலாறு உண்டா, என்று எண்ணிப்பார்க்கவேண்டும்.

நிலப்பறி இயக்கம், அதிலே போலீசார் அடக்குமுறை என்று சொன்னார்கள். நிலப்பறி இயக்கம் என்று சொன்ன உடனே கம்யூனிஸ்ட்கள் கோபித்துக்கொள்ளப்போகிறார்கள். நில மீட்சி இயக்கம் என்று அவர்கள் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிலப்பறி இயக்கத்தை இந்தியா முழுவதிலும் நடத்துவது என்று திட்டமிட்டார்கள். தமிழ்நாட்டிலும் நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். நடத்துவதற்கு முன்பு எத்தகைய வேகமான

அறிக்கைகள் வந்தன. கருணாநிதியின் இரும்புக்கரம் என்ன செய்கிறது பார்ப்போம் என்று அறைகூவல் விடப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு அந்த நிலப்பறி இயக்கத்தை 15-ம் தேதி நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். எந்த 15-ம் தேதி, ஆகஸ்ட் 15-ம் தேதி. இந்தியா சுதந்திரம் பெற்ற நாளில், பிரிட்டிஷ் காரனிடத்தில் இருந்து இந்தியாவை மீட்ட நாளில் நிலப்பிரபுக் களிடமிருந்து நிலத்தைப் பறிப்பதற்கு திட்டம் வகுத்தார்கள். அதற்கு பாதயாத்திரை ஏற்பாடு செய்தார்கள்.

அந்தப் பாதயாத்திரை என்பது பிரசாரத்திற்கு எனச் சொல்லப்பட்டதே தவிர, அது வெறும் பிரசாரத்திற்கு மட்டும் அல்ல என்பதும் ஆங்காங்கு நிலப்பறி இயக்கத்தில் ஈடுபடுவதற்கு ஆட்களை திரட்டுவதற்காக என்று அறிந்து காவல்துறை வெகு உன்னிப்பாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் எந்தவித மதிப்புக் குறைவாகவும் நடத்தப்பட வில்லை. எந்த அசௌகர்யமும் ஏற்படாத அளவுக்குப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டது.

திரு. கல்யாணசுந்தரம், திரு. மணலி கந்தசாமி அவர்களும் ஏற்கெனவே உடல் நிலை சரியில்லாதவர்கள், திரு. கல்யாண சுந்தரம் அவர்களுக்கு சுவாச நோய் உண்டு. சட்டமன்றத்திலே தான் கொஞ்சம் கஷ்டப்பட்டு எழுந்து நின்று பேசுவார். மற்றப் பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது உட்கார்ந்து கொண்டுதான் பேசுவார். மணலி கந்தசாமி அவர்களும் உடல் நலம் சரியில்லா தவர்கள். மிகுந்த கவனிப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அவரைத் திருச்சியிலிருந்து சென்னைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் பாளையங்கோட்டைக்கு போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றதைப்போல் அவரை அழைத்து வராதீர்கள் காரில் அழைத்து வாருங்கள் என்று சொன்னேன். அவர் பெரிய காரில் டி.ஐ.ஜி. காரில் அழைத்து வரப்பட்டார். இங்கே சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தகுந்தமுறையில் அவர் கவனிக்கப்பட்டார்.

அது மாத்திரம் அல்ல, அந்த இயக்கத்திலே ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் யாராவது பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட இருந்தாலும், ஓட்டளிக்க வேண்டியவர்களாக இருந்தாலும், இந்த அரசு, அவர்களை வர ஒட்டாமல் செய்யவேண்டுமென்று எண்ணி இருந்தால் அவர்களை வெளியே விடாமல் செய்து இருக்க முடியும். ஆனால் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் நாங்கள் அந்தத் தேர்தலில் அவர்கள் ஈடுபட வழி வகை செய்து, அவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்தோம். தேர்தலில் கலந்து கொண்டார்கள். கைது செய்யப்பட்ட காரணத்திற்காக, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட காரணமாக அந்த யூனியன் தலைவர் தேர்தலில் யாரும் தோல்வி அடையவில்லை. அவர்கள் குறித்து வைத்த இடங்களில் நிச்சயமாக அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

இந்த இயக்கத்தை இங்கே நடத்துவதற்கு எத்தனையோ வாதங்களை எடுத்துச் சொல்லும் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இந்த இயக்கம் கேரளத்தில் நடைபெற்றபோது என்ன முறைகள் கையாளப்பட்டன, காவல்துறையினர் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டு மென்று மிகத் தாழ்மையோடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தோழமைக்கட்சி என்ற முறையோடு நான் கேட்கிறேன்.

கேரளத்தில் புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம் ஜனவரி முதல் தேதியன்று அமுலுக்கு வந்துள்ளது. அங்குள்ள இடது கம்யூனிஸ்டுகள் தாங்களாகவே நிலங்களைக் கைப்பற்றிக்கொண்டு குடிசைகளைப் போட்டார்கள். அவர்களை வலது கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி கைது செய்தது. இது இரண்டாம் தேதி நடைபெற்றது. பிறகு ஜனவரி நான்காம் தேதி ஆலப்புழை மாவட்டத்தில் புறம்போக்கு நிலத்தில் போடப்பட்ட 700 குடிசைகளை கேரளப் போலீஸ் பிரித்தெறிந்தது. இப்பொழுது நடைபெற்றால் எத்தனை பத்திரிகைகளில் எத்தனைவிதமான படங்கள் வெளிவந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜனவரி மூன்றாம் தேதியன்று எர்ணாகுளம், திருவாணியூரில் மார்க்சிஸ்டு ஆக்கிரமிப்பாளர்கள் நடத்திய

கிளர்ச்சியில் போலீசார் தடியடி நடைபெற்றது. ஏழு பேர்களுக்குப் பலத்த காயம். பிப்ரவரி ஐந்தாம் தேதியன்று கேரளச் சாலைப் போக்குவரத்து கார்ப்பரேஷன் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள், 1300 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் அச்சுத மேனன் ஆட்சியில்.

அச்சுதமேனன் அவர்கள் என்ன சொன்னார்கள்? துரதிருஷ்டவசமான நிகழ்ச்சிகளின் காரணமாகப் போலீஸார் சில இடங்களில் தடியடிப் பிரயோகத்தையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொள்ள நேர்ந்தது. ஏதேனும் ஒரு அரசியல் கட்சி வன்முறையில் ஈடுபடும்படி வேண்டுகோள் விட்டால், அதற்குத் தலைமை தாங்கவும் செய்தால் அதை அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது என்று சொன்னார். கேரளாவின் முதல் அமைச்சர், வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அங்கே அப்படி சொல்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற வலதுசாரி கம்யூனிஸ்டு நண்பர்கள் நாங்கள் வன்முறையில் ஈடுபட்டால் எங்களை அடக்கலாமா, ஒடுக்கலாமா என்று கேட்கிறார்கள்.

அது மாத்திரமல்ல. குடிகிடப்புக்காரர்கள் ஆளுக்கு 10 சென்டு நிலத்தை வேலி போட்டுக்கொண்டார்கள். ஆளுக்கு 10 சென்டு நிலத்தை எடுத்துக் கொண்டார்கள். இடது கம்யூனிஸ்டுகள் அப்படி வேலி போட்டுக் கொண்டார்கள். வலதுசாரிக் கம்யூனிஸ்டு அதை அங்கே எப்படி அணுகியிருக்கிறது. அந்த ஆட்சி எப்படி அணுகியிருக்கிறது? 50,000 வழக்குகள் பதிவு. இங்கே 10,000 பேர்கள் என்று சொன்னார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் அதில் 3000 பேர்கள் அவர்களே அல்ல, வேறு சாலையில் இருந்தவர்களைப் பிடித்து விட்டீர்கள் என்று சொன்னார்கள். சரியாகக் கணக்குத் தெரியாது. 10,000 பேர்கள் என்று அவர்கள் பெருமையோடு சொன்னார்கள். 50,000 பேர்களின் மீது வலதுசாரி கம்யூனிஸ்டு ஆட்சி வழக்கு போட்டது. 1200 பேர்கள் போலீஸ் அடக்குமுறைக்கு ஆளானார்கள். போலீஸ் முகாமில் 200 பேர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். இவைகளையெல்லாம் இங்கிருந்து வெளியிடப்படுகிற தீக்கதிர் என்ற பத்திரிகை 23-8-1970 அன்று எழுதியிருக்கிறது என்பதையும் நான் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஏதோ தமிழ் நாட்டில் விதிவிலக்குகளையெல்லாம் ரத்து செய்யவில்லை. தமிழ் நாட்டில் நிலப்பிரபுக்களினுடைய பக்கத்தில் தி.மு.க. அரசு ஓடிக்கொண்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படவேண்டும் என்று சாதாரண பாமர மக்களிடையே நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உண்மை என்ன? கேரளத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டு ஆண்ட நேரத்திலும் கேட்கிறேன், வலதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆண்ட நேரத்திலும் கேட்கிறேன், அங்கே உள்ள நிலைமை என்ன? அங்கே விதிவிலக்கு நிலங்களுக்கு உண்டு. கோவில்கள், மடங்கள், மசூதிகள் இவைகளின் நிலங்களுக்கு உச்சவரம்புச் சட்டத்தில் அங்கே விதிவிலக்கு உண்டு. தனிப்பட்டவர்களுடைய காடுகளுக்கு விதிவிலக்கு உண்டு. ஆலைகளின் நிலங்களுக்கு விதிவிலக்கு உண்டு. மலைத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு உண்டு. பொது டிரஸ்டுகளுக்கு அங்கே விதிவிலக்கு உண்டு. இங்கே மாத்திரம் ஆனால், நாங்கள் விதிவிலக்கு இருப்பதை எதிர்த்துத்தான் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம், நடத்துகிறோம் என்று கூறுவது முறையல்ல என்பதை நான் இந்தக் கிளர்ச்சி இப்பொழுது முடிவுற்றுவிட்டாலும்கூட ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும் நடைபெற்றிருக்கிற போலீஸ் நடவடிக்கை மீது இந்த அரசு உரிய நடவடிக்கை 3, 3½ ஆண்டு காலமாக எடுத்திருக்கிறதா, இல்லையா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். கீழ்வெண்மணி சம்பவம் கொடுமையான சம்பவம். அந்தச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு நாட்களுக்கு உணவுகூட அருந்தாமல், உறங்காமல் அவர்கள் இருந்த காட்சியை நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். அவர்களோடு பேசிய மதிப்பிற்குரிய திரு. ராமமூர்த்தி, எம். பி. அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஆறுதல் கூறுகிற அளவுக்கு அன்று அவர்கள் சோர்ந்து கிடந்ததை யாரும் மறந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட கீழ்வெண்மணி சம்பவத்திற்கு தி. மு. க. ஆட்சி காரணம் என்று கூடச் சொல்கிறார்கள். அதற்காகக் காங்கிரஸ் சார்பிலே கண்டனத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் திரு. சங்கரய்யா அவர்கள் அந்தக் கண்டனத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது,

காங்கிரஸ் அதைக் கொண்டுவந்திருப்பது அரசியல் லாபத்திற்கே தவிர, வேறு அல்ல, கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று திரு. சங்கரய்யா அவர்கள் கூறியது எனக்குப் பசுமையாக ஞாபகத்தில் இருக்கிறது. அதை அன்றைக்குக்கூட அவர்கள் நினைவுபடுத்தினார்கள்.

ஆகவே, அரசியல் லாபத்திற்கு வெண்மணி சம்பவத்தை யாரும் பயன்படுத்தக்கூடாது. அது எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்ட ஒரு சம்பவம். அந்தச் சம்பவத்தை ஒட்டி தஞ்சை மாவட்டத்தில் அமைதி நிலவ வேண்டும் என்ற அடிப்படையில் அங்கே கணபதியாப் பிள்ளை கமிஷன் நியமிக்கப்பட்டது. கீழ்வெண்மணியில் நடைபெற்றது முடிந்த காரியம் என்று நாங்கள் சும்மா இருந்துவிடவில்லை. உடனடியாக, பிரச்சினையைக் கவனித்து, ஆராய்ந்து தஞ்சைத் தரணியில் அமைதி நிலவ என்ன வழிவகைகளைக் காணலாம் என்பதற்காக கணபதியா பிள்ளை கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் தந்த பரிந்துரையின்படி நியாயக் கூலி நிர்ணயிக்கப்பட்டு, இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஒரு அமைதியான சூழ்நிலை உருவாகி இருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

துப்பாக்கிப் பிரயோகம் எதுவாக இருந்தாலும், அதில் நீதி விசாரணை வைக்க இந்த அரசு தயங்கியது இல்லை என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. அரவங்காடு துப்பாக்கிப் பிரயோகம் குறித்து நீதி விசாரணை வைக்கப்பட்டு, மாவட்ட நீதிபதி திரு. கணேசன் அவர்கள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அவரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் மாணவர்கள் பஸ் தொழிலாளர்கள் மோதல் ஏற்பட்டபொழுது, ஜஸ்டிஸ் சோமசுந்தரம் அவர்களால் நீதி விசாரணை வைக்கப்பட்டு, அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளின் படி ஆயிரக்கணக்கான ரூபாய் மாணவர்களுக்கு நஷ்டஈடாகத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை இந்த அரசு மறுத்து விடவில்லை. ஏற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்ட ஈடாக அரசு கொடுத்திருக்கிறது.

உடையார்பாளையம் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக ஜஸ்டிஸ் ராமப்பிரசாதராவ் அவர்களைக் கொண்டு நீதி விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. பெருமாநல்லூரைப் பொறுத்தவரையில், முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ராமகிருஷ்ணன், ஐ.ஸி.எஸ். அவர்கள் நீதி விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், நான் கேட்கிறேன். ஒரு பெரிய நம்பிக்கை யில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, இந்த மன்றமே அதிர்கின்ற அளவுக்கு அன்றைய தினம் பேசப்பட்டது. ஒரு நிகழ்ச்சி, 1957-ம் ஆண்டு நடைபெற்ற முதுகுளத்தூர் சம்பவம். முதுகுளத்தூர் சம்பவத்தில் வயல்வெளியில் மிதந்த பிணங்கள் எத்தனை? அங்கே வைக்கோல்போரில் சுருண்டு விழுந்த குழந்தைகள் எத்தனை? தாலி அறுத்தவர்கள் எத்தனை பேர்? நான் தேவர்கள், அரிசனங்கள் என்று பிரித்துப் பேச விரும்பவில்லை. இந்தச் சமுதாயத்து மக்கள், தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள்! முதுகுளத்தூர் சீமையிலே மக்களின் ரத்த ஆறு ஓடிற்று, பயிர்கள் பேரில் இருப்பது நீரா அல்லது ரத்தமா என்று வித்தியாசம் தெரியாத அளவுக்கு முதுகுளத்தூரில் 40 நாட்களுக்குமேல் கொடுமையான சம்பவம் நடந்தது.

ஐந்து மறவர்கள் ஒரு கோவிலின் வாயிலில் கை கட்டப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, போலீஸ் எதிரில் நிறுத்தப்பட்டு, சுடு என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1, 2, 3, 4, 5 என்று எண்ணப்பட்டு, ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இப்படி ஐந்து மறவர்குல மாணிக்கங்கள் முதுகுளத்தூரில் உயிர்நீத்தனர். ஆதித்திராவிட மக்கள் வைக்கோல் போரில் கொளுத்தப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். என்ன கேட்டோம்? கம்யூனிஸ்டு தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அப்பொழுதிருந்த அவர்கள் ஆட்சியில் நீதி விசாரணை கேட்ட நேரத்தில், காமராஜ் சர்க்கார் அதற்கு இணங்கியதா? காமராஜர் அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவித்தாரா? இங்கேதான் அமர்ந்திருந்தார் காமராஜர் அவர்கள். அப்போது அவர் பக்கத்தில் இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் என்ன சொன்னார்? எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை என்றால், போலீஸார் தங்கள்

கையிலே துப்பாக்கியையே தூக்கமாட்டார்கள், தங்கள் கடமையைச் செய்யமாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது நீதி விசாரணை வைத்திருக்கிறோம். நாற்பது நாள் நடைபெற்ற அமளி, ரத்தப்புரட்சி, அப்படிப்பட்ட முதுகுளத்தூர் சம்பவத்திற்கு ஒரு நீதி விசாரணை வைக்கப்பட்டதா? காமராஜ் தலைமையில் இருந்த காங்கிரஸ் மந்திரிசபை இதை மறுத்துவிட்டது என்பதையும் நான் இங்கே ஞாபகப்படுத்துகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, நான் அன்றும் ஆளும் கட்சி கொறடாவாக இருந்தேன். நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது தி.மு.க. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தார்களா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு அவர்களுக்கு பரிந்து பேசுகின்ற முதல் அமைச்சர் அவர்கள் அப்பொழுது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, வோட்டுப் போட்டிருக்கலாமே? அவர்கள் அப்பொழுது அப்படிச் செய்யவில்லையே?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நீதி விசாரணை வைத்தார்களா என்று நான் கேட்கிறேன். காமராஜ் அவர்களின் மீது மாத்திரம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கிற காரணத்தினால். அண்ணா அவர்கள் பெருந்தன்மையோடு சொன்னார்கள். அப்பொழுதே சொன்னார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடுநிலைமை வகிக்கிறேன் என்று குறிப்பிட்டு, இறுதியாகப் பேசும்பொழுது நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். அப்பொழுது நீதிவிசாரணை நீங்கள் வைக்க வில்லையே என்று நான் கேட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வோட்டு அளிக்கவில்லையே என்று அவர் கேட்கிறார். நீதி விசாரணை வைக்கவில்லை என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன் நான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முறைப்படி நீதி விசாரணை வேண்டும் என்று சொன்னால் அப்பொழுது நீங்கள் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் பேரில் வோட்டுப்போட்டிருக்கவேண்டும்.

நீதி விசாரணை கேட்பது என்றால், அவர்கள் எடுத்த நிலை என்ன? யாராக இருந்தாலும் சரி. ஏற்கெனவே சொன்னார்கள். குழப்பம் இருந்தாலும் சரி, சர்க்காரில் தவறுகள் நடந்தாலும் சரி, அதைத் தடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இன்று அச்சுதமேனன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பரிதாபப்படுபவர்கள் அன்று ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் வோட்டுப் போடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பழைய சட்டசபை நடவடிக்கைகளையெல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் படித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் என்ன பேசினார்கள்? எப்பொழுது வெளி நடப்புச் செய்தார்கள் என்று கேட்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த காங்கிரசே இப்போது அவசரப்பட்டு வெளியேறிடுவோம் என்றபோது, அமைச்சர் மாதவன் அப்பொழுது தடுத்து நினைவூட்டவில்லையென்றால், வெளியேயே போயிருப்பார்கள், கண்டனத் தீர்மானத்தின் கருத்துக்களை வற்புறுத்தினோம். அதன் பிறகு (குறுக்கீடு) நான் கேட்பது அந்தப் பிணங்கள் சார்பாக, தேவராக இருந்தாலும், ஹரிஜன ஏழை மக்களாக இருந்தாலும் சரி, பிணங்களின் சார்பில் கேட்கப்பட்ட நீதி விசாரணை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்கிற குற்றச்சாட்டைச் சொல்லுகின்றேன். வேறொன்றுமில்லை. துப்பாக்கிச் சூடு நடக்கலாம், சந்தர்ப்பங் களைப் பொறுத்து நடக்கலாம். தவறாக நடக்கலாம். அதைக் கேட்டால், அப்படித்தான் சுடுவோம் என்று சொல்லிய ஆட்சி அப்போது இருந்தது, ஐயோ, நடந்துவிட்டதே, நீதி விசாரணை நடத்துவோம் என்கிற ஆட்சி இப்பொழுது இருக்கிறது என்று அந்த வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளவேண்டும் என்று சொன்னேன். வேறில்லை.

போலீஸ் காவலில் இறந்தவர்கள் பற்றியெல்லாம் கூறப்பட்டது. பலமுறை கண்டித்திருக்கிறோம். போலீஸ் லாக்அப்பில் இறந்து போவதை எதிர்க்கட்சியில் இருந்தபோதும், இப்பொழுது ஆளுங்கட்சியில் இருக்கும்போதும், கண்டிக்கிறோம். ஆளும்கட்சியில் வந்தபிறகு போலீஸ் லாக்அப்பில் வைக்கலாம்

என்று அனுமதி கொடுத்து உத்தரவு போடப்பட்டதா? ஒரு பெண் கைது செய்யப்பட்டால், உடனடியாக போலீஸ் லாக்அப்பில் வைக்கக்கூடாது. சப்-ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று போட்டிருக்கும் உத்தரவு பற்றி திரு. சங்கரய்யா பேசும்போது நினைவுபடுத்தினார்கள். ஜமீலா அம்மையார் வழக்கின் காரணமாக போலீஸ் அதிகாரிகள், இப்பொழுது வேலையில் இல்லாமல், சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாயவரத்தில் ராகவன் என்பவர் இறந்தார். உடனடியாக தஞ்சாவூரில் இருக்கின்ற மருத்துவர் பிரேத விசாரணை நடத்தினார். அதற்குப் பிறகு தவறு இருப்பதைக் கண்டு, போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, இந்த அரசு போலீஸ் லாக்அப்பில் இறந்தார்கள் என்றால் போலிக் காரணங்களைச் சொல்லி, தற்கொலை செய்துகொண்டார், அல்லது இயற்கையாகச் செத்துவிட்டார் என்று சொல்லவில்லை. உண்மையிலேயே அவர்கள் இயற்கையாகக்கூட இறந்திருக்கலாம். சில இடங்களில் உண்மையில் கொடுமை இழைக்கப்பட்டிருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சில நேரங்களில் இயற்கையாகக் கூட செத்து விடலாம். சில நேரங்களில் தூக்கு மாட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் எப்படியிருந்தாலும், எடுத்துச் சொல்லப்படும் விஷயங்களில் அலட்சியம் காட்டாமல் உண்மைகளை ஆராய விசாரணை நடத்துகிறது இந்த அரசு. இரண்டு உதாரணங்களை அண்மையில் நடந்தவற்றைச் சொன்னேன். மாயவரத்தில் ராகவன் வழக்கு. தஞ்சாவூரில் ஜமீலா அம்மையார் வழக்கு, ஆக இரண்டும்.

அடுத்து ஆமத்தூர் கொடுமையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல்படி, கடந்த பிப்ரவரி 7-ம் தேதி இரவு 9 மணி அளவில், காட்டுக் கருப்பன் என்ற அரிஜன் கிராமச்சாவடியில் தூங்கிக் கொண்டிருந்தபோது அவர் அரிவாளால் தாக்கிக் கொலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்டதாகக் கருப்பண்ணன், அவரது மகன் அய்யாவு, அவருடைய மனைவி கருப்பாயி ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டனர். ஆனால் குற்றவாளிகள் அல்ல என இராமநாதபுரம் செஷன்ஸ் நீதிபதியால்

விடுவிக்கப்பட்டனர். இறந்தவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களும் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். இறந்தவர் குற்றம் செய்வதையே வழக்கமாகக்கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட குற்றவாளி, இதற்கு முன் 16 முறை தண்டிக்கப்பட்டவர். சாதி இந்துக்கள் வசிக்கும் இடத்தில் வீடு வாங்கியதன் காரணமாக ஆமத்தூரில் எந்த அரிஜனனும் கொலை செய்யப்படவில்லை என இராமநாதபுரம் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் உண்மையான தகவல்கள் இருக்குமானால், எதிர்க்கட்சித் தலைவர் தேடிக் கொடுத்தால், அதுபற்றி விசாரித்து, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, முதலில் சிறிய குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். பெரிய குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் வருகிறேன். சில்லறைக் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் சொல்லிவிடுகிறேன்.

கார்களைப் பற்றிச் சொன்னார்கள், எம்.எல்.ஏ.-க்கள் பரிசு அளிப்பு விழாக்கள் நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொல்லப் பட்டது. எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-களுக்கு இந்தக் கார்கள் பொறுத்தவரையில், சர்க்காருடைய 'அலாட்மெண்ட்' 1967-லிருந்து, 1970 வரையில் சுமார் 159 கார்கள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றில் முன்னேற்றக் கழகத்தினருக்கு சுமார் 100 கார்களும், காங்கிரஸ் காரர்களுக்கு 28 கார்களும், சுதந்தராக் கட்சிக்காரர்களுக்கு 7 கார்களும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு 5 கார்களும், இடது கம்யூனிஸ்டுகளுக்கு 3 கார்களும், தமிழ் அரசுக் கழகத்திற்கு 2 கார்களும், குடியரசுக் கட்சி, கே.பி.எஸ். மணிக்கு ஒரு காரும், வலது கம்யூனிஸ்ட் கட்சி, ஏ. கே. சுப்பையாவிற்கு ஒரு காரும், சுயேச்சைகளுக்கு 5 கார்களும் அலாட் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : எங்கள் கட்சியில் யாரும் கார் வாங்கவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொன்னது 'அலாட்மெண்ட்' தான். இனிமேல் வேண்டுமானால் வாங்காமல் இருங்கள். அதுவேறு.

திரு. வி. கே. கோதண்டராமன் : நீங்கள் சொன்னது வாங்கியிருப்பது, வாங்கியிருப்பது என்று.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இல்லை, அலாட்மெண்ட் எப்படி போடப்பட்டது என்று சொன்னேன். நாங்களேவா வலுவிலே போட்டோம். நீங்கள் கேட்டுத்தானே அலாட்மெண்ட் போடப்படும். கேட்காமல் போடமுடியுமா? கேட்கப்படுகிறது, அதற்கு அலாட்மெண்ட் போடப்படுகிறது.

இன்னொரு குற்றச்சாட்டு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள் அனுமதி பெறாமலே விற்றுவிடுகிறார்கள் என்று. 15 எம்.எல்.ஏ.-க்கள் மறுபடியும் விற்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி வினாயகம்கூட விற்பதற்கு அனுமதி. . . . .

திரு. கே. வினாயகம் : நான் விற்கமாட்டேன் என்று இன்னும் வைத்திருக்கிறேன். வெளியே போய்ப் பாருங்கள் இருக்கிறது. (சிரிப்பு.)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அனுமதி கேட்டிருக்கிறார், ஆகவே அனுமதியில்லாமல் விற்றுவிடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டதால், வினாயகம்கூட அனுமதி கேட்டிருக்கிறார் என்று உங்களைக் காப்பாற்றும் அளவில் சொல்கிறேனே அல்லாமல் வேறில்லை.

திரு. கே. வினாயகம் : அன்பளிப்பு பற்றித்தான் இப்பொழுது கேள்வி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பொதுமக்கள் கொடுத்த பணத்தில் கார்கள் வாங்குகிறார்கள். திருவெறும்பூர் சுவாமிநாதனுக்குக்கூட ஒரு கார் பொதுமக்கள் கொடுத்து, காமராஜ் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களாக வாங்க முடியாதவர்கள், ஏதோ பெரும் பணக்காரர்கள், எம்.எல்.ஏ.-வாக இருக்கிறீர்கள். சொந்தப் பணத்தில் வாங்குகிறீர்கள். எங்கள் தரப்பில் இருக்கிறவர்கள் ஏழை, எளியவர்கள்; ஆகவே, பொதுமக்கள் பணம் வசூலித்துக்கொடுத்து கார் வாங்குகிறார்கள்.

பிறகு அதிகாரிகள் நீண்ட நாளாக ஒரே இடத்தில் இருக்கிறார்கள் என்றார்கள். . . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீண்ட நாளாக சில இடங்களில் இருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் அடிக்கடி மாற்றுகிறார்கள். இதன் காரணமாக அட்மினிஸ்ட்ரேஷன் சரியாக இல்லை, ஒழுங்காக இல்லை என்பது குற்றச்சாட்டு. நீண்ட நாளாக என்று சொல்லிப்போட்டு, 4, 5 பேர்களைப் பிடித்துக் காட்டி விட்டுப்போவது சரியில்லை. சில பேர்கள் அடிக்கடி மாற்றப்படு கிறார்கள். மற்ற இடங்களில் லீவில் போய்வந்தாலும், அந்த இடத்திற்கே போகிறார்கள். அதைச் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரைப்பற்றிச் சொன்னார்கள். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் 4 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டிருக்கிறார். ஒரு காரணம், அங்கே நக்ஸல்பாரி நடவடிக்கை இருப்பதாகக் கண்டு, தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது, அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்ரமிப்பு நடந்திருப்பதால், அதுபற்றி அவர் தகவல் சேகரித்திருப்பதால், இன்னொரு மாவட்ட ஆட்சித் தலைவரைப் போட்டால் இவருடைய அனுபவங்களைப் பெறமுடியாது என்றும் இவரை மாற்றவில்லை. இதுவரையிலும் பதவியில் அங்கேயே வைக்கப்பட்டிருக்கிறார். உங்கள் ஆட்சியில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்த சரித்திரமே கிடையாதா? ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் இருந்திருக்கிறார்கள். திரு. வேதநாராயணன், தஞ்சை மாவட்டத்தில் 62 முதல் 66 வரையில் 4 ஆண்டு காலம் இருந்திருக்கிறார்; திரு. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ். திருச்சியில் 63 முதல் 67 வரையில் கலெக்டராக இருந்திருக்கிறார். திரு. அம்பாசங்கர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 3½ ஆண்டுகள் இருந்திருக்கிறார். திரு. குலாம் முகம்மது பாட்சா திருச்சியில் 4 ஆண்டுகள் இருந்திருக்கிறார். திரு. பிரபாகர், ஐ.ஏ.எஸ். ராமநாதபுரம் - மதுரையில் 4 ஆண்டுகாலம் இருந்திருக்கிறார். இதைத் தவிர, 1960 முதல் 1967 வரையில், காங்கிரஸ் ஆட்சியில், போலீஸ் துறையில் பல அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பதவியில் நீட்டிக்கப்

பட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அப்படியிருந்தவர்கள் 19 அதிகாரிகள்; அவ்வாறு ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்திருக்கிறவர்கள், இந்த ஆட்சியில் நீட்டிக்கப்பட்டிருப் பவர்கள் ஏழு பேர்கள்.

ஆனால் இந்த ஆட்சியில் அப்படி நீட்டிக்கப்பட்டிருப் பவர்கள் 7 பேர்கள்தான். ஆனால் அந்தக் காலஅளவில் ஏறக்குறைய 19 அதிகாரிகள் காங்கிரஸ் ஆட்சியில் ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீட்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகளைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டு ஒன்றும் பிரமாதமானது அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர இது ஏற்றது அல்ல என்பது அவருக்கே தெரியும். பல குற்றச்சாட்டுகளில் இது ஒரு சிறிய குற்றச்சாட்டு என்றுதான் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கருதுவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கூவம் நதித் திட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட, தற்போது வழக்கமாகப் படிக்கும் பத்திரிகையைப் பார்த்துவிட்டுப் பேசியிருக்கிறார். கூவம் சீரமைப்புத் திட்டத்தைப்பற்றி ஒருவர் சொல்லியிருக்கிறார். "இது ஒரு நல்ல திட்டம். 70 ஆண்டுகளுக்கு முன்னால், இன்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர்கள் அந்தத் திட்டத்தை உருவாக்க முனைந்து அது இயலாத திட்டம் என்றோ, என்னவோ அதை விட்டுவிட்டார்கள். 1958-ல் நாடு சுதந்திரம் அடைந்து 11 ஆண்டுகளுக்குப் பின்னால், இந்தத் திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று 114 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டு 1962-ல் செயல்படக்கூடிய திட்டம் என்று ஆகி, பிறகு 1968-69-ல் தொடங்கப்பட்டுள்ளது என்றும் இதனுடைய வரலாற்றைப்பற்றி தலைமைப் பொறியாளர் கூறினார்கள். இது ஒரு நல்ல திட்டம், நிறைவேற்றப்பட வேண்டும்", என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மேலவையில் கூறியிருக்கிறார்கள். இதைத்தான் 'மணக்கிறது, மணக்கிறது' கூவம் மணக்கிறது என்று நாம் சொன்னோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சற்று அழுத்தமாகவும் குத்தலாகவும் 'கூவம் மணக்கிறது, மணக்கிறது' என்று

சொன்னார்கள். அது பலருடைய மூக்கைப் பொறுத்த விஷயம். (சிரிப்பு). கூவத்திலுள்ள பழைய நாற்றம் அப்படியே இருக்க வேண்டுமென்று யாராவது சொல்வார்களா? கூவம் நதியை சீர்திருத்தம் செய்ய வேண்டுமா, வேண்டாமா? கூவம் நதியிலே ஆண்டாண்டுக் காலமாக குடியிருந்த கொசுக்கள்தாம் இந்தச் சீர்திருத்தத்தை வேண்டாமென்று சொல்லும். அடுத்தபடியாக 'கூவம் நதித் திட்டத்திலே ஊழல். வீராணம் திட்டத்திலே ஊழல், எங்கும் ஊழல், எதிலும் ஊழல், ஃபைல்களைக் கொண்டு வா', என்றெல்லாம் பேசினார்கள். கூவம் நதித் திட்டத்தைப்பற்றி வந்திருக்கின்ற குற்றச்சாட்டுக்களை பத்திரிகைகளில் மிகப் பயங்கரமாக எழுதுகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட அதைப் பார்த்துவிட்டுத்தான் இப்படிப் பேசியிருக்கிறார் என்று கருதுகிறேன்.

'மிகப் பயங்கரமான ஊழல் நாற்றமெடுக்கும் கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கைவிட்டுவிட திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. இதற்கு முன் உதாரணமாக வரும் ஜனவரி வரையில் கூவம் வேலையைக் கைவிட்டுவிட அரசு உத்தரவு அனுப்பியுள்ளது. 1 கோடியே 36 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் என்று கூறி, பின் 2 கோடி ரூபாய் வரையில் நீளும் என்ற நிலையிலுள்ள சென்னை-கூவம் சீரமைப்புத் திட்டம் என்பது ஒரு மாபெரும் ஊழல் களஞ்சியமாகும்', என்று ஒரு பத்திரிகை எழுதியதை வைத்து டாக்டர் ஹாண்டே பேசுவது முறையல்ல, கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கைவிட்டுவிட அரசு முடிவு எடுத்துள்ளதாகச் சொல்வது உண்மையல்ல.

எடுத்துக்கொண்ட வேலைகள் தீட்டிய திட்டப் பிரகாரம் செவ்வனே நல்ல கண்காணிப்புடன் நடந்துகொண்டிருக்கின்றன. வரும் ஜனவரி வரையில் கூவம் வேலையைக் கைவிட அரசு உத்தரவு அனுப்பியுள்ளது என்று சொல்வது சரியல்ல. திட்டத்தின் மதிப்பீடு 1 கோடியே 10 இலட்சம் ரூபாய், இது 2 கோடி ரூபாய் வரையில் நீளும் என்று சொல்வதும் உண்மையல்ல, இப்பொழுது கூட 500, 600 வேலையாட்கள் மும்முரமாக கூவம் ஆற்றில் வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள். மழை பெய்ததன்

காரணமாக இரண்டொரு இடங்களில் கரைகளில் போடப்பட்டிருந்த ஸ்லாப்கள் விழுந்துவிட்டன. இரண்டொரு இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. இதற்கு 2 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் வரையில் செலவாகியிருக்கிறது என்று தவறான பிரசாரம் செய்கிறார்கள். நாம் போட்ட திட்டம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய். நாம் இதுவரைக்கும் செலவு செய்தது 81 லட்சம்தான். கூவம் ஊழல், கூவம் ஊழல் என்று சொன்னது அவர்களுடைய அரசியல் பேச்சுக்கு உதாரணமாக இருக்கும் என்பதைத்தவிர வேறென்ன சொல்வது?

கூவம் திட்டத்தினைப் பற்றி இப்படிப் பேசுகிறார்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் என்னவாயிற்று? 1959-ம் ஆண்டு 89 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் தேக்கம் கட்டப்பட்டது. 1966-ம் ஆண்டு பெய்த மழையில் அது உடைந்து, மேற்கொண்டு 22 இலட்சம் ரூபாய் செலவிட்டு புதுப்பிக்கப்பட்டது. அது உடைந்ததால் 20 ஏக்கர், 30 ஏக்கர் வரையிலும் மணல் மேடிட்டுப்போன காரணத்தினால் அந்த நிலங்களின் சொந்தக்காரர்களுக்கெல்லாம், இந்தப் புதிய அரசு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை நஷ்ட ஈடாக கொடுத்திருக்கிறது. அதைப்போல, கூவத்தில் எங்கேயோ மழையினால் இரண்டு காங்கிரீட் ஸ்லாப்ஸ் சரிந்துவிட்டதற்கு, கூவம் நாற்றம் அடிக்கிறது என்கிறார்கள். நாம் சில திட்டங்கள் போடுகிறோம். சில நேரங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. அதற்காக திட்டமே ஊழல், ஊழல் என்று பேசுவது முறையல்ல. வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் ஐந்தாறு ஆண்டுகளுக்குக்கூட நீடிக்காமல் போய் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, வீடூர் நீர்த் தேக்கம் உடைந்தது, திட்டத்தில் ஏற்பட்ட குறையின் காரணமாக அல்ல, அதை சூபர்வைஸ் செய்த என்ஜினியர் செய்த தவறின் காரணமாகத்தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு.)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அடுத்த படியாக, வீராணம் திட்டத்தைப்பற்றி திரு. கே. வினாயகம் அவர்கள் காரசாரமாகப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு

திரு. சாதிக் பாட்சா அவர்கள் பதில் சொன்னார்கள். வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில், சாட்டப்பட்ட குற்றச்சாட்டு களுக்கு நாங்கள் தருகின்ற பதில் இந்த மாமன்றத்திற்குப் பயன் உள்ளவையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மூன்று நிறுவனங்கள் சுழற்சி முறையில் செய்யப்பட்ட பிரிஸ்டெரஸ்ட் கான்கிரீட் குழாய்களையே தாங்கள் பயன்படுத்து வதாக டெண்டரில் குறிப்பிட்டிருந்தன. இந்த முறையில் தயாரிக்கப்பட்ட கான்கிரீட் குழாய்கள்தான் உறுதியானவை என்பதும், நீடித்து உழைக்கக்கூடியவை என்பதும், நீர் அழுத்தத்தால் விரைவில் கெட்டுப்போகாதவை என்பதும் உலகறிந்த உண்மைகள். உலகெங்கும் இம்மாதிரியான நீர் கொண்டுவரும் திட்டத்திற்கு சுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட கான்கிரீட் குழாய்களைத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, கிடைக்கப்பட்ட டெண்டர்களில் மூன்று நிறுவனங்கள் கிடைநூற்றல் முறையையும், மற்ற இரண்டு நிறுவனங்கள் செங்குத்தாக வார்க்கும் முறையையும் பின்பற்றி குழாய்கள் தயாரிக்கின்றன. சூன்யமுறை கான்கிரீட்டை தண்ணீரை உறிஞ்சுவதற்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள். இரண்டு பக்கமும் தகடு இருக்கும், உள்ளே சூன்யமாக இருக்கும். அப்படி பல பேர் எழுதியிருக்கிறார்கள். தண்ணீரை சிமெண்ட் பைப்பிலிருந்து உறிஞ்சி விடுவதற்கு, காய வைப்பதற்குப் பதிலாக இது இருக்கும். இந்த வெற்றிடமுறை தண்ணீரை உறிஞ்சுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இது சூன்ய முறையாக இருப்பதால்தான் இதற்கு 'வேக்குவம்' என்று பெயரிட்டார்களேயொழிய, வேறு விதத்தில் இந்தக் குழாய்கள் தயாரிப்பதில் எந்த வித்தியாசமும் கிடையாது. அப்படி தண்ணீரை உறிஞ்சுவதினால் சீக்கிரமாக குழாய்களை அவற்றின் வார்ப்படங்களிலிருந்து எடுத்துவிடலாம் என்றும், அப்படித் தயார்செய்யப்பட்ட குழாய்கள் 11 சதவிகிதத்திலிருந்து 48 சதவிகிதம் கூடுதலாக உறுதியானவை என்றும் செய்முறையினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் சுழற்சி முறையில் தயார் செய்யப்பட்ட குழாய்கள்தான் உறுதியானவை, நீடித்து உழைக்கக்கூடியவை, உலகெங்கும் இம்மாதிரியான குழாய்களைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது.

"வேக்குவம்" முறையும் கையாண்டு தயாரித்த குழாய்களும் நீர் கொண்டுவரும் திட்டங்களில் ஏராளமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஈரானிலும், சார்டினியாவிலும், கிரேக்க நாட்டிலும் இப்பேர்ப்பட்ட குழாய்களை அநேக வருடங்களாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இன்றைக்கும் நமக்கு வேண்டிய குழாய்களைவிட பெரிய விட்டமுள்ள குழாய்கள் டெஹ்ரானிலும், சார்டினியாவிலும் இந்த முறையையொட்டித் தயார்செய்து உபயோகிக்கிறார்கள். பெரிய விட்டமுள்ள குழாய்கள் தயாரிக்க மேலே சொல்லப்பட்ட செங்குத்தான முறையையே கையாளவேண்டும் என்பது நிபுணர்களது கருத்து. இரண்டு விதங்களையும், பயன்படுத்தலாம், அவைகளில் வித்தியாசம் ஒன்றுமில்லை. இரண்டு விதத்திலும் தயார்செய்த குழாய்கள் திருப்திகரமானவையே என்கிற உண்மை வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்திலிருந்து தெரிகிறது.

அடுத்த குற்றச்சாட்டு என்னவென்றால், மற்ற நிறுவனங் களுக்கு எவ்வளவு தொகைக்கு டெண்டர் கொடுத்தார்கள்? அவை ஏற்கப்படாத காரணம் என்ன? ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்களுக்கும், நிராகரிக்கப்பட்ட டெண்டர்களுக்கும் தொகையில் இருந்த வித்தியாசம் என்ன? என்று கேட்டார்கள். இதையெல்லாம் வெளியிடவேண்டுமென்ற அவசியம் இல்லை. அதற்கு பதில் நாம் ஏற்றுக்கொண்டுள்ள டெண்டர் அதற்கு அடுத்துள்ள டெண்டரைவிட ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு லட்சம் குறைந்தது. இது மிகமிகக் கணிசமான தொகை. குறைந்த தொகையைக் கேட்டுள்ள காண்ட்ராக்டர்கள் தயார் செய்யப்போகும் குழாய்கள் தரத்திலும் வலுவிலும் உயர்ந்தவை, நீடித்து உழைக்கக்கூடியவை. இதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். இதை நிரூபிக்க ரோமாபுரியிலிருந்தும் டெஹ்ரானிலிருந்தும் நற்சான்றுகள் கிடைக்கப்பெற்றன. அயல்நாடுகளுக்குச் சென்று திரும்பிய நமது குழுவும் இதைப்பற்றிப் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள்.

அதற்கடுத்த குற்றச்சாட்டு, "குறைவான டெண்டர் கொடுத்தவர்களிடம் மட்டும்தான் அரசாங்கம் பேச்சுவார்த்தையே

நடத்தியதாகச் சொல்லப்படுவது. அதிகத் தொகைக்கு டெண்டர் கொடுத்தவர்கள் உபயோகிப்பதாகச் சொன்ன சுழற்சிக் குழாய்கள் தரம் பற்றியும் நீடித்த உழைப்பு பற்றியும் அரசு அக்கறை காட்டவில்லை" என்பதாகும்.

இதற்குப் பதில் குறைவான டெண்டர் கொடுத்த வர்களோடுதான் அவர்களின் டெண்டரைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பது விதிமுறைகளில் தலையாயது. குறைவான டெண்டர் நிராகரிக்கும் வரையில் மற்ற டெண்டர் கொடுத்தவர்களோடு எந்தவிதமான பேச்சுவார்த்தை வைத்துக்கொள்வது ஆட்சேபகரமானது. ஒழுங்குமுறைக்குப் புறம்பானது. நாம் கடைக்கொண்ட முறையில் பரிசீலனை செய்த விதத்தில் யாதொருவிதமான தவறும் இல்லை.

அடுத்த குற்றச்சாட்டு "குறைவான டெண்டர் கொடுத்தவர் களோடு அரசு பேரம் நடத்தியபோது நூற்று எண்பது இலட்சம் ரூபாய்க்கான அந்நியச் செலாவணியை நூற்று இருபது லட்சமாகக் குறைத்துக்கொள்ள அந்த டெண்டர் கொடுத்தவர்கள் சம்மதித் தார்களாம். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை போட்டார்களாம். பதினைந்து கோடியே 60 லட்சத்துக்கான தங்களுடைய டெண்டர் தொகையில் மேலும் தொண்ணூறு லட்சத்தை உயர்த்திக்கொடுக்க அரசு ஒப்புக்கொண்டால், அந்நியச் செலாவாணித் தேவையினை நூற்று இருபது லட்சமாகக் குறைத்துக்கொள்ளச் சம்மதித்தார் களாம்" என்பதாகும்.

இது உண்மைதான். குறைவான டெண்டர் கொடுத்த திருவாளர்கள் சத்தியநாராயணா பிரதர்ஸ் ரூபாய் 181 லட்சம் அந்நியச் செலாவணி கேட்டிருந்தார்கள். குழாய்களும், ரப்பர் வளையங்களும், வார்ப்படங்களும் தயார் செய்வதற்கு வேண்டிய தளவாடங்களும் யந்திரங்களும் இவைகளைத் தயார் செய்யக்கூடிய பொறியியல் நிபுணர்களையும் அந்நிய நாடு களிலிருந்து கொண்டுவருவதற்கு வேண்டி இந்தத் தொகையைக் கேட்டிருந்தார்கள். மத்திய அரசு நமது வீராணம் குடிநீர் திட்டத்திற்கு அனுமதி அளிக்கின்ற சமயத்தில், நமது திட்டம் நிறைவேறுவதற்கு வேண்டிய அந்நியச் செலாவணி எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும்

என்றும், அப்படிக் குறைக்கின்ற சமயத்தில் டெண்டர் தொகை 25 சதவிகிதம் வரைக்கும் கூடுதலானாலும் ஒத்துக்கொள்ளலாம் என்கிற ஒரு நிபந்தனை குறிப்பிட்டிருந்தார்கள். ஆகையினால்தான் குறைந்த டெண்டர் கொடுத்த திருவாளர்கள் சத்தியநாராயணா பிரதர்ஸ் அவர்களை தாங்கள் கோரி இருக்கிற அந்நியச் செலாவணித் தொகையை குறைக்க வேண்டும் என்று கேட்க, அவர்கள் பரிசீலனைசெய்து அந்நியச் செலாவணியை 120 லட்சமாகக் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால் இந்தத் தொகைக்குப் பதிலாக ரூபாய் 90 இலட்சம் கூடுதலாகக் கொடுக்கவேண்டும் என்று கோரினார்கள். அதற்கு அவர்கள் கொடுத்த காரணங்கள் தாங்கள் அமைக்கப்போகும் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய இரும்பு சாமான்களும், தளவாடங்களும், இயந்திரங்களும், லாரி, டிராக்டர் போன்ற ஊர்திகளும் மேல் நாட்டிலிருந்து கொண்டுவருவதற்காக ரூபாய் 181 லட்சம் கோரி இருந்ததாகவும், அதற்குப் பதிலாக நமது நாட்டிலேயே முடிந்த வரைக்கும் மேலே சொல்லப்பட்ட இனங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்போவதாகவும், அதனால் கூடுதலாக நிதி செலவாகும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இரும்பு எஃகு சாமான்கள் வெளி நாட்டிலிருந்து கொண்டு வருவதற்கும், நமது நாட்டிலேயே வாங்குவதிலும் விலையில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது என்பது சந்தேகமேயில்லை. உதாரணமாக எஃகு கம்பிகள் நமது நாட்டிலேயே வாங்கினால் டன் ஒன்றுக்கு ரூபாய் 4,000 ஆகும். இந்த விலைக்கும் நமக்கு வேண்டிய அளவுக்கு எஃகுக் கம்பிகள் கிடைப்பதில்லை. வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பெற்றால் விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 1,800 ஆகும். இதைப் போலவே எஃகுத் தகடுகளும் இதர சாமான்களும் உள்நாட்டிலிருந்தே வாங்கவேண்டுமென்றால் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவேதான் அவர்கள் டெண்டர் தொகை 90 இலட்சம் கூடுதலாகக் கேட்பதை ஒப்புக்கொண்டோம். அதே நேரத்தில் அவர்கள் அந்நியச் செலாவணியில் ரூபாய் 60 லட்சம் குறைத்துக் கொண்டது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

மற்ற டெண்டர் கொடுத்த நிறுவனங்கள் எவ்வளவு அந்நியச் செலாவணி கேட்டார்கள், அவர்கள் டெண்டர் தொகை

எவ்வளவு என்று கேட்கப்பட்டது, அந்த விவரங்களையும் நான் இப்போது கொடுத்துவிட விரும்புகிறேன்.

இந்திய ஹூம் பைப் நிறுவனம் கொடுத்த டெண்டர் தொகை ரூ. 17,79,17,785. அவர்கள் கேட்ட அந்நியச் செலாவணி ரூ. 86 இலட்சம்.

கேரளா ப்ரேமா பைப் நிறுவனம் கொடுத்த டெண்டர் ரூ. 18,57,47,674. அந்நியச் செலாவணி ஏதுமில்லை.

சத்தியநாராயணா பிரதர்ஸ் ரூ. 16,55,87,300-க்கு டெண்டர் கொடுத்தார்கள். இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ. 1,20,00,000.

தாராப்பூர் அண்டு கம்பெனி கொடுத்த டெண்டர் ரூ. 18,60,07,009. இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ. 1,50,00,000.

யூனிவர்சல் பைபிங் கன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்த டெண்டர் ரூ. 21,02,24,327. இவர்கள் கோரிய அந்நியச் செலாவணி ரூ. 80,95,374.

நீலகண்டன் ப்ரதர்ஸ் ரூ. 23,03,94,156-க்கு டெண்டர் கொடுத்தார்கள். அந்நியச் செலாவணி ஏதும் கோரவில்லை.

எஞ்சினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் கொடுத்த டெண்டர் ரூ. 12,64,85,844 இவர்கள் ஸ்டீல் எஃகு தகடு விலை தவிர குழாய்கள் மட்டும் என்பதற்கு ரூ. 40,00,000 அந்நியச் செலாவணி கோரினார்கள்.

ஸ்டுவர்ட்ஸ் அண்டு லாயிட்ஸ் கொடுத்த டெண்டர் ரூ. 52,44,000 ஆகும். வளைவுகள் மாத்திரம்தான் இவர்கள் கொடுத்தது. அந்நியச் செலாவணி ஏதும் இல்லை. இவற்றை எல்லாம் கேட்ட பிறகு நீங்களே நாங்கள் எந்த டெண்டரைத் தேர்ந்தெடுத்திருக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்த குற்றச்சாட்டு குறைந்த டெண்டர் கொடுத்தவர் களுக்கும் அதைவிட அதிகமான டெண்டர் கொடுத்தவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத் தொகை சில லட்சங்கள்தான் என்பது.

முன்பே நான் சொன்னேன். அது சரியல்ல. 1¼ கோடி வித்தியாசம் இருந்திருக்கிறது. இது கணிசமான தொகை. மேலும் வாக்குவம் குழாய்கள் உறுதியானவை என்பதற்குப் போதுமான நற்சான்றிதழ்கள் இருக்கின்றன என்று சொன்னேன்.

அடுத்து, முற்றிலும் புதியதான ஒருவருக்கு இந்த காண்டிராக்டை விடுவானேன் என்று கேட்கப்படுகிறது. சத்தியநாராயணா பிரதர்ஸ் எங்களுக்கு ஒன்றும் வேண்டியவர் அல்ல. மேலும் புதியவரும் அல்ல. பழைய காங்கிரஸ் ஆட்சியிலேயே பலதரப்பட்ட க்வார்ட்டர்ஸ் ஆவடியில் கட்டுவதற்காக 6 கோடி ரூபாய் செலவில் அவருக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்மால் ஆர்ம்ஸ் பிராஜக்ட் கட்டுவதற்கு ரூ. 50 லட்சத்தில் ஒரு வேலை, ராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை கட்ட ரூ. 50 லட்சம், சென்னை, திருச்சியில் தானியக் கிடங்கு கட்ட ரூ. 1¼ கோடி இப்படி 45 வேலைகள் சுமார் 21 கோடி ரூபாய்க்கு பழைய ஆட்சியிலேயே கொடுக்கப்பட்டு, இவர்கள் அந்த வேலைகளை எல்லாம் முடித்திருக்கிறார்கள்.

சத்தியநாராயணா பிரதர்ஸ் கொடுத்த டெண்டர் ரூ. 16½ கோடியாக இருக்க தாராப்பூர் அண்டு கம்பெனி கொடுத்த டெண்டர் ரூ. 18½ கோடிக்கு மேல் இருந்தாலும் அவர்களுக்குக் கொடுத்திருந்தால், அப்போது என்ன சொல்வீர்கள்? எதற்காக தாராப்பூர் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது? இவரைவிடக் குறைந்த டெண்டர் கொடுத்தவர் இல்லையா? இந்த தாராப்பூர் கம்பெனி முன்பே சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதாக ஜட்ஜ்மெண்டு வழங்கப்பட்டிருப்பது தெரியாதா என்றெல்லாம் கேட்பீர்கள். குற்றம் சாட்டுவீர்கள்.

ஆகவேதான் குறைந்த டெண்டர் எதுவோ அதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவரும் முன்பே பல வேலைகளை எடுத்து முடித்துக்கொடுத்திருக்கிற திறமை வாய்ந்தவர்கள்தான். எங்களுக்கும் அவருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்படி பொதுவாகக் கூறப்பட்ட பெரிய குற்றச்சாட்டு களுக்கு எல்லாம் நான் விளக்கம் தந்திருக்கிறேன். மற்றவற்றுக்கு அவ்வப்போது அமைச்சர்கள் எடுத்துக் கூறினார்கள்.

தொழிலாளர்களுக்குரிய சாதனைகளைப் பற்றி திரு. சங்கரய்யா பேசினார்கள். அவர்களது பேச்சில் பெரும்பகுதி போலீஸ் துறையைப் பற்றிய கண்டனம் இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் கொள்கை சரியாக இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு வேலை வாய்ப்பை அளிப்பதில் 1969-ம் ஆண்டில் மின்வாரியம், பொதுப்பணித் துறை ஆகியவற்றில் 430 பேருக்கு வேலைகள் அளித்திருக்கிறது. 1967-ம் ஆண்டில் 44,875 பேர்களுக்கும், 1968-இல் 41,581 பேர்களுக்கும், 1969-இல் 42,770 பேர்களுக்கும் தொழில் தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலம் வேலைகள் வாங்கித்தரப்பட்டு இருக்கின்றன. இவர்களில் 5,024 பேர்கள் டிப்ளமா பெற்றவர்கள்; 2,315 பேர் எஞ்சீனியரிங் பட்டதாரிகள். 3,739 பேர் சிறுதொழில் கற்றவர்கள்.

தொழில்துறையில் மூடப்பட்டிருந்த 35 ஆலைகளில், 17 ஆலைகளை இந்த அரசு 1969-ஆம் ஆண்டில் மீண்டும் திறந்துள்ளது. இதில் நான்கு ஆலைகளை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமே மேற்கொண்டுள்ளது. இதனால் பத்தாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி கிட்டியுள்ளது என்பதில் இருந்தே திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்கள் அரசுதான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்' என்பதும், தொழிலாளர், அரசு, தொழில் அதிபர்கள் பேச்சுவார்த்தை மூலம் குறைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதும்தான் இந்த அரசின் கொள்கையாகும்.

இது தொழிலாளர்களுடைய அரசு என்பதற்கு அடையாளமாக மே தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று ஊதியத்துடன் கூடிய கட்டாய விடுமுறை நாளாகச் செய்து இருப்பது இந்த திராவிட முன்னேற்றக்கழக அரசு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தொழிலாளர் கிளர்ச்சிகளை அரசு அடக்குவதாக திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த அரசு முதலாளிகளின் பக்கம் போகிற அரசு என்றும் குறிப் பிட்டார்கள்.

பஸ் முதலாளிகள் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தவுடனே இந்த அரசு அவர்கள் பக்கம்போய் "நீங்கள் சொல்கிறபடியே ஆகட்டும், உங்கள் கோரிக்கைக்கு இணங்குகிறோம்" என்று சொல்லவில்லை. அவசரச் சட்டம் போட்டு அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடியாது செய்ததில் இருந்தே இந்த அரசு முதலாளிகளின் பக்கம் கூட்டுப் போகவில்லை என்பதை திரு. சங்கரய்யா அவர்களே தம் மனச்சாட்சிப்படி உணர்வார்கள் என்பதை அவரிடத்தில் நான் கொண்டிருக்கிற நட்பு உரிமை காரணமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில்துறையைப் பொறுத்தவரை இந்த அரசு வைதிக மனப்பான்மையைக் காட்டவில்லை. தொழில் வளம் பெருக வேண்டும். தனியார் முதலீடு செய்கிறார்கள், அரசு முதலீடு செய்கிறது. இரண்டும் இணைந்த ஜாயிண்ட் செக்டார் வேண்டுமென்று விரும்புகிறோம். இதைச் சொன்னால் நாங்கள் எங்கோ உள்ள தொழில் அதிபர்களை அழைப்பதாக – மாதவன் வடநாடு சென்று தொழில் அதிபர்களோடு குலாவுகிறார் என்பதாகக் கூறுகிறார்கள்.

திரு. சங்கரய்யா அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களது கட்சியைச் சேர்ந்த இ.எம்.எஸ். அவர்கள் அவர்களது மாநிலத்திலே வந்து தொழில் ஆரம்பிக்க பிர்லாவை அழைத்திருக்கிறார். பிர்லாவை இ.எம்.எஸ். அழைத்தார் என்றால் தன் மாநிலத்தில் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக. ஒரே கொள்கையில் பிடிவாதமாக இல்லாமல் மாநிலத்தில் தொழில் பெருக வேண்டும், மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று செய்கிற முயற்சிகளை நாம் கேலி செய்யவோ, கிண்டல் செய்யவோ அவசியம் இல்லை. அதுபோன்ற முயற்சிகள் பாராட்டப்படத்தான் வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதுமாத்திரமல்ல. கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவிலிருந்து பியட் கார் தொழிற்சாலையை ஆரம்பிக்க அழைப்பு. பொது வுடைமைப்பற்றி பேசுகிற ரஷ்ய நாட்டிலேகூட இன்றைக்கு ஒரு தனிப்பட்ட பியட் கார் கம்பெனியைத்தான் அழைத்திருக்கிறார்கள். ஆக அங்கே ஒரு தனியார் துறையின் மூலம்தான் பியட் கார் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசு விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை, மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, என்.ஜி.ஓ.-க்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாலே பேசிய அவர்களைச் சார்ந்தவர்களும் கேட்டார்கள். அதிக விவரங்கள் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தால் சில விவரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967-68-ல் 57.6 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி இடையில் ஏற்பட்ட பயங்கர வறட்சிக்குப் பிறகு 1969-70-ல் 63.62 டன் உணவு அதிகமாக உற்பத்தியாகி இருக்கிறது. அதன் காரணமாக உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்து இருக்கிறோம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார்கள்? இது ஒரு அரசியல் ஸ்டன்ட், இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு மீண்டும் கொண்டுவந்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். நானும் சொன்னேன். அவசியம் ஏற்பட்டால் மீண்டும் வர வேண்டும் என்று சொன்னால் கௌரவப் பிரச்சினையைப் பார்க்காமல் மீண்டும் கொண்டு வந்து விடுவோம் என்று சொன்னேன். கடவுள் கிருபையால் அத்தகைய நிலை ஏற்படவில்லை. (கே. வினாயகம் : உங்களுக்கு அதில் நம்பிக்கை இருக்கிறதா?) பயப்படவேண்டாம் கடவுள் உங்கள் பக்கத்தைவிட்டு வெளியே போய் ரொம்ப நாள் ஆகிறது. கடவுளை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோமா என்பது பிரச்சினை இல்லை. நம்மைக்கடவுள் ஏற்றுக்கொள்ளுகிறாரா என்பதுதான் பிரச்சினை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது கடவுள் பிரச்சினை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கடவுள் ஏற்றுக் கொள்ளுகிற வகையில் நாங்கள் காரியங்களைச் செய்கிறோம்.

உங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை 1967-லேயே பார்த்தோம்.

நிலவள வங்கிகள் மூலம், முன்னைவிட அதிகக் கடன் உதவி கொடுக்கப்படுகிறது. மேலும், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களின் மூலம் சிறு சிறு நிலச்சுவான்தார்கள், கொஞ்சம் கொஞ்சமாக நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் கூட்டுறவு முறையில் அவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. வறட்சி நேரத்திலும் சுமார் 18 கோடி ரூபாய் செலவு செய்ததன் மூலம் 13,400 சிறிய, பெரிய நீர்ப்பாசன ஏரிகளும், அவற்றைச் சேர்ந்த கால்வாய்களும் தூர் எடுக்கப்பட்டன. 5,500 சாலை வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. 683 மண் வளப்பாதுகாப்பு வேலைகள், 821 குடி மராமத்து வேலைகள், மாநிலம் முழுவதிலும் 34,625 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டதோடு, புதிய கிணறுகளும் தோண்டப்பட்டன. அதே சமயத்தில் ஒரே நேரத்தில் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

வினாயகம் அவர்கள் மாணவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். மாணவர்கள் - தொழிலாளர்கள் கிளர்ச்சியின்போது மாணவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நஷ்டஈடு தரப்பட்டது. முதல் ஆண்டு பி.எல்., தேர்வு பெறாவிட்டாலும் இரண்டாவது ஆண்டு தொடர்ந்து படிக்க அனுமதிக்க வேண்டும் என்று சட்டக்கல்லூரி மாணவர்கள் எழுப்பிய கோரிக்கையை ஏற்றுக்கொள்வதில் இந்த அரசு எந்தவிதத் தடையும் செய்யவில்லை. எந்தவிதமான தயக்கமும் காட்டவில்லை.

நேற்றைய முன்தினம் ஹவுஸ் சர்ஜன்களுடைய பிரச்சினைகளையும், அவர்களோடு ஒரு மணி நேரத்திற்கு மேல் உரையாடி, அவர்களுடைய கோரிக்கைகளும் கூடுமான வரையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கோரிக்கைகளும் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று ஆக்கியிருக்கிறோம். பின்தங்கிய மாணவர்களுக்கு 50 சதவிகிதம் மார்க்கு வாங்கினால்தான் உதவிப்பணம் மற்ற ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்பதை மாற்றி, 45 சதவிகிதம் மார்க்கு வாங்கினாலே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்று ஆக்கியிருக் கிறோம். அதைப்போலவே மிகவும் பின்தங்கிய வகுப்பில் உள்ளவர்களுக்கு 45 சதவிகிதம் என்று இருந்ததை 40 சதவிகிதம் என்று மாற்றியிருக்கிறோம். இதனால் அரசுக்கு 2 கோடி ரூபாய் அதிகச் செலவாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அகவிலைப்படி மற்றவர்களுக்கு அளிக்கப்படும்போதெல்லாம் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. நகர ஈட்டுப் படித் திட்டம் மானியம் பெற்றுவரும் பள்ளியாசிரியர்களுக்கும் நீட்டிக்கப் பட்டிருக்கிறது. அவ்வப்போது அளிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி உள்ளாட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மானியம் பெறும் பள்ளியாசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு பெற வசதி அளிக்கப்பட்டுள்ளது. நிலையான பதவியில் உள்ள ஆசிரியர் ஒருவர் ஈட்டிய விடுப்பு பெறும் வகையில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் இல்லாத சலுகை இது.

ஒவ்வோர் ஆண்டும், ஹையர் கிரேடு பதவிகளை செகண்டரி கிரேடு பதவிகளாக மாற்றி வேலை வாய்ப்பை அதிகரித்திருக்கிறது. 1967-68-ல் 5,000 ஆசிரியர்களுக்கும் 1968-69-ல் 3,000 ஆசிரியர்களுக்கும் 1969-70-ல் 3,000 ஆசிரியர்களுக்கும் இந்தப் பயன் கிட்டியுள்ளது.

ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கும் விஷயத்தில் 1955-ம் ஆண்டிலிருந்து ஒரு தேதி நிர்ணயித்து, முன்பிருந்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதற்குப்பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு மாத்திரமே இந்த ஊதியம் உண்டு என்றிருந்தது. இதனால் அந்தத் தேதிக்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் பாதிக்கப்படுவர். அந்தத் துயரைத் துடைக்கும் வகையில் புதிய அரசு 1968-ம் ஆண்டு, 1955-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத்திட்டம் என்று வரையறுத்தது.

குடும்பப் பென்ஷன் திட்டம் 1-4-1969-க்கு பிறகு தனியார்துறைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. பி.டி. ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இவர்கள் மேல் படிப்புப் படித்து, பி.ஏ., பி.டி., எம்.ஏ., எம்.லிட். போன்ற பட்டங்கள் பெற்றால், அவர்களுக்கு இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமெண்ட் கொடுக்கும் திட்டம் இன்றைய புதிய அரசில் அமலுக்கு வந்துள்ளது.

அதைப்போலவேதான் என்.ஜி.ஓ.-க்களுக்கு நகர ஈட்டுப் படியை அரசு வழங்கியுள்ளது. சம்பள ஆணைக்குழு ஒன்றை நியமித்தது.

அரசுப் பணியாளர்களின் இரகசியக் குறிப்பேடு முறையை மாற்றி பகிரங்கக் குறிப்பேடு முறையை அமல்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அரசுப் பணியாளரது மகன், மகள் ஆகியோரது திருமணங்களுக்கென அரசுப் பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கும் திட்டம் ஒன்றை அமலாக்கியுள்ளது.

அரசுப் பணியாளர்கள் மேற்கொண்டும் சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளில் படிப்பதற்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து தொகை பெறுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

மாதம் ரூ. 250க்கு மேற்பட்டு சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களுக்குப் பட்டினப்பாக்கம், பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பில் அரசு வாடகை வீட்டு மனைகளைக் கட்டியுள்ளது.

கீழ்நிலை எழுத்தர்கள் விரும்பியவாறு அவர்களது பதவிப் பெயரை இளநிலை உதவியாளர்கள் என மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

போலீசார் நலனுக்கென போலீஸ் ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

பின்தங்கியோர் நலன்களை அறிய ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

1972-ஆம் ஆண்டுக்குள் மின்னொளி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று தீவிரமாகத் திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது.

குடி தண்ணீர்த் திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும் திட்டத்தை மேற்கொண்டு அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதுமட்டுமல்ல, எங்களுடைய கட்சிக்கு கழகத்திற்கு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தியாகிகளுக்கு, 1966-ஆம் ஆண்டில், காங்கிரஸ் ஆட்சியிலிருந்த நேரத்தில், தியாகிகளுக்கு 50 ரூபாய் மாதம்தோறும் உதவியளிக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டு வந்தார்கள். பிறகு ஆட்சிக்கு வந்த நாங்கள், இது கூடாது என்று எண்ணியிருந்தால், கழகத்திலிருந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குச் சென்றவர்களுக்குத்தான் இது தரப்பட வேண்டுமென்று எண்ணியிருந்தால், அந்தச் சட்டத்தை மாற்றி புதுச்சட்டத்தைப் போட்டிருக்கலாம்.

ஆனால், அறிஞர் அண்ணாவின் பரம்பரையிலே வந்த நாங்கள், அப்படி எண்ணத்துணியாது, 1966-ம் ஆண்டில் தியாகிகளுக்குக் கொடுத்த மொத்த ரூபாய் 3,057. அதாவது ஒரு ஆண்டில் 107 பேருக்குத்தான் தியாகிகள் பணம் கொடுக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 1967-68-ல் 11 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி, 1968-69-ல் 24 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் என்று உயர்ந்து, 1969-70-ல் 32 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. 1970-71-ல் 35 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதைப் பற்றி மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறது. ஆக, ஓராண்டுக் காலத்தில், 107 பேர்களுக்குத் தான், காங்கிரஸ் ஆண்ட காலத்திலே காங்கிரஸ் தியாகிகளுக்கு 50 ரூபாய் தரப்பட்டது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 6,002 காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் உதவித்தொகையாக அளிக்கப்பட்டு, அவர் அது போதாது என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்டு, 250 ரூபாய் தரவேண்டுமென்று கேட்டு, அதுவும் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

இதேபோன்று பரலி நெல்லையப்பர் அவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி வருகிறோம்.

அது மட்டுமல்ல, கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த 5 குடும்பத்தினர்களுக்கு உதவி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். கட்டபொம்மன் சிலையைத் திறந்து வைக்கத் தான் அவர்கள் போனார்களே தவிர, முதலமைச்சராக இருந்தபொழுது கட்டபொம்மன் இருந்தானா, கெட்டான் போ என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உதவிப்பணம் கொடுத்து வருகிறது.

என்ன சாதித்துவிட்டீர்கள், என்ன சாதித்துவிட்டீர்கள் என்று கேட்டார்கள். சேலம் இரும்பாலைத் திட்டத்தைப் பெற்றது சாதனை இல்லையா? அது காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே திட்டமிடப்பட்டிருக்கலாம். அதற்காக திரு. வெங்கட்டராமன், நிதியமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் ஆகியவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. காமராஜ் அவர்கள் ஒத்துழைத்ததற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் வராமலிருந்த அந்தத் திட்டத்தை வரக்கூடிய அளவிற்குச் செய்த பெருமை எங்களுடையதுதானே?

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகமாக இருந்தது, ஆழ்கடல் துறைமுகமாக மாற்றப்பட்டது எங்கள் காலத்தில்தானே? முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் எழுச்சிநாள் போராட்டம் நடத்தி, பிறகு தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் அல்ல, அது ஆழ்கடல் துறைமுகம் என்று அறிவிக்கப்பட்டது. தூத்துக்குடி உரத் தொழிற்சாலை ஏற்படவில்லையா?

கல்பாக்கத்தில் இரண்டாவது கட்டமாக 200 மெகாவாட் அதிகமாகப் பெறவில்லையா?

3 சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கான புதிய அனுமதியைப் பெறவில்லையா?

இப்பொழுது உணவு அமைச்சரவர்கள் ஒரு தகவலைத் தருகிறார்கள். நீண்ட காலமாக அலமாதி என்ற இடத்தில் முர்ரா எருமைப்பண்ணை அமைக்கவேண்டுமென்று கேட்டு வந்து,

அதற்கு இப்பொழுது மத்திய சர்க்காரின் ஒப்புதல் கொடுக்கப் பட்டிருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு 82.91 இலட்சத்திற்கு மத்திய சர்க்காரும் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. இதையும் முன்னேற்றக் கழகத்தின் சாதனை என்று நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா?

ஆகவே, இவைகளிலெல்லாம் நாங்கள் முழுத்திருப்தி அடைந்துவிட்டோமா என்றால் இல்லை. இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளம் இருக்கின்றன. ஆனால், அவைகளுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் போதாது என்பதுதான் எங்களுடைய வாதம். தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்களின் வாதமும் ஆகும். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டால் கூடாது, கூடாது என்று சொல்கிறீர்களே. ஏன்? வறட்சி நிவாரணத்திற்காகப் பணம் கொடுக்காதே, கொடுக்காதே என்று சொல்கிறீர்களே, ஏன்? அதிகாரங்கள் கொடு என்று கேட்டால் கொடுக்காதே. கொடுக்காதே என்று ஏன் இந்த சுக்கிராச்சாரியார் வேலை செய்கிறீர்கள்? சுக்கிராச்சாரியார், மாவலி தாரை வார்க்கும்பொழுது கெண்டியில் அடைத்துக்கொண்டு, தர்ப்பையினால் குத்தப்பட்டு என்ன ஆனார்? உதாரணத்திற்காகப் புராணக் கதையைச் சொல்லுகிறேன்.

ஆகவே, ஏன் இப்படி இடையிலே நின்று கொடுக்காதே கொடுக்காதே என்று சொல்லவேண்டும்? வழி மறைத்திருக்கிறது சற்றே விலகியிரும் பிள்ளாய்! அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம் என்றால் அது உங்களுக்கும் சேர்த்துத்தான். வருங்கால சந்ததியினருக்காகவும் சேர்த்துத்தான், நான்கு கோடி தமிழக மக்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம்.

தனிக்கொடி கேட்டதைப்பற்றி கூறுகிறார்கள். மலேசியாவி லிருந்து இந்தக் கொடிகள் வந்திருக்கின்றன. பாருங்கள் (அவைக்குக் காட்டப்பட்டன). தமிழகத்தைவிட குறைவான மக்கள் கொண்ட மலேசியா, அந்த மலேசியாவிலிருந்து வந்த கடிதத்திலே, தமிழகத்தைவிட சற்றுக் கூடுதலான நிலப்பரப்பையும், தமிழகத்தின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட சின்னஞ்சிறிய நாடாகிய எங்கள் மலேசிய நாட்டில் பதின்மூன்று மாநிலங்கள் இருக்கின்றன என குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் சற்றேறக்குறைய

தமிழகத்திலுள்ள ஒரு மாவட்ட அளவுக்கு சின்னஞ்சிறியதாக இருக்கும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி முதலமைச்சர்கள், அமைச்சர்கள் இருக்கிறார்கள். தனித்தனி சட்டமன்றங்கள், தனித்தனிக் கொடிகள், தனித்தனி சின்னங்கள் இருக்கின்றன. மைய அரசுக்கென்று தனிக்கொடி - தேசியக்கொடி, தனிச்சின்னம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதோ இருக்கிற கொடிகள், இங்கே அடித்தவை அல்ல, மலேசியாவில் அடித்தவை.

திரு. சீமைச்சாமி அவர்கள்கூட கோபமாக, இனிமேல் நீங்கள் இந்திரா காந்தியை ஆதரித்தால் நாங்கள் உங்களோடு இருக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ராஜாஜியிடம் அனுமதி வாங்கித்தான் சொன்னேன் என்று கூறியிருக்கிறார்கள். ராஜாஜிகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், சீமைச்சாமி அவர்களே, சுதந்திராக் கட்சியின் தலைவர் என்ற முறையில், இங்கேயிருக்கும் தலைவர் என்ற முறையில் அவர்களையும், மூத்த தலைவர் திரு. ராஜாஜி அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். 200 பேர் ராஜாக்கள், அந்த ராஜாக்களுக்கு மானியம் கொடுக்க வேண்டாமென்று மட்டும் சொன்ன குற்றத்திற்காக தி.மு.க. வுடன் சேர மாட்டோம் என்று சொல்லிவிட்டு, சிண்டிகேட்டுடன் சேரும் ராஜாஜி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நான்கு கோடி தமிழ் மக்களின் வாழ்வை, மொழியை, உரிமையை, அவர்களின் வளத்தை, அவர்களின் எதிர்காலத்தை, நாட்டை அழிக்கும் இந்தி ஆதிக்கத்திற்கு ஓட்டுப்போட்ட சிண்டிகேட் காங்கிரசோடு சேர ராஜாஜி அவர்கள் முன்வருவார்களா? 200 ராஜாக்களுக்கு மானியம் வேண்டாமென்று நாங்களும், இடதுசாரிக் கட்சிகளும் அங்கிருக்கும் இந்திரா காந்தி அம்மையாரை ஆதரித்தது சரியா, தவறா என்று சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். ராஜாஜி அவர்கள் இதைப்பற்றி ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் உள்ளபடியே இந்தச் சபையில் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அவரேகூட ஒருவேளை நல்ல மனது வைத்து, இவ்வளவு விளக்கத்திற்குப்

பிறகு, இவ்வளவு சாதனைகளைக் கேட்டபிறகு, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டாலும் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

போலீஸ் துறையைப்பற்றி இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினரும், மற்ற இடதுசாரிக் கூட்டணியிலேயுள்ளவர்களும் பேசினார்கள். அவர்களும், திரு. பூவராகன் போன்றவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களும் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். போலீசுக்கு வக்காலத்து வாங்கி நான் என்றைக்கும் பேசமாட்டேன் என்று நன்றாகத் தெரியும். ஆகவே திரு. சங்கரய்யா அவர்களையும் திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டு இந்த அளவில் முடிக்கிறேன், வணக்கம்.



நம்பிக்கைத் தீர்மானம்

உரை : 65 **நாள் : 07.12.1972**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திரு.மு.கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவைமீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என் மீதும் என் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவை மீதும் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தை முன்மொழிந்து நான் சில வார்த்தைகள் மாத்திரம் கூற விரும்புகிறேன். ஏனென்றால், எதிர் தரப்பிலிருக்கிற உறுப்பினர்களுக்கு நிறைய வாய்ப்பளிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு அவர்கள் தங்கள் கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறிய பிறகு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற வகையில் நான் இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவதற்கு சிறிது நேரமே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் இதுவரையில் விவாதிக்கப்பட்ட பல்வேறு விஷயங்களில், 1952-ம் ஆண்டு நம்பிக்கை கோருகிற தீர்மானம் ஒன்றினை அன்றைக்கு இந்த மன்றத்தில் முதல்வராக வீற்றிருந்த ராஜாஜி அவர்கள் கொண்டுவந்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். 1952-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் மீதும் அவர்களுடைய தலைமையில் இயங்கிய அமைச்சரவை மீதும் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்கான காரணங்கள் அனைவரும் அறிந்ததேயாகும். அப்போது நடைபெற்று முடிந்த அருப்புக்கோட்டை இடைத்தேர்தலில் முதல்வராக இருந்த ராஜாஜி அவர்கள் ஒரு அறிவிப்பு விடுத்தார்கள். அருப்புக்கோட்டை இடைத் தேர்தல் நான் வேண்டுமா

வேண்டாமா என்பதை நிர்ணயிக்கிற தேர்தல் என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தேர்தலில் ராஜாஜி கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சி வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார். அதற்குப் பிறகு கூடிய சட்டமன்றத்தில் ராஜாஜி அவர்கள்தான் வேண்டுமா என்ற கேள்விக்குறியின் அடிப்படையில் தேர்தல் பிரச்சாரம் நடைபெற்று அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்துவிட்ட காரணத்தினால் தான் வேண்டுமா வேண்டாமா என்கிற அந்தத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் வைத்து விவாதிக்க விரும்பினார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை அதுபோல் அல்ல. இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இந்த அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து அதன்மீது அமைச்சரவை மீது பல குற்றச்சாட்டுகளைக் கூறவேண்டும் என்று கோரியவர்கள், இந்த அரசின்மீது பல குறைகளை எடுத்துக்காட்ட வேண்டுமென்று அறிவித்தவர்கள், அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேசுவதற்கான வாய்ப்பை இழந்துவிட்ட காரணத்தினால் ஏதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கே அரசுத் தரப்பில் இருக்கிற நாங்கள் இணங்க மறுத்துவிட்டோம் என்கிற ஒரு பழிச்சொல் இந்த அமைச்சரவை மீது விழுந்த நேரத்தில் நாங்கள் நம்பிக்கையில்லாத் தீரமானத்திற்கும் கண்டனத் தீர்மானத்திற்கும் என்றைக்குமே அஞ்சியவர்கள் அல்ல. அவைகளை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென்ற கெட்ட நினைப்பு கொண்டவர்களும் அல்ல. அதிலிருந்து தப்பி ஓட வேண்டும் என்ற தகாப் போக்கினை நாங்கள் ஜனநாயகப் பண்பாக ஏற்றுக்கொண்டவர்களும் அல்ல என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில்தான் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தின் மூலம் எதிர்தரப்பிலிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச்சொல்ல வேண்டுமென்ற வாய்ப்பினை இன்றைக்கு வழங்கியிருக்கிறோம். இந்த வாய்ப்பினை எதிர்தரப்பிலுள்ள அனைவரும் நன்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

கடந்த இரண்டொரு நாட்களாக அவைக்கு வந்தாலும் சில பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து வெளிநடப்பு செய்து வந்த காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும் இன்றையதினம் இந்த நம்பிக்கை கோருகிற தீர்மானத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். எந்த ஒரு அரசும் தன்மீது சொல்லப்படுகிற குறைகளை நிர்த்தாட்சண்யமாக இல்லவே இல்லை என்று மறுத்துக் கூறுவதற்குப் பதில் அவைகளை சிந்தித்து குறைகள் இருந்தால் திருத்திக்கொண்டு மேலும் நிலையான ஒரு அரசை நாட்டில் நடத்துவதற்கு முற்படுவதுதான் ஜனநாயக மரபு.. அந்த மரபினையொட்டி இன்று அமைந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அமைச்சரவை நிச்சயமாக நடந்து கொள்ளும் என்கிற உறுதியினையும் நான் அளிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நம்பிக்கை கோருகிற தீர்மானத்தை முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதன் காரணம் அவர்களுடைய கட்சியிலிருந்து சிலபேர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் - அதைத் தடுத்து நிறுத்த, திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்படுகிற டிஃபெக்ஷன்ஸை தடுத்து நிறுத்துவதற்காகத்தான் இந்தக்காரியத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த நேரத்தில் சட்டசபையில் உள்ள அவர்களுடைய கட்சியை மறந்துவிட்டதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். முன்னேற்றகழகம், ஆளும் கட்சி தரப்பில் 185 பேர்கள் இருந்து இன்றைக்கு எட்டு ஒன்பது பேர்கள் அதிலிருந்து பிரிந்து விட்டார்கள் என்றாலும் ஆளும் கட்சி இன்றைக்கு நல்ல வலிவோடும் தோழமைக் கட்சிகளுடைய துணையோடும் இந்த மன்றத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. நான் முன்பு ஒரு உதாரணம் சொல்லியிருக்கிறேன். வயிற்றில் இருக்கிற குடல் முப்பது அடிக்கு மேல் நீளம் இருப்பதற்குக் காரணமே ஏதாவது வியாதி காரணமாக ஒரு நாலைந்து அடி வெட்டி

விட்டாலும் மிச்சமுள்ள குடல் இயங்கும் என்பதற்காகத்தான் குடல் அப்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ என்னவோ. அது போல்தான் 1971-ம் ஆண்டு தேர்தலில் பொதுமக்கள் இந்தக் குடல் இடைக்காலத்தில் கொஞ்சம் அறுக்கப்பட வேண்டியிருக்கும் என்று முன்கூட்டியே ஊகித்து 184 உறுப்பினர்களை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தந்திருக்கிறார்கள். (ஆரவாரம்) நான் திரு. பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்த அவையில் சுவாசிக்கிற மூக்கு போல் காங்கிரஸ் கட்சியான எதிர்கட்சி இருக்கிறது. அதை குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும், ஏனெனில்.....

திரு.ஆர்.பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாங்கள் சுவாசிக்கிற மூக்குமாதிரி இருக்கிறோம், நீங்கள் குடல் மாதிரி நீளமாக இருக்கிறீர்கள். எங்களிலிருந்து கட்சி மாறியவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், அவர்களை பொதுமக்கள் நன்கு புரிந்துகொள்கிறார்கள். ஆகவே உங்கள் கட்சியிலிருந்து இன்னும் ஊசலாடிக்கொண்டிருக்கிறவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படி யாராவது ஊசலாடினால் நாடார் அவர்களின் பேச்சு அவர்களுக்கு நல்ல எச்சரிக்கையாக அமையும் என்று நான் கருதுகிறேன். (ஆரவாரம்). ஆகவே பொன்னப்ப நாடார் அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடம் 76 வரையில் அப்படியே இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்போது தங்கமணி அவர்களின் இடம் கொஞ்சம் மாறியிருக்கிறது. இப்படி கொஞ்சம் கொஞ்சமாக.....

திரு.ஆர்.பொன்னப்ப நாடார் : என் இடம் கடைசியில் சென்றாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. மக்களைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். எங்கள் திட்டத்தில் நாங்கள் பரிபூர்ணமாக நம்புகிறோம். நாங்கள் காந்திய வழி வந்தவர்கள். ஒருவேளை அதிகாரம் இல்லை, பதவி இல்லை என்றால் இந்தப் பதவியை நாங்கள் துச்சமாக மதிக்கிறோம் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நீங்கள் மாத்திரம்தான் துச்சம் என்று மதிக்கிறீர்களா? நாங்கள் என்னவோ இதைவிட்டால் வேறு வழியே இல்லை என்று இருப்பவர்கள் அல்ல. பொது மக்களின் கட்டளையை நிறைவேற்ற நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். பதவி என்பது பணிபுரிய அளிக்கப்பட்டிருக்கிற வாய்ப்பே அல்லாமல் வேறு அல்ல. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற இங்கே நாங்கள் அமர்ந்திருக்கிறோம். ஆகவே நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொன்னேனேயல்லாமல் பொன்னப்ப நாடார் அவர்களை மிரட்டுவதற்கோ அல்லது எச்சரிப்பதற்கோ என்று கொள்ளக்கூடாது. அவர்கள் கடைசியிடத்தில் உட்கார்ந்து கொண்டாலும் பதவியை நாங்கள் துச்சமாக மதிக்கிறோம் என்று சொல்ல உரிமை படைத்தவர்களாக இருப்பதைப்போல் இந்த அமைச்சரவையில் இருந்து யாராவது அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்கள் நிலையிலிருந்து இங்கிருந்து விரட்டப்பட்டாலும்கூட அவர்களுக்கு மக்கள் இதயத்தில் நிச்சயமாக இடம் இருக்கிறது என்பதைமட்டும் யாரும் மறந்துவிடக்கூடாது. (ஆரவாரம்) திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதற்கு நான் இந்தப் பதிலே அளிப்பதற்கு மிகுந்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கை கோருகிறே தீர்மானத்தில் நான் ஆரம்பத்தில் சொன்னதைப்போல் இப்போது அதிக நேரம் பேசுவதற்கு விரும்பவில்லை, ஆளும் கட்சி உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பேச இருக்கிறீர்கள். நாம் இந்த மன்றத்தின் மரபினை போற்றி காப்பாற்றிவருகிற வகையில் நம்முடைய விவாதங்கள் பண்போடும் நாகரீகத்தோடும் நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நம்பிக்கை கோருகிற இந்த தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிந்து நான் அமர்கிறேன். வணக்கம்.

நம்பிக்கைத் தீர்மானம் பதில் உரை

உரை : 66 **நாள் : 11.12.1972**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கடந்த 7-ம் நாள் அன்று தொடங்கிய நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மீதான விவாதம் 24 மாண்புமிகு உறுப்பினர்களால் இங்கு விவாதிக்கப்பட்டு, என்னையும் சேர்த்து 25 பேர் இந்த விவாதத்தில் கலந்துகொள்ளுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

2-ம் தேதி அன்று இந்தப் பேரவை கூடியபோது, பேரவையிலே எதிர்த்தரப்பிலேயுள்ள ஒரு சில உறுப்பினர்கள், கவர்னர்பெருமான் அவர்கள் இந்த மன்றத்தினுடைய கூட்டத்தை புரோரோக் செய்து மீண்டும் ஒரு தேதியை அறிவித்திருப்பது உயர்நீதிமன்றத்தில் விவாதத்திலிருக்கின்ற நேரத்தில் இந்தப் பேரவை கூடலாமா, இந்தப் பேரவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சி களெல்லாம் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, முன்னாள் சபாநாயகர் திரு.மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் அவருக்குச் சாதகமாக முடிந்துவிடுமானால் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்துவிடவேண்டிய நிலைமை ஏற்படுமே, ஏன் வீண் காலதாமதம்? கால விரயம், பண விரயம் ஏற்படுகின்ற அளவுக்கு இந்தப் பேரவையை நடத்த வேண்டுமா? என்கின்ற வினாக்களையெல்லாம் எழுப்பினார்கள். இன்றைய தினம் அந்த வினாக்களுக்கெல்லாம் உற்ற விடை கிடைத்து, உயர்நீதிமன்றத் திலே முன்னாள் பேரவைத் தலைவர் நண்பர் மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (பலத்த கைதட்டல்) இந்த முடிவு இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் எதுவும் ரத்து செய்யப்படமாட்டா என்கின்ற உறுதி தருகிறது. நாம் அனைவரும் இதுவரையிலே கலந்துகொண்டு ஆற்றிய உரைகளும், இனி நடத்தவிருக்கின்ற விவாதங்களும் செல்லுபடியாகும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. வழக்குத் தொடர்ந்தவர் வழக்குச் செலவையும் தரவேண்டுமென்ற அளவில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (பலத்த

கைத்தட்டல்). இந்த அவையில் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏன் கொண்டுவரவேண்டுமென்ற வினாவினை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்புமிக்க நாடார் அவர்கள் இங்கு மீண்டும் ஒருமுறை எழுப்பினார்கள். சுலபமாக இதற்கு விடை காணலாம்.

அதைக் கொண்டுவந்த காரணத்தாலேதான் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் டாக்டர் ஹாண்டே அவர்களும், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் திரு.பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே பல பிரச்சனைகளைப்பற்றி விவாதிக்க முடிந்தது. அதைவிட வேறு ஒரு பெரிய காரியத்திற்கு என்று கருதி இத்தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. காங்கிரஸ் கட்சித்தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், அதைப்போலவே சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், இந்த மன்றத்திலே இருக்கின்ற தோழமைக் கட்சி உறுப்பினர்களும், தலைவர்களும் அதைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா தி.மு.க., ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மூலம் அவர்கள் இந்த அரசின்மீது எவ்வளவு குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்களோ அதற்கான நல்ல வாய்ப்பினை தாராளமாக வழங்கவேண்டுமென்ற அடிப்படைக் கருத்தின் காரணமாகத்தான் இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானம் முன்மொழியப்பட்டு, இந்த மாமன்றத்தில் நான்கு நாட்களாக காரசாரமான விவாதமாகவும் கருத்துக்கள் நிறைந்த விவாதமாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் 24 பேர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும் என்றாலும், அவை எங்களுடைய உள்ளங்களை ஓரளவு புண்படுத்தக்கூடியதாக அமைந்திருந்தாலும் நாங்கள் அவைகளை எல்லாம் இந்த மாமன்றத்திலே எப்படி விவாதிக்கவேண்டுமென்ற உணர்வைப் பெற்றவர்கள். இதுபோன்ற தாக்குதல்களைத் தாங்கும் பண்பாடு உள்ளவர்கள் என்ற காரணத்தினால் அவைகளை வரவேற்கிறோம், அதற்கேற்ற வகையிலே அமைச்சர் பெருமக்களும் அவர்களுடைய விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏதோ உள்நோக்கத்தோடு கொண்டுவந்திருக்கிறோம் என்று திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், எந்த உள்நோக்கத்தோடும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. நம்பிக்கை இல்லாத்

தீர்மானத்திற்கு இந்த அமைச்சரவை பயந்து, நடுங்கி, ஓடி ஒளிந்துவிடும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவேதான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது அவர்கள் என்ன கருத்துக்களைக் கூறுவார்களோ அந்தக் கருத்துக்களை கூறுவதற்கு ஒரு வாய்ப்பாகத்தான் இந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை எந்த அடிப்படையிலே எந்த அளவுகோலைக்கொண்டு கணக்கிட்டுப் பார்ப்பது என்பதை மாத்திரம் நாம் புரிந்து கொள்ளவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச்சொல்லிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் கடந்த ஓராண்டு அல்லது இரண்டாண்டு காலமாகத் தமிழகத்துப் பெருவெளிகளில், தெருக்களில், பேசப்பட்டதும், ஏடுகளில் எழுதப்பட்டதும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தனது விளக்கத்தை இதற்குத் தந்திருக்கிறது. மீண்டும் மீண்டும் அதே குற்றச்சாட்டுக்களைத்தான் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல் புதிதாக எதுவும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை.

கொள்கை ரீதியாக எடுத்துக்கொண்டால், எவை எவைகளை இந்த மன்றத்திலே பேசுவது, எவை எவைகளைப் பேசக்கூடாது, என்ற நியதியை நாம் கடைப்பிடிக்கவேண்டும். சட்டமன்றத்திலே நடைபெறும் விவாதங்கள் வெளியிலே நடைபெறுகின்ற சொற்பொழிவுகளைப் போன்றவை அல்ல என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு செய்யும் காரியங்களில் எது தவறு, எது முறைகேடானது என்பதை எடுத்துக்கூற எதிர்க்கட்சித்தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. அவர்கள் அப்படி எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் "நீங்கள் யார் எடுத்துச்சொல்ல, நாங்கள் யார் அதைக் கேட்க" என்ற ஆணவக் குரலில் ஒருநாளும் நாங்கள் கேட்டதில்லை: கேட்கப்போவதுமில்லை. அந்த ஆணவம் எங்களிடம் இல்லை. சொல்வது யாராக இருந்தாலும் அடக்கத்தோடும். அமைதியோடும் கேட்டு, அதற்குத் தகுந்த முறையிலே செயல்படும் பண்பாட்டுடன்தான் நாங்கள் இருக்கிறோம். மாற்றாருக்கும் மதிப்புக் கொடுக்கின்ற அரசியல்

நாகரீகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே கடைப்பிடித்துவரும் என்பதை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டு காலத்திலே என்னென்ன செய்திருக்கிறோம், என்னென்ன செய்யத் தவறிவிட்டோம் என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும், தேர்தல் நேரத்திலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையா? இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களோடும் தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிக்கும் இன்றைக்கு கழக அரசு வந்த பிறகு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டினையும் உணர வேண்டும்.

இந்தியாவில் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே ஒருசில மாநிலங்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தன. அந்த மாநிலங்களிலே ஒன்று மராட்டிய மாநிலம் என்பதை நாம் எல்லாம் நன்கறிவோம். நம்முடைய தமிழ்நாட்டிலே 20 ஆண்டுக்காலம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு 1967-ம் ஆண்டிலே எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பேரறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், தமிழகத்தின் வளர்ச்சி எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை உணர முடியும். இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு பிற்பட்ட சமூகத்தினருக்கு, ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏராளமான நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். ஒரு அரசு நல்ல அரசா இல்லையா என்பதற்கு எது அளவுகோல்? நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். உள்ளே இருக்கின்ற பெரும்பான்மை உறுப்பினர்களை வைத்துக் கொண்டு உங்களுக்கு பெருத்த ஆதரவு இருக்கிறது என்று எண்ணிவிட முடியாது. நாட்டிலே இருக்கின்ற மக்களில்-வெளியே இருக்கிறவர்களில் 100-க்கு 90 பேர் அல்லது

10-க்கு 9 பேர் உங்களை நம்பவில்லை ; உங்களை ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள்.

பாராளுமன்றத்திலேயும் சரி, சட்டமன்றத்திலேயும் சரி, இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோரைக் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் ஆட்சியின் பலத்தை நிர்ணயிப்பது வழக்கம். ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஹாண்டே ஒரு டாக்டர். ஒருவனுக்கு காய்ச்சல் வந்தால் அவனுக்கு எத்தனை டிகிரி காய்ச்சல் அடிக்கிறது என்று பார்க்கவேண்டுமென்றால் தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்துத்தான் சொல்வார். அதைப்போல இந்த நாட்டிலும் மக்கள் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்களா இல்லையா என்பதை 1971-ம் ஆண்டு பொதுத்தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும்பான்மை வாக்கு என்னும் தெர்மாமீட்டரை வைத்துக் கணக்கெடுத்து, ஆளத் தகுதி உடையவர்கள்தான் என்று அனுப்பியிருக்கிறார்கள்.

டாக்டர் எச்.வி.ஹாண்டே : உங்கள் தர்மாமீட்டர் பழசு, அது கெட்டுப்போய்விட்டது என்று சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : என்னுடைய தர்மாமீட்டர் பழசா புதுசா என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஜுரம் வரும்போது வைத்துப்பார்த்தால் தெரியும் (பலத்த ஆரவாரம்). ஆகவே, மக்கள் மன்றத்தினுடைய ஆதரவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதை இந்த மன்றத்தினுடைய ஆதரவில் இருந்து தெரிந்து கொள்ளலாம். முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளித்துத் தான்-எங்களுக்கு மக்கள் வாக்களித்தார்கள். 1967-லும் வாக்களித்தார்கள். 1971-லும் வாக்களித்தார்கள். அதன்மூலம் மக்களின் முழு நம்பிக்கையையும் மகோன்னதமான முறையில் எங்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய அந்த ஆதரவினால்தான் நாங்கள் இங்கே வீற்றிருக்கிறோமே அல்லாமல் பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ, அந்தஸ்திற்காகவோ, கௌரவத்திற்காகவோ நாங்கள் இங்கே இல்லை. எந்த மக்கள் எங்களை நம்பி இங்கே அனுப்பி வைத்தார்களோ அந்த மக்களுக்காக என்றும் உதவ, உழைக்க நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதற்காக எங்கள் கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இங்கு பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்திலே இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையை வைத்துவிட்டு, பதிலுரை பகர்கின்ற நேரத்தில் அண்ணா அவர்கள் சொன்னார்கள், ''என்னுடைய அரசு தமிழகத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் - அவர்களுடைய வாழ்க்கையை அடிப்படையாக வைத்துத் திட்டங்களைத் தீட்டும்'' என்று சொன்னார்கள்.

தமிழ் தழைக்க, தமிழ்க் குலம் செழிக்க என் அரசு பாடுபடும் என்று எடுத்துக்காட்டினார்கள். அவர் காட்டிய வழியில் நின்று நாங்கள் பணியாற்றுகிறோமா இல்லையா?

சென்னை இராஜ்யம் என்ற பெயர் அண்ணா அவர்கள் காலத்தில் தமிழ்நாடு என்று தனக்கே உரிய பெயரைப் பெற்றது. இந்த மாமன்றமே அன்றைக்கு மகிழ்ச்சிக் கடலில் ஆழ, இன்றைக்கு மைசூர் மாநிலத்தவர்களும் நம் வழியைப் பின்பற்ற அன்றைக்கே சென்னை இராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு நாம் பிறந்த மண்ணுக்கு, தமிழ்நாடு என்கிற பழைய பெயர், நம்முடைய இலக்கியங்களில் காணப்படுகின்ற பெயர், நம் உரிமையைக் காக்கின்ற பெயர் சூட்டப்பட்டது. 1937-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுக் காலமாக நடைபெற்றுவந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு முடிவு காணுகின்ற வகையில் அண்ணன் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்-இன்றுமட்டுமன்றி இனிமேல் தமிழ்நாட்டில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டுக்கும்தான் இடம், தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தி மொழிக்கு இடமில்லை என்கிற தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியதும் இதே மன்றத்தில்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை மறந்துவிட முடியாது.

சுயமரியாதைத் திருமணம் என்கிற சமுதாய சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாகத்தக்கதாகச் செய்ய வேண்டும் என்பதாக எதிர்வரிசையில் இருந்து நாங்கள் கூறி வாதிட்டுவந்த நேரத்தில் எல்லாம் அப்போதிருந்த ஆட்சியாளர் களால் அது புறக்கணிக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகுதான் அண்ணன் அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற புரட்சிகரமான கருத்துக்குச் சட்டவடிவம் கொடுத்ததும்-இந்த

திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

புஞ்சை நிலங்களுக்கும் மானாவாரி நிலங்களுக்கும் அடிப்படை நிலத்தீர்வை நீக்கப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

நஞ்சை நிலங்களுக்கும் ஐந்து ஏக்கருக்குள் நிலம் இருக்கு மானால் அந்த 5 ஏக்கராவுக்கும் அடிப்படை புஞ்சைத் தீர்வை நீக்கப்படும் என்று செய்ததும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

நகர்ப்புற நிலங்களுக்கு ஒரு க்ரவுண்டும், அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான். மேலும் கூட இன்னும் சில சலுகைகளை அளித்து ஒரு சட்டத்தையே கொண்டுவந்து நிறைவேற்றலாமா என்ற யோசனையும் முன்னேற்றக்கழக அரசுக்கு இருந்து வருகிறதுஎன்பதை நான் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாயிரத்திற்குக் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு அவர்கள் வாங்கிய கடனுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு, வாங்கிய கடனைப் போல இரண்டு பங்கு வட்டி செலுத்தியிருந்தார்கள் என்றாலும், அல்லது அசலும் வட்டியும் செலுத்தியிருக்கிறார்கள் என்றாலும் அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டும், வட்டியும் 1-3-72-க்குப் பிறகு 9 சதவிகிதம் என்ற அளவிலேயே கணக்கிடப்பட வேண்டும் என்று நிர்ணயித்து-நடுத்தர மக்களுக்கு, ஏழை மக்களுக்குக் கடன் நிவாரணம் அளித்த அரசும் முன்னேற்றக் கழக அரசுதான்.

15-2-1970 முதல் ஏற்கனவே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த நில உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதாகக் குறைத்ததுவும் முன்னேற்றக் கழக அரசுதான். முன்பு இருந்த விதிவிலக்கு கரும்புப் பயிருக்கு, மலைப்பகுதி நிலத்திற்கு, மேய்ச்சல் நிலத்திற்கு, கால்நடை வளர்ப்பு பால் பண்ணைக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்குகள் எல்லாம் நிலச்சீர்திருத்தத்தின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். அறக்கட்டளைகளுக்கு புதிய உச்சவரம்பை நிர்ணயித்ததும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். சமய அறக்கட்டளைகளுக்கு என்று 1-3-72க்குப் பிறகு நிலங்களைப்

புதியதாக வாங்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

இருள் அடைந்து கிடந்த தமிழகத்திலுள்ள பல்வேறு கிராமங்கள் 1973-ஆம் ஆண்டுக்குள் மின்னொளி பெற்றாக வேண்டும் என்கிற சபதத்தை எடுத்துக்கொண்டு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடும், மின்வாரியத்துறை அலுவலாளர்களின் உறுதுணையோடும், மின்வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உறுதுணையோடும், மின்வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உறுதுணையோடும் இன்றைக்கு வேகம் வேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்குகின்ற திட்டத்தை நிறைவேற்றி வருவது முன்னேற்றக் கழக அரசுதான். தமிழகத்தில் உள்ள மொத்த கிராமங்கள், குக்கிராமங்கள் 61,393 ஆகும். அதில் 1933-ம் ஆண்டு முதல் அதாவது மின்சாரம் முதன் முதலாக தமிழகத்தில் நுழைந்த ஆண்டில் இருந்து 1967 வரை மொத்தமுள 61,393 கிராமங்களில், மின் ஒளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250 தான். 1973-க்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்கப்படும் என்கிற மின்னொளி தீவிரத் திட்டத்தை இந்த அவையில் நான் அறிவித்தபிறகு இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் மின்னொளி பெற்றுள்ள கிராமங்கள் 38,474 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை-34 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250தான். ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக முன்னேற்றக் கழக ஆட்சியில் மின்னொளி வழங்கப்பட்ட கிராமங்கள் மட்டும் 38,474 ஆகும். ஆக தமிழகத்தில் மட்டும் மொத்தம் 58,724 கிராமங்களுக்கு மின்னொளி அளிக்கப்பட்டு விட்டன. மிச்சமிருப்பது மூவாயிரத்திற்கும் உட்பட்ட கிராமங்களே என்கிற நிலையை அடைந்திருக்கிறோம்.

அடுத்து, தமிழகத்திலுள்ள அரிஜனக் காலனிகள் 23,096 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை மொத்தமுள்ள 23 ஆயிரம் அரிஜனக் காலனிகளில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த அரிஜனக் காலனிகள் 4,354 தான். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கழக ஆட்சியில் 18,036 அரிஜனக் காலனிகள் மின்னொளி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. மிச்சமிருப்பது ஆயிரம்தான்.

Dr. H.V.HANDE: These statistics do not cover the frequent and fantastic break-down of electricity all over the State, especially in the City of Madras. There is sudden loss of power, increase and decrease in voltage and it is all so bad and all this happens because of expansion and so in giving statistics, that also should be covered.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : செய்து வருகிற பெரிய காரியத்தில் இடையில் ஏற்படுகிற குறைபாடுகள் குறித்துப் பேசுகின்றார்கள். அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சுட்டிக்காட்டப்படுகிற நேரத்தில் அந்தக் குறைபாட்டைக் களைவதற்கு மின்வாரியம் தயாராய் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வுத் திட்டம் என்று தொடங்கியபோது அது சிலருக்குச் சாதாரணமாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் வேறு எந்த மாநில அரசும் அது பற்றி எண்ணிப்பார்க்காத நேரத்தில் முன்னேற்றக் கழக அரசு தான்-பிச்சைக்காரர்கள்தானே, அதுவும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள்தானே என்று அலட்சியப்படுத்தாமல்-சமுதாயத் திற்கே அவக்கேடாக இருக்கிற அந்தப் பிரச்சினையில் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிறது. இன்றைக்கு பருகூர், பானூர், உளுந்தூர்ப்பேட்டை, புதுக்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு தஞ்சை, கோவை, சேலம், தர்மபுரி, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டு மொத்தமுள்ள அந்தப் 10 இல்லங்களும் முடிந்தவுடன் 5 ஆயிரம் தொழுநோய்ப் பிச்சைக் காரர்கள் அங்கே மறுவாழ்வு பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்டிருப்பது இந்த முன்னேற்றக் கழக அரசுதான். இந்தத் திட்டத்தினுடைய வெற்றிக்குப் பிறகு மிச்சமுள்ள பிச்சைக்காரர்கள்-தொழுநோய் பாதிக்கப்படாமல் இருக்கிற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பெறுகிற திட்டத்தையும் இந்த அரசு தீட்ட இருக்கிறது.

கண்ணொளி வழங்குகிற திட்டம் சிலரால் கேலி செய்யப்படலாம். சிலர் விளம்பரத்திற்காக நடத்தப்படுகிறது என்று கருதலாம். உண்மையாகச் சொன்னால் அதற்கு விளம்பரம் நிரம்பத்

தேவை. பட்டிக்காட்டில் இருக்கிற பாமர மக்கள், கண் பழுதுபட்ட பாமர மக்கள், பழுதுபட்ட கண்ணொளியைப் பெறுவதற்கு இப்படிப்பட்ட ஒரு பாதை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள அதிக அளவில் விளம்பரம் தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட தமிழகத்தில் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எடுத்த கணக்கின்படி 10 லட்சம் பேர் கண்ணொளி மங்கியவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்கள். இந்த ஆண்டு ஒரு லட்சம் பேர்களுக்காவது கண்ணொளி வழங்குவது என்கிற தீவிர திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மனத்துணிவோடு ஜூன் 3-ஆம் தேதி முதல் இந்தத் திட்டம் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. ஜூன் 3-ஆம் தேதி துவங்கிய திட்டம்-இதுவரை கண்ணொளி வழங்குகிற முகாம்களை 26 இடங்களில் நடத்தியிருக்கிறது.

திரு.ஆர்.பொன்னப்ப நாடார் : கண்ணொளி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதற்காக எங்கள் ஜில்லாவில் நிதி வசூலிக்கப்பட்டது. எந்த முறையில் வசூலிக்கப்பட்டது என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு, எத்தனை பேர்களுக்கு சிகிச்சை அளித்தார்கள் என்று பார்க்கவேண்டும். நடுவில் அந்த நிதி சோர்ந்துவிடக் கூடாது என்றுதான் சொல்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நல்ல வேளை, கண்ணொளி வழங்குவதிலே ஆட்சேபணையில்லையென்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிதியைப்பற்றிச் சொல்கிறேன். இந்த 26 முகாம்களில் புற நோயாளிகளாக (Out patient) சிகிச்சை பெற்றவர்கள், கண்ணுக்குச் சிகிச்சை பெற்றவர்கள், 1,22,555 பேர். கண்ணை அறுவை செய்துகொண்டு சிகிச்சை பெற்று கண்ணாடி வழங்கப் பெற்றவர்கள் 19,697 பேர். என்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு கண்ணொளி வழங்க வேண்டுமென்று கேட்டு, யாரும் கட்டாயப்படுத்தப்பட்டு அல்ல, இன்றைக்கு, இதுவரையிலே கிடைத்திருக்கிற நிதியினுடைய மொத்த தொகை ரூ.50 லட்சம். நிதியாகக் கிடைத்திருக்கிறது இந்த நல்ல காரியத்திற்கு. இதிலே இந்த 19,697 பேருக்கு அறுவை சிகிக்சை செய்து கண்ணாடி வழங்கவும், 1,22,555பேருக்கு கண் சிகிச்சை புற நோயாளிகளாக பாவிக்கப்பட்டு சிகிச்சை செய்யவும் இதுவரையிலே ரூ.11 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. என்னுடைய பிறந்தநாள் அடிப்படையிலே சேர்க்கப்பட்ட நிதியென்ற காரணத்தினால் அது

என்னுடைய வரவு செலவுக் கணக்கிலே இல்லையென்பதையும் அது அரசாங்கத்தினுடைய வரவுசெலவுக் கணக்கிலே நடைபெறுகிறது என்பதையும் இந்த அவைக்கும் இந்த அவையின் மூலமாக பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமையாகும்.

சத்துணவுத் திட்டம். நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசினுடைய உதவியோடு சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப் படுகிறது என்பதை மத்திய அரசிலே இருப்பவர்களும் புகழ்ந்து கூறுகிறார்கள். சென்னையிலும் மற்றும் 20 முக்கிய நகரங்களிலும் நம்முடைய நல்வாழ்வுத்துறை அமைச்சர், நம்முடைய சமூக நலப்பணியை ஏற்றிருக்கின்ற அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து ஆகியவர்களுடைய முயற்சியோடு அந்த இலாக்காவிலே இருக்கிற ஊழியர்களுடைய இடையறா உழைப்போடு, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், சத்துணவுத் திட்டத்தில் பயன்படும் குழந்தைகள், 2,10,000. தாய்மார்கள் 40,000 பேர். முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுகிறது என்று மத்திய அரசின் பாராட்டை பெற்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

1971-ம் ஆண்டு இளைஞர் அணி என்ற ஒன்று துவங்கப்பட்டது. அதிலே இன்றைக்குப் படித்த வேலையில்லா மலிருக்கிற பட்டதாரிகள், பொறியாளர்கள், டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இவர்களெல்லாம் அவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையில், இடையிலே வேலைகள் கிடைத்தாலும் அவர்கள் அறிவித்துவிட்டுச் செல்லலாம் என்கின்ற நிபந்தனையோடு, ஆண்கள் 2729 பேரும் பெண்கள் 288 பேரும் அவர்களுடைய மாதாந்திரச் செலவுக்காக ரூ.175 பெற்றுக்கொண்டு கிராமங்களில் முதியோர் கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, விஞ்ஞான அறிவு. உலகத்தைப் பற்றிய பொது அறிவு இவைகளையெல்லாம் கிராம மக்களுக்கு எடுத்துச்சொல்கிற அளவிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர் அணியைப் போலவே, பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட சீரணியும் தமிழ் நாட்டிலே எல்லா கிராமங்களிலும் ஏராளமான நற்பணிகளைக் குவித்திருக்கிறது. என்பதை நாடு நன்றாக அறியும்.

1967-ம் ஆண்டு தமிழ்நாட்டிலே உள்ள அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3½ கோடி, 1972-ம்

ஆண்டில் அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட, ஒதுக்கப்படுகிற தொகை ரூ 8½ கோடி. இந்த அரசு அரிசனங்களுக்கு என்ன செய்தது, அரிசன மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்றெல்லாம் கேள்விக்கணைகளை மேடையிலேயிருந்து அரசியல்வாதிகள் எங்களை நோக்கி விடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒருவேளை, நான் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற காரணத்தால், அரிசன சமுதாயத்தை மறந்து விட்டேன் என்கின்ற பழியை என்மீது போடவேண்டுமென்று எண்ணி பின்தங்கிய சமுதாயத்திற்குத்தான் நான் பாடுபடுகிறேன் என்கிற குற்றத்தைச் சாட்டுவதற்காக அந்தப் பெரியவர்கள் அரசியல் ரீதியில் தாக்க முற்பட்டிருக்கிறார்கள். ஆனால் அன்று நண்பர் பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டபடி, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நான் சம்பந்தியாகிவிட்ட காரணத்தினால், யாரும் அந்த அவநம்பிக்கை கொண்டிடத் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ. 3½ கோடி 1967-ம் ஆண்டு அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ; இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, ரூ.8½ கோடி. பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 1967-லே ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1 கோடி. 1972-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.4½ கோடி. இதுவரையிலே இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே இல்லாத அளவுக்கு அந்த இலாக்கா தனியாக அமைக்கப்பட்டு, பிற்பட்டவருக்கான ஒரு தனி அமைச்சருடைய நேரடிப் பார்வையில் அந்த இலாக்கா இயங்கி வருகிறது. அண்மையிலே கூட, நானும் அந்தத் துறையினுடைய அமைச்சர் இராஜாராமும் சேலத்திற்குச் சென்று புதியதாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைந்து இருக்கிற சமுதாயத்தினுடைய பாராட்டுதலைப் பெற்றோம். பிற்படுத்தப் பட்டோர் நலனுக்காக அமைக்கப்பட்ட பின்தங்கியோர் நலக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட வகுப்பினர் ஏறத்தாழ 15 அல்லது 16. அர்ச்சகரை வேளாளர், கம்பர், கள்வேலி கவுண்டர், கன்னார், கண்ணட சைனீகர், குர்சிடிகார், ஓவச்சர், பாணர் வெள்ளான் செட்டியார், வேடர், ஆஸ்தாந்திர கோலா, செட்டி, சக்கரவார், பணி செய்வார், சவளக்காரர்-ஆகிய 15 வகுப்பினர் இன்றைக்குப் பின்தங்கியோர் பட்டியலிலே புதிதாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1967-ம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இருந்த விடுதிகள் 11. இந்த 5 ஆண்டுக் காலத்திலே.

பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக, கட்டப்பட்ட விடுதிகள் 134. 11 இருந்தது, 1967-ல். இன்றைக்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்காக இருக்கிற விடுதிகளின் எண்ணிக்கை, அதையும் சேர்த்து 145.

வேலை வாய்ப்பு, கல்லூரிகளிலே இடம் அளித்தல் போன்றவைகளில் அரிசன மக்களுக்கு 16 சதவிகிதம் என்று இருந்ததை 18 சதவிகிதம் என்று ஆக்கியதும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் என்று இருந்ததை 31 சதவிகிதம் என்று ஆக்கியதும் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால், சமுதாயத்திலே அது எவ்வளவுப் பெரிய புரட்சி என்பதை இந்தச் சமுதாயத்தி னுடைய கடந்தகால வரலாற்றை எண்ணிப் பார்க்கின்றவர் களுக்குத்தான் நன்றாகப் புரியும்.

அதுமட்டுமல்ல, அரிசனங்கள் அறங்காவலர்களாக இல்லாததையும், அவர்களை அறங்காவலர்களாகப் போடலாம், அல்லது போட வேண்டுமென்ற பரிந்துரை இருக்கிறது. போனால் போகட்டும், போடுங்கள் என்கின்ற தயவு தாட்சண்யத்தின் அடிப்படையிலே இருந்தது. அரிசனங்கள் அறங்காவலர்களாக ஆக்கப்பட வேண்டும், அது சட்டமாகவே ஆக்கப்பட வேண்டு மென்ற நோக்கத்தோடு, எந்த ஒரு ஆலயத்திலே இருக்கிற எந்த அறங்காவலர் குழுவிலும் நிச்சயமாக ஒரு அரிசனச் சகோதரன் இடம் பெற்றே ஆக வேண்டுமென்ற சட்டத்தை அமைத்தது திராவிட முன்னேற்றக்கழக அரசு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அதைப்போலவே மேலும் ஒரு புரட்சித் திட்டமாக, அர்ச்சகர் என்றால் ஒரு வகுப்பிலே பிறந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, ஆண்டவனை பூஜிக்க, அர்ச்சனை செய்யக் கூடிய தகுதி படைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அர்ச்சகராக வரலாம் என்று சாதிச் சனியனுடைய இடுப்பை ஒடித்த அரசு திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

அரசாங்க அலுவலர்கள், அவர்களுடைய தேவைகள் கோரிக்கைகள் நிரந்தரமானவையானாலும் இந்த அரசாங்க அலுவலர்களுக்கு இரண்டாவது சம்பளக் குழு ஒன்றினை நிறுவி 21 கோடி ரூபாயை அள்ளி வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதிலே மாறுபாடுகள் இருக்கிறது என்று அறிவித்ததும், ஒரு நபர் குழு ஒன்று அமைத்து, அந்தக்

குழுவினுடைய சிபாரிசுகளை ஏற்று மீண்டும் ரூ.5 கோடி அளித்தது முன்னேற்றக்கழக அரசு.

இதற்குப்பிறகு அரசு அலுவலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக டி.ஏ.யில் ரூ.10 உயர்வு அளித்ததன் காரணமாக ரூ.6 கோடி இழப்பையும் பொருட்படுத்தாமல் பொறுப்பேற்றுக் கொடுத்த அரசு முன்னேற்றக் கழக அரசு.

வெள்ளையன் காலத்திலிருந்து இருந்து வந்த, என்.ஜி.ஓக்களின் ரகசியக் குறிப்பேட்டு முறை அதை யாராலும் அகற்ற முடியாது என்ற அளவுக்கு அதிகாரிகளுடைய குறுக்கீடு இருந்ததை என்.ஜி.ஓ.க்கள் எப்படியும் தகர்த்தெறிய வேண்டுமென்று அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள், ஒரு காலத்திலே அண்ணா அவர்கள் அவர்களுக்களித்த வாக்குறுதி, அதற்கேற்ப கடந்த ஆண்டு ரகசியக் குறிப்பு முறையை, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வந்த அந்த முறையை, 20 ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியிலும் அதை அகற்றுவதற்குத் துணியாத அந்த முறையை அகற்றி, அரசாங்க அலுவலர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்றது முன்னேற்றக் கழக அரசு என்பதை நாடு நன்கு அறியும்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், 1966-67-ம் ஆண்டு குறுகியகால, மத்தியகாலக் கடனாக அளித்த தொகை ரூ.31.45 கோடி-குறுகியகால, மத்தியகாலக் கடன். 1971-72-ல் அளித்த தொகை ரூ.57.34 கோடி. நீண்ட காலக் கடன் அதாவது 10-லிருந்து 15 ஆண்டுக் கடன், 1966-67ல் ரூ. 2.93 கோடி 1971-72-ல் ரூ.25.42 கோடி நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அயராத முயற்சிகளால் விவசாயிகளுக்கு இந்த அளவுக்குக் கடன்களை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுடைய பேரன்பினை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு விவசாயிகளுடைய அரசாக இன்றைக்கு இருக்கிறது. இடையிலே சில பேர் அதை மாற்றுவதற்கு முனைந்தாலும் விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளருக்கு பணியாற்றுவதற்காக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, டாக்டர் நாவலர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற கல்வி இலாகா. 1966-67 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பொதுக் கல்விக்காக செலவழிக்கப்பட்டது 44 கோடி

ரூபாய். இன்றைக்கு 1972-73 ஆம் ஆண்டில் பொதுக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிற தொகை 89 கோடியே 85 லட்சம் ரூபாய். இதிலே மருத்துவக் கல்லூரி, அரிசனத் துறையினர் மூலம் இயங்குகிற பள்ளிகள் ஆகியவற்றையும் சேர்த்தால் 113 கோடி ரூபாய் ஆகிறது. மொத்தம் மாநிலத்தின் செலவு 396 கோடி ரூபாயில் கல்விக்காக ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு செலவழிக்கிறோம். 113 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்பதை மறந்து விடக் கூடாது, இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பின்னால் இதற்கு வர இருக்கிறேன்.

1966-67-ஆம் ஆண்டு அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் 105 இருந்தன. 1972-73-ஆம் ஆண்டிலே 176 கல்லூரிகளாக அதிகரித்திருக்கின்றன. 1966-67-ஆம் ஆண்டில் இருந்த அரசுக் கல்லூரிகள் 27 ஆகும். ஆனால் இன்றைக்கு 1972-73-ஆம் ஆண்டில் 49 கல்லூரிகள் இருக்கின்றன. கழக ஆட்சியில் ஐந்து ஆண்டுக் காலத்திலே புதிதாக வந்த கல்லூரிகள் 71 கல்லூரிகள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தொகை 1966-67-ஆம் ஆண்டில் 50 லட்சமாக இருந்தது. 1971-72-ஆம் ஆண்டில் 57 லட்சமாக உயர்ந்து, கிட்டத்தட்ட 7 லட்சம் மாணவர்கள் தொகை அதிகரித்து, இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தொகை 1966-67-ஆம் ஆண்டில் 13 லட்சத்து 4 ஆயிரமாக இருந்தது, 1971-72-ஆம் ஆண்டில் 15 லட்சத்து 38 ஆயிரமாக உயர்ந்து ஏறத்தாழ 3¼ லட்சம் அதிகமாக மாணவர்களுடைய தொகை உயர்ந்திருக்கிறது. கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1966-67-ஆம் ஆண்டில் 94 ஆயிரம் ஆகும். 1972-73 ஆம் ஆண்டில் இரண்டு லட்சம் மாணவர்கள். செலவு கல்லூரிக்கு மாத்திரம் 1966-67-ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் ஆக இருந்தது, இப்பொழுது கல்லூரிக்கு மாத்திரம் ஆகிற செலவு 10 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. மாலை நேரக் கல்லூரிகள் 1966-67-ஆம் ஆண்டில் 3 இருந்தன. படித்த மாணவர்களின் எண்ணிக்கை 520. 1972-73-ஆம் ஆண்டில் 32 மாலை நேரக் கல்லூரிகள், படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரம், 520 லிருந்து 9 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. இது கல்வித் துறையிலே நாம் கண்டிருக்கிற வளர்ச்சி.

அடுத்து, குடிசை மாற்று வாரியம். குடிசை மாற்று வாரியப் பணிகளை மற்ற மாநில அரசைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்து

தங்கள் மாநிலத்திலே இதை உருவாக்கவேண்டுமென்ற அளவுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இன்று நான் வருகிற வழியிலே அயோத்தியா குப்பத்தைப் பார்த்தேன். பீச் ரோடிலே குடிசைகள் எல்லாம் அகற்றப்பட்டு அந்த மக்கள் எல்லாம் தங்களுக்காக கட்டப்பட்ட கூடகோபுரங்களிலே இருக்கிறார்கள். ஏதோ சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் எல்லாம் இருந்ததாகச் சொல்கிறார்களே - அவர்கள் மீண்டும் வந்து ராஜ உடை அணிந்து கொண்டு கூடகோபுரங்களிலே உள்ள உப்பரிகையிலே வந்து பார்த்தால், அதைப் பார்க்கிற நேரத்திலே ஏற்படுகிற மகிழ்ச்சியை விட, அதிக மகிழ்ச்சி குடிசையிலே அன்றைக்கு வாழ்ந்த மக்கள் இன்றைக்குக் கூடகோபுரத்திலே இருப்பதைப் பார்க்கிற நேரத்திலே நமக்கு ஏற்படுகிறது.

நொச்சிக் குப்பத்தைப் பாருங்கள். அயோத்தியா குப்பத்தைப் பாருங்கள். கோட்டூர்புரத்திலே, வியாசர்பாடியிலே ஏழை மக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற எழில் மாளிகைகளைக் காணுங்கள். இதற்காக 7 ஆண்டுக்கால திட்டமொன்றை உருவாக்கி அதனை நிறைவேற்றிட திரு.இராம அரங்கண்ணல் அவர்கள் தலைமையில் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப்பட்டது. 63 திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டு மென்ற அளவில் அந்தத் திட்டத்தின் கீழ் 23,232 குடியிருப்புகள் கட்டப்பட வேண்டுமென்பது திட்டம். அவற்றில் 4,590 கட்டி முடிக்கப்பட்டவை, வேலை நடந்து கொண்டு இருப்பவை, பாதியளவுக்கு நடந்துகொண்டிருப்பவை 7,897, ஆரம்ப வேலை தொடங்கப்பட்டு இருப்பவை 10,745. இந்தத் திட்டத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டியிருக்கிறார். இந்தத் திட்டத்தை எல்லைப்புற காந்தி பாராட்டியிருக்கிறார். பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள் பாராட்டியிருக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து வருகின்ற தூதுவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். நல்லவர்கள் அனைவரும் பாராட்டி இருக்கிறார்கள்.

திரு.ஆர். பொன்னப்ப நாடார்: திருமதி. இந்திரா காந்தி அம்மையார் அந்தத் திறப்பு விழாவிற்கு வர மறுத்துவிட்டதாகச் செய்தி சொல்கிறார்களே, அது உண்மையா.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மறுத்துவிட வில்லை. பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்த காரணத்தினால் வர இயலவில்லை. நல்லது சொல்லும்பொழுது இதுதான் கண்ணிலே

படும். ஏதாவது இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்க வேண்டுமென்று தான் தோன்றுகிறது. அந்த ஒட்டுக் குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் அத்தனைபேரையும் நான் இந்திரா காந்தியாகப் பார்க்கிறேன். அந்த ஒட்டுக் குடிசைகளில் வாழ்கின்ற தாய்மார்களை எல்லாம் நான் என்னுடைய தாயாகக் காண்கிறேன். அந்தக் குடிசைகளில் வாழ்கின்றவர்களை எல்லாம் என்னுடைய சகோதரர்களாகக் காண்கிறேன். ஏழை எளிய மக்களின் ஆட்சியிலே, சாதாரணமானவர்களின் ஆட்சியிலே ஏழை எளிய மக்களுக்கு இதையாவது செய்ய முடிந்ததே என்ற நிம்மதியைக் காண்கிறேன். ஆனால் திரு.பொன்னப்ப நாடார் அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத் திறப்பு விழாவுக்கு யார் வந்தார்கள் யார் வரவில்லை என்பதுதான் குறை, நான் அரங்கண்ணல் அவர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன், திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் அடுத்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அந்த மக்களைப் பார்க்க வேண்டும். டாக்டர் அவர்களுடைய தொகுதியிலே வேலை நடந்து கொண்டிருக்கிறது, அவரும் அந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியிலே வேகமாகப் பேசக்கூடியவர்கள். அவர் உட்கார்ந்திருக்கின்றபொழுது ஹாண்டே, எழுந்தால்தான் சண்டை.

அதைப்போலவே கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் இதற்கு முன்பெல்லாம் அதிகாரிகளை மக்கள் வந்து சந்திக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் அதைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கிறோம், முழுமையாக இல்லையென்றாலும் பெருமளவுக்குக் குறைத்து இருக்கிறோம்.

1967-ஆம் ஆண்டில் மனுநீதித் திட்டம் என்ற திட்டத்தினை இராமநாதபுரம் மாவட்டத்திலே தொடங்கி இன்றைக்குத் தமிழகம் முழுவதும் பரவலாக நடத்திக் கொண்டு வருகிறோம். திங்கள்தோறும் வாரமொரு நாள் குறிப்பிட்டு மாவட்ட அதிகாரிகள் அனைவரும் எல்லாக் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். ஒரு நாளிலே கிட்டத்தட்ட 1,500 கிராமங்களுக்கு அதிகாரிகள் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய மனுக்களைப் பெற்று உடனடியாகக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். இந்த மனுநீதித் திட்டம் இந்த ஆட்சியிலே உருவாக்கப்பட்டு செம்மையாக நடைபெற்று வருகிறது.

கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் இருக்கின்ற சாதாரணக் குடிமகனுக்கு உதவிட பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் திட்டம்

உருவாக்கப்பட்டு-இருக்கின்ற நகராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 99 ஆகும். திரு.கந்தப்பன் அவர்கள் தலைமையில் இந்த அரசினுடைய ஒத்துழைப்போடு அந்தத் திட்டத்தை செவ்வனே நடத்தி வருகிறோம், தீவிரமாகப் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறோம். மொத்தம் உள்ள நகராட்சிகள் 99-லே ஏற்கெனவே வெள்ளையன் காலத்திலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 30,35 நகராட்சிகள்தான் தண்ணீர் வசதியைப் பெற்றிருந்தன. ஆனால் இன்று மொத்த நகராட்சிகள் 99-ல் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது 80 என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆலந்தூர், பல்லாவரம், ஆம்பூர், வாணியம்பாடி, பண்ணுருட்டி, ஆத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, அருப்புக்கோட்டை, இராமனாதபுரம் ஆகிய பத்து இடங்களில் இன்றைக்கு இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆய்வு வேலை நடந்து வருபவை, அம்பத்தூர், கத்திவாக்கம், மாதவரம் ஆகிய இடங்களாகும்.

"அவுட் லைன் புரப்போஸலு"க்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள் நெல்லிக்குப்பம், பொன்மலை, சிங்காநல்லூர் ஆகியவை ஆகும். ஆய்வு மதிப்பீட்டுத் தொகையை, நிதிவசதி இல்லாததால் நகராட்சி செலுத்த முன்வராத இடங்கள், சீர்காழி, கொளச்சல் பத்மனாபபுரம் ஆகியவை ஆகும்.

இவைகள் மட்டுமல்லாமல், மொத்தம் இருக்கின்ற பேரூராட்சிகள் 641, இதில் இதுவரையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டவை 55. குடிநீர்த் திட்ட வேலைகள் நடந்து கொண்டிருப்பவை 27. ஆய்வு அனுமதிக்கப்பட்டவை 145. மிச்சம் 414. இதற்காக ஒரு தீவிரமான திட்டத்தை யோசித்துக் கொண்டிருக்கின்றோம். விரைவில், தமிழகத்தில் 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லாத கிராமம், பட்டிதொட்டி எதுவுமே இல்லை என்கின்ற உன்னதமான நிலையை நாம் நிறைவேற்றியே தீருவோம், அந்தச் சபதத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டம் 1974ஆம் ஆண்டு இறுதியில் முடியக் கூடும் என்ற நல்ல செய்தியை நான் சென்னை நகரத்து மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூற்பாலைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் 14 நூற்பாலைகள்-சிக் மில்ஸ்-அவைகளை ஏற்று நடத்துவது என்று அரசு தீர்மானித்தது. கீழ்க்கண்ட மில்களை இதுவரையில்

எடுத்திருக்கிறோம். ஓம் பராசக்தி. முருகன், சோமசுந்தரா, கோவை ஸ்பின்னிங் அண்டு வீவிங், கிருஷ்ணவேணி, ஸ்ரீரெங்கவிலாஸ் கம்போடியா மில்ஸ். ஒரு மாதத்திற்கு முன் எடுத்தது, பங்கஜா, காளீஸ்வரா, சாரதா, பயோனீர், சுதந்திரா (மதுரை), பலராம வர்மா ஆகிய மில்களை ஒரு மாதத்திற்குள் எடுத்திருக்கிறோம். எடுக்கப்பட்ட 13 மில்களில் 9 மில்களில் உற்பத்தி துவங்கிவிட்டது. 4 மில்களில் விரைவில் வேலை துவங்கும் ஒரு ஆலைமட்டும். காளீஸ்வரா மில், அதன் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில், தங்களுடைய மில் சிக் மில் அல்ல என்று வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

மேற்படி மில்களை நடத்துவதற்கு நிதி உதவியை மாநில அரசு 49 சதவிகிதமும், மத்திய அரசு 51 சதவிகிதமும் தருவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு எவ்வளவு கஷ்டங்கள் இதற்காக எடுத்துக் கொண்டது. எந்த அளவிற்கு வாதாடியது. போராடியது என்பதை அறிவீர்கள். 13 மில்களுக்கும் ஒதுக்கப் பட்ட நிதி, மத்திய அரசு 164 லட்சத்து 83 ஆயிரம். தமிழ்நாடு அரசு 144 லட்சத்து 66 ஆயிரம். இதுவரை மத்திய உதவி கிடைத் திருப்பது 92 லட்சம் ரூபாய். மாநில அரசு கொடுத்திருப்பது 117 லட்சம் ரூபாய். பயன்பெறும் தொழிலாளர்கள் 13 மில்களிலும் சேர்ந்து 11,900 பேர் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே எந்த மாநிலமாவது ஆலைகள் மூடப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, வேலையிழந்து வேதனையிலே சிக்கித் தவிக்கின்ற தொழிலாளர்களுக்கு, பாட்டாளி களுக்கு நிவாரணத் தொகை அளித்ததாகக் கேட்டிருக்கிறோமா? இங்கேதான், கோவையிலே மில் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து முதலில் 5 லட்சம் ரூபாயும், மறுபடியும் தீபாவளிப் பணமாக 1 லட்சத்து ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் சுமார் 6 லட்சம் ரூபாய் முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் கொடுத்த ஒரே மாநிலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகின்ற நம்முடைய தமிழக மாநிலம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வேலைவாய்ப்புத் திட்டங்களைப்பற்றியெல்லாம் பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய சக்தி அத்தனையையும் பயன்படுத்தி, நம்மால் முடிந்த வரையில் வேலை வாய்ப்புத் திட்டங்களை மாநில அரசின் அதிகார வரம்பு, நிதிநிலை

ஆதாரம் இவைகளுக்கு ஏற்றவாறு நாம் வகுத்திருக்கிறோம். நான் முதலில் கூறியபடி இளைஞர் அணி மூலம் 3,000 பேர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. பயிற்சி ஆசிரியர்கள் 6,500 பேர்களுக்கு வாய்ப்பு.

கிராம சாலைகள்-மேம்பாடு திட்டத்தின் மூலம் மத்திய அரசின் உதவியோடு 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்து, 600 பட்டதாரிகள், 1,000 டிப்ளமா ஹோல்டர்ஸ், 1,000 கிராஃப்ட்ஸ் மென் இரண்டாண்டு பயிற்சி பெறுவார்கள். அவர்கள் பயிற்சி முடிந்த பிறகு அந்தந்தத் துறைகளிலே சேர்க்கப்படுவார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம், 3,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம் இன்றைக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கிராமப்புற சிறப்பு வேலைத் திட்டத்தின் மூலம், 15,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு.

குளங்கள், ஏரிகள் இவைகளைச், சீர்திருத்த, மேம்படுத்த, ஆய்வு செய்வதற்காக 418 பொறியாளர்கள், 607 டிப்ளமோ தாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்ஜினியரிங் பட்டதாரிகள் 20,000 ரூபாய்க்குக் குறைவான வேலைகள், காண்டிராக்ட்ஸ் எடுத்தால் 5 சதவிகிதம் வரை அதிகப்படுத்திக் கொடுக்கலாம் என்று ஆணையிடப் பட்டுள்ளது.

முதல் கிரேட் கான்ஸ்டபிள்கள் 1,000 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

105 டாக்டர்களுக்குப் புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 205 நர்ஸ்களுக்குப் புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவைகள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நம்மால் முடிந்த வரையில் செய்த சாதனைகளாகும்.

தமிழ்நாடு முழுவதும் தாங்கள் குடியிருக்கும் இடம் தங்களுக்குச் சொந்தமாக்கப்படாமல் இருக்கிறதே என்று கவலைப்பட்ட மக்கள் இலட்சக்கணக்கில் இருந்தார்கள். பெருந்

தலைவர் காமராஜர் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார், பட்டா வழங்குகிறேன், பட்டா வழங்குகிறேன் என்று சொல்கிறார்கள், இது என்ன பெரிய விவகாரம், ஏற்கெனவே குடியிருந்த இடத்தைத் தானே கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஆனால் உண்மை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே குடியிருக்கிற இடம்தான். ஆனால் அந்த இடத்தைப் பிரித்துப் பழுது பார்க்க உரிமை அவர்களுக்கு இல்லை. அந்த இடத்தின் கூரையை அகற்றிவிட்டு ஓட்டு வீடாக மாற்றி அமைக்கின்ற உரிமை அவர்களுக்கு இல்லை. அந்த வீட்டை பத்தாண்டுகளுக்குப் பிறகு விற்கவோ, அடைமானம் செய்வதற்கோ உரிமையில்லை. அந்த உரிமை இல்லாமல், எந்த நேரத்திலே வெளியேறு என்று சொன்னாலும் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலிருந்தவர்கள். காலையிலே திருப்பூர் மொய்தீன் அவர்கள் கூறியதைப்போல், வெளியேறு என்றால் வெளியேற வேண்டியவர்கள். விரட்டப்படக்கூடிய அளவில், அடிமைகளைப்போல் இருந்தவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையில், இருபதாண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட நிலப்பட்டா எவ்வளவு? 1,11,443 பட்டாக்கள் இருபதாண்டுக் காலத்தில். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில், எதிர்க்கட்சிகளின். நம்பிக்கையைப்பெற முடியாமல் இருக்கும் முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், ஐந்தாண்டுக் காலத்தில் 2,72,235 பேர்களுக்கு நிலப்பட்டா. அதைப் போலவே மனைப்பட்டா இருபதாண்டுக் காலத்தில் 63,770 பேர்களுக்கு, இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் அளிக்கப்பட்டது. ஆனால் ஐந்தாண்டுக் கால கழக ஆட்சியில் 3,52,013 பேர்களுக்கு நாம் பட்டாக்களை வழங்கியுள்ளோம்.

தஞ்சை மாவட்டத்திற்கு என்று தனிச் சட்டம் இயற்றினோம். திரு.மணலி கந்தசாமி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர். அவர் தஞ்சையிலே நடைபெற்ற குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கும் விழாவில் பேசும்பொழுது சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இரவு 12 மணிக்கு இந்தப் பட்டாக்களை வாங்கிக் கொண்டு சென்று இன்று இரவு தூங்கும்பொழுது நம்முடைய சொந்த வீட்டிலே தூங்குகிறோம் என்ற உணர்ச்சியோடு தூங்குவார்கள் என்று பெரியவர் கந்தசாமி அவர்கள் கூறினார்கள். இன்னொன்றும் சொன்னார்கள், இரத்தப் புரட்சியால் சாதிக்கக்கூடிய காரியத்தை கழக அரசு ஒரு துளி மை செலவிலே சாதித்து விட்டது என்று சொன்னார்கள். 1,54,274

போக்களுக்குத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அதிலேயும் பெரும்பாலும், அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களுக்குக் குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட்டன. ஆரம்பத்திலேகூட, அதற்கு ஒரு தொகை செலுத்த வேண்டும், அதைக் கடனாக அரசு கொடுக்கும், அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும் என்று சட்டமன்றத்திலே நாம் ஒரு முடிவை எடுத்தோம். ஆனால் அந்த முடிவு மாற்றப்பட்டு இன்றைக்கு அவர்கள் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை, அந்த மனைக்கு எவ்வளவு பணம் தேவையோ அதை மிராசுதாரர்களுக்கு அரசாங்கமே கொடுத்து விடும் என்ற முடிவையும் அரசு எடுத்திருக்கிறது. இவைகளெல்லாம் ஏழை எளிய, நடுத்தர மக்களுக்காகச் செய்யப்பட்ட காரியங்கள்.

சோஷலிசம், கம்யூனிசம் பேசுகிறார்கள். ஆனால் எந்த சோஷலிசத் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு புறக்கணித்துவிட்டது? பேருந்துகள் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு அமைந்தவுடனேயே, இங்கே பஸ்களைத் தேசீயமயமாக்க முதல் கட்டமாக 75 மைல்களுக்கு அப்பாலுள்ள வழித்தடங்கள், சென்னையிலிருந்து புறப்படும், வந்துசேரும் வழித்தடங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் வந்துசேரும், புறப்படும் வழித்தடங்கள் இவைகள் தேசீயமயமாக்கப்பட்டன.

பிறகு 10 பஸ்களுக்கு மேல் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று உச்சவரம்பு கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, 50 பஸ்களுக்கு மேல் இருந்த கம்பெனிகள் தேசீயமயமாக்கப்பட்டன. மேலும் எல்லா பஸ்களும் படிப்படியாக தேசீயமயமாக்கப்பட வேண்டுமென்று, ஆக்கப்படும் என்ற அறிவிப்பை விடுதலை நாள் வெள்ளி விழாச் சிறப்புக் கூட்டத்தில் இந்த அவையிலே அறிவித்தேன். அதற்கான விதிமுறைகளைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் சட்ட அமைச்சரோடு வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பேருந்து முதலாளிகளுக்கு ஏற்பட்ட கோபத்தைப்பற்றி இங்கே பேசியவர்கள், குறிப்பாக, ஏ.ஆர்.பெருமாள் போன்றவர்கள் சொன்னார்கள்.

யாருடைய கோபத்தைப் பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை. இருப்பது இரண்டு நாள்தான் என்றாலும், ஆட்சிச்

சக்கரம் இன்னும் ஒருநாள்தான் என்றாலும் சமதர்ம சமுதாயத்தைச் சமைக்க, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தே தீரும் என்பதை மாத்திரம் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (ஆரவாரம்).

சங்கு எடுக்கின்ற தொழிலாளர்கள் கோரிக்கை இருபதாண்டுக் காலக் கோரிக்கை. இராமநாதபுரத்தில் ஏலத்திற்கு விடுகிறார்கள், யாரோ சில பெருமக்கள் ஏலம் எடுத்து லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, சங்கு எடுக்கின்ற தொழிலாளர் களாகிய நாங்களே அதை எடுத்து விற்பனை செய்யும் உரிமையும் எங்களுக்கு வேண்டும் என்று கேட்டார்கள். பழைய ஆட்சியில் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சென்ற ஆண்டுக்கு முன்ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு சங்கு எடுக்கும் தொழிலாளர்கள் சங்கை எடுத்து அவர்களே விற்பனை செய்யும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஏன் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்ன அடிப்படையில் இன்றைக்கு அந்த உரிமை தொழிலாளர்களுக்கே வழங்கப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் தொழிலாளர்கள் அதன் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

1969-ம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது இரண்டு விஷயங்களை வெளியிட்டேன். மரமேறுபவர்களுக்கு விபத்து ஏற்பட்டால், மீனவர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்னேன். ஓராயிரம், இரண்டாயிரம் எல்லாம் என்ன பெரிய விவகாரமா என்றெல்லாம் பேசினார்கள். நடந்திருப்பது என்ன? ஆயிரம் ரூபாய் உதவிபெற்ற குடும்பங்கள் இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் 73 குடும்பங்கள். 73 குடும்பங்களில் மரம் எறியவர்கள் விபத்தின் காரணமாக இறந்துவிட்ட காரணத்தால் 73 குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் அளிக்கப்பட்டிருக்கிறது. விபத்தில் கைகால் முறிந்தவர்களுக்கு 500 ரூபாய் உதவித் தொகை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 81 பேர் அந்த உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள்.

மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது மரணம் அடைந்தால் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவித்தேன். இதுவரையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலத்தில் 105 குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,08,000 ரூபாய் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அறிவிக்கும்போது சாதாரணமாகத் தெரிந்த விஷயம் இன்றைக்கு 105 குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்கும் அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது.

விடுதலை வீரர்களுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தீர்மான வடிவில் மானியம் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேறி ஒரு ஐந்து பேருக்கு மானியம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாறிவிட்டது. மாறாமல் இருந்திருந்தால் காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து அதைச் செய்திருக்கும் ; மறுக்கவில்லை, ஆனால் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும். ஐந்து பேராக இருந்த அந்த விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 50 ரூபாய் மானியம் பெறுகிற வீரர்களின் எண்ணிக்கை இன்றைக்கு 7,448 ஆக உயர்ந்திருக்கிறது. இப்போது அந்த 50 ரூபாய் 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாமிரப் பத்திரம் பெற விடுதலை வீரர்கள் சிலபேர் டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்த ஒரே ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே நான்தான் என்று கருதுகிறேன். நானும், நாவலரும், வேறுசில அமைச்சர்களும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று தாமிரப் பத்திரம் பெற டில்லிக்குச் சென்ற விடுதலை வீரர்களை, தியாகிகளை வழி அனுப்பி வைத்தோம். கதராடைகள் அணிவித்து களிப்புற்றோம்.

டில்லிக்குச் சென்று திரும்பி வந்த பிறகு அவர்கள் சொன்னார்கள் - டில்லியில் கேட்டார்களாம் 'இங்கு எங்கள் மாநிலத்தில் தருவதைப்போல் உங்களுக்கு மானியம் தருகிறார்களா?' என்று மற்ற மாநில தியாகிகளைப் பார்த்து கேட்டார்களாம். அவர்கள் எல்லாம் அப்படி என்றால் என்ன? என்று கேட்டார்களாம் இது வேறு மாநிலங்களில் விடுதலை வீரர்களுக்குக் காட்டப்படுகின்ற உபசாரமாக இருக்கிறது!.

7,400 பேருக்கு நாங்கள் மானியம் அளித்தது மாத்திரமல்ல; கட்டபொம்மன் பரம்பரை, அவருடைய வாரிசு எங்கே இருக்கிறது

என்று தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கிறோம். வ.உ.சி. குடும்பத்தில்கூட அவரது மகள் ஆனந்தவல்லி அம்மையாரைத் தூத்துக்குடியில் பார்த்தேன். இப்போது அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

தில்லையாடி வள்ளியம்மையை மறக்காமல், தில்லை யாடியில் பிறந்து வளர்ந்து தென்னாப்பிரிக்காவில் உயிர்நீத்த நாகப்பனை மறக்காமல், நாராயணசாமியை மறக்காமல், வள்ளியம்மை நகரை உருவாக்கி, வள்ளியம்மை மண்டபத்தைக் கட்டி, அரிசன மக்களுக்காக நாகப்பன் நகர், நாராயணசாமி நகர் என்று உருவாக்கி தில்லையாடி கிராமத்தில் 10 இலட்சம் ரூபாயை இந்த அரசு தில்லையாடி வள்ளியம்மை நினைவாகச் செலவழித்திருக்கிறது.

விஸ்வநாததாஸ் பற்றி முடிதிருத்துவோர் மாநாட்டில் கேட்டுக் கொண்டார்கள். 'கொக்கு பறக்குதடி பாப்பா! வெள்ளைக் கொக்கு! பறக்குதடி பாப்பா!' என்று தேசீய மேடைகளில் முழங்கியவர் அவர் நடிகராக இருந்தாலும் போராட்டங்களில் இருந்து விதிவிலக்கு பெறாமல் (சிரிப்பு) பல போராட்டங்களில் சிறை சென்றவர் ! கஷ்ட நஷ்டங்களை ஏற்று சிறைச்சாலையில் வாடிய செம்மல் விஸ்வநாததாஸ் அவர்களின் குடும்பத்தைத் தேடிப் பிடித்து ஓய்வூதியம் அளித்து வருகிறோம்.

அது மாத்திரமல்ல, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக் குளித்து இறந்துபோன 9 வீரர்களின் குடும்பத்திற்கு 100 ரூபாய் மாத உதவித்தொகை கொடுத்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பல வகையிலும் உயிர்நீத்த, 1965-ம் ஆண்டு துப்பாக்கிப் பிரயோகத்தின்போது உயிர் நீத்த 53 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் அளித்து வருகிறோம். அப்போது இருந்த அரசு அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. இப்போது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தால் உடனே உதவித் தொகை கேட்கிறார்கள். நீதி விசாரணை கேட்கிகிறார்கள். ராஜினாமா செய் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால் 1965-ல் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்த 53 பேர்களின் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகையாக அளிக்க இந்த அரசு முடிவு செய்து அளிக்கப் பட்டிருக்கிறது.

திரு.ஆர்.பொன்னப்ப நாடார்: திருவாங்கூர் தமிழகப் போராட்டத்திலே பலரும் துப்பாக்கிப் பிரயோகத்திலே இறந்திருக்கிறார்கள். பலர் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பழைய அரசாங்கம் செய்ய மறந்ததை எல்லாம் இந்த அரசாங்கம் நிச்சயமாகச் செய்யும். திரு.நாடார் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டு விவரங்களைத் தருவார்களேயானால் நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

இவை மாத்திரமல்லாமல் தமிழகத்தில் மத்திய மாநில உறவு பற்றி ஆராயக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதனுடைய அறிக்கையையும் பெற்றிருக்கிறோம்.

இரண்டாவது சம்பளக் குழு ஏற்படுத்தப்பட்டு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.

போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டு ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திற்கென்று தனியாகத் 'திட்டக் குழு' ஏற்படுத்தப் பட்டது.

நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஏற்படுத்தப்பட்டு, அறிக்கை தரப்பட்டு அவற்றை அரசு பரிசீலித்து வருகிறது.

நெசவாளர்களின் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்யத் தனியாக ஒரு குழு திரு.சந்தானம் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம்பற்றி ஆராயத் தனியாகக் குழு பணியாற்றி வருகிறது.

பிற்பட்டோர் நலக்குழு ஏற்படுத்தப்பட்டு அறிக்கை பெறப் பட்டு பரிந்துரைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுதும் கூலி நிர்ணயம் செய்ய விரைவில் குழு அமைய இருக்கிறது.

வெளியில் சிலபேர் பத்திரிகை ஆசிரியர்களைப் பார்த்துக் கேட்டார்களாம். 'திராவிட முன்னேற்றக் கழக அரசைப்பற்றிக் குறை கூறுவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, ஏன்?' என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள் சொன்னார்களாம்–

அவர்களுக்குக் கோயில் பிடிப்பதில்லை, ஆண்டவனைப் பிடிப்பதில்லை, நாஸ்திகர்களாக இருக்கிறார்கள். ஆகவேதான் எதிர்க்கிறோம்' என்று சொன்னார்கள். ஹாண்டே அவர்களுக்கே இவ்வளவு நாள் எங்களோடு பழகியும், அண்ணா அவர்களோடு உறவாடிக் கொண்டிருந்த ஹாண்டே அவர்களுக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'ஒன்றே குலம்', ஒருவனே தேவன்' என்ற கொள்கை இதுநாள் வரை புரியாமல் இருக்கும்போது பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒருவேளை புரியாமல் இருக்கலாம், அல்லது புரிந்தும் மாறாமல் இருக்கலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த அரசைப்பற்றி.....

டாக்டர் எச்.வி.ஹாண்டே : கொள்கை என்றார்கள். என்னுடைய கொள்கை அதுதான் பலதடவை சொல்லியிருக்கிறேன். இப்போது அல்ல.

Even from my student days, I have been saying it. The late Anna also knew it.

என்னுடைய கொள்கையைப் பின்பற்றுவதில் ரொம்பச் சந்தோஷம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நம் இரண்டு பேரையும் விட வயதில் மூத்தவர் அண்ணா. அவர் சொன்ன கொள்கையை இருவரும் பின்பற்றுவோம்.

1967-ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கோவில்களை எல்லாம் இடித்து விடவில்லை. பழுதடைந்த கோவில்களில் திருப்பணி செய்யப்பட்டது. அப்படி திருப்பணி செய்யப்பட்ட கோவில்கள் 1967-ல் 200. பெரியாருக்குப் பிடிக்காது. ஹாண்டேக்கு பிடிக்கும். தமிழ்நாட்டின் பழைய கலை, கலாச்சாரம், சிற்பங்கள் இவைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறையோடு 1967-ல் திருப்பணி செய்யப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை 200. 68-ல் 90. 69-ல் 130. 70-ல் 250. 71-ல் 450. 72-ல் 700 திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

கோவில்களில் திருமண மண்டபங்கள் 1947-ல் இருந்து 1967 வரையில் 34 தான் கட்டப்பட்டன. நண்பர் கண்ணப்பன் அவர்களின் முயற்சியினாலும், இதற்கு முன்னிருந்த அமைச்சர்கள் முயற்சியினாலும் 67-72-ல் இந்த ஐந்தாண்டுகளில் 135 திருமண மண்டபங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு அந்தப் பணிகள் நடை பெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு 78 திருமண மண்டபங்கள்

கட்டப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த மன்றத் தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாக அளிக்கப்பட்டிருக்கிறது.

பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோது அரங்கண்ணல் பேசியதாக ஒரு உறுப்பினர் இங்கு குறிப்பிட்டதாகக் கேள்விப்பட்டேன். நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு வள்ளுவர் கோவிலுக்குப் போய் உட்கார்ந்து அதை சரி செய்யக் கூடாதா என்று கேட்டதாக. அவர்கள் அதைச் செய்யாவிட்டாலும் இன்று வள்ளுவர் கோவில் திருப்பணியை ஏற்றுக்கொண்டு அதில் பக்தவத்சலம் அவர்களையும் ஒரு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று வேண்டி அவர்களும் ஒப்புதல் அளித்தார். அவர்களும், நமது கண்ணப்பன் அவர்களும், திரு.அரங்கண்ணல் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், திருமதி அனந்தநாயகி அவர்களும் மற்றும் பலரும் சேர்ந்த ஒரு குழு அமைக்கப்பட்டு திருவள்ளுவர் கோவிலை நல்ல முறையில் அமைத்துள்ளார்கள். அதை நம்முடைய பழந்தமிழ் இலக்கியத்திற்குச் சான்றாக அமைக்க வேண்டும், பல இலட்சம் ரூபாய் செலவானாலும் சான்றாக அமைக்க வேண்டும், பல இலட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை அளவில், அந்தப் பணிக்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடற்கரைப் பட்டணமாக ஒரு காலத்தில் பேரோடும் புகழோடும் விளங்கிய பூம்புகார் பட்டணத்தில் கண்ணகியின் மாண்பினை சீரும் செழிப்புமிக்க இலக்கியச் செறிவை எடுத்துக் காட்டுகிற வகையில் காலத்திற்கும் அக்கடற்கரையில் கண்ணகியின் காவியம் கீதமிசைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தணியாத ஆசையோடு சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைந்து வருகிறது. வேலைகள் முடிவுற்று சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் அதைப் பார்த்து மகிழலாம், விரைவில் அந்த வாய்ப்புக் கிடைக்கும்.

இவ்வளவு சாதனைகளை, உணர்ச்சிப்பூர்வமான, உள்ளத்தைத் தொடக்கூடியதை, ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கிற மக்கள் கைதூக்கி விடக்கூடிய இவ்வளவு சாதனைகளையும் ஆற்றியிருக்கிற இந்த அரசை நடத்துகிற நாங்கள் ஜனநாயகத்தை உணராதவர்கள், ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பவர்கள் என்று -நேற்றுகூட முன்னாள் சபாநாயகர் வெகு அழகான வார்த்தைகளை எல்லாம் மிக முக்கியமானதொரு இடத்தில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள்

பிறந்ததின விழாவில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள்கூட ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகளை எல்லாம் அந்த விழாவில் பேசியிருக்கிறார்கள். 'பொய்யன் கருணாநிதியின் செவிட்டு சர்க்கார்' என்று முன்னாள் சபாநாயகர் பேசியிருக்கிறார். வேறு சிலரும் நம்முடைய ஜனநாயத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று கடைப்பிடித்து வருகிற ஜனநாயகத்தை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்.

இந்த அவைக் கூட்டங்களைக் கூட்டப்படுவதிலிருந்து அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்துவது வரையில் எந்த அளவிற்கு ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை புள்ளிவிவரங்களோடு சமர்ப்பிக்கிறேன். 1952-ல் இருந்து 57 வரையில் ஐந்தாண்டுகளில் ஒன்பது கூட்டங்கள், செஷன்ஸ், நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்ற நாட்கள் ஐந்தாண்டுகளில் 314. 1957-ல் இருந்து 62 வரையில் 10 செஷன்ஸ். கூடிய நாட்கள் 305. 1962-ல் இருந்து 67 வரையில் 9 செஷன்ஸ், கூடிய நாட்கள் 252. 67-72-ல் இதுவரையில் 15 செஷன்ஸ், கூடிய நாட்கள் 317. ஆகவே ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றிட எவ்வளவு அதிகமான நாட்களைத் தரவேண்டுமோ அதைத் தந்து இந்தச் சட்டசபைக் கூட்டங்களை நடத்த வேண்டுமோ அந்த அளவிற்கு நடத்தியிருக்கிறோம்.

அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக் கொண்டால்-சிலர் பேசுகிறார்கள், எந்த அமைச்சருடைய பைல்களையும் அவர்கள் பார்க்க முடியாதாம், எல்லாவற்றையும் முதல் அமைச்சர்தான் பார்க்கிறார், அமைச்சர்களுடைய சுதந்திரம் எல்லாம் பறிக்கப் பட்டுவிட்டன, முதல் அமைச்சர் அவர்கள் சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் என்று பேசுகிறார்கள். சில பைல்கள் முதல் அமைச்சருக்கு வரவேண்டும். சில பைல்களை அந்தந்தத் துறை அமைச்சர் அவர்களே பார்த்து முடிவு செய்யலாம். நான் நிதி அமைச்சராக இருக்கிற காரணத்தினால் பல பைல்கள் எனக்கு வந்தாக வேண்டும். ஆட்சிப் பொறுப்பில் இல்லாமலிருந் தவர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பணியாற்றியவர்களுக்குக்கூட இது தெரியாமல் ,இருப்பதற்காக உள்ளபடியே வேதனைப்படுகிறேன். யாரையும் குறைகூற இதைச் சொல்லவில்லை.

அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக் கொண்டால் மற்றவைகளைவிட குறைந்த அளவில் இல்லை. யாரையும்

கலக்காமல் எதுவும் நடைபெறவில்லை என்பதற்காகச் சான்றுகள் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். 54 முதல் 63 வரையில் ஒன்பதரையாண்டுக் காலம் மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் கூட்டிய அமைச்சரவைக் கூட்டங்கள் 61. திரு.பக்தவத்சலம் அவர்கள் கூட்டிய கூட்டங்கள் - 63 முதல் 67 வரையில் மூன்று ஆண்டுகள் ஐந்து மாதங்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள்-அவர் கூட்டிய கூட்டங்கள் 15. அண்ணா அவர்கள் 6-3-67-ல் இருந்த 2-2-69 வரையில் ஒரு ஆண்டு 11 மாதம். இதில் 11 மாதங்களைக் கழித்துவிடலாம், ஒரு ஆண்டுக் காலம் அவர்கள் கூட்டிய கூட்டங்களின் எண்ணிக்கை 8. நான் 10-2-69 முதல் இதுவரையில் மூன்று ஆண்டுகள் பத்து மாதம் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள் 47 என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அமைச்சரவைக் கூட்டங்கள் மட்டுமல்ல. எந்த ஒரு சிக்கலான பிரச்னை எழுந்தாலும், சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் எழுந்தாலும், அமைச்சர்களைக் கலந்துகொண்டு, இன்னும் சொல்லப்போனால் சில நேரங்களில் பொதுப்பிரச்சினைகளில் காவிரி நீர் தகராறு போன்ற பிரச்சினைகளில் எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு, முடிவு எடுக்கிற ஜனநாயகப் பண்பினை நாம் காத்து வருகிறோம். ஆகவே சர்வாதிகாரம் நடைபெற்றுவிடவில்லை.

திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள், ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இங்குப் போலீஸ் ராஜ்யம் நடைபெறுகிறது, அடக்குமுறை நடைபெறுகிறது, சுட்டுத் தள்ளுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தை நாம் ஏதோ மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம் என்று பொருள் அல்ல. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சில துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று விடுகின்றன. சிலரது உயிர் பறிக்கப்படுகிறது. அதற்காக வருந்துகிறோம், அனுதாபம் தெரிவிக்கிறோம். அந்தக் குடும்பங்களுக்கு நிதி வழங்குகிறோம். அதனால் அந்தக் குடும்பங்கள் முழு ஆறுதல் பெற்றுவிட முடியாது. அது எங்களுக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டில் நடைபெறுகிற துப்பாக்கிப் பிரயோகத்தை வைத்துக் கொண்டு உடனடியாக இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் ஒரு நான்காண்டு கால அகில இந்தியக் கணக்கைப்

பார்க்க வேண்டும். குஜராத் மாநிலத்தில் 69, 70, 71, 72 இந்த நான்காண்டுகளில் நடைபெற்ற கலகம் 183, செத்தவர்கள் 53 பேர்கள், காயம் பட்டவர்கள் 257 பேர்கள். மராட்டியத்தில் நான்காண்டுக் காலத்தில் நடைபெற்ற கலகம் 394, இறந்தவர்கள் 129, காயம் பட்டவர்கள் 426 துப்பாக்கிச் சூட்டினால். கேரளாவில் கலகம் 21, இறந்தவர்கள் 14, காயம் பட்டவர்கள் 165. மேற்கு வங்கத்தில் கலகம் 1,011, இறந்தவர்கள் 335, காயம்பட்டவர்கள் 511 ஆந்திராவில் கலகம் 310, இறந்தவர்கள் 213, காயம்பட்டவர்கள் 203. இந்தப் புள்ளிவிவரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் 30 பேர்கள்தான் இறந்தார்கள் என்று சொல்வதால் 30 பேர்களைச் சுட்டது சரிதான் என்று வாதிப்பவர்கள் அல்ல நாங்கள். 30 பேர்களில் 17 பேர்கள் விவசாயப் போராட்டத்தில் இறந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இதுவரையில் யாருக்கும் கொடுக்காத அளவிற்கு ரூ.5,000 அந்தக் குடும்பங்களுக்கு வழங்கினோம். ரூ.5,000 உயிரின் விலை அல்ல. ஆனால் இழந்துவிட்ட குடும்பங்களுக்கு.....

டாக்டர் எச்.வி.ஹாண்டே : முதல் அமைச்சர் அவர்களின் ஸ்டேட்மெண்டில் கலகங்கள் 23 என்று சொல்லியிருக்கிறார்கள். கலவரங்கள் குறைவாக உள்ளன. மற்ற மாநிலங்களைவிட, இது நல்ல அமைதியாக இருக்கிற மாநிலம். முல்கி பிரச்சினைப் போன்ற பிரச்சினைகள் இங்கு இல்லை. அமைதியாக இருக்கக்கூடிய இடத்தில், பிரச்சினைகளே இல்லாத மாநிலத்தில், க்ளைவ் ஹாஸ்டல் போன்ற இடங்களில் போலீஸ்காரர்கள் சென்று ஆர்ப்பாட்டம் செய்யக்கூடிய முறை தவிர்க்கப்படவேண்டுமென்று சொன்னேனே தவிர வேறு அல்ல. முன்கூட்டியே எச்சரிக்கை கொடுத்து சிறிய விஷயங்கள் பெரிய கலகமாக, பயங்கரமான நிலைமை ஏற்படாமல் இருக்கவேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்படிக் கேட்பதிலே எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அதைக் கேட்டுவிட்டு ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்கிற நேரத்தில்தான் இந்தப் புள்ளி விவரங்களைக் கூற வேண்டியிருக்கிறது.

கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் நான் வரவேற்றதல்ல. பாளையங்கோட்டைச் சம்பவத்தை எவ்வளவு வன்மையாகக் கண்டித்து இருக்கிறேன். நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல.

ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதற்கு முன்பு நடைபெற்ற கலவரங்களின் போது, நாங்கள் டாக்டர் ஹாண்டே உள்பட, எத்தனை தடவை கேட்டிருக்கிறோம், நீதி விசாரணை வேண்டுமென்று. 1965-ல் மொழிக்கிளர்ச்சி தமிழகம் பூராவிலும் நடந்த நேரத்தில் சிதம்பரம் ஒரு ஊரில் தவிர, வேறு எந்த ஊரிலும் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. 1958-ல் முதுகுளத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபோது எதிர்தரப்பு வரிசையில் இருந்த அத்தனைபேரும் கேட்டோம், நீதி விசாரணை வேண்டு மென்று. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காமராஜரும், அமைச்சர் சுப்பிரமணியமும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதோடு, எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் போலீசார் கலவரம் நடந்த இடத்திற்குப் போகமாட்டார்கள். ஆகவே, நீதி விசாரணை வைக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

பாளையங்கோட்டைச் சம்பவம்பற்றிக் குறிப்பிட்டபோது ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. மேலவையில் சங்கரலிங்கம் எடுத்துச் சொன்னார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது 1965-ம் ஆண்டில்-தூத்தூர் என்ற இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நுழைந்து தன்னை இழி மொழி கூறிய மாணவனைத் தன் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அங்கேயிருந்த மூன்று ஆசிரியர்கள் அனுப்ப முடியாது என்று கூறியதால், அந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த மூன்று ஆசிரியர்களையும் கைது செய்து, கையில் விலங்கிட்டு இழுத்துச் சென்று, அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்து விட்டார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் அதைப் பார்த்துவிட்டு, பக்தவத்சலத்திடம் கேட்ட நேரத்தில் அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்க மறுத்து இருக்கிறார்கள். அப்போதும் மாணவர்கள் கிளர்ச்சி நடைபெற்றது. அதை நாடு தழுவிய இயக்கமாக மாற்றுவதுதான் நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எல்லாவிதமான நடவடிக்கை களையும் எடுத்து இருக்கிறோம்.

பேராசிரியர் சீனிவாசனை அடித்த இன்ஸ்பெக்டர், போலீஸ் காரர்கள்மீது வழக்குப் பதிவு செய்து இருக்கிறோம். மாணவர்களின் போராட்டத்தினால் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், பேராசிரியருக்கும் தகராறு. அந்த இன்ஸ்பெக்டர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். லூர்துநாதன் தண்ணீரில்

விழுந்து இறந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதி தகுதியில் ஒருவர் நீதிவிசாரணைக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார். இவ்வளவும் நடைபெற்று இருக்கிறது.

திருச்சியில் நடந்த சம்பவம் குறித்து எனக்கு வந்த தகவல்களைக் கூறினேன். இன்னும் தகவல்களைச் சேகரியுங்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நான் நிராகரித்தேனா, புறக்கணித்தேனா, நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க என்று சொன்னேனா, பல பேர் தகவல்கள் கூறினார்கள். அமைச்சர் மாதவன் மூலமாக பிரின்சுபாலுடன் தொடர்பு கொண்டு சில விவரங்களைத் தந்தேன். நீதிவிசாரணை வைக்கப் பட்டிருக்கிறது. நீதி விசாரணை வைக்கப்பட்டபிறகும் இன்று ஹர்த்தால் நடத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அமைதியாக நடைபெற்று இருக்கிறது.

நேற்று இங்கே ஒரு அறிக்கை, காங்கிரஸ் மாணவர்களால் அல்ல, சுதந்திரா மாணவர்களால் அல்ல, கம்யூனிஸ்ட் மாணவர்களும், அ.தி.மு.க. மாணவர்களும் சேர்ந்து வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொன்னார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் அல்ல. சட்டக்கல்லூரியில் நடைபெற்று இருக்கிறது. சட்டக்கல்லூரி மாணவர்கள் 5, 6 பேர் பிற்பகலில் குறளகத்தின் உள்ளே சென்று இருக்கிறார்கள். இங்கே எதற்காக வருகிறீர்கள் என்று கேட்ட போது அங்கேயிருக்கும் கேன்டீனில் நாங்கள் காப்பி சாப்பிடப் போகிறோம் என்று சொல்லி உள்ளே நுழைந்து, அங்கே மாட்டப்பட்டிருக்கும் முதலமைச்சர் படம்- என்னுடைய படத்தை உடைத்து நொறுக்கிப் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். நான் கேட்கிறேன். நாம் மாணவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியதுதான். மாணவர்கள் மென்மையாக நடத்தப்பட வேண்டியவர்கள்தான். அதற்காக இதே மாதிரியான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே போனால், மாணவர்கள் என்ற ஒரே ஒரு தலைப்பின்கீழ் வருகிற காரணத்தால் எல்லா வன்முறைகளையும் நாம் அனுமதித்துக்கொண்டே போனால், நாடு எங்கே போய் நிற்கும்? அதைத் தயவுசெய்து அனைவரும் சிந்திக்கவேண்டும்.

என்னுடைய படம் உடைக்கப்பட்டதற்காக நான் கவலைப் படவில்லை. ஆயிரம் படத்தை உடைக்கட்டும் கவலையில்லை. என்னுடைய படத்தின்மீது சாணத்தை வீசுகிறார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. என்னுடைய படத்தின்மீது சாணத்தை

வீசிவிட்டு, கையை அசிங்கப்படுத்திக்கொள்கிறார்களே என்றுதான் கவலைப்படுகிறேன். கையையும் கருத்தையும் அசிங்கப்படுத்திக் கொள்கிறார்களே, எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்களே என்ற கவலைதானே தவிர வேறு அல்ல. சட்டக் கல்லூரி மாணவர்கள் ஹர்த்தாலில் ஈடுபட்டால், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், அமைதியாக ஊர்வலம் செல்ல வேண்டும். அப்படியில்லாமல், குறளகத்தில் நுழைவானேன், அங்கேயிருக்கும் படத்தை உடைப்பானேன்? யாராவது தடுத்தால் குறளகத்தில் போலீசார் நுழைந்து அடித்தார்கள் என்று செய்தி வரும். நாளைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் வரும். பத்திரிகைகளில் செய்தி வேறு பெரியதாகப் போட்டாலும் போடலாம். மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதால் அவர்களின் எதிர்காலம் பாழடிக்கப்படுகிறதே என்றுதான் கவலைப்படுகிறேன்.

மாணவர்கள் கிளர்ச்சி தமிழ் நாட்டில் மட்டும் நடப்பதாக யாரும் எண்ணிக் கொள்ளக்கூடாது. உலகம் முழுவதும் நடை பெறுகிறது. இங்கேயும் நடைபெறுகிறது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. டெல்லிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கிளர்ச்சி. துணைவேந்தர் தாக்கப்பட்டார், பல்கலைக்கழக அலுவலகத்தை மாணவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள், காவலர் தலையிட்டார்கள் ஒரு மாதகாலமாக அந்தப் பல்கலைக்கழகம் மூடிக்கிடக்கும் நிலைமை, பஸ்கள் தீயிடப்பட்டன, ஆகிய சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

கௌகத்தி பல்கலைக்கழகம், அஸ்ஸாம் மாநிலத்தில் இருக்கிறது. அந்த மாநிலத்தில் மொழிக்கிளர்ச்சி, பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன, எங்கும் வன்முறைச்செயல்கள், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு முழுவதும் கலவர சூழ்நிலை. இப்படி மாணவர்களைப் பற்றிய செய்திகள் வராமல் இல்லை. ஆந்திரப் பிரதேசத்தில், டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், முல்கி விதிகளைக் குறித்து, ஆந்திரா தெலிங்கானா பகுதிகளில் மாணவர்களின் வன்முறைக்கிளர்ச்சி, கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடக்கின்றன, அரசு சொத்துக்களுக்கும், பொதுச்சொத்துக்களுக்கும் அதிகமான சேதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தில் 40 நாட்களாகப் பல்கலைக்கழகங்கள் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. வன்முறைக்

கிளர்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. காவலர் கல்வி நிலையங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

பஞ்சாப்-ஹரியானா மாநிலங்களில் சினிமா டிக்கெட்டின் விலை குறைக்கப்பட வேண்டுமென்று மாணவர்கள் தொடுத்த கிளர்ச்சியின் காரணமாக கல்வித் துறையும் பொது வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று செய்தி வந்திருக்கிறது. துப்பாக்கிச் சூட்டில் பல பேர் சாவு, காயமுற்றோர் பலர், இன்னும் அங்கே அமைதி நிலைமை ஏற்படவில்லை. இங்கே மத்திய போலீஸ் அழைக்கப்பட்டதற்கே குறை கூறிய பொன்னப்ப நாடார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், அங்கே ராணுவமே வரவழைக்கப்பட்டிருக்கிறது. ஏழு வாரத்திற்கும் மேலாகக் கல்வி நிலையங்கள் மூடிக் கிடக்கின்றன.

குஜராத்தில் மாணவர்கள் கிளர்ச்சி. துணைவேந்தரை ராஜினாமா செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அந்தக் கிளர்ச்சியின் சூடு தாங்காமல் துணைவேந்தரே உண்ணாவிரதம் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடு, சாவு ஆகிய நிலைமைகளால் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

பீகார் மாநிலத்தில் பாட்னா பகுதியில் மாணவர்கள் கிளர்ச்சியை ஒட்டி வன்முறைச்சம்பவங்கள், துப்பாக்கிச் சூடு, சாவு, பல்கலைக்கழகங்களில் அடிக்கடி தகராறு, பல நாட்களாக மூடப்பட்டுக் கிடக்கின்ற நிலைமை.

வங்காளத்தில் சென்ற இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாகவே வன்முறைச் செயல்களின் காரணமாகப் பல்கலைக்கழகங்கள் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இது அனைவரும் அறிந்த ஒன்று.

கேரளத்தில் தனியார் துறை கல்லூரி நிர்வாகத்தினருக்கும் அரசுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணமாகப் பல கல்லூரிகள் இரண்டு திங்களுக்கு மேல் மூடிக்கிடக்கின்றன. அதனை ஒட்டி கிளர்ச்சிகள் உருவாகியதை நாம் யாரும் மறந்து விடவில்லை.

இந்த நம்பிக்கை கோருகிற தீர்மானத்தில் பேசியவர்களும், எல்லா கட்சிகளும் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்கள் பொதுக்கோரிக்கைகளுக்காக, ஒரு மொழியால் தாங்கள் பாதிக்கப்படுகிறோம், அல்லது பயிற்சி

மொழித் திட்டத்தால் அவர்களுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன, அவர்களுடைய உணவு விடுதியில் இத்தகைய கஷ்டங்கள், கல்லூரியில் வசதியில்லை போன்ற கோரிக்கைகளை வைத்துப் பேச்சுவார்த்தை மூலமாக, அமைதியான கிளர்ச்சியின் மூலமாக தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டுமே யல்லாது எடுத்ததற்கெல்லாம் கிளர்ச்சி, போராட்டம், யாரோ ஒருவரை ஒரு கட்சியில் இருந்து விலக்கினால் அதற்குப் போராட்டம், அதற்காகக் கல் எறிதல், சர்க்கார் உடைமைகளுக்குச் சேதம் என்ற காரியங்களில் மாணவர்கள் ஈடுபடுவது உள்ள படியே தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும், மாணவர்களுடைய எதிர்காலத்திற்கும் உகந்தது அல்ல. மாணவர்கள், எடுத்ததற்கெல்லாம் போராட்டத்தில் ஈடுபடுவோம், வன்முறை களில் ஈடுபடுவோம் என்று சொன்னால் அதை யாரும் வரவேற்க மாட்டார்கள். திரு.ஹாண்டே அவர்களும் அதைத்தான் வலியுறுத்திப் பேசினார்கள். திரு.பொன்னப்ப நாடார் அவர்களும் அதை வரவேற்கத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்த அவையின் சார்பாக மாணவர்களைக் கேட்டுக் கொள்வேன். அவர்களுடைய எதிர்காலத்தை மறந்து விடாமல், ஒளி மயமான எதிர்காலத்தை இந்த இளமைத் துடிப்பின் குறும்புகளால், இப்படிப்பட்ட கிளர்ச்சியால் அவர்கள் கெடுத்துக் கொள்வது நல்லது அல்ல என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கே எடுத்துப் பேசப்பட்டன. நம்பிக்கை இல்லை இந்த அரசின்மீது. ராஜினாமா செய்யவேண்டும் இந்த அரசு என்று பேசிய திரு, பொன்னப்ப நாடார் அவர்களும், திரு.ஜேம்ஸ் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் குற்றச்சாட்டுகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு வகையில் எங்களுக்கு நிம்மதி. பிரதமரிடத்திலிருந்து நாங்கள் அனுமதி பெறுவதற்கு முன்பே மர்மப் பேழையின் முக்கால் பகுதி திறக்கப்பட்டுவிட்டது. ஆனால் டெல்லிக்குக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு போனவர்கள் நல்ல சாமர்த்தியசாலிகள். அவர்கள் தாங்கள் வந்து இங்கே ஆழம் பார்ப்பானேன் என்று பொன்னப்ப நாடார் அவர்களையும், ஜேம்ஸ் அவர்களையும் விட்டு ஆழம் பார்த்துவிட்டார்கள் (டாக்டர் ஹாண்டே எழுந்தார்) நீங்கள் இல்லை. அவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

சட்டசபையிலிருந்து பேசமாட்டார்களாம், பொது மக்களிடத்தில் சொல்லமாட்டார்களாம். சட்டமன்றத்தில் பேசுங்கள், நல்ல பாதுகாப்பு உண்டு, சட்டமன்றத்தில் எதையும் பேசலாம், அந்தப் பாதுகாப்பு இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது, பதில் சொல்கிற கடமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் இங்கே பேச வருவதில்லை. பொது மக்களிடத்திலே பேசுங்கள், பத்திரிகைகளிலே வரட்டும், நீங்கள் எதிர்பார்க்கின்ற நீதி விசாரணை, உயர்நீதி மன்றத்தில் நாம் நடத்திக்கொள்ளலாம் என்று சொன்னோம்.

பேராசிரியர் அன்பழகன், நேற்றோ, அதற்கு முன்தினமோ குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுகிறவர்கள் தப்பித்துக்கொள்வது, குற்றம்சாட்டப்பட்டவர்கள் மாத்திரம் விசாரணைக்கு உட்படுவது என்பது சரியான நியாயமாகாது என்று குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுபவர்களுக்கு என்ன தண்டனை?

ஆகவேதான், நீதிமன்றத்தில் சந்திப்போம், தைரியம் இருந்தால், துணிவு இருந்தால், பல்லாயிரக்கணக்கான மக்கள் மன்றத்தில் கூறுங்கள். கருணாநிதி என்ன குற்றம் செய்தார், நெடுஞ்செழியன் என்ன குற்றம் செய்தார், நடராசன் என்ன குற்றம் செய்தார், சத்தியவாணிமுத்து என்ன குற்றம் செய்தார் என்று தைரியம் இருந்தால், துணிவு இருந்தால், திராணி இருந்தால், தெம்பு இருந்தால், வக்கு, வகை இருந்தால் பொது மக்கள் முன்னால் கூறட்டும், நீதிமன்றத்தில் சந்திப்போம் என்று கூறினோம். அங்கும் கூற முடியாதாம். சட்டமன்றத்தில் கூறுங்கள், பவ்யமாகப் பேசுவோம், இங்கே பாதுகாப்பு உண்டு, நான் பாதுகாப்பு என்று சொல்வது ஏதோ வன்முறையிலிருந்து பாதுகாப்பு என்று கருதிக் கொள்ளவேண்டாம். சட்டமன்றத்தில் சில உரிமைகள் இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பாதுகாப்பிற்குள், அந்த வளையத்திற்குள் நின்று பேசுகின்ற உரிமை, ஜனநாயகக் கடமை இருக்கிறது, இங்கே பேசுங்கள் என்று கூறினோம். இங்கேயும் பேசமாட்டோம், அங்கேயும் பேச மாட்டோம். மர்மயோகியின் மர்மப் பேழையில் இருக்கிறது, ஆகவே மர்மப் பேழையின் உள்ளே இருப்பதை விசாரணை வைத்துத்தான் ஆராயவேண்டும் என்று சொன்னால், இதைவிட வேடிக்கை, வேதனை என்ன இருக்க முடியும் ?

நடப்பது கொள்கைப் போராட்டமா? கம்யூனிஸ்டு கட்சி அல்லது வேறு சில கட்சிகள், தி.மு.க 50 பஸ் விடுகிறவர்களைத் தான். அவைகளைத்தான் எடுத்துக்கொண்டு தேசீயமயமாக்கி

இருக்கிறது, அது போதாது, உடனே எல்லா பஸ்களையும் தேசீய மயமாக்கவேண்டும் என்று வாதிட்டால் எனக்குப் புரியும். இது கம்யூனிஸ்டு கட்சி, இது தீவிரமாகப் போராடுகிறது என்பது எனக்குப் புரியும். அவ்வளவு பேர்களின் பஸ்களையும் எடுத்துக் கொள்ளாதீர்கள், படிப்படியாக எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது தனியார்உரிமையைப் பாதுகாத்துக் கொடுங்கள் என்று சுதந்திராக் கட்சி வாதிட்டால் எனக்குப் புரியும். அதைப்போலவே அதிக வேகமாகச் செல்லாதீர்கள். நிதானமாகச் செல்லுங்கள் என்று காங்கிரஸ் கட்சியோ, அல்லது மற்றைய கட்சியோ எடுத்துச் சொன்னால் எனக்குப் புரியும். நிலச் சீர்திருத்தம் இந்த அளவுக்குப் போதாது, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும். மடங்களின் சொத்துக்களையெல்லாம் அபகரித்துக் கொள்ள வேண்டும், கோவில்களின் சொத்துக்களை எடுத்துக்கொள்ளக்கூடிய அந்த அளவுக்குச் சமுதாய சீர்திருத்தம், சோஷலிஸம் வர வேண்டும். என்று கம்யூனிஸ்டுக் கட்சி வாதிட்டால், எனக்குப் புரியும். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை மாத்திரம் சொந்தமாக்கியிருக்கிறீர்கள், போதாது, அவர்கள் வீடு கட்டுவதற்குப் பணம் வேண்டும் என்று கம்யூனிஸ்டு வாதிட்டால் எனக்குப் புரியும். ஆனால், இவை அனைத்தையும் இன்றைக்கு மறந்துவிட்டார்கள். என்ன காரணம்? கம்யூனிஸ்டு கட்சிக்கு இருக்கிற பயம் என்ன? நம்முடைய கொள்கைகள் அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்துகிறது, ஆகவே, நம்முடைய கட்சி கால் ஊன்ற முடியாத நிலை ஏற்படுகிறது, ஆகவே கொள்கை ரீதியிலே நம்மோடு வாதிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அதன் காரணமாகத்தான் லஞ்சம், ஊழல் என்ற வார்த்தைகளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஊரிலே பேசுகிறாகள். குற்றச்சாட்டுகளை ஆங்காங்கு வாரி வீசுகிறார்கள். தங்களுக்கு வெளியிட தைரியம் இல்லாமல் பத்திரிகைகளுக்குக் கொடுக்கிறார் கள். பிறரிடம் சொல்லி, நீங்கள் போய் கொடுங்கள் என்று கூறுகிறார்கள். நீங்கள் விசாரணை நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். கொள்கைப் போரா? நிலச் சீர்திருத்தம் போதாது என்று கொள்கைப் போரா? தேசீய உடைமைத் தத்துவத்தில் ஓட்டை உடைசல்கள் என்று கொள்கைப் போரா? விதிவிலக்கு இன்னும் ரத்து செய்யப்பட வேண்டும் வேகமாக. செய்யப்பட்டிருக்கிற விதிவிலக்குகள் போதாது என்கின்ற கொள்கைப் போராட்டமா? அல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் 1952-ம் ஆண்டில் நடைபெற்ற சென்னை மாநகரத்தில் நடைபெற்ற

தி.மு.க. பொது மகாநாட்டில் சொன்னார்கள். தமிழகத்தில் உண்மையான கம்யூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று சொன்னார்கள். அதை இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது இந்த ஆட்சி. இப்படியே நீடித்தால் வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சிக்கு இடமே இல்லாமல் போய்விடும் என்ற பயத்தின் காரணமாக ஊழல், லஞ்சம் என்று பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் தலையீடுகள் என்று பேசுகிறார்கள். நிர்வாகத்தில் தலையீடு என்ற குற்றச்சாட்டு. திரு. பக்தவத்சலம் அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்தேன். 'எனது நினைவுகள் ' என்ற புத்தகம், அதிலே 106-வது பக்கம், குறித்துக் கொள்ளலாம். நான் புத்தகத்தை எடுத்துவரவில்லை. அதிலே அவர் குறிப்பிடுகிறார். 'காமராஜின் சிபார்சுகள்' என்கின்ற தலைப்பில் சொல்கிறார்கள்.

> "காமராஜ் பல முறை பல விஷயங்கள்பற்றி என்னிடம் சிபார்சு செய்திருக்கிறார். அவர் சொல்லும் விஷயம் 'தகாதது அல்ல' என்று இருந்தால் உடனடியாக அதைச் செய்திருக்கிறேன். சாதாரணமாக நான் செய்யாமல் இருந்திருக்கக்கூடியதைக்கூட காமராஜர் சொல்கிறார் என்பதற்காகச் செய்திருக்கிறேன்."

திரு.பக்தவத்சலம் அவர்கள் 'எனது நினைவுகள்' என்ற புத்தகத்தில் 'காமராஜின் சிபார்சுகள்' என்ற தலைப்பின்கீழ் எழுதிய வாசகங்கள் இவை. 110-ம் பக்கத்தில் இன்னொன்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> "ஒரு திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவரை விட்டு விடுமாறு ஒரு எம்.எல்.ஏ. சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிறார். சப்-இன்ஸ்பெக்டர் அவ்வாறு செய்ய மறுத்து விடுமாறு ஒரு எம்.எல்.ஏ சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறி அவரை மாற்றவேண்டுமென்று அந்த எம்.எல்.ஏ வற்புறுத்தியிருக்கிறார்".....

.தான் சொல்வதைக் கேட்காவிட்டால் ஊழல் புகார் கிளப்பப்படும் என்பது அந்த எம்.எல்.ஏ. காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்மீது ஊழல் புகார் கூறி அவரை மாற்ற வேண்டும் என்று அந்த எம்.எல்.ஏ. வற்புறுத்தியிருக்கிறார்.

> "அப்போது விவசாய மந்திரியாக இருந்த கக்கன், அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுமாறு ஜில்லா

சூப்ரண்டிடம் கூறியிருக்கிறார். நான் தஞ்சாவூர் போயிருந்தேன். இதை ஜில்லா சூப்ரண்ட் என்னிடம் சொன்னார். நான் அப்போது உள்துறை மந்திரி. அந்த நேர்மையான சப்-இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டாம் என்று நான் சூப்ரெண்டிடம் தெரிவித்தேன்."

திரு.பக்தவத்சலம் 'எனது நினைவுகள்' என்ற புத்தகத்தில் கக்கனை ஜாடையாகக் குறை கூறிய வாசகம் இது. ஆகவே, நிர்வாகத்தில் தலையீடுகள் அந்தக் காலத்தில் இருந்திருக்கின்றன. பக்தவத்சலம் அவர்களும் நிர்வாகத்தில் தவறான தலையீடுகள் கூடாது என்பதைத்தான் சொல்லியிருக்கிறார்.

டாக்டர் எச்.வி.ஹாண்டே : புத்தகத்தில் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே மாதிரி எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களும் உங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். எது உண்மை, எது உண்மை இல்லை என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் பக்தவத்சலம் அவர்களைக் குறை கூறிச் சொல்லவில்லை. பக்தவத்சலம் அவர்கள் கூறியதை எடுத்துக் கொண்ட நோக்கமே தவறான காரியங்களில் நிர்வாகத்தில் தலையீடு கூடாது என்பதுதான். அதைத்தான் பக்தவத்சலம் அவர்களும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேனே அல்லாமல், வேறு இல்லை.

ஊழல், ஊழல் என்று பேசப்படுகிறது. தலைவர் காமராஜ் அவர்கள் நேற்றையதினம் அறிவித்துவிட்டார். தெளிவாக, திட்ட வட்டமாக அறிவித்துவிட்டார். ஸ்தாபன காங்கிரஸ் தி.மு.க. வைத் தனியாக நின்று எதிர்க்கும், எதிர்த்து வெற்றி கொள்ளும் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். நான் அன்றைக்குச் சொன்ன அந்த மூன்று அணிகள் தமிழகத்தில் எதிர்காலத்தில் பொதுத் தேர்தலில் ஒன்றை ஒன்று நிச்சயம் சந்திக்கும் என்கின்ற கருத்துக்கு நேற்றையதினம் காமராஜ் அவர்கள் பச்சைக் கொடி காட்டிவிட்டார் என்பதுதான் நான் அதற்குக் கொள்கிற பொருள் ஆகும். காங்கிரஸ் கட்சியின் தலைமையில் உள்ள அணி, ஸ்தாபன காங்கிரஸ் தலைமையில் உள்ள அணி, தி.மு.க தலைமையில் உள்ள அதன் தோழமைக் கட்சிகள் அணி, இந்த மூன்று அணிகள்தான். இன்று முன்னேற்றக் கழக ஆட்சியில் இருக்கிற கொள்கை, கோட்பாடுகளைப்பற்றி விமர்சிக்காமல் காமராஜ் போன்ற பெரும்

தலைவர்கள் ஊழல், ஊழல் என்று சொல்கிறார்களே என்று எண்ணும்போது உள்ளபடியே வருத்தப்படுகிறேன். சில விஷயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். காமராஜ் அவர்கள் கன்னியாகுமரித் தொகுதியில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டார்கள். சி.சுப்பிரமண்யம் அவர்களே சட்டமன்றத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், இங்கே நிதி அமைச்சராக இருந்த பொழுது. "நாம் யாரும் நமக்கு ஆன தேர்தல் கணக்கைச் சபையில் சொன்னால், ஒருவர்கூட எம்.எல்.ஏ.ஆக வர முடியாது" என்று திரு.சி.சுப்ரமண்யம் அவர்கள் இங்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். காமராஜுடைய நாடாளுமன்றத் தேர்தலின் செலவுக் கணக்கு அவர் கொடுத்த கணக்காக இருக்க முடியுமா? இப்படிக் கேட்கிற காரணத்தால் "உன் சேதி என்ன?" என்று கேட்க முடியும். ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டேயிருந்தால் ஊழல் எங்கே இருக்கிறது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, நான் அதை சூசகமாக விட்டுவிடுகிறேன்.

காமராஜ் அவர்கள் "சமவாழ்வு" என்ற புத்தகத்தில் இந்த ஊழல் லஞ்சம் என்பதைப்பற்றி அழகான மணிவாசகங்களைத் தமிழகத்திற்கு தந்திருக்கிறார்கள். "சமவாழ்வு" புத்தகம் - பக்கம் 37. அதில் சொல்லுகிறார் :

> "லஞ்சத்தை ஒழித்து விடுவேன் என்று ராஜாஜி கூறுகிறாரே; அவர் என்ன பரசுராமர் அவதாரமா?"

என்று காமராஜ் கேட்கிறார். பிறகு அவரே---

> "லஞ்சம் இல்லை என்று யார் கூறுகிறார்கள். அந்தக் காலம் முதல் லஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இப்போது கொஞ்சம் அதிகமாகி விட்டது. ராஜாஜி ஆண்ட காலத்தில் லஞ்சமே இல்லையா என்ன?"

இது காமராஜுடைய கேள்வி. பிறகு "சமவாழ்வு" புத்தகம்-- 38-ம் பக்கம்:

> "ஆயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு லஞ்சம் கொடுக்க வருவதால் அவன் அதை ஏலத்துக்கே விட்டு விடுகிறான".
>
> " ஏலம் எடுத்தவன் போக லஞ்சம் கொடுக்கப் போன மற்ற 999 பேரும் 'லஞ்சம், லஞ்சம்' என்று கூப்பாடு போடுகிறார்கள். ஏழைக்கு ஒன்றுமே புரியவில்லை. லஞ்சமா?

யார் கொடுக்கிறார்கள்? யார் வாங்குகிறார்கள்? என்று விழிக்கிறான். இதற்குக் காங்கிரசா பொறுப்பு?".

இது காமராஜுடைய கேள்வி. அடுத்து--

"காங்கிரஸ் அரசாங்கம் வந்தவுடன் ஊழல் வந்து புகுந்து விடவில்லை. அது 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. காரணங்களைக் கண்டறிந்து இத் தீங்கைக் களைய வேண்டும்"

5,000 ஆண்டுக் காலமாக லஞ்சம் ஊழல் இருந்து வருகிறது என்ற வரலாற்றை காமராஜ் அவர்கள் உலகிற்கு உணர்த்துகிறார்.

"காங்கிரசில் உள்ள கடைசித் தொண்டனாவது இவ்வளவு பணம் வாங்கினான் என்று நிரூபிக்க முடியுமா? நிரூபிக்க முடியாது என்று தெரியும், ஊழல்பற்றிக் கூச்சல் போடுபவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்" (பலத்த கைதட்டல்)

இதை ஒவ்வொருவரும் சுவரொட்டி போட்டு ஒட்டி வைக்க வேண்டும். "ஊழல்பற்றி கூச்சல் போடுகின்றவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்''. இது காமராஜ் ''சமவாழ்வு'' புத்தகத்தில் எழுதியிருக்கின்ற பொன்மொழிகள். அவர் "நிரூபிக்க முடியுமா?" என்று கேட்கிறார். "நிரூபிக்க முடியுமா?" என்று நாங்கள் கேட்டால் அது தவறாகிறது. காமராஜ் கேட்டார் அப்போது லஞ்சம் ஊழல் என்கிறீர்களே, நிரூபிக்க முடியுமா என்று. லஞ்சம் ஊழல் என்று சொல்லியே, இதையே தாரக மந்திரமாக வைத்து இந்த ஆட்சியை ஒழித்துவிடலாம் என்று 71-லே கங்கணம் கட்டினார்கள். தொடர்ந்து அதையேதான் இன்றைக்கும் சொல்லி வருகிறார்கள். அ.தி.மு.க. அந்தப் பணியை வேகமாகச் செய்கிறது. ஹாண்டே அவர்களையும், பொன்னப்ப நாடார் அவர்களையும் விட்டுவிட்டு, அந்தப் பக்கம் திரும்பினால் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதற்காக அந்தப் பக்கம் போகிறேன்.

அ.தி.மு.க, அண்ணா தி.மு.க. என்று அவர்கள் பெயரிட்டு அழைத்தாலும், அ.தி.மு.க.வில் அண்ணா அங்கே இல்லை, அண்ணாவின் கொள்கைகள், அண்ணாவின் கொள்கையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அண்ணாவின் ஜனநாயக நெறி, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. (பலத்த கைதட்டல்). அ.தி.மு.க.-வில் உள்ள அந்த 'அ'-வை முன்னால் சேர்த்தால் நல்ல பொருள் வரும்! 'நீதி' 'அநீதி' ஆகும். 'தர்மம்' 'அதர்மம்' ஆகும். 'நியாயம்' 'அநியாயம்' ஆகும்.

அ.தி.மு.க. என்பது தி.மு.க. கொள்கைக்கு எதிரானது. (கைதட்டல்).அதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். ஆகவே அ.தி.மு.க. என்பது அண்ணாவுக்கு விரோதமாக, தமிழகத்திற்கு விரோதமாக, தி.மு.கழகத்தின் கொள்கையான மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக இன்றைய தினம் செயல்பட்டு வருகின்ற ஒரு புதிய கட்சியாகும். அந்தப் புதிய கட்சி எத்தனை நாளைக்கு இருக்கும், என்றைக்கு அது இந்திரா காங்கிரசோடு இணையும் என்பதெல்லாம் வேறு விஷயம்.

ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை, அதுவும் முன்னணியிலே இருக்கிற முக்கியமானவர்களை மிரட்டி, டெல்லியில் இருக்கிற அதிகாரங்களைக் காட்டி பணியவைத்து விடலாமென்று நடைபெறுகின்ற முயற்சிகளை, இந்த மாமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களும் நம்மோடு சேர்ந்து எதிர்ப்பர் என்பதில் எனக்கு கிஞ்சித்தும் ஐயமில்லை.

காலையில் நம்முடைய நண்பர் அரங்கண்ணல் குடிசை மாற்று வாரியத்தின் தலைவர், மிக்க வேதனையோடு தனக்கு விளைவிக்கப்பட்ட ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். டெக்னிகல் எரருக்காக 4,000, 5,000 அபராதம் போட்டார்கள். அவர் அதற்கு அப்பீல் செய்து வாதாடப் போகிறார். இன்கம்டாக்ஸ் ஆபீசர் ரெய்டு நடத்துகிறார். மறுநாள் கவர்னர் என்னிடம் கேட்கிறார் 20 லட்சம் ரூபாய் அரங்கண்ணல் வீட்டிலிருந்து எடுத்து விட்டார்களாமே என்று. அரங்கண்ணலைப் பார்த்து பக்தவத்சலம் கேட்கிறார் 12 லட்சம் எடுத்துவிட்டார்களாமே என்று. பத்திரிகையில் செய்தி வருகிறது. அரங்கண்ணல் வீட்டில் ரெய்டு. பெரிய சோதனை. இருபது லட்சம் எடுத்துவிட்டார்கள் என்ற செய்தி வருகிறது. இப்படி நான் டெல்லியிலே இருக்கின்றவர்களை இந்த நேரத்தில் குற்றம் சாட்ட விரும்பவில்லை. கீழே இருக்கின்ற குட்டித் தேவதைகளை, அந்தத் தேவதைகளைப் பிடித்து ஆட்டிப்படைக் கின்ற தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சில தேவதைகள் இந்தக் காரி யத்தில் ஈடுபடுகிறார்கள்.

நான்கு, ஐந்த நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டத்தின் கழகச் செயலாளர் ராஜமாணிக்கம் அவர்களுடைய வீட்டில் வருமான வரி அதிகாரிகள் திடீரெனப் பிரவேசித்தார்கள். அரங்கண்ணல் வீட்டில் இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் எடுத்த தொகை வெறும் 60

ரூபாய். ராஜமாணிக்கம் வீட்டில் சென்று அவர்கள் சோதனை நடத்தினார்கள். அங்கே ஆயிரம் ரூபாய் இருந்தது. எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். ஐந்து, ஆறு ஆயிரம் ரூபாய்க்கு நகைகள் இருந்தன. அந்த ராஜமாணிக்கம் அவர்கள் இன்று, நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக கோயம்புத்தூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து வருகின்றவர். இன்னும் சொல்லப்போனால் சிங்கநல்லூரில் 40 ரூபாய் வாடகைக்கு நான் ஒரு வீட்டில் குடியிருந்தபோது, அரிசிக்குக் கஷ்டப்படுகிற நேரத்தில், என்னுடைய வீட்டிற்கு அரிசி கொண்டுவந்து, கொடுத்து, என்னுடைய வீட்டில் உலை பொங்க வைக்கின்ற அளவுக்கு அன்றைய தினம் வசதிபடைத்திருந்தவர். ஒரு கடையில் குமாஸ்தாவாகப் பணியாற்றி சம்பாதித்தார். அவருக்கு அவருடைய கழகப் பணியை கௌரவிப்பதற்காக, கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தார் நிதி வசூல் செய்து, என்னை அழைத்து 40 ஆயிரம், 45 ஆயிரம் - அண்மையில் கக்கன் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள்'-அதைப் போல, அன்றைக்கு ராஜமாணிக்கத்திற்கு 45 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு வீடு வாங்கித் தந்தோம். அந்த வீட்டிற்கு வாங்கிய பத்திரம் அவருடைய வீட்டில் இருந்திருக்கிறது. அதைப்பற்றி 'பஞ்சன் லாமாவோ', 'தலைலாமாவோ' அந்த 'பஞ்சன் லாமா' பத்திரத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாற்பத்தேழு ஆயிரம் ரூபாய் பத்திரம், ஆயிரம் ரூபாய் பணம் ஆகிய இதையே கைப் பற்றவில்லை. கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஆக, இப்படி முன்னேற்றக் கழகத்திலே யார், யார், எங்கெங்கே தூண்களாக இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் மிரட்டுவது என்ற அளவுக்கு வருமானவரி இலாக்கா அவர்களுடைய கையிலிருக்கிறது என்கின்ற காரணத்தினாலும், என்ஃபோர்ஸ்மெண்ட் இலாகா தங்கள் கையில் இருக்கிறது என்ற காரணத்தினாலும் மிரட்டி, இன்றைக்குச் சில பேரைப் பணிய வைக்கலாம் என்று கருதியிருக்கிறார்கள். அவர்கள் தேடிப் பார்த்து, பணத்தைக் கைப்பற்ற வேண்டிய இடங்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. அங்கேயெல்லாம் என்ன செய்கிறார்கள் தெரியுமா? சமரசம் பேசிக் கொள்கிறார்கள். கட்சியிலிருந்து வெளியே வருகிறாயா விட்டு விடுகிறோம். கட்சியை இரண்டாக ஆக்குகிறாயா, விட்டு விடுகிறோம் என்று சமரசப் பேச்சு. ஒரு நண்பருடைய

வீட்டிற்குச் சென்று யார் அந்நியச் செலாவணிக் குற்றச்சாட்டைக் கண்டு பிடித்தார்களோ, அதே அதிகாரி அந்த நண்பருக்கு நீங்கள் இந்த அலுவலகத்திற்கு இந்த மாதிரி பதில் எழுதுங்கள் என்று சொல்லிக் கேட்கிறார். இந்த அளவுக்கு நிலைமை அங்கே. நான் இவைகளையெல்லாம் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சியின் சார்பாக, இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு எடுத்துக் கூறுவது கடமை என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அரசியல் வாழ்வில் இருப்பவனெல்லாம் களங்கம் சுமத்தப்படுகிற காரணத்தால் அந்தக் கட்சியை அழித்துவிட முடியுமா? களங்கம் சுமத்தினால் மக்கள் தீர்ப்புத் தர வேண்டாமா? ராஜமாணிக்கத்தின் வீட்டில் ரெய்டு நடத்துவது, மறுநாள் பத்திரிகையில் ராஜமாணிக்கத்தின் வீட்டில் சோதனை, பல லட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டது என்ற செய்தியைப் போடுவார்கள். ராஜமாணிக்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும், கோவை மாவட்டத்தில் கழகத்தின் பலத்தைக் குறைத்துவிட வேண்டும் என்று இப்படிப்பட்ட காரியங்களில் இன்றைக்கு இங்கிருக்கக்கூடிய வருமான வரி அதிகாரிகள், என்ஃபோர்ஸ் மெண்ட் அதிகாரிகள் போன்றவர்கள் ஈடுபடுவார்களானால், திராவிட முன்னேற்றக் கழகம் அவைகளைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்தித்துத் தீரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இவைகளையெல்லாம் நிதானமாக, நான் உணர்ச்சி வேகத்தில் பேசுகிறேன் என்று கருதாமல், பிரதமரைப் போன்றவர்கள், டெல்லியில் இருக்கும் முக்கியமானவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், இந்தக் காரியங்களை யார் நடத்துகிறார்கள், யார் தூண்டுதலின்பேரில் இது நடைபெறுகிறது, அவர்கள் இன்றைக்கு ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்த நாட்டிலே இருக்கிற சில கட்சிகளை அடகு வைக்க எண்ணி, பிறகு இந்த நாட்டையும் வேறு ஒரு நாட்டிற்கு அடகு வைப்பதற்கு இன்றைக்கு பேரம் பேசிக் கொண்டிருக் கிறார்கள் என்பதையும் நான் பகிரங்கமாக எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே, இதில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முன்னேற்றக் கழகம் மக்களுடைய செல்வாக்கை இழந்து விட்டது. ஆகவே அந்தக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்க வேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும் விவாத நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். காரணம், உங்களோடு இருந்த கட்சிகளெல்லாம் பிரிந்து போய் விட்டன. ஆகவே நீங்கள் ராஜினாமா செய்து விடுங்கள். உங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். சில கட்சிகள் போய் விட்டன. ஆளும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி இவர்கள் போய் விட்டார்கள், நான் மறுக்க வில்லை. வீட்டில் குழம்பு வைக்கின்றோம். அந்தக் குழம்பிலிருந்து ஒரு கத்தரிக்காய் அல்லது ஒரு வெண்டைக்காய் துண்டு வெளியே விழுந்து விட்டால், குழம்பை எடுத்து அப்படியே கொட்டிவிட மாட்டோம். அதைப்போலத்தான் 71-ல் குழம்பு வைத்தோம். அந்தக் குழம்பில் முஸ்லீம் லீக் புளியாக இருந்தது. பார்வேட் பிளாக் காரமான கட்சி, ஆகவே காரமான மிளகாயாக இருந்தது. தமிழரசுக் கழகம் சின்னக் கட்சி என்று சொன்னாலும் உப்பாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் வைத்த குழம்பில் கத்தரிக்காயாக, அல்லது வெண்டைக்காயாக இந்திரா காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சியும் இருந்தது. பரிமாறுகிற நேரத்தில் இரண்டு துண்டு கீழே விழுந்து விட்டது. அதற்காக புளியும், உப்பும், காரமும் இன்னும் வேறு பண்டங்கள் இருக்கின்ற குழம்பைக் கொட்டிவிட வேண்டுமா? வீட்டிலே குழம்பு வைத்துச் சாப்பிட்டு பழக்கமுள்ள, ஹாண்டே அவர்கள், பொன்னப்ப நாடார் அவர்கள், அவர்கள் வைக்கவில்லை, வீட்டில் வைத்த சாப்பாட்டில் இதை உணராமல் இல்லை. ஆகவே, இரண்டு துண்டு பதார்த்தங்கள் கீழே விழுந்துவிட்டன என்பதற்காக சமைத்தவை முழுவதையும் கொட்டிவிடு என்றால் முடியாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். இப்போது முன்னேற்றக் கழகத்திலிருந்து போய் விட்டார். எம்.ஜி.ஆர். மட்டும் போகவில்லை; அவர் 50 சதவீதம் ஓட்டு வாங்கித் தரவில்லையா என்றும் சொன்னார். அது எவ்வளவு தவறான கருத்து என்பதை விளக்க விரும்புகிறேன்.

1957-ல் கழகம் போட்டியிட்ட இடங்கள் 117. அப்போது எம்.ஜி.ஆர். இளமை முறுக்குடன் 'மதுரை வீரன்' படம் நடந்து,

அதனால் மதுரை வீரன் என்ற பெயரைப் பெற்றிருந்த சமயம். அந்தக் காலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது கழகத்திற்கு கிடைத்த இடம் 15. டிப்பாசிட் இழந்த இடம் 40. 1962 பொதுத்தேர்தலிலும் முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது. போட்டியிட்ட இடங்கள் 142. கழகம் வெற்றி பெற்ற இடங்கள் 50. அப்போதும் எம்.ஜி.ஆர் புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்தார். அப்படி இருந்தும் கிடைத்த இடம் 50 தான். அதற்குப் பிறகு 1967 பொதுத் தேர்தலில் கழகம் 173 இடங்களில் போட்டியிட்டது, 138 இடங்களில் வெற்றிபெற்றது. அப்போது எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்ய வரவில்லை. அவர் மருத்துவமனையில் இருந்தார். ஆனால் அவருடைய போஸ்டரைப் போட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்று சொன்னார்கள். போஸ்டர் போடப்பட்டது உண்மை. ஹாண்டே அவர்களுக்குச் சத்தியத்தின்மீது நம்பிக்கை இருந்தால்-சத்தியமாகச் சொல்கிறேன். எம்.ஜி.ஆர். போஸ்டரை தலைமைக் கழகச் சார்பில் நாங்கள் போடவில்லை அவர்களுடைய தொகுதிக்காக அவர்களே போஸ்டர் போட்டார்கள். அதில் ஒரு தொகுதிக்கு சில போஸ்டர்கள் அனுப்பி, சுவர்களில் ஒட்டி வைத்திருந்தார்கள். 1957-ல் 15 இடம், 1962-ல் 50 இடம், 1967-ல் 138 இடம் பெற்றோம் என்றால் எங்கள் வெற்றி எங்கள் அண்ணன் அவர்களும் நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், என்.வி.என். அவர்களும் மற்றும் உள்ள அமைச்சர் பெருமக்களும், கழகத் தலைவர்களும், கழகத்தின் சொல்வீரர்களும், செயல்வீரர்களும், கழகக் கண்மணிகளும் ஆற்றிய தொண்டுதான் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாக நான் இருக்கிறேன். இவைகளை எல்லாம் எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் படிப்படியாக, மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் என்பதல்லாமல் வேறல்ல. ஹாண்டே அவர்கள் கூறியதுபோல் கழகத்தின் கட்டுக்கோப்பு அழிந்துவிடவில்லை. அந்தக் கட்டுக் கோப்புக் குலையாமலேயே கழகம் இன்றும் இருக்கிறது. பதினெட்டாயிரம் கிளைக்கழகங்களில் 20 அல்லது 25 கிளைக் கழகங்கள் வேண்டுமானால் பிரிந்து போயிருக்கும். அவைதவிர மற்றக் கிளைக் கழகங்கள் எல்லாம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கின்றன. வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், வட்டப் பிரிவு, மாவட்டப் பிரிவு, மாநில அமைப்பு, பொதுக்குழு, செயற்குழு எல்லாமே கட்டுக்கோப்புக் குலையாமல்

அப்படியே இருக்கின்றன. எப்படி காங்கிரஸ் கட்சியில் பெரும்புயல் வீசிய நேரத்திலும் தமிழ்நாட்டில் ஸ்தாபன காங்கிரஸ் கட்டுக்கோப்புக் குலையாமல் இருந்ததோ, அப்படியே எம்.ஜி.ஆரும், ஒருசிலரும் போய்விட்டபோதிலும் கழகம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கிறது.

அண்மையில் என்னை பம்பாய் பத்திரிகைக்காரர் ஒருவர் பேட்டி கண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம்.ஜி.ஆரும் இன்னும் சிலரும் பிரிந்து போய்விட்டதால் கழகத்தில் பூசல் ஏற்பட்டு, கழகம் பலவீனம் அடைந்திருக் கிறதாமே என்று கேட்டார். அப்போது நான் அவருக்குக் கோபம் வராத வகையில் நான் ஒன்றைச் சொன்னேன். கடலிலே இருந்து சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாக மாறி செல்வதைப்போல் சிலர் போய் இருக்கிறார்கள் என்று சொன்னேன். நான் ஏன் அவ்வாறு சொன்னேன் என்றால், கடலிலே இருந்து ஆவியாக சென்ற நீர், குளிர்ந்து மழையாகப் பெய்து, பூமியிலே விழுந்து திரும்பவும் கடலிலே வந்து சேரும். அதைப்போலவேதான் வெளியே போனவர்கள் இப்போது சட்டமன்றத்திற்கு வரவிடாமல் செய்கிறார்களே என்று வேதனைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இறுதியில் அவர்களும் இங்கே வந்து சேருவார்கள் என்று நம்புகிற காரணத்தால்தான் அப்படிச் சொன்னேன்.

இன்றைக்கு இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதன் நோக்கமே, நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்தில் பேசுவதற்கு விரும்பிய அங்கத்தினர்களுக்கு அவர்களின் கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கட்டும் என்பதற்காகத்தானே அல்லாமல் வேறல்ல. இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப்போலவே முஸ்லீம் லீக் கட்சி ஃபார்வார்டு பிளாக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகிய கட்சித் தலைவர் களுக்கும் உறுப்பினர்களுக்கும் தோழமைக் கட்சியினர் என்ற காரணத்தினால் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்தரப்பிலே இருக்கின்ற - ஜனநாயகத்தின் மரபையும், சபையின் கௌரவத்தையும் காப்பாற்றுகின்ற வகையில்-

மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், அதைப் போலவே சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், அவருடையக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். நாங்கள் இப்போது ராஜிநாமா செய்ய வேண்டிய தில்லை. எங்களைக் கொஞ்சம் பணியாற்ற விடுங்கள். ஐந்தாண்டுக் காலம் முடிந்ததும் தேர்தல் வரும். அப்போது நாம் எல்லாம் போட்டியில் கலந்துகொள்ளலாம். மக்கள் யாரை நம்புகிறார்களோ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம். அது வரையிலும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். பதவியே பெரிதென்று நாங்கள் இங்கே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. பள்ளியில் பயின்றபோதோ அல்லது பொது வாழ்விற்கு வரும்பொழுதோ எங்களில் யாரும் இப்படிப்பட்ட பதவி கிடைக்கும் என்று எண்ணி கட்சிக்கு வரவில்லை. நாங்கள் முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கும்போது பெரிய செல்வந்தர்களாகவோ, கனதனவான்களாகவோ இல்லை. சாதாரண விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான். கொள்கைப் பிணைப்பால் எங்கெங்கோ இருந்து வந்து ஒன்றாகச் சேர்ந்தோம். ஒரு ஏழை குமாஸ்தாவின் மகன்தான் நாவலர் அவர்கள். ஒரு சாதாரணப் பத்திரிகை விற்பனையாளரின் மகன்தான் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். காங்கிரஸிலிருந்து அச்சுக்கூடம் வைத்து, அச்சடித்துக் கொண்டிருந்தவர்தான் என்.வி.என். அவர்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் கழகத்தை உருவாக்கினோம். இன்றைக்கு 18 ஆயிரம் கிளைக்கழகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறோம். இந்தக் கிளைக்கழகத் தோழர்களின் கணக்கு வேண்டுமென்று கேட்டார் அருமை நண்பர் எம். ஜி. ஆர். சென்ற வாரம் சேலத்திற்குப் போயிருந்தேன். அங்கே கழகச் செயலாளர் நண்பர் தாவூது என்பவர் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு, பார்க்கப் போயிருந்தேன். அவருடைய வீட்டைப் பார்த்தால் கூரை சரிந்திருந்தது. பின் நிதி வசூல் செய்து, பிணத்தை எடுத்தோம். இப்படித்தான் கழகத் தோழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம்

மாற்றுக் கட்சியினர் எண்ணிப் பார்த்திட வேண்டும். எங்களை ஐந்தாண்டுக் காலம் வாழ விட்டாலும்சரி, அல்லது ஐந்தாண்டுக் காலம் ஆளவிட்டாலும் சரி, நாங்கள் இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்பதிலே உள்ள எங்கள் லட்சியத்தோடு பணிபுரிகிறோம்; மேலும் பணிபுரிவோம். என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே பின் தங்கிய மக்கள், ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், நடுத்தர மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்கள் வாழ்க்கையை உயரச் செய்வதே எங்கள் லட்சியப் பணி. எவ்வளவு நாள் வாழப்போகிறோமோ? பதவியிலே இருக்கிற காலத்தில், மட்டுமல்ல, ஆட்சியிலிருக்கும் வேலை முடிந்துவிட்டால் என்னைப்போல் சந்தோஷப்படுகிறவர்கள் யாரும் இருக்க முடியாது. என்னைப் பொறுத்த வரையிலே நான் இராஜாஜி அவர்களைப் போன்றோ அல்லது தந்தை பெரியார் அவர்களைப் போன்றோ நான் நீண்டநாள் வாழ்வேன் என்று நினைக்க வில்லை. என் உடலிலே அந்த அளவுக்கு வலிவு இல்லை. பேரறிஞர் போல போவேன். அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. (பல குரல்கள் : அப்படிப் பேசாதீர்கள்). ஆனால் என்னுடைய கடைசி நிமிட மூச்சு இருக்கும் வரையில் தமிழ் சமுதாயத்திற்காக, 'பாடுபடுவேன், பாடுபடுவேன்' என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 67 **நாள் : 10.08.1973**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானங்களின் மீது இறுதியாகப் பேசிய திரு.பொன்னப்ப நாடார் அவர்கள், நானும் அமைச்சர்களும் உடனடியாக வெளியேற வேண்டுமென்று கூறிவிட்டு, அதற்கு முன்பு பல கடிதங்களையும் தந்திகளையும் இங்கே எடுத்துப் படித்துக் காட்டி, இவைகளுக்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதிலிருந்து நாங்களே இருந்து அந்தக் காரியங்களை யெல்லாம் செய்ய வேண்டுமென்று..... (ஆரவாரம்)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : I do not want to appeal to the Hon. Chief Minister. I do not want any mercy from the Hon. Chief Minister. The wonderful Government does not need any mercy from me. I do not want him to do anything favourable for me.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : நான் என்ன சொன்னேன் என்பதையே அவர்கள் அவசரத்தில் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். ஈரோடு சமாசாரம், வேறு பல கல்லூரிகள் சமாசாரம், இவைகளையெல்லாம், இந்தத் தந்திகளையெல்லாம் படித்துக் காட்டி, முதலமைச்சர் அவர்கள் இவைகளைக் கவனிப்பார் என்று நம்புகிறேன், கவனிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னதன் வாயிலாக, நாங்களே இருந்து அவைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, 'நீங்கள் வெளியேறுங்கள்' என்று சொன்னது வெறும் உபசாரத்திற்காக - சம்பிரதாயத்திற்காகத் தானே தவிர, இந்தக் கடமைகளை ஆற்றுவதற்கு நாங்கள்தான்

தகுதி படைத்தவர்கள் என்று உணருகிறார் என்பதை நான் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அவையிலே சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் முன்மொழிந்து, அதற்குப் பிறகு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கொள்கையை மறுக்கின்ற கண்டனத் தீர்மானம் ஒன்று முன்மொழியப்பெற்று எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களும், ஆளும் கட்சி வரிசையில் உள்ளவர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்தத் தீர்மானங்கள்மீது எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். 7இப்பொழுது பேசிக்கொண்டிருக்கும் என்னையும் சேர்த்து 46 பேர் இந்தத் தீர்மானத்திலே கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதிலே, தி.மு.க.சார்பில் 16 பேர்களும் மற்றக் கட்சிகளின் சார்பிலே 30 பேர்களும் உரையாற்றி இருக்கிறார்கள். நான் பேசி முடித்த பிறகு தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் மீண்டும் பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, பேசுகின்றவர்களுடைய எண்ணிக்கைக் கணக்கில் கூட நல்ல ஜனநாயக முறை இந்த அவையிலே, தலைவர் அவர்களே, தங்களால் பின்பற்றப்பட்டு, அனைவருக்கும் நல்ல வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுக் கருத்துக்களைக் கடுமையாகச் சொல்லுவது, காரசாரமாகச் சொல்லுவது என்ற வகையில் கடந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த மன்றம் சில நேரங்களில் பரபரப்பு அடைந்தாலும், பிறகு கட்டிக் காத்துவரும் பண்பாட்டை உணர்ந்து தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் அளவுக்கு இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் அமைந்தன என்பதையும், இன்று மாலையிலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சி இரண்டு, மூன்று நாட்களாகக் காலையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைவிடக் கொஞ்சம் குளிர்ச்சியைத் தரும் வகையில் அமைந்திருக்கிறது என்பதையும் நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். இதைப் பார்க்கும்போது ஒவ்வொரு நாளும் மாலையிலே நமது சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டால் மிக அமைதியான முறையில், கொஞ்சம் கூடு குறைந்த அளவில் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று கூட நான் கருதுகிறேன்.

இந்த அரசுக்கு கொள்கை இல்லை என்று கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் கூறித் தன்னுடைய வாதத்தைத் தொடங்கினார்கள். என்னுடைய அருமை நண்பர் மதியழகன் அவர்கள் நான்தான் இவரை முதலமைச்சராக முன்மொழிந்தேன்,

இப்போது நானே அவரை வெளியேறச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டார். முன்மொழிந்த ஒரே ஒரு காரணத்திற்காகவே வெளியேறச் சொல்ல உரிமை இருக்கிறதா என்று பார்த்தால், இருப்பதாகத் தெரியவில்லை. 'திருமணத்திற்கு நான்தான் புரோகிதத்திற்கு வந்தேன், ஆகவே, இப்போது நான் உத்தரவிடுகிறேன்- நீங்கள் விவாக ரத்து செய்து கொள்ளுங்கள்' என்று சொல்வதற்கு எப்படிப் புரோகிதருக்கு உரிமை இல்லையோ, அதைப் போலவே கட்சிக் கூட்டத்தில் என்னை முதலைமைச்சராக இருக்க வேண்டுமென்று முன்மொழிந்த ஒரே ஒரு காரணத்திற்காக இப்போது என்னை வெளியேறச் சொல்கிற உரிமைபடைத்திருப்பதாகச் சொல்லமுடியாது. ஆனாலும், அவர்கள் மிகுந்த பரிவுணர்ச்சியோடும், பாச உணர்ச்சியோடும் எனக்கு இருக்கும் பல சங்கடங்களை உணர்ந்து, இவ்வளவு சங்கடங்களுக்கிடையே நீங்கள் ஏன் இந்தத் தொல்லைகளை அனுபவிக்கவேண்டும்? ஆகவே, நீங்கள் எல்லாம் வெளியேறி விடுங்கள் என்கிற வகையிலே இங்கே தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு அவையிலே தலைமைப் பொறுப்பை ஏற்று, தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று, எங்களையும், தமிழ்நாட்டு மக்களையும் வழி நடத்திச் செல்வதற்காகச் சூளுரை மேற்கொள்வதற்கு முன்பு கட்சியின் தேர்தல் பிரகடனத்தை விருகம்பாக்கத்திலே நடைபெற்ற மாநாட்டில் வெளியிட்டார்கள். அந்த நேரத்திலே அண்ணா அவர்கள் ஆற்றிய உரை, தமிழ் நாட்டிலே வரலாற்றுப் புகழ்மிக்க உரையாகும். அந்த உரையில் சில மணிவாசகங்களை இந்த இடத்தில் நினைவு கூர்வது நலம் என்று கருதுகிறேன்.

அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் 30-12-1966 அன்று மாலையிலே பேசும்போது கூறினார்கள்.

''தரணி புகழ வாழ்ந்திருந்து புகழ் பெற்றது, தமிழர் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு - எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு - அவர்கள் அரசு என்று ஒன்று ஏற்படுத்தாததற்கும் முன்பு - அரசு

நீதிகளை வகுப்பதற்கும் முன்பு; காடுகளில் அவர்கள் உலவிக் கொண்டிருந்தபோது - உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம் !

நமது மூதாதையர் யவனம் வரை தொடர்பு கொண்டிருந்தனர் - நமது மூதாதையர் சீனம் வரை சென்று திரும்பினர் - தூரக்கிழக்கு நாடுகளில் கலாச்சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர்.

அந்த உன்னதமான மரபுக்கு ஏற்ற வகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள - குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும் !

இன்னும் நமது மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக ஆக்கி-நமது பொருளாதாரத்தைச் சீராக்கி-உரிமைகளை நிலைநாட்டி-இந்த நாட்டுத் தமிழர்களைத் தமிழ்ப் பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டுகளாவது ஆகும்!

வெறும் அரசியல் நடத்த-1967ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்-1967-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டுக் காலத்திற்காவது நமது பணி இருக்கிறது - என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப் பதியவேண்டும்.

1967 மட்டும் நம் கண் முன் நிற்பதென்றால்-1967ல் ஆட்சி பீடம் ஏறுவது மட்டும் நமது நோக்கம் என்றால்- அதற்கு யாரைப் பிடிக்கவேண்டுமோ, அவர்களைப் பிடித்து, எதைக் கொடுக்கவேண்டுமோ, அதைக் கொடுத்து, யாரை அணைத்துப் பேச வேண்டுமோ, அவர்களை அணைத்துப் பேசினால் அது ஒன்றும் முடியாத காரியமல்ல. ஆகவே, அமைச்சரவை அமைப்பது மட்டுமல்ல நமது நோக்கம். தமிழ் மக்கள், தமிழ் மரபைப் புரிந்துகொண்டு. தமிழ் வரலாற்றைப் புரிந்துகொண்டு, புதிய வரலாற்றை, புதிய செய்தியை, புதிய பண்பை உலகுக்கு வழங்க வேண்டும் என்பதற்குத்தான் நாம் பணியாற்றுகிறோம்.

ஐ.நா.சபை என்று உலகத்திலுள்ள நாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து, எல்லாக் கொடிகளையும் பறக்கவிட்ட பிறகும், சர்வதேச ஒற்றுமையை சில நோக்கங்களில் காண முடியாமல் நாம் தத்தளிக்கிறோம். ஆனால், இந்த உலக ஒருமைப்பாட்டை-

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற அரியதோர் கருத்தைத் தமிழ் மரபு தந்தது.

அதுமட்டுமல்ல 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று தமிழர்கள் தரணியாண்ட காலத்திலேயே தமிழகம் கூறியது. இவை போன்ற கருத்துக்களை, பண்புகளை மீண்டும் தமிழகம் உலகுக்குத் தரவேண்டும். அப்போதுதான் தமிழினம் தலைநிமிர்ந்து வாழும்; புதிய வரலாற்றை, புதிய அத்தியாயத்தைச் சமைக்கும். அவ்விதம் சமைக்கத் தக்கவாறு தமிழினத்தை ஆக்கும் பொறுப்பு- காலத்தின் கரத்தாலே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ் மரபு காப்போர் அமரவேண்டுமென்பதற்காகத்தான் தி.மு.கழகம் ஆட்சியில் அமரவேண்டும் என்கிறோம். தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழ் மரபு இவைகளைக் காப்பாற்றும் புதிய அரசு-புதிய ஆட்சி தோன்றவேண்டும்.''

இதைத்தான் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில், பொதுத் தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற அந்த மாநாட்டில், எடுத்துரைத்தார்கள்.

அண்ணா அவர்கள் விரும்பிய தமிழ் மரபைக் காப்பாற்ற, தமிழ்ச் சமுதாயத்திற்குப் பணியாற்ற, தமிழ் மொழிக்கு ஏற்றம் தர அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகும் இந்த அரசு பணியாற்றி இருக்கிறதா இல்லையா என்பதற்கு நிறையப் புள்ளிவிவரங்களை நாம் பெற்றிருக்கிறோம், சான்றுகளை உடையவர்களாக நாம் இருக்கிறோம் ; என்றாலும் ஒன்றிரண்டை நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்.

தமிழ் நாடு என்று இந்த மண்ணிற்குப் பெயர் வைத்தது, அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசிய பேச்சின் எதிரொலியாகும்.

வள்ளுவருக்குச் சிறப்புத் தருகிற வகையில் பேருந்து வண்டிகளில் எல்லாம், தமிழகத்தில் உள்ள பயணிகள் விடுதிகளில் எல்லாம் திருக்குறளின் மணம் பரப்புகின்ற பணியைச் செய்தது அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டுப் பேச்சின் எதிரொலியாகும்

உலகத் தமிழ் மாநாடு கண்டு, உலகத்து அறிஞர் பெருமக்களையெல்லாம் அழைத்துத் தமிழின் தொன்மையை, பெருமையை, பார் அறியச் செய்தது அண்ணா அவர்களின் விருகம்பாக்கம் மாநாட்டுப் பேச்சின் எதிரொலியாகும்.

தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழ், ஆங்கிலம் இரண்டுக்கும்தான் இடம், இந்திக்கு இடமில்லை என்று வரையறுத்துச் சொன்னது, அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் ஆற்றிய உரையின் எதிரொலியாகும்.

தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டிய இராச ராச சோழனுக்குச் சிலை, எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு இடையே அமைத்ததும், இளங்கோ அடிகளுக்கு, கரிகாலனுக்கு, கண்ணகிக்கு, தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை எடுப்பது என்பது சாதாரணமாகப் பேசப்பட்டாலும் எத்தனையோ ஆண்டுக் காலமாக நடைபெறாத முயற்சியை, யாருக்கும் தோன்றாத அந்தக் கருத்தைத் தமிழக அரசின் துணையோடு இன்றைக்கு நாம் செய்திருக்கிறோம் என்றால் தமிழின்பால், தமிழ்ச் சான்றோர்களின்பால், தமிழ் வரலாற்றின்பால், இந்த அரசுக்கு இருக்கிற பற்றினை, பாசத்தினைக் காட்டுவதாகும்.

அண்மையில் நடைபெற்ற பூம்புகார் விழா பற்றிக் கூட சில பேர்கள் கேலி பேசினார்கள். ஆனால், அந்த பூம்புகார் விழா இன்றைக்கு எத்தனை ஆயிரம் மக்களைக் கரிகால் பெருவளத்தானைப் பற்றி வீரமிக்க வரலாற்றை நினைத்துப் பார்க்கத் தூண்டியிருக்கிறது என்பது ஒவ்வொரு நாளும் எவ்வளவு நூற்றுக்கணக்கான மக்கள் காவிரிப்பூம்பட்டினம் சென்று அங்கு அமைந்திருக்கிற சிலப்பதிகாரக் கலைக் கூடத்தைப் பார்த்து, சிலப்பதிகாரக் கதையின் சுவையை, கலையின் மேன்மையை, ஒரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் இருந்த மகிமையை உணர்ந்து வருகிறார்கள் என்பதும் மிகமிகச் சாதாரணமாகக் கருதி விடக்கூடிய ஒன்றல்ல.

சென்னை மாநகரில் எத்தனையோ ஆண்டுக் காலமாக இடிபாடுகளுக்கிடையே, இங்குதான் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்பதும், திருவள்ளுவர் இங்கேதான் அடக்கமானார் என்பதும் பிரச்சினைக்குரியதாக இருந்தது, யாரும் நாட்டம் செலுத்தாத

அளவிற்கு இருந்த ஒரு இடத்தை இன்று புதுப்பித்து, அது உலகத்தார் அனைவரும் வந்து யாத்திரை செய்து, கண்டு களிக்கிற ஒரு இடமாக, திருக்குறளைப் புரிந்து கொள்கிற ஒரு இடமாக, திருவள்ளுவர் உலகத்திற்கே மறை யாத்தவர் என்ற உயர்ந்த காரியத்தைச் செய்வதற்குத் திருவள்ளுவருக்காக ஆலயம் ஒன்றை நிர்மாணிக்கப் பல லட்சக்கணக்கான ரூபாயிலே திட்டமிட்டு, அதற்குத் தமிழக அரசு தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசிய பேச்சின் எதிரொலியாகும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

ஆகவே, இந்த அரசுக்குக் கொள்கை உண்டா? இல்லையா? என்ற கேள்வி எழுகிற நேரத்தில், இந்த அரசு எந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது என்றால், விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா பேசினாரே, தமிழ் இனம் காக்க, தமிழ் மரபு காக்க, தமிழ் செழிக்க, தமிழைப் பாதுகாக்க இந்த அரசு அமைகிறது என்று சொன்னாரே, அந்த ஒரு பெரும் கொள்கைக்காகத்தான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது (ஆரவாரம்).

அடுத்து, மற்றக் கொள்கைகள். அடுத்த கொள்கைதான். சமுதாயத்தில் சமத்துவம் வேண்டும் என்பது. இது பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன வேத வாக்கு. அந்தச் சமத்துவத்தை இந்த அரசு காரியத்தில் சாதித்துக் காட்டியிருக்கிறதா இல்லையா என்பதை இங்கு பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

ஹரிஜன மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பேசிய நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தக்க பதில்களை எடுத்துச் சென்னார்கள். பொதுவாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொருளாதார உதவிகளைச் செய்வது ஒருபுறமிருந்தாலும் முதலில் சமுதாயத்தில் இருக்கிற இழிவைப் போக்கவேண்டும் என்பதுதான் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் கண்ட தந்தை பெரியார் இராமசாமி அவர்களுடைய கொள்கையும், அவருடைய தானைத் தலைவராக

இருந்து பணியாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையுமாகும். ஆகவே, சமுதாய இழிவுகளை முதலில் நீக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவுதான் இன்று அர்ச்சனை செய்கிற தகுதி பெற்றிருக்கிற ஹரிஜனச் சகோதரராக இருந்தாலும் அவர்களும் ஆலயத்திற்குள் சென்று அர்ச்சிப்பதற்கு உரிமை படைத்தவர்கள் என்ற சட்டத்தைச் செய்திருக்கிறோம் என்றால், அது சாதாரண விஷயமல்ல. ஒரு ஹரிஜன சகோதரருக்கு அர்ச்சனை செய்கிற வேலைதான் பெரிய வேலையா என்று கேட்கலாம். ஆனால் அது எவ்வளவு பெரிய சமுதாயப் புரட்சி என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு அம்பேத்காருடைய பெயரால் சென்னை மாநகரத்தில் ஒரு கல்லூரியை உருவாக்குகிறோம். அந்தக் கல்லூரி உருவாவதற்கு - வேறு பல இடங்களில் கல்லூரிகள் உருவாகும் நேரத்தில் கட்டவேண்டிய மொத்தப் பணத்தை மற்றவர்கள் கட்டினால்தான் அங்கு கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்போம் என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருந்தாலும் கூட, அம்பேத்கார் கல்லூரி என்ற மாத்திரத்திலே அந்தக் கல்லூரி என்ற சலுகை அளித்து இன்றைக்கு சென்னை மாநகரத்தில் அம்பேத்கார் பெயரால் கல்லூரி வருகிறது.

தில்லையாடி வள்ளியம்மையும் ஹரிஜன சகோதரிதான் அந்த அம்மையின் தியாகத்தை நினைவுபடுத்துவதற்காக இன்றைக்குத் தில்லையாடியிலே வள்ளியம்மை நகர் ஒன்று கண்டு அந்த அம்மையாரோடு தென் ஆப்பிரிக்காப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த ஹரிஜன சகோதரர்கள்-நாகப்பன், நாராயணசாமி இவர்களுக்கெல்லாம் அங்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பியிருப்பதும் இந்த அரசுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும்போது அந்த அறங்காவலர்களில் ஒருவர் நிச்சயமாக ஹரிஜன வகுப்பை சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்று சட்டம் செய்திருப்பதும் இந்த அரசுதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதைப்போலவே, பின்தங்கிய சமுதாய மக்களுக்காகப் பாடுபடும் இந்த அரசு அவர்களுக்காக ஒரு நலக் குழுவை அமைத்து, அதனுடைய சிபார்சுகளை ஏற்று எந்த அளவிற்கு

நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறது என்பதையும் அனைவரும் நன்றாக உணருவார்கள்.

காலையில் பேசிய நண்பர் வடிவேலு அவர்கள் கூடச் சொன்னார்கள் - 18 சதவிகிதம் என்று ஹரிஜனங்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் இந்த 18 சதவிகிதத்தை ஹரிஜனங்களால் உத்தியோகங்களைப் பெறமுடியவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன். சில இடங்களில் ஹரிஜனத் தோழர்கள், சகோதரர்கள் வராமல் அந்த இடங்கள் நிறைவு செய்யப்படாமல் இருக்கிற குறை இருக்க முடியுமே தவிர, வந்து அவர்களுக்கு இல்லை என்ற குறை எங்குமே ஏற்பட்டது கிடையாது. ஓர் உதாரணம் உங்களுக்குச் சொல்ல முடியும்.

கடந்த நான்கைந்தாண்டுக் காலத்தில், நம்முடைய தமிழ் மாநிலத்தில் க்ரூப்-1 சர்வீஸ் எழுதுகிறார்களே, தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறதே, அதிலே எப்படிப் பட்டவர்கள் இன்றைக்கு டெப்டி கலெக்டர்களாக, டெப்டி சூப்பரின் டென்ட்டென்ட்களாக, ஜே.ஸி.டி.ஓ.-க்களாக, டெப்டி ரெஜிஸ்ட்ரார்களாக, அசிஸ்டென்ட் யார் யார் இந்த நான்கைந் தாண்டுக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வகுப்புகளைப் பிரித்துச் சொல்கிறேன் என்பதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது. மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிற காரணத்தால் பிரிக்கப்பட்டால்தான் பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டவர்கள் என்று தெரியும் என்கிற காரணத்தால் நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

கிட்டத்தட்ட 98 அல்லது 99 பேர்கள் 1967-லிருந்து இந்த ஆண்டு வரையில் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிடர்கள்-தாழ்த்தப்பட்டவர்கள்- டெபுடி கலெக்டர் வேலைக்கு 5 பேர், டெபுடி சூப்பரிண்டென்டென்ட் ஆப் போலீஸ் 4, ஜே.சி.டி.ஓ.3, டெபுடி ரிஜிஸ்டிரார் 4, அசிஸ்டெண்ட் கமாண்டணிட் (எஸ்.ஏ.பி)1, டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 18 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த 99 பேர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, **கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் :** டெபுடி கலெக்டர் 2, டி.எஸ்.பி. 1, ஜே.சி.டி.ஓ.1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, எஸ்.ஏ.பி. அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 6 பேர் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அடுத்து, மறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் : டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி. 1, ஜே.சி.டி.ஓ.1, டெபுடி ரிஜிஸ்டிரார் 2, ஆக மொத்தம் 5 பேர்.

அடுத்து, அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் : டெபுடி கலெக்டர் 5, ஜே.சி.டி.ஓ.1, ஆக மொத்தம் 6 பேர்.

வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் : டெபுடி கலெக்டர்கள் 4, டி.எஸ்.பி.3, ஜே.சி.டி.ஓ.3, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 11 பேர்கள்.

நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் : டெபுடி கலெக்டர் 2, ஜே.சி.டி.ஓ.5, டெபுடி ரிஜிஸ்டிரார் 1,ஆக மொத்தம் 8 பேர்.

பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர் : டெபுடி கலெக்டர் ஒருவர்.

முஸ்லீம் (லப்பை வகுப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட): டெபுடி கலெக்டர்கள் 2, டி.எஸ்.பி.2, ஜே.சி.டி.ஓ. 2, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 7 பேர்கள்.

செங்குந்தர் : டெபுடி கலெக்டர்கள் 1, டெபுடி ரிஜிஸ்டிரார்1, அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்கள்.

கௌரா என்ற மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1 (எஸ்.ஏ.பி) அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்கள்.

படகா : டெபுடி கலெக்டராக ஒருவர், **வீரக்குடி வெள்ளாளர்** : டெபுடி கலெக்டராக இரண்டு பேர், **சலவைத் தொழிலாளி :** டெபுடி கலெக்டராக இரண்டு பேர், **பரக்கவ குல நத்தமான் :** டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி.1 ஆக இரண்டு பேர், **துளுவ வெள்ளாளர்:** டெபுடி கலெக்டராக ஒருவர்; **குறும்பர்: டெபுடி கலெக்டராக ஒருவர் ;** இதுவரை யாரும் குறும்பர்

வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டராக இருந்ததே கிடையாது.

மூப்பனார் : டெபுடி கலெக்டர் 1, தொண்டமான் டெபுடி கலெக்டர் 1, வடுகர் டெபுடி கலெக்டராக ஒருவர், டி.எஸ்.பி.ஒருவர், ஆக இரண்டு பேர்கள்.

தேவாங்கர் : டி.எஸ்.பி. ஒருவர் ; வலையர் : ஜே.சி.டி.ஓ. ஒருவர் ; சக்கிலி : ஜே.சி.டி.ஓ. ஒருவர் ; யாதவர் : ஜே.சி.டி.ஓ. ஒருவர் ; டெபுடி ரிஜிஸ்டிரார் 2, டிவிஷனல் பையர் ஆபீசர்1, ஆக மொத்தம் 4 பேர்கள் :சேனைத் தலைவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, செட்டி பாலாஜி : டெபுடி ரிஜிஸ்டிரார் 1. வேட்டுவக் கவுண்டர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, மருத்துவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஒட்டர் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் ஒருவர். ஆக, இப்படி மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தில் உள்ளவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன அடையாளச் சின்னம் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள், இந்த ஆட்சி- பின்தங்கிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறது என்பதற்கு என்ன அளவுகோல் என்று கேட்டார்களே, இதைவிட வேறு எந்த அளவுகோலை வைத்து, இந்த இயக்கம் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, நடுத்தர மக்களுக்காகப் பாடுபடும் என்று முழக்கமிட்டு ஆரம்பிக்கப்பட்டதே, அந்த முழக்கம் இன்று செயல்படுத்தப்படுகிறதா இல்லையா என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

தமிழ் நாட்டில் நீதிமன்றம் உருவான பிறகு. நீதிமன்றச் சரித்திரத்திலேயே இந்த ஆட்சிக் காலத்தில்தான் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு சகோதரர் இன்றைக்கு நீதிபதியாக வீற்றிருக்கிறார் என்பதை யாராவது மறுக்க முடியுமா? (ஆரவாரம்) இவைகள் எல்லாம் சமுதாயத்தில் சமத்துவத்தை உருவாக்க- சமுதாயத்தில் புரையோடியிருக்கிற பல கொடுமைகளை நீக்குவதற்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று இந்த அரசு இதுவரையில் நடத்தியிருக்கிற அருமையான சாதனைகளாகும்.

அண்ணாவின் அடுத்த கொள்கை சமதர்மம்; சமதர்மத் திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா இல்லையா என்பதைச் சமதர்மத்தின் அடிப்படையில் நான் பல முறை இங்கே விளக்கியிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசிய நேரத்திலும், முன்பு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த நேரத்திலும், நான் வெகு விளக்கமாகச் சொல்லியிருக் கின்றேன். நிலச் சீர்திருத்தம், சமதர்மத்தின் அடிப்படையில் - ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்குப் பட்டா அளித்தது. இதற்கு முன்பு உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற ஒரு சட்டம். குடியிருப்புமனைச் சட்டத்தின் மூலம் ஏறத்தாழ இரண்டு லட்சம் மக்களுக்குக் குடியிருப்பு மனையைச் சொந்தமாக் கியது. பஸ்களை தேசியமயமாக்கச் சட்டம் கொண்டு வந்தது, இந்தியாவிலேயே முதல் முறையாகத் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும் நிர்வாகத்தில் பொறுப்பும் தமிழ்நாட்டில் அளித்திருப்பது, பஸ் தொழிலாளர்களுக்கு ஊக்கப் போனஸ் திட்டத்தை அளித்து அவர்களுடைய பாராட்டைப் பெற்றிருப்பது, இவைகள் எல்லாம் சமதர்மத்தின் அடிப்படையில் நிறைவேற்றப் பட்டவைகளாகும்.

பல நண்பர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, கண்ணொளி வழங்குதல், பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளித்தல், கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குதல், இவைகளையெல்லாம் என்னுடைய பிறந்த நாள் விழாக்களில் நாம் சாதனைகளாகச் செய்து இருக்கிறோம்.

ஒரு நண்பர்கூடச் சொன்னார். அடுத்த ஆண்டு முதலமைச்சருக்குப் பிறந்த நாளே வரக்கூடாது ; அது ரொம்ப ஆபத்தாக இருக்கிறது என்றுகூடச் சொன்னார். நம்முடைய நண்பர் தம்பி தேவேந்திரன் அவர்கள், அவர் கூறியது பற்றிக்கூட ரொம்ப வருத்தப்பட்டுக்கொண்டார், இப்படியெல்லாம் பேசலாமா என்று.

எனக்கு அடுத்த ஆண்டு பிறந்த நாள் வந்தாலும் பரவாயில்லை; அல்லது நினைவு நாள் வந்தாலும் பரவாயில்லை. ஆனால் அந்த நாளைக்குள்ளாக நாம் என்னென்ன செய்ய வேண்டும், என்னுடைய அமைச்சரவை நண்பர்களின்

ஒத்துழைப்போடு தமிழ்நாட்டு மக்களுடைய ஆதரவோடு என்னென்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறேனென்றால், இப்போது நான் படித்துக்காட்டினேனே, இந்த இந்த மக்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்று, ''அது குற்றம், ஆகவே உங்கள் மீது நம்பிக்கை இல்லை, வெளியே போ'' என்று சொன்னால்-நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்-இந்தக் குற்றத்தை நான் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பேன் (ஆரவாரம்).

இது குற்றமென்றால், இந்தக் குற்றம் இந்த நாட்டிற்குத் தேவையான குற்றம். இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கத் தேவையான குற்றம். நான், இந்தக் குற்றத்தை இந்த அமைச்சரவையின் ஒத்துழைப்போடு தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி, நிலையான ஆட்சி இப்படியெல்லாம் இன்றைக்குத் தமிழக அரசு பாராட்டப்படுகிற நேரத்தில் இங்கு ஒன்றிரண்டு குறைகளும் சொல்லப்பட்டன.

அதிகாரிகளைப்பற்றிக் குறைகள் சொன்னார்கள். எந்தவொரு அரசிலும் எல்லா அதிகாரிகளும் நல்லவர்களாகவே இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக வக்காலத்து வாங்கமாட்டேன். என்னுடைய அருமை நண்பர் சுப்பு அவர்கள் இங்கே பேசினார்கள்-அருமை நண்பர் என்று சொல்கிற காரணத்தால், அவருக்கு ஆபத்து வந்தாலும் வரலாம் (சிரிப்பு). அவர் அதிகாரிகளைப்பற்றி எல்லாம் சொன்னார். நான் அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். எந்தெந்த அதிகாரிகள் தவறு செய்தாலும், அவர்கள் எப்படிப்பட்ட பெரிய இடத்தில் இருந்தாலும், அல்லது அவர்கள் சாதாரண அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் மீது புகார் கூறப்பட்டு, அவைகள் மெய்ப்பிக்கப்படுமானால், அவர்களுக்குத் தயவு தாட்சண்யம் காட்டுகிற அரசு இந்த அரசல்ல என்பதைப் பல முறை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறோம்.

இப்போதும் சொல்கிறேன், அதிகாரிகளோ, அல்லது ஆட்சியில் இருக்கிற நாங்களோ, குறைகள் செய்தால், சுட்டிக் காட்டப்பட்டால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அடுத்து, மிக முக்கியமாகப் பேசப்பட்ட விஷயம்; இந்த தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும், பிறகு வழி மொழிந்தவர் களும் மிக முக்கியமாக எடுத்துக் காட்டியது, நம்முடைய நண்பர் மதியழகன் அவர்களும் கடைசியாக எடுத்துக் காட்டியது, இன்று தமிழ் நாட்டிலே விலைவாசி வேகமாக உயர்ந்து விட்டது, உணவு நிலை திருப்திகரமாக இல்லை, என்கிற இந்தக் குறைபாடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டது.

ஆனால், விலைவாசி ஏற்றத்திற்கு யார் காரணம்? எந்த நிலை காரணம்? என்பதை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள், எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து தீர்மானத்தை வழிமொழிந்து பேசியவர்களேகூட மத்திய அரசுக்கும் ஓரளவு பொறுப்புண்டு என்பதை இங்கே ஒத்துக் கொண்டார்கள். திரு.கே.டி.கே. தங்கமணி பேசுகிற நேரத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் விலைவாசி அதிகம், அதை நான் மெய்ப்பிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முதலில் உலகத்திலே விலைவாசி நிலவரத்தில் இந்தியா எங்கே இருக்கிறது என்று பார்ப்போம். பிறகு இந்தியாவில் தமிழ் நாடு எங்கே இருக்கிறது என்று பார்ப்போம். உலகத்தில் விலைவாசி நிலவரத்தைப்பற்றி ஐ.எல்.ஓ. என்று சொல்லப்படுகின்ற இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் வெளியிட்டிருக்கின்ற புள்ளி விவரத்தைப் பார்ப்போம். 1963 மார்ச் முதல் 1972 வரை உலகத்திலுள்ள விலைவாசி நிலவரங்களை அது - ஐ.எல்.ஓ. - வெளியிட்டிருக்கிறது. தாய் லாந்து 21 சதவிகிதம், மொராகோ 22 சதவிகிதம், கென்யா 25 சதவிகிதம், ஈரான் 28 சதவிகிதம், எதியோபியா 32 சதவிகிதம், மெக்ஸிகோ 35 சதவிகிதம், இலங்கை 36 சதவிகிதம், பாகிஸ்தான் 45 சதவிகிதம், மேற்கு ஜெர்மனி 32 சதவிகிதம், கனடா 33 சதவிகிதம், அமெரிக்கா 35 சதவிகிதம், ஆஸ்திரேலியா 37 சதவிகிதம், இத்தாலி 39 சதவிகிதம், பிரான்ஸ் 43 சதவிகிதம், , ஜப்பான் 55 சதவிகிதம், இங்கிலாந்து 46 சதவிகிதம், இந்தியா 95 சதவிகிதம். இது இண்டர்னேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் - வெளியிட்டிருக்கிற புள்ளிவிவரப் பட்டியலாகும்.

இதிலே இந்தியா 95 சதவிகிதம் எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கிறது. அந்த இந்தியாவில் நம்முடைய தமிழ் நாட்டின்

நிலவரம் என்னவென்றால் பொது விலைக் குறியீடு, உணவுக் குறியீடு, ஜெனரல் இண்டெக்ஸ், ஃபுட் இண்டெக்ஸ், என்ற இரண்டையும் எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் வெளியிட்டிருக்கிற அந்தப் பட்டியலின்படி இந்தியாவினுடைய பொதுவிலைக் குறியீடு ஜூலை 1972-ல் 205 புள்ளியாக இருந்தபொழுது சென்னையில் 201 புள்ளியாக இருந்திருக்கிறது. அதைப்போலவே உணவு விலைக் குறியீடு ஜூலை 1972-ல் 220 புள்ளியாக இருந்தபோது சென்னையில் 205.8 புள்ளியாக இருந்திருக்கிறது. நான் அதிலே அதிக விவரங்களைச் சொல்ல விரும்பவில்லை. மே மாதம் 1973-ல் பொது விலைக் குறியீடு அகில இந்தியாவிலே 228 ஆக இருந்தபொழுது சென்னையில் 227 ஆக இருந்திருக்கிறது. உணவு விலைக் குறியீடு மே 1973-ல் அகில இந்தியாவில் 273 புள்ளியாக இருந்தபொழுது, சென்னையில் 224.6 ஆக இருந்திருக்கிறது. ஆக, இந்த விவரங்களின்படி பார்த்தால் சென்னை உணவு விலைக் குறியீட்டு நிலை அகில இந்தியாவின் உணவு விலைக் குறியீட்டைவிடக் குறைவாக உள்ளது என்பதை நாம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அத்தியாவசியப் பொருள்களின் மொத்த விலை நிலவரம் அல்லது சில்லறை விலை நிலவரம் ஆகியவற்றைத் தென் மாநிலங்களைப் பொறுத்தும், ஏனைய வட மாநிலங்களைப் பொறுத்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்கான விவரங்களையும் இந்த அவை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அரிசி, நடுத்தர அரிசி, பச்சை அரிசி பங்களூர் மார்க்கெட்டில் குவிண்டால் ரூ.212. இது 31-7-1973 அன்றைய நிலவரம். திருவனந்தபுரத்தில் 4-8-1973 அன்றைய நிலவரம் ரூ. 380 குவிண்டாலுக்கு. சென்னையில் 6-8-1973-ல் 133.

புழுங்கல் அரிசி பங்களூரில் ரூ.195 குவிண்டாலுக்கு, திருவனந்தபுரத்தில் ரூ.365 குவிண்டாலுக்கு, சென்னையில் ரூ.126 குவிண்டால்.

சோளம் பங்களூர் மார்க்கெட் ரூ.139, திருவனந்தபுரத்தில் ரூ.210, சென்னையில் ரூ.92.

கம்பு பங்களூரில் ரூ.138, திருவனந்தபுரம் மார்க்கெட் ரூ. 226, சென்னை ரூ.89.

கேழ்வரகு பங்களூர் மார்க்கெட் ரூ.112, திருவனந்தபுரம் ரூ.205, சென்னை ரூ.89.75.

கடலை பங்களூரில் ரூ. 177. அங்கு குறைவு. திருவனந்தபுரத்தில் ரூ.235, சென்னையில் அதைவிடக் குறைவு ரூ.202.

துவரை பங்களூரில் ரூ.188, திருவனந்தபுரத்தில் ரூ.210, சென்னையில் ரூ.175.

பச்சைப் பயிறு பங்களூரில் ரூ.288, திருவனந்தபுரத்தில் ரூ.323, சென்னையில் ரூ.207.

தேங்காய் எண்ணெய் பங்களூரில் ரூ.837, திருவனந்த புரத்தில் தேங்காய் அதிகம். அங்கே ரூ.825. சென்னையில் அதைவிட அதிகம், இது ஒன்றில் ரூ.941. உளுந்து பங்களூர் மார்கெட் ரூ. 266, திருவனந்தபுரம் ரூ.335, சென்னை ரூ.195. இவை நிலவரங்கள்.

இதிலே மற்ற வடபுலத்தில் இருக்கிற மாநிலங்களோடு ஒப்பிட்டால், சில்லறை விற்பனை விலையைப் பார்த்தால் கூட, சென்னையில் அரிசி விலை ரூ.1.22 ஒரு கிலோவுக்கு, அஹமதாபாத்-குஜராத்தில் ரூ.3.25, அமிர்தசரஸ் பஞ்சாபில் ரூ.2, ஜோத்பூர்-ராஜஸ்தானில் ரூ.2.25, உத்தரப்பிரதேசம் - ஆக்ராவில் ரூ.1.95, ஸிம்லாவில் ரூ.2.60, உத்தரப்பிரதேசம் - கான்பூரில் ரூ.1.75, மேற்கு வங்காளத்தில் ரூ. 2.25. இது அரிசியைப் பொறுத்தவரையிலாகும்.

சர்க்கரையைப் பொறுத்துச் சென்னையில் ரூ.3.65, குஜராத்தில் ரூ.3.95, பஞ்சாபில் ரூ.3.85, ராஜஸ்தானில் ரூ.3.75, ஆக்ராவில் ரூ.3.70, ஸிம்லாவில் ரூ.4, கான்பூரில் ரூ.3.60.

நல்லெண்ணெய், சென்னையில் ரூ. 8.50, குஜராத்தில் ரூ. 9, பஞ்சாபில் ரூ.8.80, ராஜஸ்தானில் ரூ.8.50, ஆக்ராவில் ரூ.9.25, ஸிம்லாவில் ரூ.8.50, கான்பூரில். ரூ.9.50.

இந்தச் சில்லறை விற்பனையைப் பார்த்தாலும் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாட்டில்தான் விலை அதிகம் என்ற அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, அல்லது தவறானவை என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன்.

அவர்கள் பேசும்போது, மாநில அரசுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் விலைகளை நிர்ணயம் செய்யும் முழு அதிகாரத்தையும் மத்திய அரசு அளித்திருக்கிறது என்று சொன்னார்கள். மதி அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த அதிகாரங்களையெல்லாம் நாம் பயன்படுத்திக்கொள்ள வில்லை என்றெல்லாம் கூட எடுத்துக் காட்டினார்கள். மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் எப்படி வரையறுக்கப்பட்டிருக் கின்றன என்பதை புது டெல்லியிலிருந்து 1972-ம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ம் தேதி எழுதப்பட்டுள்ள அரசு ஆணையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், சில உரிமைகளைக் கொடுத்து விட்டு.

'That such powers shall be exercised by the State Government subject to such directions if any. as may be issued by the Central Goverment in this behalf..' என்று சொல்லிவிட்டு, கீழே ஒரு 5,6 விவரங்களைத் தருகிறார்கள். அவை எவை எவை என்றால் விலைக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, கொள்முதல், போக்குவரத்துக் கண்டிரோல் இவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்காரினுடைய அதிகாரத்தை, அனுமதியைப் பெறாமல் எதுவும் செய்ய முடியாது என்கின்ற நிலைமையிலேதான் அவைகள் இருக்கின்றன.

விலைவாசிகள் ஏறியிருக்கின்றன, ஆகவே இந்த மந்திரிசபை பதவி விலக வேண்டும். இது எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட ஒரு வாதம். ஆனால் விலைவாசி எப்படி ஏறுகிறது விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு காரணமா, மத்திய அரசு காரணமா என்ற இந்தக் கேள்விகளை நாம் கேட்டு, அதற்கு ஒரு சரியான பதிலை நாம் வரவழைத்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல், மாநில அரசின் மீது குற்றம் சாட்டுவதற்கு இதைத் தவிர வேறு எதுவுமே இல்லை

என்ற அளவில் மாநில அரசின் மீது குற்றம் சாட்ட இதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நான் நிச்சயமாக விரும்பவில்லை. மாநில அரசு விலைவாசி உயர்ந்திருப்பதை உணர்கிறது. நாங்கள் மறுக்கவில்லை. ''அப்படித்தான் உயரும், சினிமாவுக்கு க்யூ நிற்கவில்லையா, அதைப்போல அரிசி வாங்க க்யூ நில்லுங்கள்'' என்று இந்த அரசில் உள்ள அமைச்சர்கள் யாரும் பேசமாட்டார்கள். சினிமா டிக்கெட் விலை உயரவில்லையா, அந்த டிக்கெட்டை வாங்கி படம் பார்க்கவில்லையா, அதைப்போல உணவுப் பண்டங்களின் விலையும் உயர்ந்திருக்கிறது, ஆகவே, அதை வாங்கிச் சாப்பிடுங்கள் என்ற அலட்சியப் போக்கில் இந்த அரசிலே உள்ள யாரும் பேசுவதற்குத் தயாராக இல்லை. விலைவாசி உயர்ந்திருப்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் எல்லா மாநிலங்களும் இந்தியா முழுவதும் இப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை நாம் தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அதை மறந்து விட்டு இந்த மாநில அரசின் மீது மாத்திரம் பழி போடுவது சரியானது அல்ல என்பதற்காகத் தான் இந்த விவரங்களை நான் எடுத்துச் சொன்னேன்.

உற்பத்தி குறைந்து பணப் புழக்கம் அதிகமானால் விலைகள் ஏறும். அது ஒரு வாதம், உற்பத்தி அதிகரிக்கப்பட்டு பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டால் விலைகள் குறையும். அதுவும் ஒரு வாதம். உற்பத்தி என்பது வேளாண்மைத் துறையிலே மட்டும் குறிப்பிடப்படுவது அல்ல. தொழில் துறையிலும் உற்பத்தி தேவை என்பதைக் குறிக்கின்ற வாதம்தான் அந்த வாதம் வேளாண்மைத் துறையில் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், அந்த உற்பத்திக்குத் தேவையான உரம், டிராக்டர், மற்றும் ஏனைய சாதனங்கள் எல்லாம் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இத்தகைய மூலப் பொருட்களை, விவசாய உற்பத்திக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகிக்கிற அதிகாரத்தையும், அதுபற்றிய கொள்கைகளை வகுக்கின்ற உரிமையையும் படைத்திருப்பது யார்? மாநில அரசா? மத்திய அரசா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காணவேண்டாமா? அதேபோல் தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப்

பொருட்களை இறக்குமதி செய்கிற அல்லது செய்வதற்குரிய லைசென்ஸ் கொடுக்கின்ற அதிகாரமும், தொழில் கொள்கைகளை வகுக்கிற அதிகாரமும், இந்தத் தொழில்கள் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ இருக்க வேண்டுமென்ற முடிவைச் செய்கின்ற அதிகாரமும் மத்திய அரசினுடைய கையிலே இருக்கிற

"The increase in prices of commodities raises costs of production of goods in general and this has impact on prices which in turn impinges on our wage-level and State and Central resources. We would therefore urge that Government of India should set up a Comprehensive Taxation Enquiry Commission to look into this whole question and suggest solutions."

ஒட்டுமொத்தமான ஒரு வரிக் கொள்கைக்கான ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டாகவேண்டும் என்ற கருத்தை நான் தேசிய வளர்ச்சிக் குழு மாநாட்டிலே எல்லா முதலமைச்சர்களுக்கும் முன்பாக இந்தியப் பிரதமர் முன்னிலையில் எடுத்துச் சொன்னேன். அது நல்ல யோசனை என்று பல மாநில முதலமைச்சர்களால் பாராட்டப்பட்டது. டெல்லியில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் எழுதின. தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளும் அதைப்பற்றி எழுதின. மேலவையிலும் சட்டப் பேரவையிலும் அதை வரவேற்றுப் பலர் பேசியதாக எனக்கு நினைவு. ஆனால் இதுவரையில் அதைப்பற்றிய சிந்தனையே மத்திய அரசிலே உள்ளவர்களிடம் எழுந்ததாக எனக்குத் தெரியவில்லை.

உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்கிற ஒரு கருத்து உண்மையான கருத்துத்தான் என்றாலும்கூட, அதுமாத்திரம் போதாது என்பதற்கு ஒரு முன் உதாரணம் நமக்கிருக்கிறது.

இந்தியாவின் பிரதமராகத் திருமதி.இந்திரா காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில் 72.3 மில்லியன் டன்னிலிருந்து 107.81 மில்லியன் டன்னாக உணவு தானியங்களின் உற்பத்தி இந்தியாவில் உயர்ந்தது.ஆனால் அப்படி உற்பத்தி அதிகரித்தும் விலைவாசி குறைந்ததா என்றால்

இல்லை. உணவு தானியங்களின் விலை, குறிப்பாக கோதுமையின் விலை மேலும் அதிகமாயிற்று. அவ்வளவு உற்பத்திக்குப் பிறகும். அதற்குக் காரணமென்ன? அதிக உற்பத்தி செய்தால் மாத்திரம் போதாது. சரியான பொருளாதாரக் கொள்கை மானிட்டரி பாலிசி வகுக்கப்பட வேண்டும் என்பதைத்தான் அது கோடிட்டுக் காட்டுகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெளிவாக்க விரும்புகிறேன்.

வழங்கலும் தேவையும் (சப்ளையும், டிமாண்டும்) என்று நாம் வைத்துக்கொண்டு பார்த்தால் கூட, நோட்டு அடித்துக் குவித்துக் கொண்டிருப்போமானால், பற்றாக்குறை நிதி நிலை (டெபிசிட் பைனான்சிங்) ஏற்படுகிறது. அப்படிப் பற்றாக்குறை நிதிநிலை ஏற்பட்டால் விளைவு என்ன?

மிக அதிகமான பணப்புழக்கம் மிகக் குறைவான பண்டங்களைத் துரத்திக் கொண்டு போகிறது. அப்படித் துரத்தும்போது தானாகவே விலை உயருகிறது. இதை நாம் நெஞ்சில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். பண்டங்களின் உற்பத்தியைவிட, கரன்சி நோட்டுகளின் உற்பத்தி இன்று இந்தியாவில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. 1966-லிருந்து 1972 வரை இந்தக் காலக்கட்டத்தில் பணப்புழக்கம் (Money Supply) இரட்டிப்பாக ஆகியிருக்கிறது. அதே நேரத்தில் விவசாயப் பண்டங்கள் போன்ற தேசிய ஆதாரப் பண்டங்களின் உற்பத்தி 52 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. நோட்டு அடிப்பது - பணப் புழக்கம் இரட்டிப்பாக உயர்ந்திருக்கிறது. ஆனால் உற்பத்தி, தேசியப் பண்டங்களின் உற்பத்தி 52 கோடியிலிருந்து 40 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டிருக்கிறது. எனவே பண்டங்களின் உற்பத்திக்கும் அதிகமாக நோட்டு அடித்துக் குவித்தால் விலை உயருமா உயராதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். 1972 ஏப்ரல் 8-ந் தேதி 8,247 கோடியாக இருந்த பணப்புழக்கம் 1973 ஏப்ரல் 27-ந் தேதி 9,545 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 16 சதவிகிதம் பணப்புழக்கம் உயர்ந்திருக்கிறது.

இதை எல்லாம் கருதித்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ''நாட்டு வாட்டம் போக்கிட, நோட்டடித்தால் போதாது'' என்று அன்றைக்கே தன்னுடைய தேர்தல் பிரகடனத்தைச் செய்தார்கள். அப்போது நாட்டு, நோட்டு என்று அடுக்குச் சொல் எழுதுகிறார் அண்ணா என்று சிலர் கேலி செய்தார்கள், கிண்டல் செய்தார்கள். ஆனால் இன்று அது எவ்வளவு பொருத்தம் என்பதை மக்களுக்கு, உலகத்திற்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று கூறி அன்று நாங்கள் மாநில சர்க்காரை எதிர்த்து போராட்டம் நடத்தவில்லையா என்று கேட்டார்கள். நடத்தினோம்.

ஏனென்றால், அப்போது யாரும், இதற்கு மத்திய சர்க்கார் தான் பொறுப்பு என்று, எந்த அமைச்சர் பெருமக்களும் காரணங்களைச் சொன்னது கிடையாது. இன்றைக்குக் கூறியிருப்பதைப்போல சொல்கின்ற துணிவை அப்போதிருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் யாரும் பெற்றிருக்கவில்லை.

இன்றைக்கு என்ன நிலை? ஒரு தராசை எடுத்துக் கொண்டால் இரண்டு தட்டுகள் இருக்கின்றன. ஒரு தட்டில் உற்பத்தி நிலைமையையும் இன்னொரு தட்டில் கரன்சி நோட்டையும் வைத்துப் பார்க்கிறோம் என வைத்துக் கொள்வோம். கரன்சி நோட்டை அதிகமாக அடித்து உற்பத்தித் தட்டைப் பெருக்காமல் விட்டுவிட்டு, முள்ளைப் பிடித்துக்கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து, ''ஒழுங்காகப் பிடிக்கவில்லை'' என்றால் என்ன வேடிக்கை! தராசு சமமாக இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. முள் ஆடுகிறதே என்றால் அது மாநில அரசின் குற்றம் அல்ல.

இங்கிலாந்து நாட்டில் ''பிரைஸ் போர்டு'' என்று ஒன்று அமைக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டு அது அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அனுமதியைப் பெற்றுதான் பலரும் விலையை நிர்ணயம் செய்ய முடியும், உயர்த்த முடியும் என்ற நிலையைச் சுட்டிக்காட்டி நிர்வாகச் சீர்திருத்தக் குழு-ஏ.ஆர்.ஸி. - அதன் தலைவர் திரு. ஹனுமந்தையா - இந்திய அரசுக்கு ஒரு சிபார்சு செய்தது. commission on prices, costs and tariffs என்ற ஒரு அமைப்பு

இங்கே இருக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. அதன் அனுமதி பெற்றுத்தான் ஆலைகளில் உற்பத்தியாகிற பண்டங்களின் விலையும், கச்சாப் பொருள்களின் விலையும் உயர்த்தப்பட வேண்டுமென்று ஏ.ஆர்.சி.குழு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்து எவ்வளவு நாளாகிறது? இதுவரை மத்திய அரசு அதைப்பற்றி யோசனை செய்ததா என்றால் இல்லை.

இந்த சூழ்நிலையில்தான் நாம் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசுதான் மாநில அரசு அல்ல என்று சொல்கிறோம். இந்த எண்ணத்தைத் தமிழ்நாட்டு அரசின் சார்பில் நாங்கள் மாத்திரம் சொல்கிறோமா என்றால் இல்லை. இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில அரசுகளும் சொல்கின்றன.

இங்கே நம்மைப் பார்த்து கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் - விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசே காரணம் என்று சொல்கிற அதே நேரத்தில் நான் அவர்களுக்குக் கேரள அரசைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கேரளாவில் எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு.அச்சுத மேனன் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார். அவர் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர். அங்கே இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி மாநில சர்க்கார் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் அல்ல, மத்திய சர்க்கார்தான் காரணம் என்று போர்க்கொடி உயர்த்துகிற காட்சியை அங்கே காண்கிறோம். பந்த் நடைபெறுகிறது. 1,200 பேர்கள் சிறையில் அடைபடு கிறார்கள் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இரண்டு பேரும், தனியாக ஒருவரும் கொல்லப்படுகிறார்கள். இவைகள் எல்லாம் கேரளத்தில் சென்ற வாரம் நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

என்ன காரணம்? விலையேற்றம், உணவுப்பொருள் பற்றாக்குறை, பஞ்சம், வறுமை, வறட்சி இவைகளுக்குக் காரணம் மாநில அரசு அல்ல, மத்திய அரசு என்று அங்கிருக்கிற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (சி.பி.ஐ.) போர்க்கொடி தூக்குகிற காட்சியை அங்குப் பார்க்கிறோம். அதற்கு ஆளும் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் ''நீங்கள் முயல் போலவும் ஓடுகிறீர்கள்; வேட்டை நாய் போலவும் துரத்துகிறீர்கள் ; பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள்'' என்று அங்கிருக்கிற இந்திரா

காங்கிரஸ்-ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செயலாளர் சி.பி.ஐ. கட்சியைப் பார்த்துக் குறை கூறுகிறார். கேரளாவில் ஆளுகின்ற கட்சியாக இருக்கிற சி.பி.ஐ. கூட விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு அல்ல காரணம், மத்திய அரசுதான் காரணம் என்று மத்திய அரசினைச் சுட்டிக்காட்டுகிறது.

அதைப்போலவே கடந்த வாரத்தில் டெல்லியில் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் உட்பட ஒன்பது கட்சிகள் கொண்ட கூட்டத்தில், இங்கே விலைவாசி உயர்வுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற சுதந்திராக் கட்சியும் உள்ளிட்டு, விலைவாசி உயர்வுக்குக் காரணம் மத்திய அரசாங்கம்தான் என்பதாக அங்கே ஒரு தீர்மானத்தைப் போட்டு, திரு.கிருபளானி தலைமையில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். பழைய காங்கிரஸ் கட்சி, தி.மு.க., சுதந்திராக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, எஸ்.எஸ். கட்சி, முஸ்லீம் லீக் மற்ற கட்சிகள் எல்லாம் கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றி, வருகிற 26-ஆம் தேதி ஒருமனதாக இந்தியா முழுவதும் மத்திய அரசைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்த வேண்டும், அணிகளை நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பதைக் காண்கிறோம். இதுகூட விலைவாசி ஏற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணம் என்பதைப் புலப்படுத்த வில்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசுதான் காரணம் என்று கூறுகின்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பதில் அளிக்கிற முறையில் கேரள மாநிலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சியும் டெல்லியில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூடி நிறைவேற்றியிருக்கிற தீர்மானமும் எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பதுபோல நிர்வாகச் சீர்திருத்தக் குழு இருக்கிறதே, ஹனுமந்தையா தலைமையில் அமைந்த ஏ.ஆர்.ஸி - நம்முடைய முன்னால் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்குக் கூட அதில் ஈடுபாடு உண்டு. அவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து தயாரித்த அந்த ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் சென்டர் - ஸ்டேட் ரிலேஷன் பற்றிச் சொல்கிறபோது In fact, it is the policies of the Central Government that are responsible for inflation and increase in prices and the cost of என்று மத்திய அரசைக் குறை

கூறித்தான் இது மத்திய அரசின் என்றுதான் நிர்வாக சீர்திருத்தக் குழு சுட்டிக்காட்டியிருப்பதையும் நாம் காண்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதியாகத் திட்டங்களை ஒழுங்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிற, வறட்சி நிவாரணப் பணிகளைச் சரியாகச் செய்து கொண்டிருக்கிற மாநிலம் தமிழ்நாடுதான். உணவு நிலைமையில் தன்னிறைவு கண்டு இருக்கிற மாநிலமும் தமிழ்நாடுதான் என்ற சிறந்த பாராட்டுரையை சென்ற சில நாட்களுக்கு முன்னால் 7, 8 பாராளுமன்ற உறுப்பினர்கள், பல கட்சிகளையும் சார்ந்தவர்கள் அவர்களாகவே ஒரு குழு அமைத்து, இந்தியா முழுவதும் சுற்றிப்பார்த்து தென்னக மாநிலங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுச் செல்லும்போது அந்தக் குழுவின் தலைவராக வந்த திரு.ஜோதிர் மாய் பாசு-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பத்திரிகைக்கு அறிக்கை விடும்போது சொன்னார்-டைம்ஸ் ஆப் இந்தியா ஜூலை 30-ம் தேதி இஷ்யூவில் வந்திருக்கிறது. பசுமைப் புரட்சி என்பதற்குப் பதிலாக, வறட்சிப் புரட்சிதான் பல பகுதிகளில் நிலவி வருகிறது. இந்த வறண்ட பகுதிகளில் உத்தரப்பிரதேசம், பீகார், ஆந்திரா, ராஜஸ்தான் ஆகியவற்றில் 50 சதவிகிதத்திற்கு மேலாக வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறவில்லை. திட்டத்திற்கு மேலாக உற்பத்தி செய்து, பஞ்ச நிவாரண வேலைகளை முழுமையாக கடைப்பிடித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதாக மார்க்சிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜோதிர்மாய் பாசு பத்திரிகையாளர் களுக்குத் தெரிவித்த கருத்து ஜூலை 30-ம் தேதி டைம்ஸ் ஆப் இந்தியாவில் வந்திருக்கிறது.

இன்னும் விலைவாசியைச் சரிப்படுத்த, உணவு நிலைமையைச் சரிப்படுத்தத் தவறிவிட்டதற்குக் காரணங்களைச் சொல்லும்போது நமது பெரியவர் மணலி அவர்கள் கூடச் சொன்னார்கள். ‘‘கள்ளக் கடத்தல்காரர்களை நீங்கள் பிடிக்க வேண்டும், கள்ளக் கடத்தல்காரர்களை நீங்கள் விடக்கூடாது’’ என்று நண்பர் மதி அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். கள்ளக்கடத்தல்காரர்களை நீங்கள் பிடித்திருப்பதற்கு நாங்கள் பாராட்டுகிறோம், மகிழ்ச்சி தெரிவிக்கிறோம் என்றார்கள். இந்த அரசு கள்ளக் கடத்தல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் 16

பேர்களைப் பிடித்திருக்கிறது. கோவையில் 13 பேர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பேர்கள் இதுவரையில் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிடிக்கப்பட்டிக்கிறார்கள். இதற்கு முன்பே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கக் கூடாதா என்ற கேள்வி எழுந்தது.

இந்தியாவிலேயே பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, பதுக்கல்காரர்களையும் கள்ளக்கடத்தல்காரர்களையும் பிடித்திருக்கிற மாநிலம் நம்முடைய தமிழக மாநிலம் ஒன்றுதான் என்று கருதுகிறேன். வேறு மாநிலங்களும் இருக்கக்கூடும் என்று சொன்னால் நான் திருத்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். ஒருவேளை விவரமின்றிச் சொல்லக்கூடும். இந்தச் சட்டப்படி நமது மாநிலத்தில் இன்றையதினம் 16 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்வேன், திரு.மணலி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், கள்ளக் கடத்தல்காரர்கள் நூற்றுக்கணக்கில் இருந்தாலும், பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்களைப் பிடித்து சிறையில் அடைக்க இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது, தயங்காது என்று உறுதியாகக் கூறுவேன். அவர்களைவிடச் சமுதாய விரோதிகள் இப்படிப்பட்ட நேரத்தில் வேறு யாரும் இருக்க முடியாது.

நமது நண்பர் திரு.வெங்கடசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதிகாரிகளையும், மற்றவர்களையும் கண்டிக்கிறீர்கள். ஆனால் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் சில விவகாரங்களில் தலையிடுகிறார்கள். அப்படித் தலையிடுவது சரியா? அப்படித் தலையிடுவது நிறுத்தப்படவேண்டாமா? என்று கேட்டுவிட்டு, ‘‘நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மகாநாட்டில் பேசும்போது ஒன்றைக் கூறினீர்கள்’’ என்பதாகவும் சொல்லி யாரும் தலையிடக் கூடாது என்று சொல்லியிருப்பதில் இருந்து இதுவரை தலையீடு இருந்திருக்கிறது என்பதாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற வாதத்தை நண்பர் வெங்கடசாமி அவர்கள் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் குறிப்பிட்டது, இந்த அவைக் குறிப்பிலும் ஏறவேண்டும் என்பதற்காக இங்கேயும் குறிப்பிடுகிறேன்.

''தனிப்பட்ட குறைகளைத் தீர்க்க மனுநீதித் திட்டமும், கிராமங்களின் அல்லது ஒருசாராரின் பொதுவான குறைகளைத் தீர்க்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு முறைகளும் இருக்கின்றபோது, இடையிலே சிபாரிசு செய்ய ஆட்கள் தேவையில்லை. எனினும், ஜனநாயக அமைப்புகளின் வாயிலாக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர இயலாத சில பொதுப் பிரச்சினைகளும் இருக்கக்கூடும். அவைகளுக்குத் தீர்வுகாண மக்களின் பிரதிநிதிகளோ, தனிப்பட்டவர்களோ அதிகாரிகளை அணுகுவதில் தவறில்லை. நியாயத்திற்கு முரண்பாடான சில காரியங்களைச் சாதித்துக் கொள்ள, செல்வாக்குப் பெற்றவர்கள் அதிகாரிகளை அணுகக் கூடும். அவர்களது முறையீட்டில் அல்லது பரிந்துரையில் நியாயமிருந்தால், செய்யுங்கள்; நியாயமில்லையெனில் அப்படிப்பட்ட பரிந்துரைகளைச் செய்பவர்கள் எவ்வளவு பெரிய இடத்தில் இருந்தாலும், அதைச் செய்ய இயலாது என்று கண்டிப்பாகவே கூறிவிடலாம்.

சில நேரங்களில் நியாயங்களைச் செய்வதற்குக் கூட வீண் காலதாமதமும் அந்தத் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு இடையிலே நேர்மையற்ற சில காரியங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்துவிடுகின்றன. அந்தத் தவறானக் காரியத்தைச் செய்யச் சாடை காட்டுகிற அதிகாரிகளானாலும், அல்லது அந்தத் தவறான காரியத்தைச் செய்ய அதிகாரிகளைத் தூண்டுகிறவர்களானாலும், இரு சாராருமே சமூகத் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை''.

அதுபோலவே, அதிகாரிகள் சிலர் தங்கள் சொந்த நலனுக்காக, செல்வாக்கு பெற்றவர்களிடம் அல்லது மக்கள் பிரதிநிதிகளிடம் அணுகி அவர்கள் மூலமாக அரசுக்கு நிர்ப்பந்தங்களைத் தருவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு தங்கள் நலன்களுக்கு பரிந்துரையாளர்களை ஏற்பாடு செய்துகொள்கிற அதிகாரிகள் யாரானாலும் அவர்கள் கண்டிப்பாக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதையும் நான் திடமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுடைய பொதுப் பிரச்சினைகள் தவிர, வேறு எந்தப் பிரச்சினைக்கும் நேரிடையாக அரசாங்க அதிகாரிகளை

அணுகாமல், நியாயத்திற்குப் புறம்பான செயல்கள் எங்கே நடைபெற்றாலும் அவைகளை மக்களின் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்; அவர்கள் அரசு அதிகாரிகள் குறித்து எந்தவிதமான பரிந்துரைகளையும் அரசுக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை நான் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளேன். அந்தக் கருத்தில் இந்த அரசு மேலும் அழுத்தந் திருத்தமாக இருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்'' என்று நான் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டிலே சொல்லி யாரும் தனிப்பட்டவர்களுக்கு, நியாயமற்ற காரியங்களுக்கு, தனிப்பட்ட காரியங்களுக்கு அதிகாரிகளை நாடக்கூடாது என்று சொன்னேன். அதை வைத்துக் கொண்டு சில உறுப்பினர்கள், திரு.வெங்கடசாமி உட்பட, சொன்னார்கள். ''இதிலிருந்து இவர்கள் ஏற்கெனவே அப்படித் தலையிட்டிருக் கிறார்கள் என்று தெரியவில்லையா?'' என்று சொன்னார்கள். அதற்கு இதுவா இதுவா அர்த்தம்? நீ கண்ணகிபோல் வாழ்க என்று சொன்னால், அவள் ஏற்கெனவே பாஞ்சாலிபோல் என்றா அர்த்தம்? நீண்டபயணம் போகிறவரைப் பார்த்து, ''போகிற பாதையிலே ஒரு குறுக்குப் பாதை வரும், அந்தப் பாதைப் பக்கம் போகாதே'' என்று கூறினால், அவன் அந்தப் பாதையிலே, போனான் என்றா அர்த்தம்? செய்யாதே என்றால், சொல்கிறவன், அதை ஏற்கெனவே செய்தான் என்று அர்த்தமாகாது. நான் தெளிவாகச் சொல்கிறேன், அப்படி யாராவது செய்திருந்தாலும் அது தவறுதான்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பண்ருட்டி நகராட்சித் தலைவர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கடிதம் கொடுத்து அனுப்பினார் என்று. அது தவறு, நான் கண்டிக்கிறேன். ஆனால், ஒன்றை நான் சொல்கிறேன். அந்தக் கடிதத்தினைப் பெற்ற அதிகாரி எவரும் அந்தக் கடிதத்தின்படி நடந்து கொள்ளவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்திருப்பதாகத்தான் நான் அறிகிறேன். கடிதம் கொடுத்தது தவறு. நான் அதற்காக வருந்துகிறேன். அப்படி கடிதத்தின்படி நடந்திருந்தால், நிச்சயமாக அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். நல்லவேளையாக அதிகாரி

அப்படி நடந்துகொள்ளவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்று மிக முக்கியமாகப் பேசப்பட்ட மற்றொன்று மதுவிலக்குப் பிரச்சினை. மதுவிலக்கை ரத்து செய்துவிட்டதாக சிலர் சொன்னார்கள். அந்த வார்த்தையைத் திருத்தமாகப் பயன்படுத்துவது நல்லது. மதுவிலக்கை இந்த அரசு ஒத்தி வைத்திருக்கிறது என்றுதான் சொன்னேனே அல்லாமல், ரத்து செய்து விட்டது என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு எதிர்த்தரப்பிலே அமர்ந்திருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அந்தக் கட்சியினுடைய தலைவர் உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, என்ன நடந்தது? கோயம்புத்தூர் பொதுக் குழுவிலே, மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர, இப்போதுள்ள நிலைமையில் வேறு வழியில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தக் கட்சியினுடைய தலைவரே அதை விளக்க ஒரு மணி நேரம் பொதுக் குழுவில் பேசி, அதுவும் போதாது என்று ஆனந்த விகடன் பத்திரிகையிலே ''ஏன் முதலமைச்சர் இந்த முடிவெடுக்க நேரிட்டது?'' என்பதை விளக்கிப் பல கட்டுரைகளும் எழுதி, அதற்குப் பிறகு நாம் மதுவிலக்கை ஒத்தி வைத்தோம்.

இந்த அரசு எதிலும் விடாப்பிடியாகத்தான் இருக்கும், சில குறைகள் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக்கொள்ளாது என்று யாரும் நினைப்பதற்கு இடம் இல்லாத வகையில், எவ்வப்போது குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் இந்த அரசு அவற்றைத் திருத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு பெரிய அடையாளம்தான், ஒத்தி வைத்த மதுவிலக்கை மீண்டும் கொண்டுவாருங்கள் என்று குரல் எழுப்பியதும், தமிழ் நாட்டு மக்களுடைய குரலை மதித்து இன்றைக்கு முதல் கட்டமாகக் கள்ளுக் கடைகளை எல்லாம் மூடுவோம் என்று அறிவித்திருக்கிறோம்.

கள்ளுக்கடைகளை மூடிவிட்டால் போதுமா, சாராயக் கடைகளை மூட வேண்டாமா என்றால், சாராயக் கடைகள் எப்போதுமே இருந்துவிடும் என்று யார் சொன்னார்கள்? அவையும் மூடப்படும். முதல் கட்டம் என்று சொல்லுகிறபோதே,

முடிவான கட்டம் என்று பொருள் அல்லவே. இரண்டாவது கட்டம் இருக்கிறது என்றுதானே பொருள். ஆகவே, சாராயக் கடைகளும் மூடப்படும். இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில், ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டம் வகுத்துவிட்ட சூழ்நிலையில் நாம் மெல்ல மெல்லத்தான் அந்தப் புனிதமான காரியத்தை மீண்டும் இங்கே புகுத்த வேண்டும் என்ற அளவில்தான் முடிவெடுத்தோமே தவிர வேறல்ல.

இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய நண்பர் வேலப்பன் அவர்கள் கூடச் சொன்னார்கள். இங்கே, நான் சொன்ன உதாரணத்தை அவருக்கு உரிய பாணியிலே கேலி செய்து பேசினார். நான் வரவு-செலவுத் திட்ட உரையிலே பேசும்பொழுது குறிப்பிட்டேன். 'கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாள் இருக்க முடியும்?'' என்று கேட்டேன். இந்த உதாரணங்களெல்லாம் நான் அண்ணாவிடமிருந்து கற்றுக்கொண்டவை. ஆகவேதான், 'கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள் இருக்க முடியும்? என்று கேட்டேன். மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று சொன்னவர்களே கூட அன்றைக்கு அந்த உதாரணத்தை ரசித்ததை நான் பார்த்தேன். ஆனால் நண்பர் வேலப்பன் அவர்கள் அந்த உதாரணத்திற்கு நேர் மாறாக, நேற்றையதினம், ஓர் உதாரணம் சொன்னார்' ''சுற்றிலும் இருக்கிற பெண்கள் எல்லாம் கெட்டுவிட்டார்கள் என்பதற்காக நம் வீட்டுப் பெண்ணையும் விட்டுவிடுவதா?'' என்று, இந்தப் பேரவையில் ராஜாஜியின் படமும், வள்ளுவரின் படமும், எங்களை வளர்த்த பேரறிஞர் அண்ணாவினுடைய படமும், அண்ணல் காந்தி அடிகளுடைய படமும் அலங்கரித்திருக்கின்ற இந்த அவையில், அவர் அந்த உதாரணத்தைச் சொன்னார். அவரவர்கள் இயல்புக்கேற்ற உதாரணம். அண்ணா அவர்கள் சொல்வார், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமிருக்கும் என்று. ஆகவே, மாற்றாரிடம் இருக்கிற நல்லவைகளையும் வரவேற்போம், என்ற கருத்தில். 'மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் இருக்கும் என்று கூறுவார்' - இது அண்ணாவினுடைய இயல்புக்கேற்ற உதாரணம்.

உடனே திரு.வேலப்பன் எழுந்து, மாற்றான் தோட்டத்து மல்லிகையில் மாத்திரம்தான் மணம் இருக்குமா? மாற்றான் தோட்டத்தில் மலஜலம் இருக்கும் இடத்திலே கூட ஒருவித மணம் இருக்கும். அதற்காக அவைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா? என்று கேட்கலாம். உதாரணம்தானே? அதைப்போல் அவர் நேற்று நான் சொன்ன உதாரணத்திற்கு, ஒரு அருமையான உதாரணத்தைச் சொன்னார்? அப்படிப்பட்ட உதாரணங்கள், கையாளப்படுகிற நேரத்தில் உள்ளபடியே எவ்வளவு ஜாக்கிரதையாகக் கையாளப்பட வேண்டுமென்பதை நண்பர்கள் எண்ணிப் பார்த்து, யோசித்துப் பார்த்து, கையாளுவது நலம் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு மதுவிலக்கு, பரிபூரணமாக அமல்படுத்தப்பட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணை யும் கிடையாது; மதுவிலக்கு பரிபூரணமாக வரவேண்டும். அதே நேரத்தில் நான் ஒன்று கேட்கிறேன். மாநில சுயாட்சி என்றால் என்ன, சுயநலம் என்கிறீர்கள்? தமிழ்நாடு என்றால் அது என்ன, சுயநலம் என்கிறீர்கள்? ஆனால், மதுவிலக்குக் கொள்கை மாத்திரம்-தமிழ் நாட்டிலே மாத்திரம்தான் இருக்க வேண்டும்; அதில் இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களைப்பற்றி எல்லாம் கவலையில்லை என்கிறீர்களே, என்ன காரணம்?

நான் இங்கேயிருக்கிற பழைய காங்கிரசை, ஆளும் காங்கிரசை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியை, தமிழரசுக் கழகத்தை, தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சியை, சுதந்திராக் கட்சியை, முஸ்லீம் லீக்கை-எல்லாக் கட்சிகளையும் அழைக்கிறேன். அடுத்த ஆண்டு, சாராயக் கடைகளையெல்லாம் மூடிவிட்டு, அதற்குப் பிறகு மத்திய சர்க்காரை எதிர்த்து, இந்தியா முழுவதும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர என்கிற ஒரு போராட்டத்தை நாம் தொடங்குவோம். அத்தனை பேரும் அதில் இணைய வேண்டுமென்று நான் எல்லாக் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்வேன். (ஆரவாரம்).

அதற்கிடையே, பழைய காங்கிரஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். விரைவிலே புதுச்சேரியிலே பொதுத்

தேர்தல் வரஇருக்கிறது. அங்கே உங்கள் தேர்தல் பிரகடனத்திலே, ''நாங்கள் ஜெயித்தால் புதுச்சேரியிலே கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் மூடுவோம்'' என்று வீரமாக அறிவியுங்கள். வீரமாக அறிவித்து மற்றவர்களுக்கெல்லாம் வழி காட்டியாக வேண்டும்.(சிரிப்பு).

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, நான், நாவலர், பேராசிரியர்அன்பழகன், என்.வி.என்., சத்தியவாணிமுத்து மற்றும் இங்கே அமர்ந்திருக்கிற கழக அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று இரண்டு மூன்று நாட்களாகச் சொல்லிப் பார்த்துவிட்டீர்கள். நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டோம். மன்றாடியாரை விடுதலை செய்ய வேண்டுமென்றீர்கள்; விடுதலை செய்தோம். கன்னியாகுமரியில் கைதானவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்றீர்கள்; விடுதலை செய்தோம். கன்னியாகுமரியில் கைதானவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டீர்கள் ; 2 நாளைக்கு முன்பே விடுதலை செய்தோம். ஆனால், இதை மாத்திரம் கேட்க முடியவில்லை. வருந்துகிறோம் . வணக்கம்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 68 **நாள் : 17.08.1974**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உடல் ஊனம் உற்றோர் நல்வாழ்வு நிதி, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி, கண் ஒளி நிதி ஆகிய நல்ல காரியங்களுக்கு வசூல் செய்வதை தான் மறுக்கவில்லை என்றும், ஆனால் அந்த வசூலில் கெடுபிடி இருப்பதாகவும் காங்கிரஸ்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த விதமான கெடுபிடியும் இதிலே கடைப் பிடிக்கப்படவில்லை. பொதுவாக இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு ஒரு மாசு ஏற்படுத்துவதற்கு யாரும் முனையக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். யாராவது அப்படி கெடுபிடி படுத்தப்பட்டு, அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தால், தகவல் தருவார்களே யானால், அந்தப் பணத்தை அவர்களுக்கு திருப்பித் தருவதோடு, அப்படி கெடுபிடி செய்த அதிகாரிகளின் மீதும் இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நண்பர் மாரிமுத்து அவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையற்றது என்பதை எடுத்துக் கூறுகிற அளவில் நான் சில கருத்துக்களை மிகச் சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர் மாரிமுத்து அவர்களும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நிலவுகிற உணவுப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு நாங்கள் இந்தப்

பேரவையை ஒரு வாய்ப்பாகக் கொள்கிறோம் என்று எடுத்துச் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எடுத்துக் காட்டப் பெற்றக் குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் இவைகளுக்கு எல்லாம் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் விளக்கமான பதில்களை இங்கே கூறியிருக்கின்றார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தாலும் நான் பேசிய பிறகு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள நண்பர் மாரிமுத்து அவர்கள் மீண்டும் உரையாற்றுவதற்கான நியதியிருக்கிற காரணத்தாலும் விரைவிலேயே என்னுடைய உரையை நான் முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய பல பிரச்சினைகளுக்கு இந்த மாமன்றத்திலே நான் தொடர்ந்து அமர்ந்திருந்து அந்தந்த நேரத்திலேயே குறுக்கிட்டு பல விளக்கங்களை அளித்திருக்கிற காரணத்தால் அவைகளை எல்லாம் திரும்பத் திரும்ப இங்கே எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற உணவுப் பிரசிச்னை உள்ளபடியே நாம் அனைவரும் சேர்ந்து வேதனைப்படத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதை நான் மறுக்கவில்லை. அதற்கான நல்ல வழிவகைகளை, எப்படி இந்தப் பிரச்சினையிலிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்றுவது என்பதற்கான அறவுரைகளை இந்த மாமன்றத்திலே நான் எதிர்பார்த்த அளவிற்கு பல கட்சிகளி னுடைய தலைவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டுக்களைக் கூறுவது என்பது ஒன்று, குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பது மற்றொன்று. குறைகள் குற்றங்கள் இரண்டுக்கும் இடையில் பெருத்த இடைவெளி இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. குற்றங்கள் பெரும்பாலும் தெரிந்து செய்யப்படுகின்றவை. குறைகள் சில நேரங்களில் தெரியாமலே விளைந்துவிடுகிறவைகள். அவைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில் திருத்திக் கொள்கிற மனப்பான்மை ஆளும் கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு அது மிகமிகத் தேவைப்படுகின்ற

ஒரு சிறந்த பண்பு என்பதனை நான் உணராமல் இல்லை. அந்த வகையில் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகள் எதுவாக இருந்தாலும் தனித்தனியாக, பகுதி பகுதியாக, மாவட்ட ரீதியாக எடுத்துச் சொல்லப்பட்ட எந்தக் குறைபாடுகளாக இருந்தாலும் அவைகளை நிச்சயமாக நான் அவ்வப்போது குறுக்கிட்டு உறுதி அளித்ததைப் போல் களைவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்ற திடமான உறுதியை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மற்ற மாநிலங்களைவிட உணவு நிலைமையில் ஒரு தன்னிறைவும் நாம் அனைவரும் மகிழத்தக்க ஒரு சூழ்நிலையும் இருந்தது. திடீரென்று இரண்டொரு நாட்களில் மாறிவிட்டது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமான வாதமாகாது. இப்படி மாறக்கூடும் என்கின்ற எச்சரிக்கையை நான் 16-3-1974-ம் நாள் அன்று சட்டமன்ற மேலவையில் உரையாற்றிய போதே தமிழ் நாட்டுக்கு ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

16-3-1974-ல் நான் மேலவையில் பேசும்போது குறிப்பிட்டது, தமிழ்நாட்டிலுள்ள சிறுதானியங்களை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல எந்தத் தடையும் கிடையாது என்கின்ற மத்திய அரசினுடைய ஆணையின் காரணமாக ஏற்பட இருக்கிற நெருக்கடியை நான் உணர்த்தினேன். நான் பேசிய வாசகங்களைக் கூட இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வது என் கடமை என்று நான் கருதுகிறேன். ‘‘நம்முடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல் மாநிலத்திற்கு மாநிலம் சிறு தானியங்களின் போக்குவரத்தை திறந்துவிட்டது விட்டதுதான், இதை மாற்றுவதற்கில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லி விடுமேயானால், நாம் புதியதொரு உணவு நெருக்கடியை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கும் நிலைமை வரும் என்பதையும் இப்போதே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்” என்று அன்றே சொன்னேன். சொன்னதோடு நின்றுவிடவில்லை. மத்திய அரசோடு வாதங்களை நடத்தினோம். மத்திய அரசிலுள்ள பொறுப்புள்ள அமைச்சர்களுக்கு அதைப்பற்றி எழுதினோம். தந்திகள் மூலம் தெரிவித்தோம்.

நேரடியாகச் சென்று பேசினோம். லெவியாவது நாங்கள் பெற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டோம். இவ்வளவு முறையீடும் மறுக்கப்பட்ட பிறகு சிறு தானியங்கள் எல்லா மாநிலங்களுக்கும் கொண்டுசெல்லலாம் என்கின்ற உத்தரவு நிலைப்படுத்தப்பட்டது. அது திரும்பப் பெறமாட்டாது என்று மத்திய அரசால் நமக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது.

நம்முடைய மாநிலத்தினுடைய அரிசி உற்பத்தி, அதே நேரத்தில் சிறு தானியங்களினுடைய உற்பத்தி இரண்டையும் கணக்கிட்டால் 1973-ம் ஆண்டு நம் மாநிலத்தில் அரிசி உற்பத்தி 55 லட்சம் டன்னாகவும் சிறு தானியங்களினுடைய உற்பத்தி 14 லட்சம் டன் ஆகவும் இருந்தது.

1974-ம் ஆண்டு அரிசி உற்பத்தி 53 லட்சம் டன்னாகவும் சிறு தானியங்களினுடைய உற்பத்தி 13 லட்சம் டன்னாகவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1974-ம் ஆண்டு மக்கள்தொகையைக் கணக்கிட்டதில் நம் தமிழ் மாநிலத்தினுடைய மக்கள் தொகை 4½ கோடியாகும். ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 400 கிராம் அரிசி தேவை என்று கணக்கு வைத்துக்கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 146 கிலோகிராம் அரிசி ஒரு நபருக்குத் தேவைப்படுகிறது. இதன்படி நம் மக்கள் தொகைக்கு, மொத்தத் தொகைக்கு, அதற்கான தேவை ஆண்டு ஒன்றுக்கு 65.7 லட்சம் டன். நம்முடைய அரிசி உற்பத்தி 53 லட்சம் டன்னையும் சிறுதானிய உற்பத்தி 13 லட்சம் டன்னையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 66 லட்சம் டன் நமக்குக் கிடைத்து மாநிலம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இப்போதும் திகழ்ந்திருக்க முடியும்.

ஆனால், மத்திய அரசு 6-3-1974 அன்று பிறப்பித்த மாநிலக் கட்டுப்பாடுகள் பற்றிய தடைகள் நீக்கப்படுகின்றன, கட்டுப்பாடு கிடையாது என்கின்ற அந்த உத்தரவிற்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலையை நான் இங்கே சில எடுத்துக்காட்டுகளின் மூலம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கட்டுப்பாட்டை எடுப்பதற்கு முன்பு 1974 சனவரியில் கோவை மாவட்டத்தில் கம்பின் விலை ஒரு க்வின்டால் 89 ரூபாய். அதே நேரத்தில்

பம்பாயில் ஒரு க்வின்டால் விலை ரூ. 150-ல் இருந்து ரூ. 155. கோவையில் ரூ. 89 ஆக இருக்கும்போது பம்பாயில் ஒரு க்வின்டால் கம்பின் விலை ரூ. 150-ல் இருந்து ரூ. 155 வரை. கட்டுப்பாடு எடுக்கப்பட்ட மார்ச் மாதத்தில் கோவை மாவட்டத்தில் கம்பின் விலை ரூ. 129. ரூ. 89 ஆக இருந்த கம்பின் விலை ரூ. 129 ஆக உயருகிறது. அதே நேரத்தில் பம்பாயில் ரூ. 155 ஆக இருந்த விலை ரூ. 135 முதல் ரூ. 145 என்கின்ற அளவிற்கு குறைகிறது. ஏப்ரல் மாதத்தில் கோவையில் கம்பு ஒரு க்வின்டாலுக்கு விலை ரூ. 136 ஆக உயருகிறது. அந்த நேரத்தில் பம்பாயில் 145 ஆக இருந்த கம்பு விலை 135 ஆக குறைகிறது. மே மாதத்தில் தமிழ்நாட்டிலும், பம்பாயிலும் ஒரே சீரான விலை, அதாவது ரூ. 145 ஆக ஆகிறது. ஆக, 89 ரூபாயாக இருந்த கம்பு விலை பம்பாயோடு சேர்ந்து 145 ஆக சிறு தானியங்களின் விலை இங்கே ஏறுகிறது. இப்படி கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற சிறு தானியங்களின் விலை ஏறுகிற நேரத்தில் அரிசி விலை - அதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் - அந்த விலை - இயல்பாக ஏறவேண்டுமென்று எண்ணுவதில் தவறு இல்லை என்பதும் நம் வாதத்தில் புறக்கணித்து விடக்கூடாது. இப்படி கம்பு, சோளம், இந்த விலைகள் ஏறின என்பதற்கான ஆதாரத்தை நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கின்ற ஆளும் காங்கிரஸ்கட்சி பத்திரிகையான 'சுதேசமித்திரன்' பத்திரிகைச் செய்தியிலிருந்து எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"21-5-1974 மித்திரன் பத்திரிகை. அப்போதெல்லாம் தடை நீக்கப்பட்டு விட்டது, சிறு தானியங்களுக்கு 'விலை உயர்வால் மக்கள் கொதிப்பு கடையில் புகுந்து தானியம் சூறை, திருச்செங்கோடு மே 20-அரிசி, கேழ்வரகு, சோளம் போன்ற தானியங்களின் விலை இங்கு பயங்கரமாக ஏறிவிட்டதால் ஏழைகள் விலை கொடுத்து வாங்க முடியாமல் அவதிப் படுகிறார்கள். இம்மாதம் 15-ந் தேதி சந்தையிலும், 17-ம் தேதி கடைகளிலும் புகுந்து கிராம மக்கள் உணவு தானியங்களைச் சூறையாடினார்கள். அரிசி, ராகி, சோளம் போன்ற உணவு தானியங்களின் விலை என்றும் காணாத அளவுக்கு உயர்ந்து விட்டது. இம்மாதம் 15-ந் தேதி மாலையில் இடைப்பாடி வாராந்தர சந்தையில் தொழிலாளர்களும், கிராம மக்களும் சேர்ந்த ஒரு

பெரும் கூட்டம் சந்தையிலிருந்த அரிசி, மற்றும் உணவு தானியங்களை சூறையாடி எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். இதைத் தொடர்ந்து இந்தத் தாலுக்காவில் வியாபாரிகள் இடையே ஒரு பீதி ஏற்பட்டுள்ளது. 17-ந் தேதி பள்ளிப்பாளையத்தில் சந்தை கூடியது. ஆனால், இடைப்பாடி சம்பவங்களினால் பெரும்பாலான வியாபாரிகள் சந்தைக்கு அரிசி, கம்பு, சோளம் போன்ற தானியங்களைக் கொண்டு வரவில்லை. தானியங்கள் வந்து கொண்டிருந்த வண்டியையும் வழியில் திருப்பி வீட்டிற்கே சிலர் அனுப்பி விட்டார்கள். சந்தையில் அரிசி, கம்பு போன்ற உணவு தானியங்கள் இல்லாததனால் ஏமாற்றம் அடைந்து கூலியாட்களும், கிராம மக்களும் அடுத்துள்ள கடைகளில் புகுந்து உணவு தானியங்களை சூறையாடிவிட்டார்கள்." இது சுதேசமித்திரனில் வந்த செய்தி.

எப்படித் தட்டுப்பாடு ஏற்பட்டது? என்னென்ன காரணங்களால் ஏற்பட்டது? இது போன்ற சூறை, கொள்ளை, திடீரென்று கடைகளில் நுழைந்து பொருள்களைக் கொள்ளையடித்தல், பறிமுதல் செய்தல், விநியோகம் செய்தல் ஆகிய காரியங்களால் போக்குவரத்து தடைப்பட்டு உணவு தானியங்களை ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்குக் கொண்டு செல்ல வியாபாரிகளும், விவசாயிகளும் பயந்த காரணத்தாலே இந்த நெருக்கடி நிலைமை செயற்கையாக உருவாக்கப்பட்டு விட்டது என்று நான் ஏற்கனவே எடுத்துச் சொன்ன அந்த வாதத்தை இப்போதும் வலியுறுத்தவே விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். இல்லாதவன் திருடுவது குற்றமா என்று ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, பராசக்தி படத்தில் அன்று வசனகர்த்தாவாக இருந்திருக்கிறீர்கள், குணசேகரன் இரண்டு பழங்கள் திருடியதற்காக, இரண்டு பழம்தானே திருடினேன், இதற்காக இப்படி அடிக்கலாமா, உதைக்கலாமா என்று அவனை வசனம் பேச வைத்த அந்த முதலமைச்சர் இப்போது கடைகளிலும், மற்ற விடுதிகளிலும், வழியிலும், லாரிகளிலும் சூறையாடுபவர்களைப் பிடித்து, அவர்களை தடுக்கலாமா, அடிக்கலாமா, உதைக்கலாமா, கைது செய்யலாமா, தண்டிக்கலாமா என்று கேட்டார்கள். பராசக்தி படம் அவர் பார்த்து 10-15 ஆண்டுகாலம் ஆகியிருக்கும் என்று

நினைக்கிறேன். எழுதியவன் என்ற காரணத்தால் எனக்கு ஒரு காட்சி நினைவில் இருக்கிறது. அதிலே வருகிற குணசேகரன் பராசக்தி படத்தின் கதாநாயகன். பசி கொடுமையால் பழங்களைத் திருடுகிறான். அடிபடுகிறான். அவன் இப்படிப் பல காரியங்களைச் செய்கிறான். ஆனால் அப்படிச் செய்கிற காரியங்களெல்லாம் தவறு என்று கண்டிப்பதற்கு அந்தப் படத்தில் ஒரு புதிய படைப்பு, விமலா என்ற பெண் பாத்திரம் படைக்கப்பட்டது.

பராசக்தி நாடகமாக இருந்தது. நண்பர் பாவலர் பாலசுந்தரம் எழுதினார்கள். அதைத்தான் திரைப்படமாக நான் எழுதினேன். அப்போது இல்லாத பாத்திரம், விமலா என்ற பெண் பாத்திரம், திரைப்படத்தில் சேர்க்கப்பட்டு, விமலா என்ற பெண் பாத்திரம் சொல்லுவாள், 'என்னதான் சமுதாயத்தில கஷ்டம் இருந்தாலும் திருடக்கூடாது, இன்னின்ன காரியங்களைச் செய்யக் கூடாது' என்று சொல்வாள். கதாபாத்திரங்கள் பேசும் வசனங்கள் அத்தனையும் கதாசிரியர் கொள்கை அல்ல. பல பேர் சொன்னார்கள். மந்திரிகுமாரி படத்தில் கொலைபுரிதல், கொள்ளையடித்தல் போன்று பாத்திரப்படைப்பு இருந்தது. அதை வைத்துக் கொண்டு, கருணாநிதி, கொள்ளையடிப்பவன், கொலை செய்பவன் என்று சொன்னபோது, அதை எதிர்த்து எட்மண்ட் போன்றவர்கள் இப்படிப் பதில் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்படிக் கொள்ளை அடித்தவன், கொலை செய்தவனுடைய இறுதி முடிவு என்ன? அது தான் கதையின் சிறப்பு அம்சம். ஆசிரியரின் கருத்து. அதேபோல், பராசக்தி படத்தில் குணசேகரன் பசியால் பழத்தை திருடியது தவறு இல்லை என்று சொன்னாலும் தவறு என்று சொல்லும் பெண் பாத்திரம் வந்ததே அதுதான் ஆசிரியர் கருத்து. அந்தக் கருத்துதான் இன்றைய முதலமைச்சரின் கருத்து என்பதை எட்மண்ட் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். படம் பார்த்து நாளாகி இருக்கும். புதிய காப்பி இருப்பதாகக் கேள்வி. தியேட்டர்கள் திறந்த பிறகு அந்த சினிமாவைப் பார்த்து அந்தக் கருத்தை திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகவே, நம்முடைய உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியதுபோல், இந்நிலையில் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டு வந்து இருக்கலாம். ஆனால்

எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்பார்கள், ஒரு ஆளும் கட்சிக்கு விரோதமாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருவதை எதிர்க்கட்சிகள் பயன்படுத்திக்கொள்வதுதானே முறை என்று. நியாயமான கேள்வி கேட்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்தது. இந்த உணவுப் பிரச்சினையில் அப்போது இருந்த ஆளும் கட்சி சரியாக நடக்காத காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்துப் போராடி இருக்கிறது. ஆனால் அந்தப் போராட்டம் திட்டமிட்டு யார், யார் எந்தெந்த இடத்தில் யார் யாருடைய தலைமையில் மறியல் செய்வது, கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் அல்லது வேறு ஒரு அலுவலகத்திற்கு முன்னால் மறியல் செய்வது, இத்தனை மணிக்குச் சென்று மறியல் செய்வது, கைது செய்யப்பட்டால் எதிர்க்காமல் சிறைச்சாலை செல்வது என்றும் ஒவ்வொரு நாளைக்கும் 50 பேர் என்றால் அந்த 50 பேருக்கு மேல் செல்லக்கூடாது என்று இவ்வளவு வரையறை, இவ்வளவு கட்டுதிட்டங்கள் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது அரிசிப் பிரச்சினையில் போராட்டம் நடத்தி இருக்கிறது. அப்படி நடத்தப்படுகிற அறப்போராட்டங்கள் மூலம் மெல்ல மெல்ல எதிர்க்கட்சிகள் வலிவு ஏற்று, மக்கள் ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்கும் வரையில், அந்த எதிர்க்கட்சியை ஆளும்கட்சியாகக் கொண்டு வந்து வைக்கும் வலிமையை எதிர்க்கட்சிகள் பெறுவதுதான் சாலச்சிறந்த, சிறப்பான, வரவேற்கத்தக்க, வன்முறை அற்ற எதிர்க்கட்சிகளுடைய போராட்ட முறைகளாக இருந்திட வேண்டும். அதை விடுத்து இதையே ஒரு பெரிய பிரச்சினையாக்கி, அதை மேலும் சிக்கலாக்கி வன்முறையைத் தூண்டவேண்டுமென்ற அளவுக்குப் பத்திரிகையில் தலையங்கம் போட்டு, அதை இந்த அளவுக்குக் கொண்டுவந்து விட்டது தமிழகத்திலே இருக்கிற சில எதிர்க் கட்சிகளின் பணியாக ஆகிவிட்டது என்பதை நான் மிகுந்த மனவேதனையோடு சொல்லாமல் இருக்க முடியாது.

பத்திரிகைத் தலைப்பை பார்த்தால், ஆளும் காங்கிரஸ் பத்திரிகை மித்திரன் - "பல இடங்களில் அரிசிக் கடைகள் சூறை" - சொன்னார்கள். சூறையிடவில்லை. எடுத்துத்தான்

பங்கிட்டுக்கொடுத்தோம் என்று இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆளும் காங்கிரஸ் பத்திரிகையில் வந்திருக்கும் செய்தியே "பல இடங்களிலும் அரிசிக் கடைகள் சூறை, கிளர்ச்சி முற்றுகிறது, நகரில் பலர் கைது" என்கிற அளவுக்குத்தான் அந்தப் பத்திரிகையில் செய்தி வந்தது.

அதைப்போலவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான பத்திரிகையில் இதைப்போன்ற செய்தி வந்தது. திருவொற்றியூரில் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, உழைக்கும் மக்கள் மாமன்றம் ஆகிய கட்சிகள் இணைந்து வழி காட்டுகின்றன. கையாலாகாத கருணாநிதியை எதிர்த்து மக்களே அரிசி விலையைக் குறைத்தார்கள். தமிழகம் எங்கும் இயக்கம் கூடு பிடிக்கிறது" என்று செய்தி வந்தது. இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அரசு தவறான சில முடிவுகளை எடுத்துவிட்டது, குறைபாடான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அவைகளை மக்கள் மன்றத்தில் எடுத்து சுட்டிக்காட்டும் முழு பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. முழு உரிமை எதிர்க் கட்சிகளுக்கு உண்டு. அந்த ஜனநாயகத் தத்துவத்தின் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. அதை எதிர்த்து கிளர்ச்சிகள் நடத்துகிற அளவுக்கு எதிர்க்கட்சிகளுக்கு உரிமை உண்டு. ஆகவே, நான் அவைகளில் எந்தவிதமான குறைபாடும் சொல்ல விரும்பவில்லை.

ஆனால் இதுவரையிலே சமுதாயத்தில் கடைகளில் புகுந்து கொள்ளை அடித்தல், லாரிகளை வழி மறித்தல் என்ற இந்தக் காரியங்கள் வேறு மாநிலங்களில் நடைபெற்றபொழுது எந்த அளவுக்கு அந்த அரசுகள் நடந்து கொண்டிருக்கின்றன? இங்கே உணவுப் பிரச்சினை தமிழகத்தில் இரண்டொரு நாள் மிக முக்கியமான உச்ச கட்டத்தை அடைந்த நேரத்தில்தான் பங்களூரில், சிக்மகலூர் என்ற இடத்தில் ஒரு உணவுக் கடையிலே புகுந்து சூறையாட எண்ணிய பொதுமக்கள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இந்திரா காங்கிரஸ் ஆளும், காங்கிரஸ் ஆளுகின்ற மைசூரில் இரண்டு பேர்கள் கொல்லப் பட்டார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது.

ஆளும் காங்கிரஸ் கொடுத்த தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய கம்யூனிஸ்டு கட்சி ஆண்டுகொண்டிருக்கிற கேரளத்தில் 'உணவுக் கிடங்குகளில், எதிர்க்கட்சியினர் முற்றுகை, போலீஸ் தடியடி, 3 எதிர்க்கட்சி எம். எல். ஏ.-க்கள் உள்பட 18 பேர்கள் காயம் அடைந்தார்கள், ஒருவர் நிலை கவலைக்கிடம்' என்கின்ற யு.என்.ஐ. செய்தியாக - பாலக்காட்டில் நடைபெற்றது - சூலை 10-ம் தேதி அன்று வெளி வந்திருக்கிறது. ஆகவே, சமுதாயத்தில் கொள்ளை அடித்தல் போன்ற காரியங்களைச் செய்ய மக்கள் என்னதான் நியாய வாதங்கள் பேசினாலும், சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்ள அவர்களைத் தூண்டிவிடுவது அல்லது மக்களை மிகச் சுலபமாக ஒரு போராட்டத்திற்கு அவர்களுக்கு ஏதாவது வசதி வாய்ப்பு கிடைக்கிறது என்ற அளவுக்குத் தூண்டிவிடுவது சுலபம்.

திடீரென்று சினிமா தியேட்டர் வாசலில் நின்றுகொண்டு 'எல்லோரும் வாருங்கள், இன்றைக்கு இனாமாக சினிமா பார்க்கலாம்' என்றால் தடதடவென்று ஒரு கூட்டம், மக்கள் ஓடித்தான் வருவார்கள். ஒரு ஜவுளிக் கடையில் நின்றுகொண்டு 'எல்லோரும் வாருங்கள், துணிமணியை இனாமாக எடுத்துச் செல்லுங்கள்' என்றால், அதற்குக்கூட ஆயிரம் பேர்கள் வரத்தான் வருவார்கள். ஆனால் அந்த முறைகளை நமது போராட்ட முறைகளாக ஆக்கக்கூடாது. அது பீகாரில் நடைபெற்றாலும் சரி, குஜராத்தில் நடைபெற்றாலும் சரி, கேரளாவில் நடைபெற்றாலும் சரி, மைசூரில் நடைபெற்றாலும் சரி, அந்தப் போராட்ட முறைகளை இன்றைக்கு நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்பதற்காக அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே அப்படிப்பட்ட போராட்ட முறைகளை நாங்கள் விரும்பியதும் இல்லை, அந்தப் போராட்ட முறைகளை யார் மீதும் திணித்ததுமில்லை.

சுற்றறிக்கை பற்றியெல்லாம் கூடச் சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சி கூட, அதன் மாநில நிர்வாகக் குழு ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. அந்த சுற்றறிக்கையிலே என்ன எழுதப்பட்டது? "அன்பார்ந்த தோழர்களே, அநியாய அரிசி விலை எதிர்ப்புப் போராட்டம் தமிழகம் முழுமையும் சூடுபிடித்து விட்டது." வாசகங்கள் எப்படி அமைந்து இருக்க வேண்டும்.

தமிழகத்தில் உணவுப் பிரச்சினை மிக மோசமாக ஆகிவிட்டது என்று வாசகம் அமைவதற்கு பதிலாக மிக சந்தோஷத்தோடு வாசகம் அமைந்து இருக்கிறது. "அநியாய அரிசி விலை எதிர்ப்புப் போராட்டம் தமிழகம் முழுமையும் சூடுபிடித்து விட்டது. தஞ்சை மாவட்டத்தில் நமது கட்சி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது." வரவேற்கிறேன். மறியல், சிறைபிடித்தல், தண்டனை வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல், அவைகளை வரவேற்கிறேன். அடுத்து "வேறு பல மாவட்டங்களில் நமது கட்சி இந்தப் போராட்டத்தில் பல்வேறு வடிவங்களில் ஈடுபட்டுள்ளது." பல்வேறு வடிவங்கள்தான் ஆபத்தான வடிவங்கள். அந்த வடிவங்களினால் வந்த தீவினைகள்தான். "ஆங்காங்கு உள்ள மக்களின் உணர்விற்கேற்ப இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தித் தலைமை தாங்க நம் கட்சி அமைப்புகள் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்" - கம்யூனிஸ்ட் கட்சி அமைப்புகள் முழு பொறுப்பு எடுக்க வேண்டும். எவ்வளவு கூட்டணியாக இருக்கிறார்கள் பாருங்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் கட்சி அமைப்புகள் தலைமை தாங்கவேண்டும் என்று அதிலேயே பெயரைத் தட்டிக் கொண்டு போக கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டு இருக்கிறது.

"1974ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி நடத்துவதற்கு திட்டமிட்டு இருந்த இனவெறி - மொழிவெறி எதிர்ப்புக் கூட்டங்களை அநியாய அரிசி விலை எதிர்ப்புக் கூட்டங்களாக இயக்கத்திற்கு உந்து சக்தியாக - இதுதான் முக்கியமான வார்த்தை - இயக்கத்திற்கு உந்து சக்தியாக விளங்கும் வகையில் நடத்துமாறு எல்லா மாவட்ட குழுக்களையும் கேட்டுக் கொள்கிறேன்."

தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சினையை ஒரு நிலைக்குக் கொண்டுவருவதற்கு இந்தப் போராட்டம் பயன்படவேண்டும் என்று சொல்லியிருந்தால், மகிழ்ச்சி அடைந்திருப்பேன். வரவேற்றிருப்பேன். ஆனால் இயக்கத்திற்கு ஒரு உந்து சக்தியாக, அந்த இயக்கம் வளர அந்தக் கட்சிக்கு ஒரு உந்து சக்தியாக இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் இந்த சுற்றறிக்கையை அனுப்புகிறார்கள்.

இதன் தொடர்பாக பல மாவட்டங்களில், மாநிலம் முழுமையும் பல கிளர்ச்சிகள் நடைபெற்றன. அந்தக் கிளர்ச்சி களையெல்லாம் போலீஸார் மிகுந்த பொறுப்பு உணர்ச்சியோடு, கடமை உணர்ச்சியோடு இன்றைக்கு அடக்கியிருக்கிறார்கள். மேலும் இப்படிப்பட்ட நிலைமைகள் வராமல் - நான் அரசியல் கட்சிகள் மாத்திரம் இதைச் செய்கின்றன என்று சொல்லவில்லை. சில பேர் இதைச் செய்ய துணிந்தார்கள். இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது போல வர்த்தக சூதாடிகளானாலும் சரி, பதுக்கல் பேர்வழிகளானாலும் சரி அல்லது விவசாயிகள் சில பேர் அதைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்க வேண்டும் என்று கருதுகிறவர்களானாலும் சரி, யார் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற அந்த மும்முரமான, நம்முடைய தீவிரமான அந்தப் பணிகளின் காரணமாக தடுக்கப் பட்டிருக்கிறது.

நான் இங்கே ஒரே ஒரு பட்டியலை மாத்திரம் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கவேண்டும் என்று கருதுகிறேன். அந்தப் பட்டியலை உணவு அமைச்சர் அவர்கள் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அந்தப் பட்டியலில் மொத்தம் எத்தனை பேர்கள் பதுக்கல் வியாபாரிகள் பிடிக்கப்பட்டார்கள் என்கின்ற கணக்கும், எத்தனை வழக்குகள் என்ற கணக்கும் தரப்பட்டிருக்கிறது.

ஜனவரியில் 42, பிப்ரவரியில் 38, மார்ச்சில் 66, ஏப்ரலில் 82, மேயில் 132, ஜூனில் 150, ஜூலையில் 155 ஆக வழக்குகளின் எண்ணிக்கை 665 என்று தரப்பட்டிருக்கிறது.

நாம் 2-8-1974-ல் இந்த நிலைமை கொஞ்சம் உச்ச கட்டத்திற்கு வந்த நேரத்தில், 2-8-1974-ல் விவசாயிகளுடைய முனையை எப்பொழுதும் சர்வ ஜாக்கிரதையாக நாம் அணுகிட வேண்டும், நாம் அதிகாரிகளைக் கொண்டு பதுக்கலைக் கண்டு பிடியுங்கள் என்று சொல்கிற நேரத்தில் சில அதிகாரிகள் விவசாயிகளிடம் கொஞ்சம் அதிக்கிரமமாக நடந்துகொள்கிற காரணத்தினால் விவசாயிகள் மிகுந்த மன வேதனை அடைகிறார்கள் என்பதினாலும், அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் கூட அப்பொழுது ரேஷன்

இருந்த காரணத்தினால், உணவுக் கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் விவசாயிகள் பதுக்கி வைப்பதை எடுப்பதற்குச் சென்ற போலீஸார் பூஜை அறையில் பூட்ஸ் காலோடு நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டும், கோவை மாவட்டத்தில் சில கவுண்டர்மார்கள் வாழ்கின்ற பகுதிகளில் சில கவுண்டர் பெருமக்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் இந்த மன்றத்தில் வந்ததை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

ஆகவேதான் விவசாயிகளை அணுகுவதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கொஞ்ச காலம் பொறுத்துப் பார்த்து கடைசியில் 2-8-74 அன்று ஒரு அறிக்கையை நான் வெளியிட்டேன். விவசாயிகள் ஒரு வார காலத்திற்குள்ளாக தங்களிடம் தேக்கி வைக்கப்பட்டிருக்கிற நெல்லையோ, அரிசியையோ தந்துவிடவேண்டும், இல்லாவிட்டால் அவர்களெல்லாம் பிடிக்கப்படுவார்கள் என்று சொன்னேன். அந்த ஒரு வாரத்திற்குள்ளாக கிட்டத்தட்ட 3-8-1974, 6-8-1974, 13-8-1974 என்கின்ற வகையிலே பிடிக்கப்பட்டிருக்கிற நெல் மாத்திரம் 24,431 மூட்டைகள்; 4,358 மூட்டைகள் அரிசியும், சுமார் 2,20,000 பெறுமானமுள்ள உணவு தானியங்கள் பிடிக்கப்பட்டன. கேட்கலாம், இது குறைந்ததாக இருக்கிறதே, எவ்வளவு பேர் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று.

இவர்களை பிடித்த காரணத்தினால் மற்றவர்கள் தங்களையும் பிடிப்பார்கள் அல்லது அரசாங்க சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிற பாதுகாப்புச் சட்டம் தங்கள் மீது பாயும் என்ற அச்சத்தின் காரணமாக பதுக்கி வைத்திருந்தவர்கள் சில பேர், மக்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று மனம் தெளிந்து, திருந்தியவர்களெல்லாம் உடனே அரிசியையும் நெல்லையும் சந்தைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். அதன் மூலமாக இன்றைக்கு சுலபமாக அரிசி கிடைக்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால், அரிசி பஞ்சத்திற்காக போராட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு, பிறகு கூடிப் பேசி அரிசிப் பஞ்சம் என்றால் அவ்வளவாக எடுபடாது

என்று அரிசி அநியாய விலையைக் கண்டித்துப் போராட்டம் என்கின்ற அளவுக்கு மாற்றிக்கொண்டதிலிருந்து அரிசி இருக்கிறது. விலை அதிகமாக இருக்கிறது என்பதை எதிர்க் கட்சியினர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள். நானும் ஒத்துக்கொள்கிறேன். விலை அதிகமாக இருக்கிறது.

இங்கே சில உறுப்பினர்கள் கேட்டார்கள். 'ஏன் நீங்கள் குறைந்த விலைக்கு அரிசியை வாங்கி அதிக விலைக்கு விற்கிறீர்கள்?' என்று கூட கேட்டார்கள். அது வியாபார நோக்கம் அல்லவா? என்று கூட நண்பர் செழியன் அவர்கள் நேற்றைய தினம் கூட கேட்டார்கள். மாரிமுத்து அவர்கள், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் அவர்கள், நேற்றைய தினமும், இன்றைய தினமும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு விளக்கத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

1974ஆம் வருடம் சனவரி திங்கள் 1ஆம் நாள் அரிசி கையிருப்பு 28,654 டன் நம்மிடத்திலே இருந்தது. சம்பா அறுவடை காலத்தில் அரிசி குவிண்டால் ரூ. 140-லிருந்து 148 வரை, அதாவது மூட்டைக்கு ரூ. 70 கொடுத்து, 1,80,440 டன்கள் நாம் இந்திய உணவு வர்த்தகக் கழகம் மூலமாகவும், தமிழ்நாடு உணவு வழங்கும் கழகம் மூலமாகவும் கொள்முதல் செய்திருக்கிறோம். ஆக, 2,09,000 டன் நம்மிடம் கைவசம் இருந்தது.

நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சென்னை, கோவை நகரங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளிலும் பொது விநியோகத்தின்கீழ் ஜூலை மாதம் இறுதி வரையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற 'கமிட்மென்ட்' 90,746 டன்கள். ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை கன்னியாகுமரி, கோவை, சென்னை ஆகிய பகுதிகளின் தேவை 70,000 டன்கள் வேறு மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டது 7,019 டன்கள். ஆக மொத்தம் 1,67,765 டன்கள் இந்தக் கணக்குப் போக மீதி இருந்தது 41,325 டன்கள்.

இதுகூட நம்மிடம் இருக்காது என்று கருதித்தான் ஆங்காங்கு சூறை, கொள்ளை, வழிப்பறி என்று ஆரம்பித்தார்கள். இந்தப் பெரிய சிக்கலில் தமிழகம் சிக்கிக்கொள்ளும் என்று

எண்ணினார்கள். ஆனால் அந்த இருப்பு 41,000 டன் அளவுக்கு இருந்தது.

பிறகு தஞ்சை மாவட்டத்தில் வர்த்தகர்களிடம் குவின்டால் ஒன்றுக்கு நடுத்தரம் ரூ. 168 வீதம் சன்ன ரகம் 177 வீதம் வாங்கிய வகையில் 7,947 டன் வாங்கியிருக்கிறோம்.

இந்திய உணவு வர்த்தகக் கழகத்திலிருந்து குவின்டால் ஒன்றுக்கு ரூ. 145 வீதம், அதாவது மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 72 வீதம் 17,000 டன் வாங்கியிருக்கிறோம். ஆக மொத்தம் அரிசி இருப்பு 66,000 டன் இருக்கிறது. குறுவை அறுவடை வரையில் தொடர்ந்து அரிசி நியாய விலைக் கடைகள் மூலம் வழங்க இப்போது 25,000 டன் மேலும் தேவைப்படுகிறது. இவற்றைக் கூட்டுறவுத் துறையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தனிப்பட்டவர்களிடமிருந்து குவின்டால் அரிசி 280 ரூபாய் வீதம் அதாவது மூட்டை 140 ரூபாய் வீதம் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கிறோம். ஆங்காங்கு இருந்து வருகின்ற சிறு அறுவடையில் இருந்தும் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக் கிறோம். இந்த விலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், நாம் குறிப்பிடுகின்ற விலையைப் பார்த்தால் குவின்டால் ஒன்றுக்கு அடக்க விலை 225 ரூபாய் ஆகிறது. ஆகவே, கிலோ ஒன்றுக்கு 2.25 ரூபாய் வருகிறது.

இப்போது நியாய விலைக் கடைகள் மூலமாக நடுத்தர அரிசி கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதமும், சன்ன ரகம் 2.30 வீதமும், மிகச் சன்ன ரகம் 2.50 வீதமும் என்று விற்பனை செய்கிறோம். ஆகவே, வியாபார நோக்கத்தோடு விற்கப்பட வில்லை என்பதை இந்தப் புள்ளி விவரத்தின் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஜனநாயக ரீதியில் அனைவரும் கலந்து அரசோடு ஒத்துழைத்து தீர்க்க வேண்டுமேயல்லாமல், இதைப் பெரிய பிரச்னையாக ஆக்கி, இந்த அரசை ஒரே வாரத்திலே ஒரே மாதத்திலே கவிழ்த்துவிட வேண்டும், அல்லது ராஜினாமா செய்ய அறிவுறுத்த வேண்டும் என்ற அளவுக்கு இதைக்கொண்டு செல்வது நல்ல மரபாகாது. நீங்களே சொல்கிறீர்கள். இன்னும் ஓராண்டு காலம் இருக்கிறது.

திடீரென்று நாங்கள் ராஜினாமா செய்வதாகவே வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் வேலைகள் எல்லாம் செய்ய உங்களுக்கு நேரம் வேண்டாமா? நம்பிக்கையில்லா தீர்மானத்தின்மீது பேச அன்றைக்கு ஒப்புக்கொண்டதை போல ஒப்புக் கொண்டால் எப்படி நேரம் வீணாகி விட்டதோ அதைப்போல இப்போது திடீரென்று ராஜினாமா செய்ய ஒப்புக்கொண்டால் ஓராண்டு காலத்துக்கு நீங்கள் செய்ய வேண்டிய தேர்தல் தயாரிப்புகள் எவ்வளவோ இருக்கின்றன.

ஆகவே, இப்போது தொகுதி நிர்ணயம் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் 39 இருப்பதை 40 ஆகவும், சட்ட மன்றத்தில் 234 இருப்பதை 280 ஆகவும் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்றத் திலும் இந்தப் பிரச்சனையைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக் கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலிருந்து தொகுதிகளெல்லாம் நிர்ணயமாகித்தான் தேர்தல் நடக்கும் என்பது தெரிகிறது. இருந்தாலும் அவசரப்பட்டு இடையிலேயே 'ஓடிவிடு, ஓடிவிடு' என்று சொன்னால் எங்கே ஓடுவது? ஆகவே அந்தக் குரலை கொஞ்ச நாளைக்கு ஒத்தி வைத்துவிட்டு, இருக்கவே இருக்கிறது தேர்தல் என்று பொறுத்துக்கொண்டு, தேர்தலிலே ஜனநாயக முறையில் யாருக்கு மக்கள் தீர்ப்பு அளிக்கிறார்களோ அவர்கள் இங்கே வந்து உட்காரட்டும் என்று எல்லாக் கட்சியினரும் கட்சி சார்பற்ற முறையிலே தோழமைக் கட்சியாக இருந்து இந்த ஒரு விஷயத்திலே பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி யோசனை கேளுங்கள் என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் அட்டியின்றி இம்மாதிரியான கருத்துக்களை எப்போதும் ஏற்றுச் செய்வதில் மறுப்புக் கிடையாது என்று கூறி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையற்றது என்று தெரிவித்துக்கொண்டு, மாரிமுத்து அவர்கள் - உணவுப் பிரச்சினை - மணி ஒன்றே முக்கால் ஆகிவிட்டது - இதை வலியுறுத்தாமல் இந்தப் பிரச்சினைக்கு ஒத்துழைத்து, ஆக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.,

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 69 **நாள் : 18.12.1974**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்த முறையும் இல்லாத அளவுக்கு இந்த முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இரண்டு தீர்மானங்களும் முன்மொழியப்படுவதற்கு முன்பாகவே மிகுந்த பரபரப்பு காட்டப்பட்டது.

கடந்த பல நேரங்களில் இந்த அவையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் அரசின்மீது கொண்டு வரப்பட்டிருந்தாலும் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பே இவ்வளவு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது கிடையாது. இந்தத் தடவை ஏற்பட்டதற்குக் காரணம் மதிப்பீட்டுக் குழுவிலே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கோப்பு, ஒரு ஃபைல், இங்குள்ள எதிர்க்கட்சிகளுடைய உறுப்பினர்களுக்கு அல்லது தலைவர்களுக்குக் காட்டப்பட வேண்டுமென்ற வகையில் அந்தப் பரபரப்பு எழுந்தது.

இதைப்போன்ற ஒரு பரபரப்பு, ஒரு அறிக்கையை உறுப்பினர்களுக்கு அல்லது தலைவர்களுக்கு காட்ட வேண்டும் என்ற ரீதியில் டில்லி நாடாளுமன்றத்தில் எழுந்தது. அங்கே அந்த அறிக்கை புதுவை மாநில லைசென்ஸ் ஊழல் என்கின்ற தலைப்புள்ள நிலையில் தயாரிக்கப்பட்ட சி.பி.ஐ. அறிக்கையாகும். அந்த அறிக்கையை அனைவரும் பார்க்க வேண்டுமென்று வாதிட்டு, அதனை அவையிலே தருவதாக மத்திய அமைச்சர்கள் அவையிலே உறுதியளித்து, பிறகு உறுதிமொழிக்கேற்ப வைக்காத காரணத்தால் 5, 6 நாட்கள் நாடாளுமன்றத்திலே பெரிய அமளி ஏற்பட்டு, மொரார்ஜி தேசாய் அவர்கள் - இங்கே நம்முடைய செழியன் அவர்கள் சொன்னதைப் போல - சத்தியாக்கிரகம் செய்வேன் என்று அங்கே சொல்லி - அவரைப் பார்த்துத்தான்

சொன்னாரோ அல்லது இவரைப் பார்த்து அவர் சொன்னாரோ (சிரிப்பு) - அதற்குப் பிறகு பிரதமரும், சபாநாயகரும், திரு மொரார்ஜி தேசாயும், மற்றக் கட்சித் தலைவர்களும் 5, 6 முறை கூடிப் பேசி, பத்திரிகைகளில் 7, 8 நாட்களாக அந்தச் செய்திகள் பரபரப்போடு வந்து, கூடிப் பேசிய புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளில் வந்து, அதன் பின்னால் அந்த அறிக்கையைப் பார்க்கலாம், ஆனால் அதனை வெளியிலே சொல்லக்கூடாது என்ற பிரமாணம் எடுத்துக்கொண்டு பார்க்கலாம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது, அதற்குப் பிறகும் அதைக் குறிப்பு எடுக்கக் கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டு, ஒருவாறாக பல நாட்களுக்குப் பிறகு இப்போது அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள் என்ற செய்தி இன்று காலையிலே அரும்பியிருக்கிறது, ஆனால், அவ்வளவு சங்கடங்கள் எதுவும் இல்லாமல் இங்கு அரை மணி நேரம் அதுபற்றிய சர்ச்சை எழுந்து, உடனடியாக அதுபற்றி ஃபைலை பார்க்கலாம் என்று அரசின் சார்பிலே ஒப்புக்கொள்ளப் பட்டு, தலைவர் அவர்களுடைய அறையில் அந்தக் கோப்புப் பார்க்கப்பட்டிருக்கிறது.

இங்கு நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் களும் இங்கே ஃபைலைப் பார்க்கக் காட்டிய இதே ஆர்வம், பலமான சர்ச்சை, பிரசித்திப் பெற்ற பாண்டிச்சேரி லைசென்ஸ் ஊழல் பற்றிய சி. பி. ஐ. தயாரித்த அறிக்கையைப் பார்ப்பதற்கு, டில்லியில் அவர்கள் காட்டினார்களா என்றால் பத்திரிகையில் அப்படிச் செய்திகள் ஒன்றும் வரவில்லை. அதை வலியுறுத்தி, அதைக் காட்டித்தான் தீரவேண்டுமென்று அங்குள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களை அங்கே நடத்தியதாகவும் பத்திரிகைகளில் செய்தி கிடையாது.

திரு. கே.டி.கே. தங்கமணி : எதிர்க்கட்சியைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றியும் குறிப்பிட் டார்கள். பூபேஷ் குப்தா அவர்கள் சி.பி.ஐ. அறிக்கை வைக்கப் படவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். அந்த அறிக்கையைப் பரிசீலிப்பதற்குச் சென்றபோதும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் களும் சென்றிருக்கிறார்கள். குறிப்பு எழுதக்கூடாது என்று

சொன்னவுடன் கம்யூனிஸ்ட்க் கட்சி உறுப்பினர்களும் ப்ரொடெஸ்ட் பண்ணி வெளியில் வந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் நாடாளுமன்றத்தைத்தான் குறிப்பிட்டேன். அவர்கள் மாநிலங்கள் அவைபற்றிச் சொன்னார்கள். அங்கேயாவது கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள் அந்த அளவுக்கு வேகமாக நடந்து கொண்டதற்காகப் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : நான் ராஜ்ய சபையில் நடந்த சம்பவத்தைத்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : லோக் சபாவை நாடாளுமன்றம் என்றும், ராஜ்ய சபாவை மாநில அவை என்றும் நாங்கள் குறிக்கும் பழக்கத்தில் நானும் ராஜ்ய சபாவைத்தான் மாநில அவை என்று கூறினேன். மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நாடாளுமன்றத்தில் அவர்கள் சொல்லவில்லை என்று குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு அல்ல. திரு மொரார்ஜி தேசாய் இப்படி ஒரு சத்தியாக்கிரகம் செய்து ஒரு அறிக்கையைப் பெறுவது முறையா என்று தி.மு.கழகத்தைக் கேட்ட நேரத்தில் 'அது முறை அல்ல', என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். அது முறை அல்ல என்றுதான் அங்குள்ள அண்ணா தி.மு.க.வும் அங்கே அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இங்கே அந்த முறை அனுஷ்டிக்கப்படலாம் என்பதற்கு அவர்கள் முன்வந்தார்கள் என்றாலும் இங்கே அப்படிப்பட்ட சங்கடங்களுக்கு எல்லாம் இடம் இல்லாமல் உடனடியாக அந்த ஃபைல் உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அது வெளிப்படையாகக் காட்டப்பட்டு, எந்தவிதமான நிபந்தனைகளும் வைக்கப்படாமல் - பார்க்கலாம், ஆனால் வெளியில் சொல்லக்கூடாது; சிதம்பர ரகசியமாக இருக்க வேண்டுமென்று நிபந்தனை போடாமல் பார்த்தாலும் குறிப்பு எடுக்கக்கூடாது என்று கூறாமல் - இந்த அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய முறையீட்டை ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வந்திருக்கிறது.

எங்கள் மீது நம்பிக்கையில்லை என்பதை தெரிவிக்கக்கூட இரண்டு நாட்கள் அவர்களுக்கே தயக்கம் ஏற்பட்டது. முதல் நாள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அழுத்தந்திருத்தமாக இருந்து, மறுநாளும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற் கிடையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுந்து இப்படி தயங்கிக் கொண்டே வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பேசிய சில கட்சித் தலைவர்கள் என்ன கருத்துக்களை மிக முக்கியமாகச் சொன்னார்கள் என்றால் - ஆளுங் காங்கிரசைச் சேர்ந்த திரு. மாரிமுத்து அவர்கள், தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களும், திரு. கோவைச் செழியன் அவர்களும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் லத்தீப் ஆகியோரும் பேசுகின்ற நேரத்தில் இந்தக் கட்சியில் இன்றைக்கு அடிமட்டத்தில் இருக்கிற கட்சிக்காரர்கள், நாடாளுமன்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் அத்தனைபேரும் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ளவேண்டும். தங்களைத் திருத்திக்கொண்டு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தை - ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து சொன்னார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் திரு. மாரிமுத்து உட்பட அத்தனை பேருக்கும் இந்த கட்சி அடிமட்டத்தில் இருக்கிற தொண்டர்கள் பொறுப்பில் இருப்பவர்கள் அனைவரும் திருத்திக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வு அவர்களுக்கு உள்ளூர இருப்பதாக உணர்கிறேன்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : ஆட்சியிலிருக்கிறபோது தவறு நடக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. மாரிமுத்து அவர்கள், இந்த அவையில் யாரும் தெரிவிக்காத பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கட்சி கட்டுப்பாடு நிறைந்தது; கட்டுக்கோப்பாக இருக்கிற கட்சி, இதற்கு அடிமட்டம் வரை கிளைக் கழகங்கள் இருக்கின்றன - முறையாக தேர்தல்கள்

நடைபெற்றிருக்கின்றன; அமைப்புகள் ஒழுங்காக இருக்கின்றன என்றெல்லாம் திரு. மாரிமுத்து அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். நானோ, கழகப் பொதுச் செயலாளரோ மேடையில் இதுவரை எடுத்துச் சொல்லாத அளவுக்கு நேற்றைய தினம் இந்தக் கட்சியின் அமைப்பு முறைகளை சிலாகித்து திரு. மாரிமுத்து அவர்கள் பேசின காரணத்தினால்தான், என்னதான் அவர் இன்றைக்கு இந்த ஆட்சி நீடிக்கக் கூடாது என்று எடுத்துச் சொன்னாலும்கூட - உள்ளூர - தொலையட்டும் - இவர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு இந்தப் பாராட்டுரைகளைச் சொன்னார்கள் என்றே நான் கருதுகிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் இங்கே சொன்ன கருத்துக் களுக்கு நான் ஏறத்தாழ உடன்படுகிறேன். நானோ, இந்தக் கழகப் பொதுச் செயலாளர் நாவலரோ - இந்தக் கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களோ இன்றைக்கு பெரியவர் மணலி எடுத்துச் சொன்ன வேண்டுகோள்களைப் போன்று நாள் தவறாமல் இந்தக் கட்சியிலே இருக்கிற தொண்டர்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். ஆனால் ஒரு இயக்கம் என்றால் அந்த இயக்கத்திலே அத்தனைபேரும் நூற்றுக்கு நூறு சரியாக இருப்பார்கள், எந்தக் குறைபாடும் இருக்காது என்று யாரும் நம்பிடவும் கூடாது. அப்படி எதிர்பார்க்கவும் இயலாது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் களைகிற, திருத்துகிற தலைமை இருந்திடவேண்டும். ஆகவேதான் தமிழ்நாடு கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களுடைய கருத்துக்களை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்களும் அதே ரீதியில்தான் அறிவுரைகளைச் சொன்னார். நண்பர் செழியன் பேசுகிற நேரத்தில் கூட ஏதோ இந்த அரசின் மீது அவருக்குப் பொல்லாத ஆசை இருப்பது போலவும், அதை யாரோ கெடுக்கிறார்கள் என்பதைப்போலவும் சொன்னார்கள். நான் இதை எல்லாம் எடுத்துச் சொல்லக் காரணம் "நீங்கள் என்ன சொன்னாலும் திருந்திட மாட்டோம், நாங்கள் பிடித்ததுதான் பிடி, நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்றெல்லாம் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிற அரசு இது அல்ல என்பதை இந்த அரசின் கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் நன்கு தெரியும்.

ஆளுங்கட்சி சார்பில் சொல்லப்படுகிற கருத்துக்களானாலும் தோழமைக் கட்சிகளின் சார்பில் சொல்லப்பட்ட கருத்துக்களானாலும், எதிர்க்கட்சிகளின் சார்பில் சொல்லப்பட்டாலும் - அவைகளில் இந்த அரசு ஏற்றுக் கொள்ள முடிந்த கருத்துக்களை - இயன்ற அளவிற்கு ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துகின்ற பணியை நாம் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

அருமை நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள் - இவர்கள் "அண்ணாவின் தம்பிகளா? அலிபாபா கூட்டமா" என்று கேட்டார். அவருடைய பேச்சில் நல்ல ஆற்றல் இருக்கும். விறுவிறுப்பு இருக்கும். இன்றைக்கு வேறிடத்தில் அவர் இருந்தாலும் அதை நான் மறந்துவிடுபவன் அல்ல. அவர் இந்த மன்றத்தில் என் பின்னால் இருந்து மாநில சுயாட்சி பற்றிப் பேசிய பேச்சு என் காதில் இன்றைக்கும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. நன்றாக சிந்தித்துப் பேசக்கூடிய அருணாவே நாட்டையாள்வது "அண்ணாவின் தம்பிகளா, அலிபாபா கூட்டமா" என்று - பேசி விட்டாரே என்று தான் நான் வருத்தப்பட்டேன். அலிபாபா கூட்டமா என்றால், அவர் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிற தலைவரே கூட நடித்து வெற்றிகரமாக ஓடிய படம். (சிரிப்பு) அதிலே அலிபாபா என்ற கதாநாயகன் வேடத்தையே அவருடைய தலைவர்தான் போட்டார். (சிரிப்பு) அவரது தலைவர் கெட்டவன் பாத்திரம் எதையும் ஏற்று நடிக்க மாட்டார். உங்களுக்கே தெரியும். கெட்டவனாகவே நடிக்க மாட்டார். நல்லவனாகவேத்தான் நடிப்பார் (ஆரவாரம்).

திரு. ஆலடி அருணா : நான் அலிபாபா கூட்டம் என்று சொன்னது அலிபாபா கதையில் வருகிற கூட்டம் என்ற பொருளில் ஆகும் - இந்தி ஒழிக என்றால் இந்தி ஆதிக்கம் ஒழிக என்றுதான் பொருள். அதைப்போல அலிபாபா கதையில் உள்ள திருட்டுக் கூட்டம் - கொள்ளைக் கூட்டம் என்றுதான் பொருள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்தி ஒழிக என்றால் இந்தி ஆதிக்கம் ஒழிக என்று பொருள் என்றால்

அலிபாபா கூட்டம் என்றால் அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்று அர்த்தம். அலிபாபா ஆதிக்கம் உள்ள கூட்டம் என்றால் அங்கேயிருந்த 40 திருடர்களுக்கும் தலைமை வகித்ததாகப் பொருள். ஒரு வேளை நாம் தவறிவிடக்கூடாது என்பதற்காக நேற்று அரேபியன் நைட்ஸ் கதைகளை வாங்கி இரவெல்லாம் படித்துவிட்டுத்தான் வந்தேன். கதையில் 40 திருடர்களைப் பிடித்தான் அலிபாபா என்றுதான் வருகிறது. (கைத்தட்டல்) ஆகவே அலிபாபா ஒரு வீரன். திருடர்களை, கொள்ளைக் காரர்களைப் பிடித்தவன். திருடர்கள் அலிபாபாவைக் கொல்வதற்காக வந்தபோது அலிபாபாகூட தன் காதலியோடு சேர்ந்துகொண்டு பீப்பாய்களிலேயே இருந்த திருடர்களை எல்லாம் பொசுக்கித் தீர்த்து விட்டான் என்றுதான் கதை முடிகிறது. ஆகவே அலிபாபா யார்? திருடர்கள் யார்? (கைத்தட்டல்) என்பதை நம்முடைய எதிர்காலம் உணர்த்தும்.

திரு. கோவை செழியன் : நீங்கள் சொல்கிற வாதத்தைப் பார்த்தால் அந்தத் தலைவன் நல்லவன், மற்றவர்கள் மோசம் என்று சொல்கிறபோது, நீங்கள் நல்லவர் என்பதையும், உங்களைப் பின்பற்றுகிறவர்கள் மோசம் என்பதையும் நீங்களே ஒத்துக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்த அலிபாபாவின் எதிரிகள் திருடர்கள். (கைத்தட்டல்) அதுதான் கதை, படம் எடுக்கிற தயாரிப்பாளர் செழியனுக்கு கூடவா கதை தெரியவில்லை? (பலத்த கைத்தட்டல்) அலிபாபா என்கிறவன் நல்லவன், அவனுடைய எதிரிகள் திருடர்கள். இதுதான் கதை. (சிரிப்பு).

பொதுவாக இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமானாலும், கண்டனத் தீர்மானமானாலும் இங்கு நடைபெற்ற நான்கைந்து நாட்கள் விவாதத்தில் மிக உயிர்ப்புள்ள பிரச்சினையாக இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற உணவுப் பிரச்சினை குறித்து எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலே யாரும் அரசைக் குறை கூறவேண்டு மென்ற எண்ணத்தோடு, அவரவர்கள் கட்சியினுடைய

அடிப்படையிலே பேசி இருந்தாலும், அனைத்துக் கருத்துக் களிலும் இழை ஓடிக் கொண்டிருக்கிற இன்றைய தமிழகத்தின் உணவு நிலவரம் குறித்தோ அல்லது நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பயங்கரமான மழையின்மை நிலவரம் குறித்தோ நாம் மாறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போலவும், வானிலை அறிவிப்பின்படியும் நம்முடைய தமிழகத்தில் 100 ஆண்டுக் காலம் இல்லாத பயங்கரமான வறட்சி இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். 65 சதவிகிதம் மழை இந்த ஆண்டு குறைந்துவிட்டது. இந்த மழை பொய்த்து விட்ட சூழ்நிலையை, அதனால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளை நாம் சந்திக்க, சமாளிக்க வேண்டியவர்களாக, இருக்கின்றோம்.

எதிர்க்கட்சித் தரப்பிலே பேசிய சில பேர் இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டது, சென்ற ஆண்டு இவ்வளவு மோசம் இல்லை. இருந்தாலும் சென்ற சம்பா அறுவடையிலே ஏன் விலை ஏறியது? இவைகளுக்கு நீங்கள் தருகின்ற பதில் என்ன என்றெல்லாம் கேட்டார்கள். கேட்டுவிட்டு அவர்களே சொன்னார்கள், தஞ்சையில் தடையை எடுத்ததுதான் இதற்கெல்லாம் காரணம், நீங்கள் தஞ்சை மாவட்டத்தில் தடையை எடுத்தது பெரிய தவறு, அதிலே ஏதோ ஊழல் நடந்துவிட்டது, அந்த ஊழலை நடத்துவதற்காகவே நீங்கள் தடையை எடுத்தீர்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. தடையை எடுக்க வேண்டுமென்று நிலக்கிழார்கள் மாத்திரமல்ல, நம்முடைய பெரியவர் மணலி போன்றவர்கள் கூட அறிவுரை கூறினார்கள். அவர் நிலக்கிழார் அல்ல. அல்லது, அவரது வரலாற்றைப் புரிந்து கொண்டவர்களுக்கு அவர் நிலக்கிழார்கள் பக்கம் நிற்கக் கூடியவர் என்கின்ற எண்ணமும் நிச்சயமாக ஏற்படாது. அப்படிப் பட்டவர்கள் எல்லாம் தஞ்சையில் தடையை எடுக்க வேண்டுமென்ற யோசனையை இந்த அரசுக்குச் சொன்னார்கள். தஞ்சையிலே உள்ள நிலக்கிழார்கள், வியாபாரிகள் மட்டுமல்ல, மற்ற மாவட்டத்திலேயுள்ள வியாபாரிகள், மற்ற மாவட்டத்திலே உள்ள வாங்கிப் புசிக்கிற மக்கள் அத்தனை பேரும் இந்தக் கோரிக்கையை எழுப்பினார்கள். என்ன காரணம்? மற்ற மாவட்டங்களில், தஞ்சை மாவட்டத்தை விட பல மடங்கு அரிசி

விலை ஏறிவிட்டது. ஆகவே, இந்தத் தடையை எடுத்து, மற்ற இடங்களுக்கு உணவு தானியங்கள் புழக்கத்திற்கு வருமானால், விலை ஒரு சமநிலைக்கு வரும். ஆகவே, இந்தத் தடையை எடுத்துவிடுங்கள் என்று அரசுக்கு யோசனை கூறப்பட்டது. இப்படித் தடையை போடுவதோ, எடுப்பதோ என்பது சம்பா அறுவடையின்போது மாத்திரம் நடந்துவிட்ட சம்பவம் அல்ல.

1970ஆம் ஆண்டு தஞ்சையில் போக்குவரத்துக் கட்டுப்பாடு 8-1-70இல் விதிக்கப்பட்டது. பிறகு எட்டு மாதங்கள் கழித்து 15-9-70-ல் அந்தக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு அங்கிருந்து உணவு தானியங்கள் செல்ல வழிவகை செய்யப்பட்டது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே 1-1-1971இல் கட்டுப்பாடு போடப்பட்டு, பிறகு 9 மாதங்களுக்குப் பிறகு 5-10-1971இல் அந்தத் தடை எடுக்கப்பட்டது. பிறகு 5-11-1971இல் கட்டுப்பாடு போடப்பட்டு, 10 மாதத்திற்குப் பிறகு 14-9-1972இல் மீண்டும் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. 18-1-1973இல் கட்டுப்பாடு போடப்பட்டு, 9 மாதத்திற்குப் பிறகு 6-10-1973இல் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. அதைப் போலத்தான் 74ஆம் ஆண்டு 15-12-1973இல் தடை போடப்பட்டு 10-6-1974இல் தடை எடுக்கப் பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்களுடைய புள்ளி விவரங்களிலேயிருந்து, குறுவை அறுவடை செய்த பிறகுதான் அப்பொழுதெல்லாம் தடை நீக்கப்பட்டது தெரிய வருகிறது. ஆனால், இந்த ஆண்டு, ஜூன் மாதத்திலேயே தடையை நீக்கியதற்குக் காரணம் என்ன? ஸ்பெஷல் ரீசன்ஸ் என்ன? குறுவை நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே அவ்வளவு சாப்பிட மாட்டார்கள், ஆகவே, அங்கேயே தேங்கக்கூடாது என்று தடை நீக்கப்படும். ஒவ்வொரு வருடமும் 9ஆவது மாதம், 10ஆவது மாதத்திலே தடையை எடுப்பவர்கள், இந்த ஆண்டு 6ஆவது மாதத்திலே ஏன் தடை நீக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் கூறுவார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் முதலிலேயே விளக்கத்தைக் கூறிவிட்டுத்தான் விவரத்தைத் தந்தேன். மற்ற மாவட்டங்களில் விலை ஏறிவிட்டது. அதைச்

சமநிலைப்படுத்துவதற்காக, இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. தஞ்சை மாவட்ட அரிசி மற்ற மாவட்டங்களுக்கு செல்லுமானால் வேகமாக ஏறிவிட்ட விலை குறையக் கூடும் என்பதற்காகத்தான் அந்தத் தடை எடுக்கப்பட்டது.

திரு. கே.டி.கே. தங்கமணி : 3, 4 வருஷங்களாகத் தடை எடுக்கப்பட்டதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அப்பொழுது தடை எடுக்கப்பட்ட நேரத்திலே விலை எந்த அளவு கூடியது? கூடியதா இல்லையா? இந்த அளவு, இந்த விலை கூடியதே இதற்கு என்ன காரணம்?

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, பெரியவர் மணலி அவர்கள், விவசாயிகளுக்கு ஓரளவு விலை கிடைக்க வில்லை, அவர்களுக்கு விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக நானே முதலமைச்சர் அவர்களிடம் தனியாக நேரில் சொன்னேன். அதன் பேரில்தான் அந்த உத்தரவு போடப்பட்டது என்று முன்பு சொன்னார். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் வேறு ஒரு கருத்தைச் சொன்னார். இதில் எது உண்மை என்று எங்களுக்குத் தெரிய வேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை மாவட்டத்திலே, மணலி போன்றவர்கள் சொன்னதன் காரணமாக, தடை நீக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலேயே விவசாயிகளுக்கோ, விவசாயக் குத்தகைதாரர்களுக்கோ, சிறுநிலக்காரர்களுக்கோ, இந்த நெல் விலையிலே உயர்வு இல்லை. அறுவடை முடிந்து வருகிறார்கள். கையிலே நெல் போன பிறகு, இந்த விவசாயிகளை, இந்த ஏழைகளை, இது பாதிக்குமா, பாதிக்காதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விவசாயிகள் கூறினார்கள். அதைப்போலவே மற்ற மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள், வாங்கிப் புசிக்கின்ற மக்கள் கூறினார்கள். பத்திரிகையிலே எழுதினார்கள், மற்ற மாவட்டங்களில் விலை ஏறிவிட்டது என்கின்ற புள்ளிவிவரங்கள் தினந்தோறும் வந்தன. அதை சமநிலைப்படுத்துவதற்கு அடிப்படையாக தடையை எடுக்கிறோம் என்று சொல்லி, நிருபர்களிடத்திலும் எடுத்துச்

சொல்லி, அந்த அறிக்கை வெளியிடப்பட்டு, தஞ்சாவூரிலிருந்த தடை நீக்கப்பட்டது. ஆனால், அரசினுடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல் சிலபேர் இடையிலே தவறு செய்ய முற்பட்டார்கள்.

நாம் தடையை எடுத்தவுடன் அரிசி விலை ஏறியதா, குறைந்ததா என்பதைப் பார்க்கவேண்டும். அதை கே.டி.கே. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். விலை குறைந்தது என்பதைப் பற்றி 13-6-1974 தினமணி பத்திரிகையிலும், 14-6-1974 இந்து பத்திரிகையிலும் செய்திகளைப் போட்டிருக்கிறார்கள். 'தமிழ் நாட்டில் அரிசி விலை குறைகிறது' என்று தலைப்பிட்டு தினமணி பத்திரிகையில் வந்துள்ள செய்தி : திருச்சி, ஜூன் 12 - கட்டாய லெவி முறையும், தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி நடமாட்டத் துக்குள்ள கட்டுப்பாடுகளும் ரத்து செய்யப்பட்டதையடுத்து தமிழ் நாட்டில் அரிசி விலை குறைய ஆரம்பித்துள்ளது. திருச்சியில் அரிசி, நெல் மூட்டைகள் விலை ரூ. 8 முதல் ரூ. 10 வரை குறைந்துள்ளதாக திருச்சி வர்த்தக சபைத் தலைவர் கே. மாயாண்டி தெரிவித்துள்ளார். சர்க்கார் இதை முன்பே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். அவர் கொடுத்துள்ள அறிக்கையில் அரிசி சில்லறை விலையும் கிலோவுக்கு 15 பைசா குறைந்துள்ளதாக கூறியிருக்கிறார்.

அது மாத்திரமல்ல, சென்னையிலும் விலை குறைந்தி ருக்கிறது என்கின்ற விவரங்கள் தினமணியிலே வெளியாகியிருக் கின்றன. கோவையிலும் விலை குறைந்திருக் கின்றது என்கின்ற செய்தி வந்திருக்கிறது. இதுபற்றி, தினமணியில் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. 'அண்மையில் அரிசி விலை தமிழ் நாடெங்கும் கணிசமாக உயர்ந்துள்ளது. அரிசி, நெல் மீதான லெவியும் போக்குவரத்துக் கட்டுப்பாடுந்தான் இதற்குக் காரணம் என்று வர்த்தகத் துறையினர் கூறினர். இதற்கு மதிப்புக் கொடுத்து, தமிழ்நாடு முழுதும் அரிசி, நெல் லெவியை அரசு ரத்து செய்துள்ளது. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வெளியே அரிசி, நெல் கொண்டு போவதற்கு இருந்த கட்டுப்பாடுகளையும் அரசு விலக்கி விட்டது. எல்லைப்புறங்களில் மட்டுமே கள்ளக் கடத்தலைத் தவிர்க்கக் கட்டுப்பாடுகள் இருந்துவரும். மற்றப்படி

தாராளப் போக்குவரத்து இருக்குமாகையால், மாநிலமெங்கும் விலை வீக்கம் ஓரளவு வடிந்து ஏறக்குறைய ஒரே சீரான விலை அமுலாவது சாத்தியமாகலாம்' என்று தினமணி போன்ற பத்திரிகைகள் எல்லாம் தலையங்கம் எழுதினார்கள். ஆனால், நாம் நினைத்ததற்கு மாறாக, கொள்ளை இலாபம் அடிக்க வேண்டுமென்று எண்ணிய வியாபாரிகள், இந்த நேரத்திலே உணவு தானியங்கள் அதிக விலைக்குப் போனால், பெருத்த இலாபம் கிடைக்கும் என்ற பேராசைக்கு ஆளான அந்த வியாபாரிகளுடைய நோக்கத்திற்குப் பலியான விவசாயப் பெருமக்கள் அரசின் இந்த நல்ல நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்ததால், அங்கங்கு கொண்டு போகப்பட்ட உணவு தானியங்கள் பதுக்கப்பட்டன. சில இடங்களில், கள்ளக் கடத்தலுக்கு வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. உடனடியாக, இந்த அபாயத்தை உணர்ந்த அரசு, 13-ந் தேதியே மீண்டும் சில நிபந்தனைகளை விதித்து, கலெக்டர் அவர்களுடைய அனுமதியில்லாமல் வெளி மாவட்டங்களுக்கு அரிசியோ, நெல்லோ எடுத்துச் செல்லக் கூடாது என்ற நிபந்தனையோடு தடை விதித்தது. அத்துடன், மற்ற மாவட்டங்களிலுள்ள அந்தந்த கலெக்டர்களுடைய மேற்பார்வையிலேதான் அங்கங்கு இங்கிருந்து எடுத்துச் செல்லப்படுகிற நெல்லோ, அரிசியோ விநியோகிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளும் போடப்பட்டு, ஏற்பட இருந்த அபாயம் தடுக்கப்பட்டது.

ஆனால், இங்கே பேசுகின்ற நேரத்திலே 9 ,இலட்சம் டன் அந்த மூன்று நாளிலே வெளியிலே போய்விட்டது என்று செழியன் அவர்கள் சொன்னார்கள். ஒன்பது இலட்சம் டன் என்பது ஏதோ பேசுவதற்கு அழகாக இருக்கலாம், கேட்பதற்குப் பீதியை உருவாக்கலாம். இந்த 9 இலட்சம் டன் போய் விட்டதனாலேதான் இப்பொழுது இவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டது என்று பொதுமக்கள் நம்பலாம். ஆனால், கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒன்பது இலட்சம் டன்னை எடுத்துச் செல்ல எத்தனை லாரிகள் வேண்டுமென்று எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு லாரியில் 5 டன் நெல்லோ, அரிசியோ தான் ஏற்றமுடியும் என்று கணக்கிடுகிறார்கள். நான்,

செழியனுக்காக, வேண்டுமானால் 9 டன் என்று கணக்கு வைத்துக் கொள்கிறேன். லாரிக்கு 9 டன் ஏற்றுவதாக இருந்தால் கூட, 1 இலட்சம் லாரி தேவைப்பட்டிருக்கும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு லட்சம் லாரிகளைக் கொண்டுபோய் நிறுத்துவதாக இருந்தால் ஒன்றன்மீது ஒன்றாக ஐந்து, ஆறு அடுக்குகளாக நிறுத்தி வைத்தால்தான் தஞ்சை மாவட்டம் முழுவதும் ஒரு லடசம் லாரிகளை நிறுத்த முடியும். தமிழ்நாட்டிலே இருக்கிற மொத்த லாரிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால், 20 ஆயிரத்துக்கும் குறைவுதான். தமிழ்நாட்டிலே உள்ள லாரிகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்திற்கும் குறைவு. 9 இலட்சம் டன் ஏற்றிச் செல்வது என்றால் 1 இலட்சம் லாரிகளாவது வேண்டும். இது நம்பத்தகுந்ததா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பழைய காலத்தில் கோவில்களில் பூசாரிகள் பாடுவார்கள், 'பல்லுக்குப் பல் இருகாதம், பல்லிடுக்கு முக்காதம்' என்று, பீமசேனனைப் பற்றி பாடுவார்கள். பக்கத்திலே இருக்கிற சிஷ்யன் ஆமாம், ஆமாம் என்று பம்பை அடித்துக் கொண்டிருப்பான். ஆனால் கேட்கவேண்டும், காதம் என்றால் பத்து மைல், பல்லுக்குப் பல் இருகாதம் என்றால் இருபது மைல், பல்லிடுக்கு முக்காதம் என்றால் மொத்தம் 50 மைல், இப்படியே 32 பற்கள் ஒருவனுக்கு இருந்தால் அவன் வாய் எத்தனை ஆயிரம் மைல்கள் நீளமிருக்கும். கிட்டத்தட்ட பத்தாயிரம் மைல் இருக்கும். வாய் மாத்திரம் 10 ஆயிரம் மைல் நீளமுள்ள மனிதனுக்கு தலை எத்தனை மைல் நீளமிருக்கும்? ஐம்பதாயிரம் மைல் இருக்கும். அவன் உடம்பு எத்தனை மைல் சுற்றளவு கொண்டதாக இருக்கும்? இருபத்துமூன்று ஆயிரம் மைல் சுற்றளவு உலகத்திலே அந்த மனிதன் எங்கே நின்றுகொண்டிருந்தான் என்று அவன் கேட்காத காரணத்தினால்தான், இப்படிப்பட்ட மூட நம்பிக்கையை பரப்புகின்ற பூசாரிகள் உற்பத்தியாகியிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் மேடையிலே பேசியிருக்கிறோம். (கைதட்டல்) புராணங்களைக் கண்டிக்கிற நேரத்தில் செழியன் உட்பட, பேசியிருக்கிறோம். ஆகவே இன்றைக்கு 9 இலட்சம் டன் வெளியே போய்விட்டது என்று பேசுவதும், அதற்கு எவ்வளவு லாரிகள் ஆகும் என்று கணக்கிடாமல் கூடப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல.

திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் தமிழ்நாட்டு அரிசி துபாய் என்ற இடத்திற்கு போய்விட்டது. அங்கே தமிழ்நாடு அரிசி என்று போர்டு போட்டு விற்கிறார்கள் என்று சொன்னார்கள். அரங்கண்ணல் கூட என்னிடம் சொன்னார்கள், லாஸ் ஏஞ்சல்ஸிலே போய் பார்த்தால் மெட்றாஸ் ஊறுகாய் என்று அங்கே போர்டு போட்டிருக்கிறார்கள் என்றார். மெட்றாஸ் ஊறுகாய் என்று போர்டு போட்ட காரணத்தாலேயே சென்னையில் இருந்து யாரோ கடத்திக் கொண்டு போய் விற்கிறார்கள் என்று அர்த்தமல்ல. மெட்றாஸ் அல்லது தமிழ்நாடு என்று போட்டு மக்களைக் கவர அப்படிப்பட்ட விளம்பரங்களைப் போட்டிருக்கலாம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நம்முடைய மாநில காவல்துறையினரும், கேரள அரசு காவல்துறையினரும் இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் பற்றி சென்ற ஆண்டிலே கூடிப் பேசி முடிவு எடுத்தார்கள். அரிசி, மாவு போன்றவைகளை படகுகளிலே, கள்ளக் கடத்தல் தோணிகளிலே கடத்திச் செல்ல முடியாது. காரணம் கடலினுடைய அலைகள், அதிலே ஏற்படுகிற உப்பு காரணமாக இந்த உணவுப் பொருட்கள் கெட்டுவிடும் என்பதால் இந்தச் செய்திகள் தவறானவை என்றும் இருந்தாலும் கண்காணிக்கவேண்டும் என்று முடிவு எடுத்தார்கள். நான் கேரள மாநில காவல்துறையினரோடு என்று சொன்னதற்குக் காரணம், திரு. கே.டி.கே. அவர்கள் அப்படிச் சொன்னால்தான் நம்புவார் - அதற்காகத்தான் சொல்கிறேன் - கேரள மாநில காவல் துறையினரோடு நம்முடைய காவல்துறை அதிகாரிகளும் கூடிப் பேசி இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : இப்போது முதலமைச்சர் அவர்களுடைய வாதம் தமிழ்நாட்டிலிருந்து அரிசி வேறு மாநிலங்களுக்குப் போகவில்லை என்பதுதானா? போகவில்லை என்று சொல்கிறார்களா? அப்படிப் பேசுவது பேச்சுக்கு நன்றாக இருக்கும். தமிழ்நாட்டு அரிசி என்று சொல்லி அங்கே இருக்கின்ற ஜனங்களை ஏமாற்ற முடியாது. தமிழ்நாட்டு மக்களைவிட குஜராத்காரர்களும், துபாய் மக்களும்தான் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். வேண்டுமானால் கேரள போலீஸைக் கேளுங்கள். போகக்கூடிய லாரிகள் நேராக கோடவுனுக்குப் போகாமல் வேறு

இடங்களுக்குச் சென்றிருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய கள்ளக் கடத்தல்காரர்களுக்கும் இங்கே இருக்கக்கூடிய கள்ளக் கடத்தல்காரர்களுக்கும் தொடர்பு இருக்கலாம். நான் சொல்லியது தவறு என்று சொல்கிறார்களா? அரிசி வேறு மாநிலத்திற்குப் போகவேயில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் தெளிவாகக் கூறினேன். இரண்டு மாநிலக் காவல் துறை அதிகாரிகளும் கூடிப் பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் கவனிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இல்லவே இல்லை என்று நான் தட்டிக்கழிக்கவில்லை, தட்டிக்கழிக்கிறேன் என்ற கற்பனையை அவர்கள் கொண்டிருக்க வேண்டாம். திரு. கே.டி.கே. அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், வாதத்திற்காகச் சொல்கிறேன் அப்படியே போயிருந்தாலும் துபாய் என்ற இடத்திற்கே போயிருந்தாலும் இதற்குப் பொறுப்பு மாநில அரசா அல்லது மத்திய அரசா என்பதைக் கவனிக்க வேண்டும். மத்திய அரசுதான் அதற்குப் பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். துபாய்க்கு அரிசி போய்விட்டது என்று பாராளுமன்றத்திலே பிரச்சினையை எழுப்பி மத்திய சர்க்கார் கவனிக்க வேண்டும். மாநில அரசுக்குப் பொறுப்பு இல்லையா என்றால் பொறுப்பு இருக்கிறது. ஆனால் எதற்கெடுத்தாலும் மாநில சர்க்கார்தான் கவனிக்கவேண்டுமென்று சொல்வதை நம்முடைய அனுபவமிக்க திரு. தங்கமணி போன்றவர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது.

யாசின் எங்கே போய்விட்டார் என்று திரு. தங்கமணி கேட்டார். ஏதோ தமிழ்நாடு சர்க்கார் அவரை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்ற உணர்வு தோன்றுகிற அளவில் அல்லது அவரைப் பிடிக்காமல் வைத்திருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடிய அளவிற்கு அவரைப் போன்றவர்கள் பேசுவது வியப்பாக இருக்கிறது. யாசினை பிடிக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் அனுப்பிய முதல் பட்டியலிலே சொல்லவில்லை. அதிலே யாசினுடைய பெயரும் ரகுமானுடைய பெயரும் இல்லை. இன்ன இன்ன கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடிக்கவேண்டுமென்று மத்திய அரசு அனுப்பிய முதல் பட்டியலில் யாசின் பெயரும் இல்லை, ரகுமான் பெயரும் இல்லை.

இரண்டாவது பட்டியல் வருவதற்கு முன்பு அவர்கள் போய்விட்டார்கள். அதற்கு யார் காரணம்? முதல் பட்டியலிலே இன்றைக்கு இவ்வளவு பிரசித்தி பெற்றவர்களாக இருக்கிற யாசினும் ரகுமானும் இணைக்கப்படாததற்கு காரணம் என்ன என்று ஆராயவேண்டுமேயல்லாமல் ஏதோ யாசின் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்ஸிலே ஏறி வெளிநாட்டிற்குப் போய்விட்டார் என்பது போல மாநில சர்க்கார் மீது குற்றஞ் சாட்டுவது சரியல்ல. அவர் எந்த விமானத்திலே போனார்? யார் அவருக்கு பாஸ்போர்ட் கொடுத்தார்கள்? பாஸ்போர்ட் கொடுக்கிற அதிகாரம் மாநில சர்க்காருக்கு இருக்கிறதா? மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. யார் யாசினுக்குத் துணைபோனார்கள் என்பதை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறதே தவிர, மாநில சர்க்காருக்கு இல்லை. ஏன் முதல் பட்டியலிலே சேர்க்கவில்லை என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மாநில சர்க்காருக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : அரிசியைத் துபாய்க்கு அனுப்பியதற்குப் பொறுப்பு மத்திய சர்க்கார்தான், மாநில சர்க்கார் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திற்கு துபாய் என்ற இடத்திற்குக் கொண்டு போவது பற்றி பொறுப்பு இருக்கிறது. ஆனால் அரிசியை கேரள மாநிலத்து எல்லை வரை கொண்டுபோய் கொடுத்ததைக் கவனிக்க வேண்டிய, கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசினுடையதுதானே, எல்லை வரை கொண்டு போனதற்கு முழுக்க முழுக்க மாநில சர்க்கார்தான் பொறுப்பு. எல்லைவரை கடத்திக் கொண்டுபோய் இருக்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

திரு. கே.டி.கே. தங்கமணி : யாசின்பற்றிக் கேட்டார்கள். பல கள்ளக் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்ட சமயத்தில் அவர் தமிழ்நாட்டிலே இருக்கிறார். அவர் கள்ளக்கடத்தல்காரர் என்று தமிழ்நாடு அரசுக்குத் தெரியாதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : யாசின் மாத்திரமல்ல, இன்னும் சில கறுப்புப்பணக்காரர்கள் தமிழ்நாட்டில்

இருப்பதும் தமிழக அரசுக்குத் தெரியும். ஆனால் அவர்களைப் பிடிக்கக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லையே.

திரு. கே.டி.கே. தங்கமணி : கள்ளக் கடத்தல்காரர்களை நீங்களாகவே பிடித்தால் அந்த நல்ல பெயரும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பிடித்திருக்கலாம் அந்த அதிகாரங்கள் நமக்கும் வேண்டுமென்றுதான் நாம் இன்றைக்கு மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் என்ன என்ன பெயர்களை பட்டியலில் அனுப்பி வைக்கிறார்களோ அவர்களைத்தான் பிடிக்க வேண்டுமென்று இருக்கிறது. நாமாக கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்கலாம் என்று சொன்னால் திரு. கே.டி.கே. அவர்கள் அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் நிறைவேற்றித் தர ஆளுங்கட்சியில் இருக்கிற அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதனுடைய விளைவாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் போதும் அவர்கள் எங்களோடு நிற்க வேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றித் தந்து அமல்படுத்துகிறபோதும் அவர்கள் எங்களோடு இருக்கத் தயார் என்றால் நாங்கள் அதை நிறைவேற்றித் தருவதில் தயக்கம் இல்லை. அவர்கள் அனுப்பிய முதல் பட்டியலில் சொல்லப்பட்ட பெயர்களிலே யாருடைய பெயரும் விடப்பட்டது கிடையாது. குறிப்பிட்ட யாசின் கூட வெளிநாட்டில் இருக்கிறார், இங்கு இல்லை என்று தெரிந்ததற்குப் பிறகு அவருடைய சொத்துக்களையெல்லாம் காலக்கெடு கொடுத்து, இவ்வளவு நாட்களுக்குள் வராவிட்டால் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று உயர்நீதிமன்றத்தின் சார்பாக இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லுகின்ற வார்த்தைகளை விட்டுவிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்?

திரு. கே.டி.கே. தங்கமணி : ஆரம்பிக்கிறபொழுதே சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு என்று சொல்லி பிறகு தான் நீதிமன்றத்திற்கு வந்தார்களேயொழிய இந்தச் சர்க்கார், கள்ளக் கடத்தல்காரர்கள் என்று தெரிந்தவுடனேயே, உடனடியாக

பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தது மாதிரியாகச் சொல்கிறார்கள். அதிலே வேறு சில தவறுகள் நடந்திருக்கின்றன. கூலி மஸ்தான் கார் சேலத்தில் பறிமுதல் செய்யப்பட்டு யார் அதை உபயோகப்படுத்தினார்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அவர்களைப் போல் சட்டமெல்லாம் படிக்க வில்லை. திரு. தங்கமணி அவர்கள் சட்டத்திலே மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். வெளிநாட்டிற்குச் சென்று சட்டம் படித்தவர்கள். சர்க்கார் உத்தரவு போட்டுத்தான், நீதிமன்றம் அங்கீகரித்து சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அங்கீகாரம் செய்திருக்கிறது.

கள்ளக் கடத்தல்காரர்களை மட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று அல்ல, 1973ஆம் ஆண்டிலிருந்து, மத்திய சர்க்காருடைய உத்தரவு கள்ளக் கடத்தல் மன்னர்களைப் பிடியுங்கள் என்று வருவதற்கு முன்பிருந்தே, தமிழகத்திலே உள்ள அரிசிக் கடத்தல் அரசர்களையெல்லாம் பிடிக்கிற அந்தப் பொறுப்பை நம்முடைய மாநில அரசு ஏற்று, 1973ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மிசா உத்தரவைப் பயன்படுத்தி 48 பேர்களை நாம் பிடித்திருக்கிறோம், இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி உணவு தானியம் பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள், உணவு தானியங்களிலே இப்படிப்பட்ட கோர விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கிற கொடுமைக்காரர்கள் 522 பேரை கைது செய்து அவர்கள் மேல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. 48 பேர் மிசாவிலே பிடிக்கப்பட்டவர்கள், 522 பேர் இந்தியப் பாதுகாப்பு சட்டப்படி பிடிக்கப்பட்டவர்கள், இவர்களிடமிருந்து மொத்த மதிப்பு 2 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கான உணவு தானியங்கள் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

உண்மை இப்படியிருக்க, பதுக்கல்காரர்கள், கடத்தல் காரர்கள், பணக்காரர்கள், இப்படிப்பட்டவர்கள், செல்வச் சீமான்கள், இவர்களெல்லாம் இந்த அரசுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று, நம்முடைய நண்பர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் ரொம்ப வேதனையோடு சொன்னார்கள். அடிக்கடி நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் வடபாதி மங்கலம் தியாகராச முதலியாரைப் பற்றிப் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய

இளமைக் காலத்திலேயிருந்தே திருவாரூரில் அவரை எதிர்த்து வருபவர்களில் ஒருவன். திருவாரூரில் நகரமன்ற சேர்மனாக அவர் வந்துவிடக் கூடாது என்பதற்காக, அவர் சார்பில் 20 பேர் கவுன்சிலர்களுக்கு நிறுத்தப்பட்ட நேரத்தில், இவர்களெல்லாம் ஜெயித்தாலும் பரவாயில்லை, ஆனால் அவர் சேர்மனாக வந்து விடக்கூடாது என்று, நான் மாணவனாக இருந்த அந்தக் காலத்திலேயே எதிர்த்திருக்கிறேன். அவர் போட்டியிட்ட வார்டுகளிலே - அவர் இரண்டு வார்டுகளிலே போட்டியிட்டார் - வேலை செய்து ஒரு வார்டிலே 5 வோட்டுகளில் இராமானுஜ முதலியார் என்பவரிடம் அவர் தோற்றார். இன்னொரு வார்டிலே 12 ஓட்டுகள் வித்தியாசத்தில் துரைராஜ் என்ற கிறித்தவரிடம் தோற்றார். அவர் நிறுத்தியவர்கள் ஜெயித்தார்களே தவிர, இவர் தலைவராக வர முடியவில்லை. அப்பொழுது சென்னைக்கு வந்தவர்தான் திருவாரூரை விட்டு இந்த தியாகராச முதலியார்.

திரு. கே.டி.கே. தங்கமணி : அன்றைக்கு அப்படியெல்லாம் எதிர்த்துவிட்டு இன்றைக்கு அவருக்கு ஆதரவாக இருக்கிறீர்களே என்பதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இல்லை, நாங்கள் என்ன மன்றாடியாருக்கா உங்களைப்போல துணை போனோம். விவசாயப் போராட்டத்தில் நீங்கள் போனதைப் போல? (கை தட்டல்)

திரு. கே.டி.கே. தங்கமணி : தியாகராஜ முதலியார் போராட்டம் நடத்தி ஜெயிலுக்குப் போனால் நாங்களும் அவரோடு போகவும் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்தத் தொடர்பு கூட எங்களுக்கு இல்லை. எந்த ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் உடனடியாக, கம்யூனிஸ்ட் கட்சியையே எடுத்துக் கொண்டாலும் கேரளத்திலே எல்லாத் தொழில்களையும் அழித்து விட்டார்களா? தொழிலதிபர்கள் இனிமேல் இருக்கக்கூடாது என்று, எல்லாத் தொழில்களையும் அழித்துவிட்டார்களா என்றால் இல்லை. இன்றைக்கு இந்தியாவில் சோஷலிசம் பேசிக் கொண்டிருக்கின்ற நம்முடைய நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆளும் மாநிலங்களும் இருக்கின்றன, இந்திரா காங்கிரசின்

துணையோடு ஆட்சி நடத்தக்கூடிய கேரளம் போன்ற மாநிலங்களும் இருக்கின்றன, அங்கே கூட பிர்லாவிற்குத் தொழிற்சாலை வைக்க அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழில் அதிபர்கள் ஒரு கட்சி ஆட்சிக்கு வரும் நேரத்தில் அவர்களுடைய தொழில் வளர்வதற்கு ஏற்படும் சாதக பாதகங்களை எடுத்துச் சொல்ல ஒரு அரசோடு தொடர்பு கொள்வது தவறு அல்ல. அதனால் அவர்களுக்கு அரசு அடிமையாகி விடுகிறது என்றால் அது தவறு. அப்படி நாங்கள் ஏதாவது தவறுகள் எந்த நேரத்திலேயாவது செய்திருந்தால், அதைச் சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தியாகராஜ முதலியாரைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், தியாகராஜ முதலியார் பெரிய பணக்காரர், பூர்ஷுவா என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு இந்த அரசைக் குற்றஞ் சாட்டினார்கள். யார் அந்த தியாகராஜ முதலியார்? ஆவடி சோஷலிசம் என்று பேசப்படுகிறதே, அந்த ஆவடி காங்கிரஸ் மாநாட்டை முன்னின்று நடத்தியவர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அதே தியாகராஜ முதலியார் தங்களுக்கு பொன்னாடை போர்த்தினாரே, அதை மறந்து விட்டீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்வதைப் புரிந்து கொள்ளவேண்டும். அந்த ஆவடி சோஷலிச மாநாட்டை நடத்தியவரே தியாகராஜ முதலியார்தான். (குறுக்கீடு) அவர்தான் உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தினார். அண்ணா இருந்த காலத்தில்தான். நான் சொல்ல வருவது, இந்த தியாகராஜ முதலியாருக்கு எந்தச் சலுகையையாவது அளித்தோமா? அவர் பொன்னாடை போர்த்தினார் என்பதற்காக 5,000 ஏக்கர் நிலத்தை நீங்கள் விதிவிலக்கோடு அனுபவித்துக் கொள்ளுங்கள், கரும்பு பயிரிட்டுக் கொள்ளுங்கள், அதற்கு உச்சவரம்பு கிடையாது என்று நாங்கள் சொல்லியிருந்தால் நாங்கள் அவருக்கு ஆட்பட்டுவிட்டோம், பொன்னாடையிலே மயங்கிவிட்டோம் என்று பொருள். பழகுவது வேறு, நண்பராக இருப்பது வேறு, ஆனால் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அதற்குத் தலைவணங்க வேண்டும், வடபாதி மங்கலமாக இருந்தாலும், கபிஸ்தலமாக இருந்தாலும், பூண்டி

வாண்டையாராக இருந்தாலும், மன்றாடியாராக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் சாமானியர்களுக்குத் துணை போகுமே தவிர, சீமான்களுக்கு நிச்சயமாகத் துணை போகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சீனிவாசன் அவர்கள் கூடப் பேசினார்கள், மாதவன் சுப்பராஜா வீட்டிற்கு போகிறார் என்று. என்ன செய்வது? எதற்காக முதன்முதலாகப் போனார் என்றால் சீனிவாசனுக்குப் பெண் கேட்பதற்காகத்தான் போனார். சீனிவாசன் தான் 'சுப்பராஜா வீட்டில் பெண் இருக்கிறது, பேசச் சொல்லுங்கள், மாதவனை அனுப்புங்கள்' என்று சொன்னார்.

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சரவர்கள் சீட்டு விளையாடிக் கூடப் பார்த்திருக்கிறேன், அவர்கள் பாயிண்ட் வீக்காகும்பொழுது துருப்புச் சீட்டைப் பயன்படுத்துவார்கள். இது துருப்புச் சீட்டு இல்லை. எனக்காக மாதவன் போனது இல்லை, யாரும் போனது இல்லை. தொலைபேசியில்தான் பேசினார்கள். இது ஒன்றும் பெரிய விவகாரம் இல்லை. அதனால் எந்தவிதமான பாதகமோ சாதகமோ எனக்கு இல்லை. இன்றைக்கு முன்னாள் மாவட்டச் செயலாளர் தென்னரசு அவர்கள் ஜெயவிலாசைச் சேர்ந்தவரின் காரை தன்னுடைய உபயோகத்தில் வைத்திருக் கிறார்கள். அம்பாசிடர் காரை இரண்டு மூன்று ஆண்டு காலமாக வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர் மாதவன் போனார் என்பதை மட்டும்தான் மறுக்கிறார். நான் பேசியதை மறுக்கவில்லை. ஆக, பெண் கேட்டது உண்மை. அவர்கள் பெண் தரமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். ஏனென்றால் சீனிவாசன் ரொம்ப சோஷலிசம் பேசுகிறவர், எங்கள் பெண்ணைக் கொடுத்தால் ஒழுங்காக வாழ முடியாது, அப்படிப்பட்ட சமதர்ம வாதிக்கு எங்கள் பெண்ணை கொடுக்க முடியாது என்று பாராட்டித்தான் அந்தச் சீமான் சொன்னார்கள். (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன் : ஆளுங்கட்சி நண்பர்கள் ரொம்ப ஆச்சரியமாக கை தட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள். முதலமைச்ச ரவர்கள் சொல்லும்பொழுது அதனுடைய சம்பவத்தைச் சொல்லி யிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். என்னைப்பற்றி

வந்ததால் நான் சொல்ல விரும்புகிறேன். நானே ரொம்பக் கூச்சப்படுகிறேன் என்பதோடு இன்னும் சொல்லப்போனால் நேரடியாக முதலமைச்சரவர்கள் என்னை பலதடவை வற்புறுத்தினார்கள், "திருமணம் செய்து கொள், ஏன் திருமணம் செய்யவில்லை" என்று வற்புறுத்தினார்கள். துலுக்கப்பட்டியில் தொழிலாளர் போராட்டம் நடந்தபொழுது என்னைச் சந்திக்க வந்தார்கள். நான் அப்பொழுது கைது செய்யப்பட்டிருந்தேன். அது யாரால் என்பது முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். நான் அதற்காகப் பெருமைப்படுகிறேன். பெண் எடுக்கவில்லை என்பதற்காக வருத்தப்படவில்லை. நான் இன்னும் பச்சையாகச் சொல்கிறேன், நாங்கள் தொழில் ஸ்தாபனம் வைத்திருப்பவர்கள், சீனிவாசன் தொழிலாளர் பக்கமே சென்று கொண்டிருந்தால் எல்லாம் கெட்டுவிடும் என்று அவர்கள் சொன்னதாகக் கூட அறிகிறேன், அதற்காக நான் வருத்தப்படவில்லை, அதற்காகக் கவலைப்படவும் இல்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொன்னதைத்தான் நண்பர் சீனிவாசன் அவர்களும் திரும்பச் சொன்னார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் ஏழைகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று கூற முடியுமா? குடிசை மாற்று வாரியம் செய்யும் திட்டங்களைப் பார்த்துவிட்ட பிறகும், குடிநீர் வாரியம் கிராமப்புறத்திலிருக்கின்ற ஏழை மக்களுக்காகத்தான் என்பதை உணர்ந்தபிறகும், அரிசன நல வீட்டு வசதி வாரியம் உருவாகி அதனால் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் பயனடைகிறார்கள் என்பதை அறிந்த பிறகும், கண்ணொளி வழங்கும் திட்டத்தினால் கனதனவான்கள் அல்ல, கதியற்ற ஏழை எளியவர்களுக்கு என்பதை அறிந்த பிறகும், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தினால் பயன் பெறுகின்றவர்கள் ஏழைகள்தான் என்பதை அறிந்த பிறகும், ஊனமுற்றோருக்கான திட்டத்தினால் பயன் அடைகின்றவர்கள் ஏழை எளியவர்கள் தான் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும், கைரிக்ஷாக்கள் ஒழிப்புத் திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் ஏழைத் தொழிலாளர்கள்தான் என்பதைத் தெரிந்த பிறகும், அரசாங்க ஊழியர்களுக்கான குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஏழை எளிய அரசு அலுவலர்களுக்குத்தான் என்பதைத் தெரிந்த பிறகும், இது

சீமான்கள் அரசு என்பது சரிதானா? கோவையிலே நடந்த ஆலைத் தொழிலாளர்கள் போராட்டத்திலே அவர்களுக்கு வேறு எந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் முன்வராத அளவிற்கு அவர்கள் கஷ்டப்பட்ட காலத்தில் 6 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிதியிலிருந்து தந்தது இந்த அரசுதான், வேறு எந்த மாநிலத்திலும் வேலையில்லாமல் அவதிப்பட்ட தொழிலாளர் களுக்கு அந்த அரசு இப்படிப்பட்ட நிவாரண உதவியை அளித்தது இல்லை என்பதையும் நாம் நன்றாக உணர்வோம். நாடும் உணரும்.

அதுமாத்திரமல்ல. சிம்ப்சன் தொழிலாளர்கள் போராட்டம் எந்த அளவிற்கு வளர்ந்தது என்பதெல்லாம் தெரியும். அதற்குப் பிறகும் கூட அவர்கள் யாரும் பழிவாங்கப்படக் கூடாது என்ற கோரிக்கையின் அடிப்படையில் கிட்டத்தட்ட 120-க்கு மேற்பட்ட சிம்ப்சன் தொழிலாளர்களைப் பழி வாங்காமல் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, சிம்ப்சன் நிர்வாகத்தில் இருப்பவர்களுடைய மனக் கசப்பை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருப்பதும் இந்த அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்து விடக்கூடாது.

அண்மையில் கூட, நானும் தொழிலாளர் நல அமைச்சரும் கோவையில் அமர்ந்து, காலையிலிருந்து மாலை வரை அங்கிருக்கும் ஆலை அதிபர்கள், நிர்வாகிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் பேசி எடுத்த முடிவு, மத்திய சர்க்கார் சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் பாதகங்களையும் மீறி இன்றைக்கு எடுத்த முடிவு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்காக எடுக்கப்பட்ட முடிவே தவிர, சீமான்களுக்காகவோ, பெரிய பணக்காரர்களுக்காகவோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக ஆறு லட்சம் ரூபாய் வரை கொடுத்ததை எல்லாத் தொழிற்சங்கவாதிகளும் பாராட்டினார்கள். அது இந்த முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு முன்னால் செய்ததாக ஞாபகம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. தங்கமணி அவர்கள் எனக்கு ஒரு பெருமை சேர ஒத்துக்கொள்ள

மாட்டார்கள். எவ்வளவு பெரிய உள்ளம், பரந்த உள்ளம், அண்ணா முதலமைச்சராக இருந்தபோது ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். நான் முதலமைச்சராக இருந்தபோது ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்தேன். தங்கமணி அவர்கள் காதில் விழ வேண்டுமென்று உரக்கச் சொல்கிறேன். அண்ணா வழியில் நடக்கவில்லை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர், பெரிய தலைவர்கூட, "எங்களுக்கு என்ன கோபம்? கருணாநிதி மீது, நாவலர் மீது எல்லாம், அவர்கள் அண்ணா வழியில் நடக்கவில்லை" என்று பேசியதாக பத்திரிகைகளில் படித்தேன். அதுதான் உண்மை. 1967-ல் அண்ணா மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டார். 1971-ல் அவர் வழியில் நான் நடக்காமல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டேன். அந்தத் தவறுக்கான தண்டனையை - அண்ணா - இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். 'எங்களை மன்னித்துவிடு, அண்ணா' என்று மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழி இல்லை.

திரு. கே.டி.கே. தங்கமணி : அண்ணா வழியில் நீங்கள் நடக்கவில்லை என்று யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் அந்த மாதிரிச் சொல்லுவது கிடையாது. எங்களுக்கு ஒரு வழி உண்டு. நீங்கள் உங்கள் வழியில் செல்லுகிறீர்கள். நீங்கள் அண்ணா வழியில் நடக்கவில்லை என்று நாங்கள் குற்றம் சாட்டவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'நீங்கள் அண்ணா வழியில் நடக்கவில்லை' என்ற குற்றம் சாட்டவில்லை என்று அவர் கூறினார்; ஆகவே அண்ணா வழியில் நாங்கள் நடக்கிறோம் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார் அதற்காக நன்றி.

உரம் பற்றி இங்கு ஒரு விவாதம் நடைபெற்றது. அதிலே சில கருத்துக்கள் பரிமாறப்பட்டபோதே விவரங்களைப் பெற்று என்னுடைய பேச்சின்போது தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் வரவில்லை என்று குற்றச்சாட்டைச்

சொன்னார்கள். அப்போது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்தச் சங்கங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அந்தச் சங்கங்களுக்கு உடனடியாக உரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த விவரங்களை நான் பார்த்தபோது திரு. குருசாமி அவர்கள் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுப்பலாபுரம், ஆண்டிப்பட்டி, ரங்கசமுத்திரம் என்றெல்லாம் இருக்கிற 14 கூட்டுறவுச் சங்கங்களில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்கள் வரை உரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு இருக்கிறது. எந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உரம் வழங்கப்படவில்லை என்ற தகவல் இல்லை.

நண்பர் சீனிவாசன் அவர்கள் முக்கியமான கேள்வியை எழுப்பினார்கள். . .

திரு. நா.வெ. குருசாமி : கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் வரவில்லை என்று கூறவில்லை. விவசாயிகளுக்கு ஏன் ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லை என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது, விவசாயிகளுக்குத் தரவில்லை என்றால் புகார் செய்யுங்கள் என்று சொன்னார்கள்.

திரு. சீனிவாசன் அவர்கள் எவ்வளவு உரம் ஒதுக்கப் படுகிறது என்று கேட்டார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். எவ்வளவு என்று கேட்டதற்குத் தாராளமாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். நிலைமை என்ன? நமக்கென்று 1974-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உரம் மெட்ரிக் டன்களில் பார்த்தால் காரிப் பருவம், ராபி பருவம் இரண்டுக்கும் 2,92,029 டன். இது ஒதுக்கப்பட்டது. ஆனால் நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து அளிக்கப்பட்டது 1,30,500 டன்தான். ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு எவ்வளவு தேவை என்று நண்பர் சீனிவாசன் அவர்கள் கேட்டார்கள். கிட்டத்தட்ட 75 கிலோ முதல் 100 கிலோ வரை தேவை. நாம் இன்றைக்குத் தனியார் தொகுப்பு அதைப்போல் அரசாங்கத் தொகுப்பு இந்த இரண்டிலும் இருந்து உரத்தை வழங்குகிறோம். அது ஒழுங்காக விநியோகிக்கப்பட

வேண்டுமென்பதற்காக ஒரு கார்டு முறையை நாம் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். கார்டுகளின் மூலம் கொடுக்கும் அளவு விவசாயிகளுக்குப் போதுமானதா என்றால் இல்லை. அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் அந்தந்த நிலைமைக்கேற்ற வகையில் 25 கிலோ 50 கிலோ என்ற வகையில் பிரித்துப் பருவங்களுக்கேற்றவாறு அதை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு உரம் கிடைக்கிறது என்று நாம் திட்டவட்டமாகக் கூற இயலாது.

திரு. பெ. சீனிவாசன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக விருதுநகர், சாத்தூர் பகுதியில் வறட்சி ஏற்பட்டதன் காரணமாக வறட்சி நிவாரணத்திற்காகப் பணத்தை ஒதுக்கி யிருக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணி நடைபெறுகிற இடத்தில் உரத்தைக் கொடுக்கக்கூடாது என்று விவசாய இலாகா உத்தரவிட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். ஸ்டாக் இருந்தும் கொடுக்க வில்லை. ஆங்காங்கு கிணற்றில் தண்ணீர் இருக்கும் அளவுக்கு விவசாயம் செய்வதற்கு உரம் கொடுக்கலாம் அல்லவா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விவசாயத்தையே நடத்த முடியாத இடங்களில் உரத்தை வீணாக்க முடியாது. அங்கும் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்குச் சாத்தியக் கூறுகள் இருந்தால் அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் உரத்தை வழங்க அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும்.

மேலும் நமக்கு 35,000 டன்தான் கிடைக்கும். இப்போது 25,000 டன் அளவுக்குத்தான் இருக்கிறது. விரைவில் அது சம்பந்தமாக டில்லியோடு தொடர்புகொண்டு வறட்சியான இந்த நேரத்தில் ஒதுக்க டில்லி அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும் அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினையில் பல கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தோழமைக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. 12-ம் தேதி முன்வைத்த அறிக்கையின் அடிப்படையில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை எல்லாம் வைத்து இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இவற்றையும் வாய்ப்பாகப்

பயன்படுத்திக்கொண்டு இந்த நிலை குறித்து ஒரு கொள்கை அறிவிப்பையும் இந்தப் பேச்சில் நான் வெளியிட விரும்புகிறேன்.

நடப்புக் குறுவையில் தஞ்சை மாவட்டத்தில் வெளிச் சந்தையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கிய நெல்லுக்கும் மற்ற மாவட்டங்களில் 'லெவி' முறையில் வாங்கிய நெல்லுக்கும் கீழ்க்கண்ட விலையை நாம் நிர்ணயித்திருந்தோம் :-

	குவிண்டால் ஒன்றுக்கு ரூ.
மோட்டா ரகம்	85 00
நடுத்தரம்	90 00
சன்ன ரகம்	95 00
மிகச் சன்ன ரகம்	98 00

ஆனால் மத்திய அரசு கீழ்க்கண்ட கொள்முதல் விலையை நிர்ணயித்தது :-

	குவிண்டால் ஒன்றுக்கு ரூ.
மோட்டா ரகம்	74 00
நடுத்தரம்	78 00
சன்ன ரகம்	83 00
மிகச் சன்ன ரகம்	86 00

நமது அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலை 1974ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இறுதிவரை தான் கிடைக்கும் என்றும் அதற்குப் பிறகு மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலை அமல்படுத்தப்படும் என்றும் அறிவித்திருந்தேன்.

அதைத் தொடர்ந்து நான் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களை நேரிடையாகவும், கடிதம் மூலமாகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நமது மாநில அரசு நிர்ணயித்த விலை டிசம்பர் 15-ந் தேதி வரை நீடிக்கப்பட்டது.

தஞ்சையில் வெளிச் சந்தையில் வாங்கிய நெல்லுக்கும், மற்ற மாவட்டங்களில் 'லெவி' முறையில் வாங்கிய நெல்லுக்கும் நமது மாநில அரச நிர்ணயித்த விலை டிசம்பர் 15-ந் தேதி வரை

கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, ஓரளவு நெல்லை சிவில் சப்ளை கார்ப்பரேஷனுக்கு விற்ற தஞ்சை விவசாயிகளையும் லெவி முறைக்குக் கொடுத்து உதவிய மற்ற மாவட்டங்களிலுள்ள விவசாயிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இதுவரையில் குறுவையில் நமது மாநிலத்தில் 1,43,000 டன்கள் கொள்முதல் ஆகியுள்ளது. இவற்றில் தஞ்சையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் - 1,07,500 டன்கள். தஞ்சையில் மட்டும் ஃபுட் கார்ப்பரேஷன் - 8,000 டன்கள். மற்ற மாவட்டங்களில் 27,500 டன்கள்.

16-12-1974 முதல் மாநிலம் முழுவதற்கும் மத்திய அரசு நிர்ணயித்த லெவி விலையை நமது அரசு அமல்படுத்தும். இந்த விலையோடு போக்குவரத்து போன்ற இடைநிகழ் செலவுகளுக்கு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறு தொகை சேர்த்துக் கொடுக்கப்படும்.

இந்த மாதம் 12-ந் தேதி நான் சட்டமன்றத்தில் உணவு தானியம் உபரியாக உள்ள பகுதிகளில் மொத்த வாணிபம் செய்ய தனிப்பட்ட வியாபாரிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இந்தப் பகுதிகளில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்ட லெவியை வாங்கிய பின்பு, உபரியாக இருக்கும் நெல் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வாங்கப்படும் என்றும், மாநிலம் முழுமைக்கும் நெல், அரிசி ஆகியவற்றுக்கு அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்படும் என்றும் கூறினேன்.

உற்பத்தியில் ஒரு பகுதியை மத்திய அரசு நிர்ணயித்த விலையில் லெவிமூலம் கொடுத்து விடுவதால் எங்கெங்கே லெவி அமலில் உள்ளதோ அங்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வெளிச் சந்தையில் நெல் வாங்கப்படும்.

இந்த அதிகபட்ச விலைகள் பின்வருமாறு :-

	குவிண்டால் ஒன்றுக்கு இனிமேல் ரூ.
மோட்டா ரகம்	95 00
நடுத்தரம்	100 00

சன்ன ரகம்	105 00
மிகச் சன்ன ரகம்	110 00

என நிர்ணயிக்கப்படுகிறது.

கூட்டுறவு மூலமாக உபரிப் பகுதிகளில் வாங்கப்பட்ட நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசிக்கு அதிகபட்ச விலை பின்வருமாறு :-

அரிசி கிலோ ஒன்றுக்கு

	ரூ.
மோட்டா ரகம்	1.90
நடுத்தரம்	2.00
சன்ன ரகம்	2.10
மிகச் சன்ன ரகம்	2.20

என நிர்ணயிக்கப்படுகிறது.

தனியார் வாணிபம் செய்ய அனுமதிக்கப்படும் இடங்களில் மேற்கூறிய அதிகபட்ச விலைகள்தான் பொருந்தும். இந்த விலைக்கு மேல் வாங்குவதும் விற்பதும் சட்டப்படிக் குற்றமாகும். இந்த ஆணைகளை மீறுவோர்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் இருந்து கிடைக்கின்ற அரிசிக்குக் கீழ்க்கண்ட உயர்ந்தபட்ச விலைகள் நிர்ணயிக்கப்படுகிறது :-

அரிசி கிலோ ஒன்றுக்கு

	ரூ.
மோட்டா ரகம்	1.60
நடுத்தரம்	1.70
சன்ன ரகம்	1.80
மிகச் சன்ன ரகம்	1.90

'லெவி' மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கின்ற அரிசியைக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்குப் பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்கப்படும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்பை அறிவிப்பதற்குள்ள வரம்பு 40 குவிண்டால் நெல்லில் இருந்து 20 குவிண்டால் என்றும், 25 குவிண்டால் அரிசியிலிருந்து 13 குவிண்டால் என்றும் குறைத்து நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நெல், அரிசி (இருப்புக்களை அறிவித்தல்) ஆணையின்படி உற்பத்தி யாளர்கள், மற்றும் வியாபாரிகள் தேவைக்கு மேல் பதுக்கி வைத்திருக்கும் இருப்பை அரசு கட்டாயமாக எடுத்துக்கொள்ளும்.

அவ்விதம் எடுக்கும்போது அரசு 'லெவிக்கு' நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைதான் அளிக்க முடியும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் இருப்புகளைப் பதுக்குவதாகத் தெரிந்தால், அரசு இந்த விதியின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

'லெவி' முறையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் கிடைக்கின்ற இருப்பை பற்றாக்குறைப் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்குச் சமமாகப் பங்கீடு செய்வதை உறுதிப்படுத்துவதற் காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வரும் ஆண்டில் பெரும் பற்றாக்குறை எதிர்பார்ப்பதால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைக்கச் செய்வதற்காகவும், பற்றாக் குறையைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்த முறை கையாளப் படுகிறது.

இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தக் கொள்கைகளை அமல் செய்வதற்கு எல்லோருடைய ஆதரவும் எதிர்பார்க்கப் படுகிறது. இந்த அறிவிப்புகளைத் தமிழ் நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அவர்கள் எல்லாம் இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி அறிந்தவர்கள்தான். அவர்கள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டும். வியாபாரிகளுடைய கொள்ளை லாப வேட்டைக்காட்டில் பலியாகிவிடாமல் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து - எண்ணிக்கையில் நிலக்கிழார்கள் குறைவு என்று கூற முடியாது - வாங்கிப் புசிக்கின்ற பொதுமக்கள் அதிகம் என்ற அந்த நிலையை உணர்ந்து ஓரளவு தியாகம் செய்கிற அந்த சித்தத்தோடு இந்தப் பணியில் இந்த அரசோடு

அவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு என்று கூட்டுறவு முறையில் வாங்குகிற நெல்லுக்கு நாம் நிர்ணயித் திருக்கிற விலை குறைவானதல்ல, அது ஓரளவிற்கு அவர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய விலைதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இங்கு பேசப்பட்டுள்ள பலதரப்பட்ட கருத்துக்களையும் திரு. மாரிமுத்து அவர்களும் மற்ற நண்பர்களும் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் மனதில் வைத்துத்தான், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்கூட திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். அந்த விலைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் ரொம்பவும் அதிகமாகிவிட்டால் வாங்கிப் புசிக்கின்ற மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். குறைந்துவிட்டால் உற்பத்தியாளர்களுக்கு கஷ்டம் ஏற்படும். அவர்களுக்குச் சாகுபடிச் செலவிற்கே கட்டுப்படியாகாமல் போய்விடும், இவைகளை எல்லாம் நடுநிலையில் யோசித்துத்தான் இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதிலும் கள்ளச் சந்தையில், இதிலும் கருப்புச் சந்தையில் வாங்குவதற்கு, விற்க யாராவது வந்தால் தயவுதாட்சண்யம் இல்லாமல் அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு எந்தவிதமான நிலையையும் உருவாக்கி விடாத அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசோடு ஒத்துழைப்பார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். அதோடு தொடர்பான, நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிற வறட்சியை எதிர்த்துப் போராட மாண்புமிகு. . .

திரு. எஸ். வடிவேல் : நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிற அந்த நல்ல ஆலோசனைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு சர்வ கட்சிக் குழு ஒன்று அமைக்கப்படுமா? அதுதான் நடைமுறையில் சாத்தியப்படும் இல்லை என்றால் இந்தக் காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாத ஒரு நிலை ஏற்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இன்னொரு விளக்கத்தைக் கூட முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

நேற்று மேலவையில் நம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள்

'The area under Kuruvai in Thanjavur district this year had come down to less than four lakh acres from five lakh acres last year'. என்று, கிட்டத்தட்ட 3½ லட்சம் டன்தான் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஐந்து லட்சம் டன். இந்த ஆண்டு அதைவிடக் குறைவாக வந்திருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு விளக்கம்,

'The yield was only five lakh tonnes as against 15 lakh tonnes last year.'

- ஒரு லட்சம் ஏக்கர் சாகுபடி குறைந்தால் கிட்டத்தட்ட பத்து லட்சம் டன் குறைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அங்கே கூறியதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், 20 லட்சம் டன் பற்றாக்குறை அங்கு ஏற்படுகிறது என்றும் சொல்லியிருக் கிறார்கள்.. அந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அவையில் கூறவேண்டும். அதன் நிலைமை என்ன? எப்படி ஒரு லட்சம் ஏக்கர் சாகுபடி குறைந்தால் பத்து லட்சம் டன் விளைவு குறையும்? உண்மை நிலை என்ன? மாவட்ட ரீதியாகச் சரியான தகவல்களைச் சேகரித்திருக்கிறீர்களா?

Has proper estimate been made about the deficit in the whole State?

என்ற விளக்கத்தை நான் முக்கியமாகக் கேட்க விரும்புகிறேன். எல்லாப் பிரச்சினைகளையும் கிளப்பியிருக்கிறோம் இந்த மன்றத்தில். அந்த விவரங்களை எல்லாம் இந்த மன்றத்தில் உணவு அமைச்சர் அவர்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 3.74 லட்சம் இன்றையதினம் குறைவாகச் சாகுபடி செய்திருக்கிறார்கள். நாம் எதிர்பார்த்துத் திட்டமிட்டது ஒரு ஏக்கருக்கு 27 மூட்டைகள் என்ற அளவில் முதலில் எதிர்பார்த்தோம். அது காலம் தாழ்ந்து நடவான காரணத்தால் 18 மூட்டைகள்தான் எதிர்பார்க்கிறோம். முதலில் ஐந்து லட்சம் ஏக்கர்களில் நடவு செய்ததால் 3,68,000 டன் எதிர்பார்த்துக்

கொண்டிருந்தோம். ஆனால் விளைவு குறைந்து விட்டது. பரப்பளவும் குறைந்துவிட்ட காரணத்தால் இப்போது 2.45 லட்சம் டன்தான் அதில் காணும் என்ற நிலையில் இருக்கிறோம். நேற்று திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் கொடுக்கிற கணக்கில்கூட தப்பு இருக்கிறது. 2½ லட்சம் ஏக்கர்தான் குறுவை சாகுபடியாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஐ.ஆர். 20 தவிர மற்றவை பற்றிச் சொன்னார்கள். ஐ.ஆர். 20-யையும் சேர்த்து 3.47 லட்சம் டன் என்று கணக்குப் போட்டுச் சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தஞ்சாவூரில் பத்து லட்சம் டன் குறைகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஈல்ட் குறைந்து போய் விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புப்பற்றி ஒரு க்ளாரிபிகேஷன் கேட்கிறேன். உபரி மாவட்டங்கள், உபரியாக விளையக் கூடிய பகுதிகளில் அரசாங்க சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், உபரி நெல்லை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று இப்போதுள்ள அறிவிப்பில் அறிவிக்கப் பட்டது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அங்கு வாங்கிச் சாப்பிடக்கூடிய மக்களுக்கு விநியோகிப்பதற்காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து அதிக விலை கொடுத்து வாங்குகின்றன. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லெவி குறைந்த விலையில் வாங்குகிறது. குறைந்த விலையில் வாங்குகிறதைப் பூராவும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி அதிக விலையில் வாங்குவதை அங்கு கொடுக்கிறீர்களா? அங்கு சாதாரண மக்கள் வாங்கிச் சாப்பிட என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பொருளாதார ரீதியில் இப்போது ஒரு வருமானத்தை வரையறுத்துக் குறிப்பிட்டு அப்படிப்பட்டவர்களுக்கு பற்றாக்குறைப் பிரதேசங்களில் வழங்குவதற்கு இது பயன்படுத்தப்படும்.

திருமதி த.ந. அனந்தநாயகி : நகர்ப்புறத்தில் சாதாரணமாக ஒரு பாக்டரி லேபரர்கூட மாதம் ரூ. 500 சம்பாதித்துக் கொள்கிறார். அர்பன் ஏரியாவில் ரூ. 500, ரூ. 750, ரூ. 1,000 என்று உயர்த்துவதற்கு ஒரு தனிச் சட்டம் போடுவீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவைகளை எல்லாம் போகப் போகக் கவனிக்கலாம்.

அடுத்தபடியாக, நான் மிக முக்கியமான பிரச்சினையான வறட்சிப் பகுதிகளுக்கு, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்காக சில சலுகைகளை அளிக்க விரும்புகிறேன். ஏனென்றால் விவசாயிகள் நம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நாம் பக்கத் துணையாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் சில சலுகைகளை இங்கே நான் அறிவிக்க விரும்புகிறேன். (1) வறட்சிப் பகுதிகளில் அரசு கடன்களை வசூலிப்பதை உடனடியாக தள்ளி வைக்கும் (கைதட்டல்) (2) வறட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு நிலவரி வசூலிக்கப்படமாட்டாது. (3) கூட்டுறவு மூலமான கடன்கள் பெற்றவர்களுக்கு வசூல்கள் செய்யப்படுவது தள்ளி வைக்கப்படும். (4) வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேலும் நிவாரணம் அளிக்கும் பொருட்டு மேலும் பல தீவிரமான நடவடிக்கைகளை யோசித்து வருகிறது, அவை அவ்வப்போது அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதல் கட்டமாக நம் மாநில அரசின் சார்பாக ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று சொன்னேன். இரண்டு கோடி ரூபாய் திட்டங்கள் வகுக்கப்பட்டு செலவழிக்க இன்றைக்கு அலுவலர்கள் எல்லாம் தொடங்கி விட்டார்கள். இந்த இரண்டு கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றுகின்ற நேரத்திலே நம் வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் மாவட்டங்களுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து இரண்டொரு நாளில் அறிக்கை தர இருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி மத்திய அரசிடம் நாம் இந்தத் திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க இருக்கிறோம். அது எவ்வளவு என்று ஆளுக்கு ஆள் சொல்லிப் பிரச்சினையை குழப்பக் கூடாது என்பதற்காகத்தான் அதைத் திட்டவட்டமாக மத்திய அரசினிடத்தில் அறிவிக்க இருக்கிறோம். நான் டில்லிக்குப் போனபோதுகூட திருமதி இந்திரா காந்தியைச்

சந்தித்து இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இதற்கிடையில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து கோடி ரூபாய் வேண்டும் என்று பிரதமரைக் கேட்டார்கள். அது எப்படிப் போதும் என்று நண்பர் முத்துச்சாமி குறைபட்டுக் கொண்டார். இந்தத் தடவை அதையாவது கேட்டார்களே என்று சந்தோஷப்பட வேண்டும். 69-ல் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட போது பிரதமர் தமிழகத்தை வந்து பார்க்க வேண்டும் என்றபோது இங்கே வறட்சி இல்லை, பசுமையாக இருக்கிறது என்று சொன்னவர்கள் இந்தத் தடவை ஐந்து கோடி ரூபாய் முந்திக் கொண்டு கேட்டதற்காகப் பரவாயில்லை என்று நன்றி தெரிவிக்க வேண்டுமே அல்லாமல் அதற்காக நாம் குறைபட்டுக்கொள்ளக் கூடாது என்பதையும். . .

திரு. கே.டி.கே. தங்கமணி : நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போய்க் கேட்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் உங்கள் கட்சியின் சார்பாக ஏன் கேட்டார்கள் என்றுகூடச் சொன்னார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஏன் கேட்டார்கள் என்று யாரும் கேட்கவில்லை. குறைவாகக் கேட்டார்கள் என்று தான் குறைபட்டுக் கொண்டார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : லோன் கொடுப்பதைவிட வாட்டர் போர்டு மூலமாகப் புஞ்சைப் பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். இதை வாட்டர் போர்டு பொறுப்புக்கே ஒப்படைத்தால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நாங்களே இங்கு இருந்து இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், செய்கிறோம்.

திரு. எஸ். வடிவேல் : மழை இல்லாத காரணத்தாலே தஞ்சாவூர் ஜில்லாவில் தாளடி சரியாக விளைச்சல் இருக்காத நிலை இருக்கிறது. ஆகையால் குத்தகை விவசாயிகள் குத்தகை அளக்க முடியாத சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அப்படி குத்தகை அளக்கவில்லை என்றால் கோர்ட்டுக்குச் சென்று நிலத்தை விட்டு வெளியேற்றி விடுவார்கள். அதற்கும் உத்தரவாதம் வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உங்கள் நம்பிக்கைக்கு உரிய நான் இவைகளை எல்லாம் ஆராய்ந்து செய்கிறேன்.

தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட ஏழு லட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன. 2 லட்சத்து 89 ஆயிரம் பம்பு செட்டுகள் இருந்ததை இன்றைக்கு ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் 7 லட்சம் பம்பு செட்டுகள் என்ற அளவுக்கு நாம் உயர்த்தி இருக்கிறோம். மேலும் வேண்டும் என்ற விண்ணப்பங்கள் 1 லட்சத்து 50 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. 74-75-ல் 32 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தர திட்டம் இடப்பட்டு அதில் இதுவரை 16 ஆயிரத்திற்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 75 மார்ச் மாதத்திற்குள் மீதமுள்ள 16 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்புத் தரவேண்டும் என மின் வாரியத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இவை தவிர நான் ஆரம்பத்தில் அறிவித்தபடி 60 ஆயிரம் பம்பு செட்டுகள் அமைப்பதற்கான திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

இப்போது தமிழ்நாட்டில் டீசல் பம்புகள் 91 ஆயிரம் என்ற அளவில் இருக்கின்றன. மேலும் உணவு உற்பத்தி கருதி டீசல் என்ஜின் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று கூறி இருக்கிறேன். இது ஆறு மாதம் ஆகுமா என்று கேட்டார்கள். ஆணை பிறப்பித்து ஆறு நாள் ஆகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டீசல் பம்பு செட்டு வாங்குவதற்கும் நில வள வங்கியில் கடன் வழங்குவதற்கு ஆறு மாதம் ஆகுமோ என்று யாரும் சந்தேகிக்கத் தேவை இல்லை என்று எடுத்துச் சொல்லி இந்தச் சூழ்நிலையில் எல்லா எதிர்க்கட்சிகளும், தோழமைக் கட்சிகளும், பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த அறிவிப்புகளுக்குப் பிறகாவது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

கண்டனத் தீர்மானம்

உரை : 70 **நாள் : 30.10.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! நம்முடைய அருமை நண்பர் மாரிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு.கே.டி.கே.தங்கமணி அவர்களால் வழிமொழியப்பெற்று, இந்த அவையினுடைய விவாதத்திற்கு உட்பட்ட கண்டனத் தீர்மானம் குறித்து, இந்த அவையில் 20க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஆளுங் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாரிமுத்து மெத்தப் பெருந்தன்மை யோடு, கூறிய கருத்துக்கள் நம்மாலே ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளா அல்லவா என்ற நிலைமை இருந்தபோதிலும், தன்னுடைய கருத்துக்களை நெகிழ்வோடு கூறினார்கள். வழிமொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. தங்கமணி அவர்கள், மிக்க நிதானமாக இந்தக் கண்டனத் தீர்மானத்தில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, மாநில அரசின் மீது அவர் காட்ட வேண்டிய குற்றங்கள் என்றாலும், அல்லது மத்திய அரசின் போக்கில் அவருக்குப் பிடிக்காத அம்சங்கள் இருந்தாலும் அவைகளையும் மிக்க நிதானமாக இந்த மன்றத்திலே இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்ததன் மூலம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று அதற் கான மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு, பொதுவாகத் தீர்மானம் தருவதற்கு, அதிலும் குறிப்பாக இதுபோன்ற தீர்மானம் வருவ தற்கு எத்தனை உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள் என்கிற எண்ணிக்கையின் அடிப்படைக்குத் தாங்கள் உதவியதாகக் கூறி,

ஆனால் கண்டனத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துக்களை, நம்முடைய அகில இந்திய நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், சட்டப் பேரவை சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் நண்பர் வெங்கடசாமி அவர்களும் நடுநிலையோடுதான் தாங்கள் இந்தத் தீர்மானத்திலே இருக்கப் போவதாகச் சொல்லி, மிக உருக்கமான, ஆனால் உண்மைகள் கோடிட்டுக் காட்டப்பட்ட வகையில் தங்களுடைய உரையை நிகழ்த்தி இருக்கிறார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞராக நின்று சட்ட நுணுக்கங்களை மாத்திரம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியினுடைய தோழமைக் கட்சிகளாக இருக்கிற முஸ்லீம் லீக், ஃபார்வெர்டு பிளாக், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவைகளின் சார்பிலே பேசிய அருமைத் தலைவர்களும் உறுப்பினர்களும் இந்தக் கண்டனத் தீர்மானம், எந்த வகையிலே தேவையற்றது என்பதற்கான நல்ல பல விளக்கங்களை எல்லாம், இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானத்தினுடைய வாசகமே அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு அதன் தொடர்பாக இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சர் மதிப்பு மிகுந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் அறிவிக்கப்பட்ட 20 அம்சத் திட்டத்தைத் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்கின்ற குற்றச்சாட்டை அடிப் படையாக வைத்துத்தான் கண்டனத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலிலே 10 அம்சத் திட்டங்கள் எவை எவை என்பதை நாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பும், அவைகளை இந்த ஆட்சி ஏற்கெனவே நிறைவேற்றத் தொடங்கியுள்ளதா அல்லவா என்பதற்கான விவரங்களை ஆராய்வதற்கு முன்பும், இதற்கு முன்னோடியாகச் சில கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே மத்திய அரசின் சார்பிலே அறிவிக்கப்பெற்று, ஏறத்தாழ 25,000 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்காக அறிவித்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவு ஏடுகள் எல்லாம் தயாரிக்கப்பெற்று, இந்திய நாட்டின் தலைநகரத்தில் இந்தியாவிலுள்ள எல்லா மாநில அமைச்சர் களும் கலந்துகொள்ளும் தேசிய வளர்ச்சிக் கூட்டமும் நடைபெற்று, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது என்றும் அறிவிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டித் திட்டத்திற்கு நான் முதலிலே சுட்டிக்காட்டியதைப் போல 25,000 கோடி ரூபாய் மொத்தத் தொகையாக ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் நம்முடைய தமிழ் மாநிலத்தை மாத்திரம் கணக்கிலே எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் தரப்பட்ட மத்திய அரசினுடைய உதவி (சென்டரல் அசிஸ்டன்ஸ்) என்ற அந்தத் தொகையிலே எடுத்துக்கொண்டு பார்த்தால் ஏறத்தாழ ஐந் தாண்டுக் காலத்தில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு தரப்பட்டிருக்கிறது.

ஒன்றை உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. இந்த 200 கோடி ரூபாயில் 70 சதவீதம் கடனாக நாம் திருப்பித்தர வேண்டும். அதைத் திருப்பித் தருவது எப்படி என்றால் அடுத்த ஆண்டு 40 கோடியோ, 50 கோடியோ தரும்போது, நாம் திருப்பித் தரவேண்டிய கடனைக் கழித்துவிட்டுத்தான் மீதத்தைத் தருவார்கள். அந்த வகையிலே நாம் அந்தக் கடனைத் திருப்பித் தந்தாக வேண்டும். இப்படி ஐந்தாண்டுக் காலத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆண்டுத் திட்டத்திற்காக மத்திய அரசு 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் தந்தது சற்றொப்ப 200 கோடி ரூபாயாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு கோடி ரூபாய்க்கு அறிவிக்கப்பட்டது என்றால், இது 'பிக்ஸட் பிளான் மிகப் பெரும் திட்டம். பிரம்மாண்டமான திட்டம்' என்றெல் லாம் அதற்குத் தலைப்புகள் கொடுத்து, 53,000 கோடி ரூபாய் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று அறிவிக்கப்பட்ட போது, நாம் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். ஏனென்றால் இரண்டு மடங்குக்கு மேலே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தொடங்குகிறது. ஆகவே, மாநிலங்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட இயலும் என்றெல்லாம் எண்ணினோம்.

இந்த 53,000 கோடி ரூபாய் திட்டம், அதற்கான வரைவு என்.டி.சி. கூட்டத்திலே தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. முதலமைச்சர் எல்லாம் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னோம். இப்படி விவாதித்து இரண்டாண்டுக் காலம் ஆகிறது. இந்த இரண்டாண்டுக் காலத்திற்குப் பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய கதி என்ன என்று தெரியவில்லை.

ஐந்தாண்டுத் திட்டம் ஒவ்வோராண்டுத் திட்டம் என்கின்ற வகையிலேதான் இன்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிதியை ஒதுக்குகின்ற அளவு சுருங்கிப் போயிருக்கிறது. இந்த 53,000 கோடி ரூபாயை, அந்த இலக்கை அடைய முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத் திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ, அந்த அளவு தொகைதான். இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் நம் முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக...

1974-75ஆம் ஆண்டுக்கு 41 கோடி ரூபாயும்,

1975-76ஆம் ஆண்டுக்கு 41 கோடி ரூபாயும்

மீதி இருக்கிற மூன்று வருடங்களுக்கும் இதே நிலையில்தான் அவர்கள் நிதியை ஒதுக்கீடு செய்வார்களானால் ஐந்தாண்டுக்கு மொத்தம் 200 கோடி ரூபாய்தான் கிடைக்கும்.

ஆக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 25,000 கோடி ரூபாய் இருக்க, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 53,000 கோடியாக, இரட்டிப்பாக ஆக்கப்பட்டுப் பிரம்மாண்டமான திட்டம் என்று பெரும் தலைப்புகளிலே வெளியிடப்பட்ட பிறகு, அந்தத் திட்டத்திற்கு நாம் ஏறத்தாழ 400-லிருந்து 500 கோடி ரூபாய் வரை மத்திய நிதி உதவியாக (சென்ட்ரல் அசிஸ்டன்ஸ் கடனாகவும், மானியமாகவும் பெற வேண்டிய, தொகைக்கு மாறாக 200 கோடி ரூபாய்தான் பெற இருக் கிறோம். ஆக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்போலதான் இருக்கிறது. அவர்கள் அறிவித்த திட்டத்தின் கதி என்ன? அது என்னவாயிற்று? அந்தக் காட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே திரை விழுகிறது நடைபெறவில்லை. அப்படியானால் ஐந்தாவது ஐந்தாண்டுக் காலத்திலே 'ரோட் சீன்' வருவதைப்போல திரை விழுகிறது. 20 அம்சத் திட்டம் என்று அறிவிக்கப்படுகிறது. ஆக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காட்சி மறைகிறது. 20 அம்சத் திட்டம் என்கின்ற புதிய காட்சி வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பலன்களை, ஒவ்வொரு மாநிலமும் மிகு நிதி பெற்று, அதாவது மிகுந்த நிதியைப் பெற்றுத் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றலாம், மாநில வளர்ச்சியைப் பெருக்கலாம் என்று எண்ணியிருந்த நேரத்தில், அது என்னவாயிற்று என்ற கேள்விக்கு, எந்தவிதமான பதிலும் இல்லாமல், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு விவாதிக்கப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை எங்கோ ஒரு உலையில் போட்டுவிட்டு, இப்போது 20 அம்சத் திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள்.

இந்த 20 அம்சத் திட்டம் கூட 1967-ஆம் ஆண்டு காங் கிரஸ் கமிட்டி மே மாதத்திலே கூடி, 10 அம்சத் திட்டம் என்று ஒன்றை அறிவித்தார்கள். நம்முடைய நண்பர் சுப்பு அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது குறிப்பிட்டார்கள். அரசியல் சட்டத்திலே முகப்புக் குறிக்கோள்களிலே எவை எவை இருக் கின்றனவோ அவைகள்தான் இப்பொழுது 20 அம்சமாக உருவெடுத்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

அதற்கிடையே 1967-இல் 10 அம்சத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். அவை என்னென்ன?

பாங்குகளைத் தேசீய மயமாக்குதல் -ஒன்று
இன்ஷூரன்ஸை தேசீய மயமாக்குதல் -இரண்டு
மன்னர்மானியத்தை ஒழித்தல் -மூன்று
கிராமத்திட்டம், நிலச்சீர்திருத்தம் -நான்கு
நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு -ஐந்து
மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் -ஆறு
ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல் -ஏழு
கூட்டுறவுத்துறையை விரிவுபடுத்துதல் -எட்டு
உணவு வாணிபத்தை அரசே மேற்கொள்ளுதல் -ஒன்பது
ஏற்றுமதி, இறக்குமதியில் பொருள்வாரியாக முன்னேற்றம் காணுதல் -பத்து

என்று இந்த பத்து அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட இவை களில் எவை எவை நிறைவேற்றப்பட்டன? நிறைவேற்றத் தொடங்கி எவை எவை இடையிலே முறிந்து போயின என்பதை மறந்துவிடக் கூடாது.

பாங்குகள் தேசியமயமாக்கப்படும் என்று அறிவித்தார்கள். 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. அதற்குமேல் அடி யெடுத்து வைக்கவில்லை; அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்ஷூரன்ஸ் தேசியமயமாக்கப்பட்டது.

மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது.

கிராமத் திட்டம், நிலச் சீர்திருத்தம்- இது இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற 20 அம்சத் திட்டத்தில் ஒன்று.

நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு- இதுவும் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற 20 அம்சத் திட்டத்தில் ஒன்று.

ஆறாவது திட்டமாக அன்றைக்குச் சொன்னது மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல். இது பொதுவானது.

மக்கள் அடிப்படைத் தேவைகள் என்னென்ன என்று எதுவும் குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒன்று.

ஏழாவதாகச் சொல்லப்பட்டது ஏகபோக உரிமைக்கு கட்டுப்பாடு செய்தல். அது என்ன காரணத்தாலோ இந்த 20 அம்சத் திட்டத்தில் இடம்பெறவில்லை. 10 அம்சத் திட்டத்தில் இடம்பெற்ற அந்த பரபரப்பான ஏழாவது அம்சம், இப்போது வெளியிடப்பட்ட 20 அம்சத்தில் இல்லை. அதாவது ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல் என்ற அந்த அம்சம் இது.

கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல் என்பது 1967லேயே அறிவிக்கப்பட்டபோதும் சரி, அதற்கு முன்பும் சரி நம்முடைய தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் துறை விரிவு படுத்தப்பட்டு மேலும், மேலும் அது இன்றைக்கு விரிவு படுத்தப்பட்டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், இப்போது அவர்கள் இந்த 20 அம்சத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையை விட்டுவிட்டு அதற்குப் பதிலாக ரூரல் பாங்க் என்கிற ஒரு புதிய அம்சத்தைச் சேர்த்திருக்கிறார்கள். பத்து அம்சத் திட்டத்தில் உணவு வாணிபத்தை அரசு மேற்கொள்வது என்பது ஒன்பதாவது அம்சம் ஆகும். இது 1967-மே மாதத்தில் வெளியிடப்பட்ட ஒன்பதாவது அம்சம். அதன்படி கோதுமை வியாபாரத்தை அரசு மேற்கொண்டது. அரசு மேற்கொண்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் அது சரிப்பட்டு வரவில்லை என்பதால் அந்த அம்சத்தைக் கைவிட்டு விட்டது. உணவு வாணிபத்தை அரசு ஏற்று நடத்தவேண்டுமென்பதற்கு முதல் கட்டமாகக் கோதுமை வியாபாரத்தை நடத்தத் தொடங்கி அவர்களே கைவிட்டு விட்டார்கள். பிறகு ஏற்றுமதி இறக்குமதி யில் பொருள்வாரி முன்னேற்றம் என்பதாகும். அதுவும் முழுமையாகச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தப் பத்து அம்சத் திட்டத்திற்குப் பிறகு, இன்று இருபது அம்சத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டத்தை நாங்கள் ஏற்று நடத்தவில்லை அல்லது எதிர்க்கிறோம் என்றெல்லாம் தவறான குற்றச்சாட்டு சொல்லப்படுகிற நேரத்தில் பத்து அம்சத் திட்டத்திற்குத்

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஆதரவை அளித் திருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகளை நாம் காண முடியும்.

Dr. H.V. Hande: I am sorry for interrupting. Before the Hon. Chief Minister goes to the next subject, I want to make one point. The Hon. Chief Minister said that the Fifth Five-Year Plan was dropped and in its place the 20 Point Programme came. My information is that this 20 Point Programme is in addition to the Fifth Five-Year Plan and it is not in the place of the Fifth Five-Year Plan. The Fifth Five-Year Plan will continue yearwar or five year war. The 20 Point Progrmme is in addition to the Fifth Five-Year Plan. There can be no contradiction between the two-, the 20 Point Programme and the Fifth Five-Year Plan...

திருமதி. த.ந.அனந்தநாயகி: இந்தப் பத்து அம்சத் திட்டத்தைத் தப்பாகச் சொல்லுகிறீர்கள். மக்களின் பேசிக் நீட்ஸ், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இதை ஏன் விரிவாகச் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. கடைசியில் 'இம்போர்ட் அண்டு எக்ஸ்போர்ட்' வியாபாரம். அதை எஸ்.டி.சி. செய்கிறது. அவர்கள் கொள்கைகளை அமல் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

Dr. H.V. Hande: This 20 Point Programme is not in lieu of the Fifth Five-Year Plan, but this is in addition to the Fifth Five-Year Plan.

நான் இதைத்தான் தெளிவுபடுத்தினேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மக்களின் அடிப் படைத் தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க உறையுள் என்பதை எல்லாம் நன்கறிவேன். குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. பொதுவாக 'வேக்' ஆகச் சொல்லப்பட் டிருக்கிறது என்றுதான் சொன்னேன். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியென்றால் இப்போது ஒவ்வொன்றிற்கும் தனியாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது? இருபது அம்சத் திட்டத்தில் அந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதைத்தான் விளக்கிச் சொல்லி

யிருக்கிறார்கள். நாங்கள் பத்து அம்சத் திட்டத்தைக்கூட எதிர்க்க வில்லை. 'இன்னும் சொல்லப் போனால், இந்தப் பத்து அம்சத் திட்டத்தை அது அறிவிக்கப்பட்டபோது, நாங்கள் ஆதரித்த வர்கள். பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டபோது, எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு, 14 வங்கிகளைத் தேசிய மாக்கிய இந்திராகாந்தி அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்துப் பரிசாகக் கூட 14 பொருள்களை அவர்களிடம் வழங்கினோம். இப்போது அங்கே அமர்ந்திருக்கிற அனந்த நாயகி அம்மையார் போன்றவர்கள்கூட வேறு கட்சியில் இருந்து, அதைப் பார்த்து ஆத்திரப்பட்ட நேரத்தில், நாங்கள் இந்திராகாந்திக்கு வழங்கினோம்.

திருமதி. த.ந. அனந்தநாயகி: உங்கள் கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் ஒருவரால்தான் அரசியல் சிக்கலே வந்தது என்பதை ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 53 ஆயிரம் கோடி ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. அதற்குத் துணையாக மேலும் உதவிகர மாக இந்த 20 அம்சத் திட்டம் இருப்பதாக டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் திரை போட்டுவிட்டு 20 அம்சத் திட்டம் என்ற ரோட் சீன் போடப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட ரூ. 53 ஆயிரம் கோடி என்ன ஆயிற்று? அதுதான் என்னுடைய கேள்வி. அதைப் புரிந்துகொண்டால் அத்தோடு இது இணையவில்லையென்று புரிந்து கொள்ளலாம். ரூ. 53 ஆயிரம் கோடிக்குத் திட்டம் போட்டு அந்தத் தொகையை மாநிலங்களுக்குக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் 20 அம்சத் திட்டத்தைப் பிரகடனம் செய்துவிட்டு, இதற்கு மாநிலங்களுக்கு ஆகின்ற செலவை எப்படித் தரப்போகிறார்கள் என்பதுதான் எனது அடுத்த கேள்வியாகும். அந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் நான் இதைத் தெரிவித்தேனேயல்லாமல் வேறு அல்ல.

இருபது அம்சத் திட்டங்கள் எவை எவை என்று ஒரு ஐந்தாறு திட்டங்களை மட்டும் இங்கே பேசிய மாண்புமிகு

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். முதல் திட்டமாக இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், வழங்கு பணியைச் சீரமைக்கவும் அரசு பல தொடர்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்பதே பிரதமர் வானொலியில் அறிவித்த முதல் திட்டமாகும். இது 20 அம்சத்தில் ஒரு அம்சம். நம்முடைய தமிழக அரசு இதில் கவனம் செலுத்தியதா இல்லையா? இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகுதான் கவனம் செலுத்தத் தொடங்கியதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு ஜூன் திங்கள் தொடங்கி நிலவி வருகின்ற வாய்ப்பான பருவ மழையின் நிலைகளையொட்டி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்களே அந்த உற்பத்தி முனையில்கூட பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு விதை நெல் அளவு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது என்றால் இதுவரை 9,500 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

நடப்பு வேளாண்மைப் பருவத்தில் 18 ஆயிரம் டன் விதை நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிப்பதன் மூலம் அந்தத் திட்டத்திற்கு அனுசரணையாகத் தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றனவேயல்லாமல் எதிரான காரியங்கள் நடைபெற வில்லை இங்கே, என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

புதிய நெல் வகைகளாக ஏ.டி.டி. 31, பூசா 53 ஆகிய அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஏ.டி.டி. 31 பயிரிடப் படும் நிலப்பரப்பு 130 ஆயிரம் ஏக்கர் அளவிலும், பூசா 33 பயிரிடப்படும் நிலப்பரப்பு 56 ஆயிரம் ஏக்கர் என்ற அளவி லும் பயிரிடப்பட்டுள்ளது.

உரம், வேளாண்மை உற்பத்திக்கு மிக முக்கியமானது. பொதுவாக, ஒரு ஆண்டுக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு இதுவரையில் நமக்கிருந்த கஷ்டங்களின் காரணமாக 20,520

டன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஆகஸ்டு வரையில் மட்டும் வழங்கப்பட்ட ரசாயன உரத்தின் அளவு 25,123 டன். இன்னும் மேலும் சம்பாப் பயிருக்கெல்லாம் வழங்க இருக் கிறோம். ஆகவே அந்த உரத் தட்டுப்பாடும் இல்லை. உற்பத்தி முனையில் நாம் தீவிரமாகவே இருக்கிறோம்.

அதைப்போல் பூச்சிகளால் ஏற்படுகிற தொல்லையைக் கட்டுப்படுத்தவும், அதை அறவே நீக்குவதற்கும், தெளிப்பான் களின் எண்ணிக்கையை உயர்த்தி அந்த முனையிலும் அலுவலர்கள், அயராது பணியாற்றியிருக்கிறார்கள்.

பயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறோம். வறட்சி நேரத்தில் விவசாயிகளுக்கு உதவுகிற வகையில் டீசல் இன்ஜின்கள் வைத்துக் கொண்டால் அவர் களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்து, அப்படி இன்ஜின்களை வாங்கியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியதன் மூலம், இதுவரையில் 12,200 பேர் பயன் பெற்றிருக்கின்றனர். ஏற்கெனவே அறிவித்தபடி 15,000 பேருக்கு இந்தப் பயன் செல்லத்தக்க வகையில் நாம் ரூ. 150 லட்சம் அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இந்த மானிய உதவி எவ்வளவு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றாக அறிவர். உற்பத்தி வகையில் பெருக்கப்பட வேண்டுமென்று பிரதமர் அவர்கள் அறிவித்ததால் இவைகளை யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்குக்கூட கொஞ்சம் உற்சாகமான விஷயமாக இராது. ஆனாலும் விளக்கம் தேவை என்பதற்காக இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோள விதைகள் மட்டும் இந்த ஆண்டில் கோடைப் பருவத்தில் கோவை, நெல்லை, மதுரை, சேலத்தில் ஒரு பகுதி ஆகிய மாவட்டங்களில் 500 டன் வீரிய ஒட்டுச் சோள விதை களும் மக்காச் சோள வகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக 1974-75ல் உற்பத்தியான அரிசி 41,66,001 டன்னாக பல இயற்கை நிலைமைகளின் காரணமாக இருந்தது. இந்த ஆண்டு

இயற்கை பொய்த்துவிடாது. இந்த ஆண்டும் சென்ற ஆண்டைப் போல் கொடுமை புரிந்துவிடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையின் பேரில் 1975-76ல் எதிர்பார்க்கப்படும் அரிசி உற்பத்தி, கடந்த ஆண்டு 41,66,001 டன்னாக இருந்தது மாறி, 61 லட்சம் டன் அரிசியாக இருக்கும்.

சோளம், கம்பு, மக்காச்சோளம் ஆகியவற்றிலும் 1974-75ல் 14,000 டன் உற்பத்தி இருந்ததற்கு மாறாக 1975-76ல் எதிர் பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு 17 இலட்சம் டன்னாகும்.

பருத்தி 1974-75இல் 2,20,000 பேல்கள் என்ற அளவுக்கு உற்பத்தியாயிற்று. அது வருகிற 1975-76இல் ஏறத்தாழ 4 லட்சம் டன்கள் என்ற அளவுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, நிச்சயமாக உற்பத்தியில் ஒரு வளர்ச்சியைக் காட்டும்.

கரும்பைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கே.டி.கே. தங்கமணி அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். நேற்றைய தினம் கூட இந்திய சர்க்காரில் இருந்து எழுதப்பட்ட கடிதங்கள் வந்திருக்கின்றன. அதில் லெவி சர்க்கரை விலையை உயர்த்த இயலாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படி உயர்த்த இயலாது என்று சொல்லியிருப்பது அகில இந்திய அளவிலா என்றால் இல்லை. வடபுலத்தில் இருக்கிற மாநிலங்களுக்கு, உயர்த்தித் தரப்படும், ஆனால் நம்முடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள். இதன் காரணமாகக் கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதனையும், இதன் காரணமாகக் கரும்பு சாகுபடி குறையும் என்பதனையும், தவிர்க்க முடியாத சில கஷ்ட நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதனையும் இந்த நேரத்தில் நான் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது.

திரு.கே.டி.கே. தங்கமணி: சர்க்கரை விலை சம்பந்தமாக லெவி சர்க்கரை என்றும், லெவிக்கு அப்பாற்பட்ட சர்க்கரை என்றும் இருப்பது சரியல்ல என்பது எங்களுடைய பொதுவான நிலை. அதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள். லெவி

சர்க்கரை விலை நிர்ணயம் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகா ஆகியவற்றில் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இரண்டுக்கும் ஒரே விலை இருக்கவேண்டுமென்ற நிலையை அரசு இங்கு எடுக்குமானால், அதை ஆதரிக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் இதை மகிழ்ச்சி யோடு வரவேற்கிறேன். அதனால்தான் திரு. தங்கமணி அவர்கள் நிதானமாக நியாயங்களை உணர்ந்து பேசினார்கள் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன்.

திரு. பெ. சீனிவாசன்: அந்தக் கோரிக்கையை மத்திய சர்க்கார் நிராகரிக்கக் காரணம் ஏதாவது இருக்கிறதா? காரணங் களைக் கேட்டார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இப்போதுதான் காரணங்களை எதற்கும் கேட்கக்கூடாதே.

திருமதி த.ந. அனந்தநாயகி: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். எதற்கும் கேட்கக் கூடாது என்று யாரும் சொல்ல வில்லை. குதிரைக்குக் குர்ரம் என்றால் யானைக்குக் அர்ரம் என்று சொல்லாதீர்கள். எதற்குக் கேட்க வேண்டும், எதற்குக் கேட்கக் கூடாது என்கிற வரையறை இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அந்த வரை யறையை உங்களுக்குத் தேவையானதற்கு நீங்கள் பொருத்திக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தேவையானதற்கு நாங்கள் பொருத்திக் கொள்கிறோம்.

தலைவர் அவர்களே! கடுமையான வறட்சி நிலைமை இருந்த நேரத்தில்கூட நம் தமிழகத்தில் உள்ள மொத்தம் 98 லட்சம் குடும்பங்களில், 52 லட்சம் குடும்பங்களுக்கு நாம், போதிய உணவு தர முடியாவிட்டாலும், ஓரளவு அரிசி வழங்க முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகளாகத் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தின் சார்பிலும், கூட்டுறவுச் சங்கங்கள் சார்பிலும், உள்ளாட்சி மன்றங்கள் நடத்துகின்ற சில்லறை விற்பனைக்

கடைகள் மொத்தம் 1926 நிலையங்களின் சார்பிலும் நாம் இந்த விநியோகத்தை, 12 லட்சம் குடும்பங்களுக்கு அரிசி வழங்குகிற இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்தோம்.

நகர்ப் பகுதிகளில், 500 ரூபாய்க்கு மேல் மாத வருமானம் உள்ளவர்களுக்குக் குறிப்பாக, சென்னை, கோவை போன்ற நகரங்களில் மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டு வந்தது. அதை இப்போது 20 கிலோவாக உயர்த்தியிருக்கிறோம். அதோடு மாத்திரமில்லை. திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கும் இந்தத் திட்டத்தை முதல் கட்டமாக நாம் விரிவுபடுத்தியிருக்கிறோம்; பிரதமர் அறிவித்த முதல் அம்சத்திற்கு நான் அளித்த விளக்கம் இது.

இரண்டாவது அம்சம், நில உச்சரவரம்பு. ''நமது மக்களில் மிகப் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். நில உச்சவரம்புச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்திச் சிலரிடம் உபரியாக இருக்கும் நிலங்களை எடுத்து, நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். நில உடைமை ஆவணங்களைத் தயாரித்து முடிப்பதில் உள்ளூர் மக்களின் உதவி நமக்குத் தேவையாகும்'' என்பது பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அறிவிப்பாகும்.

இந்த இரண்டாவது அம்சமாகிய உபரி நிலங்களை எடுத்து வழங்குவதில், நாம் தீவிரக் கவனம் செலுத்தி ஏற்கெனவே உபரி நிலங்களை எடுத்து வழங்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

''நூறு புதிய சாதனைகள்'' என்று ஒரு புத்தகம் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதில் இந்த விவரம் தவறாக இருக்கிறது. அதில், அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு எல்லா மாநிலங்களும் நில விநியோகத் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது என்று சொல்லி, அதில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில்கூட 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி பத்து லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகம் செய்யவில்லை. 10 லட்சம் ஏக்கரை விநியோகம் செய்ய முடியுமா என்றால் கூட இயலாது. அதுவே எப்போது தெரியுமா? அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு,

தமிழ்நாட்டில் 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது; இது என்ன மாயா பஜாரா? (சிரிப்பு)

டாக்டர் எச்.வி. ஹாண்டே: எதிலே?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நூறு புதிய சாதனைகள் என்ற புத்தகம் (தமிழில்) பக்கம் 21இல்.

அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு எல்லா மாநிலங் களும் நில மறு விநியோகத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி யுள்ளன. கேரளாவில் 1,30,000 ஹெக்டார் நிலம் 3,28,500 நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவும் சரியாக இருக்க முடியுமா என்றால் முடியாது. கேரள அரசாங்கத்தைக் கேட்டால்தான் இல்லையென்று சொல்லுவார்கள். தமிழ்நாடு 10 லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்துள்ளது என்று கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 10 லட்சம் ஏக்கர் கொடுக்கவில்லை.

டாக்டர் எச்.வி. ஹண்டே: ப்ரிண்டர்ஸ் மிஸ்டேக்காக இருக்கும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ஒன்று போட்டு பக்கத்தில் சைபர்களாகப் போட்டிருந்தால் ஒரு சைபர் அதிக மாகக்கூடப் போய்விட்டதோ என்று நினைக்கலாம். ஆனால் இதிலே பத்து என்று எண்ணினால் எழுதி, அதன் பக்கத்தில் லட்சம் என்று எழுத்தால் போடப்பட்டிருக்கிறது.

திருமதி த.ந. அனந்தநாயகி: இந்தத் தகவலையே தவறாக தமிழக அரசுதான் கொடுத்திருக்கும். இது உங்கள் தவறாகவே இருக்கலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இப்படித் தவறாக நாங்கள் வேண்டுமென்றே கொடுத்திருந்தால், பார் பார் தமிழ் நாட்டில் பத்து லட்சம் ஏக்கரா கொடுத்திருக்கிறோம் என்று நாங்கள் ஜம்பம் அடித்துக் கொண்டிருக்கலாம்.

ஆகவே, சில ''நூறு புதிய சாதனைகள்'' என்கிற புத்தகம் இந்தத் தகவலைத் தருகிற காரணத்தால், இதை நான் மேற் கோளாக எடுத்துக்காட்ட விரும்பவில்லை. அதற்காக மத்திய

அரசு என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

1967-க்கு முன்பு 6.4.60இல் நமது மாநிலத்தில் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் வந்த பிறகு 7 ஆண்டுக் காலத்தில் உபரியாக இருப்பதாக அறி விக்கப்பட்ட நிலம் 24,194 ஏக்கர். திரு. மாரிமுத்து அவர்கள் தொடர்ந்து செய்துவரப்பட்டதன் விளைவு என்று சொன்னாரே, அதற்காகச் சொல்கிறேன்; 1967க்கு முன்பு தமிழ்நாட்டில் உபரியாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலம் 24,194 ஏக்கர். இதில் அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கர். நிலமற்ற ஏழை களிடம் ஒப்படை செய்யப்பட்டது எவ்வளவு தெரியுமா? ஒன்றுமே இல்லை. உபரி நிலம் யாருக்கும் வழங்கப்பட வில்லை. இந்த நிலங்கள் நிலமற்ற எவருக்கும் ஒப்படை செய்யப்படாத காரணத்தினால் பயன் அடைந்தவர்கள் புள்ளி விவரம் சொல்ல இயலாது.

1967க்குப் பிறகு உபரி நிலங்கள் என்று அறிவிக்கப் பட்டது மொத்தம் 1,08,068 ஏக்கராகும். இதில் அரசு கைப் பற்றிய நிலம் 88,146 ஏக்கர். இதில் 62,682 ஏக்கரா நிலமற்ற ஏழைகளிடம் ஒப்படை செய்யப்பட்டுவிட்டது. இதனால் பயன் அடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர்கள். இதுதான் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா ஒரு குடும்பத்திற்கு என்று நாம் கொண்டு வந்த உச்ச வரம்புச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக ஏற்பட்ட பயனாகும். அந்தச் சட்டத்தை நாம் 15.2.1970இல் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த வேகமான நடவடிக்கைகளின் காரணமாக 62,682 ஏக்கரா நிலமற்றவர்களிடம் ஒப்படை செய்யப் பட்டிருக்கிறது.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட, ஓ, இல்லை- ஆளுங் காங்கிரஸ் கமிட்டி, ஒரு நல்ல மதிப்புரையை, இந்தியா வில் நில உச்சவரம்பில், நிலச் சீர்திருத்தத்தில் தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னணியில் இருக்கிறது என்கின்ற நற்சான்று அளித்திருக்கின்றது.

இதில் திரு. கே.டி.கே. பேசும்போது பழத்தோட்டம் போன்றவற்றுக்கு இருக்கிற விதிவிலக்கை நீங்கள் இன்னும் எடுக்கவில்லையே என்று கேட்டார்.

நம்முடைய மாநிலத்தில் பழத்தோட்டங்களின் மொத்த விஸ்தீரணமே 18,169 ஏக்கர்தான். எல்லாப் பழத்தோட்டங் களையும் சேர்த்து இந்தப் பழத்தோட்டங்களுக்கும் உச்சவரம்பு என்று கொண்டுவந்தால், அதனுடைய உற்பத்தி, கெடுவதோடு, வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும், அனுப்பப் படுகிற ஏற்றுமதியும் பாதிக்கப்படும். அதுவும் 18 ஆயிரம் ஏக்கராதானே விஸ்தீரணம்; குறைவாக இருப்பதால் விட்டு விட்டோம்.

அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மைசூரில் கூட ஒரு ஆயிரம் ஏக்கராவிலே வாசனைப் பொருள் என்ற செடி வளர்க்கப்படுகிற இடம் இருக்கிறது. தேவிகாராணி என்கிற பழைய சினிமா நட்சத்திரம் ஒருவருக்குச் சொந்தமான இடம், அந்த ஆயிரம் ஏக்கராவில் வாசனைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதற்காக அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆயிரம் ஏக்கராவில்தான் வாசனைச் செடி உற்பத்தி செய்வதனால், அந்தப் பூமி அதற்கு ஏற்றதாக இருப்பதனால், அந்த வாசனைப் பொருளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதற்காக, வெளி நாட்டுச் சந்தை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, அங்கே அந்த ஆயிரம் ஏக்கராவுக்கு விதிவிலக்கு கர்நாடகத் தில் அளித்திருப்பதைப் போலத்தான், இங்கும் பழத் தோட்டங் களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு இல்லை.

நாம் எத்தனை விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். கரும்பாலை நிலத்திற்கு விதி விலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம். அதைப் போலவே மேய்ச்சல் நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம். பால்பண்ணை நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது. அதனை ரத்து செய்திருக்கிறோம்.

பொது அறக்கட்டளைக்கு ஒரு வரம்பு வைத்து விட்டோம். அந்த வரம்பு ஆந்திரத்தில் கிடையாது. கேரளாவில் கிடையாது. பொது அறக்கட்டளைகள் அங்கே எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றின் வருமானம் அந்த அறக்கட்டளைகளுக்கே செலவிடப்பட வேண்டும். இது அங்கே. இங்கே நாம் பொது அறக்கட்டளைகள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்ணயித்து, அதில் வருகின்ற வருமானம் அந்த அறக்கட்டளைக்கே செலவிடப்பட வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். அதுவும் 1.3.72இல் என்னென்ன அறக்கட்டளைகள் இருந்தனவோ அந்த அறக்கட்டளை களுக்குத்தான் அது பொருந்தும். அதற்குப் பிறகு புதிதாக அறக்கட்டளைகள் தோன்றி, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று சட்டம் செய்திருக்கிறோம். அதுவும் இன்னின்ன அறக்கட்டளைக்கு இவ்வளவுதான் நிலம் என்று திட்டவட்டமாகச் செய்திருக்கிறோம்.

இந்தப் பொது அறக்கட்டளைகளில், கல்லூரி என்றால் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது. உயர்நிலைப்பள்ளியாக இருந்தால் 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர், ஆரம்பப் பள்ளியாக இருந்தால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர், மாணவர் விடுதியாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், தொழில் கல்விக்கூடமாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், விவசாயப் பள்ளியாக இருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், அநாதை இல்லத்திற்கு 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர், அதர் டிரஸ்ட்ஸ், மற்ற அறக்கட்டளைகளுக்கு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ணயித்து இருக்கிறோம்.

அடுத்து, குத்தகைச் சாகுபடிதாரர்களுக்கு ஆவணங்கள் வேண்டும், பதிவு செய்கின்ற முறை வேண்டுமென்று பிரதமர் அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் அதையும் செய்திருக்கிறோம். அவர்கள் அறிவிப்புக்குப் பிறகு அல்ல, 1969ஆம் ஆண்டிலே தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதி வேட்டுச் சட்டத்தை நாம் இந்த மன்றத்திலே நிறைவேற்றி யிருக்கிறோம். இதுவரையில் இப்படிப் பதிவு செய்த குத்தகை தாரர்களின் எண்ணிக்கை 3,99,350 என்றும் இவர்களது

அனுபோகத்தில் உள்ள நிலம் 6,03,899 என்றும் கணிக்கப் பட்டுள்ளது.

அஃதன்னியில் நிலவுடமையாளர்கள் வைத்திருக்கின்ற நிலத்தின் கணக்கு விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் மேலும் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றுவதற்கும் பயன் படும் என்ற வகையிலே பட்டா விவரக் குறிப்பேடு என்ற ஒன்றை ஒவ்வொரு விவசாயியும் வைத்துக்கொள்ள வேண்டு மென்ற முறையிலே 1972ஆம் ஆண்டு, இருபது அம்சத் திட்டத்திற்கு முன்பே, 1972ஆம் ஆண்டிலேயே திட்டம் கொண்டுவரப்பட்டு, இதுவரை கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட பட்டா விவரக் குறிப்பேடுகள் 1 கோடியே 4 லட்சம் பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதற்கான செலவு ஒரு கோடி ரூபாய் என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரிசு நிலங்களை ஒப்படை செய்ய வேண்டுமென்பது பிரதமர் அவர்களுடைய 20 அம்சத் திட்டங்களிலே ஒன்று. 1947இல் இருந்து நாடு சுதந்திரம் பெற்ற பிறகு 1967ஆம் ஆண்டு வரையில் தமிழ் மாநிலத்திலே ஒப்படை செய்யப்பட்ட நிலம் இரண்டு லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர். இதனால் பயனடைந்தவர்கள் 1 லட்சத்து 15 ஆயிரம் பேர்கள். இருபது ஆண்டுக் காலத்திலே, இரண்டு லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர். 1967-க்குப் பிறகு இந்த எட்டாண்டுக் காலத்திலே 7,19,173 ஏக்கர் நிலம் நம்மால் ஒப்படைவு செய்யப்பட்டிருக்கிறது. இருபது ஆண்டுகளில் 1,15,000 பேர்கள் பயனடைந்திருக் கிறார்கள். இந்த எட்டு ஆண்டுகளில் 3,68,679 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

இந்த உச்சவரம்பிலே ஏதோ பினாமியெல்லாம் நடந்து விட்டதாக நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒன்றிரண்டு நடந்தது, இன்னும் சில அந்தக் காலத்திலேயே நடந்துவிட்டது. மிகவும் முக்கியமான அமைச் சருடைய சொந்தக்காரரிடம், நான் பெயரைச் சொல்ல விரும்ப வில்லை; 282 சாதாரண ஏக்கர், அதாவது 141 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வரும்; 141 ஸ்டாண்டர்டு ஏக்கர் 6.4.60இல் இருந்தது. ஆனால் 2.10.62க்குள்ளாக இந்த 141 ஸ்டாண்டர்டு

ஏக்கரில் 135 ஸ்டாண்டர்டு ஏக்கரை அந்த அமைச்சருக்கு மிக நெருங்கிய சொந்தக்காரர் விற்றுவிட்டார். உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டார். இந்த இரண்டாண்டுக் காலத்திலே, 6.4.60லிருந்து 2.10.62க்குள்ளாக யாரும் இந்தச் சட்டத்தை ஏமாற்றி அவர்களுக்குரிய நிலத்தை விற்கக்கூடாது என்று இருந்தும்கூட பணம் வருகிறதே அப்பா என்ற காரணத்தினாலும், உச்சவரம்புச் சட்டம் வருகிறதே அப்பா என்ற அச்சத்தாலும், 141 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 132 ஸ்டாண்டர்டு ஏக்கராவை விற்றுவிட்டார். அதற்கு அவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். 1967க்குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். 1967 வரையில் அந்த அமைச்சருடைய மிக முக்கியமான சொந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. 1967இல் அண்ணா தலைமையில் ஆட்சி வந்தபிறகு, முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்தபிறகு, இந்தத் தவறுக்கு நடவடிக்கை இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மிகச் சாதாரணமானவர்களால்கூட அந்தப் பினாமி முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமைச்சரவையில், மிக முக்கியமான ஒருவரின் சொந்தக்காரரால்தான்.

திருமதி த.ந. அனந்தநாயகி: அமைச்சருடைய மிக நெருங்கிய சொந்தக்காரர் என்று டிரமாட்டைஸ் பண்ண வேண்டாம், அவர் பெயரைச் சொல்ல வேண்டியதுதானே, எண்ணினதே தப்பு. அவர் பெயரைச் சொல்ல வேண்டியதுதானே!

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நண்பர் வரதப்பன் அவர்கள். அம்மையார் அவர்களுக்கு அதைச் சொல்ல வேண்டுமென்று விருப்பம்.

திருமதி த.ந. அனந்தநாயகி: அம்மையார் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்வீர்களா? அம்மையார் விருப்பம் என்று சொல்லி எப்படியோ என்னை வம்பில் இழுத்து விடுவதற்காக இதை ஏன் சொல்ல வேண்டும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அடுத்து, மூன்றாவது அம்சம். கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் வெகுவாக விரிவாக்கப்படும். நிலமற்றவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கச் சட்டங்கள் கொண்டு வரப்படும். இது பிரதமர் அவர்களுடைய அறிவிப்பு.

அண்மையில் மத்திய அரசு தயாரித்த ஒரு ஆய்வின்படி குடியானவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம், பீகார், குஜராத், ஜம்மு-காஷ்மீர், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மட்டுமே குடியானவர்களுக்கும் உழவர்களுக் கும் வீட்டு மனை வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. நாம் குறிப்பிட்ட இந்த மாநிலங்களில் வீட்டு மனைகள் வழங்குகிற திட்டம் நடைபெற்று வருகிறது, இதில் தமிழ் நாட்டில் மாத்திரமே, குடியானவர்களுக்கும் உழவுத் தொழி லாளர்களுக்கும் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படு கின்றன. மற்ற மாநிலங்களில் இந்த மனைகளைப் பெறுவதற்கு அதன் விலையை உழவர்கள் செலுத்தியாக வேண்டும். 1971ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம் செய்தோம். 1975இல் அல்ல! 20 அம்சத் திட்டம் வானொலியில் அறிவிக்கப்பட்ட பிறகு அல்ல! 1971ஆம் ஆண்டிலேயே செய்தோம். இந்தச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு மனைகள் பெற்றவர்கள் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர்கள். இந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர்கள் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள், 1,02,404 பேர்கள்; பிற்படுத்தப்பட்டோர்; 40,550 பேர்கள்; இதர வகுப்பினர் 32,123 பேர்கள்; இதற்காக அரசுக் குச் செலவு கிட்டத்தட்ட 20 முதல் 30 லட்சம் ரூபாய் வரை ஆகியிருக்கிறது.

அரசுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வீட்டு மனை ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ் 1967க்கு முன் 20 ஆண்டு காலத்திலே, அப்போது இருந்த ஆட்சியில் வீட்டு மனை ஒப்படை செய்யப்பட்டது, பட்டா கொடுத்தது 3,770 பேர்களுக்கு ஆகும். ஆனால் இந்த எட்டாண்டுக் காலத்திலே பட்டா ஒப்படை செய்யப்பட்டது, பட்டா கொடுத்தது 5,03,697 பேர்களுக்கு ஆகும்.

அரிசன மக்களுக்கு மாத்திரம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 2,36,000 அரிசனக் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன. அதற்காக ஆன மொத்தச் செலவு 4 கோடியே 25 லட்சம் ரூபாய் ஆகும்.

இவைகளைத் தவிர, பிரதமர் அண்மையில் குறிப்பிடாத அம்சமாக 30 ஆயிரம் வீடுகள் அரிசன மக்களுக்கு டிசம்பர் மாத இறுதிக்குள் நல்ல கெட்டியான வீடுகள், ஒரு வீடு நாலாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வீடுகள், டிசம்பர் மாதத்திற்குள் கட்டித்தர திட்டமிட்டு, அது முடிவடைய இருக்கிறது. இதற்காக ஆகும் செலவு 13½ கோடி ரூபாய். இது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் இல்லாத ஒன்றாகும்.

அதைப்போலவே, மீனவர்களுக்கு 5 ஆயிரம் வீடுகள், முதல் கட்டமாகக் கட்டித்தர இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த வேலைகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதுவும் இருபது அம்சத் திட்டத்தில் இல்லாத ஒன்றாகும்.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 1975ஆம் ஆண்டு அவசரச் சட்ட அறிவிப்புக்குப் பிறகு, பிரதமருடைய அறிவிப் புக்குப் பிறகு வந்ததல்ல, 1970-71ஆம் ஆண்டிலே தொடங்கப் பட்டு, இதுவரையில் 20 ஆயிரத்து 239 குடியிருப்புகள், வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 3,220 குடியிருப்புகள்; குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் ஏறத்தாழ 17,019 குடியிருப்புகள் என்ற முறையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்போது கட்டிக் கொண்டிருக்கின்ற குடியிருப்புகள் 3,312. ஆக, 17 கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ இருபதாயிரம் வீடுகள் குடிசை வாழ் மக்களுக்காகக் கட்டப்படுகின்றன. இதுவும் மதிப்பு மிகுந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தில் இல்லாத ஒன்று. இதை நிறைவேற்றுவதற்காக வேண்டுமானால் இதைத் தொடங்கியதற்காக வேண்டுமானால் இல்லாததையெல்லாம் நீ எப்படி நிறைவேற்றினாய் என்று நீங்கள் கோபித்துக் கொள்ளலாமே தவிர, வேறு எதுவுமில்லை என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம மக்களுடைய கடன் சுமையைப் படிப்படியாகக் குறைக்க அவர்களிடமிருந்து கடனைத் திரும்பப் பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடாமல் இருக்க, வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லுபடியாகாமல் இருக்கச் செய்யவும், கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், அரசுக் கடன்கள் ஆகிய

வற்றிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது பிரதமருடைய நான்காவது அறிவிப்பு. கிராமப்புற மக்களின் கடன் சுமையைப் போக்குவது மாத்திரமல்லாமல், நகரப்புற மக்களுடைய கடன் சுமையையும் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிற வகையிலே 1972ஆம் ஆண்டு ஒரு கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தோம். 1975ஆம் ஆண்டு கடன்பட்டோர் (தற்காலிக நிவாரண) அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அண்மையில் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி இந்த அவசரச் சட்டம் 1975ஆம் ஆண்டு சனவரியில் அறிவிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் உரிமை வழக்குத் தொடர்ந்தோம். ஏனைய சட்ட நடவடிக்கை களில் ஈடுபட்டோ கடனை வசூலிப்பதாக ஓராண்டுக் காலத்திற்குக் கூடாது என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கத்திற்கும் அரசுக்கும் தரவேண்டிய கடனைக்கூட- இதிலே அவைகள் வராது என்றாலும் கூட, அதனுடைய வசூலை ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்ளப்பட்டு, அந்த வசதியும் கிராமப்புற மக்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. 1975ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் தேதி அறிவிக்கப்பட்ட சட்டத்தின்படி உழவர்கள் அல்லாத ஏனைய கடன்பட்டவர்களுக்கும், கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறலாம் என்ற நிலையில் 1976ஆம் வருஷம் சனவரி 15ஆம் தேதி வரையில் வட்டி எதுவும் வசூலிக்கக்கூடாது என்றும், இந்தச் சட்டம் துயர் தணிப்பு அளிக்கிறது. சிலபேர் இதனை அறவே ரத்து செய்ய வேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். இங்கே நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே மசோதா வந்த நேரத்தில் குறிப்பிட்டதை நாம் அவ்வளவு சாதாரணமாகப் புறக்கணித்துவிட முடியாது. கடன்களை அறவே ரத்து செய்வது என்ற அவ்வளவு முற்போக்கான நிலைமைக்கு நாம் சென்றால், பிறகு கடன் கொடுப்பவர்களே இருக்க மாட்டார்கள். அப்படிக் கடன் கொடுப்பவர்களே இல்லாத நேரத்தில், கடன் கொடுக்கும் வசதிகளை கிராமப்புற மக்களுக்கு உற்பத்தியின் அடிப்படையில் இல்லாமல்

அவர்களின் விவசாயப் பொருட்களைக் காட்டி கிணறுகளை, நிலத்தைக் காட்டிப் பெறுவது மட்டுமல்லாமல் அவர்களுடைய திடீர்த் தேவைகளுக்குக் கடன் தருகின்ற வங்கிகள், கூட்டுறவு இயக்கங்கள் ஆகிய இப்படிப்பட்ட வசதிகளைப் பெருக்கிய பிறகுதான் அதைப் பற்றி நாம் யோசிக்க முடியுமே அல்லாமல் வேறு விதத்தில் இயலாது. எல்லாக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களே சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்ட அதற்கேற்ற நிவாரணம் அளிக்க வேண்டுமென்றுதான் கூறியிருக் கிறார்கள். அதையும் நாம் படிப்படியாக எடுத்து ஏற்பாடுகளையெல்லாம் தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டு காலமாகவே செய்து வருகிறோம். ஆகவே, இதை முன்பே செய்தோம் என்ற குற்றத்தைத் தவிர அறவே செய்யவில்லை அல்லது செய்ய மறுக்கிறோம் என்ற குற்றச்சாட்டை யாரும் நம்மீது சாட்டிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5ஆவது அம்சம், ''உழவுத் தொழிலாளர்களுக்குத் தற்போதுள்ள குறைந்த ஊதிய விகிதச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். குறைந்த அளவு ஊதியம் தரப்படும் இடங் களில் எல்லாம் இந்த ஊதியத்தை உயர்த்துவதற்கான நட வடிக்கை எடுக்க வேண்டும்'' என்பது. இது பிரதமர் அறிவித்த 5ஆவது அம்சமாக இருக்கிறது. 1969ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள உழவுத் தொழிலாளர்கள் சம்பந்தமாக திரு.கார்த்திகேயன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்கள் இந்தக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று சொல்லி, அதை நடைமுறைப் படுத்தினோம். தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாய தொழிற்சங்கத்தை நடத்துபவர்கள், அரசின் சார்பிலே, ஆக இப்படி முத்தரப்பு மாநாட்டினைக் கூட்டி ஒரு சுமுகமான முடிவினை எடுத்திருக் கிறோம். இப்போது மீண்டும் இந்த அவசரச் சட்டத்திற்குப் பிறகு, அம்மையார் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்திற்குப் பிறகு, மீண்டும் ஒரு குழுவை நாம் இன்றைக்கு அமைத்து, நண்பர் சீனிவாசன் அவர்கள் தலைமையில் அந்தக் குழு

தன்னுடைய ஆய்வை நடத்தி வருகிறது. அது பல்வேறு மாவட்டங்களிலே அந்த ஆய்வை நடத்தும்.

இதற்கிடையில் ஆண், பெண் ஆகிய இரு சாராரின் சம்பளம், நாட்கூலி, சமமாக இருக்கவேண்டுமென்ற ஒரு அறிவிப்பையும் மத்திய அரசின் சார்பிலே செய்திருக்கிறார்கள். அதையும் அடிப்படையாக வைத்து, வேலை செய்பவர்கள் ஆணா, பெண்ணா என்பதுகூட அல்லாமல், இந்த வேலைக்கு இந்தக் கூலி, அதை ஆண் செய்தாலும் சரி, பெண் செய்தாலும் சரி என்று நிர்ணயிக்கிற அளவிற்கு, அந்தக் குழு தன் ஆய்வை நடத்தி விரைவில் முடிவைத் தரும். அது அரசின் சார்பிலே பரிசீலிக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

6ஆவது அம்சம், ''உழவுத் தொழிலையும், தொழில் உற்பத்தியையும் பெருக்க நீரும், மின்சாரமும் இன்றியமையாதன.'' இது நமக்கெல்லாம் தெரியாத பெரிய விஷயம். மின்சாரமும் நீரும் இன்றியமையாதன; ''குறைந்தது 50 இலட்சம் ஹெக்டேர் நிலத்தையேனும் விரைவில் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.'' இது பிரதமருடைய ஆறாவது அறிவிப்பு. 50 இலட்சம் ஹெக்டேர் என்றால் ஒன்றேகால் கோடி ஏக்கர்கள். இந்தியாவில் ஒன்றேகால் கோடி ஏக்கர்கள் புதிய பாசன வசதிகளைப் பெறுவதற்கு தலைமையமைச்சர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது பாராட்டக்கூடிய அம்சம். ஏனென்றால் இந்தியா வேளாண்மைத் தொழிலேயே பெரிதும் நம்பியிருக்கின்ற ஒரு பெரும் பூபாகம். இப்படிப்பட்ட இடத்தில் மற்றத் தொழில்களுக்கு மேலாக வேளாண்மைத் தொழிலுக்கு முதலிடம் தர வேண்டும். அதை 28 ஆண்டுக்கால சுதந்திரத்திற்குப் பிறகாவது உணர்ந்து பாசன வசதிகளைப் பெருக்க வேண்டுமென்ற ஒரு நல்ல முடிவை 20 அம்சத் திட்டத்தின் மூலமாக அறிவித்த இந்திராகாந்தி அம்மையார் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு விவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1947ஆம் ஆண்டு வரையில் பாண்டியர்கள், சோழர்கள்,

சேரர்கள், பல்லவர்கள் ஆகிய இப்படிப்பட்ட மன்னர்கள் ஆண்டு, வெள்ளைக்காரர்கள் ஆண்டு முடிந்த 1947ஆம் ஆண்டு வரையில், தமிழ்நாட்டில் பாசன வசதி பெற்ற நிலம் சுமார் 44 இலட்சம் ஏக்கராக்கள். அந்தப் பழம்பெரும் மன்னர் களுக்குப் பிறகு, பரங்கியர்களுக்குப் பிறகு பெரியவர் பக்தவச்சலம் ஆண்டு முடித்த 1967ஆம் ஆண்டு வரையில், 20 ஆண்டுக் காலத்தில் மேலும் 8 இலட்சம் ஏக்கராக்கள் பாசன வசதி பெற்றன. 44-ம், 8-ம் ஆக 52 இலட்சம் ஏக்கராக்கள். பக்தவத்சலம் காலத்திற்குப் பிறகு இந்த எட்டாண்டுக்கால 'பாவிகள்' ஆட்சியில் மேலும் 15 இலட்சம் ஏக்கராக்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 1967ஆம் ஆண்டுக்குப் பின்பாகப் புதிய நீர்ப்பாசன திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட தொகை 148 கோடி ரூபாய். இந்த அரசின் சார்பில் செயல் வடிவம் பெற்று வருகின்ற திட்டங்களின் மதிப்பு 49 கோடி ரூபாய். இன்னும் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகத் தவம் கிடக்கும் திட்டங்களின் மதிப்பு 62.5 கோடி ரூபாய். ஆகவே, 1967-க்குப் பிறகு நம்முடைய உணவு உற்பத்தியின் இலக்கைக் கணக்கிட்டால், இந்தப் பாசன வசதியை எந்த அளவிற்குப் பெருக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, 6ஆவது அம்சம் ஏற்கெனவே எடுத்து நிறை வேற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இது 6ஆவது அம்சம், 7ஆவது காண்டம் பிறகு.

அடுத்து 7ஆவது அம்சம், ''நிலநீர்- பாசன வசதியைப் பெருக்குதல்; வறட்சியால் தாக்குண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல்; நிலநீர் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்தல்'' ஆகிய இந்த மூன்று. இதுவும் மிகவும் முக்கியமான திட்டங்கள்தான். இதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற் கிறோம். இந்தியா முழுதும் எடுத்திருக்கின்ற கணக்கின்படி, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய கணக்கு இது. இந்தியா முழுவதும் நிலநீர் வளம் உள்ள பரப்பு 21.36 கோடி ஏக்கர். இந்தியா முழுவதும் நிலநீர் அதாவது அடி நீர், கிரவுண்ட் வாட்டர் உள்ள நிலத்தின் பரப்பு

21 கோடியே 36 லட்சம் ஏக்கர். அதிலே தமிழ்நாட்டில் நிலநீர் வளம் உள்ள பரப்பு 1 கோடியே 15 இலட்சம் ஏக்கர். இது இந்தியாவின் மொத்த பரப்பில் ஐந்தே ஐந்து சதவீதமாகும். ஆனால் இந்தியா முழுவதுமுள்ள மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 24.35 இலட்சம். மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகள். தமிழ்நாட்டில் மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள், 7 இலட்சத்து 15 ஆயிரம் பம்புசெட்டுகள் மின் இணைப்பு பெற்றவை. இது இந்தியாவில் உள்ள மொத்தத்தில் 30 சதவீதம்; நிலநீர் கிடைக்கும் இந்தியாவின் மொத்தப் பரப்பில் நாம் 5 சதவிகிதம். ஆனால் நிலநீரைப் பயன்படுத்தும் பம்பு செட்டுகள் இந்தியாவின் மொத்தக் கணக்கில் நாமே 30 சதவிகிதம்.

அதுமட்டுமல்ல, பிரதமர் அறிவித்திருப்பதைப் போல, 'வாட்டர் அட்லாஸ்' தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நிலநீர் ஆய்வுக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை 7.5 கோடி ரூபாய், நிலநீர் ஆய்வுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிக் கெல்லாம் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை.

குடிநீர் பற்றி இதே 7ஆவது அம்சத்திலே சொல்லியிருக் கிறார்கள். குடிநீருக்காக மாத்திரம் 1967ஆம் ஆண்டுக்குப் பிறகு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ஊராட்சி மன்றங்கள் மூலம் செலவிடப்பட்ட தொகை 14,15 கோடி ரூபாய். இவ்வேலைத் திட்டத்தின்கீழ் தோண்டப்பட்ட கிணறுகள் 33,000. கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் 4,444. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் போன்று இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. தமிழ்நாட்டில்தான் இப்படிப்பட்ட வாரியம் ஒன்றை உருவாக்கி- 1971லேயே உருவாக்கி- அவசரச் சட்டம் வந்த பிறகு அல்ல, அம்மையாரின் வானொலிப் பிரசங்கத்திற்கு பிறகு அல்ல- அதற்கு முன்பே உருவாக்கி, அதன் சார்பில் 1971ஆம் ஆண்டுக்குப் பின்னால் நிறைவேற்றிய திட்டங்கள், குடிநீர் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 77,736. இதற்கான செலவு ஏறக்குறைய 12 கோடி ரூபாய். வறட்சித்

துயர் தணிப்புப் பணிகளுக்கு மட்டும், குடிநீர் வழங்கு வசதிக்காகத் திட்டத்தின் கீழ் வராமல் தனிப்பட்ட முறையில் செலவழிக்கப்பட்ட தொகை 3 கோடியே 52 இலட்சம் ரூபாய். திட்டத்தின் வாயிலாக 1975-76இல் ஒதுக்கப்பட்ட தொகை 7 கோடியே 10 இலட்சம் ரூபாய். ஆக, இப்படிப்பட்ட பணிகளும் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே தொடர்ந்து நம்முடைய தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களாகும்.

அடுத்து, 8ஆவது அம்சம், பிரதமர் வானொலியில் அறிவித்த அம்சம், ''2,600 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்தப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.'' கோடிட்டுக் கொள்ள வேண்டும். ''போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நீண்ட கால தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசுத் துறையில் உரிய அளவில் அனல் மின் நிலையங்கள் நிறுவ திட்டமிடப்படும். மாநில மின்சார வாரியம் சீரமைக்கப்படும்.'' இது பிரதமருடைய இருபது அம்சத் திட்ட அறிவிப்பில் மிக முக்கியமான அம்சமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரும் பிரச்சினையுள்ள ஒரு அம்சம். ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நிதி யாண்டில், அதாவது 1975-76இல் இந்தியா முழுவதும் மின் உற்பத்திக்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற தொகை 250 கோடி ரூபாய். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு மின் உற்பத்திக்காக ஒதுக்கியிருக்கிற தொகை 10 கோடி ரூபாய்.

தூத்துக்குடியில் இருக்கும் நம்முடைய மின் நிலையம் இருக்கிறதே அதற்கு மொத்த மதிப்பீடு 129 கோடி ரூபாய். 1974-75இல் 5 கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டிருக் கிறோம். 1975-76இல் 18 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருக்கிறோம், செலவாகுமென்று, மாநில நிதியி லிருந்து அதற்கு 10 கோடி ரூபாய் போட்டு விட்டோம். மீதி 8 கோடியே 7 லட்சம் கேட்டிருக்கிறோம் மத்திய அரசிடம். இந்தத் திட்டம் முழுமையாக ஆக வேண்டுமென்றால் ரூ. 129 கோடி தேவை. ஒவ்வொரு ஆண்டும் நமக்குத் தேவையான நிதி 1975-76இல் ரூ. 13.67 கோடி; 1976-77இல் ரூ. 53.23 கோடி:

1977-78இல் ரூ. 30.37 கோடி. 1978-1979இல் ரூ. 17.62 கோடி; 1979-80இல் ரூ. 4.26 கோடி செலவழித்தால்தான் இந்தத் திட்டம் 1979-80இல் முடிவடையும்.

மின் உற்பத்தித் திட்டங்களுக்காக இந்தியா முழுமைக்கும் 250 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்களே இந்தியாவின் தலைமையமைச்சர், இந்திராகாந்தி அவர்கள் அறிவித்திருக் கிறார்களே, பெரு நிதி ஒதுக்கப்படும் என்று. நம்முடைய தமிழ் நாட்டுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் தெரியுமா? இந்த 250 கோடி ரூபாயில். பல முறை கேட்ட பிறகு ஒரு கோடி ரூபாய்தான் 20 அம்சத் திட்ட அறிவிப்புக்குப் பிறகு தந்தது. ஒரு கோடி ரூபாய் இந்த 250 கோடி ரூபாயில் நமக்கு ஒதுக் கினார்கள். இதைத்தான் நம்முடைய நண்பர் சுப்பு அவர்களும் மற்றவர்களும் பேசும்போது ஏட்டளவில் வெகு அழகாக எழுதிக்காட்டி விடுகிறீர்கள்; இவற்றை நிறைவேற்றப் பணம் எங்கே கேட்டார்கள். அதற்கு 21ஆவது அம்சத் திட்டம் வேண்டாமா? 20 அம்சத் திட்டத்தைச் சொல்லிவிட்டு 21ஆவது அம்சமாக இவ்வளவு கோடி ரூபாய் இதையெல்லாம் செல வழிக்கப் பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? அப்படிச் சொல்லவில்லை.

250 கோடி ரூபாய் இந்தியா முழுமைக்கும். அதிலே தமிழ்நாட்டுக்கு மின் உற்பத்தியைப் பெருக்க ஒரே ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

நெய்வேலி, எவ்வளவு ஆண்டுக் காலமாகத் தவம் கிடக்கின்றது? பெரியவர் பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்தகாலத்தில், அதற்கு முன்பு பெரியவர் காமராஜர் முத லமைச்சராக இருந்த காலத்தில் கோரிக்கை எழுப்பப்பட்டது. அப்போதே இரண்டாவது சுரங்கம் தொடங்கப்பெற்றிருந்தால், இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது 1964லோ, 1965லோ. இப்போது முடிவடைந் திருக்கும். கிட்டத்தட்ட ஏழு, எட்டு ஆண்டுக் காலம் அதற்கு ஆகும். ஆனால் இன்னும் தொடங்கவே இல்லை. நாளைக்குத் தொடங்கினால் கூட இன்னும் 7, 8 ஆண்டுக்காலம் ஆகும் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை முடிக்க.

இதற்கிடையில் ஆந்திரத்தில் இருக்கும் ராமகுண்ட திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா என்கிற ஒரு பயங்கரப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இந்தச் செய்தியைக் கேள்விப் பட்டதும். நான் பிரதமருக்கு எழுதியிருக்கிறேன். 'நீங்கள் நெய்வேலியைக் கைவிட்டுவிட்டு ஆந்திரத்திலுள்ள ராமகுண்ட திட்டத்தை எடுத்துக் கொள்வீர்களானால், தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் பெரிய இடைவெளி விழ நேரிடும். ஆகவே, ராமகுண்ட திட்டத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி யோசிப்ப தைக் கைவிட்டுவிட்டு நெய்வேலித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இரண்டாவது சுரங்கம் அமைத்துவிட வேண்டு மென்று கேட்டிருக்கிறோம். இது மின்சாரத்தைப் பொறுத்தவரை 2ஆவது அம்சம் ஆகும்.

9ஆவது அம்சம்; இனிமேல் பொதுவான அம்சங்கள், வேகமாகப் போக முடியும்.

''கைத்தறித் தொழிலுக்குத் தேவையான பொருள்களை நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குவது. கைத்தறியாளர்களுக்கு என்று சில ரகங்களை ஒதுக்கீடு செய்யும் கொள்கை சீரமைக்கப்பட்டு வருகிறது. நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் வேட்டிகள், புடவைகள், துணிகள், நல்ல தரத்தில் இருக்கவும் அவற்றைக் கிராம மக்களுக்கும் நகர்ப்புறத்தில் உள்ள மக்களுக்கும் விற்பனை செய்யவும் ஸ்டாண்டர்டு கிளாத் முறையை அமல்படுத்துவது.''

இது ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. 1974இல் நூல் விலையேற்றம் ஏற்பட்டபோது 12 நூற்பாலைகளில் இருந்து கிடைத்த உற்பத் தியைக் கொண்டு நெசவாளர்களுக்கு 16½ கோடி ரூபாய் மதிப்புள்ள நூலை கோவாப்டெக்ஸ், தமிழ்நாடு கைத்தறி நூல் கழகம், ஆகிய நிறுவனங்கள் மூலம் தமிழக அரசு வழங்கித் தன்னால் முடிந்த அளவுக்குக் கைத்தறியாளர்களுக்கு நன்மை செய்திருக்கிறது.

சில ரகங்கள் கைத்தறிக்கு இப்போது ஒதுக்கப்பட வேண்டும்; ரிசர்வேஷன்; என்று பிரதமர் அவர்கள் அறிவித் திருக்கிறார்கள். இது புதிய திட்டமா என்றால், இல்லை.

அவர்களுடைய அறிவிப்பிலேயே பிரதமர் அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

'Some of them are new. Others were set forth earlier but require to be pursued with greater vigour and determination.' என்று பிரதமர் சொல்லியிருக்கிறார்கள்.

இது முனைப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காகத் தான் இதை அறிவித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதிலே எந்தவிதமான மாறுபாடோ, வேறுபாடோ எனக்கில்லை.

ஆனால் ராஜாஜி அவர்கள், இந்த மாமன்றத்தில் பொறுப் பேற்றிருந்த அந்தக் காலத்திலேயே, கைத்தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும்; கரை போட்ட வேட்டிகள் சேலைகள் இவைகள் எல்லாம் ஒதுக்கப்பட வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் காலத்திலேயே தீர்மானமெல்லாம் போட வற்புறுத்தப்பட்டது.

இன்று ராஜாஜி அவர்களுக்கு நினைவாலயம் எல்லாம் எழுப்பி, அவருடைய மறைவுக்குப் பின்னால் இரண்டு நினைவு நாட்கள் கூட கொண்டாடி முடிந்த பிறகு, இப்போது 'கைத்தறி ரிசர்வேஷன் வேண்டும்; அதற்கென்று சில ரகங் களை ஒதுக்க வேண்டும்' என்று நம்முடைய பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இதே சட்டமன்றத்திலேயே 1974இல் ஏகமனதாக கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டுமென்ற தீர்மானம் நம் அனைவராலும் சேர்ந்து நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்போதுதான் அவர்கள் செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

அதிலே ஸ்டாண்டர்டு கிளாத்-மலிவுத் துணியைப் பற்றிக் கூட திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஹக்சர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதைப்போலவே அந்தத் துறையில் அமைச்சர் திரு. சட்டோபாத்தியாயா அவர்களும் என்னிடம் பேசும்போது இதைப்பற்றிக் கேட்டார்கள். ஸ்டாண்டர்டு கிளாத்தை மில்லுக்கு ஒதுக்குவது பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் திட்டவட்டமாக அவ்வாறு

ஒதுக்கினால் 'கைத்தறி, கார் இரண்டும் அழிந்துவிடும்' என்று சொன்னேன். ஸ்டாண்டர்டு கிளாத்தை மில்லும் ஒதுக்கி விட்டால் இந்த இரண்டு தொழிலும் அழிந்து விடும் என்ற அச்சத்தை எல்லாம் தெரிவித்தது, இந்த அறிவிப்பெல்லாம் வருவதற்கு முன்பு, அவசர நிலைப் பிரகடனத்திற்கு முன்பு அவர்களிடம் விவாதிக்கும்போது, திட்டவட்டமாக நம்முடைய அரசின் சார்பில் இதெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறதே தவிர, மாநில அரசுக்கு எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது அம்சம், 'நகர்ப்புற உச்ச வரம்பு, நகர்ப்புறங் களில் அமைந்துள்ள நிலத்தைச் சமூக உடைமையாக்கவும், நகர்ப்புற அனுபோக உரிமைக்கு உச்ச வரம்பு விதிக்கவும் சட்டம் கொண்டு வரப்படும்.'

இது பிரதமருடைய பத்தாவது அறிவிப்பாகும்.

நகர்ப்புறச் சொத்து உச்ச வரம்புக் கொள்கையை வெளி யிட்ட அந்தக் காலத்திலேயே நாம் அதை வரவேற்றிருக் கிறோம். எனக்கு நினைவு, மத்திய பிரதேச முதலமைச்சர் திரு. சேத்தி அவர்கள் என்று கருதுகிறேன், இதை அறிவித்தார்கள். அவர் 'என்னுடைய மாநிலத்தில் நான் நகர்ப்புற உச்ச வரம்பைக் கொண்டுவரப் போகிறேன். கொண்டு வந்து விட்டேன்' என்றெல்லாம் அறிவித்தார். என்னை அதைப் பற்றி டெல்லியிலும் சென்னையிலும் நிருபர்கள் கேட்டபொழுது, இது ஒரு கவர்ச்சிகரமான கோஷம், நடைமுறைக்கு எப்படி வரும் என்று தெரியாது என்று சொன்னேன். இந்த உச்ச வரம்பில் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்றால் நகரில் உள்ள காலி மனைகளின் கையிருப்பைக் கட்டுப்படுத்தி வைப்பதா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காணவேண்டும்.

கட்டப்பட்டுள்ள வீடுகளின் அளவின் எண்ணிக்கையைப் பொறுத்து உச்ச வரம்பு விதிப்பதா? அல்லது வீடுகளோ, அத்தகைய காலி மனைகளோ இருக்கக்கூடிய இடத்தின் சொத்து மதிப்பை வைத்து அதன் அளவைக் கட்டுப்படுத்துவதா? என்ற இந்தப் பிரச்சினையைக் குறித்து நாம் மத்திய அரசுடன்

நீண்டகாலமாகக் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில் இந்த உச்ச வரம்புச் சட்டத்தை எப்படி அமல்படுத்துவது என்பதில் குழப்பம் ஏற்படும். அப்படிக் குழப்பம் ஏற்படுகிற காரணத்தால்தான் மத்திய அரசு சார்பிலும் இதுவரை எந்த முடிவையும் அவர்கள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று நினைக்கின்றேன்.

ஆனால், அப்படி ஒரு முடிவை எடுக்கிற நேரத்தில் அரசு களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும் என்றுதான் இந்த அரசின் சார்பில் நாம் நகர்ப்புறச் சொத்து வரியை அதிகரித்து. ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அது மசோதாவாக வந்து, அதிலே சில திருத்தங்களோடு இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற கருத்துக் களை எல்லாம் அறிந்து, கலந்து பேசி அதை உருவாக்க இருக் கிறோம். அதன்படி யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்ற அந்த அளவெல்லாம் தெரிந்துவிடுமானால், பிறகு மத்திய சர்க்கார் அந்த உச்ச வரம்பு கொண்டு வரும்போது அல்லது சட்டத்தை எப்படிக் கொண்டு வருகிறார்களோ அதற்கேற்றபடி, நாம் இப்போதே அவர்களுக்கு வழிமுறைகளைத் தேடித் தருகிறோம். இதை எந்த மாநிலமும் செய்யவில்லை. ஆகவே, இந்த அம்சத்தைப் பொறுத்தவரையிலும், 10-வது அம்சத்தைப் பொறுத்தவரையிலும் கூட நம்முடைய மாநிலத்திலே அதை நிறைவேற்றுவதற்கேற்ப அடிப்படையை அமைத்துக் கொடுக் கிறோம். அது விரைவில் சட்டமன்றத்தில் வர இருக்கிறது.

திருமதி த.ந. அனந்தநாயகி: மத்திய அரசு நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்ச வரம்பு விதிக்கும் சட்டத்தைக் கொண்டு வரும் வரையில் காத்திருக்காமல் சில மாநிலங்கள் ஏற்கெனவே செய்தது போல் நீங்களும் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: 'எந்தெந்த மாநிலத்தில் செய்திருக்கிறார்கள்? எப்படி எப்படிச் செய்திருக் கிறார்கள் என்று சொன்னால் புரிந்து கொள்ளலாம். எழுதிக் கொடுங்கள் ஒன்றும் சொல்லாமல் எதையாவது சொல்லிவிட்டு ஆடிக் கொண்டே இருந்தால் எப்படி?

திருமதி த.ந. அனந்தநாயகி: மத்தியப் பிரதேச முத லமைச்சர் சேத்தி கொண்டு வந்ததாக நீங்களே சொன்னீர்களே.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: சொன்னார் அவர். சொன்னாரேயொழிய செய்தாரா என்று தெரியவில்லையே. சொல்லுகிறார்கள். செய்வதில்லையே. (டாக்டர் ஹாண்டே குறுக்கீடு) ஹாண்டே அவர்கள் சொல்லுகிறார்கள், 'அங்கு நகரமே இல்லை, நாகப்பூர் மட்டும்தான் இருப்பதாக'. நகரமே இல்லாததால் சுலபமாகச் சொல்லலாம்.

11 ஆவது அம்சம்- ''நகரச் சொத்தைக் குறைத்து மதிப்பீடு செய்தலைத் தடுக்க சொத்துக் கணக்குகளை மதிப்பீடு செய்ய ஸ்பெஷல் ஸ்குவாட் வருமானவரிஏய்ப்போர் மீது கடும் தண்டனை.''

இது கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிப்பதற்காக அம்மை யார் அவர்கள் பிரகடனப்படுத்திய ஓர் அம்சம்.

நம்முடைய சட்டமன்றத்தில் 1973ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக் கிறோம். கே.டி.கே. அவர்கள்தான் அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவீர்களா என்று கேட்டார்கள். நிறைவேற்ற முன் வந்தால் நீங்கள் ஆதரிப்பீர்களா என்று கேட்டேன். மார் தட்டி நிச்சயமாக ஆதரிப்பேன் என்று சொன்னார். நாங்களெல்லாம் கே.டி.கே. அவர்கள் ஆதரித்தால் மத்திய அரசு நிச்சயமாக அதனை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றினோம்.

''நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார முறைகேடுகள், விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய வற்றுக்குக் கறுப்புப் பணத்தின் புழக்கமே முக்கிய காரணம் என்பதை இந்தச் சட்டப் பேரவை எடுத்துக் காட்டியுள்ளது.

கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து வெளிக்கொணர வாஞ்சுக் குழு தெரிவித்த பரிந்துரைகளில் கண்டுள்ளபடி மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கு மட்டும் அல்ல; மாநில அரசுக்கும் என்று இரண்டு அரசுக்கும் இருக்கட்டும் என்று, மாநில அரசுக்கும் வழங்கப்பட

வேண்டுமென்று, இந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது'' என்ற தீர்மானத்தை, 1973ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றி, இந்த 11ஆவது அம்சத்திற்கும் அப்போதே அச்சாரமாக நம்முடைய ஒப்புதலை அளித்திருக்கிறோம். ஆகவே, இதிலும் பிரச்சினை இல்லை.

12ஆவது அம்சம்- ''தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கும் மூலதனமும் ஆதாயமும் வழங்கும் திட்டம்'' இது பிரதமர் அறிவித்த மற்றொரு திட்டம்.

இந்தத் திட்டத்தை 1973ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்தே நாம் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி வந்திருக் கிறோம். இதற்கான ஒப்புதல் 1973ஆம் ஆண்டில் இருந்து மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்ததெல்லாம், இது பாராட்டப்பட வேண்டிய ஒரு நட வடிக்கை என்ற ஒரு கடிதந்தான் கிடைத்தது. ஆனால், 1973ல் இருந்து 1975 வரை எந்தவிதமான ஒப்புதலும் கிடைக்காமல் இன்றைக்குப் பிரதமர் அவர்களிடத்தில் இருந்து அறிவிப்பு வருகிறது.

கதாசிரியராக இருந்த அனுபவத்தில் ஒன்று சொல்கிறேன். கதாசிரியர் கதைகளை எழுதி யாரிடத்திலாவது கொடுத்தால், அதை யார் கொடுத்தார்கள் என்பதை வெளியில் சொல்லாமல் தங்கள் பெயரில் வெளியிட்டு விடுவது. அது போல், இந்தத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் லாபத்தில் பங்கும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை நாம் 1973ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே அறிவித்து, மத்திய அரசிடம் இதற்கான ஒப்புதலைக் கேட்டோம். ஒப்புதல் கிடைப்பதில் என்ன சிக்கல் என்றால், இதற்கு திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார்கள் முதலீடு செய்வது கூடாது என்று. முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு நஷ்டத்தில் பொறுப்பு ஏற்க வேண்டிய அவசியமில்லை. லாபத்தில் அவர்களுக்குப் பங்கு, ஆகவே முதலீடு செய்ய வேண்டிய தேவை இல்லை. இதிலே ஒரே ஒரு சிக்கல் என்னவென்றால் வருமான வரி கொடுத்த பிறகு டிவிடென்ட் பிரிக்கக்கூடாது. டிவிடென்ட் பிரித்த பிறகு வருமான வரி கொடுக்க வேண்டும்.

இவ்வளவுதான் சொன்னோம். அப்போதுதான் தொழிலாளர்களுக்குத் தொகை அதிகமாகக் கிடைக்கும். இதற்கு ஏற்ற வகையில் கம்பெனி சட்டத்தைத் திருத்திக் கொடுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டோம்.

திரு. கே.டி.கே. தங்கமணி: நான் புரிந்து கொண்டதைச் சொல்கிறேன். 'வொர்க்கர்ஸ் பார்டிஸிபேஷன் இன் இன்டஸ்ட் ரீஸ்' என்று சொன்னால் ஏற்கெனவே இருக்கக்கூடிய தொழிலில், அது தனியார் தொழிலாகவும் இருக்கலாம் அல்லது பொதுத் துறையாகவும் இருக்கலாம். தனியார் துறையாக இருந்தாலும் சரி அல்லது பொதுத்துறையாக இருந்தாலும் சரி, தொழிலாளர் களுக்கு நிர்வாகத்தில் பங்கு இருக்க வேண்டும். உற்பத்தியில் பங்கு இருக்க வேண்டும். விநியோகத்தில் பங்கு இருக்க வேண்டும். இது என் கருத்து என்றுதான் சொன்னேன். அந்த மாதிரியாக இன்று பாங்குகளில் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் பங்கு கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி நமது அரசாங்கம் நடத்தக்கூடிய போக்குவரத்து இலாக்காவிலே அல்லது மின்சார இலாக்காவிலே அம்மாதிரியான, ஒரு நிலையை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராயிருக்கிறதா? அதற்கு எந்தவிதமான பணமும் தேவை இல்லை. தமிழ்நாடு அரசாங்கம் அல்லது எந்த மாநில அரசாங்கமானாலும் தங்களிடமுள்ள அதிகாரங்களை வைத்து அதைச் செய்யலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நிர்வாகத்தில் அவர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று எடுத்துச் சொல்லியிருக் கிறோம். நிர்வாகத்தில் பொறுப்பு இல்லாமல் முதலீட்டில் மட்டும்தான் என்று அரசு சொல்லவில்லை. நிர்வாகத்திலும் பொறுப்பு, முதலீட்டிலும் பங்கு என்று சொல்லியிருக்கிறோம். நஷ்டம் வந்தால் எந்தத் தொழிலாளரும் பாதிக்கப்படக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். ஆகவே இதில் எந்தவிதமான சிக்கலும் இல்லையென்று தெரிவித்துக்கொள் கிறேன். 1973-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நாம் இதை நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம். ஆகவே, நாம் நிறை வேற்றத் தொடங்கிவிட்டோம் என்பது ஒரு குற்றமாகாது.

அடுத்து, 13-வது அம்சம். ''ஏழை மாணவர்கள் படிக்கும் மாணவர் இல்லங்கள், அவர்கள் தங்கும் விடுதிகள் ஆகிய

வற்றுக்கு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு விலை யில் வழங்கப்படும்'' இது பிரதமர் அவர்களுடைய 13-வது அம்சத் திட்டம்.

தமிழ்நாட்டில் ஹரிஜனங்கள், மற்றும் பழங்குடி வகுப் பைச் சார்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள், விடுதிகள், அதில் படிக்கும் மாணவர்களின் எணணிக்கை 35,752. பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள், அதில் பயிலும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 16,332.

இந்த இல்லங்களில் அவர்களுக்கு வேண்டிய இன்றி யமையாத பொருள்கள், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷன் மூலம் கட்டுப்பாட்டு விலைக்குத்தான் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து இதை நாம் பல்லாண்டுக் காலமாகச் செய்து வருகிறோம். ஆகவே, இந்தத் திட்டம் புதிது அல்ல. ஆகவே, அதை ஒன்றும் நாம் நிறைவேற்ற மறுக்கவில்லை. அதைச் செய்து வருகிறோம் என்பதைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

''பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலையில் நல்ல நூல்கள், எழுதுபொருள்கள் வழங்குதல், விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படுதல், புத்தக வங்கிகள் அமைத்தல்'' இது 14வது அம்சத் திட்டம்.

திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள்கூட புத்தக வங்கிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுப் புத்தகங்கள் வெளியிடுவது நாட்டுடைமையாக்கப்பட்டு இருப்பதை, அவர்கள் மனம் திறந்து பாராட்டினார்கள். அப்படிப் பாராட்டியதோடு விலைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன, அது குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். ஆகவே அதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

இந்த இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன் தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை தனியார் துறையில் அல்லாமல் அரசாங்கத் துறையிலேயே ஒரு நூல் வெளியீட்டகம் வைத்து, அதன் மூலமாக வழங்க வேண்டுமென்று, பாட புத்தக நிறுவனத்தை அமைத்திருக்கிறதா

இல்லையா எனத் தயவு செய்து மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒன்று. ஆகவேதான் அதை நாம் நிறைவேற்றி முடித்துவிட்டோம் என்றுகூட தைரியமாகச் சொன்னோம்.

விலை குறைக்கப்பட வேண்டாமா என்று திரு. கே.டி.கே. அவர்கள் கேட்டார்கள். நமது கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் கல்வி மானியத்தின் மீது பேசும்போது அதுபற்றி நினைவகங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் விலைக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் நடைபெற்றிருக்கின்ற குறைபாட்டை இந்த இருபது அம்சத் திட்டத்தை அறிவித்த பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மலிவு விலையில் அச்சுத்தாள்களைப் பெற்றுப் பாட நூல் களை வெளியிட தனியார் நிறுவனங்கள் அடக்க விலையைப் போன்று மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்பதற்கு அனுமதி கோரி, அதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக் கிறது. அடக்க விலைக்கு சமமான விலையில், மூன்று மடங்கு அதிகமான விலையில் தனியார் நிறுவனங்கள் தங்கள் பாட நூல்களை விற்க மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்றிருக் கிறது என்பதை மனதில் வைத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினை யில் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் 18 லட்சம் மாணவர்களுக்கு, மூன்றாம் வகுப்பு வரையில் பயிலும் ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறோம். இதற்காக இதுவரை ஆகியுள்ள ஆயத்தச் செலவு ஏறத்தாழ 86 லட்சம் ரூபாய்; இதுவரையில் அதற்குச் செலவாகி இருக்கிறது.

விலை அதிகம் என்று சொன்னார்கள். இப்போது என்னு டைய கையில் இருக்கிற இந்தப் புத்தகத்திற்கு. 'ரிசார்ட்ஸன் லிவிங்க்ஸ் டாஸ்க் ஃபார் எஜுகேஷன்' என்ற இந்தப் புத்தகத் தினுடைய பக்கங்கள் 88. இதனுடைய விலை ரூ. 5. இது தனியார் வெளியிட்டிருக்கிற புத்தகம். 88 பக்கங்களுக்கு விலை ரூ. 5.

அடுத்து இந்தப் புத்தகம்; அறிவியல் நம் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் வெளியீடு. இது 386 பக்கங்கள் கொண்டது. இதனுடைய விலை. ரூ. 4.80 காசு. 88 பக்கங்களுக்கு விலை ரூ. 5. இது தனியார் வெளியீடு. 386 பக்கங்கள் கொண்டதற்கு விலை ரூ. 4.80. நம் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம். நமது அரசின் முயற்சியால் நிறுவப்பட்ட நிறுவனம்.

அடுத்து, மூன்றாம் வகுப்புப் புத்தகம். புவியியல்; இது தனியார் வெளியிடுவது. மாணிக்கம் கம்பெனி என்ற தனியார் கம்பெனி வெளியிடுவது. இதிலே எந்தவிதமான வண்ணப் படங்களும் கிடையாது. வெளியிலே இரண்டு கலர் படங்கள்தான் இருக்கின்றன. இந்தப் புத்தகத்தின் பக்கங்கள் 44. இதன் விலை ரூ. 1.50 காசு. இதற்கு அரசாங்கம் அடக்க விலையில் தாள் கொடுக்கிறது. அரசாங்கம் அடக்கவிலையில் தாள் கொடுத்தும் 44 பக்கங்களுக்கு விலை ரூ. 1.50. இதைத் தனியார் நிறுவனம் வெளியிட்டிருக்கிறார்கள்.

அதே மூன்றாவது வகுப்புப் புத்தகம் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் வெளியிட்டது. 64 பக்கங்கள், விலை ஒரு ரூபாய். எவ்வளவு அழகான படங்கள்! உள்ளே பல வண்ணப் படங்கள். இவ்வளவு படங்கள் போடப்பட்டது ஒரு ரூபாய் விலை. (குறுக்கீடு: நான் இவைகளை விற்பதற்காகச் சொல்லவில்லை. தங்கமணி அவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்காகச் சொல்கிறேன்.)

இந்தியாவிலேகூட பல மாநிலங்களில் இந்த நூல்கள் வெளியிடுவது தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் புள்ளிவிவரங்களைப் பார்த்தால், இராஜஸ்தானில் ஒரு பக்கத்திற்கு 1.08 காசு விலையாகிறது. குஜராத்தில் ஒரு பக்கம் 2 காசு விலையாகிறது. இமாச்சல பிரதேசத்தில் ஒரு பக்கத்திற்கு நான்கு காசுகள் விலையாகிறது. தமிழ்நாட்டில் ஒரு பக்கத்திற்கு ஒரே ஒரு காசுதான் விலையாகிறது.

ஆகவே இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் புத்தகங்கள் மிகக் குறைவான விலையில் தரப்படுகின்றன என்ற விளக்கத்தை

நான் நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோ ஒரு புத்தகம். மார்டின் லூதர் கிங், வினாக்கள் விடைகள். ஒரு ரூபாய்தான் இதன் விலை. பல தனியார் புத்தகங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

நியூ செகன்டரி ஸ்கூல் ஜாக்ரஃபி என்ற புத்தகம் தனியார் வெளியீடு. புவியியல் ரூ. 13.50. இதனுடைய பக்கங்கள் 420. இது நம் வெளியீடு, பெயர் அறிவியல், 402 பக்கங்கள். விலை ரூ. 4.80. பதின்மூன்றரை ரூபாய் எங்கே, நான்கு ரூபாய் எண்பது காசு எங்கே? இதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இதையெல்லாம் அறிவிப்பதற்கு முன்பாகவே நம் மாநிலத்தில் இத்தகைய பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அடுத்து, படித்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி தருதல்; இத்திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இது பிரதமர் அறிவித்த 15-வது அம்சத் திட்டம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராசாராம் அவர்கள் 107 விகிதத்தைத் தாண்டிவிட்டோம் என்று ஒரு அறிக்கை கொடுத்தார்கள். எனக்கேகூட அது எப்படி 107 சதவிகிதம் என்று ஆச்சரியமாக இருந்தது. பிறகு புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில் தனியார் துறையில் 4,264 இடங்களும், மாநில அரசுத் துறையில் 2,123 இடங்களும், ஆக மொத்தம் 6,387 இடங்கள் பயிற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அதாவது 107.45 சதவிகிதம். நாம் வரையறுத்த இலக்கையும் மிஞ்சி படித்த இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

இதையெல்லாம் விளம்பரப்படுத்த வேண்டாமா என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். கர்நாடக மாநிலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டு இருக்கிறது. ''இருபது அம்சத் திட்டம்'' என்று பிரதமருடைய படத்தையும் போட்டு, முதலமைச்சருடைய படத்தையும் போட்டு விளம்பரப்படுத்தி

யிருக்கிறார்கள். இங்கே போட்டால்தான் பாவம். அவர்கள் எல்லாம் போடலாம். இங்கே போட்டால் டெல்லிக்குத் தூதே போகும்; ஆனால் மைசூரில் இது பற்றி அவர்கள் தெரிவிக்கும் போது, A specially designed training programme for about 1,000 locally selected persons during this year in selected growth centers in the state. என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது அங்கே ஆயிரம்தான்; அதாவது விளம்பரப்படுத்தப்பட்ட இடத்தில் ஆயிரம்தான்; நமக்கே 6,387 ஆகும். நாங்கள் இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்.

விளம்பரப்படுத்தவில்லை என்று சொல்கிறீர்கள். (விளம் பரத்தைக் காட்டி) இதைவிடவா பெரிய விளம்பரம் செய்ய வேண்டும்? இவ்வளவு பெரிய விளம்பரம்! இந்த விளம் பரத்தில் நாங்கள் என்ன பிரதமரை விட்டுவிட்டோமா? இதில் ஆரம்பத்திலேயே பிரதமரின் பொருளாதாரத் திட்டங்களைப் பின்பற்றி' என்றுதான் தொடங்கியிருக்கிறோம். முடிக்கும் போதும் இந்த விளம்பரத்தில் பிரதமர் அறிவித்த எஞ்சிய திட்டங்களை நிறைவேற்ற தமிழக அரசு பீடு நடை போடு கிறது'' என்றுதான் முடித்திருக்கிறோம்.

ஆக இந்த இரண்டு பக்க விளம்பரத்திலும் நாம் என்னென்ன காரியங்களைச் செய்தோம் என்று அறிவித்து இருக்கிறோம். தேவராஜ் அர்ஸ்க்கு இருக்கிற உரிமை, தமிழ் நாட்டு முதலமைச்சருக்கு இருக்கக்கூடாதா? அவர் என்னென்ன காரியங்களைச் செய்தோம்? செய்யப்போகிறோம் என்று அறிவித்திருக்கிறார். அதைத்தான் நானும் அறிவித்திருக்கிறேன். அவரும் பிரதமரின் பெயரைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்; படமும் போட்டிருக்கிறார்.

நாம் படம் போடவில்லை; காரணம் ஒரு முறை போட்டோம். அதாவது ஆறு கோடி ரூபாய் யுத்த நிதியாக இந்தியாவில் எந்த மாநிலமும் கொடுக்காத அளவிற்கு, கொடுத்த நேரத்தில், யுத்த நிதி கொடுங்கள் என்று கேட்கின்ற ஒரு விளம்பரத்தைப் பிரதமருடைய படத்தையும் முதலமைச்ச ருடைய படத்தையும் போட்டு வெளியிட்ட விளம்பரத்திற்குப் பெரிய மறுப்பு, பிரதமருடைய அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்

பட்டது. ஆகவேதான் படம் போட்டால்தான் மறுப்புத் தெரிவிப்பார்களோ என்பதற்காகப் படம் போடவில்லையே தவிர, விளம்பரத்தை வெளியிட்டு இருக்கிறோம்.

திருமதி த.ந.அனந்தநாயகி: இப்போது காட்டினார்களே, அந்த மாதிரியா படம் போட்டார்கள்? அதற்கு முறை, தகுதி எல்லாம் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: என்ன முறை, தகுதி என்று சொன்னால் சரியாக இருக்கும்.

திருமதி த.ந. அனந்தநாயகி: அதுதான் பிரைம் மினிஸ்டர் செக்ரேடேரியட்டிலிருந்தே சொல்லியிருக்கிறார்களே, நான் என்ன சொல்வது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பிரதமர் அலுவலகத் திலிருந்து சொன்னதால் படம் போடவில்லை என்றுதான் சொன்னேன். அவ்வளவுதான்.

16வது அம்சம், ''அடிமைத் தொழிலாளர் முறை ஒழிக்கப் பட வேண்டும்.'' தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது இல்லை. என்று நாம் வாதிக்கிறோம். ஓரிரு இடங்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அதற்கு இன்றைக்கு மத்திய அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்துவிட்டது. எங்கேயாவது ஒன்றிரண்டு தலைகாட்டினாலும் நிச்சயமாக அது ஒழிக்கப் படும்; அதில் நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை.

17-வது அம்சம். ''கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குத் தனிச்சட்டம் கொண்டு வரப்படும்'' -இது மத்திய அரசு கொண்டு வரவேண்டியதாகும். ஆகவே, கண்டனத் தீர்மானம் அங்கே வரவேண்டும். இங்கே கொண்டு வருவது பொருத்தமல்ல.

18-வது அம்சம், ''தொழிலில் முதலீடு செய்வதற்கான இப்போதுள்ள முறைகளைத் தளர்த்தி, இறக்குமதி லைசென்சைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்', இதிலே கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சில அபிப்பிராய பேதங்கள் உண்டு என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கூட, இது மத்திய அரசு எடுக்கவேண்டிய முயற்சி என்பதை இந்த மாமன்றம் நன்கு

உணரும். ஆகவே, இதிலும் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

19-வது அம்சம், ''சாலைப் போக்குவரத்துக்கான தேசீய அனுமதிச் சீட்டு அளிக்கும் திட்டம்'' இதில் தமிழ்நாடு அரசு மாநிலத்தின் உரிமைகள் பறிபோகாமல் பார்த்துக் கொள் ளுங்கள், இதை ஆதரிக்கிறோம் என்று ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறது. இப்போது ஏதோ 5,700 பர்மிட் லாரிக்கு என்று மொத்தமாக அறிவித்து இருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டிற்கு 200 என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் சர்க்காருக்கு எதுவும் உறுதியாக திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. அது பற்றி அந்தத் துறை அமைச்சர் எல்லாம் கலந்து பேசி முடி வெடுப்பார்களோ என்னவோ தெரியவில்லை. இதுவும் மத்திய அரசு செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியமே அல்லாமல் வேறு அல்ல.

கடைசியாக 20-வது அம்சம். ''தனி நபரின் வருமானத் தின் மீது விதிக்கப்படுகின்ற வருமான வரியின் வரம்பு, ஆண்டு ஒன்றுக்கு ஆறாயிரத்திலிருந்து எட்டாயிரமாக உயர்த்தப்பட வேண்டும்'', இது இருபதாவது அம்சம். இதிலும் நமக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை. மத்திய அரசு விவகாரம். அதுவும் செய்து முடித்து விட்டார்கள்.

ஆக, இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்ற கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே, அதில் நான்கைந்தையாவது குறைத்து விட்டுப் பதினைந்து அம்சத்தை நிறைவேற்றலாம் என்றல்லவா கொண்டு வந்திருக்க வேண்டும். மத்திய அரசுப் பொறுப்பு என்னென்ன, மாநில அரசின் பொறுப்பு என்னென்ன என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல், மொத்தமாக இருபது அம்சத்தையும் நாங்கள் நிறைவேற்றவில்லை என்று நீங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது பொருத்தமல்ல; என்னிடம் காட்டியிருந்தால், உங்கள் தீர்மானத்தைத் திருத்திக் கூட கொடுத்திருப்பேன். அதை நீங்கள் செய்யவில்லை.

திருமதி சத்தியவாணி முத்து: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 அம்சங்களையும் பற்றிச் சொல்லிவிட்டதாகச்

சொல்கிறார். பாண்டட் லேபரைப் பற்றி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அதுவும் அதில் ஒரு அம்சம்தான். அதை விட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பாண்டட் லேபர் பற்றிச் சொல்லும்போது அம்மையார் அவர்கள் சபையில் இல்லை. பாண்டட் லேபரைப் பற்றிச் சொல்லிவிட்டேன். பாண்டட் லேபர் பற்றி இந்திய அரசாங்கமே சட்டம் கொண்டு வந்துவிட்டது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே! இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்பட வேண்டுமென்று கூறிய அமைச்சர், இந்திராகாந்தி அம்மையார் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் கருநாடக மாநிலத்தில் இருக்கிற அமைச்சர், அந்தக் கட்சியிலுள்ள அமைச்சர் இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்ன காரணத்தால் அவரே ஒழிக்கப் பட்டார். (கைதட்டல் சிரிப்பு).

திருமதி த.ந. அனந்தநாயகி: அம்மையார் அவர்கள் எந்த ஆதாரத்தை வைத்துப் பேசினார்கள் என்று சொன்னால் பரவா யில்லை. அவர்கள் இஷ்டத்திற்கு எதை வேண்டுமானாலும் சொல்லிவிடுவார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆதாரம் அற்ற முறையில் நான் எப்போதும் பேசவே மாட்டேன். எப்போதும் எங்களுடைய பொறுப்பு அதிகம் என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

திரு கே.டி.கே. தங்கமணி: ஜூலை 1ம் தேதிக்குப் பிறகு, இந்த பாண்டட் லேபர் ஒழிக்கப்பட வேண்டுமென்று அறிவித்ததற்குப் பதில், அது கன்கரன்ட் சப்ஜக்ட் என்ற நிலை இருப்பதால், பல மாநிலங்களில், அதிலும் குறிப்பாக ஆந்திரா, கேரளா, ஒரிசா, இமாச்சலப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் அவசரச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அப்படி இங்கேயெல்லாம் அவசரச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறபோது தமிழ்நாட்டில் ஏன் அவசரச் சட்டம் கொண்டுவரவில்லை? எனவே, நீங்கள் சொன்ன காரணம் தமிழ்நாட்டில் பாண்டட் லேபர் இல்லை என்பது எந்த

விதத்தில் ஒத்துக்கொள்ளக்கூடியாதக இருக்கிறது என்று தெரிய வில்லை. அப்படி பாண்டட் லேபர் இருக்கும் நிலையில் அந்த மாதிரி அவசரச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற வில்லையே, ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே! அவசர சட்டம் வந்த உடனேயே அரசு உடனடியாக அது பற்றிப் பரிசீலித்து வந்தது. நீலகிரி மாவட்டத்தில் இருப்பார்களோ என்று விசாரணை செய்து கொண்டு பார்த்தோம். அந்த இடத்திலும் இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எந்த இடத்திலும் தற்போது அந்த நிலை இல்லை. ஆகவே, அது குறித்துச் சட்டம் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை வரவில்லை.

திருமதி சத்தியவாணி முத்து: அக்ரிமெண்ட் எழுதிக் கொண்டு இல்லையென்றாலும், கடன் பத்திரம் மூலம் சில குடும்பங்கள், சில குடும்பங்களுக்கு அடிமையாக வேலை செய்கிறேன் என்று எழுதித் தந்து இருக்கிற நிலை இருக்கிறது. அதைக் கட்டாய ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டேன். பாண்டு மூலமாக இல்லாவிட்டாலும், கடன் பத்திரம் மூலமாக இன்னார் இன்னாருக்கு இறுதி வரை வேலை செய்ய வேண்டும் என்று முறை இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட சூழ் நிலை இங்கே இல்லை. வடநாட்டில் இருக்கும் பிரச்சினையை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். வடநாட்டைப் பற்றி அம்மையாருக்குத் தெரியாது. வடநாட்டில் இருக்கும் அரசாங் கங்கள் அதற்குச் சட்டம் போட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலை எந்த இடத்திலும் இல்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: நான் அமைச்சராக இருந்த போது லோக் சபையிலிருந்து இப்படிப்பட்ட கேள்வி கேட்டு இருந்தார்கள். அப்போது அதிகாரிகள் சொன்னார்கள். நமது மாநிலத்தில் கூட சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இன்னும் அந்த முறை இருக்கிறது என்று. அதைத்தான் இப்போது பிடிவாதமாகப் பேசிக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் வேண்டுமானால் இல்லை என்று சொல்லலாம். மக்கள் மத்தியில் இருக்கும் நிலையைப் பார்த்து

விட்டுத் தான் நாங்கள் சொல்கிறோம். அதிகாரிகளைக் கேட்டால் இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் மத்திய அரசுக்கு அவர்கள் பதிலைத் தரவில்லை.

திரு. மு. சின்னசாமி: கோயம்புத்தூர் மாவட்டத்தில் அப்படிப்பட்ட முறை கிடையவே கிடையாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எனக்கு சேலம், கோவை மாவட்டங்களில் தெரியாத கிராமமே கிடையாது. அப்படிப்பட்ட விண்ணப்பம் ஒருவரிடமிருந்து கூட அரசிடம் வரவில்லை. இந்த நிலை உள்ளபடியே இல்லை.

Dr. H.V. Hande: Now the Hon. Ex-Minister for Health Welfare has said categorically that during her ministership, information was given to her by respective Collectors. Now present Hon. Minister for Labour refutes that. So, will the Chief Minister come forward to give an assurance that the matter will be examined de novo so that we need not waste time of the House. Now that there is a controversy raised one of the points mentioned in the 20 point programme of assurance that the whole thing will be looked afresh and information collected and given to the House.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே! நடந்து முடிந்து போன பிரச்சினை. இந்த அடிமை முறை மறைமுகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியே ஒன்றிரண்டு இடங்களில் இருந்தாலும் அது ஒரே அடியாக அழிந்து விடுவது உறுதி. இல்லை இந்திய அரசு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டதால் இந்தப் பிரச்சினை அடி பட்டுப் போகிறது. ஆகவே, இதைப் பற்றிப் பெரிதுபடுத்தி நாம் பேசவேண்டியது இல்லை.

10 அம்சத் திட்டங்கள் தான் 20 அம்சத் திட்டங்களாகப் பெருக்கெடுத்து இருக்கின்றன என்பதை நான் முதலில் எடுத்துச் சொன்னேன். அதைப்பற்றி 'மெயின் ஸ்ட்ரீம்' என்ற ஒரு பத்திரிகை, திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிந்த பத்திரிகை என்று நினைக்கிறேன், அதன் ஆசிரியர், நிக்கல் சக்கரவர்த்தி அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்பது எனக்குக் கிடைத்துள்ள தகவல். இது

சரியாக இருக்கும் என்றும் கருதுகிறேன். இல்லையென்றால் நண்பர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இல்லையென்று மறுத்து இருப்பார்.

அந்தப் பத்திரிகையில் ஆசிரியர் நிக்கல் சக்கரவர்த்தி, அப்பத்திரிகையின் 13-வது ஆண்டு மலரில் வெளி வந்திருக் கிறது. அந்த மலருக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர் களும் ஒரு வாழ்த்துச் செய்தி வழங்கியிருக்கிறார்கள். அந்த மலரில் மத்திய அரசின் அமைச்சர்களெல்லாம் கட்டுரை தீட்டி யிருக்கிறார்கள். ''எடிட்டர்ஸ் நோட்புக்'' என்று தலையங்கம் தீட்டியிருக்கிறார். நமது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் நிக்கல் சக்கரவர்த்தி, முதல் ஆசிரியர், இந்த திட்டங்களைப் பற்றி:-

On the programmatic plane, there is noticeable advance ஒரு பெரிய மாற்றமாக இருக்கலாம். from mere passing part resolutions promising reforms (and in this respect, too, one of course, claim progress from the Ten Points of 1967 to Twenty Points of 1975) there is all round exhortation by Public at different tiers of relevance, calling upon the flocks under command to take up the implementation of the declared programme. From resolutions to exhortation of the declared programme. From resolutions to exhortations marks a perceptive advance to commitment."

அதாவது வெறும் தீர்மானங்களிலிருந்து மக்களை ஊக்குவிக்கக் கூடிய அளவிற்குப் பேசுகிற முன்னேற்றம்தான். 10 அம்சமாக இருந்தது 20 அம்சமாக வந்ததே ஒரு பெரிய முன்னேற்றம் என்று கூறியிருக்கிறார். இந்த அளவிற்கு கேலி புரிகின்ற அதனுடைய ஆசிரியர் 20 அம்சத் திட்டத்தைப் பற்றி இன்னொரு இடத்திலே குறிப்பிடும்போது...

Sri C. Subramaniam's plan for setting up rural banks with the World Bank's funds but without taxing the rural rich deserves note of every patriotic Congressman. சுப்பிரமணியம் இந்தியா வில் இருக்கிற பணக்காரர்களிடத்தில் இருந்து பாங்கிகளுக்குப் பணத்தைப் பெறுவதைவிட, ''வோர்ல்ட் பாங்கிகள் இடமிருந்து பெறவேண்டும் என்று சொல்வதை தேச பக்தி யாகக் காங்கிரஸ்காரர்கள் சிந்திக்க வேண்டும். சுப்பிரமணியம்

என்று எனக்குத் தெரியவில்லை. தேச பக்தியுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

Those who think that the popularisation of the 20 point programme is by itself a guarantee for socio-economic advance tend to forget that the first party to welcome it முதன்முறை வரவேற்றார்கள்.

The first party to welcome it within a couple of hours of announcement, as pragmatically realistic was the Federation Indian Chambers of Commerce and Industry, who have already been fortified by the Prime Minister's official assurance again further nationalisation.

இனிமேல் தேசீயமயம் எதுவும் ஆக்கப்படமாட்டாது என்று பிரதம மந்திரி உறுதிமொழி வெளியிட்டதும் முதன் முதலில் அப்படி அறிவிக்கப்பட்ட 2 மணி நேரத்திற்குள் அதனை ஆதரித்தவர்கள் யார் என்பதை நிக்கல் சக்கரவர்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பெருமைமிகுந்த உறுப்பினர், குடியரசுத் தலைவர் வாழ்த்துரை வழங்கப்பட்ட 'மெயின் ஸ்ட்ரீம்' பத்திரிகையின் ஆசிரியர், அதன் 13-வது ஆண்டுமலரில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஒன்றில் இருந்தே இந்த 20 அம்சத் திட்டத்திற்கு எப்படிப்பட்ட வரவேற்பு சாதாரண மக்களின் சார்பாக அளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இருபது அம்சத் திட்டத்தை நம்முடைய கையிலே கொடுத்துவிட்டு, இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான நிதி ஆதாரங்களையும் பெருக்குகின்ற வழிவகைகளைச் சொல்லாமல் அல்லது சொல்வதற்கு முன் வராமல், நம் முடைய பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல, பாராளுமன்றத்திலே இதற்கு ஒரு பாராட்டுத் தெரிவித்தார்களேயல்லாமல், பாராளுமன்றத்திலே இந்த 20 அம்சத் திட்டத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்களா அல்லது எல்லா முதலமைச்சர்களையும் அழைத்து, தேசீய வளர்ச்சிக் குழுவைக் கூட்டி, எந்தெந்த மாநிலத்தில் நிறைவேற்றப் போகிறீர்கள், எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள், இதுவரை செய்யப்பட்ட

காரியங்கள் என்னென்ன, இனி செய்யப்படவேண்டிய காரியங்கள் என்னென்ன, இதற்குத் தேவையான நிதி உதவி எவ்வளவு என்று கேட்டார்களா என்றால் கிடையாது.

அது மாத்திரமல்ல. வானொலியில் பேசிய பேச்சைத்தான் 20 அம்சத் திட்டம் என்று இன்றைக்கு எடுத்து வைத்துக் கொண்டு 'ஆகா' எவ்வளவு பெரிய புரட்சிகரமான திட்டம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், அந்தப் பேச்சைப் பிடித்துக்கொண்டு 20 அம்சத் திட்டம், அது ஒரு புரட்சிகரமான திட்டம் என்று சொல்கிறீர்களா, இந்தத் திட்டத்தில் எது புரட்சி?

பிரதம மந்திரி அவர்கள் வானொலிப் பேச்சில் இனிமேல் தொழில்கள் தேசியமயம் ஆக்கப்படமாட்டாது என்று கூறி யிருக்கிறார்களே, அதை ஏன் 21-வது அம்சம் என்று சேர்த்துக் கொள்ளவில்லை? சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இருபது அம்சம் என்கிறார்கள். உற்பத்தியாளர்களையும், தொழில் அதிபர்களையும் வைத்துக்கொண்டு இனிமேல் தொழில்களை தேசிய மயம் ஆக்கப் போவதில்லை என்று உறுதி அளித்திருக்கிறார்களே. அதனை 21-வது அம்சமாக சேர்த்துக் கொள்வீர்களா? இது எப்படிப் புரட்சிகரமான திட்டமாகும்?

இந்த 20 அம்சத் திட்டத்தில் 14, 15 திட்டங்களை நிறை வேற்றிய அரசாங்கத்தை, இன்னும் ஒன்றிரண்டு திட்டங்களை நிறைவேற்ற இருக்கிற அரசாங்கத்தை, இந்த 20 அம்சத் திட்டத்தில் இல்லாத திட்டமாக கடந்த 4, 5 ஆண்டுகளாக கிராமப்புறங்களுக்கு நம்முடைய அதிகாரிகள் சென்று மக்களுடைய கருத்துக்களை அறிகிற மனுநீதித் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிற இந்த அரசாங்கத்தை, எந்த மாநிலத்திலும் அந்த மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக் காத சலுகை, அரசாங்க ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற இந்தத் திட்டத்தின் கீழ் ஒன்றரை ஆண்டு காலத்தில் 2,200 அரசு ஊழியர் குடும்பங்களுக்கு தலைக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு, இந்தத் திட்டத்தை 20 அம்சத் திட்டத்திற்கு

மேலாக செய்திருக்கிற இந்த அரசைப் பார்த்து, இந்த அரசு எடுத்துள்ள சமூக நலத்திட்டங்களில், கண்ணொளி, உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டம், தொழுநோய் பிச்சைக் காரர் மறுவாழ்வுத்திட்டம், விதவைகள் நலவாழ்வு, ஆதரவற்ற அனாதை சிறுவர்களுக்கு இல்லங்கள் என்று இப்படி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற இந்த அரசைப் பார்த்து, காந்தியார் வழியில் நின்று நாங்கள் நடத்துகிறோம் என்பதற்கு அடையாளமாகக் காங்கிரஸ்காரர்களும் செய்யாத காரியத்தை, தமிழகத்தில் மது விலக்கை இடையிலே ஒத்தி வைத்திருந்தாலும், மீண்டும் நடைமுறைப்படுத்தி, பரிசுத் திட்டத்தை அறவே ஒழித்து, குதிரைப்பந்தயத்தை நிறுத்தி, இப்படி 20 அம்சங்களுக்கு மேலாக நிறைவேற்றி வரும் இந்த அரசைப் பார்த்து, 20 அம்சத் திட்டத்தில் எதுவுமே செய்யவில்லை என்று கண்டனம் செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

குடிநீர் வாரியம் எந்த மாநிலத்தில் இருக்கிறது? மற்ற எந்த மாநிலத்திலாவது குடிசைமாற்று வாரியம் இருக்கிறதா? அரிசன வீட்டு வசதி வாரியம் இருக்கிறதா? இப்படிப்பட்ட வாழ்வின் முன்னேற்றத் திட்டங்கள் என்று தேர்ந்து எடுத்து, வானொலியில் அறிவித்தது மாத்திரம்தான் திட்டங்கள் என்று வைத்துக்கொண்டு, 20 மட்டுமல்ல, 21, 22 என்று சொல்லத் தக்க அளவிற்கு பெரிய முற்போக்கான திட்டங்களைப் போட்டு, அவற்றை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற இந்த அரசைப்பார்த்து கண்டிக்கிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறபோது அவசர காலத்திற்குப் பிறகு, என்ற ஒரு வார்த்தையை நண்பர் அரங் கண்ணல் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, போட்டிருக் கிறார்கள். அவசர காலத்திற்குப் பிறகா இந்தக் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்? அவசர காலத்திற்கு முன்னாலேயே இந்தக் காரியங்களை நிறைவேற்றவில்லையா? கடந்த ஆறேழு ஆண்டுகளாக நிறைவேற்றவில்லையா? இப்போது அவர்கள் சொன்னபிறகுதான் இதற்கு உயிரே வந்ததா? இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்ற முடியாத காரணத்தினால்தான் இந்த 20

அம்சத் திட்டங்கள் வந்தன என்று முதலிலே சொல்லப்பட்டது. பிறகு இன்றைக்கு அதை மாற்றி இதை ஒரு முனைப்புத் திட்டம் என்று சொல்கிறார்கள்.

கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும், வழி மொழிந்தவர்களும் அவசர நிலையைப் பற்றி இங்கே கருத்துக் களைத் தெரிவித்த காரணத்தினால் நானும் சில விளக்கங்களைச் சொல்லவேண்டிய நிலைமைக்கு ஆளாகி இருக்கிறேன்.

அவசர நிலை பற்றிக் கண்டனத் தீர்மானத்தில் குறிப்பிடப் படாவிட்டாலும் அதை ஒரு காலகட்டமாக மாத்திரம் இங்குக் குறிப்பிட்டார்கள். அதாவது அவசர நிலைக்குப் பிறகு அறிவிக்கப்பட்ட 20 அம்சத் திட்டம் என்று ஒரு காலகட்டமாக மாத்திரம் அதைக் குறிப்பிட்டார்கள்.

ஆனால் அவசர நிலைக்கு மாறான கருத்துக்களைக் கூறுவது ஒன்றும் தவறானதல்ல. இதற்கு, நமக்கு ஏற்கனவே பல முன் உதாரணங்கள் இருக்கின்றன. அன்னிய நாட்டுப் படை யெடுப்பையொட்டி, அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தையே எதிர்த்தவர்கள் எல்லாம் உண்டு. எதிர்த்துத் தீர்மானம் கொடுத்தவர்கள் எல்லாம் உண்டு.

1964-ஆம் ஆண்டு டெல்லி பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் எனது மதிப்பு மிகுந்த முதுபெரும் நண்பர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர் திரு. பூபேஷ் குப்தா அவர்கள் அன்றைய நெருக்கடி நிலையை ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையே கொண்டு வந்தார். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில். அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது முகப்பிலே சொன்னார். ''இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை பாதுகாப்பு அடிப்படையிலே வளர்ப்பதற்கும் நெருக்கடி நிலைமை தேவையில்லை'' என்று சொன்னார்.

இன்றைக்கு என்ன சொல்கிறோம்? இந்தப் பொருளாதாரத் திட்டங்களுக்கெல்லாம் நெருக்கடி நிலை தேவை என்று சொல்கிறோம்.

பூபேஷ் குப்தா. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவசர நிலை தேவை இல்லை, ரத்து செய்ய வேண்டும் என்று தீர்மானமே கொண்டுவந்து பேசுகிறார். அவர் பேச்சை அப்படியே குறிப்பிட விரும்புகிறேன்.

They use the emergency here in order to build up bureaucracy, to build themselves up and to give security to the Congress regime, security to the Congress adminstration, a bad administration. That is what I say. That is there. Therefore they want to create an artificial political atmosphere under the Emergency in order to divert the people's attention from the real day-to-day issues. Emergency powers are needed to shield corruption, inefficiency and nepotism in the administration and cover up the bankruptcy in their whole policy and execution. That is clear. The Emergency powers are needed to intimidate the working people and suppress the democratic movement.

மறுபடியும் சொல்கிறார்,

"Emergency means more power for the bureaucracy. Emergency means more power for the Ministers. Emergency means more power to issue threats to the democratic rights and liberties of the people. Emergency means a sword in the hands of the ruling party, to brandish over the heads of the Opposition parties and Emergency means that when the elections take place, you can go and tell the people that if they voted against you, then the Defence of India Rules would be used as has been done in some parts of the country. This is called Emergency."

அந்நியநாட்டுப் பாதுகாப்பு...

திரு. கே.டி.கே. தங்கமணி: எமர்ஜன்ஸி அறிவித்தது 1962-ல் அவர் 1964-ல் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார், இனிமேல் அந்தத் தீர்மானம் தேவையில்லை என்று.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அவர் எமர்ஜன்சிக்கு விளக்கம் தருகிறார். Emergency means more powers for the

bureaucracy. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நீட்டப்படுகிறது என்று விளக்கம் தரப்படவில்லை.

Emergency means more power for the Ministers, Emergency means more power to issue threats to the democratic rights and liberties of the people. Emergency means a sword in the hands of the ruling party, to brandish over the heads of the Opposition parties and Emergency means that when the elections take place, you can go and tell the people that if they voted against you, then the Defence of India Rules would be used as has been done in some parts of the country. This is called emergency.

இரண்டாண்டுக் காலம் தாமதித்து எமர்ஜன்சி என்று பூபேஷ் குப்தா சொல்லவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு உள்ள நெருக்கடி நிலைக்கு என்று சொல்லவில்லை. ஆக, நெருக் கடிக்குப் பிறகு, அவர் தருகின்ற விளக்கம் இது. இந்த விளக்கம் அப்போதுதான் சொல்லவில்லை; நெருக்கடி நிலை என்பதற்குத் தான் விளக்கங்களைச் சொல்கிறார். அவை எப்போதும் நெருக்கடி நிலை கண்டனத்திற்குப் பொருந்தும்.

சிலபேர் கேட்டார்கள். அண்ணா இருந்தால் இதை ஆதரித்து பேசியிருப்பார்கள் என்று சொன்னார்கள். ஏதோ அண்ணாவுடனேயே நெருங்கிப் பழகியவர்களைப்போல, என்னைப்போல, நாவலரைப் போல, பேராசிரியரைப் போல, மதியைப் போல, மற்றவர்களைப் போல, நெருங்கிப் பழகியது போல் சொன்னார்கள். சத்தியவாணி முத்து அவர்கள் கூட இருந்திருக்கிறார். நான் மறுக்கவில்லை. ஆனால் அண்ணா வுடனேயே நெருங்கி இருந்தவர்களைப்போல சிலர் கூறு கிறார்கள்.

ஆனால் நெருங்கி இருந்த சத்தியவாணிமுத்து அம்மை யார் செய்ததுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அண்ணா இதை ஏற்கெனவே ஆதரித்து இருக்கிறார் என்றுகூடச் சொன்னார்கள்.

நண்பர் சீனிவாசன் அவர்கள்கூட இதை அண்ணா வழியில்தான் ஆதரிக்கிறோம் என்று சொன்னார்.

1966 பிப்ரவரி திங்களில் பாராளுமன்றத்தில் இரு அவைகளையும் வைத்து குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையின் மீது மாநிலங்கள் அவையில் அண்ணா அவர்கள் பேசுகிறார்கள். அதையும் இங்கே குறிப்பிட விழைகிறேன்.

"I would request and demand of this Government to repeal Emergency and this D.I.R. They have got enough powers the laws that they have, to deal with any mischief, with any social elements...

Why are they apprrehensive of their own people?...

Therefore, I would demand of this Government that they should forth with lift this Emergency and this D.I.R., and release those are kept in jail... And unless and until they do that.

இதுதான் முக்கியம்.

I would not have a claim to decency and democracy. To the public the first and foremost and the one question that they will to answer will be, "Why do you keep this Emergency the D.I.R.?"

அண்ணா வழியைப் பின்பற்றித்தான், அன்றைக்கு நெருக்கடி நிலைபற்றி அண்ணா அவர்கள் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தார்களோ அந்தக் கருத்தைப் பின்பற்றித்தான் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு தீர்மானத்தை வடித்தெடுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சி 1964-ல் ஒரு கருத்து, 1974-ல் ஒரு கருத்து, 1975-ல் ஒரு கருத்தைக் கொள்ளலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அரசியல் பாரம்பரியம்மிக்க ஒரு கட்சியாகப் பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட காரணத்தால், நமக்கு உறவாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் நியாயங்களின் தன்மையைப் பார்த்து நம்முடைய கழகத்தின் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று, அந்த அடிப்படை அரசியல் இலக்கணத்தை வகுத்துத்தந்த அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றியது.

டாக்டர் ஹண்டே பேசும்போது சொன்னார்கள், செயற் குழுவில் ஒரு தீர்மானம், கடற்கரையில் ஒரு தீர்மானம், நெல்லையிலே ஒரு தீர்மானம், இப்படி ஏன் ஒன்றோடொன்று முரண்பட்டு, பின் வலித்துக்கொண்டீர்கள் என்றெல்லாம் கேட்டார். அவர்கள் கேட்டது எப்படி இருந்தது என்றால், ''நீங்கள் இன்னும் வேகமாக அல்லவா போயிருக்க வேண்டும்'' (சிரிப்பு) என்று சொல்வதுபோல் இருந்தது. அவரெல்லாம் இங்கே இருந்திருந்தால் அப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லி, இன்னும் வேகமாகப் போய்க்கொண்டிருங்கள் என்று சொல்லியிருப்பார் போலும். அந்த அளவிற்கு மத்திய சர்க்கார் மீது அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருக்கிறது. மத்திய சர்க்கார் ''நெருக்கடி நிலையைக் கொண்டு வந்து, நம்மை நெருக்கடியில் விட்டுவிட்டார்களே; அதை எதிர்க்க வேண்டும்; நம்மால் எதிர்க்க முடியவில்லையே; அப்படிப்பட்ட தலைமையின் கீழ் நாம் அகப்பட்டுக்கொண்டோமே'' என்று வருந்துகிறார்கள்.

டாக்டர் எச்.வி.ஹாண்டே: ஏற்கெனவே நான் பலமுறை இந்த மன்றத்தில் முதலமைச்சருடைய கற்பனைத் திறனைப் பாராட்டி இருக்கிறேன். அந்தக் கற்பனைத் திறனைப் பாராட்டு வதற்கு இதன் மூலம் இன்னொரு வாய்ப்பைத் தந்திருக்கிறாரே. அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் மாறான கருத்து என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பெ. சீனிவாசன்: அண்ணா அவர்கள் ராஜ்ய சபை யிலே தன்னுடைய கருத்தை எடுத்துரைத்தார்கள். அதே மாதிரி, நெருக்கடி நிலைமை வந்தவுடனே, நீங்கள் கடற்கரையிலே, பொதுக் கூட்டத்திலே, செயற்குழுவிலே தீர்மானம் போடாமல் இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து கண்டித் திருக்கலாமே.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: போர் வீரனுக்குத் தெரியும், எந்தக் கையிலே வாள் வைப்பது, எந்தக் கையிலே கேடயம் வைப்பது என்று (பலத்த ஆரவாரம்).

தலைவரவர்களே! முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு தீர்மானம் என்ன?

1. அவசரக்கால பிரகடனத்தைத் திரும்பப் பெற வேண்டும்.
2. நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.
3. பத்திரிகைகளின் கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்டு, பத்திரிகைகளுக்கு நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்க வேண்டும்.

இதுதான் எங்கள் கட்சியின் எல்லாத் தீர்மானங்களிலும் உள்ள மைய அம்சம். இப்போது அம்சம் என்றால்தான் எல்லாருக்கும் புரியும் (சிரிப்பு.)

அவசரக்கால பிரகடனத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்பது முதலாவது அம்சம்.

நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பது இரண்டாவது அம்சம்.

பத்திரிகைகளுக்கு உரிய நியாயமான உரிமைகளை தடையின்றி வழங்க வேண்டும் என்பது மூன்றாவது அம்சம்.

இந்த அம்சங்களை எப்படி நிறைவேற்றுவது? ''தமிழ் நாட்டு மக்கள் காந்தியடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சிங்கமாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதையில் இருந்து தவறாமல் தமக்கே உரிய தனிப்பண்பாட்டுடன், அமைதியான முறையில் வன்முறை தவிர்த்து, வன்முறை இல்லாத வழியில், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்த செயற்குழு கேட்டுக் கொள்கிறது''. இதுதான் முதல் தீர்மானம்.

''காந்தியடிகள் நெறி, அண்ணா அவர்களுடைய வழி, தமிழர்களுக்குரிய தனிப்பண்பாடு, அமைதியான முறை; இவற்றுடன் வன்முறையற்ற முறை, சட்டம், ஒழுங்கிற்கு ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு

காண வேண்டும். இதில் எந்த இடத்திலும் கிளர்ச்சி செய்யப் போகிறோம் என்று சொல்லவில்லை.

இந்தச் செயற்குழு தீர்மானம் போட்டபிறகு, என்னை வந்து நிருபர்கள் சந்தித்தார்கள். என்னையும் பொதுச் செயலாளரையும் மற்றவர்களையும் நிருபர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் ''இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறீர்களே. டில்லியிலேயிருந்து வருகிற தாக்கீதுகளை நீங்களே நிறைவேற்றுவீர்களா, மாட்டீர்களா?'' என்று கேட்டார்கள். என்ன தாக்கீதுகள் என்று கேட்டபோது, ''சிலரைக் கைது செய்ய வேண்டும்; கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள் பட்டியலில் இருப்போரைக் கைது செய்யவேண்டும்; சட்ட விரோதமான சங்கங்கள், அமைப்புகள் ஆகியவை மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தத் தாக்கீதுகளை நிறைவேற்றுவீர்களா?'' என்று கேட்டார்கள்.

அப்போது நான் சொன்னேன், ''செயற்குழு இந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறதேயல்லாமல், இப்படிப்பட்ட தாக்கீதுகள் டெல்லியிலிருந்து வந்தால் அதை நிறைவேற்ற வேண்டாம் என்று செயற்குழு எனக்குச் சொல்லவில்லை'' என்று தெரிவித்தேன். அதுவும் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அந்தவகையில் பார்த்தால் இந்த இரண்டு மூன்று மாதங்களில் டில்லியினுடைய தாக்கீதுகள், இந்த அவசரச் சட்டத்தின் காரணமாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் என்ற முறையில் இந்த அரசுக்கு வந்தன. கடத்தல் பேர்வழிகளைக் கைது செய்வதாக இருந்தாலும், 'கோபெசா, மிசா'-க்களைப் பயன்படுத்துவதாக இருந்தாலும், சில கட்சிகள் தடைபடுத்தப்பட வேண்டும். அவைகளின் கிளை இங்கே இருந்தால் தடை செய்யப்பட வேண்டும் என்று வந்தாலும், நாங்கள் இவைகள் எதையும் புறக்கணிக்காமல், நிர்வாக மோதுதல் இல்லாமல் நடந்து வந்திருக்கிறோம்.

அந்த வழியிலே இந்தத் தீர்மானத்தில் நாம் நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டும், சட்டம் ஒழுங்கிற்கு ஊறு நேரா வண்ணம் காந்திய நெறியில், அண்ணா பாதையில் என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

இதனுடைய தொடர்ச்சிதான் கடற்கரையில் நடந்தது. கடற்கரையில், என்ன கீழே இறங்கிவிட்டோம்? டிரில் வாங்கினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அங்கே கடைசியாக இலட்சக்கணக்கான மக்கள் எழுந்து நின்று எடுத்துக்கொண்ட உறுதிமொழி என்ன?

''எந்த நிலையிலும் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தியாவில் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல் பாது காப்பதற்குத் தயங்கமாட்டோம்'' என்ற உறுதியை எடுத்துக் கொள்கிறோம்.

''தேசத்தலைவர்கள் விடுதலை, பத்திரிகைகளின் நியாய மான உரிமைகளை வழங்குதல், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. வாழ்க ஜனநாயகம்!'' என்று இந்த உறுதி மொழியினைக் கடற்கரையில் நாம் எடுத்துக்கொண்டோம்.

அதில் சொல்லுகிறோமே ''எந்த நிலையிலும் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தியாவில் மக்களாட்சி முறைக்கு கேடு ஏற்படாமல் பாதுகாப்பதற்குத் தயங்கமாட்டோம்'' என்று சொல்லுகிறோமே, அதைப் பாதுகாக்கத் தயங்காத நிலைதான் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி பதிலுக்கு இடம் தந்து, ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளித்து, தவணை வைப்புத் தீர்மானங்களுக்கு இடமளித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் இடமளித்து, டாக்டர் ஹண்டே அவர்கள்தான் அதற்கு நேரத்தில் வராததால் நம்பிக்கையில்லாத் தீர்மானத் திற்கு இடமளிக்காமல் போய்விட்டார்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: அன்றைய தினம் அத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்ற தகவல் வரவில்லை. பத்து மணிக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தேன். சாதாரணமாக 10.05க்குக் கூட கேள்வி நேரம் முடிவதுண்டு. நான் இரண்டு நிமிடங்கள் தாமதமாக வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கண்டனத் தீர்மானம், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஆகியவைகளை, அவைகளைக் கொண்டுவந்த முதல்நாள்தான், கேள்வி நேரம் முடிந்த பிறகு

முதலில் எடுத்துக்கொள்ளுவதுதான் வழக்கம். அதனால்தான் அன்றைய தினமே எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன்: முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானத்தைப் பற்றி. அந்தத் தீர்மானமும் அரசினரின் முடிவும் ஒன்றுதான் என்று சொன்னீர்களே? இப்போது வந்திருப்பது கண்டனத் தீர்மானம் அரசின் மீது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே! இங்கே எப்படி சட்டமன்றம் நடைபெற்றது என்பதை வெளியில் பாராட்டாவிட்டாலும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வாய்ந்த கே.டி.கே. தங்கமணி அவர்கள் மனதார இதனைப் பாராட்டுகிறார் என்பதை நான் அறியாமல் இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பார்லி மெண்டைப் போலவேதான் சட்டசபையும் நடைபெறும் என்று கருதியிருப்பார்கள். பார்லிமெண்டில் என்ன நடை பெற்றது? பாராளுமன்றம் கூடுகின்ற அன்றைய தினம் எல்லா உறுப்பினர் களுக்கும் ஒரு தாக்கீது வழங்கப்பட்டது.

Office of the Chief Censor, Government of India, Shastri Bhavan:

அவர்களிடமிருந்து வழங்கப்பட்ட அறிவிப்பு இது.

Revised Guidelines for the coverage of Parliament Proceedings:

என்ற தலைப்பின் கீழ் வெளியாகியுள்ளது.

"The Statements of Ministers may be published either in full or in a condensed form but its contents should not infringe censorship.

The speeches of Members of Parliament participating in a debate will not be published in any manner or form but their names and party affiliation may be mentioned when publishing names of Members who participated in a debate, the fact that they supported or opposed a motion can be mentioned."

இப்படியெல்லாம் வெளியிடப்பட்டது. ஆனால் நீங்கள் பார்த்தால் ஆளும் காங்கிரஸ் கட்சி தமிழக அரசு மீது

கண்டனத் தீர்மானம் கொண்டு வந்த அன்று ஆளும் காங்கிரஸ் பத்திரிகையின் தலைப்பைப் பார்த்தால், ''சட்டசபையில் தமிழக அரசுமீது குற்றச்சாட்டு'' என்று செய்தி வெளிவருகிறது. இவ்வாறு ''பாராளுமன்றத்தில் மத்திய சர்க்கார் மீது குற்றச் சாட்டு'' என்று செய்தி போட்டு, அது வெளிவந்திருக்க முடியும் என்று கருதுகிறீர்களா?

திருமதி த.ந. அனந்தநாயகி: இந்தப் பெருமை உங்களைச் சேர்ந்தது அல்ல. இங்கே உள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் கண்ணியம் மிக்கவர்கள். எக்ஸ்டிரா கான்ஸ்டிடியூஷன்ஸ், அன்கான்ஸ்டிடியூஷனல் காரியங்களில் ரிசார்ட் செய்வதில்லை. டில்லியில் அவர்கள் தொல்லை கொடுத்தவர்கள். இங்கேயுள்ள எதிர்க்கட்சிகள் பண்பாடு உடையவர்கள். அங்கே உள்ள பார்லிமென்டிற்கும், சட்டசபைக்கும் முறைகள் வேறுபடுகின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பார்லிமெண்டில் சி.பி.ஐ.ம்கூட ஒரு எதிர்க்கட்சிதான் என்பதை அம்மையார் அவர்கள் மறந்துவிடக்கூடாது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்களை அவ்வளவு கண்ணியமற்றவர்கள் என்று அனந்த நாயகி அம்மையார் சொல்லுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

திருமதி த.ந. அனந்தநாயகி: சி.பி.ஐ. எங்களுடைய ஒரு தோழமைக் கட்சி, உங்களுக்கு அரை டஜன் கட்சிகள் தோழமைக் கட்சிகள் என்று இருப்பதுபோல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது சி.பி.ஐ. மீது இரண்டாவது தாக்குதல். பரவாயில்லை.

பிறகு நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டில் கழகத்தின் பொருளாளர் பேராசிரியர் முன்மொழிந்து, பொதுச் செயலாளர் நாவலர் வழிமொழிந்த தீர்மானத்திலும், இந்தியா வில் இன்றைக்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை மாற்றி அமைப்பதற்காகத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு இந்திய நாட்டு முக்கியத் தலைவர்களையும், முதலமைச்சர் களையும் கலந்து விவாதித்துப் பிரதமரைச் சந்தித்து நாட்டு மக்கள் அனைவரும் மகிழத்தக்க ஒரு நல்ல சூழ்நிலையை

உருவாக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் கருணாநிதியை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானம் செயற்குழுத் தீர்மானத்திற்கு எப்படி புறம்பாகும். செயற்குழு தீர்மானத்தில் நாங்கள் கடைசியில் சொல்லியிருக்கிறோமே, ''அண்ணாவின் பாதையில், காந்தீய நெறியில் அமைதியான முறையில், சட்டம் ஒழுங்குக்கு ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்'' என்று செயற்குழுவில் போடப்பட்ட தீர்மானம் தான் நெல்லை மாவட்ட மாநாட்டுத் தீர்மானம் வரை நீண்டிருக்கிறதே தவிர, அது ஒன்றும் பின்வாங்கப்பட்ட தீர்மானம் அல்ல.

ஒவ்வொரு மாநாட்டுத் தீர்மானத்திலும் ''தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசர நிலைச்சட்டம் திரும்பப் பெற வேண்டும், பத்திரிகைகளுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்'' என்றுதான் சொல்லி யிருக்கிறோம்.

அதையொட்டித்தான் தமிழ்நாட்டிலும் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் 3.7.75 அன்று நெருக்கடி நிலையைக் கண்டித்து ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். எங்களுடைய தீர்மானத்தில்கூட நான் சொன்னதைப் போன்ற வாசகங்கள்தான்; காங்கிரஸ் கட்சித் தீர்மானம், வேகமாகக் கண்டித்தே கூட போடப்பட்ட தீர்மானம்.

அது மட்டுமல்ல, நேற்றைக்கு பேசிய சில நண்பர்கள் காமராஜர் அவர்கள் அதைப் பற்றி ஏதும் சொல்லவில்லை யென்று சொன்னார்கள். இது நவசக்தி பத்திரிகை ''அவசர நிலைப் பிரகடனம். தலைவர்கள் கைது செய்யப்பட்டது நாட்டுக்கு நல்லது அல்ல, தலைவர் காமராஜ் எச்சரிக்கை.''

திரு. பெ. சீனிவாசன்: ''தட் இஸ் ஆல்''. அதோடு சரி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அப்படிச் சொல்லுவீர்கள் என்றுதான் நிறுத்தினேன். பின்னால் இன்னும் படிக்கிறேன். ''சோளிங்கர்- ஜூன் 27, தேசம் முழுவதும் தலை வர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைக் கேட்டதும்

எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த நிலை நாட்டுக்கு நல்லதல்ல'' என்று சோளிங்கரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் காமராஜர் பேசியிருக்கிறார் என்று 'நவசக்தியில்' செய்தி வந்திருக்கிறது.

இது அடுத்த நாள் நவசக்தி. இதில்கூட ''வெள்ளைக்காரன் ஆட்சியிலே கூட நடைபெறாத கொடுமை இப்போது நடை பெற்றிருக்கிறது'' என்று காமராஜர் அதிர்ச்சி அடைந்து பேசியிருக்கிறார். அடுத்து அவர் சொல்லியிருக்கிறார், ''இனி மேல் நான் பேசுவதெல்லாம் பத்திரிகைகளில் வரப்போவ தில்லை; பேசித்தான் பயன் என்ன'' என்று குறிப்பிட்டுப் பேசி யிருக்கிறார். அந்த அளவுக்கு மறைந்த தலைவர் காமராஜர் அவர்கள் பேசிய பேச்சு 'நவசக்தி' பத்திரிகையில் அப்போது வந்திருக்கிறது. இது 6.1975 அன்று தேதியிட்டு வெளியிட்ட 'நவசக்தி' ஏடு ஆகும்.

ஹாண்டே அவர்கள் அவசர அவசரமாகப் பத்திரிகையின் தேதியைக் குறித்துக்கொள்கிறார். ஏதோ நான் இப்படி 'முரசொலியில்' ஒரு செய்தியைப் புதிதாக அச்சடித்துக்கொண்டு வந்து விட்டதைப்போல நினைத்துக்கொண்டு குறித்துக் கொள்கிறார்.

அவசர கால நிலை அறிவித்ததற்கு சில காரணங்களை நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் தீர்மானத்தை முன் மொழிந்தபோது அங்கே எடுத்துச் சொன்னார்கள். இயற்கையின் கோளாறால் விலைவாசி ஏறியது. அதற்கு இந்திரா காந்தியா காரணம் என்று கேட்டார். அதே கேள்வியைத் தமிழ்நாட்டில் கேட்டிருக்கக்கூடாதா? விலைவாசி உயர்வுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் காரணம் என்று போராட்டம் இங்கே நடைபெற்றபோது நம்முடைய மாரிமுத்து அவர்களைப் போன்ற அரசியல் நடுநிலையாளர்கள் அவர்களைச் சந்தித்து விலைவாசி உயர்விற்கு கருணாநிதியா காரணம்? கிடையாது என்று கூறினார்களா என்றால் கிடையாது.

பீகார் கிளர்ச்சியைப் பற்றி அவர்களே குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்களே விளக்கமும் சொன்னார்கள். பீகார் கிளர்ச்சியைப் பற்றிக் கர்நாடக மாநிலத்தில் நிருபர்கள் என்னைச் சந்தித்த போது நான் அவர்களிடம் சொன்னேன், ''ஐந்து ஆண்டு காலம் ஜனநாயகத்தில் பொறுத்திருக்க வேண்டும். இடையில் அமளி செய்து ஆட்சியைக் கவிழ்த்து விடுவதை நான் விரும்பவில்லை. இன்னும் தெளிவாகச் சொன்னேன், ''நாங்கள் ஆட்சியில் இருப்பதன் காரணமாக அப்படிச் சொல்கிறோம் என்று வேண்டாம். நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்பட்ட காலத்திலும், அண்ணா தலைமையில் செயல்பட்ட அந்தக் காலத்திலும், இந்த முறை நாங்கள் கடைபிடித்த முறையல்ல. எங்களுக்குப் பிடித்தமான முறையல்ல'' என்பதைப் பங்களூரில் நிருபர்கள் கூட்டத்தில் மிகத் திட்டவட்டமாக எடுத்துச்சொன்னேன்.

பீகார் கிளர்ச்சிக்கும் கிட்டத்தட்ட 1972-ம் ஆண்டு விட்டு விலகிய சில நண்பர்கள் பிரிந்துசென்ற நேரத்தில், நடைபெற்ற தமிழ்நாட்டுக் கிளர்ச்சிக்கும் என்ன வித்தியாசம் என்று மணலி கந்தசாமி அவர்கள் கேட்டார்கள். நண்பர் லத்தீப் கூறுகின்ற நேரத்திலேகூட குறிப்பிட்டார்கள். எம்.எல்.ஏ. ராஜினாமாச் செய்யச் சொல்லலாமா என்று மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள். இங்கே எங்கள் உறுப்பினர்களை ராஜினாமா செய்யச் சொல்லி ஊர்வலம் நடத்தினார்கள். ஆனால் அமைதியாக நடத்தினோம் என்று சொன்னார்கள். நான் அந்த விவரங்களுக்கு எல்லாம் வெகு விளக்கமாகச் செல்ல விரும்பவில்லை.

ஜெயப்பிரகாஷ் அவர்களோ, மொரார்ஜி தேசாயோ, மேத்தாவோ அல்லது வேறு சில பிரமுகர்களோ பிரதமர்களைப் பற்றி வேகமாகப் பேசிவிடுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க நேர்ந்தது என்று சொன்னார்கள்.

நான் நண்பர் மாரிமுத்து அவர்களுக்கு ஞாபகப்படுத்த விழைகின்றேன். கோவையில் தேர்தல் நடைபெற்றபோது அ.தி.மு.க.விற்கும் இந்திரா காங்கிரசுக்கும் உறவு இல்லை. இந்த நேரத்தில் கோவையில் நம்முடைய நண்பர் அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் பேசியிருக்கிறார், ''வீட்டிற்காக

பிரதமரா, நாட்டிற்காக பிரதமரா'', அவர்கள் ஏடான 'தென்னகத் தில் வந்திருக்கிறது. இந்தச் செய்தி. ''பிரிவினையைத் தூண்டிய குற்றவாளி இந்திராகாந்திதான்'', கோவைப் பொதுக்கூட்டத்தில் மனோகரன் உரை; இதைச் சென்ற ஆண்டுதான் 6.2.74 கோவையில் மனோகரன் பேசியிருக்கிறார்.

அடுத்தது, புதுவைத் தேர்தலின்போது என்னுடைய அருமை தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் புதுவைத் தொகுதி யோடு சேர்ந்த பகுதியில் சென்று பேசுகிறார். ''1971இல் இந்திரா காந்தி கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன ஏன்?'' என்று கேட்கிறார். ஆக, வாக்குறுதிகள் தொடர்ந்து காற்றில் பறக்கவிடப்பட்டு வருகின்றன. அது பத்து அம்சத் திட்டமாக இருந்தாலும், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிற குறிக்கோள்களானாலும், இவர்களுடைய இருபத்திரண்டாண்டு கால ஆட்சியிலே தொடர்ந்து காற்றிலே பறக்கவிடப்பட்டு வருகின்றன. அதை எம்.ஜி.ஆர். அவர்கள் மாஹியில் பேசியபோது பிரதமருக்குத் தக்க பாடம் கற்பிப் போம் என்று கூறியுள்ளார். எந்த வகையில் என்று தெரியாது. கோபாலபுரத்திற்கு வந்ததைப் போலவோ, என்னவோ எனக்குத் தெரியாது.

திரு. பெ. சீனிவாசன்: தேர்தல் பாடம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தேர்தல் பாடமா?

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சர் நன்றாகத் தேடிப் பிடித்து அதை ஒரே ஒரு ஆதாரத்தை வைத்துக்கொண்டு தேர்தல் நேரத்தில் பேசியதை, தேர்தல் நேரத்தில் தக்க பாடம் என்றால், தேர்தல் பாடம்!

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது அமைதியான பேச்சா? சரி. இன்னொன்றைச் சொல்கிறேன். ''இந்திராவைக் கைது செய்.'' 'அண்ணா தி.மு.க. எம்.பி. மனோகரன் ஆவேசம், இதுவும் பத்திரிகையில் வந்ததுதான்.

இப்படி இந்திராவைக் கைது செய் என்றும், பிரதமர் ஒரு பிரிவினைவாதி என்றும், பிரிவினையைத் தூண்டுகின்ற குற்றவாளி என்றும் பேசிய ஒரு கட்சி, இன்றைய தினம் ஏதோ

தேர்தல் உறவுகள் வரும் என்ற நிலையிலே அவசரச்சட்டம் அல்லது இது போன்ற இருபது அம்சத் திட்டங்கள் இவைகளை வரவேற்று தி.மு.கழகம் இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிப்பது போல், இந்திராகாந்தியுடன் தனிப்பட்ட பகைமை கொண்டிருப்பதைப் போலவும் விமர்சிப்பது முறை அல்ல.

நாங்கள் செயற்குழுவிலும் சரி, கடற்கரைக் கூட்டத்திலும் சரி, குறிப்பிட்டிருக்கிறோம்.

மிகப் பாரம்பரியம் மிக்க ஒரு தேசியப் பரம்பரையில் வந்த இன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள். அதை நான் மறுப்பதற்கில்லை. ஆனால் இருக்கின்ற சங்கடம் அவர் எந்தெந்த பெரியவர்களுடைய மடியிலே குழந்தையாக தவழ்ந் தார்களோ., ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய்- இப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இன்றைக்குச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வதின் மூலம் நாட்டில் இன்றைக்குப் பெரிய புரட்சி எதுவும் தோன்றிவிடும் என்று யாரும் எதிர்பார்க்கத் தேவையில்லை. அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்வதும், பத்திரிகைகளின் நியாயமான உரிமைகளை வழங்குவதும், எந்த வகையில் தவறு என்றுதான் நாம் கேட்கிறோம்.

இப்படிக் கேட்பது தேச விரோதமானது. இவை தேச விரோதம் என்று வருணிப்பதும், இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று எண்ணுவதும் நப்பாசையே தவிர வேறு அல்ல.

ஆகவே மீண்டும் சொல்கிறேன். காமராஜருக்கு நாம் நினைவாலயம் எல்லாம் கட்டுகிறோம். காமராஜருக்கு எவ்வ ளவோ அழியாத சிறப்புகளை எல்லாம் செய்தோம். போலீஸ் மரியாதை, ராணுவ மரியாதை என்றெல்லாம் செய்தோம். இதை எல்லாம்விட, சிறந்த நினைவாலயமாகக் காமராஜருடைய தியாகத்தை மதிக்கிறோம் என்பதற்கு அடையாளமாகவாவது, அவருடைய சகாக்கள் சிறையில் இருக்கிறார்களே, அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும்.

நான் கொலைகாரர்களுக்காக வாதாடவில்லை. வன் நெஞ்சர்களுக்காக வாதாடவில்லை. சதிகாரர்களுக்காக வாதாட வில்லை. ரத்தப் புரட்சியில்தான் ஒரு நாட்டின் சுதந்தரம் இருக்கிறது என்று சொல்கிற வன்கணாளர்களுக்காக வாதாட வில்லை.

பிரதமரிடம் பேசிய நேரத்திலும் சரி, வேறுபல நேரங் களிலும் சரி, அந்த அம்மையார் விடுத்திருக்கிற அறிக்கை களிலும் சரி, அவர்கள் கொண்டிருக்கிற உருக்கமான உணர்ச்சி களை என்னால் உணர முடிகிறது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் பிரதமர் கொலை செய்யப்படுவது என்பதோ, வன்முறை புரட்சி நாட்டில் ஏற்படும் என்பதோ என்றைக்கும் அனுமதிக்கக் கூடிய காரியம் அல்ல. பிரதமர் மீது சுமத்தப் படுகிற கொலை பழிச்சொற்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் அல்ல.

நான் சொல்கிறேன். யாராவது கொலை செய்யப்பட்டால் இந்திரா காந்தி கொலை செய்திருப்பார்கள் என்றெல்லாம்கூட சிலர் பேசுகிறார்கள். அப்படிப்பட்ட கண்ணியமற்ற பேச்சுகளை தி.மு.கழகம் என்றைக்கும் கையாண்டது கிடையாது.

இந்திரா காந்தி அவர்களோடு தி.மு.கழகத்திற்கு உறவு இருந்த காலத்திலும் சரி, உறவு முறிந்துவிட்ட காலத்திலும் சரி. எங்களுடைய பேச்சில் இம்மியளவு கண்ணியக்குறைவான தன்மையும், இந்திரா காந்தியைப் பற்றி இருந்தது கிடையாது. மத்தியில் இருக்கிற அரசோடு வீணாக மோதிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் கிடையாது.

நாங்கள் அவர்களோடு உறவாக இருந்த நேரத்திலேதான் மாநில சுயாட்சி கேட்டோம். மாநிலங்களுக்கு அதிக அதி காரங்கள் வேண்டுமென்றும் கேட்டோம்.

உறவாக இருந்த நேரத்தில்தான் பஞ்சாப் மாநில முதல மைச்சரை அழைத்து, மாநில சுயாட்சி மாநாடு நடத்தினோம். 1971 தேர்தல் பிரகடனத்தில் மாநில சுயாட்சியை நம்முடைய குறிக்கோள்களில் ஒன்றாக வைத்தோம். இப்போது மாநில

சுயாட்சியை எதிர்க்கின்ற அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் எல்லாம்கூட, அந்தத் தேர்தல் பிரகடனத்தை வைத்துத்தான் தேர்தலில் நின்று வெற்றி பெற்றனர். இந்திரா காந்தியோடு உறவாடிய நேரத்தில் நாம் நம்முடைய கொள்கையை இம்மியளவும் விட்டுக்கொடுக்கவில்லை. இந்தித் திணிப்பை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்லவில்லை.

அண்ணா மறைந்த பிறகுதான் திருச்சியில் நடைபெற்ற மகாநாட்டில், இந்திரா காந்தியோடு உறவு இருந்த நேரத்தில் ''அண்ணா வழியில் அயராது உழைப்போம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், வன்முறை தவிர்த்து, வறுமையை வெல்வோம், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி'' என்று ஐந்து பேரும் முழக்கங்களை அனைவரும் சேர்ந்து- இன்று பிரிந்து போய் இருக்கிற நண்பர்கள் உட்பட அத்தனை பேரும் சேர்ந்து- எழுப்பினோம்.

நம்முடைய கொள்கைகளை நாம் என்றைக்கும் அடகு வைத்தது கிடையாது. ஆனால் கண்ணியமற்ற முறையில் ஒரு கடுகளவும் பிரதமர் பற்றித் தி.மு.கழகத்தின் தலைவர்கள் யாரும், என்றைக்கும் விமர்சித்தது கிடையாது. கொள்கைகளை, எண்ணங்களை, நிலைகளை விமர்சிக்கிறோம்.

ஆகவே, இன்றைய இந்தக் கண்டனத் தீர்மானத்தை நானும் பயன்படுத்திக்கொண்டு, இந்திரா காந்தி அம்மையாரை இந்தச் சபையின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அவசர நிலை பிரகடனத்தை உடனடியாகத் திரும்பப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு, தேசத்தலைவர்களை விடுதலை செய்து, சில கட்டுப்பாடுகள் தேவை என்று பிரதமர் சொல் கிறார்கள், அதற்கு யாரும் எதிரிகள் அல்ல, ஒழுங்கு, கட்டுப் பாடு இவைகள் எல்லாம் தேவைதான், அதற்கு இந்த அரசு ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறது; பத்திரிகையின் நியாயமான சுதந்திரங்களை எல்லாம் தருகின்ற வகையில் விரைவிலே ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று அம்மையார் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு இந்தக் கண்டனத் தீர்மானம் தேவையில்லை, அதனைத்

திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே.டி.கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தொழில் களைப் பொறுத்து, சீனி சம்பந்தமாக ஒரு முக்கியமான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா? இன்றைக்கு இங்கிருக்கிற கரும்பு விவசாயிகளுக்கு, மற்ற மாநிலங்களில் கரும்புக்கு என்ன விலை கொடுக்கிறார்களோ, அதே விலையை இங்கே நாம் கொடுக்க அரசுக்கு யோசனை உண்டா? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சர்க்கரை விலையையும், கரும்பு விலையையும் இணைத்திருக்கிற காரணத்தினால் அந்தத் தகராறு வருகின்றது. சட்டப்படி கரும்பு விலையோடு, சர்க்கரை விலையை இணைத்து நிர்ணயிக்கிறார்கள். இந்தக் கொள்கையை மாற்றித் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கரும்புக்கும், சர்க்கரைக்கும் விலையை நிர்ணயித்துக்கொள்ளக் கூடிய அதிகாரத்தை எங்களிடமே கொடுங்கள் என்று மத்திய அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிறோம். அதை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே! மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இரண்டு மணி நேரம் மிக உருக்கமாகக் களைப்போடு இருந்து பேசி அமர்ந்த பிறகு, நான் எழுந்து நிற்கிறேன், பதில் சொல்வதற்கு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போலவே நானும் களைப்போடு இருக்கிறேன், பசியினால். எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. நான் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறேனோ அவ்வளவு நேரம் தாங்கள் எனக்கு அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1 மணி நேரம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, எங்களுக்கு எல்லாம் பசியாக இருக்கிறது. ரிப்ளையை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக் காலையில் வைத்துக் கொள்ள முடியாது. கண்டனத் தீர்மானத்தின்மீது முடிவெடுக்காமல் விட்டுவிட்டுப் போவது முறை அல்ல.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: எவ்வளவு சீக்கிரமாக முடிக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக முடித்துக் கொள்கிறேன். என்னுடைய உரையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசியல் பகுதி, பொருளாதாரப் பகுதி என்று, இரண்டுவிதமாக எடுத்துக் கொண்டால்தான் நான் அவற்றுக்கு ஒழுங்கான முறையில் பதில் சொல்ல முடியும்.

தலைவர் அவர்களே! கடந்த இரண்டு தினங்களாக ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள், எதிர்த்துப் பேசிய உறுப் பினர்கள் இவர்களுடைய கருத்துக்களை முன்வைத்து என்னு டைய கருத்தைக் கூற முன்வந்துள்ளேன். எதிர்த்தரப்பிலே ஜனநாயகம் போய்விட்டது என்ற கருத்தை அதிகமாகக் கூறினார்கள். நான் என்னுடைய பேச்சை ஆரம்பித்தபோதே சொன்னேன், ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்குத்தான் ஜன நாயகத்திற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று. அதையே மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

உங்கள் கருத்துப்படி நீங்கள் அவசர காலப் பிரகடனத்தை எதிர்க்கிறீர்கள், அப்படி எதிர்க் கின்ற நீங்கள் ஏன் பாராளு மன்றத்தில் கலந்துகொள்ளவில்லை. எனவே உங்கள் உறவு அணியோடு இருக்கிறது. ஆகவே அந்த அணியில்...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பாராளுமன்றத்தில் கலந்து கொள்வதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்றார்கள். நண்பர் செழியன் அவர்களின் தலைமையில் பாராளு மன்றத்தில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கப் பட்டார்கள். அதைப்போலவே மாநிலங்கள் அவையில் கலந்து கொள்ளவும் சென்றார்கள். ஆனால் நடந்தது, முதல் நாள் பேசிய பேச்சு எதிலும் வரவில்லை, பெயர்தான் வந்தது, கட்சி தான் வந்தது. ஆகவே, அதை எதிர்த்து மறுபடியும் பாராளுமன்ற

நடவடிக்கைகளிலே கலந்துகொள்வது இல்லை என்று முடிவு செய்தார்களே தவிர, வேறல்ல.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: இந்த பாய்காட் எவ்வளவு நாட்கள் இருக்கும் என்று முதலமைச்சரவர்கள் கூறுவார்களா என்று தெரியவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே! இந்த பாய்காட் அதிக நாள் நீடிக்காது என்றே கருதுகிறோம். ஏனென்றால், தமிழ்நாடு வழிகாட்டியிருக்கிறது. அதைப் பார்த்துப் பாராளுமன்றம் திருத்திக்கொள்ளும் என்று நம்பு கிறேன்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: ஆக இந்த அளவிற்கு அரசியல் ரீதியான என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டு பொருளாதார ரீதியான பிரச்சினைகளைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிலச்சீர்திருத்தம் பற்றி அவர்கள் குறிப்பிடும்போது புள்ளி விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு வெளியிட்ட ஒரு வெளியீட்டைக் காண்பித்தார்கள். அதில் ஒரு வரி அச்சுப் பிழையாக இருந்திருக்கலாம். அதைக்காட்டி எல்லாவற்றை யுமே நம்பவில்லை என்று சொல்லி ஆதாரம் காட்ட இலாயக்கு இல்லை என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: ஆதாரம் காட்ட இலாயக்கு இல்லை என்று நான் சொல்லவில்லை. நான் சொல்லாமல் இதைச் சொல்கிறார்கள். முன்னுரையில் மிகுந்த பெருந்தன்மையுடன் பேசினார்கள். இப்பொழுது சுரபேதம் ஏற்படுகிறது. தயவுசெய்து அப்படிப் பேசவேண்டாம். இலாயக்கு இல்லை என்று சொல்லவில்லை, ஆதாரம் காட்ட விரும்ப வில்லை என்று சொன்னேன், தவறான புள்ளி விவரங்கள் இருப்பதால் ஆதாரத்திற்கு எடுத்துக்கொள்ள வில்லை என்று சொன்னேன்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: நான் வேகப்பட்டோ, கண்ணியத் திற்குக் கீழே இறங்கியோ பேச மாட்டேன். இதில் தவறு இருப்பதால் இதை ஆதாரம் காட்ட இயலாது என்று அவர்கள் சொல்லியிருக்கலாம், அம்மாதிரி சொன்னதாக வைத்துக்

கொள்வோம். நீங்கள் புள்ளிவிவரங்கள் பலவற்றைச் சொன்னீர்கள். அப்படிப் புள்ளிவிவரங்களைச் சொன்னால் மட்டும் போதாது. 9 படி மேலே சென்றுள்ள நாம் 4 படி வரை சுற்றியுள்ள இதர மாநிலங்களைப் பின்நோக்கிப் பார்க்க வேண்டியதில்லை. 9-வது படியிலிருந்து 10-வது படிக்கு எப்படிப் போவது என்று பார்க்க வேண்டும். அகில இந்திய ரீதியிலே எல்லா மாநிலங்களையும்விட எப்பொழுதுமே முன்னேறிய மாநிலமாக இருந்து வருவது சென்னை மாநிலம், தமிழ்நாடு மாநிலம், பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலிருந்து நிர்வாக ரீதியிலேயும் சரி, கிளர்ச்சி ரீதியிலேயும் சரி, இது முற்போக்கு மாநிலமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, முற் போக்குப் பணிகளிலே இன்னும் வேகமாகச் செல்ல வேண்டிய அளவிற்குப் போகவேண்டும்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது அவர்கள் பழத்தோட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் தென்னந் தோப்புகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன? அதைப்பற்றிச் சொல்லவில்லையே. குத்தகை நிலங்கள் சம்பந்தமாக நிலச் சொந்தக்காரர்கள் எத்தனை ஆண்டுக் காலத்திற்கு நீடிப்பது என்று கேள்விபோட்டோம். அதைப்பற்றிய கருத்துக்களை ஏன் சொல்லவில்லை? விவசாயத் தொழிலாளர் களின் கூலி பற்றிக் கமிட்டி போட்டிருக்கிறோம் என்று சொல் கிறீர்கள். ஆனால் இருக்கின்ற நிலைமையைப் பார்த்துக் கீழ்த் தஞ்சையில் உள்ளதைப்போல நிரந்தரமாக எல்லாப்பகுதி களுக்கும் அறிவித்து மறு அறிக்கை வரும்வரையில் செய்ய லாமே.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: விவசாயத் தொழில்களுக்காக இவ்வளவு கவலைப்படுகிறீர்கள். எல்லா தொழிலாளர்களுக்கும் போனஸ் குறைந்துவிட்டதே, அதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம், பிரதம அமைச்சர் அவர்களிடத்தில்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நீங்கள் மட்டும் சொல்லிக்கொண்டிருப்பீர்கள். நாங்கள் கமிட்டி போடக் கூடாதா?

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: ஐ.என்.டி.யு.சி. போன்ற அமைப்புகளின் சார்பில் அதை மாற்றவேண்டுமென்று பிரதமர் அவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள் கூலியைச் சரியான முறையில் உயர்த்த வேண்டும், நிர்ணயிக்க வேண்டும்.

பீகாரில் வரதட்சிணை வாங்குவதை காக்னிசிபிள் அபென்சாக அறிவித்திருகிறார்கள். நாமும் செய்யலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதைச் செய்யலாம்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க கடன் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஒத்துக்கொள் கிறோம். பூச்சி மருந்துக்குக் கொடுத்த சப்சிடியை நிறுத்தி விட்டார்களே. அதைக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். நிர்வாகத்திலே பங்கு என்பதைப் பற்றி ஒன்று சொன்னார்கள். நிர்வாகத்திலே பங்கு என்பது ஒன்று; தொழிலிலே பங்கு என்பது வேறு என்று திரு.கே.டி.கே. அவர்கள்கூடச் சொன்னார்கள். உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விதத்திலே நிர்வாகத்திலே பங்கு இருக்க வேண்டும். தனியார் துறையிலேகூட என்ன கெபாசிடி இருக்கிறதோ அதிலே 40 சதவிகிதந்தான் தற்போது உற்பத்தியாகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் விரிவாகப் பேச வேண்டு மென்றால் நேரம் இல்லை.

ஆக, எல்லா வழிகளிலும் பார்க்கிறபோது நாம் இன்னும் செய்யவேண்டியவை மிக அதிகமாக இருக்கிறது. நாம் செய் திருப்பது குறைவு. மிக அதிகமாகச் செய்யவேண்டியவை இருக்கின்றன என்ற முறையிலே நீங்கள் வேகமாகப் போக வேண்டும். உங்களிடத்திலே எவ்வளவோ தவறுகள் இருக் கின்றன. அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும். அவசர நிலைப் பிரகடனம் நியாயமானது.

முதலமைச்சர் அவர்கள் இரண்டு மணி நேரம், கவர்னர் உரைக்குப் பதில் சொல்லுவதுபோல் மிக ஆழ்ந்த முறையில் புள்ளி விவரங்களை எல்லாம் கூறினார்கள். அவர்களுக்கு நன்றி. அவை நாங்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்குச் சரியான பதிலாக இல்லை என்ற காரணத்தால் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 71 **நாள் : 04.01.1978**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுவதற்கு அலுவல் ஆய்வுக் குழுவில் இரண்டரை மணி நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதனையொட்டி என்னுடைய முன்மொழிதலை நான் இங்கே தொடங்குகின்றேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் அரசு இந்த ஆறு மாத காலத்திலே செய்துள்ள தவறுகளை எண்ணிப்பார்த்து திருத்திக்கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த அவையிலே வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அது வெற்றிபெறும் என்ற நம்பிக்கையோடு நான் இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கொண்டுவரவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை நான் ஓரளவு சுட்டிக்காட்டிவிட்டேன் என்றே நம்புகிறேன்.

இந்த அரசு ஆறு மாத காலத்திற்கு முன்பு தொடங்கிய போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அறிக்கை வாயிலாகவும் சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பை புதிய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தரத் தயங்காது என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம். அதற்கு எடுத்துக்

காட்டாக நடந்துமுடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் இந்த அரசுக்குத் தேவையான யோசனைகளையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கத் தவறவில்லை என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு என்கின்ற அடிப்படையில் இங்கே நடைபெற்ற விவாதங்களைப் பார்த்து வெளியே உள்ள சிலபேர்கள்கூட, ஏன் இந்த அவையிலே உள்ள வேறு சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள்கூட, விவாதங்கள் போகிற போக்கைப் பார்த்தால், இரண்டு கட்சிகளும் விரைவில் ஒன்று சேர்ந்துவிடும்போல் இருக்கிறதே என்று எண்ணுகிற அளவிற்கு நடந்த முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் விவாதங்கள் நடைபெற்றன. இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்துவிடுமோ என்ற பயத்தில் புதிய கட்சி தொடங்கியவர்கள்கூட அதற்கு முன்பு நாம் முந்திக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கட்சிகளை கலைத்துவிட்டு ஆளும் கட்சியோடு போய் சேர்ந்து கொண்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நாட்டில் நடைபெற்றன.

ஆனால், விவாதங்களில் ஆக்கபூர்வமான யோசனைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கே உரிய கண்ணியத்தோடு கடமையுணர்ச்சியோடு அண்ணா வழியில் இங்கு எடுத்து வைத்ததேயல்லாமல் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்வதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் கொள்கை அளவில் அண்ணா அவர்கள் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதிலே இல்லை என்பதை ஆளும் கட்சி பல சந்தர்பங்களில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

அண்ணா அவர்கள் அவசரகால சட்டத்தை அறவே வெறுத்தவர். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு, ஜனநாயகம் நல்ல முறையிலே வளர்வதற்கு அவசரகாலச் சட்டங்கள் தடையாக நிற்கும், அவசரகாலத்தை நீடித்துக் கொண்டு, ஜனநாயகத்தைப் பற்றியும் பேச ஒரு அரசுக்கு அனுமதியில்லை, முடியாது என்று நாடாளுமன்றத்தில், மாநிலங்கள் அவையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து வைத்தார்.

எனவே, அந்த வழி நின்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் நெருக்கடி கால பிரகடனத்தை, எதேச்சாதிகார கருத்தை,

அவசர காலத்தின் அடிப்படையிலே போடப்பட்ட சட்டங்களை எதிர்த்தது. அப்படி எதிர்த்த நேரத்தில் இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார், இந்திரா காந்தியினால் போடப்பட்ட நெருக்கடி கால சட்டங்களை, நெருக்கடி நிலையை வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்தனர் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

அதைப்போலவே, 1968ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி தத்துவங்களை ஆதரித்தும், மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு முழுமையாகச் சுயாட்சி பெற்று விளங்கவும், மத்தியிலே ஒரு கூட்டாட்சி என்கின்ற கருத்தை எடுத்துச்சொன்னதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்திலேதான். இங்கே அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்துவைத்து, அதைக் கொண்டு வந்தபோது, இதை எதிர்த்து வாக்களித்ததும் இன்றைக்கு உள்ள ஆளும் கட்சியாகும்.

எனவே, இப்படி சில பல கொள்கைகளால் ஆளும் கட்சியாக இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று சேருவதற்கு உரிய வாய்ப்புகள் இல்லையென்றாலும்கூட ஒரு அரசுக்கு, அதிலும் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு அரசுக்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பைத் தருவது எதிர்க்கட்சிக்குத் தலையாய ஒரு கடமை என்ற அளவிலேதான், நடந்து முடிந்த சட்டமன்றத் கூட்டத் தொடரில் எங்கள் ஒத்துழைப்பைத் தந்தோம்.

இப்படி ஒத்துழைப்புத் தந்ததற்குக் காரணம், அரசு சுமுகமாக நடைபெற வேண்டும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எளிதான தன்மையிலே பெறவேண்டும் என்பதற்காகத் தந்தோம். ஆனால் எங்களுடைய நல்லெண்ணத்தை எங்கள் பலகீனம் என்று ஒருவேளை ஆளும் கட்சி கருதிக் கொண்டதோ, என்னவோ தெரியவில்லை. அதற்கேற்ப அது நடந்து கொண்டது என்பதை எடுத்துக்காட்ட நான் இங்கே ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாளோடு சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர் முடிவடைகிறது. மறுநாள் 30 ஆம் தேதி கலைவாணர் நினைவு நாள் நிகழ்ச்சியில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் உறையாற்றுகிறார்கள். அதற்கு முன்பு இந்த சட்டமன்றக் கூட்டத்தில் பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பற்றிய பேசப்படுகிறது. போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே வைத்த அறிக்கையிலே விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கான நோட்டீசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தால் நோட்டீசு தரவில்லை, எனினும் அவர்களும் போராட்டத்திலே கலந்துகொண்டிருக் கிறார்கள் என்று பேசினார். ஒரு சுமுகமான சூழ்நிலையிலே இதைக் கொண்டுவர வேண்டுமென்று கருதித்தான், அனைத்துக் கட்சிச் சார்பிலும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது.

அந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்த பிறகுகூட, நாங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் சுமூகமான ஒரு சூழ்நிலையில் தொழிலாளர் களுடைய பிரச்சினையை நல்ல முறையில் தீர்த்து வையுங்கள் என்றுதான் சொன்னேன். அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம், உங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள், நீங்கள் அவர்களோடு கலந்து பேசுங்கள் என்று சொன்னார்.

30ஆம் தேதி காலையில் இந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டத்திலே கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், வேறு பல தலைவர்களையும் என்னுடைய இல்லத்திற்கு அழைத்து அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, இந்தப் பிரச்சினையை சுமூகமான முறையிலே தீர்க்கவேண்டுமென்று அவர்களிடத்திலே எடுத்துச்சொன்னேன். அதற்குப் பிறகு நான் அவர்களிடத்திலே அறிந்த கருத்தை, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களிடத்திலே சொல்வதற்கு காலையிலிருந்து பிற்பகல் 12 மணி வரையில் ஐந்து தடவைக்கு மேல் தொலைபேசி மூலம்

அவர்களோடு பேசுவதற்காக முயற்சித்தேன். ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் அங்கில்லை, இங்கிருக்கிறார்கள் என்று ஒரு தொலைபேசி எண் கொடுக்கப்பட்டது. அந்த தொலைபேசி எண்களோடும் தொடர்பு கொண்டேன். அவர்கள் பிறகு பேசுவதாகச் சொல்கிறார்கள் என்றுதான் பதில் வந்தது.

அதற்குப் பிறகு முதலமைச்சருடைய அலுவலகத்திற்கும் அவருடைய இல்லத்திற்கும் தொடர்பு கொண்டேன். அவரும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் இந்தப் பிரச்சினையில் அந்தத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் தந்த கருத்தைப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத் தெரிவித்து சுமூக சூழ்நிலை ஏற்படுத்தவேண்டுமென்ற ஆக்கரீதியான பணிக்காக அவ்வளவு கஷ்டத்தை அன்றைக்கு நான் எடுத்துக்கொண்டேன்.

அதற்குப் பிறகு மாலை 4 மணி அளவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ''காலையில் ஐந்தாறு தடவை தொலைபேசி மூலமாகப் பேசினீர்களாமே, என்ன?'' என்று கேட்டார். அதற்குப் பிறகு ''நிலைமை இவ்வாறு இருக்கிறது; நீங்கள் இதை சுமூகமாகத் தீர்க்க அவர்கள் 50 ரூபாய் இடைக்கால நிவாரணம் தரவேண்டுமென்று நிற்பார்கள்போல் தெரிகிறது'' என்று சொன்னேன்.

எப்போதும் ஒரு கோரிக்கையை வைப்பவர்கள் கொஞ்சம் அதிகமான அளவில் கோரிக்கையை வைத்தால்தான் ஓரளவு கிடைக்கும் என்று அதிக அளவில் கோரிக்கை வைப்பார்கள். ''இரு தரப்பிலும் கவுரவப் பிரச்சினையைப் பார்க்காமல் 30 ரூபாய் அளவுக்குத் தீர்த்துவிடலாம்; நீங்கள் கலந்து பேசுங்கள்; நானும் பேசட்டுமா'' என்றதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் ''அதெல்லாம் முடியாது; அந்த அளவுக்கு இயலாது'' அதை கொடுக்க இயலாது. 15 ரூபாய்க்கு மேல் தர இயலாது'' என்று கூறிவிட்டார். ஆகவே, பேச்சை நிறுத்திவிட்டேன்.

அன்று மாலை கலைவாணர் நினைவு விழாவில் முதலமைச்சர் பேசுகிறார். அங்கு பேசும்போது ''காலையில் ஒருவர் போன் செய்து எப்படியாவது 30 ரூபாய்க்கு ஒப்புக் கொள்ளுவார்கள் என்று கேட்கிறார்'' என்று பேசுகிறார். கலை

வாணர் நினைவு நாள் விழாவில் தேவையில்லாமல், தொடர்பு இல்லாமல் இத்தகைய ஒரு பேச்சை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே எடுத்துக் கூறுகிறார்கள். ''காலையில் 30 ரூபாய்க்கு ஒத்துக்கொள்ளுங்கள் என்று ஒருவர் போன் மூலமாகக் கேட்கிறார்'' என்று எடுத்துச்சொல்வது எந்த வகையில் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்க பயன்படும் என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதோடு மாத்திரமல்ல; அதே விழாவில் பேசிய நம் முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் பல் பசைக்கு வரி போடலாமா என்று நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும் சில நண்பர்கள் எடுத்துக் கூறியதும், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எடுத்துக் கூறியதும், ஜனதா கட்சியினர் எடுத்துக் கூறியதும் பற்றிக் கலைவாணர் விழாவில் நம்முடைய முதலமைச்சர் குறிப்பிட்டு ''பல் பசைக்கு வரி போட்டோம், போடலாமா என்று கேட்கிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கை கெட்டுவிடும் என்று கூறினார்கள். பல் சுத்தமாக இல்லாவிட்டால் நோய் வரும் என்று சொல்கிறார்கள். பல் விளக்க வேண்டாம் என்றா நாங்கள் சொல்லுகிறோம்? ஆலங்குச்சி, வேப்பங்குச்சி கொண்டு பல் துலக்கக் கூடாதா? பல் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையிருப்பதால் கை வைக்காதீர்கள் என்று எங்கள் கட்சிக்காரர்களிடம் சொல்லியிருக்கிறோம். அவர்கள் கை வைத்தால் பல் அல்லவா போய்விடும்' என்று முதலமைச்சர் பேசியிருக்கிறார். இது 31-8-1977 தினமணி பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

''எங்கள் கழகத் தோழர்கள் கை வைத்தால் பல் அல்லவா போய்விடும்'' என்று பற்பசைக்கு வரிபோடலாமா என்று சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்டதற்கு கலைவாணர் நினைவு நிகழ்ச்சியில் முதலமைச்சர், அதுவும் இப்படிப்பட்ட பதிலைச் சொல்ல வேண்டுமா என்பதைத் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போலவே பஸ் தொழிலாளர்கள் போராட்டத்தைச் சுமூகமாகத் தீர்க்க முன்வந்த என்னை, என் பெயரைக் குறிப்பிட

வில்லை என்றாலும்கூட நான் போக்குவரத்துத் துறை அமைச்சரோடு தொலைபேசி மூலம் பேசினேன். ''30 ரூபாய்க்கு ஒத்துக் கொள்ளுகிறார்கள்'' என்று பேசும் இந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க நல்லெண்ணத்தோடு ஈடுபடுகிறவர்களை எப்படி ஊக்குவித்தார்கள் என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

அனைத்துத் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின்படி தான் அனைத்துக் கட்சியினரும் சென்னையிலே காங்கிரஸ் சட்ட மன்றக் கட்சி அலுவலகத்தில் கூடினோம். அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூடினோம். அங்கே எடுத்த முடிவின்படி 4-ஆம் தேதி அன்று கண்டனக் கூட்டங்கள் தமிழகம் எங்கும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்தக் கண்டனக் கூட்டத்தில்கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தமிழ்நாடு தலைவர் அருமைத் தோழர் கல்யாண சுந்தரம் அவர்கள் பேசும்போது - ''பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்கள் அரசியல் கட்சிகளைப் பயன்படுத்திக் கொண்டார்களே ஒழிய, நாங்கள் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எங்களை அழைத்து 1-ம் தேதி பேச வைக்காமல் இருந்திருந்தால் - அன்று மாலை பவானியில் அவசர அவசரமாக 27 ரூபாய் தருகிறேன் என்று முதலமைச்சர் அறிவித்திருப்பாரா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். யார் அரசியல் கட்சியைப் பயன்படுத்திக் கொண்டது? தொழிலாள வர்க்கத்தைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்திக் கொண்டோமா? நீங்களே புரிந்து கொள்ளுங்கள். தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபட்டிருந்தால் எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் அந்த அரசைப் பணிய வைக்க முடியும்'' என்று தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் சென்னை கடற்கரைக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

நான் 30 ரூபாய் என்று சொன்ன நேரத்தில் அவர்களை அழைத்துப் பேசி 27 ரூபாய்க்கு ஒத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பார்களேயானால் விஷயம் முடிந்திருக்கும். அவ்விதம் செய்யாமல் எந்தவிதமான தேவையும் இல்லாமல்

தொடர்பில்லாத ஒரு விழாவில் இதைப்பற்றிபேசி பிரச்சினையை வளர்த்து இருக்கிறார்கள்.

அவர்கள் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசி ஒரு முடிவு எடுத்த பிறகு திடீரென்று முதலமைச்சர் 27 ரூபாய் கொடுக்கலாம் என்று வெளியிலிருந்து கொண்டு ஓர் அறிக்கை கொடுக்கிறார். எந்தக் கிளர்ச்சியாக இருந்தாலும் யார் காரணம் என்பதை சில நேரங்களில் சட்ட சபையில் சொல்லுகிறார்கள். வெளிப்படையாக சொல்லுவ தில்லை. மாணவர்கள் கிளர்ச்சியானாலும், விவசாயி களுடைய கிளர்ச்சியானாலும், தொழிலாளர்களுடைய கிளர்ச்சி யானாலும், நெசவாளர்களுடைய கிளர்ச்சியானாலும், மீனவர்களுடைய கிளர்ச்சியானாலும், இப்படி எந்தக் கிளர்ச்சி யானாலும் எதிர்க்கட்சிகளுடைய உதவியை கிளர்ச்சிகளிலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுபவர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக எதிர்க்கட்சிகளுடைய உதவியை நாடுவது இயல்பு.

இந்த இயல்பான காரணத்தைப் புரிந்துகொள்ளாமல் முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் தவறாக புரிந்து கொண்டு எல்லாவற்றையும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் இவைகளை எல்லாம் தூண்டிவிட்டது என்ற தவறான குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னார்கள். ஒரு எதிர்க்கட்சி எப்படி இருக்கவேண்டும். எப்படி நடத்தப்படவேண்டும் என்பதை பற்றி 'கேபினட் கவர்ன்மெண்ட்' என்ற ஆங்கில நூலில் ஐவார் ஜென்னிங்ஸ் அவர்கள் அருமையான கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். . . . . .

"The opposition is at once the alternative to the Government and a focus for the discontent of the people. Its function is almost as important as that of the Government. If there be no opposition, there is no democracy. "Her Majesty's opposition" is no idle phrase Her Majesty needs an opposition as well as a Government.

எதிர்க்கட்சி என்பது அரசாங்கத்திற்கு உடனடியான மாற்று என்பது மட்டுமல்ல. மக்களுடைய அதிருப்தியை ஒன்று சேர்ந்து தெரிவிக்கும் மையமாகும். மக்களுக்கு அரசாங்கத்தின் பணி எவ்வளவு முக்கியமானதோ, அதே போன்றுதான் எதிர்க் கட்சிகளின் பணிகளும். எதிர்க்கட்சி இல்லாவிட்டால் நாட்டில் ஜனநாயகம் இல்லை. மாட்சிமை தங்கிய எதிர்க்கட்சி - இங்கிலாந்து நாடு என்பதால் ஐவார் ஜென்னிங் அவர்கள் மாட்சிமை தங்கிய எதிர்க்கட்சி என்று குறிப்பிடுகிறார் - இந்த மாட்சிமை தங்கிய எதிர்க்கட்சி - எதிர்க்கட்சி என்று வெறும் அர்த்தமற்ற சொல்லும் அல்ல. மாட்சிமை தங்கிய அரசும் மக்களுக்குத் தேவை என்று ஐவார் ஜென்னிங்ஸ் தன்னுடைய நூலில் எடுத்துக்காட்டுகிறார்.

அந்த வகையில் அரசுக்கு மாற்றுக்கட்சி என்பதோடு, மக்களுடைய அதிருப்தியை அரசுக்குப் பிரதிபலிக்கிற பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு என்கிற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு அவ்வப்போது நடைபெறுகிற சட்டசபைக் கூட்டங்களில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமும், விவாத விளக்கங்கள் மூலமாகவும், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமாகவும், இவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை இல்லையென்றால், கண்டனத் தீர்மானம் மூலமாகவும் - அவ்விதம் கொண்டுவரப்பட்டால் அதில் ஒரு குறிப்பிட்ட, விஷயத்தைப்பற்றி மட்டும்தான் பேச முடியும் என்ற நிலை வரும் என்கின்ற காரணத்தால், நம்பிக்கை யில்லாத் தீர்மானம் என்று கொண்டுவந்தால், அதன் அடிப்படையில் அதைப் பயன்படுத்திக்கொண்டு, பல விஷயங்களையும் பேசலாம் என்கின்ற அடிப்படையில் எதிர்க் கட்சிகள் தங்களுடைய கடமையைச் செய்து வருகின்றன.

அந்த வகையில் இங்கு கண்டனத் தீர்மானம் ஒன்று கொடுக்கலாம் என்று முடிவு செய்தால், அதன்மீது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைப்பற்றி மட்டும்தான் பேச இயலும் என்பதால், அதை மாற்றி இந்தத் தலைப்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கொடுத்தால் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு நடைபெற்ற பல்வேறு நாட்டு நிகழ்ச்சிகளையும் இந்த தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

நாங்கள் பேசுவதைத் தொடர்ந்து மற்ற தோழமை, எதிர்க் கட்சிகளும் பல பிரச்சினைகளை பேசுவதற்கு வாய்ப்பைக் கொடுக்கும் என்ற அளவில் எதிர்க்கட்சிகளும் இதற்காக மகிழ்ச்சி அடையலாம். தோழமை அல்லாத - தேர்தல் நேரத்தில் ஆளும் கட்சியை ஆதரித்த எதிர்க்கட்சிகளும் பல பிரச்சினைகளை இதில் பேசலாம். இந்தத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில், வழி மொழியவில்லை என்றாலும், இதைப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு நாட்டுப் பிரச்சினைகளை எடுத்துச்சொல்வதற்கு பயன்படும் என்கின்ற காரணத்தினாலும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பல்லவன் போக்குவரத்து கிளர்ச்சிக்குப் பிறகு மதுரை மாணவர்கள் கிளர்ச்சி ஒன்று நடைபெற்றது. அதையும் தூக்கி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலையில் போட்டார்கள்.

மதுரையிலே மாணவர்கள் கிளர்ச்சி நடைபெறுவதற்கு முதல் நாள் இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப் பட்டார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட காரணத்தால் அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் கொதிப்படைந்து மதுரை போன்ற பல்வேறு இடங்களில் கதவடைப்பில் ஈடுபட்டபோது கதவடைக்க மறுத்த ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பலபேர்கள் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள், கைகால்கள் ஒடிக்கப் பட்டிருக்கின்றன. மண்டைகள் பிளக்கப்பட்டிருக்கின்றன. சிலர் மருத்துவ மனைகளிலே சேர்க்கப்பட்டார்கள். சிலர் மதுரை மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார்கள்.

அந்த நேரத்திலே நான் திருநெல்வேலி மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்வதற்கு சென்னையிலிருந்து கன்னியாகுமரி எக்ஸ்பிரஸில் புறப்பட்டுச் செல்கிறேன். அப்படி புறப்பட்டுச் சென்ற ரயில் செங்கற்பட்டு ரயிலடியில் 6 மணி நேரம் தாமதமாகி விட்டது. அதற்குக் காரணம் செங்கற்பட்டிற்கு அடுத்தாற்போல் மாணவர்கள், தாங்கள் விரும்புகிற இடத்தில் ரயில் நிற்க வேண்டும் என்று பல நாட்கள் எடுத்துவைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தாலே அந்த வழியில் முன்னால் சென்ற ரெயில்களை மறித்துவிட்ட காரணத்தால், நாங்கள் சென்ற ரயில் செங்கற்பட்டிலே 6 மணிநேரம் தாமதமாகிவிட்டது. தாமதம்

ஆகாமல் இருந்தால் நான் குறிப்பிட்ட நேரத்திலே திருநெல்வேலி போய்ச் சேர்ந்து இருக்கலாம். தாமதம் ஆன காரணத்தாலே செங்கற்பட்டு ரயில் நிலையத்திலிருந்து மதுரை வரை சென்று மதுரையிலே இறங்கி பிறகு அங்கிருந்து கார் மூலம் நெல்லைக்குச் செல்லலாம் என்று முடிவெடுத்து செங்கற்பட்டி லிருந்து போன் மூலம் மதுரைக்கு தெரிவிக்கப்பட்டது.

மதுரையில் காலையில் 6 மணிக்குப் போய் இறங்கியது. பிறகு முதல் நாள் மதுரையிலே கிளர்ச்சியிலே அடிபட்ட மாணவர்கள், அடிக்கப்பட்டதால் ஓரளவிற்குக் காயப் பட்டவர்கள், அதிக காயமுற்று மருத்துவமனையிலே சேர்க்கப் பட்டவர்களை மருத்துவமனையிலே வந்து பார்க்கவேண்டு மென்ற கோரிக்கையை என்னிடத்திலே விடுத்தார்கள். நாங்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று அங்கு அடிப்பட்டுக் கிடக்கின்ற, காயம்பட்டுக் கிடக்கின்ற மாணவர்களையும் அதற்கு முதல் நாள் சம்பவத்தில் காயமுற்றிருந்த ஜனதா கட்சியைச் சேர்ந்த நண்பர்களையும் பார்த்துவிட்டு என்னை நிருபர்கள் சந்தித்த நேரத்திலே, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு நான் பதிலளித்த போது சொன்னேன். இங்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே போலீசார்போல் செயல்படத் துவங்கியிருக் கிறார்கள். அவர்கள் சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். போலீசார் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னேன்.

மாணவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்.சி.சி. ரைபிளாஸ் சுட முடியாது என்றும் சொல்கிறார்கள் என்றும் குறிப்பிட்டேன்.

அதற்கு மறுநாள் மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரிகளும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிடு கிறார்கள். மாணவர்களை வெளி ஆட்கள் தாக்குவதை போலீசார் அனுமதித்ததாகவும், அ.தி.மு.க. ஆதரவாளர்களும் அ.தி.மு.க. பேட்ஜ் அணிந்தவர்களும் இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்ட தாகவும் கூறப்படுவது சரியல்ல. எனவே இதுபோல தவறான அறிக்கைகளை வெளியிட்டு பொது அமைதியையும் சட்டம் ஒழுங்கையும் குலைப்பது சரியல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் போலீஸ் அதிகாரியும் அறிக்கை விட்டிருக்

கிறார்கள். அறிக்கை விட்டிருப்பது யார்? அதிகாரிகள். அதுவும் எப்படிப்பட்ட முறையில் என்றால், இது போன்ற தவறான அறிக்கைகளைக் கொடுத்து பொது அமைதியையும் சட்ட ஒழுங்கையும் குலைப்பது சரியில்லை. வெளியார் யாரும் கல்லூரி காம்பவுண்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை என்று அறிக்கை வருகிறது. யார் இதை நமக்குத் தருகிறார்கள்? மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரியும் தருகிறார்கள். அரசியல்வாதிகள், அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டிய இது போன்ற அறிக்கைகளை அதிகாரிகள், அதுவும் பொது அமைதியும் சட்ட ஒழுங்கையும் பாதிக்கிற முறையில் அறிக்கை விடக்கூடாது என்று தலைவர்கள் நான் உள்பட சொன்னதைக் குறித்து அறிக்கை விடுகிறார்கள். இந்த முறை சரியா அல்லது முரண்பட்டதா என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

தனியார்கள் யாரும் கல்லூரி காம்பவுண்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை. இது அதிகாரிகளுடைய கூற்று. ஆனால் கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் நிருபர்களுக்குஅளித்த பேட்டியில் மதுரையிலே மாணவர்கள் கிளர்ச்சி நடந்தபோது ஆயுதக் கிடங்கை தனியார் நால்வர் தாக்கி யிருக்கிறார்கள். அமளி நடந்த நேரத்திலே போலீசார் தனியார் நால்வரை கைது செய்துள்ளனர். இந்தத் தனியார் அந்த என்.சி.சி. ஆயுதக் கிடங்கை உடைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக் கிறார்கள், கல்லூரி காம்பவுண்டுக்குள் தனியாரை விடவில்லை என்பது அதிகாரிகளின் அறிக்கை.

ஆனால், அமைச்சருடைய அறிக்கை, தனியார் நால்வர் உள்ளே கைது செய்யப்பட்டார்கள் என்பதாகும். இதற்கொரு நீதி விசாரணை வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற வேறு பல கட்சிகளின் சார்பிலும் வேண்டுகோள் விடப்பட்டது. அறிக்கைகள் விடப்பட்டன. கழக ஆட்சிக் காலத்திலே அண்ணாமலை நகர் சம்பவத்திற்கும், பாளையங்கோட்டை மாணவர்கள் சம்பவத்திற்கும், கிளைவ் விடுதி மாணவர்கள் சம்பவத்திற்கும் நீதிவிசாரணை வைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்தி மதுரையில் மாணவர்கள் மிகக் கொடுமையாகத்

தாக்கப்பட்டிருக்கிற இந்த நிகழ்ச்சிக்கு, அதிகாரிகளும், அமைச்சர்களும் மாறி, மாறி முரண்பட்டதான கருத்துக்களை வெளியிடுவதன் காரணமாக உடனடியாக விசாரணை தேவை என்று எடுத்துக்காட்டினேன்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை, மற்றக் கட்சிக்காரர்கள் விடுத்த வேண்டு கோளும் ஏற்கப்படவில்லை. அதே நேரத்திலே 9 ஆம் தேதி, மறுநாள் நிதியமைச்சரவர்கள் திருச்சியிலே சொல்லியிருக் கிறார்கள். அது தினமணி பத்திரிகையிலே வந்திருக்கிறது. கல்லூரிக்குள் தனியார் சென்றது உண்மைதான் என்று சொல்கிறார்கள். இதுவும் அதிகாரிகள் மறுத்துவருகின்ற விளக்கம்தான். கல்லூரிக்குள் தனியார் சென்றது உண்மைதான். ஆனால் அவர்கள் அ.தி.மு.க.வினர் அல்ல, சர்க்காரின் பெயரை கெடுப்பதற்காக தி.மு.க.வினர்தான் உள்ளேசென்று தாக்கினார்கள் என்று சொல்கிறார்.

இயல்பாகவே நிதியமைச்சர் அவர்கள் இப்படி கேலியாக பேசுவதை வாடிக்கையாகக் கொண்டவர் என்ற காரணத்தால் உள்ளே சென்றது உண்மைதான், ஆனால் உள்ளே சென்றவர்கள் அ.தி.மு.க.வினர் அல்ல, தி.மு.க.வினர்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாணவர்களைத் தாக்கினார்கள் என்ற நிதியமைச்சரின் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம்தான் மாணவர் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டது என்ற அந்தக் குற்றச்சாட்டு எப்படி உண்மையாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட முரண்பட்ட வாதங்களை வைப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு பயன்படுமே அல்லாமல் உண்மையை அறியப் பயன்படாது, எனவேதான் அதற்கொரு நீதி விசாரணை தேவை என்று எதிர்க் கட்சியின் சார்பிலே கூறப்பட்டது. அந்த நீதி விசாரணைக்கு இணங்காத காரணத்தால், இந்த மிகப்பெரிய பிரச்சினையில் இந்த அரசு நீதி விசாரணை வைக்காத ஒரு பெரும் தவறை இழைத்து விட்டது என்ற குற்றச்சாட்டை நான் அரசின்மீது சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்று. அடிபட்டுக் கிடக்கின்ற மாணவர்களைச் சந்திப்பதற்காக நான் செல்கிறேன். அப்படிச் செல்லும் நேரத்தில் மருத்துவமனையில் இருக்கின்ற ஒரு டாக்டர், 'டீன்' என்று கருதுகின்றேன். முகம்மது கவுஸ் என்பார் என்னை வரவேற்கிறார். ஏதோ முன்னாள் முதலமைச்சர் என்ற பாவத்திற்காகவோ அல்லது இன்னமும் பிரதான எதிர்க்கட்சி யினுடைய தலைவராக இருக்கிறானே என்பதற்காகவோ முகம்மது கவுஸ் என்ற டாக்டர் என்னை வரவேற்கிறார். அப்படி வரவேற்ற குற்றத்திற்காகவோ என்னவோ அடுத்த சில நாட்களுக்குள் 100 ரூபாய் இலஞ்சம் பெற்றார் என்ற ஒரு குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டோ, கைது செய்யப்படாமலோ வழக்கு தொடரப்படுகிறது.

அவர் இலஞ்சம் பெற்றாரா இல்லையா என்ற அந்த வழக்கில் நுழைய நான் விரும்பவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலோ அல்லது வேறு ஒரு சிறப்புக் நிகழ்ச்சியிலோ பேசும்பொழுது குறிப்பிடுகிறார் மாணவர்கள் எத்தனை பேர் அடிபட்டார்கள் என்ற கணக்கை அந்த டாக்டரிடம்-கவுஸிடத்தில் கேட்டேன், முதல் நாள் ஒரு கணக்கைச் சொன்னார். மறுநாள் ஒரு கணக்கைச் சொன்னார், இப்பொழுது அவர் மாட்டிக்கொண்டார் என்று முதலமைச்சர் சொல்கிறார் என்றால் அது நீதிமன்றத்தில் தலையிடுவது ஆகாதா என்பதுதான். . . . . .

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த வழக்கு இப்பொழுது நீதி மன்றத்திலே இருக்கின்ற காரணத்தாலே.

It is affected by sub Judice so, it cannot be raked up.

கலைஞர் மு. கருணாநிதி : நான் சொன்னதை அவர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். அவர் இலஞ்சம் வாங்கினாரா அல்லவா என்ற அந்தப் பிரச்சினைக்குச் செல்லவில்லை என்று கூறிவிட்டேன், ஆனால் . . . . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர வர்களே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலில் ஒரு டாக்டரைப்

பற்றி சொன்னார்கள். 100 ரூபாய் லஞ்சம் வாங்கியதாக வழக்கு போடப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அதன்மீது நம்முடைய உழைப்பாளர் கட்சியின் தலைவர் ஒரு பிரச்சினையை கொண்டுவந்தார்கள். நீதிமன்றத்திலே அந்த வழக்கு இருப்பதால் சப் ஜூடீஸ் ஆகாதா என்று கேட்கிறார்கள். என்னுடைய கருத்தெல்லாம், அப்படி ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லியிருப்பார்களேயானால் எந்தவிதமான தவறும் இல்லை. (குறுக்கீடு) நான் விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். ஆனால், இதற்கு முன் ஒரு காரணத்தைச் சொல்கிறார். என்னை, முன்னாள் முதலமைச்சராக இருந்த காரணத்தினாலோ அல்லது இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினாலோ அவர் என்னை சந்தித்தார், அப்படிச் சந்தித்த சில நாட்களுக்குள்ளாக அவர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு சாட்டப்பட்டு வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று ஒரு மோட்டிவ் கற்பிக்கும் விதத்தில், குற்றச்சாட்டு கற்பிப்பதுதான் தேவையில்லை என்று உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர வர்களே, இதற்கெல்லாம் முதலமைச்சரவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில், பதில் அளிப்பார் என நான் நம்புகிறேன். நான் கூறுவதெல்லாம் இப்படி ஒரு வழக்கு போடப்பட்டு பிறகு முதலமைச்சர், பேசுகின்ற ஒரு கூட்டத்தில், இந்த டாக்டர் மாணவர்கள் தாக்கப்பட்டதைக் குறித்து எனக்குத் தவறான விவரங்களைத் தந்துகொண்டிருந்தார் என்று கூறிவிட்டு, அவர் இப்பொழுது மாட்டிக்கொண்டார் என்று, முதலமைச்சர் சொல்லிவிட்ட காரணத்தினால், எங்கே அது ஒருவேளை நீதியிலே தலையிடுவதாக ஆகிவிடுமோ, நீதிபதி அவர்களை இப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுமோ என்ற அச்சத்தோடுதான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், வேறு அல்ல. நான் வழக்கினுடைய உள் விவகாரங்களுக்குச் செல்ல விரும்பவும் இல்லை, சொல்லவும் இல்லை.

அடுத்த பிரச்சினை, இன்று தமிழ்நாடு கடலோரங்களில் குமுறிக் கொண்டிருக்கிற மீனவர்களுடைய பிரச்சினை. இந்த

மீனவர்களுடைய பிரச்சினைகள்பற்றி நேற்று கூட இங்கே கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதிலே, விசைப் படகுகாரர்களையும் கட்டுமரப் படகுகாரர்களையும் சமமாக நடத்த வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. நான் சொல்வது, விசைப்படகுக்காரர்களையும் சாதாரணக் கட்டுமரப்படகுக்காரர்களையும் எவ்வாறு சமமாக நடத்த முடியும், நிச்சயமாக முடியாது. ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விசைப்படகுகளை ஓட்டி, அதில் லாபம் சம்பாதிக்கிறவர்கள் விசைப்படகுக்காரார்கள், கட்டுமரக்காரர்கள் எந்த நேரத்திலும் கவிழக்கூடும் என்ற சூழ்நிலையோடு, அவர்களும் கடலுக்குள்ளே சென்று, சிறு வருவாயை மீன்களைப் பிடிப்பதன் மூலம் பெறக்கூடியவர்கள்.

ஆனால், எழுந்துள்ள பிரச்சினை அதுவல்ல. இருவரும் சமமானவர்களா, அல்லவா என்பதல்ல. ஆனால், ஏற்பட்டிருகிற அமளிக்கு, உயிர்களைக் காப்பதற்கும், உடமைகளைப் பாதுகாக்கவும், அது விசைப்படகு எரிக்கப்பட்டாலும், அல்லது கட்டுமரம் நொறுக்கப்பட்டாலும், இந்தப் பிரச்சினைக்கு நீண்ட நாட்களாக ஒரு தீர்வு காணமுடியாமல் இந்த அரசு இருந்து வருகிறது. அரசிலே உள்ள சிலபேர் ஓரிடத்திலே விசைப் படகுக்காரர்களையும் இன்னொரு இடத்திலே கட்டுமரக்காரர் களையும் ஆதரிப்பதானது இன்று நேற்றல்ல, நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபொழுது கூட இருந்தது.

நாங்கள் ஆட்சியிலிருந்தபொழுது, நெல்லை மாவட்ட விசைப்படகுக்காரர்களை ஆதரித்து, இன்றைக்குள்ள அமைச்ச ரவையிலே உள்ள ஒருவர், என்னிடத்திலே வாதாடியது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. கட்டுமரப் படகுக்காரர்களை ஆதரித்து, இன்றைய தினகரன் பத்திரிகை ஆசிரியரும், முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினருமான, கந்தசாமி அவர்கள் கட்டுமரக்காரர்களுக்காக வாதாடியதாகவும் எனக்கு நினைவு இருக்கிறது. நான் பெயரையே சொல்கிறேன். நமது உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் விசைப்படகுக் காரர்களுக்காக பேசியதும் எனக்கு நினைவு வருகிறது. இருவர் வாதாடியதும், பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்கத்தான் என்பதை. . .

எனவே, இந்த 6 மாத காலத்தில் கிட்டத்தட்ட 25,000, 30,000 பேர்கள் அரசியல் கட்சிக்காரர்களிலிருந்து தொழிலாளர் களிலிருந்து, மாணவர்களிலிருந்து, மருத்துவக்கல்லூரி மாணவர்களிலிருந்து, அவுஸ் சர்ஜன்களிலிருந்து, கல்லூரிப் பேராசிரியர்கள் வரையில் கைது செய்யப்பட்டு அவர்களிலே கர்ப்பிணி பெண்கள், மதுரையிலே இருந்து வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, லாரியிலே அழைத்துசெல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சி என்ற முறையில் நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறோம். அப்படி சுட்டிக்காட்டவில்லை என்றால், எங்கள் கடமையிலிருந்து தவறியவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் மாத்திரம் அல்ல. நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைப் பற்றியும் நாம் இங்கே சிந்தித்தாக வேண்டும்.

பொதுவாக, புதிய அரசு தங்களுடைய தேர்தல் பிரகடனத்தில் ருசியான, சுவையான, கவர்ச்சிகரமான, ஈர்க்கத்தக்க, இன்பமான, எழில் வாய்ந்த திட்டங்களை அறிவித்தது. அந்தத் திட்டங்களில் எத்தனையோ, கவர்னர் அவர்களுடைய உரையில் இடம் பெறவில்லை என்ற குறைபாட்டை இந்த அவையில் நடந்த விவாதத்தில் நாங்கள் எடுத்து வைத்தோம். பிறகு கவர்னர் உரையிலே கொஞ்சம் நஞ்சம் இடம்பெற்ற திட்டங்கள் நிதி அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில் இடம் பெறவில்லை என்று எடுத்துக் காட்டினோம்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமானால் 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகள், ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு கடை திறக்கப்படும் என்று கவர்னர் உரையிலே எடுத்துச் சொல்லப்பட்டபோது, இந்த மண்டபமே அதிரும் வண்ணம், ஆளுங்கட்சித் தரப்பிலும் தோழமைக் கட்சித் தரப்பிலே இருந்தும், ஏன் எதிர்க்கட்சித் தரப்பிலும் இருந்தும் கையொலி எழும்பியது. 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்தில் வைக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

ஆக்கபூர்வமான யோசனையைச் சொல்லவேண்டும் என்ற அக்கறையோடு நான் அன்றைய தினம், இந்த மன்றத்திலே பேசும்போது இதிலே உள்ள சிக்கல்களை, சிரமங்களை எண்ணிப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன். பிறகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது எல்லா விஷயங்களையும் அதிகாரிகளைக் கலந்து கொண்டுதான் செய்கிறோம் என்கின்ற வகையில் அளித்த பதில், ஏற்கனவே திட்டவட்டமாக பரிசீலித்து எல்லா நடவடிக்கைகளையும் செய்து விட்டார்கள் என்ற இனிப்பான உணர்வு எனக்கு வந்தது. பிறகு நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில், எதிர்க் கட்சித் தலைவரே இதில் உள்ள சிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறிவிட்டார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் தொடர்ந்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று உணவமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

பிறகு முதலமைச்சர் சொன்னார், இந்தக் கூட்டத்தொடர் முடிவுற்றதும் உடனடியாக அதிகாரிகளை கலந்து இந்த 16,000 நியாய விலைக் கடைகளை திறக்கும் முயற்சியில் அரசு இறங்கும் என்ற உறுதிமொழியினை இந்த மாமன்றத்தில் அவர்கள் தெளிவாக திட்டவட்டமாக அறிவித்தார்கள். ஆனால் இப்போது அளிக்கப்பட்டுள்ள துணை நிதி நிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டது? 16,000 ரெவின்யூ கிராமங்களில் நியாய விலைக் கடை திறக்கப்பட தொடங்கிவிட்டோம் என்றா? இல்லை. சில மாவட்டங்களில், நெல்லை, இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் 442 நியாய விலைக் கடைகளை தொடங்கப் போவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்கள் அறிவித்தது 16,000 நியாய விலைக் கடைகள். இப்போது தொடங்குவதாக சொல்லி இருப்பது 442 கடைகள். கடல் வருகிறது என்று சொல்லி விட்டு கடுகு வந்து விட்டது என்று சொல்வதைப்போல் இன்றைக்கு இந்தக் கடுகைக் காட்டி பாருங்கள், பாருங்கள் நாங்கள் 442 நியாய விலைக் கடைகளைத் திறக்கத் தொடங்கி விட்டோம் என்று கூறியிருக்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளைத் திறக்க இதைவிட ஏற்றதொரு காலம் என்ன என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். புயல் வீசி, வெள்ளத்தால் மக்கள் தவித்து,

அழிந்து, விலைவாசிகள் உச்சிக்குச் சென்று இருக்கும் இந்த நேரத்தில் திறக்கப்படாத நியாயவிலைக் கடைகள், தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்போல், பசிக்கு உதவாத உணவுபோல், பிறகு எப்போது திறக்கப்பட்டால் என்ன? மக்கள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் திறக்கப்பட இருக்கிற 16,000 கடைகளில் ஒரு 10,000 கடைகள் திறந்தோம், ஒரு 5,000 கடைகள் திறந்தோம் என்று சொல்வதற்கு பதிலாக ஒரு 442 கடைகள் திறந்து இருக்கிறோம் என்று சொல்வது, 16,000 எங்கே, இந்த 442 எங்கே என்ற இந்தக் கேள்விக்கு இந்த அரசு என்ன பதில் சொல்ல இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, சொன்ன சொல்லைக் காப்பாற்ற இன்றைக்குத் தவறிவிட்ட இந்த அரசின் மீது இதை மற்றொரு குற்றச்சாட்டாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

இன்னொன்று, நிதிநிலை அறிக்கையில் மிக அழகாக நிதி அமைச்சர் படித்துக் காட்டினார். கிராமப்புறங்களில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு. யார் யாருக்கு? செருப்பு தைப்போர், தையல் கலையில் ஈடுபட்டுள்ளோர், சலவைத் தொழில் புரிவோர், கருமார், தச்சர், நீர் குழாய் பணியாளர்கள், இதுபோன்ற லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறோம்.

அது மாத்திரமல்ல, அடுத்து வரும் 12 மாதங்களில் குறைந்தது லட்சம் பேருக்கு - குறைந்தது லட்சம் பேருக்கு என்றால் லட்சம் பேருக்கு மேலும் எதிர்பார்க்கலாம். குறைந்தது என்றால் மினிமம் லட்சம் பேருக்கு என்று நிதியமைச்சர் அறிவித்தார்கள். 12 மாதங்களுக்குள் என்று அறிவித்து 6 மாதம் ஓடிவிட்டது. இந்த 6 மாத காலத்தில் அந்த லட்சம் பேருக்கு கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதாகச் சொன்னீர்களே, அவர்களுக்கு எத்தனை ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்று இதையும் சுட்டிக்காட்டி, சொன்னபடி நடக்கவில்லை என்ற தவறை இங்கே எடுத்துக் காட்டி இந்த அரசின் மீது மற்றொரு குற்றச்சாட்டைச் சாட்ட நான் கடமைப்பட்டு இருக்கிறேன். முதலமைச்சர்

அவர்களுக்கு - புதிதாக லட்சம் பேருக்கு கொடுப்பதாகச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றாதது மட்டுமல்ல. ஏற்கனவே இளைஞர் அணியில் இருந்த ஆயிரக்கணக்கான பேர் வேலையில் இருந்து அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு மாதம் ரூ.175 முன்பு இருந்த கழக அரசு அளித்து வந்தது. அந்தத் திட்டம்கூட பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் கழக அரசுக்கு ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் இந்த அரசு மாதம்தோறும் ரூ.200 சம்பளம் கொடுத்தால் என்ன என்று கேட்டார். நாங்கள் கணக்கிட்டுப் பார்த்ததில் 200 ரூ. அதிகப் படியான தொகையாக இருக்கிறது என்று கருதி ரூ.175 நிதி ஆதாரத்தைக் கொண்டு அளிக்கலாம் என்று கணக்கிட்டு, ரூ.175 என்ற அளவில் கிட்டத்தட்ட ஒரு 4,000 படித்த பட்டதாரி மாணவ மாணவிகளுக்குத் தருவதாக முடிவு எடுத்து, அந்த இளைஞர் அணி உருவாக்கப்பட்டது.

இன்றைக்கு அவர்களில் பெரும்பாலோர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு தரப்படும் என்று இதே மன்றத்தில் நம்முடைய உணவு அமைச்சர் மாண்புமிகு எட்மண்ட் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்தார்கள். அது பரிசீலிக்கப்படும். வேறு வேலைகளில் அவர்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இன்னும் அதற்கான பரிசீலனை நடந்ததாகத் தெரியவில்லை. இன்னும் அந்த இளைஞர் அணியில் இருந்த யார் யார் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட வில்லை. ஆகவே, அதையும் நான் குற்றச்சாட்டாகக் கூற விரும்புகிறேன்.

மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் பற்றி எல்லாக் கட்சிக் காரர்களும் இங்கே பிரச்சினை எழுப்பினோம். அதைப்பற்றி நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் ராகவானந்தம்

அவர்கள் இதே மன்றத்தில் எடுத்துச்சொன்னார்கள். மாறி மாறி பலரும் இங்கே கேள்வி கேட்ட நேரத்திலே அரசு எடுத்து நடத்துமா என்று கேட்டபோது அமைச்சர் ராகவானந்தம் விளக்கமாகச் சொன்னார்கள். அரசே மூடப்பட்ட தொழிற் சாலையை எடுத்து நடத்த நிதி ஒதுக்குவது சாத்திய மற்றதாக இருக்கிறது என்றும் அப்படி மூடப்பட்ட ஆலைகளைத் தொழிலாளர்களே எடுத்து நடத்துவது பற்றி முதல்வர் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த மன்றத்தில் சொன்னார். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? காற்றிலே கலந்த கீதம் ஆகிவிட்டதா?

அரசே எடுத்து நடத்துமா என்ற கேள்வி எந்த அடிப்படையிலே எழுந்தது? ஏற்கெனவே இருந்த கழக அரசு 13-க்கும் மேற்பட்ட ஆலைகளை எடுத்து நடத்தியது. அந்த அடிப்படையிலேதான் இங்கே கேள்வி கேட்கப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர்களின் சார்பாக உறுப்பினர்கள் கேட்டார்கள். அப்பொழுது அளித்த பதில் அரசே எடுத்து நடத்த நிதி ஆதாரம் இல்லை. எனவே, தொழிலாளர்களே அந்த மில்களை எடுத்து நடத்துவதற்கு எப்படிச் செயல்படுவது என்பதைக்குறித்து முதல்வர் ஆலோசித்து வருகிறார் என்று சொல்லப்பட்டது.

கிட்டத்தட்ட 4, 5 மாத காலமாக இந்தப் பிரச்சினை ஆலோசனையில் இருந்து வருகிறது. சில நேரங்களில் ஆலோசனைகள் ஊறுகாய் பானைக்குள் போய்விடும். அதை வெளியே எடுத்து இலையில் பரிமாறப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாக நான் இந்தக் குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்த விரும்புகிறேன் என்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். ஏற்கனவே இருந்த அரசு விவசாயிகளுக்கு அவர்களுக்கு கட்டுப்படி ஆகின்ற விலை கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு சில நல்ல காரிங்களைச் செய்தது. மத்திய அரசு 74 ரூபாய்தான் கொடுக்க

வேண்டுமென்று சொன்ன போதுகூட அவர்களுக்கு போனஸ் என்று 10 ரூபாயும், போக்குவரத்துச் செலவு என்று 5 ரூபாயும் ஆக மொத்தம் 15 ரூபாயை அதிகம் கொடுத்து ஆக மொத்தம் 89 ரூபாயை அவர்கள் பெற்றார்கள், இந்த அரசு அந்த முறையை கடைப்பிடிக்குமா என்று கேட்டேன். நான் கேட்டதும் முதலமைச்சர் அளித்த பதிலும் 10-8-77 ஹிந்து பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

Intervening, the Leader of the Opposition Mr. Karunanidhi recalled that the D.M.K. Government gave as bonus and transport charges Rs. 15 more than the procurement price fixed by the Centre. He wanted to know whether the preset Government would revive it. The Chief Minister Mr. M.G. Ramachandran said the Government will do whatever was in the best interest of the ryots.

MR. KARUNANIDHI : I have asked a specific question. Will the Government pay anything extra as bonus, transport charges etc., be it Rs. 20 or less?

CHIEF MINISTER : The ryots will get more than what Mr. Karunanidhi expects.

கலைஞர் மு. கருணாநிதி : எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதி எதிர்பார்ப்பதைவிட அதிகமாகவே அந்த உற்பத்தி செய்கின்ற விவாசயிகளுக்கு தரப்படும் என்ற வாக்குறுதியை முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அளித்ததும், அது எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நான் அதை இங்கே படித்துக் காட்டினேன். இதுவரையில் அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. கேட்டால் உணவு அமைச்சர், நாங்கள் கொள்முதல் செய்வதே கிடையாது. கொள்முதல் செய்தால் அல்லவா அதிக விலை கொடுக்க முடியும் என்கிறார். அடிப்படையே நீங்கள் கொள்முதல் செய்யவேண்டும் என்பதுதான். அதற்கு எடுத்து வைக்கப்படுகிற வாதம் இப்பொழுது ஒரே உணவு மண்டலமாக ஆகிவிட்டது. மற்ற மாநிலங்களுக்குச் சென்று விற்றுக் கொள்ளலாம் என்ற வாதம் எடுத்து வைக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே விவசாயிகளிடத்திலிருந்து வியாபாரிகள்தான் வாங்குகிறார்கள். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயிக்காத காரணத்தால் 89 ரூபாய் அல்லது 90 ரூபாய் என்று ஒரு விலையை நிர்ணயித்த நெல்லை வாங்காத காரணத்தால் விவசாயிகளை வியாபாரிகள் ஏமாற்ற முடிகிறது. வியாபாரி குறைந்த விலைக்குக் கேட்டால் உங்களிடத்திலே போடமாட்டேன், அரசு கொள்முதல் நிலையத்திலே போடுகிறேன் என்று மிரட்டுகிற நிலைமை இருந்தால்தான் அவன் பாதுகாக்கப்படுவான்.

இதை எடுத்துச்சொன்னால் உடனே உணவு அமைச்சர், கருணாநிதி, விவசாயப் பேரணியை நடத்துகிறார், விவசாயப் பேரணியை நடத்த கருணாநிதிக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறார். நான் தகுதியற்றவனாக இருக்கலாம் அதை எட்மண்ட் போன்றவர்கள் எடுத்துக்காட்டியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற அந்த வள்ளுவர் வாக்குப்படியும் தகுதியற்ற கருணாநிதி இந்த விஷயத்தைச் சொல்கிற நேரத்தில், சொல்லப்பட்ட விஷயம் சரியானாதுதானா என்பதை எண்ணிப்பார்த்து விவசாயிகள் பிரச்சினை கவனிக்கப்படும் என்று சொல்லியிருந்தால் அந்த அளவுக்குக்கூட இந்த விவகாரம் முற்றியிருக்காது.

பிறகு, பேரணியை நடத்திய பிறகு, முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசிய பிறகு, மறுபடியும் இந்த அறப் போராட்ட ஆய்வுக் குழு முதலமைச்சரைச் சந்தித்த பிறகும், இன்னும் எந்த விதமான, விவசாயிகளுக்குச் சாதகமான அறிக்கை வெளிவரவில்லை. அது வெளிவரவேண்டும் என்பதற்காகத்தான், முதலமைச்சர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்கின்ற இந்தக் குற்றச்சாட்டினை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

நெல் விலையை அதிகப்படுத்திக் கொடுத்தால் அரிசி விலை அதிகமாகி விடாதா என்று கேட்பவர்கள், இப்போது நெல்விலை குறைந்திருக்கிற நேரத்தில், 89 ரூபாய் இருக்கின்ற

நேரத்தில் அரிசி விலை விற்றதோ, அதேதான் 77 ரூபாய் விற்கின்ற நேரத்திலும் அரிசி விலை விற்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. நாம் நெல்விலையை குறைத்திருப்பதை அதிகப் படுத்தி, அதே நேரத்தில் அரிசி விலை ஏறுவதைத் தடுக்க நியாய விலைக் கடைகளை திறக்க வேண்டும். மீண்டும் சுற்றிச்சுற்றி வந்தால், இந்த 16,000 நியாய விலைக் கடைகள் பக்கம்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. ஒரு இனிப்பான அறிவிப்பை அறிவித்துவிட்டு, அதை மீண்டும் மூடி வைத்துவிட்டு, 442 கடைகள்தான் இப்போது திறக்கப்படும் என்று சொன்னால் அது பயனுள்ள காரியமாக இருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக அரசு சார்பாக எடுத்துச் சொல்லப்படுகின்ற எந்த வாக்குறுதிக்கும், பிறகு நடைமுறைக்கும் தொடர்பு இருப்பதில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமென்றால், இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய விசாரணையின் தொடர்பாக சென்னை மத்திய சிறைச்சாலைச் சென்றபோது, அங்குள்ள கைதிகள் சில தகவல்களை அந்தக் கமிஷனுக்கு தந்தார்கள் என்பதற்காக, அந்தக் கைதிகள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை விசாரிக்க யாராவது அமைச்சர்களை அங்கேயனுப்பி ஆராயச் செய்வார்களா என்று கேட்டபோது, முதலமைச்சர் சொன்னார், அமைச்சர்களை அனுப்புவது நல்லதல்ல; ஒரு நீதிபதியை நான் சிறைச்சாலைக்கு அனுப்பி விசாரித்து வரச்சொல்கிறேன் என்று சொன்னார். நீதி பதியை அனுப்பவில்லை. நாங்கள்தான் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டோம். சொல்லி கிட்டத்தட்ட 3, 4 மாதங்கள் ஆகின்றன. 3, 4 மாதங்களில் எந்த நீதிபதி அங்கே சென்றார்? அந்த வாக்குறுதி என்னவாயிற்று? அவர் சென்று, அவர் விசாரித்தது என்ன? இப்படி சட்டமன்றத்தில் சொல்லப்படுகின்ற வாக்குறுதி கவனிப்பாரற்ற நிலையில், சட்டமன்றத்தில்தானே கேட்டான். அங்கு வாக்குறுதி அளித்தால் அலட்சியப் படுத்திவிடலாம் என்று புறக்கணிக்கப்படுகின்ற நிலையில்

காற்றில் போய்விடுகின்றன என்கின்ற குற்றச்சாட்டை நான் மீண்டும் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே, மக்கள் நடத்திச் செல்கின்ற பணியைச் செய்கின்ற அரசு நிர்வாக நடைமுறைப் பணிகளையும் இந்த 6 மாதகாலத்தில் சரியாகச் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

காரணம் சொல்லலாம். புயல் வந்துவிட்டது, வெள்ளம் வந்துவிட்டது என்று. புயல் வந்தது நவம்பர் மாதத்தில்! அந்தப் பணிகளாவது ஒழுங்காக நடைபெற்றனவா என்பதைப்பற்றி நம்முடைய சட்டமன்றக் கூட்டத்தொடரில் 2, 3 நாட்கள் கடுமையான விவாதம் நடைபெற்றிருக்கிறது. அரசைப் பாராட்டிப் பேச ஆரம்பித்தவர்கள்கூட பல இடங்களில் ஏற்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டி, நாமினேஷன் ஏற்பாட்டில் ஊழல் புகார்கள், கான்டிராக்ட் விடப்பட்டதில் இருக்கிற ஊழல் புகார்கள், வேண்டியவர்களுக்கு காண்டிராக்ட்கள் அல்லது நாமினேஷன் தரப்பட்டிருக்கிறது என்ற ஊழல் புகார்கள், அமைச்சர்களுக்கு வேண்டியவர்களுக்கு தரப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள். இவைகள் எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இவ்வளவு கடுமையான புகார்கள் வந்த நேரத்திலும்கூட, நமது முதலமைச்சரின் கவனம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதுதான் இருந்தது. புயல் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாதித்துவிடக்கூடாது என்பதற்காகவா என்றால் இல்லை.

இந்த நேரத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது என்ன குற்றத்தைச் சாட்டலாம் என்பதிலேதான் முதலமைச்சர் தன்னுடைய முழு நேரத்தையும் செலவழித்தார். டெல்லி சென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கவில்லை என்றார். பிறகு, இங்கே வந்த பிறகு சில நாட்களுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கிறது என்று ஒப்புக் கொண்டார். அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த கூட்டுக் குழுக்களிலும், நிவாரணக் குழுக்களிலும் அவர்களை நியமிக்கக்

கூடாது என்று அறிவித்தார் முதலமைச்சர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஒரு அறிக்கை விட்டது. அதைக் கண்டித்து இது நல்ல மரபாகாது என்று அறிக்கை விட்டது. அதற்காக அந்தக் கட்சிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். சில நேரங்களில் அந்தக் கட்சி இப்படிப்பட்ட ஜனநாயக நிலைகளை எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளது. அந்த கட்சியின் அறிக்கைக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் சேர்த்துக் கொள்ளப்படும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கிறது என்று முதல்வர் சொன்னார்.

இது கட்சிக் கொள்கையின் முடிவா அல்லது பிரதமரோ, அல்லது வேறு மத்திய அமைச்சர்களோ பதில் கொடுத்ததற்குப் பிறகு அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதா என்று அந்த மர்மத்திற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. எப்படியோ முதலில் கலந்துகொள்ளவில்லை என்று சொன்ன முதலமைச்சர், மறுபடியும் கலந்து கொண்டதாகச் சொன்னார். நேற்று அதைப் பற்றி கட்சி உறுப்பினர் ரகுமான்கான் கேட்டபோது முதலமைச்சர் முதலில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை அது உண்மை. பிறகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அறிக்கை விட்டார் - எல்லோரும் கலந்து கொள்ளலாம் என்று - அதற்குப் பிறகு கலந்து கொண்டார்கள் - ஆகவே நான் அதை ஏற்றுக் கொண்டேன் என்ற விளக்கத்தை தந்தார்கள்.

அந்த விளக்கம், அடிப்படையிலேயே ஆதாரமற்றது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், புயல் செய்தி வந்த மறுநாளே 25 ஆயிரம் ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் - அது பெரிய பணமல்ல - கோடி நாங்கள் சேர்த்திருக்கிறோம். இது என்ன பெரிய 25 ஆயிரம், தூசு என்று கருதக்கூடும். பெரிய பணம் அல்ல. ஆனால், கொடுமையால் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த 25 ஆயிரம் ஓரளவுக்காவது பயன்படும் என்ற அளவில்தர முற்பட்டோம். நேற்யை தினம் பேராசிரியர் பேசும்போது குறிப்பிட்டதைப் போல திருச்சியை சேர்ந்த பரமதயாளன் என்ற கழகத் தோழன் வெள்ளத்தில் தத்ததளித்து கொண்டிருக்கும் 10 பேரைக் காப்பாற்றிவிட்டு இறுதியில் அப்பணியை மேற்கொண்டிருக்கும் போது மாண்டு போனார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தகைய நண்பர்கள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுகிறாரா என்று எதிர்பார்த்து அதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றா இருந்தார்கள்? சிந்தாமணியில் வெள்ளத்திலே குதித்து வெள்ளத்தால் மூழ்கியவர்களைக் காப்பாற்றினார் பரமதயாளன். அதைப்போலவே கொள்ளிடத் திற்கு அருகாமையில் அரிக்குடி என்ற இடத்தில் ஒரு திட்டில் அகப்பட்டுக்கொண்ட நூற்றுக்கணக்கான கிராமப்புற அரிசனத் தோழர்களை எல்லாம் கழக ஆதரவாளர் K.B.S. மணி, சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரவேலுவைச் சார்ந்த கழக நண்பர்கள் பானையை வயிற்றில் கட்டிக்கொண்டு காப்பாற்றியபோது ஒரு கழக நண்பன் அந்த வெள்ளத்தில் மாண்டிருக்கிறான். எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கை வந்த பிறகு இவைகளையெல்லாம் அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்றா இருந்தார்கள்?

தஞ்சை மாவட்டத்தில் தாழைக்குடி கருணாநிதி போன்ற வர்கள், அதைப்போலவே முன்னாள் அமைச்சர் மன்னை, அன்பில் தர்மலிங்கம் போன்றவர்கள், வேடசந்தூர் பகுதியில் முத்துச்சாமி போன்றவர்கள், கரூர் பகுதியில் நல்லுசாமி பரமத்தி சண்முகம் போன்றவர்கள் உடனடியாகச்சென்று அங்கு ஆக்கப் பணிகளைச் செய்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை வந்த பிறகு அல்ல, முன்பே செய்திருக்கிறார்கள்.

தலைமைச் செயலாளர் பணத்தை வாங்கத் தயங்க வில்லை. மறுத்தார் என்று சட்டமன்றத்தில் பேசப்பட்டதை ஒட்டி அவர் தந்த ''நோட்டினை'' ஒரு குறிப்பினை - நிதியமைச்சர் இங்கே வெளியிட்டார். இதிலே எனக்கு இருக்கிற வேதனை என்னவென்றால், புலவரோ, மற்றவர்களோ அவரைச் சந்திக்கவில்லை - இன்னொருவரிடம் கொடுத்துவிட்டுப் போகச் சொன்னார் என்று இருக்கிறதே அல்லாமல், ''நான் வாங்கிக் கொண்டேன்'' என்றா மறுத்திருக்கிறார்? ''ஒரு மாநாட்டில் உட்கார்ந்திருந்தேன். அப்போது வந்திருப்பதாகச்சொன்னார்கள், இன்னாரிடத்தில் கொடுத்துவிட்டு போகச் சொன்னார்கள்'' என்றுதான் சொல்லியிருக்கிறார். என்ன பெரிய மாநாடாக இருந்தாலும், மாநாட்டில் கலந்து கொள்கிற மந்திரிகள் உட்பட,

அவர்களுக்கு இயற்கை உபாதை ஏற்பட்டு கழிவிடம் செல்ல மாட்டடார்களா? சிறு நீர் கழிக்கச் செல்ல மாட்டார்களா? அதைப் போல, முன்னாள் சபாநாயகர் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் சிறுநீர் கழிக்கின்ற இடத்திற்குச் செல்வதைப் போல வெளியே வந்து அந்தச் செக்கை வாங்கிக்கொண்டு போவதற்கு எவ்வளவு நேரமாகிவிடும்? அந்தக் கழிவிடத்தை விட அவ்வளவு கேவலமானவரா புலவர் கோவிந்தன்? சிந்தித்துப் பாருங்கள். இது சமாதானமா? சீப் செக்ரடரி கொடுத்தது சமாதானமா? வெளியே வந்து அந்தச் செக்கை வாங்கிக்கொண்டு உள்ளே போவதற்கு எவ்வளவு நேரமாகி விடும்; இதற்காக, ஏன் வேண்டுமென்றே ஒரு மழுப்பலான சமாதானம்? நான் வாங்கிக் கொண்டேன் என்றா மறுக்கிறார்? நான் சந்திக்கவில்லை என்று கூறுவது தவறு என்றா மறுக்கிறார்? அதற்கு விளக்கம் சொல்லவில்லை. தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறைச் சாலைக்கு மணியார்டர் அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டேன் என்றால், எனக்குத் தெரியும், ஏற்கனவே சிறைச் சாலை விதி இருக்கிறது. 50 ரூபாய்க்கு மேல் சிறைச்சாலையில் இருக்கிறவர்கள் கைப்பணத்தை வைத்துக்கொள்ளக்கூடா தென்று விதி இருக்கிறது. ஆனால் நான் கேட்டது வைத்துக் கொள்வதற்கான பணம் அல்லவே. அது, உடனே புயல் நிவாரண நிதிக்கு திருப்பி அனுப்ப, ரீ-டைரக்ட் செய்வதற்காகச் செய்த ஏற்பாடுதான் அந்த ஏற்பாடு. அதிகாரிகளுக்கு அது தெரிந்திருந்தும்கூட அவ்வளவு அவசரம் அவசரமாக தலைமைச் செயலகத்திலிருந்து ஒரு தாக்கீது செல்வானேன்?

ஆனால், மணி ஆர்டர் வந்தால் அதை அனுமதிக் காதீர்கள் என்ற தாக்கீது ஏன்? சிறையில் அடைக்கப்பட்ட எங்களுக்கு கழகத் தலைவர்களுக்கு அவர்களுடைய துணைவியார் சோறு கொண்டு வந்து பரிமாறலாம் என்ற அளவிற்கு சட்டத்தினைத் திருத்த முடியுமா என்று நான் சிறை சூப்பெரின்டெண்டு அவர்களோடு பேசிவிட்டுத்தான் வந்திருக்கிறேன் என்று ''இந்து'' பத்திரிகை விழாவில் பேசிய

முதலமைச்சர் அவர்களுக்கு, சாப்பாடு பரிமாற துணைவியாரை அனுப்பச் சட்டத்தையே மாற்றலாமா என்று யோசித்தவர், நாட்டில் இருக்கிற இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுக்குச் சாப்பாடு போட, அவர்களுக்கு உடை வழங்கிட என்று சிறைச் சாலைக்கு அனுப்பப்படும் மணியார்டர்களைக் கருணாநிதி பெறக்கூடாது என்று இருக்கிற சட்டத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டவேண்டிய அளவிற்கு, அவ்வளவு அவசியம் என்ன வந்துவிட்டது? என்று தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவேதான் பல நேரங்களிலே இப்படியெல்லாம் புண் படுத்தப்பட்ட காரணத்தினால்தான் வேறு வழியில்லாமல், மேதகு ஆளுநர் அவர்களிடத்திலே நிதியினை அளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். பேராசிரியர் அவர்களே சுட்டிக்காட்டியதைப்போல, ''சீப் மினிஸ்டர்' ஸ் ரிலீஃப் பண்டு'' என்றுதான் கொடுக்கப்பட்ட செக்கில் போட்டிருக்கின்றது என்று கவர்னர் அவர்களிடத்திலே சொல்லிவிட்டுத்தான் அதை அவர்களிடத்திலே அளித்தோம். எங்கள் மாநில உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதற்கு அடையாளமாக, எடுத்துக்காட்டாக இப்படிப் போட்டிருக்கிறோம் என்று ஆளுநர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லித்தான் அதை அவர்களிடம் கொடுத்தோம். ஆகவே, மாநில உரிமைகளைப் புறக்கணிப்பது என்கின்ற எண்ணம் கிஞ்சிற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது என்பதனை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நாங்கள் சிறைச்சாலையில் இருந்தோம். ஏன்? திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டினோம் என்பதற்காக. திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்திலே ஏற்கப்பட்டதென்று அரசும் அறிவித்து, அதற்கு அனுமதியும் கொடுத்தது. அதற்குப் பிறகு மதுரை நகரிலே நடைபெற்ற சில சம்பவங்களையொட்டி, திடீரென்று தடை உத்திரவு என்று பிறப்பிக்கப்பட்டது. மதுரையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி திருச்சிக்கு எட்டாத

நேரத்திலே, திருச்சியிலே அங்குள்ள கழகத்தலைவர்கள் தலைமையிலே கழகத்தினர் கருப்புக்கொடியோடு நின்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால் திடீரென்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். நீங்கள் இங்கு கூடியிருப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. கலைந்து செல்லுங்கள் என்று. ''இல்லை, திடீரென்று நீங்கள் அறிவிக்கின்றீர்கள். நாங்கள் தடையை மீறுவதாக இருக்கிறோம்'' என்று சொல்லுகின்றார்கள் கூடியுள்ள கழகத்தினர். அந்தக் கூட்டத்திற்கு இடையிலேயே கழகத் தலைவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அங்கே அப்படிப்பட்டதொரு சூழ்நிலை ஏற்பட்டதால் அமளி உருவாகிறது. பின்னர் அந்த அமளியைத் தொடர்ந்து, போலீஸாருடைய வன்முறை, வெறியாட்டங்கள், அடக்கு முறை, தடியடி பிரயோகங்கள், கண்ணீர்புகை குண்டு வீச்சு என்று இப்படியெல்லாம் திருச்சியிலே நடைபெறுகின்றன.

மதுரை, திருச்சி பிறகு சென்னை, காஞ்சிபுரம் என்று எல்லா இடங்களுக்கும் தடை உத்திரவு என்கின்றார்கள். சென்னை நகரிலே எந்தெந்த இடத்திலே யார் யார் கருப்புக் கொடி காட்டுவதற்குத் தலைமை வகிப்பார்கள் என்று அறிவிக்கப் பட்டு இருக்கிறது. அவர்கள் கைது செய்யப்படுவார் களேயானால், அதற்குப்பிறகு கழகத்தின் தலைவர்களாகிய நாங்கள், நிர்வாகப் பொறுப்பில் உள்ள நாங்கள் தடையை மீறி கருப்புக்கொடி காட்டுவோம் என்று அறிவித்திருக்கின்றோம். நாங்கள் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டதாக போலீஸ் ஐ.ஜி. அவர்கள்சொல்லுகின்றார்கள். அகற்றப்பட்டதாக அவர்கள் சொல்லுகின்றார்கள். இரவு 10 மணிக்கு போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், 'வீட்டிலிருந்த உங்கள் கார்களை வேண்டு மானால் வரச்சொல்லுங்கள், நீங்கள் எல்லாம் வீட்டிற்குச் செல்லலாம்' என்று அறிவிக்கின்றார்கள். அதற்குப்பிறகு, திடீரென்று 10-30 மணி அளவில், நீங்கள் கைது செய்யப் பட்டிருக்கின்றீர்கள் என்று சொல்லி, மறுநாள் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுக்கு அழைத்துச்செல்லுகின்றார்கள்.

பதினான்கு செக்ஷன்கள் - சதி நடத்தினோம், இந்திரா காந்தி அவர்களைக் கொல்ல முயற்சிக்க சதி செய்தோம், என்ற

வகையில் - பதினான்கு பயங்கரமான பிரிவுகள் கீழ் எங்கள் மீது வழக்குகள் போடப்படுகின்றன. இதற்கு இடையிலே தீனன், பாபு மற்றும் ஜனதா கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணி என்ற தோழர்கள் பிணமானார்கள், துப்பாக்கி பிரயோகத்தில் என்ற செய்தி கிடைக்கின்றது. இன்னும்கூட அதிகப்பேர் செத்தார்கள் என்ற கருத்து நிலவினாலும் கூட, போலீஸ் கமிஷனர் அவர்கள் சொல்லுகின்றார்கள், பிரேதக்கிடங்கிலே உள்ள பிணங்கள் எல்லாம் துப்பாக்கி பிரயோகத்திலே இறந்தவர்களுடைய பிணங்கள் இல்லை. அவைகள் மின்சார இரயில் விபத்தில் இறந்தவர்களுடைய பிணங்கள்தான்' என்று அறிவிக்கின்றார்கள். அப்படி மின்சார இரயில் வண்டிகளிலே அரைபட்டு மாண்டார்கள் என்ற செய்தி அன்றோ மறுநாளோ வந்தனவா என்றால் எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை. ஆனால் அந்தப் பிணங்கள்தான் அவை என்று பத்து நாட்களுக்குப் பிறகு போலீஸ் கமிஷனர் அறிவித்து விடுகின்றார்.

எவ்வளவு பிணங்களானாலும் இருக்கட்டும், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது, துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினீர்கள். தடை உத்திரவினைப் போட்டீர்கள். எங்கள் மீது 307 செக்ஷன் உள்ளிட்ட பதினான்கு பயங்கரமான செக்ஷன்களைப் போட்டீர்களே, எதற்காக? இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டியமைக்காக.

ஆனால் என் மீது, பேராசிரியர் மீது, ப.உ.சண்முகம் மீது, மற்றும் உள்ள தலைமைக்கழகச் செயலாளர்கள், உறுப்பினர்கள் 20, 25 பேர் மீது அப்படிப்பட்ட செக்ஷன்கள் கீழ் வழக்குகள் போடப்பட்டு, தமிழகத்திலே பலபகுதிகளிலே நூற்றுக்கணக்கான கழகத்தினர் மீது 307 வது பிரிவின்கீழ் வழக்கு போடப்பட்டு பெரியதொரு அடக்குமுறை இங்கே தாண்டவம் ஆடிற்று.

சென்னையில் இருக்கின்ற நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் ஒரு அறிக்கை விடுகிறார். மதுரை, திருச்சி, காஞ்சி, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பங்களைக் குறித்த நீதி விசாரணை நடைபெறும் - முதலமைச்சர் எனக்குச் சொன்னார் நான் சொல்கிறேன். அவரோடு கலந்து பேசிச்

சொல்கிறேன் என்று அறிக்கை விடுகிறார். அது 'இந்து' பத்திரிக்கையில் முதல் பக்கத்தில் கட்டம் கட்டி வருகிறது.

ஆனால், 10, 15 நாட்களுக்குப் பிறகு என்ன சொல்லுகிறார் முதலமைச்சர்? 'மதுரை, திருச்சி, காஞ்சி, சென்னை ஆகிய 4 இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை இல்லை. நீதி விசாரணை, துப்பாக்கியால் சுட்டது சரிதானா என்ற ஒரே விஷயத்திற்காக மட்டும்தான் நீதி விசாரணை' என்று தெரிவித்தார். இந்த முரண்பாடான பேச்சை எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்? இந்த முரண்பாட்டை எப்படி குற்றம் என்று சொல்லாமல் இருக்க முடியும்? இந்த முரண்பாட்டை எப்படி தவறு என்று சுட்டிகாட்டாமல் இருக்க முடியும்?

இந்திரா காந்தி வருகிறார்; விமான நிலையத்தில் இறங்குகிறார். முதலமைச்சர் சென்று அவரைச் சந்திக்கிறார். அங்கே இருவரும் பேசுகிறார்கள். நிருபர்கள் கேட்கிறார்கள். ''வெறும் மரியாதை சந்திப்பு என்கிறார், கறுப்புக் கொடி பற்றி பேசினீர்களா'' என்று கேட்கிறார்கள். 'அதைப்பற்றி அந்த அம்மையார் கவலைப்படுவதாகத் தெரியவில்லை' என்கிறார்.

அதற்குப் பிறகு டில்லிக்குச் செல்கிறார். அங்கே டில்லியில் உள்ளவர்கள் கேட்கிறார்கள். அங்கே சொல்கிறார், ''நான் இந்திரா காந்தியைச் சந்தித்து, அந்த அம்மையார் வெள்ளப் பகுதிகளுக்குச் செல்லலாமா என்று கேட்டார்கள்; பலஹீனமான (டெளன்-ட்ராடன்-பீபிள்) மக்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லலமா என்று கேட்டார்கள். அங்கே யெல்லாம் செல்லவேண்டாம் என்று அவருக்கு அறிவுரை சொல்வதற்காகச் சென்றேன் என்று கூறுகிறார். ஏன் சென்னையிலே ஒரு பேச்சு, டில்லியிலே ஒரு பேச்சு?

'மக்கள் குரல்' பத்திரிக்கையில் வருகிறது; 'இந்திரா காந்தி அம்மையார் மதுரையிலிருந்து முதலமைச்சருக்கு டெலிபோன் செய்தார்கள்' என்று வருகிறது. அது மறுக்கப்படவில்லை, பிறகு- அதற்கு நீண்ட நாளைக்குப் பிறகு அது மறுக்கப்படுகிறது. ராஜ்நாராயன் அதைப்பற்றி அறிக்கை விட்ட பிறகு, ஜார்ஜ்

பெர்னாண்டஸ் அதைப்பற்றி கண்டித்த பிறகு 'இந்திரா காந்தி சொல்லித்தான் தடை உத்தரவு போடப்பட்டது என்று சொன்னபிறகு மறுக்கிறார். 'மக்கள் குரல்' வந்த மறுநாளே ஏன் மறுக்கக்கூடாது? 'மக்கள் குரல்' உங்களுக்குத் தொடர்பில்லாத பத்திரிக்கையா? உங்களுக்கும் அதற்கும் நெடுந்தொலைவா? உங்கள் திருத்தத்தை வெளியிட்டிருக்க மாட்டார்களா? ஏன் மறுநாள் திருத்தம் வரவில்லை?

தொலைபேசியில் பேசினார்கள் என்ற செய்தி டில்லிக்குப் போன பிறகு மறுப்பு. 10 நாள் கழித்து இங்கே மறுப்பு. எனவே, இந்திரா காந்தி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தீர்த்துக் கட்ட, இந்த நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொன்னார். அறிவுரை கூறினார்.

அடுத்து என்ன நடைபெற்றது? 30-ம் தேதி 'மினிமிசா' பயன்படுத்தப்பட்டது. நாங்கள் 'மிசா' சட்டத்தை எதிர்த்தவர்கள். இப்போது ஜனதா அரசு கொண்டு வருகின்ற - தடுப்புக் காவல் சட்டம் - அதையும் நாங்கள் தாட்சணியம் இல்லாமல் எதிர்ப் பவர்கள், தடுப்புக் காவல் சட்டத்தின் பெயரால் 'மிசா' என்றால், நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள். இங்கே 'மினி-மிசா' என்ற அளவில் தமிழகத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது என்பதுதான் எங்களுடைய மிக முக்கியமான குற்றச்சாட்டாகும்.

அதற்கு பிறகு நாங்கள் ரிமாண்டிலே வைக்கப் படுகிறோம். ரிமாண்டில் வைக்கப்பட்ட நாங்கள், 'ஜாமீனில் வெளி வரலாம்; ஜாமீனில் வெளிவரலாம்', என்ற இந்த ஒரே வார்த்தையை முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் செல்கிற இடங்களில் எல்லாம் சொன்னார்கள். வேறு சில தோழமைக் கட்சிக்காரர்களும், 'ஜாமீனில் வெளி வரலாம்; ஜாமீனில் வெளிவரலாம்' என்று சொன்னார்கள்.

முதல்நாள் இவர்கள் பயங்கரக் குற்றச்சாட்டுக்கு ஆளாகி யிருக்கிறார்கள். இவர்கள் வெளியே இருப்பது ஆபத்து; ஆகவே, நீதிபதி அவர்களே, இவர்களுடைய ரிமாண்டை நீடிக்க வேண்டும்'' என்று அரசுத் தரப்பு வக்கீல் வாதம். இந்த வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரிமாண்ட் நீடிக்கப்படுகிறது. மீண்டும் 15 நாட்களுக்குப் பிறகு, நாங்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து

வரப்படுகிறோம். அங்கே மீண்டும் அரசுத் தரப்பு வக்கீல் வாதாடுகிறார்: ''இவர்கள் மிக பயங்கரக் குற்றங்கள் செய்து, அதற்கான தடயங்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. மிக பயங்கரமான சதி நடத்துவதற்கு சில இடங்களுக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தந்திகள் கிடைத்திருக்கின்றன. வழக்கிலே வரும், அதில் தந்தி கொடுத்தோம் என்பது ஒரு குற்றச்சாட்டு. எனவே ரிமாண்ட் நீடிக்கவேண்டும் என்று அரசு வழக்கறிஞர் சொல்கிறார்.

பிறகு, 9-ம் தேதி நாடெங்கும் மறியல் என்று தலைமைக் கழகம் அறிவித்து, ஆங்காங்கே தொண்டர்கள் செயல்படத் துவங்கியதும், 8-ம் தேதி நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறோம். அங்கே அரசாங்க வக்கீல் சொல்கிறார்: இவர்களுடைய பயங்கர சதி தமிழ்நாட்டோடு முடியவில்லை; மற்ற மாநிலங்களிலும் பரவி வேர் விட்டிருக்கிறது. ஆகவே இந்த பயங்கரவாதிகளை ரிமாண்டில் வைக்கத் தேவையில்லை'' இதை விட கேலிக்கூத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா? அவர்கள் வாதம், ''சதி மற்ற மாநிலங்களுக்கு பரவியிருக்கிறது. ஆகவே ரிமாண்ட் தேவையில்லை. ஜாமீனில் அனுப்பிவிடலாம்.''

அந்த வழக்கில் எங்கள் சார்பில் ஆஜரான பாளையங் கோட்டை சண்முகம் அவர்களும், திரு. கணபதி அவர்களும் கேட்கிறார்கள், ரிமாண்ட் தேவையில்லை என்று நீங்கள் சொன்ன பிறகு ஜாமீன் என்ற பிரச்சினை எங்கே எழுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். எப்படியோ விடுவிக்கப்படுகிறோம்.

விடுவிக்கப்பட்ட பிறகு மறுநாள் நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் சம்மன் அனுப்பினால் வரவேண்டும் என்று சொல்லி அனுப்புகிறார்கள். அதில் கையெழுத்து போட்டு நாங்கள் வருகிறோம் என்று சொல்லிவிட்டு வரவில்லை. டயரக்ஷன் கொடுக்கிறார்கள். ''நான் கண்டிஷன்'' நீதிபதி டயரக்ஷன், கண்டிஷன் போடவில்லை. நாங்கள் விடுவிக்கப் படுகிறோம்.

மறுநாள் அவரச அவசரமாக முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் செய்தி கூறுகிறார். நிருபர்களுடைய

ஏக்கமே அடிக்கடி நமது முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியவில்லையே என்பதுதான். ஆனால் அன்று நிருபர்களுக்கு அடித்த அதிர்ஷ்டம் மறுநாளே அவர்களைச் சந்தித்து முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக்கை பற்றி விசாரிக்கச்சொல்லி மத்திய அரசிடமிருந்து எங்களுக்கு ஏழு குற்றச்சாட்டுக்களைப்பற்றி விவரங்கள் வந்துவிட்டன என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன். அப்போதுதான் வந்ததா? இந்திரா காந்தியின் ஆட்சி இருந்தபோதே பாராளுமன்றத்தில் அதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் எட்டு குற்றச்சாட்டுக்கள் பற்றி அறிக்கை தரப்பட்டிருக்கிறது. அந்த எட்டில் ஒன்று பூச்சி மருந்து தெளித்ததுபற்றியது மத்திய அரசு அதில் நடவடிக்கை எடுக்கும், மிச்சமுள்ள ஏழு குற்றச் சாட்டுக்கள் பற்றி மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று இந்த அரசு உதயமாவதற்கு முன்பே கவர்னர் ஆட்சி நடைபெற்ற போதே பாராளுமன்றத்தில் காங்கிரஸ் ஆட்சி சார்பில் அன்றே அந்த ஆட்சியாளர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அப்போது வந்த ஒரு அறிக்கையை ஏதோ இப்போது வந்ததாகச் சொல்லி நடவடிக்கைகள் எடுக்கப்போகிறோம் என்று அவர்கள் சொல்லி தொடர்ந்து அமைச்சர்கள் எல்லாம் கருணாநிதி விடுதலையாகி விட்டார் என்று நினைக்காதீர்கள், கருணாநிதி விடுதலையாகி விட்டது உண்மை. ஆனால் பல வழக்குகளில் சிக்கப்போகிறார். அடுக்கடுக்காக அந்த வழக்குகளைப் போடப்போகிறோம். தொடர் வழக்குகள் போடப்போகிறோம் என்றெல்லாம் அமைச்சர்கள் பேசினார்கள்.

அமைச்சர்கள் எங்களைச் சிறையில் போட்டுவிட்டு என்னென்ன பேசினார்கள்? என் அருமைத் தம்பி, இந்த அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருப்பவர். காளிமுத்து அவர்கள் சிறைச்சாலையில் இருக்கிற கிரிமினல் குற்றவாளி களைவிட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர் என்றெல்லாம் கேட்டார்கள். நான் மகிழ்ச்சியடைந்தேன். தம்பிக்கு இவ்வளவு வீரம் வந்திருக்கிறதே என்று நான் மகிழ்ச்சியடைந்தேன். அப்படிச் சொன்னால்தான் அந்த இடத்தில் இருக்க

முடியும் என்ற சூழ்நிலை ஏற்படுகிற நேரத்தில் தம்பியாக இருந்தால் என்ன அண்ணணாக இருந்தால் என்ன! சிறையில் இருக்கிற சாதாரணக் கைதிகளைவிட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர் என்று கேட்கிற அளவிற்கு சிறைச் சாலையில் எங்களை வைத்தது மட்டுமல்லாமல் எங்கள்மீது இப்படிப்பட்ட பாணங்களைப் பொழிந்து கொண்டேயி ருந்தார்கள்.

நான் கேட்கிறேன், நான் என்ன போலீஸ் ஸ்டேஷனுக்குப் படை எடுத்துச் சென்று அங்கே கைது செய்து வைக்கப்பட்ட தன் மகனை போலீஸ்காரர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு வந்தாரே ஆளும்கட்சி எம்.எல்.ஏ., அவரை விடப் பெரிய குற்றம் செய்தேனா?

நான் என்ன தேனாம்பேட்டையில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களைப் பிடிப்பதற்காக சென்ற போலீஸ் அதிகாரிகளை கட்டிப்போட்டு கத்தியால் குத்தி அவர்களைத் துன்புறுத்தினார்களே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களைவிட பெரிய குற்றவாளியா நான்?

உங்களுடைய ஆறு மாத கால ஆட்சியில் சாதனைகளைச் சொல்வதற்குப் பதிலாக இப்படிப்பட்ட வேதனைகளைத்தான் தந்தீர்கள். கோப்புகளைப் பார்க்கிறோம், கண்ணீர் வடிக்கிறோம் என்று சொல்கிறார்கள், எங்கு பேசினாலும் ஊழல் ஊழல் என்ற பேச்சே தவிர அதைத் தவிர நீங்கள் வேறு எதுவும் பேசுவதில்லை. இந்த ஆறுமாத காலத்தில் எதிர்க்கட்சியினரை நீங்கள் தாக்குவதற்கு என்று பயன்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தை நாட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தியிருப்பீர்களேயானால் எங்களுடைய தூய்மையான ஒத்துழைப்பு உங்களுக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்கும்.

குடகனாறு அணை உடைந்துவிட்டது என்றால் உடைந்தது அந்த அணை கட்டியதால்தான் உடைந்தது என்கிறார்கள். எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு! அவர்கள் கட்டியதால் அந்த ஆணை உடைந்தது என்கிறார்கள். அதுபற்றி ப.உ.ச. அவர்களும், பேராசிரியர் அவர்களும் விளக்கமாக,

தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த குடகனாறு பிரச்சினை பற்றி நான் இந்த நேரத்தில் மீண்டும் விளக்க விரும்பவில்லை.

ஆனால், குடகனாறு பற்றி, அது அந்த இடத்தில்தான் கட்டப்படவேண்டும் என்பதுபற்றி அதன் ஆரம்பத்திலேயே எனது அருமை நண்பரும், இன்றைய அமைச்சருமான திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது பேசினார். பிறகு அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறிச் சென்றபோதும் அந்த குடகனாறு அணை கட்டுவதைப்பற்றி வரவேற்றுப் பேசியிருக் கிறார்கள். அந்த அணை உடைந்த பிறகு அந்த அணை உடைப்பிற்குக் காரணம் அதிகாரிகளுடைய தவறுதான் என்று ஒரு அறிக்கை விடுத்தார். அது பத்திரிகைகளுக்கு அனுப்பப் பட்டது. அந்த அறிக்கையில் ஒரு பின் இணைப்பாக குடகனாறு கட்டுவதற்கு நான்தான் காரணமாக இருந்தேன் - நான்தான் என்றால் சௌந்தரபாண்டியன் என்று ஒரு பின் இணைப்போடு சௌந்தரபாண்டியன் அவர்கள் தன் சட்டமன்றப் பேச்சையும் இணைத்தார். இதெல்லாம் பத்திரிக்கைக்கு வந்திருக்கிறது. என்ன காரணத்தாலோ உடனடியாக அவைகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டன, பத்திரிகை காரியாலயத்திலிருந்து.

வாபஸ் பெறப்பட்டது உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதற்கான ஆதாரத்தை நான் கையில் வைத்திருக்கிறேன். ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். செய்தித்துறை மூலமாக அமைச்சர் அவர்களால் பத்திரிகாலயகங்களுக்கு அனுப்பப்பட்டது பின்னால் திரும்பப் பெறப்பட்டது. காரணம், அதில் அதிகாரிகளுடைய தவறு என்று சொல்லியிருப்பது என்பதும், இந்த அணைக் கட்டுவதற்குதான் முயற்சித்தேன் என்றும் சுட்டிக் காட்டியிருப்பதும்தான். இவைகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த அறிக்கை திரும்பப் பெறப் பட்டது. இதை நான் பெரும் குற்றச்சாட்டாக எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

இராமநாதபுரத்தில் ஆர்.எஸ்.மங்கலம் என்ற ஒரு பெரிய ஏரி, அதற்கு ஒரு பாலம் தேவை என்று அங்குள்ள பிரமுகர்கள்,

கழகத்தைச் சேர்ந்தவர்கள், ராமகிருஷ்ணத் தேவர் போன்ற தேசீய வாதிகள் அரசாங்கத்தினிடத்தில் முறையிட்டார்கள். வறட்சி காலத்தில் அங்கு பாலம் கட்ட வேண்டும் என்றும், தூர் எடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த பெரிய கண்மாய் தூர் எடுக்கப்படுகிறது. அதில் பாலம் கட்டப்படுகிறது. இதைப் பார்வையிட்ட போக்குவரத்து அமைச்சர் என்ன சொல்லுகிறார், இந்தக் கண்மாய் வேலையில் ஊழல் நடந்திருக் கிறது. இந்த ஊழலைச் செய்தவர்கள் யார் என்பதை வெளியில் சொல்லிவிடுவார் என்பதற்காக ஒருவர் கொலை செய்யப் பட்டார். மக்கள் குரல் பத்திரிகையில் இந்தச் செய்தி வருகிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்தியேந்திரன் அவர்களுடைய மாமனாருக்கு காண்டிராக்ட் விடப்பட்டது என்று அமைச்சர் சொன்னதாகச் செய்திவருகிறது. இதை எதிர்த்து சத்தியேந்திரன் அமைச்சர் மீதும் பத்திரிகை மீதும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். வழக்குப் போடுவதற்காக, வழக்குப் போடப்பட இருக்கின்ற காரணத்தினால் நான் இந்த விவரங்களுக்குள் செல்லவில்லை. இதைப்பற்றி நான் ராம கிருஷ்ணத் தேவர் அவர்களிடமும் விசாரித்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த யாரிடமும் இந்த காண்டிராக்ட் கொடுக்கப்படவில்லை என்றும் அதுவும் பாலம் கட்டுகின்ற வேலை முன்னாள் காங்கிரஸ்காரர் ஒருவருக்கு, அவர் எம்.எல்.ஏ. பதவிக்கு நின்று தோற்றுப்போனவர் - அவருக்குத் தான் பாலம் கட்ட கான்டிராக்ட் தரப்பட்டது என்றும், தூர் வாருகின்ற வேலை ஆயக்கட்டுதாரர்களே சேர்ந்து செய்தார்கள் என்றும் சொன்னார்கள். இப்படி எதைப் பார்த்தாலும் ஊழல், ஊழல் என்றே பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்பதில் மிகவும் முனைப்பாக இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எங்களைப் பார்த்து, அதாவது திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்தவர்கள் விளம்பரப் பிரியர்கள் என்று கூறிக்கொண்டே வருகிறார்கள். இவர்கள் விளம்பரப் பிரியர்கள், என்று எங்குப் பார்த்தாலும் பேசிக்கொண்டே யிருப்பது நாங்கள் தான் விளம்பரப் பிரியர்கள், சரி. டெல்லியில் நடைபெற்ற விழாவில் சரண்சிங் அவர்களோடு முதலமைச்சர்

நிற்கிறார் என்றால் அதை எடுத்து இங்கு விளம்பரப்படுத்து கிறார்கள் என்றால் அது விளம்பரம் அல்லவா? உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் கூறி முடித்துக்கொள்கிறேன். சமீபத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டைரியில் முதலமைச்சர் அவர்களுடைய படம் போட்டு விளம்பரப்படுத்தப்படுகிறது. இதுவரை இப்படிப்பட்ட டைரியில் என்னுடைய படம் போட்டதாக, நினைவில்லை. அப்படியே போட்டிருக்குமானால் கூட ஒரு பக்கத்தில் போட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த டைரியில் ஐந்த இடத்தில் (டைரியை எடுத்துக் காண்பித்து) நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய படம் போடப் பட்டிருக்கிறது. இது விளம்பரம் அல்லவா? ஜனாதிபதியோடு கைகுலுக்குகின்ற படம், காமராஜ் அவர்களின் படம் திறந்து வைக்கப்பட்ட போது எடுத்த படம், அண்ணாசிலைக்கு மாலை போடுகின்ற நேரத்தில் எடுக்கப்பட்ட படம், மக்களிடையே பிரதிக்ஞை எடுத்துக்கொள்வது போன்ற படம் மூன்றாவது இடத்தில் வல்லபாய்பட்டேல் படம் திறந்து வைக்கப்பட்ட போது உள்ள படம் இப்படி ஐந்து இடங்களில் முதலமைச்சருடைய படம் தோன்றுகிறதே இது விளம்பரம் அல்லவா? ஏதோ அழகானவர்களைத்தான் இப்படி படம் போடலாம் எங்களைப் போன்ற அழகற்றவர்களின் படம் போடக்கூடாது என்று எண்ணியிருப்பார்களோ என்னவோ தெரியவில்லை - இப்படி ஒரு டைரியில் ஐந்து இடங்களில் நீங்கள் உங்கள் படத்தைப் போட்டு விளம்பரபடுத்தி விட்டு நீங்கள் மற்றவர்களைப் பார்த்து நீங்கள் விளம்பரப் பிரியர்கள், விளம்பரப் பிரியர்கள் என்று சொல்வதற்கு என்ன தகுதி படைத்திருக்கிறீர்கள்? இவ்விதம் உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் எந்தவிதப் பொருத்தமும் கிடையாது. வெறும் வாய்ச்சொல் வீரர்களாகத்தான் இருக்கிறீர்கள் என்பதை சுட்டிக்காட்டி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 72 நாள் : 07.01.1978

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கொண்டுவந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தையொட்டி இறுதி நாளாக விவாதம் நடைபெற்று முடிவுறுகிற இந்தக் கட்டத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு என்னுடைய, உரையைத் தொடங்குகின்றேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒரு மாமன்றத்தில் கொண்டுவருவது என்பது அதிசயமான ஒன்றல்ல என்பதையும் மாமன்ற விதிமுறைகளால் தரப்பட்டுள்ள உரிமையைப் பயன் படுத்திக் கொண்டு எதிர்க்கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக அதனை ஏற்றுக்கொள்கிறது என்பதையும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோதே நான் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் எத்தனையோ அமைச்சரவைகள் மாறி மாறி இருந்திருக்கின்றன என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்த அமைச்சரவைகள் மீதெல்லாம் முறையோடு கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு முடிவுற்றிருக்கின்றன என்பதும் இந்த அவையினுடைய வரலாற்றுப் புத்தகம் நமக்கு எடுத்துக்காட்டுகிற ஒரு செய்தியாகும். முறையற்ற தன்மையிலே வருகின்ற எந்த ஒரு தீர்மானமானாலும் அதை அவை நிராகரிக்கும் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல.

எனவே, முறையோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் ஆராய்ந்து பார்த்த பிறகு அதை முன் மொழிய எத்தனை பேர்கள் எழுந்து நிற்க வேண்டும்

என்கின்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டு அதற்கு பிறகு அலுவல் ஆய்வு குழுவில் அமர்ந்து ஆராய்ந்து நேரம் கணிக்கப் பட்டு விவாதம் வளர்ந்த காரணத்தினால் நேரம் கொஞ்சம் நீடிக்கப்பட்டு இந்த தீர்மானத்தின் மீது எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சியில் இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். அன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த பிரதான எதிர்க் கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து பேசுகிற நேரத்தில் மானம் மரியாதையிருந்தால் உடனடியாக இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்ய வேண்டும் என்கின்ற கடுமையான சொற்றொடர்களை கூறி முடித்திருக்கிறார்கள் என்பதை அவை நடவடிக்கை குறிப்பை எடுத்துப்பார்த்தால் அவைகளை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும்.

நான் துவக்கத்தில் எடுத்துக்காட்டியதைப் போல், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததையொட்டி இந்த அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடவோ அல்லது அதிகமான வாக்குகளைப் பெற்று இந்த ஆட்சியை அகற்றவேண்டும் என்ற எண்ணத்தோடோ, கொண்டுவரப்பட வில்லை என்று சுட்டிக்காட்டிவிட்ட காரணத்தினால், முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது மானம் மரியாதை இருந்தால் ஒழுங்காக ராஜினாமா செய்யுங்கள் என்று சொன்னதைப் போன்ற வார்த்தைகளை நாங்கள் பயன்படுத்த தேவையில்லை, பயன்படுத்தவும் மாட்டோம் - பயன்படுத்த வில்லை என்பதை இந்த அவைக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் உள்ள, குறிப்பாக ஜனதா கட்சியைத் தவிர மற்றவர்கள் அனைவருமே, திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்கிற சொல்லை பயன்படுத்தி தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள்

நாங்கள் எதிர்க்கிறோம் என்றும் சொல்லாமல், ஆதரிக்கிறோம் என்றும் சொல்லாமல் இந்தத் தீர்மானத்தை பயன்படுத்திக் கொண்டு அரசு எவ்வகையில் தங்களுடைய பாதையை செப்பனிட்டுக் கொள்ளவேண்டும், எவ்வகையில் அந்த வழி செம்மையாக இருந்திட வேண்டும், எந்தெந்த குறைகள் களையப்படவேண்டும் என்கின்ற கருத்துக்களை எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்காட்டியதோ, அதைப் போலவே ஜனதாக் கட்சியை சார்ந்தவர்களும் அவர்களுடைய கொள்கைகளுக்கேற்ப தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றை நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு கவனிக்கிறேன். நண்பர் ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக்காட்டியது போல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு காலத்தில் தோழமைக் கட்சிகளாக ஆக முடியும் என்று எண்ணுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு இங்கே பிரதான எதிர்க் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்ட வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையின்மை தீர்மானமோ என்று ஐயுறுகின்ற அளவுக்கு இந்தத் தீர்மானத்தின் மீது பேசியவர்கள் மிகக்கடுமையாக விமர்சித்ததை இந்த மாமன்றமும் நன்கு அறியும், நாட்டுக்கும் நன்கு தெரியும்.

ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். ஆறு மாத காலத்திற் குள்ளாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவைதானா, அதை திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே கொண்டு வரலாமா என்கின்ற பிரச்சினையை பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். இதற்கு இந்த அவையில் முன் மாதிரி இருக்கிறது என்பதை இன்று காலையில் பேசிய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள்கூட எடுத்துக் காட்டினார்கள்.

ஆனால், அதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு என்று சுட்டிக் காட்டினார். நான் அந்த விதிவிலக்கிற்குள் நுழைய விரும்பவில்லை.

1957ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து, அதற்கு முன்பு கேரள மாநிலப் பகுதிகளும், ஆந்திர மாநிலப் பகுதி களுமாக ஒருங்கிணைந்த சென்னை ராஜதானி, சென்னை ராஜ்யம் என்று அந்த பகுதிகள் இணைந்த ஒரு மாநிலமாக நம்முடைய தமிழகம் இருந்தபோது, மாநில அளவில் மொழி வாரியாக அவைகள் பிரிக்கப்பட்டு, மொழிவாரி மாநிலம் என்ற வகையிலே, மாநிலங்கள் ஒரு தனி ஸ்டேட் என்கிற அந்த உரிமையைப் பெற்று, 1957ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று முடிந்து, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அமைச்சர் அவை 13-4-1957ஆம் ஆண்டு தோன்றுகிறது. அப்படி 13-4-1957 அன்று தோன்றிய காமராஜ் அவர்களுடைய அமைச்சர் அவையை எதிர்த்து 28-10-1957 அன்று 6 மாத காலத்தில் என்னுடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த மன்றத்திலே முன்மொழிந்தார்கள் என்பது அவைக் குறிப்பிலே காணக்கிடக்கின்ற ஒரு தகவல் ஆகும்.

அது மாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகு, 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி நான் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். 10ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே அதற்கு 15 நாட்கள் கழித்து, 25 ஆம் தேதி இந்த அமைச்சர் அவையின் மீது காங்கிரஸ் கட்சி ஒரு கண்டனத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்தது. மாதக் கணக்குகூட இல்லை; நாள் கணக்கில், அதுவும் அண்ணா அவர்களை இழந்துவிட்டு, எப்படி அந்த ஆட்சிக் காலத்தை சுழற்றப் போகிறோம் என்று தவித்துக்கொண்டு, ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த நேரத்தில், எண்ணி 15ஆம் நாள் இந்த அமைச்சர் அவையின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் இந்த மாமன்றத்தில் வந்திருக்கிறது. அப்படி வரலாமா என்று நான் கேட்கவில்லை. அப்படி வரலாமா என்று கேட்டவர்களுக்கு, ஏற்கனவே முன் உதாரணங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதற்காகச் சொல்கின்றேனே அல்லாமல், அவற்றை யெல்லாம் குறைகூற விரும்பவில்லை.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றும் தோழமை கட்சிக்காரர்கள், இவர்கள் எல்லாம் பேசுகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, என்னென்னத் தவறுகளை செய்தது என்பதையெல்லாம் சுட்டிக் காட்டுவதற்குத்தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் தங்களுடைய நேரத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் ஒன்றை நான் நன்றி உணர்ச்சியோடு பாராட்டு வேன். அவர்களுடைய பேச்சிலே பெரும் பகுதி, இந்த அவைக்கு அவர்கள் சொல்லவேண்டிய அறிவுரைகளை, தர வேண்டிய எச்சரிக்கைகளை ஆளும் கட்சிக்கு தோழமைக் கட்சிக் காரர்களும், மற்றுமுள்ள எதிர்க்கட்சிக்காரர்களும் தந்தமைக்காக நான் அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தங்களால் முடிந்த அளவுக்குத் தாக்கினார்கள். அதற்காகவாவது குறைந்த பட்சம் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்த எனக்கு ஒரு நன்றியாவது தெரிவித்திருக்கலாம். அதைக்கூட அவர்கள் தெரிவிக்க மனம் இல்லாமல் போய் விட்டார்கள் என்பதை எண்ணி நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

ஒரு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை என்பதை நான் திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் அன்றைக்கு எடுத்த முயற்சிகளை யெல்லாம் கடந்த கால வரலாறு நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு அமளி தோன்றி, அதன் காரணமாக ஒரு பிளவு ஏற்பட்டு, அதன் பிறகு, அந்த அடிப்படையில் நடைபெற்ற வன்முறைச் சம்வங்கள் நாட்டில் எந்த அளவிற்குப் பெருகின. எத்தனை பேருந்துக்கள் உடைக்கப்பட்டன?

எத்தனையோ லாரிகளும், பேருந்து வண்டிகளும் என்னுடைய இனிய நண்பர், இன்றைய முதலமைச்சர் படத்தை ஒட்டிக் கொண்டால்தான் தெருவிலே போகலாம், சாலைகளிலே ஓடலாம் என்ற அளவுக்கு வழிமறித்துத் தாக்கப்பட்டன. அன்று அமைச்சராக இருந்த மன்னை நாராயணசாமி இராமநாதபுரம் கூட்டங்களுக்குச் சென்றபோது எப்படி தாக்கப்பட்டு காயமுற்றார்கள்? நாங்கள் சென்ற இடங்களில் எந்த அளவுக்கு அமளிகள் நடைபெற்றன என்பதையெல்லாம், கடந்த காலத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் அவைகளையும் இணைத்துப் பார்க்கவேண்டுமென்று கடந்த காலத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரணி நடத்தப்பட்டது - திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்த்து. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கும் ஊர்வலங்கள் எடுக்கப்பட்டன. ‘‘இந்த அரசு லஞ்ச லாவண்ய அரசு, நீ இந்த அரசில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் நீயும் இந்த லஞ்ச லாவண்யத்திற்கு ஒப்புதல் தருகிறாய் என்று பொருள். எனவே நீ அந்தக் கட்சியிலிருந்து விலகி விடு’ என்ற அளவுக்கு எம்.எல்.ஏ.க்கள் வீடுகளுக்கு மனுக்கள் தருகிற வகையில் எல்லா எம்.எல்.ஏ.க்கள் தொகுதிகளிலும் 170 எம்.எல்.ஏ.க்களுடைய வீடுகளுக்கும் அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஊர்வலம் எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரணி எடுத்து இங்குள்ள கவர்னரிடத்தில் புகார் மனு தரப்பட்டது. அந்தப் புகார் மனு வரலாறு என்னவென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்திலே கழகப் பொருளாளர் வெளியேற்றப்பட்ட பிறகு, அவருடைய ஸ்டூடியோவில் பல கூட்டங்களில் பேசிய நேரத்தில் பேசியதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அப்போது கழகப் பொதுக்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் பேசியதாக சுதேசமித்திரன் பத்திரிக்கையில் வந்த செய்தி என்னை வெளியேற்றிய இந்த

மந்திரிகளுடைய ஊழலை அம்பலப்படுத்துவேன்' என்று பேசியதாக கொட்டை எழுத்தில் மித்திரன் பத்திரிக்கையில் செய்தி வந்தது. அந்த பத்திரிகை வந்த அடுத்த இரண்டொரு நிமிஷத்திற்குள்ளாகக் அவரிடமிருந்து ஒரு தந்தி, தந்தியின் நகலும் கிடைத்தது. சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து 'நான் அப்படிப் பேசவில்லை. மந்திரிகள் ஊழல் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. நீங்கள் செய்தியைத் தவறாகப் போட்டிருக்கிறீர்கள் என்று சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து தந்தியின் நகல் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனக்கும் அனுப்பி வைத்தார்கள். பொதுக் குழுவில்கூட அந்தத் தந்தி படித்துக் காண்பிக்கப்பட்டது. இந்த விளைவு ஏற்பட்டு, பொருளாளர் கட்சியில் இருந்து வெளியேறிய அந்தக் காலம் வரை, வெளியேறிய பிறகும் சுதேசமித்திரன் பத்திரிகைச் செய்தியை மறுக்கிற வகையில் இப்படிப்பட்ட புகார்கள் எழவில்லை.

ஆனால் யார் எந்த வகையில் முயற்சித்தார்களோ, அந்த ஆராய்ச்சிகளுக்குள் செல்ல விரும்பவில்லை - அவர்கள் பெற்ற வெற்றியின் அடையாளமாக புகார்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்தப் புகார்ப் பட்டியலை எடுத்துச் சென்று ராஜ்பவனத்தில் ஆளுநரிடம் தரப்பட்டது. ஆளுநர்தான் அதைப் பெற்றுக் கொள்கிற உரிமை படைத்தவரா என்ற பிரச்சினையை எழுப்பிய பிறகு ஜனாதிபதியிடம் புகார் மனு கொண்டுபோய்க் கொடுக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு கூட்டங்களில் இப்படிப்பட்ட ஊழல் செய்கிற ஆட்சி தமிழகத்தில் இருக்கக் கூடாது. அகற்றப்பட வேண்டுமென்று தொடர்ந்து, அந்தப் போராட்டம், நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி அம்மையார் ராஜ்பவனத்திற்கு வந்தபோது அவரிடத்தில் மனுக் கொடுத்து, ஆட்சியை அகற்றுங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு வெடித்தது.

அவைகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பழி வாங்குகிற முறையில் இந்த ஆட்சியை ஐந்து ஆண்டுகளுக்குள் கவிழ்த்துவிட வேண்டுமென்ற கேடு நினைப்பு திராவிட

முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்படாது என்பதை இந்த மாமன்றத்தில் அறிஞர் அண்ணாவின் படத்திற்கு முன்னால் நின்றுகொண்டு நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பை பிறகு மக்களேதான் திரும்பப் பெற வேண்டும். மக்கள்தான் அப்படித் திரும்பப் பெற வேண்டுமே தவிர, கிளர்ச்சிகள் மூலமாக, புரட்சிகள் மூலமாக, அமளிகள் மூலமாக, கலவரங்கள் மூலமாக, சட்டம் ஒழுங்கைக் கெடுத்து விடுவதன் மூலமாக ஒரு அரசைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற மனப்பான்மை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடுத்துச்சொல்லப்பட்ட குறைபாடுகளைப்பற்றி விமர்சிக்கிற நேரத்திலே இங்குள்ள கட்சியினுடைய தலைவர்கள், வேறு பல கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் உங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா, உங்கள் ஆட்சியிலே நடைபெற வில்லையா என்று கேட்பது இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற தவறுகளுக்கு சமாதானமாக ஆகி விடாது என்பதை மாத்திரம் நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். நான் எடுத்துவைத்த குற்றச்சாட்டுகளை மறுப்பதற்குப் பதில் முன்பு இவைகளையெல்லாம் நீங்களே செய்யவில்லையா என்று விவாதிப்பதாக இருந்தால் பிறகு நீங்களே தொடர்ந்து ஆட்சியிலே இருந்திருக்கலாம் அவர்கள் ஏன் வரவேண்டும் என்றுதான் கேள்வி நடுநிலையாளர்கள் உள்ளத்திலே எழும். ஏற்கனவே இருந்த ஆட்சி தேவைதானா என்று நிச்சயமாக நடுநிலையாளர்கள் உள்ளத்தில் கேள்வி எழும்.

குறிப்பாக, இங்கே விவசாயிகள் போராட்டத்தைச் சொன்னார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் என் சார்பிலே நல்ல பதில் அளித்து விட்டார்கள் என்று நம்புகிறேன். விவசாயிகள் போராட்டத்திலே ஒரு பைசா கட்டணத்தைக் குறை என்பதற்காக அவ்வளவும் நடைபெற்றதாக அவர்கள் சொன்னார்களேயல்லாமல் உண்மையிலே சொல்ல வேண்டு மானால் மின் கட்டணத்தை 1 பைசா ஏற்றியதற்காகத்

தான் அவ்வளவும் நடைபெற்றது என்றுதான் திருத்திப் படித்தாக வேண்டும். ஒரு பைசா ஏற்றியதற்காக இவ்வளவும் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல் கோவை மாவட்டத்திலே கட்டை வண்டிகள் கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ மூன்று நாட்கள் கோவை நகரத்திலே வீதிகளிலே, தெருக்களிலே, நடைபெற்றது.

சந்து பொந்துகளிலே எல்லா இடங்களிலும் நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சலைப் பயங்கரமாக ஏற்படுத்தியபோதும் காவல் துறை பொறுமையோடு இருந்தது, என்று முதலமைச்சர் அவர்களே அதையும் எடுத்துச் சொன்னார்கள். போலீசார் ஜீப்பிலே சென்றபோது அவர்கள் கொல்லப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டபோது போலீசார் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது என்று அன்றைக்கு நாமெல்லாம் ஒன்றாக இருந்த நேரத்திலே விளக்கி இருக்கிறோம் என்பதை முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள். விவசாயிகள் போராட்டத்திலே இப்படியெல்லாம் அமளி ஏற்படவில்லையா என்று கேட்ட நண்பர்களுக்கு அது தகுந்த பதிலாக அமையும்.

கீழ்வெண்மணிச் சம்பவம்பற்றி இங்கே திரு. ரமணி அவர்கள் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா காலத்திலே அந்தச் சம்பவம் நடைபெற்றது என்று எடுத்துச்சொல்லி அன்றைய தினம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த திரு. ராமமூர்த்தி அவர்கள் அண்ணா அவர்களைச் சந்தித்து என்ன என்ன முறைகளை கீழ்வெண்மணி சம்பவத்தையொட்டி கடைப்பிடிக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்களோ அவைகளையெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் எடுத்தார்கள். நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் திரு. உமாநாத் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், கழக அரசு தொழிலாளர் நல விரோத அரசு ஆக இருந்தது என்று

குறிப்பிட்டார்கள். கழக அரசு தொழிலாளர் நல விரோத அரசாக இருந்திருக்குமேயானால் கோவையிலே மூடப்பட்ட ஆலைகளை - கதவுகளுக்கு வெளியே நின்று கதறிக் கொண்டிருந்த ஆலைத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்கான இந்தியாவிலேயே எந்த மாநிலமும் தராத அளவிற்கு 5 லட்சம் ரூபாயை நிவாரணமாகக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தது கழக அரசுதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதைப் போலவே நெருக்கடிநிலை என்ற பெயரால் தொழிலாளர்களுக்கு போனஸ் தரஇயலாது என்று சொல்லப்பட்டபோது அந்தத் தொழிற்சங்கங்களை நடத்துகிறவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆக இருந்தாலும்கூட, அவர்கள் எங்களிடத்திலே எடுத்துச் சொல்லி, போனஸ் என்ற பெயரால் கொடுக்காவிட்டாலும் எப்படியோ தொழிலாளர்களுக்கு அந்தப் பணம் வந்து சேர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்குப் பிறகு நானும் அப்போது தொழிலாளர் நல அமைச்சராக இருந்தவரும் கோவைக்குச் சென்று ஆலை முதலாளிகளையும் தொழிற்சங்க நண்பர் களையும் அழைத்து - அப்போது திரு. ரமணியும் இருந்தார் என்று நினைவு - உட்கார வைத்துப் பேசி போனஸ் கொடுக்கா விட்டாலும் தொழிலாளர்களுக்கு ஒரு முன்பணம் கொடுங்கள் என்று முன்பணம் கொடுக்கச் சொல்லி சட்டத்தில் சந்து பொந்துகளைக் கண்டுபிடித்து அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மையை செய்யலாம் என்று நன்மை செய்து ஆலை அதிபர்களிடமிருந்து முன் பணத்தை வாங்கித் தந்த அரசாக தி.மு.க. அரசு இருந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் பேசிய காரணத்தினால் அடிக்கடி இந்த அவையிலே உச்சரிக்கப் படுகின்ற உதயகுமாரினுடைய பெயரும், பாளையங்கோட்டை சம்பவமும், திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவமும் பல உறுப்பினர்களால் மீண்டும் மீண்டும் விளக்கப்பட்டன. நான் இந்த அவையிலே கடந்த கூட்டத்தொடரில் மிக விளக்கமாக,

பாளையங்கோட்டை சம்பவத்தைப்பற்றி வைக்கப்பட்ட நீதி விசாரணையில் நீதிபதி என்ன அறிக்கை தந்திருக்கிறார்கள் என்பதைப் படித்துக் காட்டினேன். அந்தச் சம்பவத்திலே சில அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற குறிப்பு இருந்து அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் சொன்னேன். லூர்துநாதன் சம்பவத்திற்குப் போலீசார் காரணம் அல்ல, அவன் ஓடுகின்ற நேரத்தில் ஆற்றிலே விழுந்து இறந்து விட்டான் என்று நீதிபதி சொன்ன குறிப்பையும் படித்துக் காட்டினேன். இதைப் போலவே இன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இருந்த நேரத்திலே ஏற்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவம், உதயகுமார் சாவு. அந்த நேரத்திலே அந்த சாவைப்பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிய நேரத்தில் அதற்கு தகுந்த பதில் அளித்துக் கொண்டிருந்தவர் இன்றைக்கு எதிரிலே வீற்றிருப்பவர்.

அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டு உதயகுமார் சாவுக்கு காவல் துறையினர் பொறுப்பு அல்ல, மற்ற சம்பவங்களுக்கு நீதிபதியின் குறிப்பு அடங்கிய அறிக்கையைப் படித்துக் காட்டினேன். அந்த அறிக்கை அப்பொழுதே அவையிலே வைக்கப்பட்டது. கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்தில் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள், அங்கே உள்ள பஸ் தொழிலாளர்களும், போலீசாரும் சேர்ந்து கொண்டு மாணவர்களை அடித்தார்கள் என்ற வகையிலே நீதிபதியின் முடிவு அறிக்கையின் சார்பில் வெளியிடப்பட்டது. அதையும் சொல்லியிருக்கிறேன். இவ்வளவுக்கும் பிறகும் திரும்பத் திரும்ப உதயகுமார், லூர்துநாதன், கிளைவ் ஹாஸ்டல் என்று பேசிக் கொண்டிருப்பது அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்த பிறகும் அல்லது விளக்கியதற்குப் பிறகும் முறையாகாது என்பது என்னுடைய எண்ணம்.

நான் கேட்பதெல்லாம் மதுரையிலே நடைபெற்ற மாணவர்கள் கிளர்ச்சிக்கு ஏன் நீதி விசாரணை வைக்கக் கூடாது

என்ற கேட்டால் அதற்குச் சரியான விடையளிக்காமல், லூர்துநாதன், பாளையங்கோட்டை என்று பேசிக் கொண்டிருந்தால் போதாது. கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்படதா இல்லையா? அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கு கழக அரசில் நீதி விசாரணை வைக்கப்பட்டதா அல்லவா? அதைப் போல மதுரையில் மாணவர்களுடைய சம்பவத்திற்கு அமைச்சர்கள் ஒரு வகையான அறிக்கையும், அதிகாரிகள் ஒரு வகையான அறிக்கையும், ஏடுகளில் ஒருவகையான செய்தியும் வந்ததால் கேட்கிறேன், அங்கே தாக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, இரத்தக் காயங்களோடு மாணவர்கள் வேதனைக்கு ஆளானார்களே. அதற்காக ஒரு நீதிவிசாரணை வைக்க வேண்டுமென்ற எதிர்க் கட்சிகளினுடைய கோரிக்கையை, முன்னேற்றக் கழகத்தினுடைய கோரிக்கை மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களுடைய கோரிக்கையை ஏன் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய மற்றொரு குற்றச்சாட்டாகும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசிய பேச்சுகளுக்கெல்லாம் கூட எதிர்க்கட்சித் தலைவர்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று இங்கு குறிப்பிட்டார்கள். அப்படி யொன்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது கழக அரசின்மீது இப்பொழுது கூறிய இந்தக் குறைகளைவிட வேறு குறைகள் எதையும் சொல்லித் தாக்கிடவில்லை என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ வள்ளுவருடைய கோட்டத் திறப்பு விழாவைப் பெரிய ஆடம்பரமாக நடத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்டமிட்டது என்றும், அதற்காகத் திருத்தணியிலுள்ள தங்க ரதத்தைக் கொண்டு வந்து, அந்த தங்க ரதத்தைச் சென்னை வீதியிலே இழுத்து வருவது என்றும், அந்த ரதத்திலே அன்றைய தினம்

முதலமைச்சராக இருந்த கருணாநிதி பவனி வருவது என்றும் ஒரு திட்டம் போடப்பட்டது, அந்தக் காரணத்தால்தான் ஆட்சி கவிழ்க்கப்பட்டது என்றெல்லாம்கூட இங்கே சில உறுப்பினர்கள் காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். திருத்தணி ரதம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி மாண்புமிகு ப.உ. சண்முகம் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அதிலே அங்கே உள்ள உற்சவ மூர்த்தியை மட்டும்தான் வைக்க முடியும். அதுவும் தங்க ரதம் என்றால் திருவாரூர் பெரிய தேர் போல நிச்சயமாக இருக்காது. அப்படிப்பட்ட ஒரு தேரைச் செய்வதற்கு எவ்வளவு தங்கம் வேண்டுமென்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி தங்க ரதங்கள், தங்க வாகனங்கள் இப்படிப்பட்ட விழாக்களுக்குக் கொண்டு வரப்படுவது தவறும் இல்லை, அதற்கு முன்மாதிரியும் இருக்கிறது. இங்கு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பல ஆலயங்களிலிருந்த வெள்ளி ரிஷப வாகனங்கள், தங்க ஆட்டுக்கடா வாகனங்கள், வெள்ளி யானை வாகனங்கள் வரவழைக்கப்பட்டு அந்த யானை வாகனத்திலே அண்ணா அவர்களோ, ரிஷப வாகனத்திலே நானோ அல்லது ஆட்டுக்கடா வாகனத்திலே பேராசிரியர் அன்பழகன் அவர்களோ உட்கார்ந்து கொண்டு எப்படி ஊர்வலத்திலே உலகத் தமிழ் மாநாட்டிலே செல்லவில்லையோ அதைப் போல எப்படி அந்த வாகனங்கள் பெரிய லாரிகளிலே வைத்து காட்சிப் பொருளாக ஊர்வலத்திலே எடுத்துச் செல்லப்பட்டனவோ அதைப்போல திருத்தணி ரதமும் ஊர்வலத்திலே எடுத்துச்செல்லப்படலாமா என்று அப்பொழு திருந்த அரசால் யோசிக்கப்பட்டதேயல்லாமல், ஏதோ தங்க ரதத்தைக் கொண்டு வந்து கருணாநிதி பவனி போக வேண்டுமென்ற முயற்சி ஏற்பட்டது என்று அதையும் சதித் திட்டம் போல வெளியிட்டார்கள்.

நல்ல வேளை, அதற்கு ஒரு '307' போடப்படவில்லை யென்கின்ற வகையிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதைப் போன்ற குற்றச்சாட்டுக்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றி இங்கே பேசிய நண்பர்களால் சுமத்தப்பட்டதேயல்லாமல்

வேறு ஒன்றும் அல்ல. அவைகள் நாங்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திசை திருப்புகின்ற வகையிலே அமைந்திருக்கின்றனவே அல்லாமல் வேறு அல்ல. நான் எடுத்துச் சொன்னகுற்றச்சாட்டுக்களை நம்பிக்கையில்லா தீர்மானத்தை நீங்கள் ஆதரிக்காவிட்டாலும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் சரியானவைதான், அவைகளை இந்த அரசு ஆலோசித்து தக்க முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அந்த நண்பர்கள் பேசியிருப்பார்களானால் நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அவசரக்காலச் சட்டத்தை எதிர்த்ததைப் பற்றிச் சொன்னார்கள். 20 அம்சத் திட்டத்தை எதிர்க்கலாமா, 5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கலாமா என்று கேட்டார்கள். நான் இன்றைக்கும் சொல்கிறேன், 5 அம்சத் திட்டத்தை 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்க தவறமாட்டோம். ஏனென்றால் 20 அம்சத் திட்டத்திலே சொல்லப்பட்ட விஷயங்களானாலும், 5 அம்சத் திட்டத்திலே சொல்லப்படுகிற விஷயங்களானாலும் அவைகள் எதுவும் புதிதாக இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலோ அல்லது அவர்கள் புதல்வர் சஞ்சய் காந்தி அவர்களாலோ அறிவிக்கப்பட்டு விட்ட திட்டங்கள் அல்ல. நம்முடைய நிதியமைச்சர் மனோகரன் அவர்கள், அந்த நேரத்திலே எடுத்துக் காட்டியதைப் போல, சஞ்சய் காந்தியினுடைய ஐந்து அம்சத் திட்டங்கள் பெரியார் ராமசாமி அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட திட்டங்கள் என்ற அளவிலே, அதைப் போல, இந்திரா காந்தியாரால் எடுத்துச் சொல்லப்பட்ட 20 அம்சத் திட்டங்கள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் இங்கே நிறைவேற்றப்பட்ட நடைபெற்று வருகிற திட்டங்கள் என்கின்ற வகையில்தான் இருக்கின்றன.

20 அம்சமானாலும், 5 அம்சமானாலும் இன்னும் 5 அம்சத்தைச் சேர்த்து, 30 அம்சமானாலும் எத்தனை அம்சங்களானாலும் மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களாக இருந்தால், பொருளாதாரத் திட்டங்களாக இருந்தால், அவைகளை திராவிட

முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்றுதான் அறிவிக்கப்பட்டது. 20 அம்சத் திட்டம் அறிவிக்கப் பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்தோம். 5 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்தோம். ஆனால் எங்களுடைய கேள்வியெல்லாம், இந்த 20 அம்சத் திட்டம், 5 அம்சத் திட்டம் இவைகளை நிறைவேற்ற ஒரு அவசரச் சட்டம் தேவைதானா? இதுதான் எங்கள் கேள்வி. நீங்கள் எத்தனை அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். 100 அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். ஆனால் அவைகளை நிறைவேற்ற ஒரு அவசரச் சட்டம் தேவைதானா என்று தான் எங்கள் செயற்குழுவிலே நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினோம். உங்களுடைய சமதர்மத் திட்டங்களை நிறைவேற்ற இன்றைக்கிருக்கிற எந்தச் சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன? அப்படி இல்லாதபோது இந்த அவசரச் சட்டம் தேவைதானா என்று எங்களுடைய செயற் குழுவிலே கூட தீர்மானமாக நிறைவேற்றினோம். இதுபற்றி எங்கள் மாநாட்டிலும் தீர்மானம் போட்டுக் கேட்டோம். எனவே, 20 அம்சத் திட்டம் மீதோ, 5 அம்சத் திட்டம் மீதோ எங்களுக்கு எந்தவிதமான குறைபாடும் கிடையாது.

ஆனால், ஒரு நண்பர்கூடப் பேசினார். 20 அம்சத் திட்டத்தை எதிர்த்தீர்கள். ஆனால், சஞ்சய் காந்திக்குப் பயந்து கொண்டு 5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கவில்லையா என்று ஒரு நண்பர்கூடப் பேசினார். ஆனால், இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் அந்த சஞ்சய் காந்தியினுடைய திட்டத்தை எதிர்த்தார் என்றுகூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், உடுப்பியிலே நடைபெற்ற படப்பிடிப்பு நிகழ்ச்சிக்குச் சென்ற முதலமைச்சர் இருபது அம்சத் திட்டம் ஐந்து அம்சத் திட்டம் என்று பிரிப்பதையே நான் ஏற்கவில்லையென்ற கருத்தை நிருபர்களிடம் சொன்னார்கள். அதை அவர் சொன்னதும், சென்னையிலே இங்குள்ள பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் அதைக் கண்டித்து ஒரு அறிக்கை விடுத்தார்கள். அந்த அறிக்கை வந்தவுடனே இன்றைய நமது நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் ஒரு விளக்கம் தந்து பேசி அது பத்திரிகையிலும் வந்திருக்கிறது

''புரட்சித் தலைவரை பத்திரிகை நிருபர்கள் உடுப்பியில் சந்தித்தார்கள். அப்போது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தையும் சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து 25 அம்சத் திட்டமாக அறிவித்திருக்கலாம் அல்லவா என்று நிருபர்கள் கேட்டனர். சஞ்சய் திட்டத்தில் கலாச்சாரப் புரட்சிக்கான கரு இருக்கிறதா என்றும் கேட்டனர்.

பிரதமர் இருபது அம்சத் திட்டத்தை அறிமுகப் படுத்தினார். சஞ்சய் காந்தி ஐந்து அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இவை இரண்டையும் ஒன்றாக அறிவித்திருக்கலாம் என்றார். ஏனெனில் எதிர்க்கட்சிகளுக்கு எந்த வகையிலும் எந்தப் பிரச்சாரத்திற்கும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பதில் புரட்சித் தலைவர் மிகக் கூர்மையாக இருக்கிறார். அவர் திட்டத்தை விமர்சிக்கவில்லை; எதிர்க்கவில்லை; ஆலோசனை - நல்ல நோக்கோடு கூறினார்.

மனச்சாட்சி, அரசியல் தெளிவு உள்ளவர்கள் இதில் என்ன தவறு காண்பார்கள்? இதற்காக சஞ்சய் காந்தியை எதிர்ப்பதாக சஞ்சய் காந்தியைப் பார்க்காத சின்னஞ்சிறார்கள் கூறுகிறார்கள்'' என்று மனோகரன் அவர்கள் சொன்னார்கள். அவர் எப்பொழுதுமே மற்றவர்களை சின்னஞ்சிறார்கள் என்று வாடிக்கையாகக் கூறுவதைப் போல கூறியிருக்கிறார்.

அவர் மீண்டும் பேசுகிறார், ''நான் மூன்று முறை சஞ்சய் காந்தியைச் சந்தித்திருக்கிறேன். புரட்சித்தலைவர் இரண்டு முறை சந்தித்திருக்கிறார். சஞ்சய் காந்தியின் கருத்துக்களை, திட்டங்களை, திறமையை புரட்சித்தலைவர் பாராட்டியிருக் கிறார். இளைஞராக உள்ள சஞ்சய் காந்தியை புரட்சி தலைவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. பிரச்சினையைப் புரிந்து, தெரிந்து வேகத்தோடு செயல்படுகின்ற சஞ்சய் காந்தியின் திறமை என்னைக் கவர்ந்தது'' என்று புரட்சித் தலைவர் கூறினார். பெரியவர் பக்தவத்சலம் அனாவசியமாக வம்பை வளர்க்கிறார். அவருக்குக் கோபம் வருகிறது. சஞ்சய்காந்தியின் வளர்ச்சியைக் கண்டு புரட்சித் தலைவர் பொறாமைப் படுகிறாராம். சஞ்சய் காந்தியை இவர்கள் ஏமாற்ற முடியாது

இவர்களுடைய திறமை அவருக்கு நன்றாகத் தெரியும். வரதட்சணை ஒழிப்பு, மரம் நடுதல், குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை, அறியாமை ஒழித்தல் இவைகளை நாங்கள் வரவேற்கிறோம். இவைகள் எல்லாம் பெரியார் சொன்ன திட்டங்கள்தான்'' என்று எனது அருமை நண்பர், இன்றைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் பேசி அது அப்போது ஏடுகளிலே வந்து - அவர்கள் கட்சி ஏடுகளிலே வந்த குறிப்பைத் தான் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

ஆகவே நான் மீண்டும் சொல்லுகிறேன். 20 அம்சத் திட்டமானாலும் சரி, அல்லது 5 அம்சத் திட்டமானாலும் சரி திட்டங்கள் மக்களுடைய நல்வாழ்வுக்கு தேவை என்கின்ற வகையில் நாங்கள் அன்றைக்கும் எதிர்க்கவில்லை இன்றைக்கும் எதிர்க்கவில்லை. அவைகளை நிறைவேற்ற மக்களுடைய உரிமைகளைத் தட்டிக்கழித்துவிட்டு, உரிமையைக் கேட்பவர் களின் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு, காலையிலே பேராசிரியர் கூறியதைப்போல ஒரு சர்வாதிகாரச் சூழ்நிலையில் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்துவிட்டு, நிறைவேற்ற வேண்டுமா?

பாசன வசதியைப் பெருக்க நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு? அதைப்போலவே மின் விளக்குகளை அதிகப்படுத்த நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு? வருமான வரியை 6,000 ஆண்டு வருமானத்திற்கு என்ற உச்ச வரம்பை 8,000 ரூபாய் என்று மாற்றுவதற்கும் நெருக்கடி நிலைக்கும் என்ன தொடர்பு? இந்தக் கேள்விகளைத்தான் அன்றைக்குக் கேட்டோமே அல்லாமல் 20 அம்சத் திட்டத்திற்கும், 5 அம்சத் திட்டத்திற்கும் அன்றைக்கும் விரோதிகள் அல்ல, இன்றைக்கும் விரோதிகள் இல்ல. ஆனால் அவசர கால சட்டத்திற்கு, அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் விரோதமாக இருக்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்ற, சர்வாதிகாரத்தைப் புறங்கான திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கும் என்பதை நான் மிக, மிக திட்டவட்டமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய முன்னுரையில் இந்திரா காந்தி அவர்களுடைய தமிழக வருகையைப் பற்றியும், அப்போது நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துரைத்திருந்தேன். அதைப்பற்றி என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாரிமுத்து அவர்கள் மிகத்தெளிவாக, விரிவாக - இப்போது இசை விழா நடக்கின்றது, அதையொட்டி சொல்ல வேண்டுமானால், விஸ்தாரமாக (குறுக்கீடு) நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமானால் சாங்கோபங்கமாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சென்னையிலே வந்து இறங்கியதிலிருந்து, மதுரைக்குச் சென்று பிறகு திருச்சி வந்தடைந்து, காஞ்சிக்குள் நுழைந்ததிலிருந்து மீண்டும் சென்னைக்கு வந்தது வரையில் அவர்கள் எடுத்துரைத்தது; திராவிட முன்னேற்றக் கழகம் பெரியதொரு வன்முறையில் இறங்கிவிட்டது. மதுரை சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்கெல்லாம் காரணம் என்றுகூட எடுத்துச் சொன்னார்கள்.

காலையிலே பேசிய எங்கள் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகிற நேரத்திலே குறிப்பிட்டார்கள், அங்கே முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் போலீஸ் அதிகாரிகளை அணுகி - ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் அதை முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள் என்பதற்காக சொல்லுகிறேன் - அங்கே முன்னேற்றக் கழகத்தினர் போலீஸ் அதிகாரிகளை அணுகி இந்திரா காந்தி வருகிறபோது நாங்கள் கறுப்புக்கொடிக் காட்டுவதாக இருக்கிறோம். எனவே அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள் - போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள்- நாங்கள் மக்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பது எங்களுடைய கடமை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது அந்த போலீஸ் அதிகாரி நான் சில கான்ஸ்டபிள்களை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். ஏதோ 50, 60 பேர்கள் கருப்புக்கொடி காட்டப்போவதாக என்று எண்ணிக்கொண்டு சில கான்ஸ்டபிள்களை அனுப்பி வைப்பதாக அதிகாரிகள்

சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாரிமுத்து அவர்களின் கணக்குப்படி 3,000. ஆனால் விமான நிலையத்தில் அம்மையாரை வரவேற்க வந்தவர்கள் லட்சம் பேர். கறுப்புக்கொடி காட்டியவர்கள் 3000 என்று சொன்னார்கள். அந்த மக்கள் தொகை எண்ணிக்கை கட்சிக்கு கட்சி, பத்திரிகைக்குப் பத்திரிகை வேறுபடும். அதிலே நுழைந்து நாம் ஆராய்ச்சி நடத்தத் தேவையில்லை. என்ன நடந்தது? திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் மற்றவர்களும் எங்கே கறுப்புக்கொடி காட்டுவதற்கு இடம் அளிக்கப்பட்டதோ அந்த இடத்திற்கு அருகாமையிலேயே இந்திரா காந்தியை வரவேற்க காங்கிரஸ் கட்சிக்கும் இடம் ஒதுக்கப்பட்டது.

மிக மிக அருகாமையில் இடம் ஒதுக்கப்பட்ட நேரத்தில், ஜீப்பில் ஏறிக்கொண்டு மதுரையில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள், சில முக்கியமான பிரமுகர்கள் ஜீப்பில் ஏறிக்கொண்டு அங்கும் இங்கும் செல்லுவது, கறுப்புக்கொடி ஏந்தி நிற்கும் கழகத் தோழர்களைப் பார்த்து கேலி புரிந்து, என்று இப்படிப்பட்ட சேட்டைகளில் அவர்கள் ஈடுபட்ட காரணத்தால் சில குழப்பம், குமுறல் வெடித்து, குமுறி, ஒரு சூழல் ஏற்பட்டபோது மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் போலீஸ்காரர்களே கேட்டுக்கொண்ட காரணத்தால் நீங்கள் அமைதியாக இருங்கள் என்று கறுப்புக்கொடி காட்ட இருந்த தோழர்களிடத்தில் பலமுறைசென்று அவர்கள் அறிவிப்பு செய்து இருக்கிறார்கள். அந்த அளவிற்கு அமைதியாக நடக்க வேண்டுமென்று மதுரை மாவட்ட தலைவர்களும், மற்ற மாவட்டத்திலிருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அந்தந்தப் பகுதி தலைவர்களும் அக்கறை காட்டினார்கள். மிளகாய்ப்பொடி தூவவில்லை என்று மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் மீண்டும், மீண்டும் எதிர்கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். கறுப்புக் கொடி காட்டுவதற்கு திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் காங்கிரஸ்காரர்கள் அனுமதிக்கப் படவே இல்லை. இந்திரா காந்தி அம்மையாருக்கு வரவேற்பு

கொடுப்பதற்கு விமான நிலையத்திற்குச் சென்றார்களே தவிர, அந்த கறுப்புக் கொடி காட்டிய இடத்தில் கூடி இருக்கவில்லை என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர் தரப்பு வாதம் அவர் எடுத்து வைக்கிறார். எனக்குத் தெரிந்த உண்மையை நான் சொல்கிறேன், அவ்வளவுதான், ஒரு போலீஸ் அதிகாரி கூட காங்கிரஸ்காரர்கள் ஜீப்பில் மிளகாய்பொடி இருந்தது என்று சொல்லி, அது பத்திரிகையில் வந்து இருக்கிறது. பிறகு என்ன காரணமோ, 2 நாள் கழித்து நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுப்பு அறிக்கை விட்டு விட்டார்கள். இடையில் நடந்தது என்ன என்று ஆராய நான் விரும்பவில்லை. அதைப்பற்றிய சர்ச்சைக்கும் நான் வர எண்ணிடவில்லை.

கழகம் வன்முறையில் நம்பிக்கை அற்றது என்பதையும் வன்முறையை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது என்பதையும் இன்றல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்தே எடுத்துச்சொல்லி, நாங்கள் செயல்பட்டு வந்து இருக்கிறோம். ஆனால் வன்முறை சில நேரங்களில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது என்பதை இப்போது நடைபெற்ற போராட்டங்களில் மாத்திரம் அல்ல, உலக உத்தமர் அமைதியின் சொரூபம், காந்தியடிகள் நடத்திய சௌரி சௌரா போராட்டத்தில் ஒரு போலீஸ் ஸ்டேனுக்கு தீ வைக்கப்பட்டு, அந்த காவல் நிலையத்தில் இருந்த அனைத்து காவலர்களும் தீயினால் இறந்தார்கள் என்று வன்முறை சம்பவம் காந்தி அடிகள் காலத்திலேயே நடைபெற்று இருக்கிறது.

அதைப்போலவே, 'வெள்ளையனே வெளியேறு' என்று காந்தியடிகள் போராட்டம் நடத்திய நேரத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு எல்லாம் காந்தியடிகள்தான் காரணம், அவர்களுடைய பேச்சும் எழுத்தும்தான் காரணம் என்று அப்போது வைஸ்ராய்யாக இருந்த லார்ட் லின்லித்கோ தெரிவித்தார். அந்த வைஸ்ராய் சொன்னதற்கு காந்தியடிகள் பதில் தந்தார் ''என்னையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்த காரணத்தால் மக்களுடைய உணர்ச்சிகள் தூண்டப்பட்டு அதன் காரணமாக வன்முறை ஏற்பட்டன'' என்று

காந்தியடிகள் அப்போதே அந்த வைஸ்ராய் சொன்னதற்கு பதில் அளித்து இருக்கிறார். இதைச் சொல்கிற காரணத்தால் காந்தியடிகள் காலத்தில் வன்முறை நடைபெற்றது. இப்போது நடைபெறக் கூடாதா என்று நான் வாதிடுவதாக தயவுசெய்து யாரும் கருதிடத் தேவையில்லை.

பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் நடத்திய போராட்டம் பற்றி நண்பர்கள் எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் நடத்திய போராட்டம், அவர்கள் நடத்திய பேரணி வன்முறை இல்லாமல் நடைபெற்றது என்று சொன்னார்கள். அந்தப் பேரணியில் சென்னை மாநகர வீதியில், அண்ணா சாலையில் காமராஜர் முன் அமர்ந்து ஊர்வலம் சென்றபோது பின்னால் வந்த ஊர்வலப் பகுதியினர் பல தியேட்டர்களை அடித்து நொறுக்கி பெரும் சேதத்தை விளைவித்தார்கள் என்ற செய்தியும் மறுநாள் பத்திரிக்கையில் வந்தது. அதற்கு பெரும் தலைவர் காமராஜ் பொறுப்பாளி என்று சொல்லமாட்டேன்.

அது மாத்திரமல்ல. மதுவிலக்கை மீண்டும் அமல் நடத்த வேண்டுமென்று அவர் நடத்திய போராட்டமானாலும், விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் போராட்டமானாலும், அந்தப் போராட்டங்கள் இத்தனை நாள் நடைபெறுகிறது என்று தெரிந்து கொண்டு, அத்தனை நாள் அவர்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். 12-13 நாள் போராட்டம் நடத்தினார்கள் என்றால், போராட்டம் முடிந்ததும் விடுவிக்கப்பட்டார்கள், அதற்கிடையில், திருச்சி சிறைச்சாலையில் இருந்த காங்கிரஸ் காரர்கள் அங்கே இருந்த வார்டர்களோடு ஒரு அமளியில் ஈடுபட்டு அங்கே இருந்த டவர்-கோபுரம்-அந்த சிறைச்சாலைக் குள்ளே இருந்த டவர் பகுதிக்குச் சென்று, அங்கே மேலே ஏற்றப்பட்டு இருந்த தேதியக் கொடியைச் சுழற்றி ஏறிந்து விட்டு, காங்கிரஸ் கட்சியின் கொடியை டவரில் பறக்க விட்டார்கள். அப்படி செய்ததற்காக 50 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் திரும்பிப் பெற்றுக் கொண்டது என்ற அந்தச் செய்தியையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே வன்முறையை திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டவில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தான் வன்முறை தூண்டப்பட்டது. ஆளுங்கட்சிக்காரர்கள் தங்களுடைய முழு பலத்தையும் காட்டி, இனிமேல் யாரும் இங்கேயிருக்கின்ற ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபடக் கூடாது என்ற வகையில், இந்திரா காந்தியினுடைய வருகையைப் பயன்படுத்திக்கொண்டு வன்முறை பிளான் செய்யப்பட்டது என்று சொல்லுகின்ற அளவுக்கு, வன்முறை, அடக்குமுறை இவைகளில் ஈடுபட்டார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச் சாட்டாகும். நாங்கள் கைது செய்யப்பட்டதாக சொல்லப்படு கிறதோ அல்லது அகற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ, அந்த இடத்தில் நடைபெற்றது என்ன? சென்னை மாநகரத்தில், இந்திரா காந்தி வருவதாக ஒரு வழி சொல்லப்பட்டது. ஆனால் காஞ்சிபுரத்திற்கு அந்த அம்மையார் செல்ல பூவிருந்தவல்லி வழியை விட்டுவிட்டு வேறு வழியாக அழைத்துச்செல்லப் பட்டார்கள், அப்படி பூவிருந்தவல்லி வழியாகச் செல்லுவதாக இருந்தது ரத்து செய்யப்பட்டது என்று அங்கே உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், பூவிருந்த வல்லி தோழர்கள் கறுப்புக் கொடி காட்டுவதற்கு அந்த அம்மையார் அந்தப் பக்கம் வரவில்லை என்றதும், யார் மீதும் கல் எறிந்ததாகவோ, யாரும் வன்முறைக்கு இடம் கொடுத்தார்கள் என்றோ, எந்தச் செய்தியும்கிடையாது. அமைதியாகக் கலைந்து சென்றார்கள். அந்த அம்மையார் அந்த வழியாக வரவில்லை என்று அறிவிக்கப்பட்ட காரணத்தால், அதைப்போல சென்னையில் கிண்டி பகுதியில் அந்த அம்மையார் அந்த வழியாகச் செல்லவில்லை என்று அறிவிக்கப்பட்டதா என்றால் அறிவிக்கப்படவில்லை. அங்கே கூடியிருந்த மக்கள் கூடுகின்ற வரையில் அனுமதிக்கப்பட்டார்கள். பிறகு தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், 2 பேர் மாண்டார்கள் என்ற செய்தி வருகிறது.

அந்தச் செய்தியைத் தொடர்ந்து கறுப்புக்கொடி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கின்ற சீதாபதி, வீராசாமி, நீல நாராயணன் இவர்கள் கைது செய்யப்பட்டதாக செய்தி வருகிறது.

அவர்கள் கைது செய்யப்பட்டால், அடுத்த அணிக்கு நாங்கள் தலைமை வகிக்க வேண்டும் - நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப.உ.ச.-வும், ஆசைத்தம்பியும் என்று அறிவித் திருந்தோம். அதன்படி சொல்கிறோம். நாங்கள் செல்வதற்கு முன்பு திராவிடக் கழகத் தலைவர் மணியம்மையார் அவர்கள் அங்கே செல்லுகிறார்கள். அன்னை மணியம்மையார் அவர்களை காவற்துறையினர் எவ்வளவு கூறத்தகா வார்த்தைகளை எல்லாம் இந்த மன்றத்தில் மீண்டும் சொல்ல முடியாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்திப் பேசினார்கள் என்பதையும், அவைகளை மீண்டும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது அழகாக இருக்காது என்பதையும் நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதைப்போல, வீராசாமி, நீல நாராயணன், சீதாபதி மற்றவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப.உ.ச.-வும் காரில் செல்லுகிறோம். நாங்கள் மறைமலை அடிகள் பாலத்திற்கு மத்தியில் செல்லுகின்ற நேரத்தில் போலீசார் எங்களை வளைக்கிறார்கள். வளைத்து அங்கே நிறுத்துகிறார்கள். காரைத் திருப்பச் சொல்கிறார்கள் கார் திருப்பப்பட்டு நிறுத்தப்படுகிறது. காரை திருப்பி நிறுத்தி வைத்துவிட்டு, எங்களை எங்கே அழைத்துச் செல்ல வேண்டும் என்று போலீஸ் அதிகாரிக்கு ஆணையிடாமல், அல்லது எங்கள் காரை ஓட்டி வந்த காரோட்டிக்கும் உத்தரவு பிறப்பிக்காமல், காரை அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டு, எங்களுடைய கார், மணியம்மையார் வீரமணி போன்றவர்கள் காரை எல்லாம் வைத்துவிட்டு. . . .

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, என்குயரி கமிஷன் ஒன்று அமுலில் இருக்கும்போது, தயவு செய்து அதில் நுழைவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீதி விசாரணைக் கமிஷனிலும் இவைகள் எல்லாம் சொல்லப்படக் கூடிய வெளிப்படையான விஷயம்தான். நீதிமன்றத்தில்

இருக்கிற விஷயமாக இருந்தால், சப்ஜூடீஸ் என்பதால் அதில் நுழைவது தவறாக இருக்கலாம். நான் பொதுப்படையான விஷயங்களைச் சொல்லுகிறேன். நிலைமையைச் சொல்லுகிறேன். எங்களுடைய காரை சுற்றி கண்ணீர்ப் புகை வெடிகள் வெடித்துக் கொண்டிருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினை வழக்கு மன்றத்திற்கு சென்றிருப்பதைப்பற்றி நீதி விசாரணையில் இருப்பதையொட்டி பேசக்கூடாது என்பதுதான் பொதுவான மரபு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர வர்களே, இது பற்றி கிரிமினல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருவதால், இந்த விஷயங்கள் இங்கே கூறப்படக் கூடாதுதான்.

கலைஞர் மு. கருணாநிதி : கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. எப்.ஐ.ஆர். என்ற நிலையில் பேசலாம் அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டுமானால் நாளை ஆராய்ந்து அதைத் தலைவர் தீர்ப்புச் சொல்லலாம்.

THIRU. R. MARGABANDU F. I. R.: has been filed and investigation is going on and it will hamper investigation. So it is subjudice.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இதைப்பற்றி சிந்தித்து என்ன முடிவு பெறவேண்டுமோ அதை நாளை மறுதினம் தரலாம் என்கிறார்கள். அதுவரையில் இதைப்பற்றி செய்தி ஏடுகளில் வராமல் இருந்தால்தான் தலைவர் தீர்ப்பு என்ன என்பது சரியாக அமையும். ஏனெனில் தலைவர் தீர்ப்பு வரட்டும் என்று சொல்லும்பொழுது தீர்ப்பு வருகிறவரையில் இந்தப் பிரச்சினை வெளிவர வேண்டாம் என்பதுதான். அதையொட்டிய தீர்ப்பு வந்த பிறகு அனுமதிக்கலாம் என்றால் பத்திரிக்கையில் வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்றைச் சொல்லுகிறேன். 68-ல் 5-வது பிரிவு 'மோஷன்' ஆனாலும், 'ரிசொலூஷன்' ஆனாலும்.

"No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any any commission or court of enquiry appointed to enquire into or investigate, any metter shall ordinarily be permitted to be moved" :

"Provided that the Speaker may, in his discretion, allow such matter."

என்று இருப்பதால், முதலில் யோசித்தேன் மேலோட்டமாக பேசுகிறார் என்று. ஆனால் நடந்த வரலாற்றையே சொல்லுகிறார்கள். அது விசாரணைக்கு குந்தமாகலாம். இன்வெஸ்டிகேஷன் ஆகி சார்ஜஸ் போடுவதற்கு இடையூறு ஏற்படலாம். தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அதை விட்டுவிட்டு வேறு விஷயத்திற்குப் போகலாம்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மாத்திரம் விசாரணை என்ற காரணத்தால் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தைப் பற்றி பேசலாம் என்று பேசினேன். இருந்தாலும் தங்களுடைய தீர்ப்பிற்கிணங்க மேலும் விரிவாக நான் பேச விரும்பவில்லை. ஆனால் போலீசாரால் தாக்கப்பட்ட அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினர் அவையில் இருக்கிறார். வேறு இடத்திலோ கைது செய்யப்பட்ட இளம்பரிதி எம்.எல்.சி., எலமந்தா எம்.எல்.சி. இவர்கள் எல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்த இடத்துப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டதல்ல. கைது செய்யப்பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப் பட்டார்கள். மிக கொச்சையான வார்த்தைகளால் இழிவான வார்த்தைகளால் போலீஸ் அதிகாரிகளால் அர்ச்சிக்கப் பட்டார்கள். எங்களுடைய தோழன் வான்மதி தன்னுடைய காலை இழக்கிற ஒரு கொடுமை நிகழ்ந்திருக்கிறது. பல

தோழர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். 144 தடை உத்தரவு போடப்பட்டது உண்மை. நான் கேட்பதெல்லாம் 144 தடை உத்தரவு என்றால் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுக்கு மாத்திரம் தானா? 144 தடை உத்தரவில் காங்கிரஸ் கட்சிக்கு விதி விலக்கு அளித்துள்ளார்களா? 144 தடை உத்தரவை போடும்பொழுது 5 பேருக்கு மேல் போகக்கூடாது அல்லது 5 பேருக்கு மேல் ஒரு இடத்தில் கூடக்கூடாது என்கிற பொதுவான உத்தரவு பிறப்பிப்பார்கள். அதற்கு விதிவிலக்கு போடுவார்கள் என்றால், சவ ஊர்வலம், கல்யாண ஊர்வலம், மதச் சடங்குகளுக்கு 144 உத்தரவில் விதிவிலக்கு இருக்கும். ஆனால் இங்கே திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் 144 தடை உத்தரவைப் போட்டுவிட்டு, காங்கிரஸ் கட்சி கூட்டம் நடத்தலாம், காங்கிரஸ் கட்சியின் ஊர்வலம் நடைபெறலாம் என்கிற அளவிற்கு நிலைமையை உருவாக்கினார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திருமண விழாவிற்கு தலைமை வகிக்க வந்திருப்பார்களேயானால் நான் இந்தப் பிரச்சினையை எழுப்ப மாட்டேன். சவ ஊர்வலம் ஏதாவது நடைபெற்றதா என்றால் அந்தச் சவ ஊர்வலம் எங்கள் கட்சியின் சார்பில் செத்துப்போன தீனன், பாபு ஜனதாக் கட்சியைச் சேர்ந்த குண்டடிப்பட்ட சுப்பிரமணி ஆகியோருக்கு சவ ஊர்வலம் நடைபெற்றது. அல்லது காங்கிரஸ் கட்சி மத ஸ்தாபனமா என்றால் அதுவும் இல்லை.

இந்த மூன்றிலும் இடம் பெறாத ஒரு கட்சிக்கு 144 பொது உத்தரவில் எப்படி தனியாக ஒரு விதி விலக்கு அவர்களுக்குத் தரப்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இப்படி மக்களின் உரிமைகளை, தங்கள் இஷ்டத்திற்கு பாரபட்சமான நிலையில் அவர்களுடைய உரிமைகளைப் பறித்துக்கொள்ளுகிற ஒரு போலீஸ் ராஜ்யம் என்று பெயர் சூட்டத்தக்க அளவுக்கு இந்திரா காந்தி அம்மையார் இங்கே வந்த நேரத்தில் நடைமுறைகள் இருந்தன என்று சொன்னால் அது தவறாகாது என்பதே என்னுடைய கருத்தாகும். அதற்கெல்லாம் சிகரமாகத்

தான் 307-வது பிரிவு அங்கிங்கெனாதபடி எங்கும் இன்று போடப்படுகின்றது. மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்கள் இரண்டு மூன்று முறை எச்சரித்து இருக்கிறார். காவல் துறைக்கு அறிவுரை வழங்கி இருக்கிறார். சட்ட விரோதமான உத்தரவுகளை போலீசார் நிறைவேற்றத் தேவை இல்லை என்ற அளவுக்கு இன்றைய மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு எத்தனை பொய் வழக்குகள் 307-வது பிரிவின் கீழ் தி.மு.க.வினர் மீது போடப்பட்டிருக் கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கொலை முயற்சிக்குச் சதித் திட்டம் என்று வழக்கு. சதிசெய்வது என்பது, கொலை செய்ய சதி செய்தார்கள் என்றிருக்கும். கொலை முயற்சிக்குச் சதித் திட்டம் என்ற வகையில் எங்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. குற்றப்பத்திரிகை இன்னமும் தாக்கம் செய்யப்படவில்லை. அது தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடைபெறுகிற நேரத்தில், பல விஷயங்கள் வெளிவர இருக்கின்றன.

ஆனால் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி நாங்கள் மாத்திரமல்ல. இங்கே உள்ள ஏடுகள் மட்டுமல்ல. இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற இங்கே உள்ள இந்தியன் எக்ஸ்பிரஸை சொல்லவில்லை - என்ன காரணமோ, இங்கே அந்தச் செய்தி வெளியிடப்படவில்லை - டில்லியிலுள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், இந்திரா காந்தி வந்திருந்தபோது போலீசார் நடந்து கொண்ட விதத்தை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். ‘‘இந்திரா காந்திக்குக் கொடுக்கப்பட்டிருந்த போலீஸ் பந்தோபஸ்து, அவர் அவசர நிலையின்போது முடிசூடா மகாராணியாக வந்தபோது இருந்ததைவிட பன்மடங்கு அதிகமாக இருந்தது. அன்று காலை 6 மணி முதல் எழும்பூர் ஸ்டேஷனை வளைத்துக் கொண்டு, உள்ளே இருந்து யாரும் வெளியில் செல்லவும், வெளியிலிருந்து யாரும் உள்ளேயும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. எழும்பூர் இரயில் நிலையமே போலீசாரால் வளைத்துக்கொள்ளப்பட்டு, ஸ்டேஷன் முன் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. பந்தோபஸ்து

என்ற பெயரால், டெபுடி கமிஷனர் ஒருவர் இருந்தார். நகர் முழுவதுமே அவசரகால நிலை இருந்தது போலவும், போலீஸ் அதிகாரிகள் மட்டும் செல்ல வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தது. அரசிடமிருந்து அடையாளச் சீட்டு வாங்கிய பத்திரிகை யாளர்கள் கூட அங்கே அனுமதிக்கப்படவில்லை''. இது டில்லியில் இருந்து வரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தி. இங்கே உள்ள எக்ஸ்பிரஸ் அல்ல.

அதுபோலத்தான் டைம்ஸ் ஆப் இந்தியாவும், இரண்டு நாட்களுக்கு முன் நிதியமைச்சருக்கு, புயல் நிவாரணப் பணிகள் பற்றி புகழ் ஆரம் சூட்டி இருக்கிறது, என்று எடுத்துப் படித்துக் காட்டினார். அந்தப் பத்திரிக்கை என்ன சொல்லுகிறது என்றால், தமிழ்நாட்டில் திருமதி இந்திரா காந்தி சென்ற இடமெல்லாம் ஏற்பட்ட வன்முறைகளைப் பரந்த அளவில் ஏற்பட்ட கலவரங்களைப் பார்க்கிற போது, அவற்றை இங்கே இருக்கிற மக்களின் வெறுப்பிற்கு அடையாளம் இல்லை என்று விலக்கி விட முடியாது. இந்திரா காந்தியின் அதிகாரபூர்வமான ஆசீர்வாதத்தோடு காட்சியளித்த மக்களிடையே எத்தகைய கடுங் கோபத்தை இது ஏற்படுத்தும் என்பதை தமிழ் நாட்டின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உணரவில்லை. ''டைம்ஸ் ஆப் இந்தியா'' தலையங்கம், பம்பாய் 8-11-1977-ல் இன்றும் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? ஜனதா கட்சியோடு உறவும், அதே நேரத்தில் இந்திரா காந்திக்கும் அவர் பிரதமராக இருந்த காலத்தில் தந்ததைப் போன்று மாபெரும் வரவேற்பு. நான் கேள்விப்படுகிறேன் இந்திரா காந்தியை டில்லியில் நமது முதலமைச்சர் சந்தித்த நேரத்தில் என்னுடைய நண்பர்கள் பலம் உள்ளவர்களாக இருந்தால்தான் எனக்குப் பயப்படுவார்கள். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களிடம் நேரடியாக இப்போது பகைத்துக் கொள்ளாதீர்கள். நட்பாக இருங்கள் என்று அந்த அம்மையார் சொன்னதாக கேள்விப் பட்டோம். அது உண்மையோ அல்லவோ. நடைமுறையைக் காண்கின்ற நேரத்தில் அப்படிச் சொல்லி இருக்கக் கூடும் என்ற சந்தேகம் கூட எனக்கு எழுகிறது. இல்லாவிட்டால், சர்வாதிகாரம் நடைபெற்ற நேரத்திலும் இன்றைய ஆளும் கட்சிக்காரர்கள்

ஆதாயம் பெற்றார்கள். இன்று இந்தியாவில் ஜனநாயகம் வந்த நேரத்திலும் சர்வாதிகார முறையில் தமிழகத்தை ஆளுகின்ற ஒரு மனப்பான்மையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். 'One cannot eat the cake and keep it also' என்பது போல அப்பத்தை அருந்தி விட்டு அதை அப்படியே வைத்திருக்கவும் முடியாது என்று சொல்லுவார்கள். ஆனால், சர்வாதிகார ஆட்சியிலும் இன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சிக்காரர்களுக்கு லாபம். இன்றைக்கு இந்தியாவில் நடைபெறுகிற ஜனநாயக ஆட்சியிலும் தமிழ்நாட்டை ஒரு சர்வாதிகாரத் தீவாக வைத்துக்கொண்டு லாபம் பெறுகிற ஒரு நிலை இருக்கிறது.

இல்லை என்றால் இந்த வழக்குகளுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகத்திற்குள் நுழைந்து, அறிவகம், அன்பகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற கட்சி அலுவலகம் இவைகளிலெல்லாம் நுழைந்து அங்கு இருக்கின்ற கணக்குப் புத்தகங்கள் எடுத்துச்செல்லப் பட்டிருக்கின்றன; செயற்குழு, பொதுக்குழு மினிட்ஸ் புத்தகங்கள் எடுத்துச்செல்லப்பட்டு இருக்கின்றன. இது நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி அம்மையாரால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு காரியம். இன்று நெருக்கடி தீர்ந்த பிறகும் இந்தியாவில் ஜனநாயகம் இருப்பதாக எண்ணுகின்ற நேரத்தில் ஒரு கட்சி அலுவலகத்தில் போலீசார் நுழைந்து அந்த கட்சியின் கணக்கு ஏடுகளை, என்றைக்கோ நடந்து முடிந்த தேர்தலுக்குச் செலவான கணக்குகளைக் கொண்ட ஏடுகளை இந்த வழக்கோடு சம்பந்தப் படுத்த எடுத்துச்சென்றிருக்கிறார்கள் என்றால் அதை நான் மிக மிக வன்மையாக கண்டிக்கிறேன். செயற்குழு மினிட்ஸ் புத்தகம், பொதுக்குழு மினிட்ஸ் புத்தகம் இவைகளை எடுத்துச்செல்கிற அளவிற்கு இங்கே நெருக்கடி நிலையினைப் போன்ற ஒரு ஆட்சி நடக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், கறுப்புக் கொடியை இந்திரா காந்தி அம்மையாருக்கு எதற்காக காட்ட வேண்டும் என்று கேட்டு விட்டு, அதற்கு உள் நோக்கம், இரண்டு காரணங்களையும் சொன்னார்கள். ஒன்று, இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கம் என்று சொன்னார்கள். நான் நண்பர்

திரு. மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசைக் கவிழ்க்கிற நோக்கம் எங்களுக்கு இல்லை. நாங்கள் கறுப்புக் கொடி காட்டியது இந்திரா காந்திக்குத்தான்; அதுவும் தனிப்பட்ட இந்திரா காந்திக்கு அல்ல, சர்வாதிகார கோலோச்சிய இந்திரா காந்திக்கு. நாங்கள் இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தால், 'திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தி இருக்கிறோம்' என்று சொல்லி இருப்போம். நாங்கள் மக்களாட்சி மீண்டும் மற்றொரு மக்களாட்சியால்தான் மாற்றப்படவேண்டும் என்ற புனிதமான எண்ணம் கொண்டவர்கள். எனவே, ஓர் அரசை இடையிலே கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

திரு. மாரிமுத்து அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஒன்று இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கமாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் மத்தியிலே இருக்கிறவர்களின் சலுகைகளைப் பெற வேண்டும் என்ற ஆசையாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அவர்களே, தன்னுடைய பேச்சிலேயே மறுப்பும் அளித்திருக்கிறார்கள். என்ன? இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு இவைகளை அடக்குங்கள்; வன்முறைகளுக்கு இடம் தராதீர்கள்' என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு டெலிபோன் மூலமாக தொடர்பு கொண்டு கூறினார்கள் என்று சொல்லியதிலிருந்து, இதற்கும் மத்திய அரசிலே உள்ளவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பதை நண்பர் திரு. மாரிமுத்து ஒப்புக் கொண்டிருப்பார்கள் என கருதுகிறேன். இந்தக் காரியத்தைச் செய்துதான் நாங்கள் மத்தியிலே இருப்பவர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இந்த சங்கடத்திற்கு ஆளாகாமல் நாங்கள் அவசரகாலத்தை கொண்டு வந்தபோது இந்திரா காந்திக்கு 'ஆமாம்' போட்டிருந்தால் அன்றைக்கு மத்திய அரசினுடைய செல்வாக்கைப் பெற்றிருக்க முடியும். எனவே, இன்றைக்கு இந்திரா காந்திக்கு கறுப்புக் கொடி காட்டியிருக்க

வேண்டியதில்லை. அன்றைக்கு அவசர காலச் சட்டத்தை கொண்டு வந்த போதே 'நன்று, நன்று' என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு அந்த அம்மையாரிடம் ஆளுகின்ற அண்ணா தி.மு.க. பெற்றிருக்கின்ற நற்சான்றினைவிட அன்றைக்கே அதிக நற்சான்றை நாங்கள் பெற்றிருக்க முடியும்.

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சியே அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்கிறதென்று பெருமைப்பட்டுக் கொண்டிருப் பார்கள். நாங்கள், அவசரகாலச் சட்டத்தை மறைமுகமாக ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு இந்திரா காந்தியின் பதிலே போதுமானது என்று கருதுகிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள். இந்தியாவிலே எனக்கு எதிராக இரண்டு தீவுகள் இருக்கின்றன. ஒன்று தமிழ்நாடு; மற்றொன்று குஜராத் என்று சொல்லியதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கு எவ்வளவு எதிர்ப்பாக இருக்கிறது என்பதை அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

கறுப்புக் கொடி காட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் திடீரென்று முடிவு எடுத்தது என்று ஒரு கேள்வி. இந்திரா காந்தி வருவதாக அறிவித்திருந்தபோது இங்கே பெருமழையாக இருந்தது; ஆகவே அவர் வருவார் என்பது நிச்சயிக்கப்படாமல் இருந்தது. அவர் நிச்சயமாக வருகிறார் என்று தெரிந்தவுடன்தான் திடீரென்று கழகத்தின் செயற்குழு கூடி முடிவெடுத்தது. இப்படிக் கழகம் கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று முடிவெடுத்தது அன்றைக்கு. அதற்கு மறுநாள்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கறுப்புக் கொடி காட்ட முடிவெடுத்தது. எப்படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மத்தியிலிருந்து ஜனதா கட்சியிடமிருந்து எந்தத் தூண்டுகோலும் வரவில்லையோ, அதே போல தி.மு.க.-விற்கும் மத்தியிலுள்ள ஜனதா கட்சிக்காரர்களிடமிருந்து எந்தத் தூண்டுதலும் வரவில்லை. மற்றவர்களுடைய தூண்டுதல் களால் காரியங்கள் செய்பவர்கள் அல்ல நாங்கள் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்காரியா பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷனுக்கு குற்றச்சாட்டுகளைத் தந்தேன்.ஜனாதிபதியினிடத்தில் தந்தேன்.

பொருளாளராக இருக்கும்போது பேசப்பட்டது - அதைத் தான் பிறகு குற்றச்சாட்டுகளாக வடித்துக் கொடுத்தேன். அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து எதிர்க்கட்சிக்காரர்கள் நிரபராதிகளாக மீண்டு வருவார்களேயானால் மெத்த மகிழ்ச்சியடைவேன் என்று மிக உருக்கமாக நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அப்படிச் சொல்லும்போது எனது உள்ளத்தைக்கூட தொடும் அளவுக்கு, பழைய கால எண்ணங்கள் நெஞ்சைத் தொடுகிற அளவுக்கு இருந்தது. ஆனால், நெஞ்சில் குத்திவிட்டு, எப்படி அது உயிர் பிழைக்க வேண்டுமென்று சொல்வதைப் போல, குற்றச் சாட்டுக்களை அடுக்கடுக்காக அள்ளித் தந்து விட்டு, அதுவும் நீதிபதியிடத்தில் தந்துவிட்டு, குற்றச்சாட்டுகள் போதாது என்று மீண்டும் மதுரைக்கு வந்த இந்திரா காந்தியாரிடத்தில் சொல்லப்பட்டது. மகஜர் தயாரித்து, ரெயிலில் சென்று, ரெயில் தாமதமான காரணத்தால், போய்ச் சேர முடியாமல், விமானத்தில் பறந்து இந்திரா காந்தியிடத்தில் கொடுத்து 54-க்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளை, கருணாநிதி, நெடுஞ்செழியன், சாதிக் பாட்சா, ப.உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மாதவன், இப்படி பல அமைச்சர்களை அதிலே ஈடுபடுத்தி, இவர்கள் எல்லாம் ஊழல் புகாருக்கு உள்ளான வர்கள். லஞ்ச ஊழல் பேர்வழிகள் என்று நெஞ்சில் குத்திவிட்டு நாங்கள் துடிதுடித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், மூச்சு போய்கொண்டு இருக்கிற நேரத்தில், குத்தியவர் எதிரில் வந்து, நான் குத்தியது உண்மைதான். நீ எப்படியாவது பிழைத்துக் கொண்டால் மகிழ்ச்சி அடைபவர் என்னைவிட வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்வதைப்போல, எனது இனிய நண்பர், புரட்சித் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'நீங்கள் நிரபராதிகளாக வந்தால் மகிழ்ச்சி அடைவோம்' என்று சொல்கிறார் என்று எண்ணுகிறேன்.

அந்தக் குற்றச்சாட்டுகள் யாரால், எப்படி தயாரிக்கப் பட்டன? எனக்குத் தெரியும். இப்போது சொன்னார்கள். கவர்னர் மாளிகையில் ஆட்கள் இருக்கிறார்கள். இப்படித் தகவல்கள் வருகின்றன, என்று. கழக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த

நேரத்திலே, மத்திய அமைச்சர்கள் சிலர் இங்கே உள்ள அவர்களுடைய ஆட்களைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கே இருக்கிற பைல்களை எல்லாம் தேடிப் பிடித்து, எந்தக் குற்றச் சாட்டில் சிக்க வைக்க முடியும் என்று குற்றச்சாட்டுகளை தயாரித்து அவைகளை நம்முடைய இன்றைய முதலமைச்சரிடத் திலேயும் வேறு சிலரிடத்திலேயும் தந்து கையெழுத்துக்களைப் பெற்றார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் அங்கே சென்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் அங்கே போனபோது நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எழுதிக் கொடுத்தார்.

"This Petition is written by me with all responsibility and sense of duty....."

என்று. அதற்குப் பிறகு சர்க்காரியாவுக்கு தந்த அபிடவிட் வாக்குமூலத்தில்

"I Most respectfully submit that it is absolutely true. I have no personal knowledge....."

சொன்ன சங்கதி அத்தனையும் உண்மையா என்று எனக்கு ஒன்றும் நேரடியாகத் தெரியாது என்று சொன்னார். இங்கே ரகுமான்கான் இளித்தவாயன் கிடைத்து விட்டான். பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக்கொண்டு எழுதித்தர வேண்டுமென்று கேட்கின்றார்கள். அப்படிக் கேட்கிற முதலமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவருக்கும் எங்களைப் பற்றி எழுதிக் கொடுத்த மனுவில்

"This Petition is written by me with all responsibility and sense of duty....."

என்று எழுதிக் கொடுத்துவிட்டு, சர்க்காரியா கமிஷன் வந்ததும் அதில் எழுதிக் கொடுக்கிறார்.

..I have no personal knowledge about this"

என்று எழுதிக் கொடுக்கிறார்.

இந்த சர்க்காரியா கமிஷன் விசாரணையின் போது, இன்று மனம் உருகப் பேசினாரே, எண்ணிப்பார்க்க வேண்டும்,

என்னென்ன காரியங்கள் நடைபெற்றன? எத்தனை விதமான சோதனைகள் நடைபெற்றன? நான் ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் முரசொலி அலுவலகத்தில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த நேரத்தில் - அப்போது நான் அங்கே எழுதிக் கொண்டிருக்கிறேன் - என் எதிரில் சோதனை நடந்து கொண்டிருக்கிறது. பீரோக்கள் உடைக்கப்படுகின்றன, மேஜைகள் உடைக்கப்படுகின்றன. அங்கே இருக்கிற பூட்டுக்கள் உடைக்கப்படுகின்றன. என்னைச் சுற்றி அதிகாரிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை சூழ உட்காரவைத்துவிட்டு எழுதிக் கொண்டிருக்கிறேன். இப்படி என்னுடைய இல்லத்தில், என்னுடைய அலுவலகங்களில், கட்சிப் பணிமனைகளில், எங்களுடைய கழகத் தோழர்களின் இல்லங்களில், எங்களுக்கு எங்கேயாவது தொலைவிடத்து உறவினர்கள் இருக்கிறார்களா, தொலைதூர உறவினர்கள் இருக்கிறார்களா என்ற அந்த வகையில் எல்லாம் சோதனைகள் நடைபெற்றன.

குற்றச்சாட்டுக்களை கொடுத்துவிட்டீர்கள். கொடுக்கும் போது நீங்களேகூட இது இவ்வளவு கொடூரமாக வரும் என்று எண்ணியிருக்க மாட்டீர்கள். உங்களுடைய நல்ல உள்ளம்கூட உடைந்திருக்கும். என்னென்ன நடைபெற்றன. என் மனைவி - இங்கே இருக்கிற சகோதரிகள் மன்னித்துக்கொள்ள வேண்டும்- எனக்கு நேராக முக்கால் நிர்வாணமாக்கப்பட்டு தன் உடலில் எங்கேயாவது வைரமோ தங்கமோ பதித்து வைத்திருக்கிறாளோ என்று என்னுடைய இரண்டாவது மனைவியின் வீடு சோதனை யிடப்பட்டு, அவள் சோர்ந்து களைப்படைந்து விழக்கூடிய விதத்தில், கீழே விழுந்து துடிதுடித்துப் போன காட்சியை எனது அருமை நண்பர் ப.உ.ச. அவர்கள் நேரில் பார்த்தார்கள்.

அதிகாரிகள் பல விவரங்களை விசாரிக்கிறார்கள். பலபேர்கள் சென்னையைச் சேர்ந்த அதிகாரிகள். விசாரித்து விட்டு கேட்கிறார், அரை மணி நேரத்திற்கு பிறகு கேட்கிறார், சார் உங்கள் பெயர் என்ன என்று கேட்கிறார். அதிலும் என்னை அவமானப்படுத்த வேண்டுமாம். களங்கப்படுத்த வேண்டுமாம். இவ்வளவு அக்கிரம வெறியாட்டங்கள் அன்றைய நெருக்கடி

காலத்தில் நடைபெறுகிற அளவிற்கு அன்றையதினம் நீங்கள் தந்த குற்றச்சாட்டுக்களை, புகார்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். இன்னும் அந்தப் புண் ஆறவில்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது எங்கே போய் முடியுமோ நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் நாங்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடனே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிருபர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள், மற்ற விசாரணைகள் பற்றி, ஏழு குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்கச் சொல்லி தங்களுக்கு தாக்கீது வந்திருப்பதாக. ஏற்கனவே வந்த தாக்கீதுகளைத்தான் சொல்கிறார்கள். உடனே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பித்துவிடமுடியாது, அடுக்கடுக்காக வழக்குகள் போடப்படும் என்று அவர் சொல்கிறார். அதேபோல் நம்முடைய அருமை நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பவே முடியாது, அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. அதை, ஒரு தலைப்பாக வந்ததை வைத்துக்கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று நான் சொன்னதில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம். ஏதோ அவர் விரும்புகிற காலம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தளவிற்குச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த சர்க்காரியா கமிஷனின் ஏழு குற்றச்சாட்டுகள் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டன. அந்த ஏழு குற்றச்சாட்டுக்களில் சர்க்காரியா என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்? ஒரு குற்றச்சாட்டு நாதன் பப்ளிகேஷன்ஸ். அதிலே என்ன அவர்கள் முடிவுரை தெரியுமா?

"The Minister, Shri Nedunchezhiyan, was directly responsible for irregularities....."

அது அவர்களுடைய முடிவுரை. அடுத்ததாக, 'Loan to the father-in-law of Thiru S. Kandappan'

அதில் என்ன முடிவுரை தெரியுமா?

"Shri Madhavan, the then Minister for Industries, has exercised pressure on the officials of the Corporation at the time of the sanction and disbursement of the loan as well as for delaying the follow-up action on the Board's Resolution of foreclosure....."

இது சர்க்காரியாவின் முடிவுரை. இந்த இரண்டு பேர்கள் மீதுதான் குற்றச்சாட்டுகளை அவர்கள் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, க்ளோப் தியேட்டர். க்ளோப் தியேட்டர்பற்றிச் சொல்லும்போது,

...It has not been established beyond all manner of doubt that the Respondent had received any illegal gratification from Shri Varadaraja Pillai....."

என்பது முடிவுரை.

அடுத்தபடியாக, திரு. ஏ. எஸ். ஸ்ரீனிவாசன், மறைந்து விட்டார், பாவம். அவர்பேரில் புகார் கொடுத்தது நம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, ஆனால் அந்தப் புகாரில் இருந்தது. அதற்குக் கூட

"This part of the allegation has thus not been substantiated....."

அதாவது நிரூபிக்கப்படவில்லை.

அடுத்து, ப்ராட்வே டைம்ஸ் பத்திரிகை மீது ஒரு வழக்கு போடப்பட்டது. பிறகு அந்த ஆசிரியர் வருத்தம் தெரிவித்த பிறகு வாபஸ் பெறப்பட்டது. அது உண்மைதான் என்று சர்க்காரியா சொல்கிறார்கள்.

பிறகு ஆறாவதாக, ட்ராக்டர். என்னுடைய நிலத்திற்கு லண்டனிலிருந்து கொடுத்த ட்ராக்டரைக் கொண்டுபோய் திருவாரூர், காட்டூரில் நிலத்தை உழுதேன் என்பது ஒரு குற்றச்சாட்டு, லண்டனிலிருந்து கொடுத்தவுடனே அதை நான் கோவை விவசாயக் கல்லூரிக்கு பரிசாகத் தந்து விட்டேன். அது சென்னை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த உடன் கோவைக்குச் சென்று நானும், கவர்னர் ஷா அவர்களும், மற்ற அமைச்சர்களும் சென்று அதைப் பரிசாகத் தந்துவிட்டோம், அங்கு நடைபெற்ற ஒரு விழாவில்.

ஆனால் அது திருவாரூருக்கு கொண்டுசெல்லப்பட்டது என்பது புகார். அந்த விவகாரங்களுக்குள் நான் நுழைய விரும்பவில்லை. திருவாரூரில் எனக்கு 12 ஏக்கர் நிலம் இருக்கிறது, 12 சாதாரண ஏக்கர், ஸ்டான்டர்டு ஏக்கர் அல்ல. இந்த 12 ஏக்கர் நிலத்தை உழுவதற்கு டிராக்டரால் உழ வேண்டும் என்றால் ஒரு நாள் வேண்டும். அதற்கு சென்னையிலிருந்து ஒரு டிராக்டரை எந்த முட்டாளும் - காலையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்களே - 'ஸ்டுபிடிடி' என்று - அதைப்போல் எந்த முட்டாளும் சென்னையிலிருந்து 250 மைல் அளவுக்கு ஒரு டிராக்டரை திருவாரூருக்குக் கொண்டு செல்ல மாட்டான். அங்குள்ள பஞ்சாயத்து யூனியனிலே 40 ரூபாய் நாள் ஒன்றுக்கு வாடகை கொடுத்தால் எளிதாக வாங்கி கொள்ள முடியும். இதில் சர்க்காரியா என்ன எழுதுகிறார். . . . .

I hold that allegation (Sl. No. 3) has not been substantiated.

இது நிரூபிக்கப்படவில்லை. ஆனால் இன்னொன்றை அதில் சர்க்காரியா எழுதியிருக்கிறார். ''இந்த நிலத்தில் டிராக்டர் ஒன்று உழுதிருக்கிறது, அது லண்டன் டிராக்டர் ஆக இருக்கலாம்''... முதலமைச்சருக்கு சாதகமாக சொல்லியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் என்னுடைய நிலம் இருக்கின்ற காட்டூருக்கு வந்திருக்கிறார். ஆனால் என்னுடைய நிலத்தைப் பார்த்தது கிடையாது. அப்படியிருக்கும்போது அங்கு ஏதோ ஒரு டிராக்டர் உழுதிருக்கிறது, அதைப் பார்த்துவிட்டு லண்டன் டிராக்டர் என்று எண்ணியிருக்கலாம் என்று எதை நினைத்துக்கொண்டு சர்க்காரியா எழுதினாரோ தெரியவில்லை.

அடுத்தது, தாத்தாச்சாரியார் புகார். அன்பில் தர்மலிங்கத்தைப் பற்றியது.

The allegation that Shri Anbil Dharmalingam helped Shri Tatachariar, a landlord to evict his tenants forcibly from the lands in their possession has not been substantiated.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை.

அடுத்தது, ஐங்கமராமபுரம் மர்டர் கேஸ். . . .

The evidence adduced before the Commission has not been sufficient to establish the fact beyond doubt.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் நிரூபிக்கப்பட்டது இரண்டு. அந்த இரண்டும் எங்கே இருக்கிறது?. . . . அங்கு இருக்கிறது. ஆனால் அந்த இரண்டும் அங்கேயிருக்கின்ற காரணத்தால் சர்க்காரியா கமிஷன் சொல்லியிருப்பது - அப்போதிருந்த நிலையில் அப்போதிருந்த சூழ்நிலை நெருக்கடியில், எப்படி ஸ்டென்ஸில் போட்டு தயாராக வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் கையெழுத்து எப்படியெல்லாம் வாங்கப்பட்டன என்பதையெல்லாம் நாம் அறிவோம். . . எனவே நாவலர் நெடுஞ்செழியன் மீதும், மாதவன் மீதும் சர்க்காரியா தெரிவித்திருக்கும் அறிவிப்புகளை கூட அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் எப்படியெல்லாம் அமைந்திருக்கும் என்பதால், அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பதுதான் நிலைமை. இந்த வகையில் சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜூடிஷியரியில் பென்டிங்காக இருக்கும்போது இதையெல்லாம் 'ரெபர்' பண்ணலாமா?. . . .

கலைஞர் மு. கருணாநிதி : நான் குறிப்பிட்டது சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டாக இருந்தாலும் இதை ரெபர் பண்ணலாமா? என்ற

சந்தேகம் எனக்கு வருகிறது. . . . முன்னால் உள்ள ரூலிங்கை வாசிக்கிறேன். . . .

You should not refer to any matter on which a judicial decision is pending. The matter has been referred for judicial decision. You are a Doctor. You may not know the Law of Contempt, which operates not from the moment the case starts, but from the moment the possibility of a judicial enquiry arises.

என்று டாக்டர் ஹாண்டே எழுப்பியதற்கு ரூலிங் கொடுக்கப் பட்டிருக்கிறது.

The Law of Contempt with which we are now concerned starts from the time when the possibility of the enquiry arises and the possibility has already arisen.

அதனால் ஜூடிஷியரி என்கின்ற நிலைக்கு போக இருக்கக்கூடிய வைகளைப்பற்றி நாம் பேசக்கூடாது என்றும், ஜூடிஷியரிக்கு போகக்கூடிய விவகாரம் என்கின்ற நிலை இருந்தால்கூட நாம் அதைப்பற்றி பேசக்கூடாது என்று இருக்கிறது, அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அதனால்தான் நான் குறிப்பிட்டேன், இதில் அமைந்திருக்கின்ற சாட்சியம், அதுபற்றிய விவரங்களை எல்லாம் நான் சொல்லவில்லை. எந்தெந்தக் குற்றச்சாட்டுகள் அவற்றிலுள்ள தவறுகள் என்ன என்று விசாரித்த சர்க்காரியா கமிஷன் தந்த அறிக்கை 26 ரூபாய்க்கு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப் படுகிறது. அப்படி விற்பனை செய்யப்படுகின்ற புத்தகத்திலுள்ள தகவலைத்தான் தந்தேனே அல்லாமல் வேறு எதுவும் அல்ல.

இப்படிப்பட்ட பெரிய குற்றச்சாட்டுக்களை சாட்டிய வர்கள், தங்களுடைய ஆட்சி எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலாக, சொல்லபட்ட குற்றச்சாட்டுக்களையே திரும்பத் திரும்ப அதையே எங்கள் மீது சுமத்திக்கொண்டு, அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு ஊழல் ஊழல் என்று கூறி, நாங்கள் எல்லாம்

உத்தமபுத்திரர்கள் என்று தங்களை கூறிக்கொள்கின்ற நேரத்தில், ஒன்றை மறந்துவிடக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரிடத்திலும், ஜனாதிபதியிடத்திலும் ஆளுநர் அவர்களிடத்திலும் ஒரு மகஜரை தந்திருக்கிறார்கள். இந்திரா காந்தியின் காக்கஸ் அமைப்பில் சுதிர்சரீன் என்பவர் - யஷ்பால் கபூரின் உறவினர் - மாப்பிள்ளையின் தம்பி - தமிழ்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற நேரத்தில் - 45 இலட்சம் ரூபாய் தமிழ்நாட்டுக்கு வருகிறது. இதில் 25 இலட்சம் ரூபாயை சுதீர்சரீன் இங்கு வந்து செக் மூலமாக தருகிறார்.

அது மாற்றப்படுகிறது. பிறகு 20 லட்சம் ரூபாய் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக வருகிறது. அப்படி வந்த ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மாற்ற முடியவில்லை. உடனே, டெல்லிக்குத் தகவல் பறக்கிறது சென்னையிலே இருந்து. அங்கேயிருந்து சென்னையிலே உள்ள ஜார்ஜ் டவுனிலே உள்ள தேசீய மயமாக்கப்பட்ட வங்கியோடு தொடர்பு கொள்ளுங்கள். அங்கே இந்த 20 இலட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் மாற்றிக் கொள்ளலாம் என்கின்ற ஆலோசனை பிறப்பிக்கப் படுகிறது. உடனடியாக அந்த வங்கிக்குச் செல்கிறார்கள். 20 லட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் சின்னச் சிறு நோட்டுக்களாக அங்கே மாற்றப்படுகின்றன. இதைப்பற்றி ஒரு புகார். இதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யாருக்கு அந்தப் பணம் அனுப்பப்படுகிறது என்கிற புகார் உள்துறை அமைச்சர், பிரதம அமைச்சர், கவர்னர், குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திட்டு தரப்பட்டிருக்கின்றது. எனவேதான், பொதுத் தேர்தலிலே இப்படி 45 லட்சம் ரூபாய் பேரம் நடத்திவிட்டு, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது ஊழல், ஊழல் என்று பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, 'பாவா' என்ற ஒருவரோடு லட்சக்கணக்கான ரூபாய்க்கு இங்கேயும், அங்கேயும் பேரம் நடைபெற்றிருக்கிறது. அந்த பாவா என்பவர் யார் என்பது போன்ற விஷயங்கள் எல்லாம் வெளிவரத்தான் போகின்றன. எனவே, ஊழலைப் பற்றிப் பேசுகின்றவர்கள், நாணயம், நேர்மை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றவர்கள், ஏற்கனவே இருந்த கழக ஆட்சி நேர்மையற்றது, நாணயமற்றது என்று பேசுகின்றபோது, இவைகளையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டு மென்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வெங்கடாத்திரி கமிஷனைப் பற்றி காலையிலே சொன்னார்கள். அந்த வெங்கடாத்திரி கமிஷன் அமைக்கப் படுகிறது. விசாரணையும் நடக்கிறது. அப்படி விசாரணை நடக்கும்போது, புகாரைக் கொடுத்தவரைக் காணவில்லை என்று சொன்னார்கள். இந்த மாதிரி புகாரைக் கொடுக்கின்றவர்கள், காணாமல் போவது தமிழ்நாட்டிலே சகஜம். அப்படிப் புகாரைக் கொடுக்கின்றவர்கள் விசாரணைக்கு வரமாட்டார்கள். அதுபோல் அவர்கள் வராவிட்டாலும், சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்றது. அதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. புகாரைக் கொடுத்தவர்கள் நேரில் வராமல் போனாலும், கமிஷன் விசாரணை நடக்கும். அந்த முறையிலே வெங்கடாத்திரி கமிஷன் விசாரணை நிற்கலாமா? ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டுவிட்டார் என்று வெங்கடாத்திரி குறிப்பு அனுப்பிற பிறகு, அது பென்டிங்கில் இருக்கின்ற நேரத்திலே, சட்டமன்றத்திலே அந்தச் சட்டத்தை ரத்து செய்கிறார்கள் என்றால், ஒரு அமைச்சரைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட காரியம் நடைபெறுகிறது என்று நாடு எண்ணாதா?

புதுக்கோட்டையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் வெள்ள நிவாரண வேலைகளுக்காக, கட்டாயப்படுத்தி பணம் வசூலித்தார் என்று. . . . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் வெங்கடாத்திரி கமிஷனிலே புகார் சொன்னவர் இருக்கின்றாரா என்பதே

சந்தேகமாக இருக்கிறது. விளம்பரம் கொடுக்கப்பட்டும் ஆள் கிடைக்கவில்லை. அந்த நிலைமைகளை எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். புகார் கொடுத்திருக்கின்றவர் சட்டபூர்வமாக விசாரணைக்கு வருவதா, வேண்டாமா என்ற சட்டப் பிரச்சினை வேறு. அந்த அடிப்படையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது என்பதைத்தான் எடுத்துக்காட்டப்பட்டது. புகார் கொடுத்த ஆள் இல்லை என்பதுதான் உண்மை நிலை.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் சொல்வது புகார் கொடுத்தவரைப் பற்றி அல்ல. ஏற்கனவே விசாரிக்கப்பட்டு வழக்கு பாதியிலே நிற்கிறது. அந்த நேரத்திலே, இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டு, அந்தக் குழுவே காலியாக்கப் படுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். யாரைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தை ரத்து செய்தார்கள்? பொதுமக்கள் பிரதிநிதிகள் தவறுகள் புரிந்தால், அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கின்ற சட்டத்தை நீங்கள் ரத்து செய்து விட்டீர்கள்.

நான் புதுக்கோட்டை பற்றிச் சொன்னேன். அங்கே மாவட்டக் கலெக்டர் அவர்கள் வெள்ள நிவாரண வேலைகளுக்காக பணம் வசூலிக்கிறார். அப்படி வசூலிக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள், அப்பணத்தைத் திருப்பித் தரச் சொல்கிறார். அது பாராட்டக்கூடியதாக இருக்கலாம், நான் அதற்குள்ளாக நுழைய விரும்பவில்லை. அது அரசாங்கத்தைப் பொறுத்த நிர்வாக விவகாரம்.

ஆனால் அதே நேரத்தில் திருச்சியிலே நடன நிகழ்ச்சிக்கு பல அமைச்சர்கள் சென்று, நேரடியாக பணம் வசூலித்திருக் கிறார்கள். அது எந்த வகையிலே நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல் அமைச்சர்கள் பழனிக்குப் போய், அங்கே உள்ள வியாபாரிகளை நேரிலே வரச்சொல்லி யார் யார் எவ்வளவு இன்கம்-டாக்ஸ் கட்டுகிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்களிடத்தில் அதற்குத் தகுந்தாற்போல் கட்சிக்காக நிதி வசூலிக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மக்களுக்காக வெள்ள நிவாரணத்திற்காக வசூலிக்கப்பட்டதைத் திருப்பித் தர சொன்ன முதல் அமைச்சர் அவர்கள், இதிலே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காலையில் பேராசிரியரும் குறிப்பிட்டார். ஆளும் கட்சியின் சார்பாகத் தவறே நடைபெறவில்லை என்று எண்ணிக் கொண்டிருக்காதீர்கள்; அவை எல்லாம் வெளிவரும் காலம் அண்மையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

விசைத்தறிகளுக்கு நார்ப்பட்டு விநியோகம் செய்யப் படுகிறது. அந்த விநியோகத்தை முன்பு தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி செய்தது. இப்போது இவ்வளவு கொடுக்கலாம் என்று தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி ஒதுக்கீடு செய்கிறது. இத்தனை கதிர் உள்ளவர்களுக்கு இவ்வளவு கிலோ நார்ப்பட்டு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கிறது. டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன், காந்திபுரம், குமாரப்பாளையம் முன்பு ரீஜினல் கமிட்டி அதற்கு மூன்று மாதத்திற்கு செய்த அலாட்மென்ட் 700 கிலோ. அப்படியானால் ஒரு மாதத்திற்கு 234 கிலோ சுமாராக. இதுதான் தரலாம் என்று முன்பு சிபாரிசு செய்தது, தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி. ஒரு மாதத்திற்கு 234 கிலோ நூல் தரலாம் என்று சிபாரிசு செய்கிறது.

ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ்-ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு இப்போது அந்த அசோசியேஷனுக்கு ஒதுக்கியது எவ்வளவு தெரியுமா? 2,780 கிலோ. 234 கிலோ ஒதுக்கலாம் என்ற நிலை எங்கே? ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு ஒதுக்குகிற 2,780 கிலோ எங்கே? 2,546 கிலோ ஒவ்வொரு மாதத்திற்கும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது, மாதந்தோறும். அவர்கள் கேட்டதைவிட, அவர்களுக்கு உரியதைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டது. 2,546 கிலோ. கன்ட்ரோல் விலைக்கும் வெளி மார்க்கெட் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை வைத்துப் பார்த்தால் ஒரு கிலோவுக்கு ஆறு ரூபாய் லாபம் வருகிறது. ஒரு மாதத்திற்கு அந்த குமாரப் பாளையம் அசோசியேஷனுக்கு 2,547**X**6=15,282 ரூபாய் லாபம் தரும். இது குமாரபாளையம் சம்பவம்.

சேலத்தில், சேலம் ஹாண்ட்லூம்ஸ்கிளாத் மான்யு பாக்சரிங் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேஷனுக்கு விசைத்தறிக்கு

தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி முன்பு ஒரு மாதத்திற்கு 12,700 கிலோ ஒதுக்கியது. ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் இப்போது ஒதுக்கியிருப்பது 23,610 கிலோ - அதிகமாக 10,910 கிலோ. இதிலே மாத லாபம் 65,640 ரூபாய் வரும். இதிலே தங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று ஏழை விசைத்தறியாளர்கள் இப்படி யாருக்கோ அதிகப்படுத்திக் கொடுத்துவிட்டார்கள், எங்களுக்குக் கதிர்கள் கிடைக்கவில்லை, நூல் கிடைக்கவில்லை என்று முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இங்கே எந்தச் செல்வாக்கு பயன்பட்டது? அமைச்சரின் செல்வாக்கா? ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்களின் செல்வாக்கா என்பதை முதலமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் யார் ஈடுபட்டு குமாரப்பாளையம் சம்பவம் நடைபெற்றிருக்கிறது, எப்படிப்பட்ட சிபாரிசுகள் சென்றிருக்க வேண்டுமென்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலும் சரி, வெளியிலும் சரி, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பேசுகின்ற பேச்சுக்கள் - முதலில் ஒன்று பேசுவது; மீண்டும் மறுப்பது என்ற முறையில் தான் அமைந்து கொண்டு போகின்றன; நேற்றைக்குக்கூட இந்த அவையில் நம்முடைய உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள், வேணுகோபால் என்ற ஒருவருக்கு, மீனவர் அல்லாதவருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு விசைப்படகு ஒதுக்கினார்கள் என்று சொன்னார்கள். கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எழுந்து ''எல்லோர் பட்டியலையும் தர முடியுமா?'' என்று கேட்டார். நான் எழுந்து ''எந்த ஆண்டு'' என்று கேட்டேன். தலைவர் அவர்களே, உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். 1972ஆம் ஆண்டு என்று அவர் சொல்லவில்லை; அவர் சொன்னதெல்லாம் 1969-ல் இருந்து 1976 வரையில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் என்றார். நான்கூட வேடிக்கையாக சொன்னேன், ''அண்ணா ஆண்ட இரண்டாண்டு தி.மு.க. ஆட்சி என்று ஒத்துக்கொள்ளாமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது'' என்று சொன்னேன். இதிலே

எட்மண்ட் சொன்னார் - ''அண்ணா ஆண்ட இரண்டு வருஷங்களும் புனிதமான ஆண்டுகள். அதற்குப் பிறகு 1969-ல் இருந்து 1976 வரையிலும் உள்ள காலத்தில்தான் தவறு நடைபெற்றிருக்கிறது; தகுதியற்ற ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார். திரும்பத் திரும்ப நாங்கள் கேட்டோம். அந்தப் பட்டியல்களை வெளியிட முடியுமா என்று கேட்டோம். அப்போது திரும்பத் திரும்ப 1969 முதல் 1976 வரை என்றுதான் சொன்னாரே தவிர 1972ஆம் ஆண்டு என்று அவருடைய நாவால் உச்சரிக்கப்படவில்லை. ஆனால் இங்கே அவர்கள் தனக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தில் அச்சுப்பிழை நேர்ந்து விட்டது '62 என்பது 72 என்று போட்டு விட்டார்கள்' என்று எழுதியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

நான் கேட்கிறேன். அறுபத்திரண்டோ எழுபத்திரண்டோ இங்கே பேசப்பட்டதா? ஆனாலும் தவறாகச் சொல்லிவிட்டு வீண் பழி சுமத்துகிற எண்ணத்தில் என்மீது குறை சொல்லி விட்டு, நாங்கள் இறுக்கிப் பிடித்துக் கேட்கிற நேரத்தில் நான் இப்படிச் சொன்னேன், அப்படிச் சொன்னேன் என்று சமாளிப்பது அமைச்சர்களுக்கு அழகல்ல என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னால் திருந்திக் கொள்கிறோம், சொன்னால் திருந்திக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள், பாலசுப்பிரமணியம் என்பவரைத் தான் அப்படிச்சொல்லிவிட்டேன் என்கிறார். வேணுகோபால் என்பதற்கும் பாலசுப்பிரமணியம் என்பதற்கும் வேறுபாடு தெரியாமல் சொல்லியிருக்கிறாரா? அந்த பாலசுப்பிரமணியமே எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டி ருக்கிறார், ''ஆறாம் தேதி அன்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள்மீது கொண்டுவந்த உரிமைப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையில் பாரிக் கம்பெனியில் பணிபுரியும் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது. அவர் மீனவர் அல்லாதவர். அந்தத் தொழிலுக்கே செல்லாதவர் என்று தெரிவித்து இன்று காலை

பத்திரிகைகளில் கண்டு வியப்புற்றேன். நான் வழிவழியாக மீனவர் இனத்தைச் சேர்ந்தவன். இன்றும் கட்டு மரம் வைத்து மீன் பிடிப்பவன்தான் நான். பாரிக் கம்பெனியில் பணிபுரிவதால் மீனவர் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் சொல்லுகிறாரா? அல்லது மீனவர்கள் பாரிக் கம்பெனி போன்ற நிறுவனங்களில் பணிபுரியக்கூடாது, அவர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்று 1967இல் ரூ. 500 காப்புத் தொகை கட்டி மீனிலாகாவிற்கு முறைப்படி விண்ணப்பித்து 1972ஆம் ஆண்டு இறுதியில் நடந்த குலுக்கலில் விழுந்த விசைப் படகு - (கழக ஆட்சியில் அலாட்மெண்ட் என்று சொல்வதைவிட 100 பேர்கள் தகுதியுள்ளவர்கள் கேட்டால் லாட் போட்டுத்தான் தரப்பட்டது). ஒரு மீனவன் என்ற முறையில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே எழுபத்திரண்டா அறுபத்திரண்டா என்ற பிரச்சினை கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் சொல்லுங்கள் திருத்திக்கொள்கிறோம் என்று. ஆனால் அவர்கள் சொல்வதைத் திருத்திக்கொள்கிறார்களா என்றால் அங்கேதான் கௌரவப் பிரச்சினை எழுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒரு விஞ்ஞானக் கருத்தரங்கிலே பேசினார்கள். அவர்களுடைய பேச்சு ரசிக்கத்தக்க பேச்சு. விஞ்ஞான கருத்தரங்கிலே முதலமைச்சர் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். அது அண்ணா பத்திரிக்கையிலே வந்திருக்கிறது, இந்து பத்திரிக்கையிலே கூட பெட்டிகட்டி அது செய்தியாக வந்திருக்கிறது.

Only with the Centre's aid of Rs. 368 crores, medical and other welfare schemes were being implemented for the benefit of four and half crores of people in the State.

என்று செய்தி வந்திருக்கிறது. நாலரைக் கோடி மக்களுக்கு மத்திய அரசு தருகிறதொகை 368 கோடி ரூபாய் மானியத்திலிருந்து நாம் உதவிகளை நல்வாழ்வுத் திட்டங்களைப் போடுகிறோம்.

இதைப் படித்தவுடனே நான் திடுக்கிட்டேன். ஏனென்றால் 368 கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து நமக்கு மானியமாக வருகிறது என்று நான் நிதியமைச்சராக இருந்தபொழுது தெரியவில்லை. என்னுடைய நண்பர் திரு. மனோகரன் நிதியமைச்சராக இருக்கும்பொழுது அதை அவரும் ஒப்புக் கொள்ளமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அந்த 368 கோடி ரூபாய் மானியமாக வரவில்லை. நம்முடைய மாநிலத்தின் மொத்த வருமானம் நிதியமைச்சர் இங்கே வைத்த நிதி நிலை அறிக்கையின்படி 633.24 கோடி ரூபாய். வணிக வரியின் மூலம் கிடைப்பதுதான் 368 கோடி ரூபாய். நான் டாக்ஸ் ரெவின்யூ என்பது 83 கோடி ரூபாய். நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசால் வருமான வரி, மற்றும் தீர்வை வரி ஆகியவற்றிலிருந்து வரவேண்டியது, கொடுத்தே தீரவேண்டும் என்பது 136.98 கோடி ரூபாய். மத்திய அரசு மானியமாக கொடுப்பது 44.73 கோடி ரூபாய்தான். மத்திய அரசு மானியமாக கொடுப்பது 44.73 கோடி ரூபாய்தான். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு என்ன ஆகிவிடும்? 367 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் நமக்கு மானியம் தருகிறது என்றால் நாம் அவர்களிடத்திலே பணம் கேட்கவே அருகதையற்றவர்களாகி விடுவோம். அதன் காரணமாக பணம் கிடைக்காமல் போய்விடும்.

முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், தவறுகளை சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறோம் என்று. அந்த வகையிலேதான் நான் ஆக்கப்பூர்வமான ஆலோசனை சொல்லி ஒரு அறிக்கையை விட்டேன். முதலமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லை. நம்முடைய நிதியமைச்சராவது மறுப்பார் என்று எண்ணினேன். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அவர் ஊரில் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியாது, அவரும் மறுக்கவில்லை. 368 கோடி ரூபாய் மானியமாக நமக்குத் தருவதில்லை. திருத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது. இது வரையிலும் திருத்திக் கொள்ளவில்லை. அன்று நான் சொன்னது தவறாகிவிட்டது என்று திருத்திக் கொண்டால் என்ன ஆகிவிடும்.

இந்து போன்ற பத்திரிக்கையில், அண்ணா போன்ற பத்திரிக்கையில் வெளிவந்திருக்கின்ற செய்தி அது.

பத்திரிக்கையாளர்கள் தவறிப் போட்டுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அதைத் திருத்திக் கொள்வதில் என்ன தவறு? வாய் தவறிச் சொல்லிவிட்டேன், பார்க்காமல் சொல்லி விட்டேன், அல்லது எழுதியவர் ஏட்டைக் கெடுத்தார் என்பது போல் எழுதிக் கொடுத்தவர்கள் அப்படிக் குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்லி, மாநில மக்களுடைய நல்வாழ்விற்காக, மக்களுடைய நல உரிமைக்காக, அந்த உண்மையை ஒப்புக்கொண்டால், எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறாரே என்று ஒப்புக்கொண்டால் என்ன கௌரவம் பாதித்து விடும் என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் முந்தைய அரசு கட்டிடங்களுக்கு வைத்த உயிரோடு உள்ள தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் எடுக்கவேண்டுமென்று உத்தரவு போடப் பட்டிருக்கிறது. இது நியாயம்தானா, தேவைதானா என்ற ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காகச் சிலைகள், உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காக மன்றங்கள், இப்படிக் கேட்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. நம்முடைய முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்த காலத்திலே எம்.ஜி.ஆர். மன்றங்கள் வைக்கப்பட்டபோதுகூட இன்றைக்கு அவருடைய கட்சியிலே மிகத் தீவிரமாக இருக்கின்ற நண்பர் நம்முடைய எஸ். ஆர். இராதா போன்றவர்கள் நண்பர் சம்பத் அவர்களோடு சேர்ந்து கொண்டு மன்றங்களை உயிரோடு இருப்பவர்களின் பெயரால் திறக்கக்கூடாது என்று மிக முனைப்பான அரசியல் முன்னணி வீரராகத் திகழ்ந்தார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். மன்றங்கள் ஆயிரக்கணக்கில் வைக்கப்பட்டன. இது அரசியல் கட்சி விவகாரம்.

ஆனால் ஆட்சி என்ற முறையிலே பார்த்தாலும்கூட இவைகளை வைப்பதிலே என்ன தவறு? நான் என்னுடைய

பெயர் வைக்கப்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய பெயரை எடுத்து விடுகிறார்களே என்ற கவலையால் சொல்லவில்லை. நான் உளம்திறந்த ஒரு அறிக்கையே விட்டேன். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் பெரியார்சிலை திறப்பு விழாவில் பேசுகின்ற பொழுது கருணாநிதி சிலை பற்றிப் பிரச்சினைகள் வந்திருக்கின்றன, நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று பேசியிருக்கிறார்கள். அதைக்கூட எதிர்பார்க்க வேண்டாம், தயவுசெய்து இப்பொழுதே எடுத்து விடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அந்தச் சிலை இருப்பதால்தான் கருணாநிதியின் பெயர் இருக்கும் என்றால் அப்படிப்பட்ட ஒரு சிலை எனக்குத் தேவையில்லை.

அதைப்போலத்தான் இப்பொழுது உயிரோடு உள்ளவர்களின் பெயர்கள் கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ, பாலங்களுக்கோ இருந்தால் எடுத்துவிடவேண்டுமென்று அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. அண்ணா அவர்கள் காலத்திலே அண்ணா அவர்களின் பெயரால் கல்லூரி அமைந்தது, காமராஜ் அவர்களுடைய காலத்திலேதான் காமராஜ்சாகர் என்று பெயர் வைக்கப்பட்டது. காமராஜ் அவர்களுடைய காலத்திலேதான் காமராஜருடைய சிலை அவர் உயிரோடு இருந்தபொழுதுதான் திறக்கப்பட்டது. காமராஜர் மின்சார நிலையம் என்று திருச்சியில், வேலூரில், பலயிடங்களில் மின்சார நிலையங்களுக்கு, அலுவலகங்களுக்கு காமராஜர் பெயரால் அவர் உயிரோடு இருந்தபொழுது அந்தப் பெயர் இடம்பெற்றிருக்கிறது. திருச்சியில் காமராஜ் வளைவு அவர் உயிரோடு இருந்தபொழுதுதான் வைக்கப்பட்டது. இங்கேயிருக்கின்ற இராஜாஜி ஹாலுக்கு இராஜாஜி அவர்கள் உயிரோடு இருந்தபொழுதுதான் அந்தப் பெயரைச் சூட்டினார்கள்.

இவைகளையெல்லாம் நான் வாதிடுவது என் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. என்னுடைய பெயரை எடுத்து விடுங்கள். என்னுடைய பெயரின் அடிச்சுவடே இல்லாமல் அழித்து விடுங்கள், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனால் எனக்கு முன்னால் பேசிய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பல ஆண்டுக்காலம் தேசத்திற்காகத் தொண்டாற்றிய பெரியவர் பக்தவச்சலம் போன்ற பெரியவர்களின் பெயர்கள் நீக்கப்பட வேண்டுமா? பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் துணைவியார் அன்பிற்குரிய அண்ணியார் அவர்களின் பெயரைத் தாங்கி இராணி அண்ணா என்ற பெயரில் இருந்தால் அந்த மண்டபங்களின் பெயர்கள் மாற்றப்பட வேண்டுமா? எனக்கும் நாவலருக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம், ஆனாலும் அவரை நடமாடும் பல்கலைக்கழகம் என்றும், அவர் நல்ல தமிழ் அறிந்தவர், அவர் ஒரு முன் மாதிரி என்ற வகையிலும், நாவலர் நெடுஞ்செழியன் முன்மாதிரி அரசினர் பள்ளி என்ற பெயரை நானேதான் சூட்டினேன். அதை எடுத்துவிட வேண்டுமா?

இவைகளையெல்லாம் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். பெரியாருக்காகக் கட்டப்பட்டிருக்கிற இடம் இருக்கிற வரையில் காமராஜருக்காகக் கட்டப்பட்டிருக்கிற இடம் இருக்கிற வரையில் காமராஜருக்காகக் கட்டப்பட்டிருக்கிற சதுக்கம் இருக்கிற வரையில், இராஜாஜிக்காக கிண்டியிலே யிருக்கிற ஆலயம் இருக்கிற வரையில், பூம்புகார் இருக்கிற வரையில், பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டப் பட்டிருக்கிற கட்டபொம்மன் கோட்டையிருக்கிற வரையில், நுங்கம்பாக்கத்திலே இருக்கிற வள்ளுவர் கோட்டம் இருக்கிற வரையில், அங்கேயெல்லாம் கருணாநிதி என்ற பெயர் இருந்துதான் கருணாநிதி விளம்பரம் ஆகவேண்டுமென்று இல்லை. நான் அவைகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால், உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயர் வைக்கப்பட வேண்டுமா என்பதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இராஜ்ய சபையிலே பேசினார்கள். அதுவும், இராமச்சந்திரன் அவர்கள் வெளியிட்ட புத்தகம். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

".....For the last six years we have been controlling the Madras Corporation, and yet we were not politically peevish enough to create any sort of political bickering. It was during the regime

of the D.M.K. in the corporation of Madras, that we have put up a statue for the All-India Congress President, Shri Kamaraj and also a statue for the late lamented Shri Satyamurthi, who adorned the other House many years ago. We have passed a resolution, I think the first of its kind in the whole of India, that the Corporation would shortly install a statue of the late lamented Lal Bahadur Sastri. Do you think this is political peevishness? No. But what is the ruling party doing there?

In distant town Madam Deputy Chairman,

என்று விளித்துவிட்டுச் சொல்கிறார்.

in Tamil Nadu, a bus-stand is opened and it is named after a D.M.K. leader unfortunately me. And the whoel Congress machinery of Tamil Nadu gets so inflamed, that injunction orders are obtained the board there has been removed, the bill books that had been printed have been taken back and the case is proceeding. And the President is asking us for a spirit of co-operative endeavour....."

என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். அண்ணா அவர்களுடைய பெயரால் ஒரு பஸ் ஸ்டாண்டுக்குப் பெயர் வைக்கப்பட்டதை அன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள். காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எதிர்த்தார்கள் என்பதை அண்ணா அவர்கள் இராஜ்யசபாவிலே சுட்டிக்காட்டிப் பேசினார்கள் என்றால், உயிருள்ள அவர்கள் பெயரால் எந்தக் கட்டிடமும் இருக்கக்கூடாது என்பதற்காகப் பேசிய பேச்சு அல்ல அது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே, பேராசிரியர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நானும் சொல்கிறேன், என்னுடைய பெயர்களை, எங்கிருந்தாலும் அங்கே எடுத்து விடுங்கள். நான் அவைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. இங்கே ஒரு பெயரை எடுப்பதற்காக, மற்ற பெயர்களை அழிக்கின்ற காரியத்திலே இந்த அரசு தயவுசெய்து ஈடுபட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பெயரை எங்கே அழித்தாலும்

ஓய்வில்லாது உழைத்த ஒரு தமிழன் இங்கே ஓய்வெடுத்துக் கொள்கிறான் என்று அங்கே என்னுடைய கல்லறையிலே எழுதப்படுகிற அந்தப் பெயரை ஒருவேளை கடல்கொண்டு அழிக்கலாமே தவிர, வேறு யாரும் அழிக்க முடியாது. எனவே அந்தப் பெயர் நிலைத்தால் எனக்கு போதும் என்கின்ற அந்த உணர்ச்சியோடு இதைச் சொல்லி - இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பல கட்சித் தோழர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்பட்ட தவறுகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். தவறுகளுக்கு நாங்கள் ஆளாகியிருப்போமானால், அதற்காகத் திருந்திக் கொள்ள தயாராக இருக்கிறோம். எனவே, அந்தக் கட்சி நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஆளுங் கட்சியினர் இதைக் கொண்டு வந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு அவர்கள் ஆற்றிய உரைக்காக அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இந்த அளவில் என்னுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

உரை : 73 **நாள் : 26.02.1979**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அமைச்சரவையின் மீது அளிக்கப் பட்டுள்ள நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை ஆதரித்தும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் சார்பில் தரப்பட்டுள்ள கண்டனத் தீர்மானங்களை ஆதரித்தும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு அவையிலே, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது என்பது ஜனநாயக முறையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் நம்முடைய அமைச்சர்களிலே ஒருவர் பிப்ரவரி 24 ஆம் தேதி சென்னை யிலே பேசியதாக 25 ஆம் தேதி பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. வேளாண்மைத்துறை அமைச்சருடைய பேச்சு.

‘‘எப்படியாவது அ.இ. அண்ணா தி.மு.க ஆட்சியை கவிழ்த்துவிட வேண்டும் என்று கருணாநிதி துடிக்கிறார். எங்கள் மீது குற்றச்சாட்டு இருந்தால் கருணாநிதி கூறட்டும். ஜனநாயக முறைப்படி நடக்கட்டும். அதை விட்டுவிட்டு மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்கும் நோக்கத்துடன் 6 மாதத்துக்கு ஒருமுறை வீதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார். சட்டமன்றம் நடைபெறும்போது ஒரு மணிக்கு 4 ஆயிரம் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பல மணி நேரத்தை வீணாக்குவதன் மூலம், மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குகிறார் கருணாநிதி’’ என்று கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத் தையும் கண்டனத் தீர்மானங்களையும் கொண்டுவருவது எந்த

விதத்தில் ஜனநாயக முறைக்கு மாறானது என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் தீர்மானங்களைக் கொண்டுவந்த கட்சித் தலைவர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பாராளுமன்றத்திலே பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற முன்னவர் அவர்களாலும் புரிந்து கொள்ள முடியாது என்றே நான் நம்புகிறேன். ஒரு மணிக்கு 4 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாமா என்று கேட்கிறார். ஆனால் பல விஷயங்களைப் பற்றிப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டபோது எல்லாம் நம்முடைய முதலமைச்சர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிற நேரத்திலே அவைகளைப்பற்றியெல்லாம் விளக்குகிறேன் என்று குறிப் பிட்டுப் பல விஷயங்களை இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு விளக்க இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, கண்டனத் தீர்மானங்களைப் பயன்படுத்திக்கொள்ளப் போகிறேன் என்று கூறியிருக்கிறார். எனவே நாலாயிரம் வீண் செலவு அல்ல, நல்ல செலவுதான் நல்ல விவாதங்களை மேற்கொள்வதற்காக அமைகின்ற செலவுதான் என்பதை முதலிலே நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒரு தீர்மானம் அவையிலே விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் அது பணத்தைப் பாழாக்குகின்ற விஷயம். ஜன நாயகத்திற்கு முரணானது என்று ஒரு அமைச்சர் வெளியிலே பேசுவது அவையின் உரிமையைக்கூட பாதிக்கக்கூடிய ஒன்றாகும். நான் அதற்காக உரிமைப்பிரச்சினை எதையும் இங்கே எழுப்பப் போவதில்லை. இருந்தாலும் அவையிலே உள்ள உறுப்பினர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர வேண்டுமென்றுதான் எடுத்துச் சொன்னேன்.

இந்த அரசின் மீது ஏற்கனவே ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அளிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்பொழுது நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டேன், உங்கள் மீது நம்பிக்கையில்லை. உடனடியாக ராஜினாமா செய்து விடுங்கள் என்று உங்களை அச்சுறுத்துவதற்காகவோ, உங்களுக்கு அறிவுரை கூறுவதற் காகவோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை என்றும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அரசு தான் செல்லுகின்ற போக்கிலேயிருந்து தன்னை மாற்றிக் கொள்ளவும்,

திருத்திக்கொள்ளவும் இந்தத் தீர்மானம் பயன்படும். அதற்காகவே இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். இல்லாவிட்டால் ஆறுமாத காலத்திற்குள்ளாக இந்த அரசு பதவியிழக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாங்கள் நிச்சயமாகத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கமாட்டோம் என்று மிகத் தெளிவாக நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு, இந்த ஆட்சி அமைந்த பிறகு ஏறக்குறைய இரண்டாண்டுகளை எட்டிப்பிடிக்கின்ற அளவிற்கு நடைபெற்றிருக்கிறது. இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்ற பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, இதன் காரணமாக இந்த அரசின்மீது நம்பிக்கை யில்லை; திருத்தப் பார்த்தோம்; முதன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது, ஆனால் முயன்று முயன்று பார்த்தோம்; திருத்த முடியவில்லை. எனவே, இப்பொழுது நாங்கள் கண்டனத் தீர்மானங்களையும், நம்பிக்கையில்லாத் தீர்மானங் களையும், இந்த அரசின் மீது அளித்திருக்கிறோம் என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திற்கு முன்பு, இன்றைய முதலமைச்சரவர்கள் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினார்கள். அதிலே மிக முக்கியமான ஒரு வாக்குறுதி, அவரது கைப்படவே எழுதிய கட்டுரையாகத் தென்னகம் பத்திரிகையில், ஆனந்த விகடன் பத்திரிகையில் அழகாக வெளியிடப்பட்டது. அதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள்:

‘‘நான்கைந்து வாரங்களுக்கு முன் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சித் தலைவரும் எனது மரியாதைக்குரியவருமான பி.ராமமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க வுக்கு என்ன கொள்கை என்று தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டபோது நான் சொன்ன சிலவற்றில் விவசாயிகளுக்குத் தரப்படவேண்டிய வருவாய் உத்திரவாதத்தைப் பற்றியும் சொன்னேன். நான் சொன்னது, சொல்வது இதுதான். வருடத்தில் ஒரு சில மாதங்களே வேலை. அதற்குப் பிறகு எங்கோ, எப்படியோ அன்றாட கூலி வேலைகளைத் தேடி அலைந்து, ஏதாவது ஓர்நாள் கிடைக்கும் மிக மிகக் குறைந்த கூலியைக் கொண்டு கஞ்சிகூட சரிவரக் குடிக்காமல் வாடுகின்றவர்களுக்கு முதலில் மாதம் இவ்வளவு வருவாய் கிடைக்கும், அதாவது தரப்படும் என்கின்ற உத்திரவாதம், காப்பு நிதி போனஸ் போன்ற

அனைத்தும் மில்தொழிலாளருக்குத் தரப்படுவதுபோல கொடுக்கப்பட வேண்டும். இன்று தினப்பத்திரிகையில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்திருப்பதாகப் படித்தேன்.'' இன்று என்றால் அன்று கழக ஆட்சியின்போது விவசாயிகளுக்கு அன்றாட கூலியை எந்த அளவிற்கு உயர்த்தலாம் என்பது பற்றி ஆராய்ந்து கருத்துக் கூறவே அந்தக் குழு நியமிக்கப் பட்டிருப்பதாக அதில் விளக்கப்பட்டிருந்தது. தினக்கூலி என்பதை அறவே அகற்றியே ஆக வேண்டும். மாதச் சம்பளம், கொடுக்கப்பட வேண்டும். அதுவும்போக லாபத்தில் பங்கும் தரப்பட்டுத் தீரவேண்டும். வாயில்லாப் பூச்சியான விவசாயிகளை அவ்வப்போது ஒருசில ரூபாய்களை அதிகப் படுத்துவதன் மூலம் பாவனை காட்டி, அவர்களைப் புகழ்ந்து பாராட்டிப் பேசியே நெடுங்காலத்திற்கு ஊமைகளாக அழுத்தி விடலாம் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம். விவசாய சமுதாயம் இனிமேலும் பொறுத்திருக்கும் என்று வீண் கற்பனையில் யாரும் மூழ்கி இருக்க வேண்டாம்.'' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விகடன் பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதி, அதைத் தென்னகம் ஏடு அன்றைக்கு எடுத்து வெளியிட்டிருந்தது. இப்போது விவசாய சமுதாயம் பொங்கி எழுந்து, பொறுமை இழந்துப் போர்க்கொடி உயர்த்தி இருக்கிற காட்சியினைக் காணுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிக்கான கூலியை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஒருகுழு அமைத்த போது, அது இன்றைய முதல் அமைச்சர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல், விவசாயிகள் போர்க்கோலம் பூணுவதற்கு முன் அவர்களுக்கு வாழ்க்கை உத்திரவாதம் அளிக்க வேண்டும், மாத வருமான உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்படிக் கூலி உயர்வு அதிகப்படுத்தப்பட்டதோ அதுபோன்ற செய்தியைத்தான் கீழ்த் தஞ்சையிலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அதிகப்படுத்தப்பட்டது என்ற செய்தியைத் தான் நாம் காண்கிறோம். எனவே தேர்தலுக்கு முன்பு மக்களிடத்திலே, நாங்கள் வந்தால் அதைச் செய்யப் போகிறோம். இதைச் செய்யப் போகிறோம் என்றெல்லாம்

வாக்குகளைப் பெறுகின்ற வேலை மிக எளிதாக நடைபெற்று முடிந்தது.

அது மாத்திரமா, இராமநாதபுரம் மாவட்டத்திலே, நம் முடைய முதலமைச்சர், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக சுற்றுப்பயணம் செய்து, தேர்தல் பிரச்சாரம் நடத்தியபொழுது சொன்னார். இந்தப் பகுதியிலே உள்ள முக்குலத்து மக்களுக்கு நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன் என்று சொன்னார். அந்த வாக்குறுதி 10-6-1977 ஆம் நாளன்று தென்னகம் பத்திரிகை யில் மிகப்பெரிய எழுத்தில், இரண்டாவது பேனர் என்று சொல்வார்களே, அந்த இரண்டாவது பேனராகக் கொட்டை எழுத்துச் செய்தியாக வெளியிடப்பட்டு உள்ளது. என்ன சொன்னார் இன்றைய முதலமைச்சர் அன்றைக்கு? 'குற்றப் பரம்பரைச் சட்டம் இன்னமும் அமுலில் இருக்கும்போது, நாட்டில் நடைபெறுவது மக்கள் ஆட்சியா என்ற சந்தேகம் அனைவருக்கும் எழத்தான் செய்யும். நான் இந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், அரசு அந்தக் குற்றப் பரம்பரைச் சட்டத்தை அகற்றும்'- எம்.ஜி.ஆர். 10-6-1977 அருப்புக்கோட்டை கூட்டத்தில் என்று செய்தி வந்தது. அங்கேயிருந்த மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி அற்றிருந்த காரணத்தாலோ அல்லது இவர் சொல்கிறாரே, நம்பத்தான் வேண்டுமென்ற காரணத்தாலோ வாக்குகளை வாரி வாரி வழங்கினார்கள். ஆனால், குற்றப் பரம்பரைச் சட்டம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்திலேயே அகற்றப்பட்டு விட்டது என்பதை அந்தப் பகுதி மக்களுக்கு யாரும் எடுத்துச் சொல்லவும் இல்லை. அல்லது அவர்கள் அறிந்திருந்தாலும் இவர் சொல்லியிருக்கிறாரே என்ற காரணத்தினால் மீண்டும் இந்தக் குற்றப் பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்யப் போகிறார்கள் போலும் என்று எண்ணிக்கொண்டு வாக்களித் தார்கள்.

இவைகளெல்லாம் தேர்தலுக்கு முன்பு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள்; தேர்தல் முடிந்த பிறகுகூட ஆளுநர் அவர்களது உரையில் 17,000 நியாய விலைக்கடைகள்-16,000 நியாய விலைக் கடைகள் என்று சொல்லி, ஆயிரம் கிராமங்களை விட்டு விட்டார்களே என்று நான் எடுத்துக்காட்டி, அதற்கென்ன அதையும் சேர்த்துக் கொண்டால் போகிறது என்று 17,000

நியாய விலைக் கடைகள் வரும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது 13,000 நியாய விலைக் கடைகள் வந்திருப்பதாக ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டது. பத்திரிகையிலும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், ஏதேனும் புதிதாக இந்த அரசால் அமைக்கப்பட்ட நியாயவிலைக்கடைகள் என்று இல்லாமல், ஏற்கனவே இருந்த சொசைட்டிகள் மூலம் இந்தக் கடைகள் இன்றைக்குச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் மத்திய மாநில அரசு மானியமாக ரூ.3,000 தரப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதிலே பணிபுரிகின்ற எஸ்.எஸ்.எல்.சி. படித்த நபருக்கு மாதச் சம்பளம் ரூ. 100 கொடுத்தால், ஆண்டுக்கு ரூ. 1,200 ஆகிறது, மீதமுள்ள ரூ.1,800 ஐக் கொண்டு சில்லறை செலவுக்கும், அந்த நியாய விலைக் கடைக்கு வேண்டிய மேஜை, நாற்காலி மற்றும், விற்கப்பட வேண்டிய சாமான்கள்: தராசு உட்பட இவைகளெல்லாம் வாங்கப்பட வேண்டிய செலவும் இந்த ரூ.1,800 லே அடங்குகிறது. பெரும்பாலான நியாயவிலைக்கடைகளில் தராசு, படிக்கல்கூட இல்லை யென்கின்ற நிலையை நாம் நேரிலேகூட அறிய முடிந்தது.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே, சில நியாய விலைக் கடைகளைப் பற்றி நான் விசாரித்தேன். அந்தக் கடை களுக்குச் சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் வேலூரிலே இருக்கிற மார்க்கெட்டிங் சொஸைட்டிக்குப் போகவேண்டிய சூழ்நிலை. 1 கிலோ டின், 25 டின்கள் நியாய விலைக் கடைக் குத் தேவை என்கின்ற மனு போடப்படுகிறது. ஒரு மாதம் கழித்து, அந்தக் கடைக்கு 25 டின்கள் அல்ல 5 டின்கள்தான் அனுப்பப்படுகின்றன என்ற செய்தியும் நம்பகமாக எனக்குக் கிடைத்தது.

நான் சில புள்ளி விவரங்களை, இந்த நியாயவிலைக் கடைகளிலே இரண்டு மூன்று கிராமங்களிலே எடுத்திட முயற் சித்தேன்.

சுமைதாங்கி என்ற இடத்தில் நியாய விலைக் கடை எப்படி நடைபெறுகிறது என்பதற்கு ஒரு உதாரணம்; தனியார் கடையில் ஒரு கிலோ மிளகாயினுடைய விலை ரூ.7.50 பைசா, நியாய

விலைக் கடையில் ரூ.11.00 தனியார் கடையில் தனியா ஒரு கிலோ 2.25 காசு, நியாய விலைக்கடையில் ஒரு கிலோ ரூ. 3.12 காசு. தனியார்கடையில் புளி கிலோ 4 ரூபாய் 84 காசு, நியாய விலைக் கடையில் 6.00 ரூபாய். கடலைப் பருப்பு தனியார் கடையில் 3 ரூபாய், நியாய விலைக் கடையில் கிலோ ரூ. 3.20 காசு. துவரம் பருப்பு தனியார் கடையில் ரூ. 4.40 காசு, நியாய விலைக் கடையில் 5 ரூபாய். உளுத்தம் பருப்பு தனியார் கடையில் 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் ரூ.4.72 காசு. அரிசி ரூ. 1.40 காசு தனியார் கடையில், நியாயவிலைக் கடையில் ரூ.1.65 காசு. கடலை எண்ணெய் தனியார் கடையில் ரூ. 6.80 காசு, நியாய விலைக் கடையில் 7.38 காசு. இது சுமைதாங்கி.

அடுத்துத் திருவலம், அங்கேயும் வலம் வந்தேன் எப்படி இருக்கிறது என்று பார்க்க; அங்கே தனியார் கடையில் மிளகாய் கிலோ 7 ரூபாய், நியாய விலைக்கடையில் 9.00 ரூபாய். மிளகு கிலோ 18 ரூபாய், தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 27 ரூபாய். தனியா கிலோ 2.75 காசு. தனியார் கடையில் நியாய விலைக் கடையில் ரூ.3.30 காசு, துவரம்பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் கிலோ ரூ.5.90 காசு, கடலை எண்ணெய் கிலோ 6.80 காசு. தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 7.40 காசு, மஞ்சள் தனியார் கடையில் கிலோ 7 ரூபாய், நியாய விலைக் கடையில் 13 ரூபாய், சீரகம் தனியார் கடையில் 19.00 ரூபாய், நியாய விலைக் கடையில் 27.00 ரூபாய், தனியார் கடை, நியாய விலைக்கடைகளின் பில்களுடன்தான் விவரங்களைச் சொல்கிறேன்.

காட்பாடியில் தனியார் கடையில் உளுத்தம்பருப்பு 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் 4.55 காசு. துவரம் பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் 5.25 காசு, புளி தனியார் கடையில் 3.50 காசு, நியாயவிலைக் கடையில் 11.50 காசு, சீயக்காய் 3.50 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 4.20 காசு.

இது நியாய விலைக் கடைகள் நாட்டில் நடைபெறுகின்ற லட்சணம். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து

முதலில் 'அ' என்ற எழுத்தைப் போட்டு, அ.தி.மு.க. என்று ஆக்கியது போல, நியாய விலைக் கடைகளுக்கு முன்னால் 'அ' என்ற எழுத்தைப் போட்டு, அநியாய விலைக் கடைகள் என்று மாற்றுவார்களேயானால் பொருத்தமாக இருக்கும் என்று நான் இந்த அரசுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இன்னொரு பெரிய திட்டத்தை வாக்குறுதி அளித்ததற்கு ஏற்ப 14-1-1978 பொங்கல் திருநாள் அன்று நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார். பத்திரிகைகளிலே எல்லாம் பெரும் விளம்பரம் வந்தது.

''பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு, வீடு தேடி வரும் மலிவு விலை காய்கறித் திட்டம்; முதல்வர் புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்'' என்று அப்போது நமது முதல்வர் அவர்கள் பேசிய பேச்சு, அவர்களுடைய பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. குறிப்பாக அண்ணா பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. மூன்று சக்கர வண்டிகளில் காய்கறிகளை வைத்து விற்பனை செய்யப்படும். வீட்டுக்குத் தேவையான எல்லா காய்கறிகளும் வீடுதேடி வரும். அலுவலகம் சென்று விட்டு வீடு திரும்புவார்கள் கையில் பை தூக்கிக்கொண்டு காய் கறிவாங்கச், செல்ல, அலைய வேண்டியதில்லை. வீட்டில் இருக்கும் சகோதரிக்கும் கடைகளுக்குச் சென்று காய்கறிகளைப் பார்த்துப் பார்த்து வாங்க வேண்டியதில்லை. வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் இது பயன்படுகிறது. இந்தத் திட்டத்தை மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கும்போது ஆயிரக்கணக்கான மூன்று சக்கர வண்டிகள் தேவைப்படும். இப்படிப்பட்ட வண்டிகள் உற்பத்தி செய்ய ஒரு தொழிற் சாலையைத் துவக்கலாம். அதனால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கிறது; எப்படி இருக்கிறது? காய்கறிகளில் தொடங்கி, மூன்று சக்கர வண்டிகள் செய்ய தொழிற்சாலைகள் கட்டுவது, பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு இப்படி அந்தத் திட்டம் அதிகமான அளவில் பொதுமக்களுக்குப் பயன்படும் என்று சொன்னார்கள்.

அந்தப் பேச்சு எல்லாப் பத்திரிகைகளிலும், ஆளும்கட்சி பத்திரிகைகளிலும் மிக விரிவாக வெளியிடப்பட்டது. ஒரு கண்ணாடி வியாபாரியின் கதையைச் சொல்வார்கள். ஒரு கண்ணாடிக் கடைக்காரன் தன்னிடத்திலே இருக்கும் கண்ணாடி களை விற்று, அதிலே வரும் பணத்தைக் கொண்டு, வேறு சில பொருள்களை வாங்கி, வியாபாரம் செய்து, அதிலே வருகிற பணத்தைக் கொண்டு பெரிய பங்களா கட்டி, அந்தப் பங்களா வில் வசிக்கும் நேரத்தில் சீமான் வீட்டுப் பெண்கள் வந்து என்னைத் திருமணம் செய்துகொள் என்று கேட்கிற நேரத்தில், இந்தக் காலால் உதைப்பேன் என்று சொல்லி, உதைத்துக் கால்பட, அதனால் அந்தக் கண்ணாடிக் கூடையையே உடைத்துவிட்டார் என்று அல்லார் (பழங்கால மக்கள்) கதை யைச் சொல்வார்கள். அதேபோலதான் இவர்கள் அறிவித்துள்ள காய்கறி வியாபாரம். 3 சக்கரவண்டிகள், 3 சக்கரவண்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை, அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்ய ஆயிரக்கணக்கான பேர், அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தயாரிக்க கிராமங்கள்தோறும் தொழிற்சாலை என்று அந்த அளவிற்குப் பரவலாகத் திட்டத்தை அறிவித்தார்கள். மிளகாய்ப் பொடி, மசாலா பொடி வீட்டுக்குக் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு மிளகாய்ப்பொடி தூள் பட்டதா, அல்லது சென்னை நகர மக்களின் கண்களில் மிளகாய் பொடி தூவப் பட்டதா, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று. விரிவாக்கப்படும், விஸ்தரிக்கப் படும் என்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம், அதுவும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்ன ஆயிற்று என்பதை இந்த அவையே அறிந்து கொள்ள விரும்புகிறது.

வேலை வாய்ப்புத் திட்டத்தைப்பற்றிச் சொல்கிறபோது ஏறத்தாழ 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்து இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கிராமங்களில் அவர் அவர்கள் செய்துகொண்டு இருக்கும் வேலைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, மேலவையில் முதலமைச்சர் பேசியதாக எனக்கு நினைவு. பத்திரிகைகளிலும் பார்த்தேன். வெள்ளம், புயல் இப்படிப்பட்ட சேதங்கள் நிகழ்ந்த காலத்தில்

கிராமப்புறத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள். அவர்களை எல்லாம்கூட இந்த 1 லட்சத்து 30 ஆயிரம் பேர்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதாக எனக்கு நினைவு. நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு எந்தத் திட்டங்களைத் தீட்டி, எந்தெந்த கிராமங்களில், யார் யாருக்கு வேலை கொடுத்து இருக்கிறீர்கள் என்ற பட்டியலை இந்த அரசு வெளியிடுமா? வெளியிட முடியுமா? அப்படி ஒரு பட்டியல் இருக்கிறதா? 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தோம் என்றால் வறட்சிப் பணிகளை நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் 5-6 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தோம். அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால்தான் வேலைவாய்ப்பு பற்றிப் பேசுகையில் பேராசிரியர் அன்று கேட்ட நேரத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு என்பது ஆங்காங்கு கிராமங்களில் இருக்கும் மக்கள் தங்களுடைய முயற்சியால் ஆங்காங்கு நடத்திக்கொண்டு இருக்கிற, பெற்றுக் கொண்டிருக்கிற வேலைவாய்ப்புகள் ஒருநாளில் ½ மணி நேரம் 4 மணி நேரம், அந்த வேலை வாய்ப்புகள் உத்தரவாதமான வேலை வாய்ப்புகள் அல்ல என்று சொன்னார்கள். ஆகவே 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு நிச்சயமாகத் தரப்படவில்லை. ஏன் இதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் என்றால், 1977 நவம்பர் மாதம் சர்வீஸ் கமிஷன் ஒரு விளம்பரம் செய்தது. அதன்படி அலுவலகப் பணியாளர், பிரிவில் தற்காலிகப் பணிகளில் இருக்கும் இளநிலை உதவியாளர்கள், டைப்பிஸ்ட்டுகள், ஸ்டெனோ டைப்பிஸ்டுகள், ஆகியோரை பணியில் நிலைப்படுத்துவதற்கும் இளைஞர் அணி தொண்டர்களைப் பணியில் சேர்த்துக் கொள்வதற்கும் விசேஷ யோக்கிய அம்சம் அளிக்கும் பரீட்சை: எஸ்.எஸ்.எல்.சி. தரம் என்று குறிப்பிட்டு, சர்வீஸ் கமிஷனரால் மனுக்கள் கோரப்பட்டன. அந்த விசேஷத் தேர்வில் 3,000 பேர் பங்கேற்றார்கள். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 பேர் 98 சதவிகிதம் வெற்றி பெற்றார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த சர்வீஸ் கமிஷன் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு 1978

ஆம் ஆண்டில் வேலை கொடுத்து விடலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து இருப்பதாகவும் கூறப்பட்டது. நிலைமை என்ன? அந்த விசேஷத் தேர்விலே, முடிவுகள் அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றவர்கள் ஓராண்டு காலமாக காத்துக்கொண்டு இருக்கிறார்கள். யாருக்கும் வேலை வாய்ப்புகள் இதுவரையில் அளிக்கப்படவில்லை. அவர்கள் பத்திரிகைகளிலே கடிதங்கள் எழுதுவதுமாகவும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு மகஜர்கள் அனுப்புவதுமாக இருக்கிறார்கள். நாங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். 3,000 பேர்களும் இன்னும் நிலைப்படாமல் இருக்கிறோம் என்று முறையீடுகள் செய்துகொண்டு இருக் கிறார்கள்.

நான் சேலம் சென்று இருந்தேன் நேற்றைக்கு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 6ஆம் தேதி அன்று சேலத்திற்குச் சென்று மாக்னசைட் தொழிற்சாலை ஒன்றை அரசின் சார்பில் திறந்து வைத்து, அந்தத் திறப்பு விழாவில் பேசியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் ஏற்கனவே 3,000 தொழிலாளர்கள் வேலையிலே ஈடுபட்டு இருந்தார்கள். அந்தத் தொழிற்சாலையை நடத்தமுடியாத காரணத்தாலோ என்னவோ தனியார் அதை நடத்தாத காரணத்தாலே அரசே அதை ஏற்று நடத்துவது என்று முடிவு செயதது. அது பாராட்டத்தக்கது என்றாலும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன உரிமை அளித்து இருக்கிறது என்று பார்த்தால் ஏறத்தாழ அந்த 3,000 பேரையும் நாங்கள் தொடர்ந்து வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று அவர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டு இருந்தும்கூட, அதிலே 3,000 பேரையும் அந்தத் தொழிற்சாலையிலே வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. 50 சதவீதத்திற்குக் குறைவாகத்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். பெரிய கொடுமை 20 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் சர்வீஸ் எல்லாம் வெட்டப்பட்டு, அந்த சர்வீஸ் காலம் அவர்களுக்குக் கிடையாது என்ற ரீதியில் புதிதாக வேலையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களைப் போல இன்றைக்கு அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு சில நிறுவனங்களை அரசின் சார்பில் எடுத்துக் கொண்ட நேரத்திலும் சரி, கழகம் ஆட்சிப் பொறுப்பில்

இருந்தபோது ஈரோடு போன்ற இடங்களிலே மின்சார நிறுவனங்களை அரசின் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்ட போதிலும் சரி, அதிலுள்ள தொழிலாளர்களை எல்லாம் அப்படியே, எடுத்துக் கொண்டது மட்டுமல்ல; அவர்களுடைய சர்வீஸ் கட் ஆகாமல் சர்வீஸ் வெட்டப்படாமல் எடுத்துக் கொள்ள உத்தரவாதத்தை அளித்தது என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே, தொழிலாளர்கள் இன்றைக்குச் சேலம் மாநகரில் மாக்னசைட் தொழிற்சாலை தொடங்கப்பட்ட நேரத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்ப காலத்திலே தொழிலாளர்களுக்குத் தோழனாக இந்த அரசு விளங்கும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குத் தோழனாக விளங்கும் என்று சொன்ன இந்த அரசுதான், அரசினுடைய முதலமைச்சர்தான் ஆளுநர் மூலமாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைச் சட்ட விரோதம் என்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார் என்பதையும், அதற்குத் தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் சமுதாயம் பெரும் போராட்டம் நடத்தவேண்டி இருந்தது என்பதையும், அந்த அவசரச் சட்டம் காலாவதி ஆகிவிட்டது என்பதையும், நாடு அறியும், தொழிலாளர் சமுதாயம் அறியும். எனவே, தொழிலாளர்களுடைய தோழன் என்று பேசிக்கொள்ள இந்த அரசுக்கு எள்ளளவும் தகுதி கிடையாது என்பதை நூற்றுக் கணக்கான உதாரணங்களால் என்னால் கூற முடியும்.

அதைப்போல சென்னைக்கு அருகாமையில் உள்ள டி.ஐ.சைக்கிள் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமளி. அந்தத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் காவல் துறையினருடைய அடக்குமுறைக்கும், அதே நேரத்தில் ஆளும் கட்சியினரும் சேர்ந்து தாக்குவதற்கும் கடுமையாக ஆளாக்கப் பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். அங்கே ஏ.ஐ.டி.யு.வைச் சேர்ந்த தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் கே.டி.கே. தங்கமணி, கோபு அவர்கள் தலமையில் ஒரு ஊர்வலம் நடத்தி, அமைச்சரைச் சந்திக்க

கோட்டைக்கு வருகின்ற நேரத்தில், அவர்கள் கைது செய்யப் படுவதற்குப் பதிலாகத் தாக்கப்பட்டார்கள் போலீஸ்காரர்களால்; ஆளும் கட்சிக்காரர்களால் தாக்கப்பட்டார்கள் தங்க மணியும்,கோபுவும்.

அதுமாத்திரமல்ல, அவர்களைத் தாக்கிய ஆளும் கட்சித் தொண்டர்கள், ஹரிபட் அவர்கள் உண்ணாவிரதம் இருந்த அந்த பந்தலையும் எரித்து சாம்பலாக்கி விட்டார்கள். இவைகள் எல்லாம் தொழிலாளர் நலனுக்குப் பாடுபடுகின்ற அரசினுடைய சாதனையின் ஒரு கூறு என்று சொன்னால் அது மிகையாகாது.

சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் ஏறத்தாழ 100 நாட்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது ஒரு போராட்டம். 12(3) செட்டில்மென்ட். இதையே இன்றைக்கு முன்னோடியாக வைத்துக்கொண்டு, அதில் உள்ள முற்றுப் புள்ளியையோ, கமாவையோ மாற்ற இயலாத காரியம் என்று ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில், அமைச்சரின் சார்பில் அறிவிக்கப்பட்டு விட்டதால், அந்தத் தொழிலதிபர் நான் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக ஆக்க மாட்டேன்; தற்காலிகத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் 4½ ரூபாய் சம்பளம் ஆக்க மாட்டேன்' என்கிற ஆணவத்தோடு துணிச்ச லோடு இந்தத் தொழிலாளர்களைப்பற்றி இன்றைக்குப் பேசுகிறார் என்றால், திருச்சி நகரம் தொழிலாளர்களுக்கு இரக்கம் காட்டுகின்ற வகையில் அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில், பரிவு காட்டுகின்ற வகையில், ஒருநாள் பொது வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டும்கூட, ஏன் இன்னும் சிலநாளில் திருச்சி மாவட்டத்திலே அப்பேர்ப்பட்ட கொந்தளிப்பான நிலை தொழிலாளர்களுக்காக ஏற்படும் என்ற நிலை உருவாகி இருந்தும்கூட, ஒரு தொழிலதிபர் 'நான் கொஞ்சமும் இணங்க மாட்டேன்' தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கை களுக்கு விடை தருகின்ற அந்த வேலைக்கு நான் வரமாட்டேன் என்று சொல்கிறார் என்றால் அது அந்தத் தொழில் அதிபர் களுக்கு அரசாங்கம் தருகின்ற மறைமுகமான ஆதரவு, ஆக்கம், ஊக்கம் இவைகளைத் தவிர வேறென்ன காரணம் கூற முடியும்.

அடுத்து, திருச்சி மாவட்டத்திலே கரூரிலே எல்.ஜி.பி. பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அந்தப்

போராட்டத்திலே ஒரு சுமுகமான முடிவு எடுக்கப்படுகிறது. நண்பர் திரு.உமாநாத் அவர்கள்கூட அன்றைக்குச் சுட்டிக் காட்டினார்கள். அந்தச் சுமூகமான முடிவு எடுக்கப்படுகிற நேரத்தில் அங்கே இருக்கின்ற அந்த மண்டலப் போலீஸ் அதிகாரி, ஒரு படையோடு அந்த நிறுவனத்தின் உள்ளேயே சென்று, அங்கே இருக்கின்ற தொழிலாளர்களை அடித்து வதைத்துச் சித்திரவதை செய்கிறார். அவ்வளவு கடுமையாக அங்கே நடைபெறுகின்றன.

ஆவடித் தொழிற்சாலையிலே நடைபெறுகிற அல்லல் களை எடுத்துக்காட்ட அமைதியான முறையிலே ஊர்வலம் சென்றபோது ஊர்வலத்திலே கலந்துகொள்வதற்கு முன்பாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்களாகிய திரு.சுப்பு அவர்களும் திரு. கோபு அவர்களும் தி.ரவைக்கண்ணன் அவர்களும் மற்றுமுள்ள தொழிற்சங்கத் தலைவர்களும் ஆக நூற்றுக்கும் மேற்பட்டோர் அன்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே முதலாளிகளுக்குப் பாதுகாப்புத் தரப்படுகிறது. ஆளும் கட்சியினர் தொழிலாளர் களுடைய போராட்டங்களை அடக்குவதற்குப் பயன்படுத்தப் படுகிறார்கள். இவைளை எல்லாம் பார்க்கிற நேரத்திலேதான் இங்கே தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல் படுகிறது என்பதற்கான நூற்றுக்கணக்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டி கண்டனத் தீர்மானத்தை நம்முடைய நண்பர் அவர்கள் கொண்டுவந்து, அதிலே பேசி இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் காட்டுவதற்காகவும், அதே நேரத்திலே முதலாளிகள் தங்களுடைய பிடிவாதத்திலேயிருந்து இறங்கிவரவேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவும் தொழிலாளர் களுடைய சங்கத்தின் தலைவர்கள், அரசியல் கட்சியினுடைய தலைவர்களை அணுகி எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் இதனை அரசுக்கு உணர்த்துகிற வகையில் கடை அடைப்பு, பொது வேலை நிறுத்தம் என்ற அறிவிப்பை அனைத்துக் கட்சிகளின் சார்பிலே வெளியிட்ட நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வானொலியில் பேசிய பேச்சும், அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்,

எந்த அளவிற்கு வன்முறையைத் தூண்டிவிட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான், நம்முடைய நண்பர், ஜனதாக் கட்சியினுடைய தலைவர் திரு.ஜேம்ஸ் அவர்களுடைய அந்தப் பாணியிலே பேச விரும்பவில்லை. திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக அவர்களைப் பாராளு மன்றத்திலேயிருந்து விலக்கி 5 நாட்களுக்குச் சிறை யிலே வைப்பது என்கிற முடிவு எடுக்கப்படுகிறது. அந்த முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் நிருபர்களிடத்திலே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறேன். இது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் நான் இங்கே இந்த அரசின் அணுகுமுறையைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு கட்சியினுடைய தலைவர் சிறையிலே போடப்படு கிறார் என்ற செய்தி வருமேயானால், அதற்காகப் போராட, கிளர்ந்தெழ, ஆர்ப்பாட்டங்கள் நடத்த, அந்தக் கட்சியிலே உள்ள தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் உரிமை உண்டு. அது பல நாட்களாகப் பல ஆண்டுகளாக நம்முடைய நாட்டிலே நாம் கண்டுவருகிற முறை. அந்த வகையிலே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட கிளர்ச்சிகளிலே ஈடுபட்டார்கள். அவர்கள் ஈடுபட்டது சரி; அது தவறு என்ற அந்த விவாதத்திலே இறங்க விரும்ப வில்லை. அப்போது அவர்களுடைய பத்திரிகையிலே சில நடவடிக்கைகள் பற்றிய செய்தி வெளியிடப்பட்டன. நான் கேட்கிறேன். இப்படிப்பட்ட முறைகளை எல்லாம் அனு மதிக்கக்கூடாது என்று சொல்கின்ற இந்த அரசினுடைய பத்திரிகைகள், அந்தக் காலத்திலே எப்படி நடந்துகொண்டன என்பதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்களைத் தண்டிப்பதற்கு முன்பே 1978ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 16ஆம் நாள் அன்று, அண்ணா பத்திரிகையின் முதல் பக்கத்திலே

எழுதப்பட்ட செய்தியைப் படிக்கிறேன். ''இந்திரா காந்திக்குத் தண்டனை கொடுத்தால் ஏற்படும் கொந்தளிப்பை எப்படி அடக்குவது என்று ஜனதா அரசு யோசித்து வருகிறது. இந்திரா காந்திக்குத் தண்டனை அளிக்கப்பட்டால் அதன் விளைவாக ஏற்படும் கொந்தளிப்பை எப்படி சமாளிப்பது என்பது பற்றி மத்திய அரசு தீவிரமாக யோசித்து வருகிறது. இந்தப் பிரச்சினை எழுப்பியுள்ள கொந்தளிப்பைக் கண்டு டெல்லி அதிர்ச்சி அடைந்திருக்கிறது.'' இது ஆளும் கட்சிப் பத்திரிகையிலே வருகின்ற செய்தி. வன்முறைகளைத் தூண்டி விடுகின்ற செய்திகளை வெளியிடுவது நல்லதா?

இது முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக் கூறுகிற மணிவாசகங்களில் ஒன்று. ஆனால்,அவர்களுடைய பத்திரிகைகளில், கொந்தளிப்பு ஏற்படும். புயல் ஏற்படும், அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றும், ஜனதா அரசு திணறுகிறது என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றால், இந்தச் செயல்களை அவர்கள் மறைமுகமாகத் தூண்டி விடு கிறார்கள் என்று பொருள் அல்லவா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே பத்திரிகையில் 1978ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 16ஆம் நாள் இரண்டாம் பக்கத்தில் இன்னொரு செய்தி. என்ன செய்தி. மாணவர்கள், இளைஞர்கள் எப்போதும் ஒழுங்காகப் படிக்கவேண்டும் என்று உபதேசம் செய்ய நமது முதலமைச்சர் தவறுவதே இல்லை. ஆனால், அண்ணா பத்திரிகையில் என்ன செய்தி வருகிறது? என்ன அறிவிப்பு தெரியுமா?

''இந்திரா காந்தி மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கும் ஜனதா அரசின் போக்கைக் கண்டித்து இன்று சென்னையிலிருந்து டெல்லி புறப்படும் க்ராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் ரயில் முன் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் படுத்து மறியல் செய்வார்கள். அணி அணியாகப் போராட்டத் தில் ஈடுபடுவார்கள், இவ்வாறு இனியன் சம்பத் அறிக்கையில் கூறியுள்ளார்.''

இது அண்ணா பத்திரிகையில் 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் வெளிவருகிற செய்தி. அப்படியானால் இதையெல்லாம் தூண்டி விடுகிறவர்கள் யார்? நாட்டிலே என்ன

நடைபெற்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டி விடுகிறது, அல்லது எதிர்கட்சிகள் தூண்டிவிடுகின்றன என்று குற்றம்சாட்டுகிறவர்களைக் கேட்கிறேன். இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்பே தண்டவாளத்தில் படுப்போம், ரயிலை நிறுத்துவோம், ரயிலைப் போக விடமாட்டோம் என காங்கிரஸ் கட்சி நண்பர்கள், காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்துகிறபோது, இளைஞர் காங்கிரஸ் கட்சி விடுத்த அறிக்கையை ஆளும் கட்சிப் பத்திரிகை வெளியிடுகிறது என்றால், வன்முறைக்கு மறைமுக மாகவோ அல்லது நேரடியாகவோ தூபம் வீசுகிற காரியம் அல்லவா இது.

நான் நேரில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றக் கட்சி அலுவலகத்திற்கு நான் சென்று கொண் டிருந்தபோது, அண்ணா சாலை வழியாகச் செல்கிறபோது, அண்ணா சிலைக்கு அருகாமையில் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் கொடும்பாவியை இளைஞர் காங்கிரஸ் தீ வைத்துக் கொளுத்தியபோது, போலீஸ் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். போலீஸார் அவர் களை உடனடியாகச் சுட வேண்டும் என்றோ அல்லது தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டுமென்றோ நான் கூறவில்லை. அவர்கள் ஆத்திரம், அவர்கள் தலைவர் கைது செய்யப்பட் டிருக்கிறார் என்ற காரணத்தால் தங்களுடைய மனக்கொந் தளிப்பை காட்டவேண்டும் என்று காட்டுகிறார்கள். ஆனால், அதற்கு ஆளுங்கட்சிப் பத்திரிகை அதற்கு எடுப்பு எடுத்துக் கொடுப்பதாக, அதற்கு உற்சாகமளிப்பதாக ஊக்கப்படுத்து வதாகச் செய்திகளை வெளியிடலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதோடு, 18 ஆம் தேதி அதே பத்திரிகையில் வருகிறது, என்ன வருகிறது.

''நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மறியல். இந்திரா கைது எப்போது? டெல்லியில் பதட்ட நிலை. ராணுவம் குவிகிறது.''

முதல் பக்கத்தில் இது கொட்டை எழுத்தில் வருகிறது. இவைகளுக்குப் பிறகுதான் நாகர்கோவில் சம்பவம். நாகர் கோவில் பகுதியில் வெள்ளோடு என்ற இடத்தில் ஒரு பஸ்

தீக்கிரையாக்கப்பட்டு, அதேயிடத்தில் எழு பேர்களும் அதற்குப் பிறகு, மூன்று பேர்களும் ஆக மொத்தம் பத்துபேர்கள் கொல்லப்படுகிறார்கள். அதற்கு வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். வழக்குப் பதிவு செய்ததற்காக. ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகிற அளவிற்கு இந்த அரசில் அங்கம் வகிப்பவர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருப்பவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள். அமைச்சர் களாக இருப்பவர்கள் தங்களுடைய மேற்பார்வையில் நடை பெறுகிற பத்திரிகைகள் இவைகளையெல்லாம், இப்படிப்பட்ட சம்பவங்களைத் தூண்டிவிடுகிற அளவிற்கு செய்திகளை வெளியிடுவது குற்றமல்லவா? இன்னொன்றும் நான் கேட்க விரும்புகிறேன். நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத்திற்கு அங்குள்ள ஒரு ஐந்தாறு பேர்களைப் பிடித்து வழக்குப் போட்டிருக்கிறீர்கள். கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. ஒப்பிட்டுக் காட்டுவதற்காகச் சொல்கிறேன். நாகர்கோவிலில் பஸ் கொளுத்தியதுபோல் ஒரு சம்பவம் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் நடைபெற்றிருந்து, பத்து பேர்கள் செத்திருந்தால் இப்படி வழக்கு போடப்பட்டிருக்குமா? நாகர்கோவில் வட்டாரத்தோடு வழக்கு முடிந்திருக்குமா: நாகர்கோவிலுக்கு எடுத்துச் சொன்னவர் மதுரையில் இருக்கிற கட்சிச் செயலாளர். மதுரைக் கட்சிக் செயலாளருக்கு எடுத்துச் சொன்னவர் சென்னையில் இருக்கிற கருணாநிதி, அன்பழகன், சாதிக் பாட்சா. எனவே, இதில் ஒரு பெரிய சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆகவே போடு 500 பேர்கள் மீது வழக்கு என்று வெள்ளோட்டிலிருந்து ஆரம்பித்து சென்னை வரையில் உள்ள எங்கள் அத்தனை பேர்களையும் அழைத்து வழக்குப் போட மாட்டார்களா? அப்படியா போடுவோம் என்றா ஆச்சிரியப் படுகிறீர்கள்! போடாதவர்களா என்ன? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மதுரைக்கு வந்திருந்த நேரத்தில் சில அசம்பாவித நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வழக்கு இருக்கிற காரணத்தால் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை.

ஆனால் அது சதி, செயற்குழு கூடி சதி நடத்தப்பட்டு அந்தச் சதியின் காரணமாகத்தான் கருணாநிதியும் அன்பழகனும்

மற்றவர்களும் இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள், தூண்டிவிட்டார்கள், என்கின்ற அளவுக்கு எங்கள் மீது 307, 302, 120 பி இப்படி எல்லாவித சட்டப்பிரிவுகளும் எங்கள் மீது தூவப்பட்டிருக்கின்றன; வழக்குகளும் தொடரப்பட்டிருக் கின்றன. ஆனால் இதே நிலைமையில் ஏன் மூப்பனாரை சதிக் குற்றத்தில் ஈடுபடுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். ஏன் நண்பர் மாரிமுத்துவை இப்படிப்பட்ட குற்றத்திலே ஈடு படுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். நான் கேட்பது எல்லாம் ஒரு கட்சிக்கு ஒரு முறை என்று வைத்துக் கொண் டிருக்கிறீர்களே ஏன்? நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத் திற்கு யார் பொறுப்பு என்பதைப் பார்த்து அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதுபோல மதுரையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு யார் பொறுப்பாளி என்று கருதுகிறீர்களோ அவர்கள் கைது செய்யப் பட்டிருக்க வேண்டும். அவர்கள் மீது வழக்கும் நடை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக நாங்கள் முன்பே அறிவித்து 144 இருக்கின்ற காரணத்தால் நாங்கள் 144 தடை உத்தரவை மீறி இந்திரா காந்தி அம்மையார் வருகின்ற வழியிலே கறுப்புக்கொடி காட்டப் போகின்றோம் என்று அறிவித்துவிட்டு முதல்நாள் கூட்டத்திலும் இதைப்பற்றி விரிவாக அறிவித்துவிட்டு நானும் பேசினேன்; இன்றைக்கு அந்த வழக்கிலே யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பேசிவிட்டு முதலில் நாங்கள் கறுப்புக்கொடியை எடுத்துக்கொண்டு செல்கிறோம். ஆனால் நாங்கள் சதி வழக்கில் ஈடுபட்டோம் என்று வழக்குப் போடுகிறார்கள். அதை வாபஸ் வாங்குங்கள். நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறோம் என்று பேரம் பேசிக் கொள்வதற்காக இதைச் சொல்லவில்லை.

அந்த வழக்கு என்னவாகும் என்று முதலமைச்சர் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். மற்ற அமைச்சர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கருணாநிதி தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்று பேசுகிறார்கள். அதைப்பற்றி கவலை யில்லை. என்ன வந்துவிடும்? என்ன தூக்குத் தண்டனையா வந்துவிடும்? அதைவிடப் பெரிய தண்டனை உலகத்தில் கிடையாது. அந்தத் தண்டனை கொடுக்க உங்களுக்கு இஷ்ட

மிருக்குமானால் கொடுத்து விடுங்கள். பூட்டோ சொன்னார். ''நாளைக்குத் தண்டனை எனக்கு அளிக்கப்பட்டாலும் என்னுடைய சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் கருணை மனு அளிக்கத் தயாராக இல்லை.'' என்று சொன்னார். அதை யேத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கில் இந்திரா காந்தியைக் கொல்வதற்காகக் கருணாநிதியும் அன்பழக னும் சாதிக் பாட்சாவும் மற்றவர்களும் முயற்சித்தார்கள் என்று எங்களுக்குத் தூக்குத்தண்டனை அளிக்கப்பட்டாலும் நாங்கள் அதைப் புன்னகையோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக் கிறோம் என்பதை மாத்திரம் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்த முரண்பாட்டை நாட்டுக்கு விளக்க வேண்டிய வனாக இருக்கிறேன். பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டு 10 பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். கறுப்புக் கொடி போராட்டத்தில் யாரும் கொல்லப்படவில்லை. சில அசம்பாவிதங்கள் நடை பெற்றன. அதற்காக நான் வருந்துகிறேன். இல்லையென்று சொல்லவில்லை. அதே நேரத்தில் அசம்பாவிதம் எப்படி நடந்தது என்ற அந்த ஆராய்ச்சியில் நான் நுழைய விரும்பவில்லை. காரணம் அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால்; ஆனால், அதற்கு ஒரு நியாயம், இதற்கு ஒரு நியாயமா? அதற்காக அவர்கள் மீதெல்லாம் ஒரு சதி வழக்குப் போடுங்கள் என்று நான் கேட்கவில்லை. எங்கள் மீது மட்டும் இப்படித் தொடர்ச்சியாகச் சங்கிலித் தொடர்போல வழக்குப் போட்டிருக்கிறீர்களே, இது நியாயம்தானா என்பதைக் கேட்டுக் கொள்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மேலும் சட்டம் ஒழுங்கு அமைதி தமிழகத்திலே எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய ஜேம்ஸ் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை முன் மொழிந்து பேசுகின்ற நேரத்தில் விரிவாகப் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதே அவையில் புட்லூர் தண்டபாணியின் மர்ம மரணம் பற்றி யும், அவர் எந்த விதத்தில் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றியும், பல ஆதாரங்களை, அவர் கையெழுத்துக்களோடு கூடிய ஆதாரங்களை அவருடைய துணைவியார் தந்த மனுக்

களோடு கூடிய ஆதாரங்களை, அவர் எழுதி வைத்த கணக்கில் யார்யாருக்கு எவ்வளவு செலவு செய்து அந்தக் கான்டிராக்டைப் பெற்றிருக்கிறார் என்பதைப் பற்றியும் ஆதாரம் இருந்தது. கொலை செய்யப்பட்டவர் வேறு யாரும் இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான். அவருடைய கொலையைப் பற்றி இவ்வளவு ஆதாரங்களை எடுத்துச் சொல்லியும்கூட இதுவரை எந்த நடவடிக்கையாவது எடுக்கப் பட்டதா?

பேராசிரியரும் மற்றவர்களும் இங்கே இளஞ்செழியன் படுகொலையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். திருவில்லிப் புத்தூருக்குப் பேசச் செல்லுகிறான் 12 வயது பாலகன் இளஞ் செழியன். பேசி முடித்துவிட்டுத் திரும்பி வருகிறான் மதுரைக்கு, மற்றவர்களோடு. வருகிற வழியில் கல்லால் அடித்துக் கொல்லப்படுகிறான். இளஞ்செழியன் காரிலேயே பிணம் ஆகிறான். மிச்சமிருந்தவர்கள், புகார் கொடுக்கின்றார்கள்; போலீஸ் புலன் விசாரணை நடத்துகிறது. இந்த விசாரணை முடிவதற்குள் அங்கேயிருக்கின்ற ஆட்சித் தலைவருக்கு அவசரம், கார் மரத்திலே மோதியதால் இளஞ்செழியன் இறந்தான். கார் மரத்திலே மோதியதற்குக் காரணம் கல் வீசப்பட்டது என்கிறார். நான் இப்போது கேட்க விரும்புகிறேன். பேராசிரியர் கேட்டதையே திரும்பக் கேட்கிறேன். கார் மரத்திலே மோதியது இருக்கட்டும். கார் மீது கல் வீசப்பட்டதால் கார் மரத்திலே மோதியது என்று மாவட்ட ஆட்சித் தலைவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே, அதற்காகவாவது வழக்கு உண்டா? விசாரணை உண்டா? நடவடிக்கை உண்டா? அந்த மாவட்ட ஆட்சித் தலைவரையும் ஒரு படி மிஞ்சிவிட்டார் நமது முதலமைச்சர் அவர்கள். மதுரையிலே நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் பெரியாரைப்பற்றிப் பேசுவதற்கு முதலமைச்சர் எடுத்துக்கொண்ட நேரத்தைவிட அதிகமாக, இளஞ்செழியனுடைய சாவைப் பற்றி எடுத்துக் கொண்டு, இவரே புலன் விசாரணையில் ஈடுபட்ட பெரிய போலீஸ் துப்பறியும் நிபுணரைப்போல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்; இளஞ்செழியனுடைய சாவு கொலை அல்ல. விபத்துதான் என்று சொன்ன பிறகு எந்த

நியாய உணர்வு படைத்த போலீஸ்காரராக இருந்தாலும் தன்னுடைய பதவியை எண்ணிப் பயப்படுவானே தவிர புலன்விசாரணையில் ஈடுபடுவானா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாணவர்கள் நிலை என்ன? தியாகராயா கல்லூரிக்கு நுழைகிறார்கள் போலீசார் துணையோடு ஆளும் கட்சிக் காரர்கள்; பச்சையப்பன் கல்லூரிக்குள் நுழைகிறார்கள்; ரகளை ஆகிறது; மாநில கல்லூரிக்குள் செல்கிறார்கள்; ரகளை ஆகிறது. இப்படிக் கல்லூரிக்குக் கல்லூரி காவல் துறையினரின் உதவியோடு ஆளும் கட்சிக்காரர்கள் நுழைந்து மாணவர்களைத் தாக்குகின்ற அவலநிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொது வேலை நிறுத்தம் நடந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் சைதாப்பேட்டைத் தொகுதியில் தனியாக வருகின்ற நேரத்தில் போலீசாரால் கைது செய்யப் படுகிறார். அப்படி கைது செய்யப்பட்டவரைப் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருந்தால் பரவாயில்லை. ஆனால் போலீசார் எங்கே ஆளும் கட்சிக்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்களோ, நூற்றுக்கணக்கானவர்கள் இருக் கின்றார்களோ அங்கே அழைத்துக்கொண்டு வந்து, அங்கே ஆளும் கட்சிக்காரர்கள் அவரை நையப் புடைப்பதும், அடித்து தீர்த்துவிட்ட பிறகு, திருப்திதானா என்று கேட்டுவிட்டு, அதன் பிறகு போலீஸ் நிலையத்திற்குக் கொண்டுபோய்ச் சிறையிலே அடைக்கப்படுகிறார். அது நியாயம்தானா? முறைதானா? நேர்மை பற்றிப் பேசுவதற்கு இந்த அரசுக்குத் தகுதி இருக் கின்றதா என்று கேட்க விரும்புகிறேன்.

பொது வேலை நிறுத்தம் முடிந்த பிறகுகூட பவானி, ஆப்பக்கூடல் பகுதியில் போலீஸ் லாரியில் ஏற்றப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக, மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக் இன்னும் காந்தி-காமராஜ் காங் கிரஸ் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர் களையெல்லாம் லாரியில் ஏற்றப்படுகின்ற நேரத்தில், லாரியில் உள்ளவர்களை இழுத்துப்போட்டு ஆளும் கட்சிக்காரர்கள் தாக்கிய கொடுமை நடைபெற்றிருக்கிறது. அதிலே தொழிற்

சங்கத்தலைவர் பஷீர் என்பவர் மிகவும் கடுமையாகத் தாக்கப் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உப்பிலிபாளையத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் மன்றங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மன்றங்கள் அடித்துத் தகர்த்து ஏறியப்பட்டன, பொதுவேலை நிறுத்தத்தின் தொடர்பாக.

திருப்பூரில் இவைகளை யெல்லாம் கண்டிக்கின்ற கண்டனக் கூட்டம் நடைபெறுகிறது. அனைத்துக் கட்சிகளி னுடைய கண்டனக்கூட்டம் அது. அந்தக் கண்டனக் கூட்டத்தில் அன்றைக்குப் பணியிலே ஈடுபடத் தேவையில்லாத ஒருவர் விடுப்பிலே இருக்கின்ற ஒரு போலீஸ்காரர், போலீஸ் உடை யிலே இல்லாமல், மப்டியில் சைக்கிளில் அந்தப்பக்கம் போய்க் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு பஸ் அதிபரின் மகன் பஸ்ஸை எடுத்துக்கொண்டு கூட்டத்தில் வேகமாக, நுழைந்து இந்தக் கூட்டத்தைக் கலைக் கின்ற முயற்சியில் ஈடுபடுகின்ற அந்த நேரத்தில், அந்த மப்டி யிலே உள்ள போலீஸ்காரர் அந்த பஸ்ஸால் அடிக்கப்பட்டுச் செத்திருக்கிறார். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்றத்தை அந்தப் பஸ் அதிபரின் மகன்மேல் இருப்பதை மாற்றி, டிரைவர் மேல் போடலாமா என்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, உரியவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

பல்லாவரம் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட சாராய வியாபாரி ஒருவரை விடுவிக்க வேண்டுமென்று சோடா பாட்டில்கள், கற்கள் அத்தனையும் அந்தக் காவல் நிலையத்தின் மீது வீசப்பட்டன என்ற செய்திகள் வந்தன. மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் விசாரிப்பதற்காக ஒரு ஆளும்கட்சி பிரமுகரை அரியலூர் காவல் நிலையத்திற்குப் போலீசார் அழைத்துச் சென்றபோது, ஆளும் கட்சியினர் நூற்றுக்கணக்கில் அந்தக் காவல் நிலையத்தை முற்றுகை இடுகிறணார்கள். நிலைமையைச் சமாளிக்க முடியாத அந்தப் போலீசார் இந்தக் கைதியை விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

வெளி நாட்டிலே இருந்து அமெரிக்கா போன்ற நாடு களுக்கெல்லாம் சென்று விட்டு, முதல் அமைச்சர் தாயகம் திரும்புகிறார். அவர் தமிழகத்திற்குத் திரும்பித் தலைநகரத்திலே

சென்னை மாநகரத்திலே விமான நிலையத்திலே வர வேற்கப்பட்டுக் காலை 10 மணி அளவிலே அண்ணா சிலைக்கு அருகாமையில் போடப்பட்டிருந்த மேடையில் மக்களைச் சந்தித்து உரையாற்றுவார் என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் விமானம் தாமதமாக வருகிறது. முதலமைச்சர் இங்கே வருகிற நேரம் ஏறத்தாழ பிற்பகல் 2 அல்லது 3 மணி இருக்கும். அதற்கிடையில் முதல் நாள் பாங்கோ ஆறுமுகம் என்ற அரிசனத் தோழர் செத்து விடுகிறான். முதல்நாள் செத்துவிட்ட அந்த அரிசனத் தோழனின் பிணத்தைக் காலையிலே எடுத்துக்கொண்டு அந்த வழியாகச் செல்லுகிறார்கள். முன் கூட்டியே போலீசார் அண்ணா சிலைக்கு அருகே கூட்டம் இருக்கின்றது என்று சொல்லித் தடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் போக விட்டுவிட்டார்கள்; அந்தப் பிரேத ஊர்வலம் செல்லலாம் என்ற அளவிலே முதலில் போலீசார் அப்படிப் போக விட்டுவிட்டார்கள்.

பிரேத ஊர்வலம் அண்ணா சிலை அருகே செல்கிறது. அதிலே 50 அல்லது 60 பேர்தான் செல்லுகிறார்கள். அப்போது போகக்கூடாது என்று தடுக்கிறார்கள். போலீசாரும் 'நீங்கள் திரும்பச் செல்லுங்கள்' என்று சொல்லுகிறார்கள். கிராமப் புறங்களில், எனக்கு நம்பிக்கையில்லை சாஸ்திர சம்பிர தாயங்களில் என்றாலும், பல பேருக்கு நம்பிக்கையுண்டு. இறந்தவன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்தான் என்றாலும், உற்றார் உறவினருக்கு அந்த நம்பிக்கை இருக்கக் கூடும். இடுகாட்டுக்குச் செல்லுகிற பிணத்தை அதே வழியில் திரும்ப எடுத்துச்செல்லக்கூடாது என்பது ஒரு ஐதீகம். ஒரு வைதீக மனப்பான்மை, ஆனால் அதற்கும் கட்டுப்பட்டுத் திரும்ப எடுத்துச் செல்லுகிறார்கள். அண்ணா சிலை வழியாக இல்லாமல் பெரியார் சிலை வழியாக வேறு பக்கமாகக் கிருஷ்ணாம்பேட்டைக்குச் செல்ல எடுத்துச்செல்லுகிறார்கள். அவர்களில் 200க்கு மேற்பட்டவர்கள் பிணத்தைத் துரத்திச் சென்று, பிணத்தை வண்டியிலிருந்து கீழே இழுத்துப் போட்டு உதைத்து, மிதித்து கொள்ளிச் சட்டியைப் பிடுங்கிக் கொண்டு, அதை எடுத்துச் சென்ற சிறுவனை உதைத்து, அங்கிருந்த பெண்களை அடித்து, எவ்வளவு தொல்லைக்கு ஆளாக்கியிருக் கிறார்கள். அதற்குப் பிறகு கண்டனக் கூட்டங்கள், அதைப் பற்றிய மறுப்பு அறிக்கைகள் இவ்வளவு வெளி வந்தன.

நான் கேட்கிறேன், முதலமைச்சர் அவர்கள் அண்ணா சிலைக்கு அருகில் பேசத் தொடங்குகையில் 'காலையில் சில அசம்பாவிதங்கள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன், அதற்காக வருந்துகிறேன். அதைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டிக்கிறேன்' என்று இரண்டு மூன்று வாசகங்களை மாத்திரம் சொல்லியிருப்பாரேயானால் அந்தப் பிரச்சினை பெரிதாகவே ஆகியிருக்காது. ஒரு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த தோழன், அவனுடைய பிணம் தூக்கி எறியப்படுகிறது. மிதிக்கப்படுகிறது. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிறார்கள்; கருணாநிதி பிணம் தின்னும் கழுகு என்று. நான் அவர்களுக்கு மேடையில் பதில் சொன்னேன் 'நான் என்றைக்கும் உங்களைத் தின்றது கிடையாதே' என்று, 'பிணம் அகப்பட்டால் போதுமே, அதை வைத்துக் கொண்டு விளம்பரம் செய்வதுதானே வேலை' என்று பேசுகிறார்கள். எனக்குத் தெரியாதா? நீங்கள் தேர்தல் நேரத்தில் ஒட்டிய போஸ்டர்களை மறந்துவிடவில்லை. அவை பிணங்களின் போஸ்டர்கள் அல்லவா உயிரோடு இருந்தவர் களுடைய போஸ்டர்களையா போட்டீர்கள். அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்ற நேரத்தில் அதை அரசுக்கு எடுத்துச் சொல்லவும், அரசு அதைக் கண்டிக்கத் தவறினால் மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டவர்கள். அந்த வகையிலேதான் ஒரு பிணத்திற்குக் கூட இப்படிப்பட்ட கொடுமை நடைபெற்றிருக்கிறதே என்று சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்ட நிலைமையை அன்றைக்கு நாட்டு மக்களுக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம்.

அவைகள் மட்டுந்தானா ஆளும் கட்சிக்காரர்கள் இழைத்த கொடுமைகள்? உத்தமபாளையம் தாசில்தாரை இழிவுபடுத்தி அந்தப் பகுதி ஆளும் கட்சி அமைப்பாளர் அங்கே பேசினார் என்று அவர்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் அரசு ஊழி யர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும், இந்த ஆட்சிக் காலத்தில் தான். பெண்களிடத்தில் தவறாக நடந்து பிடிபட்டார்கள் சில குண்டர்கள். அவர்களைத் தஞ்சை நகரத்தில் காவல் நிலை யத்தில் அடைத்தார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆளும்கட்சிக்காரர்கள் காவல் நிலையத்தில்

நுழைந்து அதிகாரிகளை மிரட்டி அங்குள்ள ரெக்கார்டுகளைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள். பரமக்குடி தாசில்தார் சம்பவம் பரம ரகசியம் அல்ல. எல்லாருக்கும் பகிரங்கமாகத் தெரிந்த ஒன்றுதான். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? தாசில்தார் மீது என்ன குற்றம் சுமத்த முடியும் என்ற முயற்சியிலே ஈடுபட்டார்களே தவிர, என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? தேனாம்பேட்டையில் ஒன்றரை ஆண்டு காலத்திற்கு முன்பு கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களைப் பிடித்துச் சென்றார்கள். அவர்களை காவலர்கள் கைது செய்கிறார்கள். ஆனால் ஆளுங்கட்சிக்காரர்கள் அவர்களைப் பிடித்து அடித்தார்கள். கட்டி வைத்தார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

போலீஸ் லாக்கப்பில் இருந்த உறவினரை, மகனை மீட்க போலீஸ் லாக்கப்பில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. உள்ளே புகுந்து ''வெளியே விடுகிறாயா இல்லையா'' என்று மிரட்டி மகனை அழைத்து வருகிறாரே என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? இவை எல்லாம் ஆளும் கட்சியினர் நிர்வாகத்தில், நீதியில், சட்டத்தில் தலையிடுகிற காரியங்கள் அல்லவா? முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.சு.லட்சுமணன் அவர்கள்மேல் பயங்கரமான வழக்குகளை இந்த அரசு போட்டிருக்கிறது. இதற்கிடையில் அவர் எந்த நேரத்திலும் கொலை செய்யப் படுவார் என்ற அளவுக்கு மிரட்டல் பாணங்கள். சட்டமன்ற உறுப்பினர் ராஜரத்தினம் அவர்கள் வீட்டில் நடைபெற்ற சம்பவம் என்ன? யாரோ குண்டர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன், யாரோ குண்டர்கள் ராஜரத்தினம் வீட்டில் நுழைந்து அவரை அடித்தார்கள், காயப்படுத்தினார்கள். ராஜரத்தினம் நான்கு பேர் மீது புகார் செய்தார். புகார் செய்த உடனே நான்கு பேரைக் கைது செய்தார்கள். நான்கூட மகிழ்ச்சியடைந்து பத்திரிகைக்கு செய்தி வந்தபோது துணையாசிரியர்களிடத்தில் ''அண்ணா தி.மு.க வைச் சேர்ந்தவர்கள் என்று போடாதீர்கள்'' என்று சொன்னேன். ராஜ ரத்தினமே 'குண்டர்கள்' தாக்கினார்கள் என்று சொன்ன செய்தியை அப்படியே போடுங்கள் என்றுகூடச்

சொல்லி அனுப்பினேன். அப்படித்தான் செய்திகூட முரசொலிப் பத்திரி கையில்கூட போடப்பட்டது.

என்ன நடந்தது? 4 பேர்களைக் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக ஜாமீனிலே விடப்படு கிறார்கள். ஆனால், அகில இந்திய அண்ணா தி.மு.க அல்ல, ஆனாலும் திரு. ராஜரத்தினம் அடிபட்ட காரணத்தால், அடித்த வர்களுக்குச் சிபாரிசாக ஆளுங்கட்சிக்காரர்கள் வருகிறார்கள். திரு.ராஜரத்தினம் மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகிறார். மருத்துவமனையிலே இருக்கிற அடிபட்டவரை உடனடியாகக் கைது செய்கிறார்கள். ஜாமீனிலே வெளியே வரமுடியாதபடி 326 செக்ஷனில் போட்டு அவரைக் கைது செய்கிறார்கள். அடிபட்டவர் கைது செய்யப்படுகிறார். ஆனால் அடித்தவர்கள் உடனடியாக ஜாமீனிலே விடப்படுகிறார்கள்.

முருகையனுடைய கொலை வழக்கு. சேலத்திலே நம்முடைய முதலமைச்சர் பேசிய பேச்சை டேப் ரிக்கார்டிலே கேட்டு விட்டு அதற்குப் பிறகுதான் சேலத்திலே பொதுக் கூட்டத்திலே நான் பேசியிருக்கிறேன். முருகையன் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று பேசியதாக அறிந்தேன். முருகையன் ''என்பவராக'' ஆக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். வாய்தவறி வந்த வார்த்தையாக இருக்க லாம். ஆனால் முருகையன் ''என்பவர்'' அல்ல, சோவியத் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தவர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர், நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அவர் கொலை செய்யப் பட்டிருக்கிறார். அந்தக் கொலைக்கு ஒரே ஒரு ஆள் தான் காரணம் என்று அங்கே இருக்கிற டி.ஐ.ஜி தேவாரம் என்பவர் பிடிவாதமாகச் சொல்லி வருகிறார். அன்றைக்கு அவை முன்னவர்கூட எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலே வாக்களித்தார். என்னை நம்புங்கள் என்று. பேராசிரியர் பேசும்போது கேட்ட நேரத்திலே கூட அதற்கு முன்னவர் பதில் சொல்கிறபோது கொலைகாரர்களைச் சும்மாவிடமாட்டோம். ஆளுநர் உரையிலே வருகிற வாசகத்தைச் சொன்னார்கள். ஒரு வரல்ல, பலர்தான் என்று எடுத்துச் சொன்னபோதுகூட பலராக இருந்தாலும் சும்மா விடமாட்டோம் என்று வாக்களித்தார்கள். அவர்கள் சொன்னது

எனக்குச் சற்று மகிழ்ச்சியை அளித்தாலும், பலரால் கொலை செய்யப்பட்டதாக அந்தப் பகுதிமக்கள் அனைவரும் சொல்கிறபோது, கொலை செய்தவர் ஒரே ஒரு ஆள்தான் என்று டி.ஐ.ஜி பிடிவாதமாகச் சொல்கிறார். 37 இடங்களிலே குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மருத்துவ விசாரணை சர்டிபிகேட் என்ன சொல்கிறது?

முடிந்தால் அவையிலே வையுங்கள் பார்க்கலாம். முத்துப்பேட்டையிலே உள்ள டாக்டர் என்ன சொல்கிறார். நான்கிற்கு மேற்பட்ட பல்வேறு ஆயுதங்களால் முருகையன் உடலிலே காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்கிற்கு மேற் பட்ட ஆயுதங்கள் என்றால் குத்திய போஸ் என்ன பிரம்மாவா? நான்கு கைகளிலே நான்கு ஆயுதங்களை வைத்துக்கொண்டு குத்த, இல்லை, அவர் மனிதர். இரண்டு கைகள்தான். ஒரு கையால்தான் குத்தமுடியும். 37 குத்துக்களை வாங்கிப் பிணமாக விழுகிறார். முருகையன், நாடாளுமன்ற உறுப்பினர். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களிலே ஒருவர். முதலமைச்சர் சென்று இரங்கல் தெரிவிக்கிறார். அதற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் என்ன? 4,5 பேர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அத்தனைபேரும் சொல்லியும்கூட தேவாரம் சொல்கிறார் இல்லை, இல்லை ஒரே ஒரு ஆள்தான் என்று. தேவாரம் சென்னைக்கு வருகிறார். யாரைச் சந்திக்கவோ நான் அறியேன் பராபரமே. அவர் நிருபர்களைச் சந்திக்கிறார், நிருபர்கள் கேட்கிறார்கள். 37 இடங்களிலே குத்தப்பட்டிருக்கிறாரே? ஒரே ஒரு ஆள் மீதுதான் வழக்கா என்று. தேவாரம் பதில் சொல்கிறார். குத்தியவரே சொல்கிறாரே என்று குத்தியவரையே ஒத்துக்கொள்ளவைத்து விட்டு, இந்தச் சதியிலே ஈடுபட்டிருக்கின்ற மற்றவர்களை விடுவிப்பதற்கான பயங்கரமான சதி நடக்கிறதா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. முருகையன் கொலையைப் பற்றி முருகையனின் மனைவியினிடத்திலேகூட போலீஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தவில்லை. உங்களுடைய கணவர் என்றைக்கு ஊருக்குச் சென்றார். என்றைக்குத் திரும்பி வருவதாகச் சொன்னார். அவருக்கும் மற்றவர்களுக்கும் தகராறு உண்டா என்று கேட்டிருக்க வேண்டாமா? முருகையன் அவர்களுடைய

அண்ணன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதை நான் படிக்கமுடியும், ஆனால் நேரமில்லை, முருகையனின் போர்த்திய சால்வைகூட ரத்தக் கறை படிந்து இருக்கிறதாம். அந்தச் சால்வையைக்கூட போலீசார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. முருகையன் பாக்கெட்டிலே வைத்திருந்த சாவியை, அவர் கட்டியிருந்த கடிகாரத்தை அவர்கள் வைத்திருக் கிறார்கள். அதைத் திரும்பக் கொடுக்கவேண்டு மென்று கேட்டு அவர்கள் மனு போட்டார்கள். ஆனால் சர்க்கார் தரப்பு வக்கீல் அங்கே வாதாடியதைப்பற்றிக் கண்ணீர் சிந்தக் கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார்கள்?

என்ன கடிதம் தெரியுமா? சர்க்கார் தரப்பு வக்கீல் வாதாடுகிறாராம். ''என்ன கடிகாரம் தேவையா, காமராஜர் என்ன கடிகாரமா கட்டியிருந்தார்'' என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். அதுமட்டுமில்லாமல், ''அந்தச் சாவி தேவை என்றால் கோத்ரெஜ் பீரோதானே, அந்தக் கம்பெனிக்கு எழுதினால் இன்னொரு சாவி தர மாட்டானா?'' என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். இப்படிப்பட்ட நிலையில் அவருடைய துணைவியாரையும், உற்றார் உறவினரையும் விசாரிக்காத சூழ்நிலையில் இன்றைக்கு முருகையன் படுகொலையைப் பற்றிப் புலன் விசாரணை நடைபெற்று இருக்குமேயானால், இந்த மன்றத்திலேயிருக்கின்ற எதிர்க்கட்சியாகிய நாங்கள், இதிலே சரியாக விசாரணை நடைபெறவில்லை என்கின்ற குற்றச்சாட்டை எடுத்துகாட்ட கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்குப் பிறகாவது, இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்ற கடமையும் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற எங்களுக்கெல்லாம் நிச்சயமாக இருக்கின்றது.

இன்னொன்று, உளி வீச்சு சம்பவம் பற்றிப் பேசினார்கள். அது கேலிக்குரியதாக, கிண்டலுக்குரியதாக, எதிர்க்கட்சித் தரப்பிலே அனுதாபத்திற்குரியதாக அந்தப் பேச்சுக்கள் எல்லாம் அமைந்தன என்றாலும், நம்முடைய முதலமைச்சரவர்களும், நம்முடைய முன்னவரவர்களும் பேரவையிலும் மேலவையிலும் பேசுகின்ற நேரத்தில், நாங்கள் அதற்காக வருத்தப்படுகிறோம் என்று சொல்லியிருந்தாலும்கூட, உளி வீச்சு சம்பவம்

நடைபெற்றது குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றவுடன் உங்கள் கட்சிப் பத்திரிகை என்ன செய்தி வெளியிடுகிறது? கைது செய்த போலீஸ்காரர் கருணாநிதிக்குச் சொந்தக்காரர் என்று, எனக்கே தெரியாத ஒரு இரகசியத்தை அவர்கள் வெளியிடுகிறார்கள்; ஒருவேளை என்னுடைய இனத்தவராக இருக்கலாமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ரிமாண்ட் மனு கொடுத்த இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ் பெக்டர் அல்ல சொந்தக்காரர் பட்டியலில் வருபவர் அல்ல. பக்கத்திலே இருக்கின்ற ஊரைச் சேர்ந்த நடராஜன் என்ற இன்ஸ்பெக்டர் கொடுத்திருக்கிறார். அதிலே உளி வீசிய செபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? 'ஆமாம் கருணாநிதி மீது உளி வீசியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன்தான், இருந்தாலும் நாங்கள் அவரைக் கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்' என்று சொன்னால் ஆளுங்கட்சிக்குப் பெருமைதரக்கூடிய காரியமாக இருக்காதா? அடிக்கடி சொல்வீர்களே, பாலசுந்தரம் கொலை! பாலசுந்தரம் கொலை என்று, அந்தப் பாலசுந்தரத்தைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் யார்? திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாசிலாமணி என்ற மாணவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மற்ற மூன்று மாணவர்களும் என்றல்லவா குற்றம்சாட்டப்பட்டார்கள். அவர்களை உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்று அறிவித்தோமா? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அவர்கள் ஆயுள் தண் டனை பெற்று வேலூர் சிறைக்குள் இன்றைக்கு அடைபட்டுக் கிடக்கவில்லையா? எனவே, 'ஆமாம், சபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான்' எதிர்க்கட்சித் தலைவர்மீது உளி வீசியதற்காக நாங்கள் அவனைச் சட்டப்படி தண்டிப்ப தற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறோம் என்று சொன்னால் உங்களுடைய பெருமை என்ன குறைந்தாவிடப் போகிறது? அதை ஏன் பூசி மெழுகப் பார்க்கிறீர்கள்? அதை ஏன் கேலி செய்கிறீர்கள்? உளி வீச்சு ஒரு கதை என்கிறீர்கள், உளி வீச்சு

ஒரு நாடகம் என்கிறீர்கள். ஆளுங்கட்சி பத்திரிகையே எழுது கிறது. ''இப்போது கருணாநிதி புதிதாகத் தொடங்கியிருக்கிற உளி நாடகம் அந்த மேடையில் எத்தனை நாட்களுக்குத் தொடருகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்'' என்று தென்னகத்திலும், ''உளி வீச்சு நாடகத்தை வைத்து கருணாநிதி கும்பல் செய்து வருகிற அரசியல் மோசடி அம்பலமாகும்'' என்று அண்ணா பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் இன்னொரு பத்திரிகையையும் படித்துக்காட்ட விரும்புகிறேன். அவையிலுள்ளவர்கள் மன்னிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இது இந்தச் சட்டமன்ற கோட் டைக் கொத்தளத்திற்குள்ளேயே படிப்பகத்திலே அனுமதிக்கப் பட்டிருக்கின்ற பத்திரிகை, அதனால் இதைப் படிப்பது தவறாகாது. தலைவரவர்களே! நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

''பராக்! பராக்!! சர்வ கட்சிக் கூட்டம்

உளி வீச்சைக் கண்டித்து மன்னை நாராயணசாமி 9 நாள் உண்ணாவிரதம்!

அன்பில் தர்மலிங்கம் திருச்சி மலைக்கோட்டை உச்சியில் வேட்டியில்லாமல் தீக்குளிப்பு!!

கம்யூனிஸ்ட் மாணிக்கம் மழுங்கிப்போன அரிவாளால் கழுத்தை அறுத்துக் கொள்ளுதல்!

உளி வீச்சு சம்பவத்தைக் கண்டித்து அப்துல் சமதுபாயின் மீண்டும் ஒரு சுன்னத்!

பார்வர்டு பிளாக் ஆண்டித் தேவரின் உடன்கட்டை ஏறுதல்!

வி.பி.சித்தனின் பத்து நாள் பத்திய சாப்பாடு!

குசேலரின் கழுமரம் ஏறுதல்!

சுந்தர்ராஜனின் சுண்ணாம்புக் காளவாயில் குதித்தல்

குமரி அனந்தன் குமரியிலிருந்து சென்னைவரை தலை யாலே நடந்து வருதல்!''

சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்காகப் படிப்பகத் திலே வாங்கிப் போடப்படும் பத்திரிகை. இதைப்பற்றி முன்பே பலமுறை தங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன் அலுவல் அறையில் முன்னவரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு உளி வீச்சு சம்பவத்தை நீங்கள் எழுதிவிட்ட காரணத்தினால் நான் ஒன்றும் புண்படப் போவதில்லை. நிலை மைகள் எப்படியிருக்கின்றன என்பதை எடுத்துரைப்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல என்பதைத் தான் சுட்டிக்காட்டுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் புக்கு வந்த நேரத்தில் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாளில் ஒன்றைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றுப் பதவிக்குப் போகிறவர்களின் கணக்கை இப்பொழுதே சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பதவிக்குப் போனபின் தவறு செய்து சொத்துச்சேர்த்திருந்தால் நடவடிக்கை எடுத்து அவர்களுடைய கணக்கைத் தீர்த்து விடுவோம் என்று நம் முடைய முதலமைச்சர் பேசினார். அப்படி கணக்குத் தீர்க்க பல பேருடைய பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது.

நாகர்கோயிலுக்குச் சென்று பார்த்தால் அங்கே முன்னாள் எம்.பி. கட்டியிருக்கிற மாடமாளிகை, கூடகோபுரம் நம்முடைய முதலமைச்சருடைய கண்ணுக்குத் தெரியாமல் போகாது. தில்லைநகரத்திலே ஒரு எம்.பி. கட்டியிருக்கிற மாட மாளிகை, கூடகோபுரம், உப்பரிகை, நம்முடைய முதலமைச்சரவர் களுடைய கண்ணுக்குத் தெரியாமல் போகாது. எனவே, தஞ்சைக்குச் சென்றாலும், வேறு எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அவர் சொன்ன கணக்குத் தீர்க்கவேண்டியவர் பட்டியலில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியும்.

ஊழல்கள்-என்னுடைய ஆட்சியில் அது நடைபெறாது. இது கொள்கை என்று இப்பொழுதுகூடச் சொன்னார். நம் முடைய நண்பர் கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சனைக்கு, சுப்பு அவர்கள் தொடர்ந்து எழுப்பிய பிரச்சனைக்கு

முதலமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் எங்களுடைய கொள்கை, இதிலேயிருந்து நழுவ மாட்டோம் என்று சொன்னார்.

ஊழல் பலவிதம். கட்சிக்குக் கட்சி பாரபட்சம் காட்டுவது கூட ஊழல்தான். ஆளுங்கட்சி தலையீடுகூட ஊழல்தான். ஒரு உதாரணம் சொல்கிறேன்; சின்ன உதாரணம் சொல்கிறேன். 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாள் அன்று ஜே-1 சைதாப்பேட்டை காவல் நிலைய சரகத்தில் உள்ள காவலர்கள் மிஸ்ஸி என்ற ஒரு பெண்ணைக் கைது செய்கிறார்கள். ஏன் தெரியுமா? சைதாப்பேட்டை ஆத்துச்சேரியில் 28ஆம் எண் வீட்டில் மணியினுடைய மனைவி மிஸ்ஸி என்பவளை சாராயம் விற்றதாக சைதை உதவி ஆய்வாளர் அச்சுதன்நாயர் கைது செய்து அவரிடமிருந்து சாராயம், விற்கப் பயன்படுத்திய உபகரணங்களை எல்லாம் கைப்பற்றி, ரூபாய் 53 பணமும் கைப்பற்றப்பெற்றுச் சுமார் 10 மணிக்கு ஜே-1 சைதை காவல் நிலையம் கொண்டுவந்து லாக் அப் செய்கிறார். அவர்மீது ஜே-1 குற்ற எண் 307/79-ல் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. அவசரச் சட்டத்தின்படி இதற்காக ஒரு நபருக்கு 5 வருட சிறைத்தண்டனையும், ரூபாய் 7,000 அபராதமும் விதிக்கலாம்; யாரையும் ஜாமீனில் விட முடியாது. அவசரச் சட்டத்தின்படி முதல் குற்றவாளிக்குக் கட்டாயமாக 6 மாதம் கடுங்காவல் தண்டனையும், ரூபாய் 2,000 அபராதமும் விதிக்கலாம். இரண்டாவது, போலீசாருக்கு ஜாமீனில் விட அதிகாரமே இல்லை. ஆனால், இரவு சுமார் 1 மணிக்கு ஒரு முக்கியமான வருடைய இல்லத்திலேயிருந்து தொலைபேசியில் ஆணை வந்து, இரவு, வடிவேலுவுடைய மகன் டி.வி. ராஜேந்திரன் என்பவர் ஜாமீன் கொடுத்து, இந்த மிஸ்ஸி என்ற அம்மையாரைத் தன் பொறுப்பிலே விடுதலை செய்து கொண்டு போகிறார்கள் என்றால், மது விலக்குச் சட்டம் இவ்வளவு அதி தீவிரமாகக் கொண்டுவரப்படுகிற சட்டம், ஆளுங்கட்சிக் காரருடைய தலையீட்டால், கைது செய்யப்பட்ட ஒரு பெண், ஜாமீனில் விட முடியாது. அதுவும் விடுவிக்கின்ற அதிகாரம் போலீசுக்குக் கிடையவே கிடையாது என்று வரையறுக்கப்பட்ட பிறகு, எப்படி ஜாமீனில் விடப்பட்டார்.

அதைப்போலவே ஒரு வழக்கு; அது 15 ஆம் தேதி; இது 13ஆம் தேதி. இதே அச்சுதன் நாயர் என்ற சைதை காவல் நிலைய உதவி ஆய்வாளர், இதை ஆத்து நகரில் சித்ரா என்கிற ஒரு பெண்ணைக் கைது செய்கிறார். அந்தப் பெண் நிறைவான கர்ப்பிணி. அவரை ஜாமீனிலே விட மறுக்கிறார்கள். சிறைச் சாலையிலே அடைக்கிறார்கள். சிறைச்சாலையிலேதான் பிரசவம் கூட நடைபெற்றது என்ற செய்தி வருகிறது. ஏன் இரண்டு வழக்குகளுக்கு இரண்டு விதமான டிரீட்மெண்ட் என்று கேட்கிறேன்? இதிலே இரண்டு நிலை எடுக்கவேண்டிய காரணம் என்ன? ஆளும் கட்சியினுடைய தலையீடு என்பதைத் தவிர வேறு காரணம் ஏதாவது கூற முடியுமா?

ஊழலே இல்லை, குறைபாடுகளே இல்லை, முறைகேடு களே இல்லை என்று சொல்கிறீர்களே; நான், நமது அமைச்சர் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணாசாமி அவர்கள் இன்று அமைச்சரவையில் அமர்ந்துள்ளார்; அவர் அமைச்சராகி விட்டார்; நான் மகிழ்ச்சியடைகிறேன். வரவேற்கிறேன்; வாழ்துகிறேன். ஆனால், அவர் 1977ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க ஆட்சி அமைக்கிறபோது, பிறகு, 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்குக் குவாலிடி பிரிண்டர்ஸ் முழு உரிமையாளர் ஆக விளங்கும் திரு.கே. கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட முக்கிய பாட புத்தகங்களை, அச்சு வேலை களைச் செய்யக்கோரும் ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இலட்ச ரூபாய்க்கான ஒப்பந்தம் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் சொந்த நிர்வாகத்திற்கு, அ.தி.மு.க ஆட்சி அமைந்த பிறகு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெண்டர் விட்டார்களா என்பது தெரியாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிற சம்பவம் வழக்கு மன்றத்திற்குச் சென்று முறையாக விவாதிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அந்தத் தீர்ப்பை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்துப் பார்த்து, அதில் ஏதாவது இருந்தால் இந்த மாமன்றத்திலே வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவரே சொல்கிற மாதிரி ''புழுதி வாரி தூற்றுகிற'' அந்தப் பணியில் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே நீதிமன்றத் திற்கு சென்றது அது அல்ல. நீதிமன்றத்திற்குச் சென்றது திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மேல் சபைக்கு நின்றதை எதிர்த்து தேவசகாயம் தொடர்ந்த வழக்கு. அந்த விவரத்திற் குள்ளே நுழைய நான் தயாராக இல்லை. அந்தத் தீர்ப்பைப் பற்றிச் சரியா தவறா என்று சொல்ல வரவில்லை. ஆனால், 1977-ல் பதவிக்கு வந்த பிறகு, ஒரு பெரிய ஒப்பந்தம் அவர் உரிமையாளராக இருக்கும் நிறுவனத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை பெற்ற பிறகு 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளில் மேலவைத் தேர்தலில் நின்று வெற்றி பெறுகிறார்.

மாண்புமிகு திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி எழுந்திருக்கிறார்:

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தயவு செய்து அமருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கும் வரையில் நாங்கள் யாரும் குறுக்கிடப்போவது இல்லை என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாளில் அவர் அமைச்சர் ஆகிறார். அமைச்சர் ஆவதற்கு முன்பு, அவருக்கே தெரிகிறது தாம் குவாலிடி பிரிண்டர்ஸ் னுடைய உரிமையாளராக இருந்து ஒப்பந்தக்காரராக இருந்த தால் சரியாகாது என்று தெரிகிறது. அதனால் அதை மாற்றி வேறு ஒருவருக்கு விற்றுவிட வேண்டும் என்று விரும்புகிறோர். அதனால் இவர் கடிதம் எழுதினார் பாடநூல் நிறுவனத்தாருக்கு. அவர் கடிதம் எழுதிய தேதி 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள். அவர் எழுதிய கடிதத்தில் அவருடைய சகோதரர் மாணிக்கம் என்பவருடைய மகன் குணாளன் பெயரால் ஒரு மேகலை எண்டர்பிரைசைஸ் என்ற நிறுவனம் இருப்பதாகவும் அவரை இந்த ஒப்பந்ததாரராகப் பொறுப்பேற்று திரு.கே.ஏ. கிருஷ்ணசாமிக்குப் பதிலாக நியமிக்க வேண்டும் என்றும் கடிதம் எழுதுகிறார்.

அவருக்குப் பதில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாளன்று வருகிறது. என்ன சுறுசுறுப்பு பாருங்கள். நம் பாடநூல் நிறுவனத்திற்கு! 12-ம் தேதியே பதில் கடிதம் வருகிறது. திரு.கே.ஏ.கிருஷ்ணசாமிக்கு ஒப்பந்ததாரர் உரிமையை ரத்து செய்கிறோம். அந்த ஒப்பந்தத்தைத் திரு.குணாளனுக்கு உரிமையாக்குவது (மேகலை எண்டர்பிரைசின் உரிமையாளர்) சம்பந்தமாகத் தனியாகத்தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கிறார்கள். பதில் நியாயமானதாகத்தான் தோன்றுகிறது.

நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிற நேரத்தில் வழக் கறிஞர் ராகவாச்சாரி அவர்கள் பாடநூல் நிறுவனத்தின் தலைவர் மோகனரங்கம் அவர்களைப் பார்த்துக் கேட்கிறார், அவர் 55 வயதைத் தாண்டியவர், ராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் 55 வயதைத் தாண்டியவர்களுக்கு யாருக்கும் வேலை நீட்டிப்புக் கிடையாது என்று சொன்னார்; அடுத்த 2 நாளுக்குப் பிறகு வேலை நீட்டிப்புப் பெற்றவர் இந்த மோகனரங்கம். அந்த மோகனரங்கத்தை வழக்கறிஞர் ராகவாச்சாரி கேட்கிற போது, கோர்ட்டாருக்குச் சொல்லுங்கள். ஒப்பந்தத் தேதிக்கும் ஒப்பந்தம் ரத்தான தேதிக்கும் இடையில் அச்சிட குவாலிடி பிரின்டர்ஸ்ஸுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டதா? ஒப்பந்தம் ரத்தான பிறகு ஒரு வேலையும் கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை என்று அவர் பதில் சொல்கிறார். வேறு யாருக்காவது புத்தகம் அச்சிடக் கொடுத் தார்களா? மேகலை ஏஜென்சியாருக்குக் கொடுத்தார்கள். மேகலை ஏஜென்சியா யார்? அவருடைய சகோதரர் மகன் குணாளன் என்று சொல்லப்படுகிறது. நான் என்ன குறிப்பிடு கிறேன் என்றால் ஒப்பந்தம் செய்து கொண்டவர்தான் அமைச்சர் ஆகின்ற தகுதியைப் பெற்றவுடன் அந்த ஒப்பந்தத்தை நான் ரத்து செய்து கொள்கிறேன் என்று சொல்வதற்குப் பதில் இவர்களை, இன்னாரை நியமித்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டு அவருக்குக் கடிதம் எழுதி, அது கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால், அது முறைகேடு இல்லையா என்று அவையில் நான் குற்றச்சாட்டு வைக்க விரும்புகிறேன் அல்லாமல் வேறு அல்ல.

பாடநூல் நிறுவனம் சர்க்காருக்குத் தொடர்புடையது அல்லவா என்பதைப் பற்றிச் சர்க்காரியா விசாரித்து இருக்கிறது. அது குறித்துச் சர்க்காரியா கமிஷன் சொல்கிறது. இதிலே வருகிற குறிப்பில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் நோக்கங்கள் பற்றிச் சொல்கிறபோது'' தமிழ்நாடு அரசு, இந் நிறுவனத்திற்கு மாற்றித் தரக்கூடிய அதன் சொத்துக்கள், உரிமைகள், சிறப்பு உரிமைகள், பொறுப்புகள் எல்லாவற்றினும் பாடநூல்கள் வெளியிடுவது தொடர்பான தமிழ்நாடு அரசின் அலுவலையும் ஏனைய நடவடிக்கைகளையும் கையகப்படுத்தி மேற்கொள்வது அந்த அலுவலையும், நடவடிக்கைகளையும் தொடர்ந்து நடத்திவருவது, தமிழ்நாடு அரசு அவ்வப்போது அளிக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவது, கடமைகளை ஆற்றுவது, கட்டணங்களை நிறைவேற்றுவது, பொதுக்கல்வி, தொழில் நுட்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆக்கம் தருவது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இவைகளை மையமாக வைத்துச் சர்க்காரியா அவர்கள் அப்போதிருந்த கல்வி அமைச்சர் அவர்கள் முறைகேடாக நடந்து கொண்டார் என்று சொல்லிச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்து, சர்க்காரியா அவை நிரூபிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் என் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அல்லது அன்றைக்கு அமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அவைகள் எல்லாம் தவறானது என்று அன்றைக்கு நாங்கள் தெரிவித்துப் புத்தகம்கூட வெளியிட்டு இருக்கிறோம். அதை இந்த அவையில் வைத்துவிட்ட அந்தக் காரணத்தாலே அதுபற்றி நான் ஒன்றும் இப்போது விளக்கமாகப் பதில் அளிக்க விரும்பவில்லை. ஆனால் பாடநூல் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பது சர்க்காரியா அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பாடநூல் நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள், விதிமுறைகள் இவைகளில் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே எடுத்துக்காட்டினேன்.

ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட பதவிகளுக்கு எல்லாம் வர முடிகிறது. ஒருவர் தூதுவராக ஆக்கப்பட்டு இருக்கிறார்.

டெல்லிக்கு, அவர் நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு சவால் விட்டார். எப்போது தெரியுமா? சேலத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக நிற்கிறபோது ஒரு தேர்தல் கூட்டத்தில் அ.தி.மு.க மேடையில் நம்முடைய முதலமைச்சர் அவர் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில், அவரது மேடையில் பேசிய ஒருவர் சொன்னார். 1972-ல் ஒரு கைதியை விடுவிக்க ராஜாராம் ஒரு லட்சம் ரூபாய் பெற்றார் என்று புகார் கூறப்படுகிறது. இதுபற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். அந்தக் கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆர் அந்தப் புகார் மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயம் என்று கூறினார். அதைப்பற்றி ராஜாராம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அது எல்லாப் பத்திரிகையிலும் வந்தது. என்ன அறிக்கை தெரியுமா? என்னைப் பற்றி இதுவரையில் சொல்லப்படாத புகார் எம்.ஜி.ஆர். கூட்டத்தில் சொல்லப்பட்டது என்று பத்திரிகை வாயிலாகச் செய்தி அறிந்தேன். யாரோ ஒரு கைதியை விடுதலை செய்ய ஒரு லட்சம் ரூபாய் நான் 1972-ல் பெற்றதாக ஜேப்பியார் புகார் கூறி இருக்கிறார். 1972 முதல் 1976 சனவரி வரையில் நான் அமைச்சராக இருந்து இருக்கிறேன். அதுவரையில் எம்.ஜி.ஆரோ அல்லது எம்.ஜி.ஆர் கட்சியைச் சேர்ந்தவர்களோ எப்படி எந்தப் புகாரும் கூறவில்லை. தேர்தலில் அவர் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகின்ற ஒரே காரணத்தால் அவர்கள் அந்தப் புகாரைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்தப் புகார் உடனடியாக நிரூபிக்கப்பட்டால்தான் இத்தொகுதியில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் அல்லது அப்படி நிரூபிக்கப்படாவிட்டால் குறைந்தபட்சம் எம்.ஜி.ஆர் கட்சி வேட்பாளர் வாபஸ் வாங்கக்கூட வேண்டாம் என்றால், அதற்குப் பதிலாக எம்.ஜி.ஆர் பகிரங்க மன்னிப்பு கேட்பாரா? இப்படி ராஜாராம் கேட்டார்.

மன்னிப்பு கேட்பாரா என்று கேட்டார் அப்படியா கேட்பாய்? டெல்லிக்குப் போ தூதராக என்று நம்முடைய முதலமைச்சர் இன்று அவரை அனுப்பியிருக்கிறார். இது அவருடைய பரந்த மனப்பான்மை; இதை நான் பாராட்டுகிறேன்.

ஆனால் அந்த ஊழல் புகார் என்னவாயிற்று என்பதே என்னுடைய சந்தேகம்.

இன்னொன்று, திண்டுக்கல் மருத்துவமனைப் பற்றிப் பேசினார்கள். என்னிடம் ஒரு விவரம் இருக்கிறது. திண்டுக்கல்லிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களும், மாயத்தேவர், எம்.பி. அவர்களும் ஒருநாள் திடீரென்று அந்த மருத்துவமனையில் சர்பிரைஸ் விசிட் சென்றார்கள். அப்போது டாக்டர் உத்தம புத்திரன்- ஆரம்ப சுகாதார நிலையம், சின்னாளம்பட்டி, மதுரை மாவட்டம், 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாளன்று காலை 11 மணியளவில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சௌந்திரராஜன் அவர்கள் மாயத்தேவர், எம்.பி. அவர்களோடு மருத்துவமனைக்குச் சென்றபோது சுமார் 2,000 ரூபாய் மதிப்புள்ள டபிள்யூ.எச்.ஓ அளித்த விலை உயர்ந்த மருந்துகளை டாக்டர் உத்தமபுத்திரன் கடத்திச்சென்றபோது கையும் களவுமாகப் பிடித்தார்கள். அது வரவேற்கத்தக்கது. அதற்கு ஒரு சபாஷ்.

2,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துத் திருட்டைக் கண்டு பிடிக்கிறார். நம்முடைய அமைச்சர். கையும் களவுமாக பக்கத்திலேயே மாயத்தேவரை சாட்சியாக வைத்துக்கொண்டு பிடிக்கிறார். உடனடியாக சஸ்பென்ட் செய்ய உத்தரவிட்டார். அதற்கு ஒரு சபாஷ் கூடவே தருவோம்.

அதற்குப் பிறகு சுமார் 10 நாட்களிலே மீண்டும் ஒரு மருத்துவமனையில் அந்த உத்தமபுத்திரன் வேலைக்கு அமர்த்தப்பட்டார். விசாரணை நடத்தப்படவில்லை, சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை காரணம் என்ன? இடையிலே என்ன நடந்தது? எவ்வளவு புரண்டது? இந்த உத்தமபுத்திரர்களின் ஆட்சியில் அந்த உத்தமபுத்திரன் மீண்டும் எப்படி அதே மருத்துவமனையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்? இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே நான் எழுப்புகின்ற இந்த வினாவிற்குப் பதில் தேவை.

இன்னொன்று செங்கற்பட்டு மாவட்டத்திலே ஏ.பி.பி. அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரோடு 2 பதவி. அதைத்

தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட குழுவினால் 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாளில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால், நேர்முகத் தேர்வுக்கு வராத இராதாகிருஷ்ணன் என்பவர் அந்த அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரோடு 2 பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு கமிட்டி போட்டு, அந்தப் பதவிக்கு ஆள் நியமனம் செய்கிறார்கள். ஆனால் அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் தேர்வுக்குழுவில் இன்டர்வியூவுக்கு போகாத இராதா கிருஷ்ணன் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார். உடனடி யாக அரசுக் கடிதம் போகிறது. எல்.டிஸ். 20102/78, நாள் 1979ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் நாளன்று. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இராதாகிருஷ்ணனை அந்தப் பதவிக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும், அவருக்கு அந்தப் பதவி கொடுக்கக்கூடாது என்றும் அரசாங்கம் தெரிவிக்கிறது. இப்படி இன்டர்வியூவுக்குப் போகாதவரை அந்தப் பதவிக்கு எடுக்கக் கூடாது என்று 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ம் நாளில் அரசாங்கம் தெரிவிக்கிறது. அதற்குப் பிறகும் இராதாகிருஷ்ணன் ஒழுங்குமுறைகளுக்கு மாறாக அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரேடு 2 ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார். இது முறைதானா? இது எப்படி நடந்தது என்று அறிய வேண்டாமா? இடையிலே என்ன நடந்தது என்று கூற வேண்டாமா? இதற்கு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பயன்படாது என்று கருதிகிறீர்களா?

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் காலாகாலமாகப் போக்குவரத்துத் துறையில் பதவி உயர்வு கொடுப்பதில் அரசாங்கம் உத்தரவு போட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் கூட 'ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள்' அதாவது 'மோட்டார் வேய்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்ஸ்' அவர்களுக்கும் சூப்பிரண்டு களுக்கும் பதவி உயர்வு கொடுக்க அரசு 1:1 என்ற முறையில்தான் உத்தரவு போட்டிருந்தது. அந்த முறையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது திடீரென்று ஒரு உத்தரவு. அந்த 1:1 உத்தரவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்

இருந்தது. அதன் பிறகு இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. இந்த ஆட்சி கலைக்கப்பட்டு, இங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி, கவர்னர் ஆட்சி நடைபெற்றது. அப்போதும் 1:1 தான் இருந்தது. ஆனால் ஊழல் எல்லாம் ஒழிக்கப்போகிறோம் என்று சொன்ன இந்த ஆட்சியில் என்ன நடந்தது? அந்த 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டது. ஒரு சூப்பிரண்டுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் 1 ப்ரேக் இன்ஸ்பெக்டர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று 1:4 என்கிற வகையில் என்ற உத்தரவு வந்தது. 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டுப் பிரேக் இன்ஸ்பெக்டர்ஸ்; மோட்டார் வேய்கிள்ஸ் இன்ஸ்பெக்டர் களுக்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 150-க்கு மேற்பட்டவர்கள் பெரும்பணம் வசூல் செய்தார்கள் என்றும் அதன் காரணமாக வசூலிக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டதன் காரணமாக அதற்குப் பரிசாக இந்த சூப்பிரண்டு மோட்டார் வேய்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அளிக்கப்படுகின்ற பதவி உயர்வு 1:1 என்று இருந்ததற்குப் பதிலாக 1:4 என்ற- அதாவது ஒரு சூப்பிரண்டு பதவி உயர்வு பெற்றால், அதற்குப் பிறகு 4 ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்வு பெற்ற பிறகுதான் அடுத்த ப்ரமோஷன் சூப்பிரண்டுக்கு என்று மாற்றியிருக் கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதை இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் இந்த அமைச்சரவைக்கு எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்னொன்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் என்று ஒன்றிருக்கிறது. அதிலே இரண்டு கப்பல்கள் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்தன. அதிலே பழுது ஏற்பட்டதாகவும் அது பழுது பார்க்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அந்தப் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்குச் சாமான்களை ஏற்றுகின்ற கப்பல்கள் இரண்டு வாங்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பால்டிகா டைப் என்கிற லெனின்கிராட் கப்பல்களை வாங்கித்தர ஒரு கம்பெனி முன்வந்தது. அந்தக் கப்பல்களின் நம்பர்கள் என்னவென்றால் ஒன்று 642; இன்னொன்று 643. அந்தக் கப்பலினுடைய தாங்கும் சக்தி 38,250 மெட்ரிக் டன்ஸ். அந்தக் கப்பல் கடலுக்குள்ளே

செல்லுகின்ற ஆழம் 32 அடி. ஒவ்வொரு கப்பலுக்கும் 7.5 மில்லியன் யூ.எஸ். டாலர் வீதம் 15 மில்லியன் யூ.எஸ். டாலர்களுக்கு விலைபேசி முடிப்பதாக அந்த இடைத்தரகரான கம்பெனிக்காரர்கள் சொன்னார்கள். 15 மில்லியன் டாலர் என்கிற போது ஒரு மில்லியன் என்றாலே 10 இலட்சம் அதாவது 150 இலட்சம் டாலர் அதாவது ஒரு டாலருக்கு 8 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் ஆகிறது. அவ்வாறு 12 கோடி ரூபாய் என்று சொன்ன பிறகு, தமிழ்நாடு அரசு அப்போது பேச்சு வார்த்தையைத் தொடரவில்லை. அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து தமிழ்நாடு அரசு மெஸ்ஸர்ஸ் ஆக்போல்டன் ஹம்பர்க் என்ற கம்பெனியாரோடு பேச்சு வார்த்தை ஆரம்பித்தது. அவர்கள் அந்தக் கப்பலை 22.5 மில்லியன் டாலருக்கு வாங்கித் தருவதாகச் சொன்னார்கள். 22.5 மில்லியன் டாலர் என்றால் அது கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய். அதே கப்பல்களின் விலை 12 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்ட நேரத்திலே தட்டிக்கழிக்கப்பட்டது. அப்படி தட்டிக்கழித்த தமிழ்நாடு அரசு மறுபடியும் மெஸ்ஸர்ஸ் ஆக்போல்டன் ஹம்பர்க் கம்பெனியாரோடு பேரம் பேசி 18 கோடி ரூபாய் என்று அவர்கள் சொல்ல, அதன்படி அதை வாங்க, பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மேனேஜிங் டைரக்டர் எச்.எம். சிங், அய்.ஏ.எஸ். அவர்களும் அனந்தநாராயணன் என்ற டெக்னிக்கல் மேனேஜரும் அதிகாரபூர்வமாகவோ அதிகார பூர்வம் இல்லாத முறையிலோ சிம்கோ புகழ் விஸ்வநாதன் அவர்களுடன் அங்கே சென்றார்கள். அவர்கள் ஹம்பர்க் சென்று அங்கு ஆல்போல்டன் கம்பெனியாருடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். மேற்கு ஜெர்மனியிலே உள்ள ஹம்பர்க்கிலே ஒரு பேங்கிலே 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாளுக்குள் அந்தக் கப்பல்களை வாங்குவதற்கு ஒரு எல்.சி.அதாவது லெட்டர் ஆப் கிரெடிட் ஓப்பன் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் இருந்து அதற்கான ஒப்புதலைப் பெறமுடியவில்லை. ஆக அதற்குப் பிறகு அந்த இரண்டு கப்பல்களுக்கும் உரிய விலையினை ஓப்பன் மார்க்கெட்டிலே 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். மத்திய அரசிடம்

இருந்து ஒப்புதல் 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாளுக்குள் வராத காரணத்தால் இவர்களோடு பேரம் பேசிய அதே கம்பெனியார் 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். ஆனால் மறுபடியும் ஆக்போல்டன் கம்பெனியுடன் அதே கப்பல்களை முன்பு சொன்ன 22.5 மில்லியன் டாலருக்கு வாங்கித் தரும்படி கேட்டார்கள். இந்த விலையைப் பார்க்கும்போது முதலில் அந்தக் கப்பல்களின் விலை நம்முடைய கணக்குப்படி, தமிழ்நாடு சர்க்கார் முதலில் அக்கறை காட்டாமல் இருந்துவிட்டுப் பிறகு அதை 18 கோடிக்கு வாங்க முன்வந்தது. அப்போது மத்திய சர்க்காருடைய ஒப்புதல் கிடைக்கவில்லை. ஒப்புதல் கிடைக்காததற்குக் காரணம் இரண்டு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள். அதாவது பல்வேறு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தபால் மூலமாகவும் தந்தி மூலமாகவும் நேரடியாகவும் மத்திய சர்க்காரிடத்திலே இந்த விவரங்களைக் கூறிய காரணத்தால் மத்திய சர்க்கார் அதற்கான ஒப்புதலை அளிக்கத் தயங்கியது.

அது நடைபெறாமல் பிறகு 13.6 கோடி ரூபாய் அள விலே ஓப்பன் மார்க்கெட்டிலே அதன் விலையை அறிவித்து விட்டார்கள். அந்தக் கப்பல்களை மாநில சர்க்கார் வாங்க மத்திய 5 சர்க்கார் ஓப்புதல் அளித்திருந்தால் அதனுடைய விலையை விட கோடி ரூபாய் அதிகமாக விலை கொடுத்து தமிழக அரசு வாங்கவேண்டி இருந்திருக்கும். நான் இன்னொன்றும் சொல்கிறேன். ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சில சாமான்கள் பார்த்து வாங்கினால் கூட, அதிலேயும் ரூபாய் 2½ கோடி, ரூபாய் 3 கோடி இடையிலே செல்கிறது.

யாருக்குச் செல்கிறது, எங்கே செல்கிறது. லண்டனுக்கா? சுவிட்சர்லாந்துக்கா? அரேபியா நாட்டுக்கா? எந்த வழியாக மீண்டும் இந்தியாவிற்கு வரப்போகிறது? நல்லகாலம். அது இடையில் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது மத்திய அரசால். அது தொடருமானால் மாநில அரசு அதை வாங்குமானால் பெரும் ஊழலுக்கு அது ஆளாக வேண்டியிருக்கும் என்பதை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஊழல் இல்லாத அரசாங்கமா இந்த அரசாங்கம்?

பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பஸ் முதலாளிகளிடம் வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக்கணையை விடுத்தார்கள். சினிமா முதலாளிகளிடம் தியேட்டர் முதலாளி களிடமிருந்து வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக்கணையை விடுத்தார்கள். இன்னொரு கேள்விக் கணையையும் இதனுடன் சேர்த்து விடுக்கின்றேன். வட்டிக் கடை செல்வந்தர்களிடம் சலுகைகள் செய்வதாக அறிவித்து ஏறத்தாழ 20 லட்சத்திற்கு மேல் இந்த அரசு அரசாங்கத்திலேஉள்ள முக்கியமானவர்கள் அதற்குரிய வெகுமானத் தொகை யாகப் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். நமது அமைச்சர் திரு. இராஜாமுகமது அவர்கள், இந்த அமைச்சரவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த காலத்தில் இருந்தவர் அல்ல. அப்போ தெல்லாம் அவர்கள் கார்ப்பரேஷனில் வேலை பார்த்தவர். தங்களிடம் அனுமதி பெற்றுச் சில கடிதங்களை நான் இங்கே படிக்கிறேன். இந்தக் கடிதங்களின் உண்மை நகல் கோர்ட்டில் இருக்கின்றன. அதனுடைய போட்டோஸ்டெட் காப்பிகள் இவை; இதனுடைய உண்மை நகல்களைப் பார்க்க வேண்டுமானால் முதல் அமைச்சர் அவர்கள் முயன்றால் கோர்ட்டில் இருந்து பெற்றுப் படித்துப்பார்க்க முடியும்.

1975ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் அவர் எழுதுகிறார். சென்னை நகராட்சி மன்றத்திலிருந்து எழுதுகிறார். 1975ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளில்.

அன்புக்குரிய ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு எழுதுவது, நலம் நலம் நாடுகிறேன். தங்கள் கடிதம் கண்டேன். தங்களுடைய மகன் விஷயமாய் எனக்குத் தெரிந்த பாதிப்பில் லாத ஒரு முயற்சித்ததில் தங்களுக்கு யோசனை கூறினேன். நெருக்கடி நிலை காரணமாக முயற்சிகள் தடைப்பட்டு வருகின்றன. நான் சந்தித்த என்ஜினீயரைப் பம்பாய்க்கு மாறுதல் செய்ய உத்தரவு இட்டிருக்கிறார்கள். அவர் இம்மாதம் 17ஆம் தேதி பம்பாய்க்குச் செல்கிறார். அதற்குள் முடிந்த அளவுக்கு முயற்சி செய்வதாக வாக்களித்துள்ளார்கள். இறைவன் அருள் இருப்பின் காரியம் கைகூடும்.

ஒருவேளை காரியம் கைகூடாவிட்டாலும் நமக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது. நம்பிக்கையோடு இருக்கவும். இந்தக் கடிதம் கண்டவுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒரு விண்ணப்பம் எழுதி, உங்களுடைய மகனின் கையெழுத்துடன் எனக்கு அனுப்பவும். அமைச்சர் பண்ருட்டி அவர்களிடம் சொல்லி, முயற்சி செய்து பார்க்கலாம். (இப்படி எங்கு எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்) ''டு தி கமிஷனர், கார்ப்பரேஷன் ஆப் மதராஸ், மதராஸ்-3'' எந்தவிதமான பாதிப்பும் வராது என்ற நம்பிக்கையோடு இருக்கவும். என்னா லான உதவிகளைச் செய்வேன் என்று கடிதம் முடிக்கப் பெற்றிருக்கிறது. பாதிப்பு ஒன்றும் ஏற்படாது என்று சொல்லி யிருக்கிறார்கள். மீண்டும் 21 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அவர் சொல்லியது பண்ருட்டி அவர்கள் மூலம் நடைபெறவில்லை போலும், ஆகவே, இன்னொரு கடிதம்.

அன்புள்ள ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு, ராஜா முகமது எழுதுவது. தங்களின் கடிதம் கண்டேன். 19 ஆம் தேதி என்று மைத்துனருக்கு நிச்சயதார்த்தம் திண்டுக்கல்லில் இருந்ததால் 18 ஆம் தேதி அன்றே சென்னையில் இருந்து புறப்பட்டு விட்டேன். 18ஆம் தேதி தங்கள் கடிதமும் கண்டேன். 18 ஆம் தேதி அன்றே அவர் பணத்தை என்னிடம் கொடுத்து விட்டார்கள். நான் உடனே புறப்பட்டு விட்டதால் தங்களிடம் அன்று எதுவும் தெரிவிக்கவில்லை. பணம் என்னிடம் பத்திரமாக உள்ளது. மடல் கண்டதும் சென்னைக்கு உடனே எழுதவும்.

பாதிப்பு இல்லை என்கிறார்கள். அதற்கு என்ன பொருள்? கொடுத்த பணம் திரும்பி வந்துவிடும் என்பதுதான் அதற்குப் பொருத்தம்.

அமைச்சரானதற்குப் பிறகு 1978இல் ஒரு கடிதம் சென்னையிலிருந்து பெரியகுளத்திற்குச் செல்கிறது. பெரிய குளத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன் பி.ஏ., பி.எல். அட்வகேட் அவர் பெரியகுளத்தில் இருக்க வேண்டியவர். சென்னைக்கு வருகிறார், சென்னைக்கு வந்து அவர் ஒரு கடிதம் நமது ராஜா முகமது அவர்களின் தகப்பனாரிடத்தில் கொடுத்தனுப்புகிறார். என்ன கடிதம் தெரியுமா?

பதில் என்ன இருக்கிறது-

''டியர் அழகிரிசாமி! இன்று நான் உனக்கு எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். இப்பவும் நம் தோப்பைக் கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். இந்த லெட்டர் கொண்டுவரும் நம் மந்திரியின் தகப்பனார் திரு.காதர் மைதீன் ராவுத்தர் அவர்களிடம் உடனே தோப்பை ஒப்புவித்து விடவும். பாண்டியையும் அவர் மனைவியையும் அவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் பேசி வேலைசெய்யச் சொல்லியும் தோப்பைப் பொஸஷன் எடுத்துவிட்டு எனக்கு உடனே தபால் எழுதவும், இப்படிக்குக் கே. சீனிவாசன்...''

இப்படி நேரில் கொடுத்து அனுப்பிய கடிதம் போதாது என்று 'இன்லென்ட்' கடிதம் ஒன்றை தபாலில் அனுப்புகிறார். அதில் என்ன இருக்கிறது என்றால்-''டியர் அழகிரிசாமி, நான் நேற்று உனக்குத் தபாலில் எழுதிய கடிதம் கிடைத்திருக்கு மென்று நினைக்கிறேன். அதன் பிறகு பார்ட்டி வந்து தோப்பு கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். உனக்கும் நேற்று மந்திரி அவர்கள் தகப்பனார் மூலம் லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கிறேன். அவர் கொண்டுவந்து கொடுப்பார். தோப்பை உடனடியாக அவரிடம் ஒப்புவித்து விடவும், நீ கணக்கை உடனே அனுப்பு. பணம் அனுப்பிவிடுகிறேன். நான் இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் மதுரைக்கு வரப்போகிறேன். அப்போது நீ அங்கு வந்தால் எல்லா விவரமும் பேசிக்கொள்ளலாம். தோப்பை அவர் களிடம் ஒப்படைத்துவிட்டு எனக்கு உடனே பதில் போடவும். இங்கு எல்லாரும் சௌக்கியம். அங்கு எல்லாருடைய சௌக்கியத் திற்கும் உடனே பதில் போடவும். இப்படிக்குக் கே.சீனிவாசன்... இது கடிதத்தின் நகல்.

வேண்டுமென்றால், இது தகப்பனார் வாங்கினார், எனக்கு சம்பந்தம் இல்லை என்று அவர் சொல்லக்கூடும். தகப்பனார் வாங்குவதாக இருந்தால் பெரியகுளத்திலேயே பணத்தைக் கொடுத்திருக்கலாம். இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் இது அங்குள்ள மக்களுக்கு எல்லாம் தெரிந்து அந்த வட்டாரத்தி

லுள்ள மக்கள் எல்லாரும் இதுபற்றிப் பேசத் தலைப்பட்டு, மேடைகளிலும் இதுகுறித்து கூறப்பட்டு, அந்தக் காரியம் இடையே அப்படியே நின்றுவிட்டது. எனவே, இப்படி நடை பெற்ற ஒரு ஊழல், அந்த ஊழலுக்காகச் சம்பாதிக்கப்பட்ட பணம், அவைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நடந்த விஷயங்களைத்தான் இந்த கடிதங்கள் நமக்குத் தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே ஊழலே இல்லை. நாங்கள் சம் பாதிக்கவே இல்லை என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்ற அமைச்சர்கள் சிலர் எந்த அளவுக்கு இப்படிப்பட்ட காரியங் களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துச்சொல்வதற் காகத்தான் இதையெல்லாம் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

இறுதியாக, சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பதில் தமிழ்நாட்டில் போலீசின் கரங்கள் எந்த அளவுக்குக் கட்டப் பட்டிருக்கின்றன என்பது குறித்துக் கண்டனத் தீர்மானத்தை அளித்தவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தில் பேசிய நாங்களும் எடுத்துச்சொல்லி யிருக்கிறோம். ஒரு சம்பவத்தைச் சொல்லவேண்டுமேயானால், இந்திராகாந்தி அம்மையார் தமிழ்நாட்டுக்கு வந்த நேரத்தில் திருச்சியிலே கறுப்புக் கொடி காட்டிய அன்பில் தர்மலிங்கத்தை யும், மன்னை நாராயணசாமியையும் எங்கள் வழக்கோடு இணைப்பதற்காக இந்த அரசு முயற்சி செய்தது. அதற்காக ஒரு பெரிய போலீஸ் அதிகாரியைத் திருச்சிக்கு அனுப்பினார்கள். அவர் திருச்சிக்குச் சென்று ''மன்னை நாராயணசாமி கையிலே பெரிய அரிவாளோடு நின்றார், அன்பில் தர்மலிங்கம் கடப் பாரையோடு நின்றார்.'' என்று நீங்கள் ஒரு புகாரை கொடுங்கள் என்று திருச்சியிலுள்ள அதிகாரிகளை கேட்டிருக்கிறார் இந்த அதிகாரி. அதற்குத் திருச்சியிலுள்ள அதிகாரிகள் அப்படி எழுதிக்கொடுக்க மறுத்துவிட்டார்கள். அப்படி எழுதி வாங்கப்பட்டிருக்குமானால் மதுரை, கோவை, காஞ்சி, சென்னை என்று இணைக்கப்பட்ட ஊர்களோடு திருச்சி மாநகரமும் இணைக்கப்பட்டு இருக்கும். அங்கிருக்கின்ற அதிகாரிகள் இங்கிருந்து சென்ற அதிகாரியின் விருப்பத்திற்கு இணக்கம் தெரிவிக்காமல் இருந்து விட்டார்கள். அது மாத்திர மல்ல, அதற்கு மாறாக அந்த அதிகாரிகள் அன்பில் தர்ம லிங்கமும், மன்னை நாராயணசாமியும்தான் இந்தக் கூட்டத்

தையே ஒழுங்குபடுத்தி, இங்குக் கறுப்புக் கொடி காட்டியவர் களைத் தனியாக நிற்கவைத்துப் போலீசுக்கு உதவி செய்தார்கள், அப்படியிருக்க நாங்கள் எப்படி அவர்கள் மீது புகார் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். இங் கிருந்து சென்ற அதிகாரி, அவர்களை மிரட்டிவிட்டு வந்தார்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற வேறு சில அதிகாரிகள் இந்த அரசுக்குப் பயந்துகொண்டு, பொய் வழக்குப் போடுகின்ற காரியங்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருப்பார்களேயானால், நான் அவர்களுக்கெல்லாம் சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றைத்தான். இன்றைக்கு வேண்டுமென்றால் நீங்கள் எந்த காரியத்தையும் செய்துகொண் டிருக்கலாம். ஆனால் இன்றைக்கு விசாரணைக் கமிஷன் என்பது நாட்டில் ஆட்சிகள் மாறுகிற நேரத்தில் எல்லாம் வைக்கப்படுகிற தொடர்கதையாக ஆகிவிட்டது. எப்படி டெல்லிப் பட்டினத்திலே ஷா கமிஷன் நடைபெற்றதோ அதைப்போல அதிகாரிகளுடைய துஷ்பிரயோகம், அத்துமீறிய நடவடிக்கை இவைகளைப்பற்றி இந்த ஆட்சி மாறிய பிறகு இன்னொரு ஆட்சி வருகிற நேரத்தில் விசாரணை கமிஷன் வரும். அப்போது நிச்சயமாக குற்றவாளிக் கூண்டில் இப்படிப்பட்ட அதிகாரிகள் ஏற்றப்படுவார்கள். அவர்களுடைய அத்துமீறிய நடவடிக்கைகளுக்காக இது நிச்சயமாக நடைபெற்றே தீரும் என்பதை இந்த நம்பிக்கை யில்லாத தீர்மானத்தின் மூலம் எச்சரிக்க கடமைப்பட்டி ருக்கிறேன். என்ன நடக்கிறது என்றால், நேர்மையாக நடக்கின்ற அதிகாரிகள் தூக்கி எறியப்படு கின்றார்கள். உமாநாத் அவர்கள்கூட அன்றைக்கு இங்கே குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய ஆளுங்கட்சி குண்டர்கள் சில பேரைத் திருச்சியிலே இருந்த டி.எஸ்.பி. ஒருவர் கைது செய்தார். அந்தக் காரணத்திற்காக அவர் திருச்சியிலிருந்து நான்குநேரிக்குச் சேருவதற்குள்ளாக அருகாமையிலுள்ள ராதாபுரத்தில் உளிவீச்சு சம்பவம் நடை பெறுகிறது. எனவே, இவர் நான்குநேரிக்குச் சென்று சார்ஜ் எடுத்துக் கொள்வதற்குள் ‘‘நீ அங்கே போகாதே, வேறு ஊருக்குப் போ’’ என்று அவரை அங்கிருந்து மாற்றி விட்டார்கள். இந்த அளவுக்கு நேர்மையாக நடந்து கொள்கின்ற அதிகாரிக்குத் தண்டனை வருகிறது.

இப்படி அதிகாரிகளைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டிப் படைக்கும் தன்மையும் இன்றைக்குத் தொடர்ந்து கொண்டிருக் கிறது. எனவேதான் அதிகாரிகளுக்குச் சொல்கிறேன். எந்த அரசும் நிலையானது அல்ல. அதிகாரிகள் நிலையானவர்கள். அதே போல் விசாரணைக் கமிஷன்களும் தொடர்கதையாக ஆகிக்கொண்டிருக்கின்றன.

ஆக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே என்னுடைய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்கூறியிருக்கின்றேன். இவைகளுக் கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த அமைச்சரவையில் எங்களுக்கு நம்பிக்கையில்லையென்றாலும், நான் கூறியவற்றிற்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அமைகின்றேன்.

கண்டனத் தீர்மானம்

உரை : 74 **நாள் : 30.10.1979**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே! அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானம் இங்கே மொழியப்பட்டு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். 26ஆம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்களும், அவை முன்னவர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடிக் கலந்து பேசி 27,29,30 ஆகிய இந்த மூன்று நாட்களுக்குள் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை முடித்துவிட்டு அதற்குரிய பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அதன்பிறகு கண்டனத் தீர்மானம் பற்றிய முடிவு, வோட்டெடுப்புகள் நடைபெறும் என்ற அளவில்தான் அன்று நாம் பேசி முடித்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எங்களுக்கிருக்கிற சங்கடமெல்லாம் எங்களுக்கு மாத்திரமல்ல. உங்களுக்கும் கூடத்தான், அவை முன்னவர் அவர்களுக்கும்கூட இருப்பதாக நான் உணருகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிற்குப் பொதுவாக, கடந்த காலங்களில் திரு.பக்தவத்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தபோதும், அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டங்களுக்குச் செல்வது என்பதை, ஒரு மரபாக அல்லது முறையாக வைத்திருந்தோம். ஏனென்றால், அது அலுவல் ஆய்வுக்குழுவிற்கு வருகிற கட்சிகளையெல்லாம் மதிக்க வேண்டும் என்பதற்காகக்கூட அல்ல, அவரவர்கள் நிகழ்ச்சி நிரல்கள் எப்படி எப்படி அமைந்திருக்கின்றன. எனவே எந்தெந்த தீர்மானங்கள் அல்லது எந்தெந்த மானியங்கள் அல்லது

எந்தெந்தப் பொருள்கள் பற்றி விவாதத்திற்கு என்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். அப்போது முதல் அமைச்சர் அவர்கள் 'அவைல பிளாக' (Available) இருந்து பதில் சொல்லத் தேவையான நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்கேற்ப அவரவர்கள் நிகழ்ச்சிக் குறிப்புகளை அறிந்து அலுவல்களை நாம் முறைப் படுத்திக்கொள்வது வழக்கம். அதற்காகத்தான் முதல் அமைச்சர் அவர்களும் அந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவது வழக்கம்.

ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக எதிர்க் கட்சிகளுக்குள்ள துர்ப்பாக்கியம் முதல் அமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்திற்கு வருவதேயில்லை. அவர் வராத காரணத்தால் தாங்கள் அல்லது அவை முன்னவரால் எங்கள் முன்னால் எடுக்கிற முடிவுகளை நாங்கள் மதிக்க மறுப்பவர்கள் என்று பொருள் அல்ல. ஆனால் எடுக்கிற முடிவுகள் இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லை. இந்த இரண்டரை ஆண்டுக்காலத்தில் நிகழ்ச்சி நிரல்கள் ஏதாவது ஒழுங்காகக் குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை என்பதைத் தாங்களும் அறிவீர்கள், அவை முன்னவர் அவர்களும் அறிவார்கள். கட்சித் தலைவர்களும் அறிவார்கள். 30ஆம் தேதி அன்று முடித்துவிடலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டதற்குக் காரணமே, நான் என்னுடைய நாட்குறிப்பைப் பார்த்து எனக்கிருக்கிற அலுவல்களை எடுத்துக்கூறினேன். பொதுக்கூட்டம் என்றால், வேண்டுமானால் அதை ரத்து செய்து விடலாம். ஆனால் ஒரு திருமண நிகழ்ச்சிக்கு, திருவண்ணா மலைக்கு 2ஆம் தேதி எனது உறவினர் வீட்டுத் திருமணத் திற்குச் செல்லவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டேன். 30ஆம் தேதி அன்றே முடித்துவிடலாம் என்று சொன்ன உறுதியின் பேரில் இன்றைக்கு இந்த விவாதம் முடியும் என்று தயாராகிக்கொண்ட நிலையில் இருந்தேன். ஆனால், நேற்றைய தினம் தங்களுடைய ஆணைப்படி அல்லது அவை முன்னவருடைய ஆணை என்று கூற மாட்டேன். வேண்டு கோள் என்று கூற மாட்டேன். அறிவித்திருக்கிறபடி இப்போது 3ஆம் தேதிக்கு இது மாற்றப்பட்டிருக்கிறது. இது வாடிக்கை தான். வழக்கமாக நடைபெறுவதுதான் 30ஆம்தேதி அன்று முடித்திருக்கவேண்டிய விவாதம் 3ஆம் தேதிக்கு மாற்றப்

பட்டிருக்கிறது. இதை முதல் அமைச்சரே அவர்கள் நேரிலே ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வந்து அன்றே தெரிவித்திருப் பார்களேயானால், அல்லது தான் வரஇயலாது என்று தெரிவித் திருப்பார்களேயானால் அல்லது தாங்களோ அல்லது அவை முன்னவரோ முதல் அமைச்சருடன் தொடர்புகொண்டு 30ஆம் தேதி அன்று விவாதம் முடிவடையாது என்று தெரிவித் திருந்தால், இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்காது. எப்படியோ ஏற்பட்டு விட்டது. எனவே நடந்ததைப்பற்றி இன்று மேலும் ஆய்ந்துகொண்டு இருக்க விரும்பவில்லை. இனிமேல் இவ்விதம் நடக்கக்கூடாது. என்பதற்காகத்தான் இதைப்பற்றி நான் தங்கள் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். 3ஆம் தேதி வரை சில முக்கியமான பிரச்சினைகள், அதற்கு இங்கே கிடைக்கவேண்டிய விளக்கங்கள், தெளிவுரைகள் கிடைக்காமல் இந்த மன்ற உறுப்பினர்கள் மிகவும் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக ஆசிரியர்களுடைய போராட்டம், போலீஸ்காரர்களுடைய போராட்டம், பள்ளிப் பாளையத்தில் தொழிலாளர்களுடைய போராட்டம், இவை களைப்பற்றியெல்லாம் எந்தவிதமான தகவலும் கிடைப்ப தில்லை. தகவல் கேட்கும்போது, கண்டனத் தீர்மானத்திற்கான பதில் சொல்லும்போது பதில் தரப்படும் என்று சொல்லப் படுகிறது. 'பம்பாய் மெயில்' நாடகத்தில் கதாநாயகன் எல்லா வற்றுக்கும் காலம் வரும் பதில் சொல்லுவேன், காலம் வரும் பதில் சொல்லுவேன் என்று ஒவ்வொரு காட்சியிலும் சொல்லிக் கொண்டேயிருப்பான். அதுபோல் மூன்றாம் தேதி முதலமைச்சர் பதில் சொல்லுவார், பதில் சொல்லுவார் என்று நமது பேரவை முன்னவர் அவர்கள், புன்னகைபுரிந்தவாறு பதில்சொல்லிக் கொண்டிருக்கிறார். 3ஆம் தேதி வரை பொறுத்திருக்க முடியாத வாறு இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போலீஸ் போராட்டத்தின் காரணமாகப் பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த முறைகள் வன்முறைகள், நடைபெற்றுக்கொண்டிருந்தால் அவை எங்குக் கொண்டு போய்விடும் என்பதை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு அமைதி

மேலும் கெட்டுவிடாமல் இருக்கவும், தமிழ்நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலை இந்த அரசுக்குத் தேவை என் பதை உணர்ந்து சில விஷயங்களுக்குத் தெளிவான பதிலை அளித்தாக வேண்டும். நயினார்தாஸ் காவல் துறை சங்கத் தலைவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிறையிலிருந்து அறிக்கை வருகிறது. எந்த நிலையில் இந்த அறிக்கை வருகிறது. அவரால் இந்த அறிக்கை கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அவரை வெளியில் விட்டால்தான் அறிக்கை விடவில்லை என்று மறுத்து விடுவார் என்று அரசின் சார்பில் வாதாடுகிறவர், இவரை வெளியே விட்டால்தான் இந்த அறிக்கையைக் கொடுக்கவில்லை என்று சொல்லி விடுவார் என்ற கருத்தைச் சொல்லி, அறிக்கை கொடுத்தது யார் என்கின்ற பேருண்மையை அவரை அறியாமலேயே குறிப்பிட் டிருக்கிறார். நயினார்தாஸ் இந்த நிலைமையை விளக்க வேண்டும். விளக்கமுடியாத அளவில் இன்றைக்கு இருக்கிறார். ஏனென்றால் அவரைப் பார்ப்பதற்கு இன்டர்வியூ மறுக்கப் படுகிறது. உற்றார் உறவினர்களுக்குக்கூட இன்டர்வியூ மறுக்கப்பட்டிருப்பதாக செய்தி வருகிறது. செய்தியாளர்கள் பார்ப்பதற்கும் இன்டர்வியூ மறுக்கப்பட்டது. இப்படி பல்வேறு பயங்கரமான சூழ்நிலை, நிலவிக்கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் இறுதியில் தருவார் என்கின்ற நிலைமை இல்லாமல், அவை முன்னவர் அவர்களே இதற்கான சில விளக்கங்களை தருவது, எங்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நல்லதாக இருக்கும் என்பதைச் சொல்லி, இதற்கான விளக்கங்களைச் சொல்லுவார்கள் என்று அவரிட மிருந்து எதிர்பார்க்கிறேன்.

கண்டனத் தீர்மானம்

உரை : 75 **நாள் : 03.11.1979**

கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பட்டு, இந்த மன்றத்திலே உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்களாலும் ஆதரிக்கப்பட்டு, இந்த மன்றத்திலுள்ள பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதுபற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறி, இன்று விவாதத்தின் இறுதிநாளாக அமைந்துள்ள கண்டனத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் இந்தக் கண்டனத் தீர்மானத்தில் பல குற்றச்சாட்டு களை இந்த அரசின்மீது நல்ல விளக்கத்தோடும், ஆதாரங் களோடும் எடுத்துவைப்பது எதிர்க்கட்சிக்குள்ள உரிமை, கடமை என்கிற அளவில் முன் வைக்கிறேன்.

1977-78ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் (சுமார் அல்லது சரியாகச் சொல்லப்போனால் ரூ.199 கோடியைச் சட்டச்சபையின் அங்கீகாரம் பெற்று இருந்தும்கூட செலவு செய்யப்படவில்லை என்பதை Report of the Controller of expenditure, Controller and Auditor General of India குறிப்பிட்டு இருப்பதை நான் இங்கே கோடிட்டு காட்டாமல் இருக்க இயலாது.

அதிலே எவ்வளவு முக்கியமான இனங்கள் செலவு செய்யப்படாமல், இன்றியமையாத இனங்கள் செலவு செய்யப்படாமல், ஒதுக்கப்பட்ட பணம் அப்படியே இருக்கிறது

1977-78ஆம் ஆண்டில் என்பதற்காக ஒரு சில எடுத்துக் காட்டுகளை மாத்திரம் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

சேரிப் பகுதிகளை, அரிசன காலனிகளைச் சீரமைப்பதற்காகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை பல கோடி ரூபாய். அதிலே ஒரு சல்லிக்காசுகூட செலவு செய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

கிருஷ்ணா தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தை ஆய்வு செய்ய ஒதுக்கப்பட்ட தொகை 50 இலட்சம் ரூபாயில் எதுவுமே செலவுசெய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

நீர்ப்பாசன வளர்ச்சிக்காக மூலதனச் செலவாக இந்த அவை அங்கீகரித்த தொகையான சுமார் 4 கோடியே 54 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்படாத தொகை சுமார் 3 கோடியே 92 இலட்சம் ரூபாயாகும்.

சென்னையிலே முக்கியமான பிரச்சனையாக இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சனை; அதற்காக இந்த மாமன்றம் ஒதுக்கிய தொகை 1 கோடியே 84 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு செய்யப்படாத தொகை அந்த 1 கோடியே 84 இலட்சத்தில், 1 கோடியே 30 இலட்சம். அதாவது 71 சதவீதம் செலவு செய்யப் படவில்லை என்பது கண்டனத்திற்குரியது.

பின்தங்கிய சமுதாய மக்களுக்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 6 கோடியே 42 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்பட்டது 5 கோடியே 69 இலட்சம். பின்தங்கிய மக்களுக்கு இன்னும் அதிகமாகச் செலவு செய்யப்பட வேண்டும் என்கிற தேவை இருக்கும்போது, அதிலே 72 இலட்ச ரூபாயைச் செலவிடாமல் ஒதுக்கியது வருந்தத்தக்க ஒன்றாகும்.

பொதுச் சுகாதாரத்தில் 'சானிட்டரி' 'வாட்டர் சப்ளை' போன்ற மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக மூலதன ஒதுக்கீடாக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 73 இலட்சம். அதிலே செலவு செய்யப்பட்டது 6 இலட்சம்தான். ஆக, 90 சதவீதம் செலவு செய்யப்படவில்லை.

விவசாயத்திற்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த மூலதனச் செலவு 12 கோடியே 34 இலட்சம் ரூபாய். செலவு செய்த

தொகை 1 கோடியே 92 இலட்சம் ரூபாய்தான். செலவு செய்யப்படாத தொகை 10 கோடியே 42 இலட்சம். அதாவது 84 சதவீதத்தைச் செலவு செய்யவில்லை.

கிராமப்புற சாலைகளும் பாலங்களும் அமைக்கப்பட்டு வருவதாக உறுப்பினர்கள் எல்லாம், ஆளும் கட்சியைச் சேர்ந்த வர்கள், ஆளும் கட்சிக்கு ஆதரவானவர்கள் எல்லாம் பெருமை யோடு சொன்னார்கள். உண்மை என்னவென்று பார்த்தால் அதற்காக என்று இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 8 கோடி ரூபாய். அதிலே இன்னும் செலவு செய்யப்படாமல் இருப்பது, சுமார் 3 கோடி ரூபாய் என்பதை வருத்தத்தோடு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாநிலமும் இந்திய அரசிடத்திலே திட்டத்திற் காக அதிகத்தொகை ஒதுக்கவேண்டுமென்று கூக்குரல் போட்டு, போராடி, பிச்சை எடுக்கின்ற நிலைமைக்குக்கூட ஆளாகி, அவைகளைத் தங்களுடைய மாநிலத் திட்டங் களுக்காகச் செலவிட்டு வருகிற இந்த நேரத்தில் இங்கே மாமன்றத் தினுடைய அனுமதி பெற்று, ஒதுக்கப்பட்ட தொகையைச் செலவழிக்கப்படாமல் வைத்திருப்பது மிக மிக வேடிக்கை யானது, வேதனை அளிக்கக்கூடியது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இப்படிப்பட்டத் திட்டங்கள் அல்லது ஏற் கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களுடைய பராமரிப்புகள்; இவைகள் எதுவுமே நாட்டில் நடைபெறாமல், அதே நேரத்திலே இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற ஒரே ஒரு ஜனநாயக அமைப்பு இந்தச் சட்டமன்றம்தான் என்கிற நிலை ஏற்பட்டு, மற்ற மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற எல்லா மன்றங்களும் நிறுவனங்களும் கலைக்கப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். அவைகளுக்கு எல்லாம் இப்போது அமைப்பாளர்களை நியமிப்பதைப்போல நியமனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஏதோ பெரிய பெரிய சட்டங்கள் எல்லாம், புரட்சிகரமான சட்டங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையில் வருவதாக எடுத்துச் சொல்லப்பட்டு, ஆனால் மாமன்றம் கூடி இருக்கிற நேரத்தி லேயே பத்திரிகையிலே பார்த்து நாம் சில செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

இன்னின்னார், இன்னின்ன வங்கிகளுக்கு இன்னின்ன நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்ன எம்.எல்.ஏ. அல்லது இன்ன அமைப்பாளர் என்ற அளவுக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசும்போது ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். ஊராட்சி மன்றங்கள் ஒன்றல்ல; இரண்டல்ல. ஏதோ மதுரை மாநகராட்சி மன்றத்தினுடைய ஆயுளை நீடிக்கா மல் இருந்துவிடவில்லையா? சென்னை மாநகராட்சி மன்றத்தை கலைத்து விடவில்லையா என்று ஒன்றிரண்டு காரணங்களைக் காட்டிப் பேசிய, ஆளும் கட்சியினுடைய அருமை நண்பர்களுக்கு எடுத்துக்காட்ட நான் கடமைப் பட்டிருப்பதெல்லாம் ஒன்றல்ல, இரண்டல்ல; 12,000 ஊராட்சி மன்றங்கள் ஒரே உத்தரவின் மூலம் கலைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உத்தரவில் ஏற்பட்டிருக்கிற சில முரண்பாடுகளை நான் இங்கே எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குச் செக் புத்தகங்களில் கையெழுத்துப் போடுகிற உரிமை உண்டு. முதலமைச்சர் அவர் களுக்குக்கூட கிடையாது, செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை. வேறு எந்த அமைப்புகளிலேகூட அங்குள்ள தலைவர்களுக்குச் செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை கிடையாது. ஆனால் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உண்டு. ஊராட்சி ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு, ஒரு சிற்றூரில் 50 ரூபாய்க்கு ஏதாவது செலவிட வேண்டும் என்றால், அந்தச் செக்கை வழங்கக்கூடிய உரிமை, செக்கில் கையெழுத்து இடக்கூடிய உரிமை, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசருக்கு வருகிறது. ஒரு 50 ரூபாய்க்கு பல்ப் வாங்க வேண்டும் அல்லது அந்த ஊருக்கு வேறு ஏதாவது பொருள் வாங்க வேண்டும் என்றால், அந்த 50 ரூபாய்க்கான காசோலையில் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்' கையெழுத்து இட வேண்டும். அதைத் தணிக்கை செய்வது யார் என்று பார்த்தால், நிர்வாகத்திலே எவ்வளவு முரண்பாடு என்று தெரிகிறது. அதை எக்ஸ்டென்ஷன் ஆபிசர் ஆப் பஞ்சாயத்து, இ.ஓ.பி. என்று சொல்லப்படுபவர் தணிக்கை செய்கிறார். அவர் பிளாக்

டெவலப்மெண்ட் ஆபிசருக்குக் கீழே உள்ள ஒரு அதிகாரி. பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் கொடுத்த ஒரு காசோலையை, அதை அந்த வகைக்குச் செலவிடலாமா என்று தணிக்கை செய்பவர், அவர் கீழே உள்ள அதிகாரி ஒருவர். அந்த அளவுக்கு நிர்வாகம் சீர் குலைந்து இருக்கிறது. அதற்கு இது ஒரு சான்று ஆகும். ஜனநாயக அமைப்புகள் கலைக்கப் பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் பெரிய திட்டங்களை நிறை வேற்றாவிட்டாலும், தேர்தல் நேரத்திலே ஆங்காங்குப் புயல் வெள்ளம் துயர் துடைப்பு விழாக்களை நடத்திப் புடவை, வேட்டிகளை வழங்குகிற விழாக்களை நடத்திவிட்டால் மக்களின் மதிப்பைக் கவர்ந்து விடலாம் என்று இருக்கக்கூடிய முயற்சியில் இறங்குகிறார்களே தவிர, எதுவும் உருப்படியாக செய்வதில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி இப்படி தேர்தல் ஸ்டண்டுகள் நடத்துகிறார். சமீபத்தில் மதுரை மாநகரில் நமது முதலமைச்சர் அவர்கள், திருப்பூர் குமரன் அவர்களுடைய துணைவியார் இராமாயி அவர்கள் அங்கே நடைபெறுகிற விழாவிற்கு வருகை தந்திருந்தபோதோ, அல்லது வரவழைக்கப்பட்டாரோ, அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அவர்களை மேடைக்கு அழைத்து அந்த விழாவிலேயே அவர்களுக்கு அரசின் சார்பில் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்; அது தவிர மாதந்தோறும் மானியமும் வழங்கப்படும் என்று திடீர் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்.

உண்மை நிலை என்னவென்றால், திருப்பூரிலிருந்து இதே இராமாயி அவர்களின் சார்பாக திரு. பி. இராமசாமி என்பவர் 3-7-78இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் 'காமராஜ் அவர்களின் சகோதரி அவர்களுக்குப் பென்ஷன் கொடுப்பதுபோல, திருப்பூர் தியாகி கொடி காத்த குமரன் அவர்களின் துணை வியார் திருமதி கே. இராமாயி அவர்களுக்கும் மாதம் 500 ரூபாய் தந்து உதவ வேண்டும் என்று முதலமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றித் தங்கள் அறி விப்பை எங்களுக்குத் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்'' இப்படி 3-7-78இல் ஒரு கடிதம் முதலமைச் சருக்கு வருகிறது. முதலமைச்சரின் பார்வைக்குச் சென்றுதான்

பொதுத் துறைக்கு, திரு. யு.எஸ். நடராஜன், ஐ.ஏ.எஸ். அரசுத் துணைச்செயலாளர் அவர்களுக்குச் செல்கிறது. அங்கிருந்து ஒரு கடிதம் அந்த இராமசாமி அவர்களுக்குச் செல்கிறது. என்னவென்று, ''திருப்பூர் குமரன் அவர்களுடைய மனைவியார் ஏற்கெனவே மத்திய மாநில அரசுகளின் மானியங்களைப் பெற்று வருகிறார். அதை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்'' இப்படி எழுதியது 1978ஆம் ஆண்டில் மத்திய-மாநில மானியத்தை ஏற்கெனவே பெற்று வருகிறார். அதை மேலும் உயர்த்தி கொடுப்பதற்கு இல்லை என்று 16-10-78இலே கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டு, ஒரு ஆண்டுக்குப் பிறகு, அதே இராமாயிக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியம் தருகிறோம் என்று அறிவிக்கிறார். அந்த மானியம் இன்னும் வழங்கப்படவில்லை. அது வேறு விஷயம், ஆனால் இது எப்படிப்பட்ட தேர்தல் ஸ்டண்ட் என்பது புரியும். சென்ற ஆண்டு இறுதியில் கண்டிப்பாக மறுத்துவிட்டு, இந்த ஆண்டு திடீர் என்று 10,000 ரூபாய் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்.

நான் சில குற்றச்சாட்டுக்களை இங்கே வைப்பதாகச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்பதை, அந்தக் கருத்துக்களை எடுத்துச்சொல்வதற்கு முற்படுகிறேன்.

பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் மருத்துவக் கல்லூரித் தேர்வில் எந்தவிதமான தவறுகளும் இந்த ஆட்சியில் நடைபெறுவதேயில்லை என்று சத்தியம் செய்வதைப்போல் பேசினார்கள். ஆனால் மிகமிகப் பெரிய தவறுகள் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயமாகவும், அந்த அட்மிஷன் முறையிலே பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவது விஷயமாகவும் இன்றைக்கு நாட்டு மக்களுக்குத் தெரிய வந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் ஒரு ஜீ.ஓ. போட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வுக்கான குழுவை நியமிக்கிறது. இந்த ஜீ.ஓ. வினுடைய 8ஆவது பிரிவு மிகத்தெளிவாகச் சொல்கிறது.

The Secretary, Co-ordination Committee should send to government addressed to the Secretary to Government, Tamil

Nadu Health and Family Planning, in name cover, duly sealed, the list of selected for approval of Government before publication.

வெளியிடுவதற்கு முன்பு அந்தப் பட்டியலை கவர்ன்மென்ட் அப்ரூவலுக்கு, அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டுமென்று தெளிவாக அந்த ஜீ.ஓ.வின் 8ஆவது பிரிவு எடுத்துக்காட்டுகிறது. ஆனால் என்ன நடைபெற்றிருக்கிறது என்றால், இப்போது அவற்றை எந்த ஜீ.ஓ.வும் வெளியிடப்படாமல் 'கோ ஆர்டினேஷன் கமிட்டிச்', செயலாளரே தானாகவே அந்தப் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார். அரசாங்கத்தின் விதிப்படி செயலாளர் அந்தப் பட்டியலைப் பெற்று, அதிலே ஒரு 'நோட்' எழுதி அனுப்புவார்கள். அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கையெழுத்து இட்டு, முதல் அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். ஆனால் இந்த ஆண்டு அப்படி நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. செயலாளருடைய குறிப்பும் கிடையாது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வெறும் கையெழுத்து மாத்திரம் அதிலே போட்டிருக்கிறார்கள். அதற்குமேல், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் மார்க் வாங்கியவர்கள் பட்டியல் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். அதில் முதல் அமைச்சர் அவர்கள் டிக் பண்ணியிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் செப்டம்பர் 12ஆம் தேதி வெளியாகிறது. மொத்தம் 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று அரசாங்கத்தினுடைய ஜீ.ஓ. கூறுகிறது. அப்படித்தான் ப்ராஸ்பெக்டஸிலும் இருக்கிறது. 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று. ஆனால், திடீரென்று அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குரிய அனுமதிகளைப் பெறவேண்டிய இடங்களில் உரிய நேரத்தில் பெற்றார்களா இல்லையா என்பது வேறு விவகாரம். ஆனால் நான் இங்கே ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பட்டியல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் காட்டப்பட்டதாகவும், அவர் செப்டம்பர் 9ஆம் தேதி அன்று அதிலே கையெழுத்து இட்டதாகவும் அதுபற்றி ஒருபக்கம் விசாரணை நடைபெறுகிற இடத்தில் எடுத்துக்காட்டப்பட்டு விசாரித்தவர்கள் மேலும் சில விவரங்களைக் கேட்டதற்குப் பிறகு மறுநாள் அபிடவிட் தாக்கல் செய்கிற நேரத்தில் 9ஆம் தேதிக்குப் பதிலாக 8ஆம் தேதி

என்று அதிலே குறிப்பிடப்பட்டு முதலில் கொடுக்கப்பட்ட அபிடவிட்டை விசாரித்தவர்கள் பார்க்கிற நேரத்தில் அதிலே 8ஆம் தேதி என்று போடப்பட்டிருந்த அந்தத் தேதியை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரோ அல்லது செயலாளர்களோ அதை மாற்றி, அந்தத் தேதியை 9ஆம் தேதி என்று திருத்தியிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய, ஆங்கிலத்தில் சொல்வதானால் 'ப்ராட்' என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். செப்டம்பர் 12ஆம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்கிற பட்டியல் வெளியாகி விடுகிறது. அதற்குப் பிறகு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போடுகிறார்கள். தமிழில் அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எப்போது தெரியுமா? செப்டம்பர் 12-ம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு 6-10-1979, அடுத்தமாதம் ஒரு உத்தரவு பிறக்கிறது. என்ன அந்த உத்தரவு. அந்த உத்தரவின்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு 6 இடங்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வரும் தமிழ் மாணவர்களுக்கும், மாணவியருக்கும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 6 இடங்கள், விளையாட்டுச் சாதனைகளை ஏற்படுத்திய மாணவ மாணவியருக்கு மூன்று இடங்கள், ஆக, ஆறு ப்ளஸ் ஆறு ப்ளஸ் மூன்று 15 இடங்கள்.

1015 இடங்கள் என்று அறிவிக்கப்பட்டு, அதில் தேர்வு எழுதி அல்லது இன்டர்வியுக்கு மாணவர்கள் வந்து அந்த பட்டியல் செலக்ஷன் கமிட்டியால் நிறைவுசெய்யப்பட்டு அந்தப் பட்டியல் செப்டம்பர் மாதம் வெளியிட்ட பிறகு 12-8-79இல் வெளியிட்ட பிறகு 6-10-79 அன்று ஒரு உத்தரவு வருகிறது. அந்த 6-10-79 உத்தரவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் குறிப்பு எழுதுகிறார். முதலமைச்சரும் குறிப்பு எழுதுகிறார். அந்த உத்தரவு வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு அருமையான கருத்தை அதாவது விளையாட்டுப் போட்டிகளில் நல்ல திறமையாக இருப்பவர்களுக்கு 3 இடங்கள் ஒதுக்க வேண்டும். அமெரிக்க ஐக்கியநாடுகளில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்க வேண்டும், கலப்புத் திருமணம் செய்து

கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு 6 இடங்கள் ஒதுக்க வேண்டும். இப்படி 15 இடங்கள் ஒதுக்க வேண்டும் என்கின்ற உத்தரவு அடுத்தமாதம் வெளிவருகிறது. இது சட்டத்திற்கு உட்பட்டதா, நியாயம் நெறிமுறைகளுக்கு ஏற்புடையதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த 15 பேர்களுக்கு இடம் உண்டு என்பதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு இடம் உண்டு என்பதும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் உண்டு என்பதும், விளையாட்டுகளில் சாதனை புரிந்தவர்களுக்கு இடம் உண்டு என்பதும் 1015 பேர்களுக்கு இடம் என்று அப்போது அறிவிக்கப்பட்ட கால கட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால், விளம்பரப் படுத்தப்பட்டிருக்குமேயானால் இப்படிப்பட்டவர் எல்லாம் அதில் போட்டியிடுவதற்கு அவர்களெல்லாம் சேர்ந்திருக்கக் கூடும்.

எனவே அது தடுக்கப்பட்டு 1,015 இடங்களும் பூர்த்தி யான பிறகு முதலமைச்சர் இப்படிப்பட்ட உத்தரவை வெளியிடுகிறார். இப்படி சரித்திர பிரசித்தி வாய்ந்த மிக முக்கியமான கொள்கைக் குறிப்பு அடங்கிய இந்த பைலை ஜெயராமன் என்கின்ற பிரிவு அலுவலர்; அவர்தான் இந்த பைலை அனுப்புகிறார். பிறகு சார்புச் செயலாளர் தண்டாயுத பாணி 13-9-1979இல் கையெழுத்திடுகிறார். பிறகு ராஜண்ணன், மக்கள் நல்வாழ்வு குடும்பத்துறை துணைச் செயலாளர் கையெழுத்திடுகிறார். பிறகு முராரி செயலாளர் அவர் கையெழுத்திடுகிறார். 13-9-79இல் கையெழுத்திடுகிறார். பிறகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 27-9-79இல் கையெழுத்திடுகிறார். பிறகு எம்.ஜி.ஆர். 3-10-79 இல் கையெழுத்திடுகிறார். இப்படி பைலைப் பார்த்தால், 13-9-79இல் இது ஆரம்பித்ததாகத் தெரிகிறது. என்னிடத்தில் இருப்பது இந்தப் பைலுடைய 'போட்டோ ஸ்டட்' காப்பி, முதலமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மற்ற இலாகாவில் உள்ளவர்களும் கையெழுத்திட்டுள்ள பைலின் போட்டோ ஸ்டட் காப்பி என்னிடத்தில் இருக்கிறது. ஜெயராமன் என்பவர்

13-10-79இல் கையெழுத்து போட்டதை 13-9-79 என்று திருத்தி, 13-10-79 என்பது 13-9-79 ஆக திருத்தப்பட்ட பிறகு, 13-9-79, 27-9-79, 29-9-79, 3-10-79 என்றெல்லாம் அந்தப் பைலில் வந்து, அதில் கீழே குத்தப்பட வேண்டிய முதலமைச்சருடைய அலுவலகத்தின் முத்திரை குத்தப்பட்டு, இப்படிப்பட்ட ஒரு பைல் வருகிறது. நான் கேட்பதெல்லாம், இதிலே 13-10-79 என்பது 13-9-79 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன? அதைப்போலவே பட்டியலில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் 9ஆம் தேதி, செப்டம்பர் 9ஆம் தேதி கையெழுத்திட்டதாகச் சொல்லப்பட்டு, பின்னால் விசாரணை மண்படத்தில் 8ஆம் தேதி என்று சொல்லிவிட்டு, பின்னால் 9 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன?

இவைகளுக்கு மேலாக 1,015 இடம் என்று மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அட்மிஷன் என்று அறிவிக்கப்பட்ட காலகட்டத்தில் ஏன் இப்படிப்பட்ட, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குடும்பங்களிலுள்ள பிள்ளைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுடைய பிள்ளைகள், விளையாட்டுகளில் சாதனைகள் ஏற்படுத்தியவர்கள் இவர்களெல்லாம் சேர்க்கப்படுவர் என்று அறிவிக்கப்படவில்லை? தமிழர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாத்திரம்தான் இருக்கிறார்களா? இங்கிலாந்தில் இல்லையா? வேறு நாடுகளில் கிடையாதா? ஆகவே இது அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுக்கு அல்ல, இவைகள் எல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டு கோட்டாவா? அல்ல, அன்பர் மணியன் கோட்டாதான் என்று நாட்டில் எல்லாரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (தி.மு.க. உறுப்பினர்கள் தரப்பி லிருந்து ஆரவாரம்...)

அடுத்தபடியாக, 8-6-79 அன்று தமிழக அரசு பொதுத் துறை ஒரு ரகசிய சுற்றறிக்கையை அரசாங்கத்தின் அனைத்து அலுவலகத்திற்கும் அனுப்பியிருக்கிறது. பொதுத்துறை என்பது அரசாங்கத்தில் மிகவும் ரகசியமான துறை. அந்தத் துறை இருக்கின்ற அறைக்குப் பக்கத்தில் யாரையும் அனுமதிக்க மாட்டார்கள்.

அந்தத்துறை அனுப்பியுள்ள ரகசிய அறிக்கை, அதில் தலைமைச்செயலாளருக்காக மாதவன் நம்பியார் என்ற அதிகாரி கையெழுத்திட்டிருக்கிறார். அந்த அறிக்கையினுடைய நோக்கம் என்ன? தாத்பரியம் என்ன என்பதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்...

It has since been brought to the notice of Government that a middle-aged person with a beard and calling himself 'Palani Baba' is frequenting government offices and is seeking to achieve his ends by posing himself as a close friend of the authorities at higher levels. He is said to talk English and secretly tape recordings conversation with officials.

All the officers now in the Address Entry are requested to forbid the entry of the said 'Palani Baba' into Government offices. The officers are also cautioned against having any contact with the individual. All the officers are requested to maintain a close and sharp vigil over his activities and send a report to Government if he comes to notice. The Heads of Department are requested to bring these instruction to the notice of subordinate officers also for information and guidance.....

என்று கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார். தமிழிலே சொல்ல வேண்டுமானால், பழனி பாபா என்று தன்னை அழைத்துக் கொள்ளக்கூடிய தாடி வைத்த, நடுத்தர வயதுடைய ஒருவர், தான் மேலதிகாரிகளின் நண்பர் என்று கூறிக்கொண்டு, அரசு அலுவலங்களிலே வந்து, தன்னுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வதாக அரசுக்குத் தெரிய வருகிறது. அதிகாரி களிடத்தில் ஆங்கிலத்திலே பேசி, இரகசியமாகப் பேச்சு வார்த்தைகளை டேப் செய்து, பதிவு செய்வதாகத் தெரிகிறது. அரசு அலுவலகங்களிலே பழனி பாபா என்று சொல்லப் படுபவர் உள்ளே வராமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்தத் தனிப்பட்ட நபருடன் அதிகாரிகள் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கும் இதனை எச்சரிக்கை யாக வைத்து, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொள்ளப்படுகிறது. துறைத் தலைர்கள் தங்கள் கீழ் பணியாற்றும் சார்புப்

பணியாளர்களுக்கும், இதைப்பற்றித் தகுந்த அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று இந்த சுற்றறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சுற்றறிக்கையிலே சொல்லப்படுகின்ற, பெரிய அதிகாரிகளுடைய நண்பர் என்று கூறிக்கொள்கின்ற இந்த நபர் யார்? அவரைப் பற்றி இதே மாமன்றத்தில், கடந்த ஆண்டு என்று கருதுகின்றேன், பாபா என்று பெயரைக் குறிப்பிட்டு, அவர் மூலம் 40 இலட்சம் ரூபாய் கைமாறிய கதையை நான் எடுத்துச்சொன்னேன். அப்போது அதற்கு எந்தவிதமான பதிலையும் முதலமைச்சர் அவர்கள் இங்கே அளிக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படித் தனியாகச் சுற்றறிக்கை அனுப்பப்பட்ட பழனி பாபாவுடன் தொடர்புடைய அதிகாரிகள் யார் என்று இந்த அரசுக்குத் தெரியாதா? இதோ இந்தப் புகைப்படத்தில் நம்முடைய ஐ.ஜி. பரமகுரு. அவர் துணைவியார். அவருக்குப் பக்கத்திலே பழனி பாபா நிற்கிறார். எப்படி நிற்கிறார்? பரம குருவின் தோளில் கைபோட்டு நின்றுகொண்டிருக்கிறார். ஏதோ பெஸ்டிவலில் அல்லது ஏதோ வரவேற்பு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படமென யாரும் கருதக்கூடாது. வீட்டிலே எடுக்கப்பட்ட படம். அதுவும், ஐ.ஜி பரமகுரு தோளிலே கையைப் போட்டுக் கொண்டு, பழனி பாபா பரவசத்தோடு இருக்கும் படம் இது.

ஐ.ஜி மாத்திரமல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களைச் சந்திக்கின்ற போது, பழனி பாபாவுடன் இருப்பது யார் என்று பார்த்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்கள். பழனி பாபா அவர்களோடு அமைச்சர் நின்று கொண்டிருக்கிறார். இதுவும் எங்கேயோ விசேஷத்திலோ, வைபவத்திலோ எடுக்கப்பட்ட படம் அல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களோடுப் பழனிபாபா நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்திலே எடுக்கப்பட்ட படம்.

அது மாத்திரமல்ல. இன்னொரு படம். நம்முடைய முதலமைச்சர் அமர்ந்திருக்கிறார். முதலமைச்சருக்கு நேராக

பழனி பாபா எப்படி உட்கார்ந்திருக்கிறார். பார்க்க வேண்டும். பக்கத்திலே சரிசமானமாக உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. நம்முடைய முதலமைச்சர் மேலே பாய்ந்து விழுவது போல், அவருடைய உதடு வரையில் கையை நீட்டிப் பேசுகின்ற பாவனை இந்தப் படத்தில் அமைந்திருக்கின்ற காட்சி இந்தப் பழனி பாபா எந்த அளவிற்கு இந்த அரசாங்கத்திலே ஆதாயங்களைப் பெற்றிருக்கிறார் என்பதற்குப் பல ஆதாரங் களை என்னால் சொல்லமுடியும். வக் போர்டு சார்பாக அவர் ஒரு பெரிய பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். நம்முடைய அமைச்சர் பொன்னையன் அவர்களுக்கும், அவருக்கும் தொடர்பு உண்டு என்பதை இந்தக் கலர் படம் வண்ணப்படம் காட்டிக்கொண்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அக்கேஷன லாக நடைபெற்ற சம்பவம் அல்ல. இந்த அரசினுடைய அதிகாரிகளிடத்தில் இந்தப் பழனி பாபாவுக்கு எவ்வளவு தொடர்பு இருக்கின்றது என்பதை நான் நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நாங்களும், நீங்களும் சேர்ந்து தொழி லாளர்கள் வதைக்கப்படுகின்றார்கள், என்ற காரணத்திற்காக ஒரு பந்த் நடத்தினோம். அந்தப் பந்த் நடத்திய மறுநாள், பழனி பாபா நம்முடைய போக்குவரத்து அமைச்சர் பொன்னையன் அவர்களோடு பேசுகிறார். சர்க்காருடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகளிடத்திலே பேசும் போதே, டேப் செய்யக் கூடியவர் பழனி பாபா அவர்களிடத் திலே ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஹர்த்தால் நடைபெற்றது; வேலை நிறுத்தத் திற்கு கடை அடைப்புக்கு மறுநாள் பழனிபாபா அமைச்சர் பொன்னையனோடு பேசுகிறார். படிக்கிறேன். கேளுங்கள். தேவைப்பட்டால் சபாநாயகரிடம் அந்த டேப் ரெக்கார்டைப் போட்டுக் காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

'ஹலோ'

பொன்னையன்: எஸ்

பாபா சொல்கிறார்: Can I speak to the Transport Minister?

பொன்னையன்: பாபா, Good Morning. How are you?

பாபா: Fine, ரொம்ப நேரமாக ட்ரை பண்ணிக் கொண்டிருந்தேன். எங்கேஜ்டு ஆக இருந்தது.

பொன்னையன்: நேற்றெல்லாம் நம்ப கட்சித் தொண்டர்களை வீட்டுக்கு வரவழைத்து எல்லா 14 தொகுதி அமைப்பாளர்களையும் கஷ்டப்பட்டு இரண்டு நாளாக உழைத்தார்களே அவர்களுக்கு நன்றி சொல்ல ஒரு சின்ன பார்ட்டி கொடுத்து அனுப்ப மணி இரண்டே முக்கால் (என்ன பார்ட்டி தெரிகிறதா)

(பதினான்கு அமைப்பாளர்கள் கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் பார்ட்டி கொடுக்கப்படுகிறது. அமைச்சர் பொன்னையன் அவர்கள் வீட்டில்)

பாபா: அப்படியா?

பொன்னையன்: அப்பறம் படுத்தது மணி 3 ஆச்சு. 3 மணிக்குப் படுத்தால் ரொம்ப டயர்டு. டேக்கிங் ரெஸ்ட்.

பாபா: நான் தலைவரோடு மதுரையில் இருந்துவிட்டு வந்தேன்.

(தலைவர் என்றால் முதலமைச்சர்)

அப்புறம் முஸ்லீம் காலேஜ், லேடிஸ் காலேஸ்...

(பொன்னையன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வீரப் பிரதாபங்களைப் பேசுகிறார்)

பொன்னையன்: Party candidates on one side have volunteered tremendously through out the state, the police as a second cadre. They did very particularly...

நான் சொல்லிவிட்டேன், தலைவரிடம் சிறப்பாகக் காவல் துறையினர் செய்திருக்கிறார்கள். கட்சிக்காரர்களும் செய்திருக்கிறார்கள்.

(என்ன செய்திருக்கிறார்-கடை அடைப்பில் நம்மை அடித்தார்கள் அல்லவா? அது)

பாபா: ஒண்டர்ஃபுல்

பொன்னையன்: ரியலி...!

பாபா: மழை வந்ததுங்களா?

பொன்னையன்: இங்கு ஒன்றும் மழை இல்லை. The police did wonderful work. ஆரம்பத்தில் நம்ம கட்சி ஆட்சிக்கு வந்ததும் போலீஸ் எல்லாம் இருந்தார்கள் பாருங்கள் கொஞ்சம் எனிமிகளாக, ஆன்டி அ.தி.மு.க.காரர்களாக-

பாபா: ஆமா.

பொன்னையன்: இப்போதெல்லாம் புரிந்து கொண் டார்கள் சீஃப் மினிஸ்டர் ஸ்ட்ரிக்டாக இருக்கிறார். ஸ்டெடியாக இருக்கிறார். நாலைந்து கருணாநிதிகள், கல்யாணசுந்தரங்கள் வெளியே பேசினால்கூட தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் முதல மைச்சர் பின்னால்தான் இருக்கிறார்கள். காலாகாலத்திற்கும் இருப்பார்கள் என்பதைப் போலீஸ்காரர்கள் புரிந்துகொண் டார்கள்.

பாபா: அப்படியா?

பொன்னையன்: ஒரு ஸ்டேட்மென்ட் வானொலியில் பேசினார் பாருங்கள். (சொல்லுகிறார் பொன்னையன்)

(என்ன ஸ்டேட்மென்ட் தெரியுமா?)

(அதாவது ஸ்ட்ரைக் நடத்தக்கூடாது, பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று முதலமைச்சர் பேசினாரே அந்த ஸ்டேட்மென்ட்)

பாபா: பந்த் உங்களுக்கெல்லாம் உண்மையிலேயே

ரொம்ப எஃபக்டிவ் ஆக இருந்தது.

பொன்னையன்: ஆமாம். உண்மையிலேயே அது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட கிளர்ச்சி பயங்கர மானது. இந்த வெற்றிக்குக் காரணம், பந்த் உடைந்ததற்குக் காரணம் சி.எம்.-உடைய வானொலிப் பேச்சு (பொன்னையன் சொல்லுகிறார்)

பாபா: ரொம்ப, அதுவும் நிறுத்தி நிதானமாகக் கிளீயராக அடிச்சிட்டார் (பாபா சொல்லுகிறார்)

பொன்னையன்: எஃபக்டிவ் ஆக இருந்தது. எல்லா பேப்பரிலும் எடுத்து அருமையாகப் போட்டிருந்தார்கள். அதைப் படித்தவுடனே தி.மு.க. வினுடைய கலைஞருடைய உயிர் நாடியாக இருக்கிறவன் கூட, இப்படி ஒரு உள்ள உணர்வுடைய எம்.ஜி.ஆரை எதிர்த்தா ஒரு பந்த் நடத்துவது என்று மாறிவிடுவார். அப்படி அருமையாக அமைந்திருந்தது. அதனால் 'பப்ளிக் ஓவர்வெல்மிங் சப்போர்ட்' அதனால் போலீஸ்காரர்கள் ரொம்ப கோவாப்பரேட் பண்ணினாங்க.

பாபா: அப்படியா?

பொன்னையன்: அதுவும் சிட்டியில் போலீஸ் ரொம்ப ட்ரமன்டஸ்லி ஒர்க்ட். பரமகுரு லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார்...

(திரு. உமாநாத் அவர்களே, பொன்னையன் சொல்லுகிறார்) அவர்கள் லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார். அடியுங்கள். நொறுக்குங்கள் என்று உத்தரவு போட்டார்.

அவர் போட்ட அந்த ஸ்ட்ரிக்ட் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ன ஆயிற்று என்றால் அவர் இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி. ஏ.சி.டி.சியை எல்லாம் மீட்டிங் போட்டுக் கூப்பிட்டு ஸ்ட்ரிக்டாகச் சொல்லிவிட்டார். எனக்கு வேண்டியது இந்த பந்த் உடைக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

இப்படிப் பேச்சு வார்த்தை தொடர்ந்து கொண்டு போகிறது.

இந்த பாபாதான் ஏற்கெனவே சென்னையில் 20-5-78 ஆம் தேதி பெரம்பூரிலுள்ள நசரத் சையத் ஹூசேன் ஷா கதிரி திம்மசாமி தர்கா என்று பெரிய தர்காவையும், மசூதியையும் புதுப்பிக்க அமைக்கப்பட்ட கமிட்டியில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் இங்கே நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மே மாதம் தஞ்சை நாகை இடைத் தேர்தலுக்கு முன்பு இந்த பாபா மீது முதலமைச்சருக்குக் கோபம் ஏற்பட்டது. பாபா என்ன செய்தார் தெரியுமா?

சில ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தன்னுடைய சமூகநல இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் விழாவுக்கு ஒரு மத்திய அமைச்சரை அழைக்க வேண்டு மென்று கேட்கிறார். இந்த டெலிபோன் செய்தி முதலமைச் சருக்குச் செல்லுகிறது. எனவே, 1979 மே 28 ஆம் தேதி பாபாவை இல்லத்திற்கு அழைக்கிறார். டேப் செய்யப்பட்ட செய்திகளை எல்லாம் போட்டுக் காட்டி பாபாவைக் கடுமை யாக எச்சரிக்கை செய்து அவரை வெளியேற்றுகிறார்.

ஆக, ஜனதா கட்சியினுடைய அமைச்சர் ஒருவரை அவர் அழைக்கிறார் என்ற காரணத்திற்காகப் பழனிபாபா கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார். அதனால்தான் இந்த எச்சரிக்கைகள் எல்லாம். அதற்குப் பிறகு இந்த அறிக்கைகள் எல்லாம். இப்போது பழனிபாபா காரில் போனால்கூட சோடாபாட்டிலை எடுத்து அவர் மேல் அடிக்கிறார்கள். அவருடைய உயிருக்கு ஆபத்து. பழனிபாபா ஐ.ஜிக்கும் மற்றும் சில முக்கியமான பொறுப்பிலுள்ளவர்களுக்கும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து வருமானால் இந்த ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு; அதற்கு முதலமைச்சர் அவர்கள்தான் பொறுப்பு என்ற வகையில் கடிதங்களை அனுப்பியிருக்கிறார் என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய போலீஸ் இலகாவைப்பற்றி நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தைப் பற்றியல்ல. அதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சி களினுடைய தலைவர்களும் மிக நிரம்ப எடுத்துக் கூறியிருக் கிறார்கள். போலீஸ் இலாகா எந்த அளவிற்கு இன்றைக்கு ஒரு நிர்வாகச் சீர்கேடுடைய இலாகாவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஐ.ஜி. பதவியிலிருந்து ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனிலே யிருந்த மிஸ்டர் ஸ்டிரேசி அவர்கள் 31-5-1979 அதாவது மே மாதம் ஐ.ஜி பதவியிலிருந்து ரிடையர் ஆகிறார். ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனில் இருந்தவர், மே மாதம் 31 ஆம்தேதி 1979 ஆம் ஆண்டிலே ரிடையர் ஆகிறார். வயது விதிப்படி அவர்

அந்தத் தேதியிலே ரிடையர் ஆக வேண்டும். ஆனால் தொடர்ந்து அவர் வேலை பார்க்கிறார். எந்த உத்திரவுப்படி என்றால், எந்த உத்திரவும் கிடையாது. பிறகு அக்டோபர் 12 ஆம் தேதி, இந்த அரசு ஒரு அவசரச் சட்டம் போடுகிறது. தமிழ்நாடு போலீஸ் சட்டத்திலே, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்று மாற்றுகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால் அந்த அவசரச் சட்டத்திற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து ஜூன் ஒன்றாம் தேதியி லிருந்து அந்த அவசரச் சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்கிறார்கள். இது முறைதானா என்பதற்கு எனக்குப் பதில் வந்தாக வேண்டும். மே மாதம் ரிடையர் ஆகிற ஒருவர், அக்டோபர் 12 ஆம் தேதி டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற ஒரு பதவிக்கு மாற்றப்படுகிறார். அவருக்காக ஒரு அவசரச் சட்டம் போடப்பட்டு, ஜூன் மாதம் 1 ஆம் தேதியி லிருந்து ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்படுகிறது என்றால் இந்த இடைக்காலத்தில்-இவர் மே மாதம் 31 ஆம் தேதி ரிடையர் ஆனபோதிலும் அக்டோபர் 31 ஆம் தேதிவரை யிலும்; எந்தவிதமான உத்திரவும் இல்லாமல் அவரைப் பதவி நீட்டிக்கச் செய்வது, பிறகு ஒரு அவசர உத்திரவு மூலமாக ரிட்ராஸ்பெக்டிவ் கொடுத்து நீடிக்கச் செய்தது நியாயம்தானா? சட்டப்படி முறைதானா? இந்தக் கேள்விக்கு நான் பதில் வேண்டுகிறேன். இதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இந்த உத்தரவுக்கு, கீழே உள்ள அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்பதற்காகவே பல ஐ.ஜி.பதவிகள் வாரி வாரி வழங்கப்படுகின்றன. மக்கள் வரிப்பணம் இதற்காகப் பாழடிக்கப்படுகிறது. இப்படி ரிடையர் ஆன திரு. ஸ்டிரேஸி அவர்களுக்கு வேலை தரப்படுகிறது. இன்னும் ரிடையரான அவர் ஒரு புதிய பதவியிலே டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்கின்ற பதவியிலிலே அமர்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, தொடர்ந்து ஐ.ஜி.க்கு உரிய யூனிபாரத்தை அணிந்து கொண்டிருக்கிறார். இதற்குச் சட்டம் இடம் தருகிறதா என்றால் இல்லை. இதற்கு நம்முடைய மத்திய அரசாங்கம் யூனிபார்ம் அணிவதைப்பற்றிச் சில விதிகளைத் தயாரித்து

இருக்கிறது. அந்த விதிகள் என்னவென்றால் Government of india have decided that there is no objection to permission being granted by state Government to Indian Police Service Officers to wear after retirement uniforms of the rank last held by them immediately before retirement cermonial occasions and police parades. அதாவது விசேஷமான நிகழ்ச்சிகளுக்கும் போலீஸ் பெரேட் போன்றவைகளுக்கும் ரிடையர் ஆன போலீஸ் ஆபீஸர்களுக்கு, அவர்களுக்கு அத்தகைய போலீஸ் யூனிபார்ம் அணிவதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க உத்திரவு வழங்க அப்ஜக்ஷன் கிடையாது என்று சொல்லப்படுகிறதே தவிர, அவர்கள் சாதாரண நாட்களில் இந்த யூனிபாரத்தை அணியலாம் என்பதற்கு எந்தவிதமான விதியும் கிடையாது. ஆகவே விதிமுறைகளுக்கு மாறாக இன்றைக்கு யூனிபாரத்தோடு அந்தப் பதவியிலே இருந்து கொண்டிருக் கிறார். நான் இந்தக் கண்டனத் தீர்மானத்திலே வலியுறுத்திக் கூறுவதெல்லாம் 10 நாட்களுக்குள் அல்லது ஒரு வாரத்திற் குள்ளாக ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் அந்த யூனிபார்ம் இல்லாமல், அந்தப் போலீஸ் பணியை நடத்த வேண்டுமே அல்லாமல் யூனிபாரத்துடன் நடத்துவாரேயானல் யார் கோர்ட்டிற்குப் போனாலும் அவர் அந்த யூனிபாரத்தை கழற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே கோர்ட்டிற்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை நான் இந்த அவைக்கு முதலமைச்சருக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பஸ் ஊழல். பஸ்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கை படிப்படியாகப் பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தொடர்ந்து நிறைவேறி வந்திருக்கிறது.

அண்ணாவிற்குப் பிறகு கழக ஆட்சிக்காலத்தில் பெரிய நிறுவனங்களையெல்லாம் டி.வி.எஸ், இராமன் அன்ட் இராமன், எஸ்.ஆர்.வி. எஸ். பொள்ளாச்சி மகாலிங்கத்தினுடைய கம்பெனி போன்ற நிறுவனங்களையெல்லாம் அன்றைக்கு நாட்டுடைமையாக ஆக்கி, அவைகளை அரசின் சார்பிலே போக்குவரத்துக் கழகங்களாக மாற்றிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அதைத் தொடர்ந்து

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லா பஸ்களையும் தேசீயமயமாக்கி விடவேண்டும். பொருளாதாரப் பற்றாக் குறையின் காரணமாக எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய முடியாது என்றாலும், மாவட்ட வாரியாக அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையை வகுத்து முதலாவதாக, நீலகிரி மாவட்டத்திலே உள்ள வழித்தடங்களைப் பஸ்களை நாட்டுடமையாக்குவது என்று முடிவெடுத்து. செய்தோம். பிறகு பஸ் முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்திலே அவர்களுடைய வழக்கு எடுபடவில்லை. அரசுக்குச் சார்பாகத் தீர்ப்பு கிடைத்தது. பிறகு அவர்கள் இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருக் கிறார்கள்.

இதற்கிடையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்டு, இங்கே ஆளுநருடைய ஆட்சி நடைபெற்ற காலத்தில் ஆளுநர் அவர்கள் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார். சுகாதியா ஆளுநராக இருந்தபொழுது 1976ஆம் ஆண்டு ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார். ஒருவர் மூன்று பேருந்துகள் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப் படுகிறது. ஆனால் அந்த உத்தரவில் தெளிவற்ற நிலை இருந்தது. உதாரணமாக அந்தத் தேதி, அதாவது 1-11-76 என்ற அந்த உத்தரவு இடப்பட்ட தேதியானால் அந்த 1-11-76 க்குள் ஒருவர் ஐந்து அல்லது ஆறு பேருந்துகளுக்கு உரிமையாளராக இருந்தால் மீதமுள்ள பேருந்துகளை என்ன செய்வது? இந்தக் கேள்விக்குச் சரியான விடை கிடைக்கவில்லை. அவைகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டால் பிரச்சனை தீர்ந்து விடும். ஆனால் அரசாங்கத்தினுடைய ஆளுநர் போட்ட அந்த உத்தரவில், ஆளுநர் ஆட்சியிலே அது குறித்துத் தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. எனவே, மூன்று பேருந்து களுக்குமேல் வைத்து இருந்தவர்கள் தங்களுடைய உறவினர் களுடைய பெயருக்கு மாற்ற, அதிகாரிகளுடைய உதவியை நாடினார்கள். அரசாங்கம் எந்த உத்தரவைப் போட்டும் அப்பொழுது தடுக்கவில்லை. எனவே, ஒரு 'பினாமி' ஏற்பாட்டுக்கு அந்த உத்தரவு ஏற்பாடு செய்தது என்றுதான் கருதப்பட்டது.

அதற்குப் பிறகு அண்மையில் தஞ்சை, மதுரை மாநக ராட்சித் தேர்தல் நேரத்தில் நம்முடைய பஸ் முதலாளிகள் நம் முடைய முதலமைச்சரை, போக்குவரத்துத் துறை அமைச்சரை இவர்களையெல்லாம் அணுகி, இந்த மூன்று என்று இருப்பதை 5 பஸ்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் அதற்காகக் கொடுக்கப்பட்டிருக் கிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே நான் பகிரங்கமாகச் சொல்லிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்திற்கு உடனடி யாக உத்தரவு வழங்கப்படவில்லை என்றாலும், இப்பொழுது அண்மையிலே அந்த மூன்று பஸ்கள் என்பது ஐந்து பஸ்களாக ஆக்கப்படும் என்கின்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவிலேகூட, இப்பொழுதுள்ள பஸ் முதலாளிகள் ஏறத்தாழ 70 இலட்சம், பிறகு கடைசியாக 30 இலட்சம் என்று கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயை அவர்களுக்குக் கொட்டித் தீர்த்துவிட்டார்கள்; கொடுத்து விட்டார்கள்.

என்றாலும் கூட, அவர்களுக்கு இன்னும் குறைபாடு நீங்கவில்லை. அவர்களுக்கிருக்கின்ற குறைபாடெல்லாம் ஏற்கனவே உள்ள தற்காலிக வழித்தடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் அப்ஜெக்ஷன்ஸ் செய்திருக்கின்றன. மற்றவர்களுக் குத் தரக்கூடாது என்று. அது மாத்திரம் அல்லாமல், அதே நேரத்தில் போக்குவரத்துக் கழகங்கள், நம்முடைய கட்ட பொம்மன், பெரியார், அண்ணா, பல்லவன், சேர, சோழ, பாண்டியன் ஆகிய இத்தகைய போக்குவரத்துக் கழகங்க ளெல்லாம் அங்கே வழித்தடங்களுக்கு மனுச் செய்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது பஸ் முதலாளிகளினுடைய கோரிக்கை, நீங்கள் இந்த அப்ஜெக்ஷனை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்; இந்த வழித்தடங்களுக்குப் போட்டிருக் கின்ற மனுக்களை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று. அப்படியானால் மேலும் ஒரு கோடிரூபாய் இதோ தயார் என்று வசூலித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் இப்பொழுது என்ன ஏற்பாடு நடைபெறுகிறது என்றால், உதாரணமாக, பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ், சென்னையிலிருந்து திண்டிவனம். திருவண்ணாமலை, கரூர்

வழியாகச் சேலம் போவதாக வைத்துக் கொள்வோம். அதற்கு இப்பொழுது செய்யப்படுகின்ற ஏற்பாடு தந்திரமான ஏற்பாடு என்னவென்றால், நாங்கள் சென்னையிலேயிருந்து சேலத்திற்கு எங்களுடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்ஸை விட்டு விடுகிறோம். இடையிலே திருவண்ணாமலையிலே யிருந்து கரூர் வரை ஒருவருக்கும், திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை வரை இன்னொருவருக்கும் என்று கூறு போட்டு, பங்கு போட்டு, ஆங்காங்கு அந்தப் பஸ் முதலாளி களுக்குச் சலுகைகள் செய்கிறோம் என்று பேசப்பட்டு, அதற்குப் பெருந்தொகை இலஞ்சமாக வாங்குவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு உறுதியையும் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பது, சுப்ரீம் கோர்ட்டிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தேசியமயமாக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட திட்டத்தை எதிர்த்து முதலாளிகளால் போடப்பட் டிருக்கின்ற அந்த வழக்கில் வலியுறுத்துவது இல்லை என்ற அளவிற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இது தேசியமயத்திட்டம் எந்த அளவிற்கு இன்றைக்குச் செயல்படுகிறது என்பதற்குத் தக்க உதாரணம் ஆகும். ஏனென்றால் குதிரைப் பந்தயத்தைத் தேசியமய மாக்கப்போவதாகச் சொன்ன நம்முடைய முதலமைச்சரவர்கள் இன்றைக்குச் குதிரைப்பந்தயம் எப்படி வளரலாம் எந்த வகை யிலே வளம் பெறலாம், குதிரைப் பந்தியத்திலே இருக்கின்ற முதலாளிகள் வளம் பெறலாம் என்ற அளவிற்கு அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தேசியமயமாகும் திட்டங்கள் எந்தக் கதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொன்னேன்.

மின்சார இலாகாவிலே ஒன்று. தமிழ்நாடு மின்சார இலாகா எப்படி திறமையாகச் செயல்படவில்லையென்பதை இப்பொழுது காபந்து சர்க்கார், கூட்டணி அரசிலே இருக்கிற மத்திய அரசினுடைய மின்துறை அமைச்சர் கே.சி.பந்த் அவர்கள் சமீபத்திலே மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

பொதுவாக எவ்வளவு சதவீதம் வெட்டு என்று சொல்லாமல் இருப்பதில் நம்முடைய மின்துறை அமைச்சர் மிகத் திறமைசாலியாக இருக்கிறார் என்றாலும் அடிக்கடி மின் வெட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று 1 மணி நேரம் கரன்ட் வராது. அந்த ஊரிலே கேட்டால் 'இந்த ஊரிலே இப்படித்தான் சார்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு விவசாயிகளும் மற்றவர்களும் கஷ்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறது.

அதே நேரத்தில், லோயர் மேட்டூரில் ஒரு மின் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. அதிலே மிகப்பெரிய ஊழலுக் கான வித்திடப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் கண்டனத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய பெரும் கடமை யாகும்.

இந்த லோயர் மேட்டூர் மின் திட்டத்திற்காக உலகெங்கும் இருந்தும் 'குளோபல் டெண்டர்' கோரப்பட்டிருக்கிறது. அதிலே பல்வேறு நாடுகளுடைய, உலகப் பிரசித்திப்பெற்ற கம்பெனிகள் டென்டர் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு கம்பெனி கூட, கனடா நாட்டு கொலாபரேஷனோடு டென் டரைப் போட்டிருக்கிறது. ஆனால் என்ன நடந்தது என்றால், குறைந்த டெண்டருக்குப் பதிலாக, யார் மிக அதிக டெண்டர் போட்டிருக்கிறார்களோ, அவர்களைச் சிபாரிசு செய்து, இப்பொழுது மத்திய அரசுக்கு அந்த டெண்டரை அனுப்பி யிருக்கிறார்கள். ஒரு ஜப்பானிய கம்பெனி ஃப்யூஜி எலக்டிரிக்கல்ஸ் என்று அதற்குப் பெயர்; அவர்கள் 30 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறார்கள். ஆனால்,ப்ரெஞ்சு கம்பெனி, டெண்டர் வரிசையிலே 10-வதாக இருக்கிறது 47 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் யாருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்? 30 கோடி ரூபாய் போட்ட ஜப்பானிய கம்பெனிக்கு அல்லவா? செய்யவில்லை. அதற்கு மாறாக 47 கோடி ரூபாய், 17 கோடி ரூபாய் அதிகமாக டெண்டர் போட்டிருக்கிற ஃப்ரெஞ்சு கம்பெனிக்குச் சிபாரிசு செய்து பரிந்துரை செய்து அனுப்பி யிருக்கிறது. அந்த ஃபைல் வருகிறது. அந்தத் துறை அதையே சிபாரிசு செய்து இப்பொழுது மத்திய அரசு மின் துறை இலாகா

விற்கு அனுப்பியிருக்கிறது. அண்மையிலே, நம்முடைய முதலமைச்சருடைய இதயத்திலே இடம் பெற்றிருக்கிற பயணக் கட்டுரையிலே இடம் பெற்றிருக்கிற ஆசிரியர் ஒருவர் பாரிஸ் நாடு வரையிலும் சென்று பயணக் கட்டுரை திடீரென்று எழுதியிருப்பதற்கான காரணமும் மர்மமும் இதிலே அடங்கி யிருக்கிறது என்பதையும் நான் குற்றமாகச் சாட்ட விரும்பு கிறேன். தமிழக அரசு வேண்டுமென்றே டெண்டர் தொகையை உயர்த்தி, பொதுமக்களுடைய வரிப்பணத்தை விரயம் செய்கிறது என்ற குற்றச்சாட்டையும், நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன். மத்திய அரசு, இந்த டெண்டரை அங்கீகாரம் செய்யக்கூடாது. ஏனென்றால், 17 கோடி ரூபாய் அதிகமான ஒரு டெண்டர். அதை எப்படியாவது அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. மத்தியில் கூட்டணி அரசு இருக்கிறது என்ற காரணத்தால் அதற்கு அங்கீகாரம் செய்யக்கூடாது மத்திய அரசு என்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒரு குற்றச்சாட்டோடு, ஒரு நீண்ட குற்றச் சாட்டோடு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். கடந்த முறை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் நம்பிக்கை யில்லா தீர்மானத்தின்பொழுது நான் பேசும்பொழுது கப்பல்கள் வாங்குகிற பேரத்திலே பெரும் ஊழல்கள் நடைபெற இருந்தன என்பதை குறிப்பிட்டு 2 கோடி ரூபாயிலேயிருந்து 3 கோடி ரூபாய் அளவிற்குக் கமிஷன் என்கிற பெயரால் லஞ்ச ஊழல் நடைபெற இருந்தது என்பதையும் தக்க நேரத்தில் திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு நடத்த இருந்த ஊழல் அறிவிக்கப்பட்டதன் காரணமாக, அந்தப் பேரம் நிறுத்தப் பட்டது என்பதையும் நான் சுட்டிக்காட்டினேன். பேரம் நிறுத்தப்பட்டாலும் கூட தி.மு.க., சி.பி.ஐ, சி.பி.எம் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கொடுத்த புகார் மீது மத்திய அரசு விசாரணைகளைத் தொடங்காமல் இல்லை. அந்த விசாரணைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதுதான் தமிழ்நாட்டிலே அரசியலைக்கூட குழப்பத்திலே ஆழ்த்தியிருக்கிறது என்பதற்கு மிக முக்கியமான காரணம். அவைகள், அந்த விசாரணைகள். நடைபெற்று வருகின்றன. இதற்கிடையிலே, பல்கேரியாவிலேயிருந்து 3 கப்பல்களை வாங்கப் போவதாக தமிழ்நாடு அரசு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

மேற்கு ஜெர்மனியிலே கப்பல்களைத் தமிழக அரசு வாங்கவும் இடைத்தரகர் மூலமாக ஊழல் நடத்தவும் திட்டமிட்டப்பட்டது. சேஷசாயி பேப்பர் மில்லினுடைய அதிபர், சிம்கோ மீட்டர் சேஷசாயி பேப்பர் மில்ஸ் (இரண்டும் தொழிலாளர்களுக்கு மிக அனுசரணையாக இருக்கிற ஒரு தொழில் அதிபரைக் கொண்டு, இரண்டு ஸ்தாபனங்கள் என்பதை நானும் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அறிவோம்) விஸ்வநாதன் மேற்குஜெர்மனியுடன் நடைபெற்றிருக்கிற கப்பல் பேரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்பொழுது முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லாவிட்டாலும்கூட, நான் குறிப்பிட்டதற்கான ஆதாரம் இங்கே என்னிடம் இருக்கிறது. அவைகளை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன் 27-10-78 அன்று kind attention என்று போட்டு சென்னை பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் டெக்னிக்கல் மானேஜர் திரு. அனந்தராமனுக்கு ஒரு டெலக்ஸ் வருகிறது. எங்கே இருந்து வருகிறது? யார் கொடுத்த டெலக்ஸ் தெரியுமா? திரு.எஸ்.கே.நடராசன் என்பவர் அந்த டெலக்ஸை பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கிறார். யார் அந்த எஸ்.கே.நடராஜன் அவர்தான் சிம்கோ மீட்டர்ஸ், சேஷசாயி பேப்பர் மில்ஸ், மேனேஜிங் டைரக்டர் விஸ்வநாதனின் செயலாளர், இப்பொழுது புரியுமென்று நம்புகிறேன். விஸ்வநாதனுக்கும் பழைய மேற்கு ஜெர்மனி கப்பல் வாங்குவதற்கும் உள்ள உறவு என்னவென்று. "The following message has been received from our collaborators Messrs. Blome and Vas, Humburg this morning" என்று இந்தச் செய்தியைக் கொடுத்து இருக்கிறார். இந்தச் செய்தியை ஏன் சேஷாயி கம்பெனி விஸ்வநாதனின் செயலாளர் நடராஜனுக்கு அறிவிக்க வேண்டும்.

The following message has been received from our collaborators Messrs. Blome and Vas, Humburg this morning புளோம் அண்ட் வாஸ் என்பவர்கள் அந்தக் காகிதக் கம்பெனியுடைய தொழிற்சாலையினுடைய கொலாபரேட்டர்ஸ். அவர்களிடம் கப்பல் வாங்குவதில் விஸ்வநாதனுக்கு என்ன அக்கறை. கப்பல் வாங்குவது தமிழக அரசினுடைய பூம்புகார் போக்குவரத்துக் கழகம். அதிலே விஸ்வநாதனுடைய செயலாளர் நடராஜனுக்கு இவ்வளவு அக்கறை வருவானேன். அவர் ஏன் பூம்புகார் கார்ப்பொரேஷனுக்கு இதைப் பற்றி எழுத வேண்டும்? அவருக்கு வந்த டெலக்ஸ் செய்தி இதுபற்றிய ஆதாரம் நெம்பர் 1.

Next Attention of Mr. Natarajan-Urgent 6-11-78

மறுபடியும் ப்ளோம் அண்ட் வாஸ் கம்பெனியிடம் இருந்து டெலக்ஸ் வருகிறது. ஹம்பர்க்லிருந்து வருகிறது.

After long discussion with S.V.

நீண்ட உரையாடல் யாரோடு எஸ். விஸ்வநாதனோடு, அவர் நியூயார்க்கிலே இருக்கிறார். நியூயார்க்கிலே இருக்கிற விஸ்வநாதனுக்கு மேற்கு ஜெர்மனி கப்பல் கம்பெனி கொடுக்கிறது. நீண்ட விவாதம் நடக்கிறது. விஸ்வநாதன் நியூயார்க்கிலே இருக்கிறபோது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நியூயார்க்கிலே இருக்கிறார்கள். ப்ளும் அண்ட் வாஸ் கம்பெனி என்ன தெரிவிக்கிறார்கள் தெரியுமா?

After long discussion with S.Viswanathan, New York I yesterday tried for hours to get through to Mr. Singh.

மிஸ்டர் சிங் என்பவர் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷனின் தலைவர்.

"Yesterday I tried for hours to get through to Mr.Singh, Poompuhar by telax and eventually sent a cable, but you check and inform please."

அங்கே அதைப் பார்த்து அந்த விஸ்வநாதன் பேசிய பிறகு பலமுறை மிஸ்டர் சிங். சேர்மன் ஆப் தி பூம்புகார் கார்ப்பொரேஷன், அவரிடம் பேச முயற்சித்தோம்; முடிய

வில்லை. எனவே, டெலக்ஸ் மூலமாகச் செய்தி அனுப்பியிருக் கிறார்கள். உடனடியாக நீங்களாவது அவரோடு தொடர்பு கொண்டு அவருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நடராஜ னுக்கு ஹாம்பர்க்கிலிருந்து வருகிறது என்றால், விஸ்வநாதனுக் கும், இந்த மேற்கு ஜெர்மனி நாட்டு கப்பல் வாங்குவதாக இருந்த கப்பல் பேரத்திற்கும், எவ்வளவு தொடர்பு என்று நான் முன்பு சொன்ன குற்றச்சாட்டிற்கு இது ஆதாரம் இல்லையா என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதற்குப் பிறகு முதலமைச்சர் அன்றைக்கு சட்டமன்றத் திலே கூறியபடி, பல்கேரியாவில் இருந்து கப்பல் வாங்க உத்தேசிக்கப்படுகிறது. அது ஒரு பெரிய வரலாறு. பல்கேரியா விலிருந்து கப்பல் வாங்குவதற்கான கடிதப் போக்குவரத்து 3-2-79 அன்று ஆரம்பம் ஆகிறது.

பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் சேர்மன், எம்.டி. எச்.எம்.சிங், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு.பாங்கோ வுக்கு எழுதுகிறார்கள் அந்தக் கடிதத்திலே எழுதியிருக் கிறார்.''பல்கேரியாவிலிருந்து வாங்க வேண்டிய கப்பல் 10.5 மில்லியன் டால (ரூ.8.40லட்சம்) ரிலிருந்து 10.75 மில்லியன் டாலர் (ரூ.8.60 லட்சம்) வரையிலே விலை கொடுக்கலாம் என்றும் சேர்மன் பேச்சு வார்த்தைகளை 10.5 மில்லியன் டாலரில் (ரூ.8.40 லட்சம்) இருந்து விலையைத் தொடங்கலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு ஆதாரம் இருக்கிறது; இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற 3வது ஆதாரத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

எச்.எம்.சிங். எழுதியுள்ள அவரது கடிதத்தில் சி.வி. சுப்பிரமணியம் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சுப்பி, சுப்பி என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற அவர் எப்படி மத்தியில் பாலா பாலா என்று செல்லமாக அழைக்கப் படும் பாலசுப்பிரமணியம் என்று ஒருவர் இருக்கிறாரோ, அதைப்போல் சுப்பி, சுப்பி என்று செல்லமாக அழைக்கப் படுகிற சுப்பிரமணியம் என்பவர் மெக்கனாஸ் அண்ட் மெக்கனீஸ் என்கிற ஷிப்பிங் ப்ரொக்கர்ஸ் கம்பெனியின் எக்சிகியூட்டிவ்வாகச் சில காலம் இருந்தவர். அது மாத்திரம்

அல்ல. சென்னை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் உள்ள சௌத் இந்தியா எக்ஸ்போர்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டுடன் தொடர்பு கொண்டவர்; எல்லாவற்றையும் விட, சித்ரா கிருஷ்ணசாமிக்கு அருமை நண்பர். இதிலிருந்து எல்லாம் புரிந்து கொள்ளலாம். இந்த சுப்பி என்கிற சுப்பிரமணியம்தான் பல்கேரியா கப்பல் தளத்தின் பிரதிநிதியாக இந்தப் பேச்சு வார்த்தைகளிலே உள்ளே நுழைகிறார் 5-2-79இல் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சென்னையில் இருந்து சி.வி.சுப்பிரமணியம் என்கிற சுப்பிக்கு ஒரு டெலக்ஸ் அனுப்புகிறது. அந்த டெலக்சில் 10.75 மில்லியன் டாலருக்கு, அதாவது 8 கோடியே 60 லட்சம் ரூபாய்க்குக் கப்பல் ஒன்று வாங்கலாம் என்ற உறுதியான 'ஆபர்' கொடுக்கிறது. அதற்கான ஆதாரம், இதோ இந்த டெலக்ஸ்.

அதற்கடுத்தாற்போல், அந்தக் கப்பலின் விலை 11 மில்லியன் டாலர் என்று அயல் நாட்டு தரகர் கம்பெனி விளம் பரப்படுத்தியது. எங்களுக்கு 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு, 11மில்லியன் டாலர் என்று விளம்பரப்படுத்தியிருக்கிறீர்களே, என்று சுப்பி என்கிற சுப்பிரமணியம் கேட்கிறார். உடனடியாக பல்கேரியாவில் இருந்து அந்தக் கம்பெனிகாரர்கள் பதில் தருகிறார்கள். நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உங்களுக்குச் சொன்ன விலைக்குத் தருகிறோம். நாங்கள் விளம்பரம் வேறு நாட்டுக்காரர்களுக்குச் செய்தாலும் கூட உங்களுக்குக் கொடுப்பது நாங்கள் சொன்ன அதே 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்கிற எழுதுகிற கடிதம் சுப்பிரமணியம் அவர்களால். சுப்பி என்கிற சுப்பிரமணியம் அவர்களால் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு 6.2.79ல் தெரிவிக்கப்பட்டது. அதற்கான ஆதாரம் எண்.5

பிறகு, 6-2-79 அன்று போக்குவரத்துத் துறை செயலாளர் பாங்கோ,ஐ.ஏ.எஸ். அவர்கள் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் எச்.எம்.சிங் அவர்களுக்கு எழுதிய கடிதம், சுப்பி சம்பந்தப்பட்ட மெக்கானஸ் அன்ட் மெக்கனீஸ் கம்பெனி மூலம் 10.75 மில்லியன் டாலருக்கு அந்தக் கப்பலை

வாங்கலாம் என்று அனுமதி தந்து கடிதம் எழுதுகிறார். இதோ அதற்கான ஆதாரம்.

அதே நாளில், சுப்பி சம்பந்தப்பட்ட அதே மெக்கானஸ் அன்ட் மெக்கனீஸ் கம்பெனி 10.75 மில்லியன் டாலர் விலையைத் திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டுப் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு அறிவிக்கிறது ஏன்? 10.75 மில்லியன் டாலருக்கு மேல் நீங்கள் வாங்கத் தேவை இல்லை, நாங்கள் 11 மில்லியன் டாலர் என்று அறிவித்து இருந்தாலும் 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்று அறுதியிட்டு, உறுதியிட்டு கூறிய அந்தக் கம்பெனி, திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று ஒரு கப்பலுக்கு விலை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் என்ன? இங்கேதான் சுப்பி, சித்ரா கிருஷ்ணசாமி அவர்களுடைய தந்திரங்கள். அவர்களுடைய மாய வலைகள் பின்னப்படுகின்றன. இந்த விலை உயர்வைப் பார்த்து வியப்படைந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் எச்.எம்.சிங், ஐ.ஏ.எஸ். 7ஆம்தேதி பாங்கோவிற்கு எழுதியுள்ள கடிதத்தில்...

In view of this, it is not clear why messrs, Mckhinanz had quoted 11.75 millon dollars for a gearless vessel..

ஒரு கியர்லெஸ் வெஸ்ஸல்லுக்கு 11.75 மில்லியன் டாலர் என்று ஏன் அந்தக் கம்பெனிக்காரர்கள் விலையை உயர்த்தி யிருக்கிறார்கள் என்று ஆச்சர்யப்படுகிறார்; அதே கம்பெனிக் காரர்கள் ஏன் விலையை உயர்த்தினார்கள் என்று நானும் ஆச்சர்யப்படுகிறேன். நீங்களும் ஆச்சர்யப்படுகிறீர்கள். நம்மைவிட திரு.எச்.எம்.சிங் ஆச்சரியப்படுகிறாரா இல்லையா என்பதற்கு இந்தக் கடிதத்தை நான் சான்றாக வைக்கிறேன். இவர் இதில் தன் ஆச்சரியத்தைத் தெரிவிக்கிறார். ஏன் அந்த விலைக்கு உயர்த்தினார்கள்?

7-2-79க்கு அடுத்த நாள் 11.75 மில்லியன் டாலர் அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்பதை 13.5 மில்லியன் டாலர் அதாவது 10 கோடியே 80 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தி, அந்தத் தகவலை அதே மெக்கானாஸ்

அண்ட் மெக்கன்சி கம்பெனி எச்.எம்.சிங் அவர்களுக்கு டெலக்ஸ் அனுப்புகிறார்கள். இங்கே பாருங்கள் வேடிக்கையை. 10.75 மில்லியன் டாலருக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு, அதை வாங்கலாம் என்று முடிவு எடுக்கப் பட்டுப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் 11 மில்லியன் டாலராக மாறாது என்று உறுதி அளிக்கப்பட்டுப் பிறகு 11.75 மில்லியன் டாலராக அந்தக் கம்பெனிக்கு விலை பெருகி 3வது நாள் 13.5மில்லியன் விலையை உயர்த்திக் கேட்கின்ற காரணத்தால் அதிகமான கமிஷன் ஏறத்தாழ 4 கோடி ரூபாய்க்கு இடையில் உள்ளவர்கள் சுருட்டித் தாங்களே எடுத்துக் கொண் டது போக, முதலமைச்சருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க ஒரு பெரிய சதித்திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்ற குற்றச் சாட்டை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால், இதை எச்.எம்.சிங் ஏற்றுக் கொண்டாரா என்றால் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சில பாயிண்ட்களைக் குறிப்பிடுகிறார். என்ன குறிப்பிடுகிறார்? இந்தப் பூம்புகார் கார்ப்பரேஷன் சேர்மென் இதை எல்லாம் ஆராய்ச்சி செய்து, பிளஸ் பாயிண்ட், மைனஸ் பாயின்ட் இவைகளை எல்லாம் பல்கேரியா கப்பலோடு, ஏற்கெனவே ஜெர்மனியிலே விலை பேசிய கப்பலோடு ஒப்பிட்டு 8-2-1979ம் தேதிய கடிதத்திலே குறிப்பிடுகிறார்.

இந்த விலையை மத்திய அரசு ஒத்துக் கொள்ளாது. மேலும் ஏற்கெனவே நாம் மேற்கு ஜெர்மானியிலிருந்து வாங்கியிருந்த பால்டிகா டைப் கப்பலோடு ஒப்பிட்டு, அதனுடைய இயந்திரங்களும் மற்றவைகளும்; அவைகளை விட தரக் குறைவானவை என்று குறிப்பிட்டு, அந்த விலைக்கு வாங்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

"In the light of the above, Government of india may not allow us to purchase the vessels at a higher price when we negotiated for the baltika type vessels, particularly when the machinery in the engine room has distinct negative point when compared to the baltica type vessels.

இவ்வாறு எச்.எம்.சிங் பாங்கோ அவர்களுக்கு இதன் பின்னால் மறைந்து கிடக்கும் ஊழலை மிக நாசுக்காக வெளிப்

படுத்திக் காட்டி இருக்கின்றார். அதற்கான ஆதாரம், அவர் எழுதிக் கொடுத்ததற்கான ஆதாரமாக இந்த 8-வது ஆதாரத்தை உங்கள் முன்னால் நான் வைக்கிறேன்.

இதற்குப் பின்னால் மார்ச் மாதம் கூடிய அமைச்சரவைக் கூட்டம், மார்ச் மாதத்திலே நம்முடைய காபினட் கூடுகிறது. அதிலே 13 மில்லியன் டாலருக்கு, 10 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்குக் கப்பலை வாங்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்கிறது. இப்படிக் காபினட் எடுத்த முடிவு உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், பழைய சுப்பி வருகிறார். சுப்பி என் கிற சுப்பிரமணியம், ஐரோப்பாவுக்கு டெலக்ஸ் கொடுக்கிறார். அதிலே சொல்கிறார். 'பல்கேரியா பேரத்தைத் தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டதை அறிவிக்க மகிழ்கிறேன். ஆக, தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டது சுப்பி என்கிற சுப்பிர மணியத்தால் பல்கேரியாவுக்கு உடனடியாகத் தெரிவிக்கப் படுகிறது.

'இது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது.' ஏன் இருக்காது? 10 மில்லியனை 13 மில்லியனாக ஆக்குவது கஷ்டமான காரியமாக இருக்காதா?

It was a difficult task

அதற்குக் கொஞ்சம் வருத்தமும்படுகிறார். பாருங்கள்.

"It has been approved only at 13 million. U.S. dollars, but I have assured them that with this approval and when bango reaches Warna to sign contract Mr.P.

மிஸ்டர் பி என்பவர் அங்கே உள்ள ஒருவர்;

"Will definitely reconsider the situation and consider increase points."

என்னய்யா வேடிக்கை? பாயின்ட்களைக் குறைப்பார் என்று எண்ணுகிறேன் என்று ஒரு இடைத்தரகர் சொல்வதற்குப் பதிலாகச் சொல்கிறார்.

Mr.P.will definitely reconsider the situation and consider increase points. I am still trying to get authority for 13.1 million dollars.

தமிழ்நாடு அரசு 13 மில்லியன் டாலருக்கு வாங்கலாம் என்று முடிவு எடுக்கிறது. ஆனால் இடைத்தரகராக இருக்கிற சுப்பி, நான் எப்படியும் 13.1 மில்லியன் டாலர் என்கிற விலைக்கு அதைக் கொண்டு வருகிறேன் என்று அவர் குறிப்பிடுகிறார்; குறிப்பிட்டுவிட்டு, அதே டெலக்சிலே மேலும் குறிப்பிடுகிறார் பாங்கோ வந்த பிறகு, கையொப்பமிடுகிற வைபவத்திற்கும் கையொப்பம் இடுகிற வைபவத்தை சுப்பிர மணியம் அந்த டெலக்சிலே 'சிக்னேச்சர் ஜெர்மனி, என்று குறிப்பிடுகிறார் எனக்காக மிஸ்டர் 'பி' காத்திருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். கையொப்பம் இடுகிற விழா இருந்தாலும் இல்லாவிட்டாலும்.

ceremony or no ceremony-please try best for further points to save my face.

இன்னும் பாயின்ட்களை உயர்த்தி, என்னைக் காப்பாற் றுங்கள். என்னுடைய முகத்திலே கரியைப் பூசாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அதிக விலை கொடுத்து, அதிக கமிஷன் பெறலாம் என்று வாக்களித்து விட்டேன். அதாவது என்னுடைய மானத்தைக் காப்பாற்ற இன்னும் கொஞ்சம் விலையை உயர்த்துங்கள் என்று சுப்பி அவருக்குத் தெரிவிக் கிறார்.

அதைத் தொடர்ந்து மீண்டும் அனுப்பப்பட்ட டெலக்சில் சுப்பி உடனே புறப்பட்டு, 22 அன்று இரவு பல்கேரியாவுக்கு வருவதாகவும், மிஸ்டர் 'பி' என்பவர் யாருக்கும் தெரியாமல் அவரைச் சந்தித்து, ஒரு பிரைவேட் வாதம், விமான நிலையத் திலோ ஓட்டலிலோ நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடு கிறார். இது தமிழ்நாட்டிலிருந்து செல்லுகின்ற அதிகாரி களுக்குத் தெரியாமல் நடக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அர்த்தம். அப்படிக் கொடுக்கப்பட்ட டெலக்சுக்கு ஆதாரம் நம்பர் 9.

அதே 20-3-1979இல் சுப்பி மூலம் அனுப்பப்படுகிற இன்னொரு டெலக்சில் திடுக்கிடத்தக்க வாசகங்கள் அமைந்து உள்ளன. ஊழலின் பாணி மர்ம பாஷையில் இங்கே பேசப் படுகிறது.

That friends will not agree to doing certain adjustment basis future deals, etc.

அதாவது நண்பர்கள் எதிர்கால பேரங்களில் அட்ஜெஸ்ட், செய்ய ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அந்த நண்பர்கள் யார் தெரிகிறது அல்லவா? நான் முதலிலே சொன்ன அந்தக் குழு, கமிஷன் வாங்குகிற குழு. முதலமைச்சர் உள்ளிட்ட, சுப்பி குழு உள்ளிட்ட, சித்ரா கிருஷ்ணசாமி உள்ளிட்ட அந்தக் குழு.

That friends will not agree to doing certain adjustment basis future deals. etc.

என்று குறிப்பிடுகிறார்.

Friends- they prefer to finalise everything- எவ்ரிதிங் என்றால் சம்திங் they prefer to finalise everything now and once Mr.P.Unfirms to you the best

அதாவது இப்பொழுதே பேரம் முடிந்தாக வேண்டும் அடுத்தது, டீம்ஹெட், டீம் ஹெட் என்றால் அதிகாரிகளுடைய குழுத் தலைவர் வருகிறார்.''

Team Head will be authorised by Tamil Nadu Government as an order to increase by. 1. but, Mr.P.must Stick to it, not melt as he did last time.

அவர் கம்யூனிஸ்ட் நாட்டிலே இருப்பவர், அந்த பி. என்பவர். ஆக இப்படிப்பட்ட விஷயங்களுக்கு ஈடு கொடுக்கவோ அல்லது வளைந்துக் கொடுக்கவோ முடியாத ஒருவர். ஆனால் அவர் எங்கே வளைந்து கொடுத்து விடப் போகிறாரோ, விலையை குறைப்பதற்கு என்ற கவலை சுப்பிக்கு ஏற்படுகிறது. இதனால் சொல்கிறார்.

Team head will be authorised by Tamil Nadu Government as an order to increase by.1, but Mr.P.must stick to it:-

1 மில்லியன் டாலர் அதிக விலைக்கு மிஸ்டர் 'பி' பல்கேரிய கப்பல் அதிகாரி ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். வளைந்து கொடுத்துவிடக்கூடாது.

not melt as he did last time

அந்தப் பாயின்ட் 1 மில்லியன் டாலர் விலைக்கே தமிழ் நாடு அரசு உத்தரவு கொடுக்கும். ஆனால் 'பி' ஸ்டாண்டர்டாக, ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். சென்ற முறை போல் மனம் இளகிவிடக் கூடாது என்பதற்கான மொழி பெயர்ப்புக் கடிதம் இது. அந்த டெலக்ஸுக்கான ஆதாரமாக இந்தக் கடிதத்தை 10வதாக வைக்கிறேன்.

அதற்குப் பிறகு 13.1க்குப் பதிலாக 13.2 இருந்தாலும் கொடுக்கலாம் என்று முதலமைச்சர் பாங்கோவிற்கு இன்னொரு அனுமதி கொடுக்கிறார். 13.1 என்பது நிர்ணயிக்கப்பட்ட விலை. அந்த விலையை வைத்து விடலாம் என்று பேசிய பிறகு, 13.2 டாலர் கூட தரலாம் என்று பாங்கோவிற்கு அனுமதி கொடுக்கிறார். அதற்கு என்ன ஆதாரம். திரு. பாங்கோ உயிரோடு இல்லாவிட்டாலும் ஒரு டெலக்ஸ் சாட்சி சொல்கிறது.

please treat this strictly confidential and do not divulge to Mr.P.the fact that Tamil Nadu Government have authorised the Team Head to sign the contract. if necessary at 11.2 million dollars, But for the time being play it cool with Mr.P.until I get an opportunity to talk to him. by any chance, if my arrival is delayed due to reasons beyoned control Mr.P.should continue to maintain the price is 13.2 and he should not sign contract till I see him. This is of profound importance. Please do not miss this.'

இந்த டெலக்ஸை 1 வது ஆதாரமாக வைக்கிறேன். இந்த டெலக்ஸ்படி எவ்ரிதிங் அதாவது சம்திங் முடிந்து விடுகிறது. 1 கோடி ரூபாய்க்குப் பேசப்பட்டு முன் பணம் கொடுக்கப்பட்டு விடுகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடைய தூதுக்குழு பல்கேரியா சென்று அடைகிறது. இந்தச் சம்ப வங்கள் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. இடையிலே நடை பெற்ற பேரங்கள். சுப்பி, சித்ரா கிருஷ்ணசாமி குழு நடத்திய பேரங்கள் எல்லாம் தமிழகத்திலிருந்து சென்றிருக்கிற அதிகாரி களுக்குத் தெரியாது. மிஸ்டர் 'பி' என்று சொல்லப்படுகிற மர்மமான பெயர், அந்த மிஸ்டர் 'பி' பல்கேரியா கப்பல் கம்பெனியில் கையெழுத்திடும் அதிகாரி. அவரோடு இவர்கள்

பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே மனம் இளகக் கூடியவர் என்று சுப்பியே சொல்லியிருக்கிறாரே, அவரோடு அதிகாரிகள் கலந்து பேசி, இன்னும் கொஞ்சம் குறைக்கச் சொல்ல கேட்டிருக்கிறார்கள், என்றாலும் 3 கப்பல்களுக்கும் 39 மில்லியன் டாலர் என்ற அளவுக்குப் பேசி முடித்து ஒப்பந்தத் திலும் கையெழுத்து இடப்படுகிறது. அங்கேதான் புரட்சிகர மான ராமகிருஷ்ணன் வருகிறார். திரு.ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். அவர்கள் கையெழுத்து இடுகிறார். திரு. பாங்கோ சாட்சி கையெழுத்து இடுகிறார். திரு. அனந்தராமன் கையெழுத்து இடுகிறார். ஒப்பந்தம் 24-3-1979இல் கையெழுத்து ஆகிறது. ஒப்பந்தம் கையெழுத்தானதற்கு 11-ஏ என்கிற இந்தக் கடிதத்தை ஆதாரமாக வைக்கிறேன்.

ஒப்பந்தம் கையெழுத்து ஆன பிறகு அதிகாரிகள் தங்கி யிருந்த ஓட்டலிலேயேதான், சுப்பி கோஷ்டியாரும் தங்கியிருந் தார்கள். இந்தச் சுப்பி கோஷ்டியாருக்கு முன்பு அதிகாரிகள் அந்த ஓட்டலுக்குப் போகிறார்கள். ''எனி மெசேஜ்'' ஏதாவது செய்தி உண்டா என்று ஓட்டல் ரிசப்ஷனிஸ்டிடம் கேட்கிறார்கள். அந்த ரிசப்ஷனிஸ்டுக்கு ஆங்கிலம் தெரியாது. அங்கே இருந்த டெலக்ஸ்களை எல்லாம் எடுத்து, இவர்கள் எல்லாரும் ஒரே குழுவினர் தானே என்ற கருத்தில் அங்கே இருந்த அதிகாரிகளிடம் டெலக்ஸ் மெசேஜ்களைக் கொடுக்கிறார். அவைகளைப் பார்த்ததும் அதிகாரிகள் அதிர்ச்சி அடை கிறார்கள். ஏனென்றால் அந்த டெலக்ஸ் மெசேஜில் அவர்கள் நிர்ணயித்து முடித்திருக்கிற பேரங்களுக்கும், பேசப்பட்ட பேரங்களுக்கும், டெலக்ஸில் இருந்த விவரங்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. உடனே அவர்கள் பல்கேரிய கப்பல் கம்பெனி அதிகாரிகளிடத்தில் ஓடிச் சென்று விஷயங்களை விவரிக்கிறார்கள்.

இது ஜப்பான் நாட்டு விமான ஊழல்போல் ஆகிவிடக் கூடாது. இது உலகப் பிரசித்தியாகிவிடும். நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். உங்களைச் சுப்பிக் கம்பெனியார் ஏமாற்றி இருக்கிறார்கள் என்ற உண்மையை நம் அதிகாரிகள் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் தலைமை அதிகாரி தமிழ்நாடு அதிகாரி

ஒருவருக்கு மிஸ்டர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

Strictly private and confidential

என்று எழுதுகிறார். எங்கே? அங்கே, இங்கல்ல. பல்கேரியாவில் அந்தக் கடிதம் எழுதப்படுகிறது. அதில் எழுதுகிறார் அந்த அதிகாரி திரு.ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.க்கு.

"The terms of our agreement with the broker are generally kept highly confidential. I thereupon request you to consider this letter as strictly private and confidential. we have separately issued another open letter which can be considered an addition to the ship building contract signed by us on 24th march 1979.

இப்படி இடைத்தரகர்களிடத்தில் செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தங்களில் மிக உயர்மட்ட இரகசியங்கள் அடங்கியிருக்கக் கூடும். இருந்தால்கூட நாங்கள் 24ஆம் தேதி செய்து கொண்ட ஒப்பந்தத்தையொட்டித் தொடர்பான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள உங்களோடு முன்வருகிறோம். எனவே அதற்காக ஒரு ஒப்பந்த லெட்டர் எழுதுகிறோம் என்று இந்த இரகசிய லெட்டரை எழுதுகிறார். அதற்கு இந்த ஆதாரம், இந்த இரகசிய லெட்டரைத் தொடர்ந்து ஒப்பன் லெட்டர் வருகிறது. அந்த ஒப்பன் லெட்டரில் திரு.கே.எஸ். ராமகிருஷ்ணனுக்கு எழுதப்பட்டதுதான், கிட்டதட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கு விலை குறைக்கப்படுகிறது. அது குறைக்கப்பட்டது கொள்ளை என்றும் கூறலாம். அந்த அளவிற்கு அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டு, அங்கிருந்த மேலதிகாரிகளிடம் பேசியதன் காரணமாக, இரகசிய லெட்டர் ஒன்றை எழுதிவிட்டு, இடைத்தரகர்கள் செய்துவிட்டார்கள் என்பதைக் கூறிவிட்டு ஒப்பன் லெட்டர் மூலமாக அந்த ஒப்பந்தத்திற்குத் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டு, அந்த ஒப்பந்தப்படி ஒன்றரைக் கோடி ரூபாய் குறைக்கப்படுகிறது. ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு அதிகாரிகள் தமிழகத்திற்கு ஜாம் ஜாம் என்று திரும்புகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பாராட்டுவார், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுவார் இப்படி அதிக விலை கொடுக்காமல் வந்து விட்டோமே என்று. ஆனால் அவர்கள் பாராட்டப்படவில்லை.

கண்டிக்கப்படுகிறார்கள். ஒரு அதிகாரி மீது பைலே தூக்கி வீசப்படுகிறது. அந்த அளவிற்கு அதிகாரிகள் கண்டிக்கப்படு கிறார்கள். ஒரு அதிகாரி இறந்துகூட போய்விடுகிறார். திரு.பாங்கோ இறந்துகூட போய் விடுகிறார். 10.75 மில்லியன் டாலரிலிருந்து, 13 மில்லியன் டாலருக்கு ஒத்துக்கொண்ட அரசு, அதைவிட அதிகாரிகள் குறைத்து முயற்சித்து ஒரு முடிவு செய்து கொண்டு வந்த பிறகு, அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்ட பிறகு, மத்திய அரசாங்கத்திற்கு 13 கோடி ரூபாய்க்கு அதை வாங்க வேண்டுமென்று அங்கீகாரம் கோரிக் கடிதம் எழுதப்பட்ட பிறகு 7-5-79 அன்று அமைச்சரவை மீண்டும் கூடி, ஒரு முடிவு எடுக்கிறது. கப்பல்கள் வாங்கலாம் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்த பிறகு 7-5-79இல் அமைச்சரவை கூடுகிறது. அந்தக் கப்பல்களை உடனே வாங்கி விட வேண்டும் என்றா முடிவு? இல்லை, இல்லவே இல்லை. டெல்லியிலுள்ள ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்ட் கமிட்டி இதற்கான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திப்போடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் தெரிவிக்க அமைச்சரவை முடிவு எடுக்கிறது. உடனடியாக அனுமதி கொடுத்து விடாதீர்கள் என்று, அனுமதி கேட்டு எழுதிய அரசு, டெல்லி ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்ட் கமிட்டிக்கு நீங்கள் இந்தக் கப்பல்கள் வாங்குவதற்கு உண்டான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திப்போடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தெரிவிக்கச் சொல்லி, அமைச்சரவை முடிவு எடுக்கிறது. வேறு ஒரு கம்பெனி இதைவிட குறைவான மனுவினைத் தந்திருப்பதாகவும் காரணம் கூறப்படுகிறது. பூம்புகார் கார்ப்பரேஷன் டெல்லியில் உள்ள ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்ட் கமிட்டுக்கு அனுமதி வழங்குவதை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரி எழுதுகிறது. உண்மையில் அமைச்சரவை எடுத்த முடிவின்படி ஒரு 'ஆபர்' வேறு கம்பெனியிடமிருந்து வந்ததா? பல்கேரியா கப்பல்களை வாங்கத் தேவை இல்லை என்று அமைச்சரவை முடிவு எடுத்து இப்போது அனுமதி வழங்க வேண்டாம் என்று டெல்லியில் உள்ள அந்தக் கமிட்டிக்குக் கடிதம் எழுதச் சொல்லிப் பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் பரிந்துரை செய்தார் களா? வேறு ஒரு இனம் குறைந்த 'ஆபர்' ஒன்று வந்திருக்கிறது என்று

சொன்னார்களே, அப்படிப்பட்ட 'ஆபர்' வந்ததா, இல்லை. வந்திருந்தாலும் அது பல்கேரியா கம்பெனி ஆபரை விட குறைந்ததா இல்லை. அதற்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. மானேஜிங் டயரக்டர் திரு. கே.எஸ். இராம கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். அவர்களே பதில் சொல்லியிருக் கிறார்கள். இதன் மூலம்தான் மோசடியின் முழு விவரங்கள் தெளிவாகிறது. மெக்கனைஸ் ஆன்ட் மெக்கன்ஸி, பல்கேரியா கப்பல் கம்பெனி ப்ரோக்கர்ஸ் சித்ரா கிருஷ்ணசாமி- சுப்பி அந்தப் பேரம் முடிகிற வரையில் அந்தக் கம்பெனியில் சீனியர் எக்ஸிக்யூட்டீவ் ஆக பணியாற்றினார். தமிழ்நாடு அதிகாரி களால் மேலும் ஒன்றரைக் கோடி ரூபாய் கொள்ளை தடுக்கப் பட்டதும், அந்தக் கம்பெனி பொறுப்பிலிருந்து சுப்பி விலகி விடுகிறார். நெப்ட்யூன் சார்ட்டேர்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட் என்ற புதிய கம்பெனியைத் தொடங்குகிறார். 'ப்ளாட்லைன்ஸ்'- 'ப்ளாட் லைன்ஸா? ப்ராட்லைன்ஸா?' எனக்குத் தெரியாது. அந்தக் கம்பெனியோடு உறவு கொள்கிறார். அதுவும் அண்மை யில் தொடங்கப்பட்ட புதிய கம்பெனி. 7.5.79 அன்று அமைச் சரவை கூட்டம் கூடித் தீர்மானம் நிறைவேறியதல்லவா, அன்று காலை அதே சுப்பி என்ற சுப்பிரமணியத்தால் போலந்து நாட்டில் தயாராகும் கப்பல் பற்றி ஒரு 'ஆபர்' தரப்படுகிறது. 'ஆபர்' வந்ததும் வராததும் இராமகிருஷ்ணன் லேசுப்பட்டவர் அல்ல- வந்தவுடனே அந்த 'ஆபரை' பரிசீலிக்கிறார்.

பரிசீலனையில் தவறான தகவல் பல தரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அந்தப் பரிசீலனையின்படி, சுப்பி சொல்லு கிற போலந்து கப்பல்களை வாங்கினால் ஆண்டுதோறும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒன்றரை கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று கண்டுபிடித்து, ராமகிருஷ்ணனால் சொல்லப்பட் டிருக்கிறது. இந்தச் செய்தி எப்படியோ சுப்பிக்கு தெரிந்து விடுகிறது. சித்ரா இருக்கிறாரே, தெரியாதா? சித்ரா மூலம் தெரிகிறது. சித்ரா கிருஷ்ணசாமி மூலம் தெரிந்தவுடன் அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் இதே சுப்பியால் தரப்படுகிறது. மாயமா? மந்திரமா? அமைச்சரவை கூடுவதற்கு முன்பு காலையில் ஒரு ஆஃபர். இது சரியான தகவல்கள் அல்ல என்று தெரிவித் திருக்கிறார். இந்தச் செய்தி சுப்பிக்குத் தெரிகிறது. தெரிந்த

உடனேயே அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் தரப்படுகிறது. பல்கேரியா கப்பலை விட அனுகூலமாகத் தயாரிக்கப்படுகிறது இந்த ஆஃபர். ஆனால் உண்மை நிலை என்ன? இது ஒரு போகஸ் ஆஃபர். இதை நான் சொல்லவில்லை. பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ராமகிருஷ்ணன் சொல்லுகிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறார்...

"I have no doubt whatsoever in my mind that the offer regarding the Polish vessel from Messrs. Flaudlines is a bogus one... என்று போகஸ் என்று குறிப்பிடுகிறார், மேலும் மனம் நொந்து எழுதுகிறார்...

"Even though as the Managing Director of the Poombuhar Shipping Corporation, I am bound to send the message to the Shipping Development I and Commitee, as desired by the Cabinet. I would like this letter of mine to be on record as having been given before the unfortunate and irrevocable step was taken."

அவர் எழுதுகிறார், பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் என்ற முறையில் நான், எஸ்.டி.எப்.ஸிக்கு (S.D.F.C) டெல்லிக்கு அமைச்சரவையின் முடிவை தெரிவிக்கக் கடன் பட்டவனாக இருந்தாலும், இந்தத் துர்ப்பாக்கியமானதும், மாற்ற இயலாததுமான இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு இந்தக் கடிதத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இது அப்போது தலைமைச் செயலாளராக இருந்த பணிக்கருக்கு எழுதப்பட்ட கடிதம். 7ஆம் தேதி எழுதப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்திற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்வதற்காக இல்லை. பிறகு 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் சுப்பியால் சொல்லப்படுகின்ற கம்பெனிகள் அவ்வளவும் போகஸ் மோசடியானவை என்பதையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு அப்படிப்பட்ட போலந்து கப்பல்களே இருக்கின்றனவா என்கின்ற சந்தேகம் இருக்கிறது. அந்தக் கப்பலும் இல்லை. விற்பனை செய்கின்ற கம்பெனியும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அப்படியானால், அந்தப் போலந்து கப்பல்களை உள்ளே திணிப்பானேன்? அதற்கும் ராமகிருஷ்ணன், மானிஜேங் டைரக்டர் பூம்புகார் கார்ப்பரேஷன். எழுதுகிறார்...

'It is now clear that the offer of the Polish vessels was only an attempt to scuttle the Bulgarian deal which had been entered into in pursuance of the Cabinet decision.

மீண்டும் படிக்கிறேன்.

'It is now clear that the offer of the Polish vessels was only an attempt to scuttle the Bulgarian deal which had been entered into in pursuance of the Cabinet decision.'

அமைச்சரவை முடிவுப்படி ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்ட பல்கேரிய வியாபாரத்தை ஒழித்துக்கட்டவே போலந்து நாட்டுக் கப்பல் ஆஃபர் தரப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை என்று ராமகிருஷ்ணன், பணிக்கருக்கு எழுதிய கடிதத் தில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான ஆதாரம், 13, 14, 15, 16, 17, ஆகிய கடிதங்கள். ராமகிருஷ்ணன் எழுதிய கடிதங்களை இங்கே வைத்திருக்கிறேன். அமைச்சரவையின் முடிவுப்படி பூம்புகார் கார்ப்பரேஷன் தந்திக்கு மத்திய அரசு என்ன செய்தது தெரியுமா? எதிலுமே துரிதமாக வேலை செய்யாத மத்திய அரசு இந்த விஷயத்தில் துரிதமாகச் செயல்பட்டது. அதில் பல்கேரியா கப்பலை வாங்கலாம். இவர்கள் வாங்க வேண்டாமென்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தந்தி கொடுக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு பல்கேரியா கப்பலை வாங்கலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு 8.5.79ம் தேதியன்று அனுமதி கொடுத்திருக்கிறது. இந்த நிலையில் இவ்வளவு உண்மைகளையும் எடுத்துச் சொல்லி, இதில் போகஸ், ப்ராட் இவைகள் எல்லாம் நடைபெறுகின்றது. இத்தனையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ராமகிருஷ்ணனுக்குத் தரப்படுகின்ற பரிசு என்ன தெரியுமா? மானேஜிங் டைரக்டர் பதவியிலிருந்து மாற்றப்படுகிறார். நல்ல காரியங்களைச் செய்தார் என்று இந்த அரசு நம்பியிருந்தால், இவர் உண்மையை அமல்படுத்தினார் என்று இந்த அரசு கருதி யிருந்தால், பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும், இதே பணியில் தொடர்ந்து அவர் இருப்பாரேயானால், நேர்மையான காரியங்களைச் செய்ய முடியும் என்று கருதி, அவரை வைத்

திருக்க வேண்டும். ஆனால் அவர் பதவியிலிருந்து மாற்றப் படுகிறார். வேறு பொறுப்பும் கொடுக்கப்படவில்லை. எதுவு மில்லாமல் நிற்கிறார். பிறகு அந்த அதிகாரிக்கு மத்திய அரசு வேலை கொடுப்பதாகச் செய்தி வருகிறது. டெல்லிக்குச் சென்றால் பல குட்டுகள் உடைந்து விடும் அல்லவா? எனவே அவருடைய சேவை தமிழ்நாட்டுக்குத் தேவை. அவருக்குத் தவிர்க்க முடியாத பணி இங்கே இருக்கிறது. ஆகவே மத்திய அரசுக்கு அனுப்ப இயலாது என்று தமிழ்நாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தவிர்க்க முடியாத பணி என்ன தெரியுமா? பெரிய பதவி, அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர். பூம்புகார் கார்ப்பரேஷனுடைய மானேஜிங் டைரக்டராக இருந்தவருக்கு தவிர்க்க இயலாத பணி இங்கேயிருக்கிறது என்று சொல்லி, இப்போது தரப்பட்டிருக்கிற வேலை அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர் என்ற வேலை. இன்னும் அந்த வேலையில் போய் சேராமல், இன்னும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., லீவில் இருந்து வருகிறார் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கிடையில், பல்கேரியாவிலிருந்து பல கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு கடிதத்திலும் ஏன் இன்னும் வாங்கிக் கொள்ளவில்லை. கப்பல்கள் வந்திருக்கின்றன. ஒப்பந்தப்படி வாங்கிக் கொள்ளுங்கள் என்று பல கடிதங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. ஜனவரியிலே ஆரம்பித்த வியாபார பேரம், இன்னமும் கடிதப் போக்குவரத்திலேயே இருக்கிறதே ஒழிய கப்பல்கள் வாங்கவில்லை.

''14.5.79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற்கொண்டு நடவடிக்கைக்கு எங்கள் அரசாங்கத்திடம் எல்லா தஸ்தாவேஜு களையும் தந்து விடுகிறோம்'' என்று பல்கேரியா நிறுவனம் எழுதுகிறார்கள். கம்யூனிஸ்ட் அரசாக இருக்கிற காரணத்தால், பல்கேரியா நிறுவனம் தமிழக அரசுக்கு இவ்வாறு எழுது கிறார்கள். ''14.5.79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திடம் எல்லா தஸ்தா வேஜுகளையும் ஒப்படைத்து விடுவோம்'' என்று பல்கேரியா நிறுவனம் எழுதிய பிறகு, 15.5.79 அன்று பூம்புகார் ஷிப்பிங்

கார்ப்பரேஷன் பதில் அனுப்புகிறது. என்ன பதில்? 'எங்கள் அரசாங்கத்தின் தொடர்புடைய அதிகாரி பாங்கே காலமாகி விட்டார். அதனால் முன்னால் பரிசீலனை செய்ய முடியாமல் போய்விட்டது' என்று பாங்கோ காலமாகிவிட்டார் என்பதற்கும், இந்த ஒப்பந்தத்திற்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஜனாதிபதி இறந்து விட்டதைப் போல. கப்பலை வாங்காமற் போனதற்கும் காரணம், பாங்கோ காலமாகிவிட்டார் என்றும், அதனால் உடனடியாக காரியம் செய்ய முடியவில்லை என்றும் அந்தக் கடிதத்திலே எழுதுகிறார்கள்.

பல்கேரியா நிறுவனம் மீண்டும் டெலக்ஸ் கொடுத்திருக்கிறார்கள். 19.5.79ஆம் தேதி வரை ஒப்பந்தம் அமுலில் இருக்கிறது; அதற்குள் முதல் தவணையைக் கட்டி விடும்படி டெலக்ஸ் வருகிறது. அந்த நாளும் போய்விடுகிறது.

1979, மே 30ஆம் தேதி மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகிறது. ஒவ்வொரு கப்பலின் விலையிலும் 6% விலை உயர்த்துவோம். இதுவும் ஜூன் 6ஆம் தேதி வரை, அதற்குப் பிறகு மேலும் விலை உயரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. எவ்வளவு தெரியுமா? 13.534 மில்லியன் டாலர். இதைப் பார்க்கவேண்டும். 10.5லிருந்து 10.15 ஆகி, பின்னால் 13.1, 13.2 என்றும், பிறகு மேலும் விலை உயருகிறது. அதிகாரிகளின் திறமையால் விலை குறைக்கப்பட்டது; ஆனால் இவர்கள் காலம் கடத்தியதன் காரணமாக 13.534 மில்லியன் டாலருக்குப் போகின்ற நிலைமை உருவாக்கப்படுகின்றது.

13.6.79 அன்று மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகின்றது. தாமதம் காரணமாக, எங்களுக்கு 5 லட்சம் நஷ்டம் ஏற்படுகிறது. இரு தரப்பிலும் இதற்காகப் பொதுப் பணத்தைச் செலவழித்துவிட்டோம். நாங்கள் முதல் தடவையாக இந்தியாவோடு வியாபாரம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தியா, கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே முதல் தடவையாக வியாபாரம் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தப் பேரம் குறித்து இந்தியாவிலும், பல்கேரியாவிலும் பொதுமக்கள் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இதை டெலக்சிலே சொல்லுகிறார்கள். மேலும், இதிலே

ஒப்பந்தமாகி விட்டது. ஒப்பந்தமாகி விட்டது என்றால், இதிலே மத்திய அரசும், பல்கேரிய அரசும் ஒப்புக்கொண்டு விட்டது என்பதாகும். முதல் தவணையை 19.6.79க்குள் செலுத்துங்கள் என்கிறார்கள். அதற்கு ஆதாரம், இதோ இந்தக் கடிதம். ஆனால், நிலைமை என்ன? 26.10.79 தேதியில் டெல்லி யிலிருந்து, பூம்புகார் கார்ப்பரேஷனுக்குக் கடிதம் வருகிறது. அதிலே,

'There are some reports that the 0ulgarian Ship order has run into difficulties owing a price increase demanded by the Bulgarian Authorities. Could you kindly let us know by telex whether these reports are correct.

என்று டெல்லி, மத்திய அரசின் ஷிப்பிங் அண்டு டிரான்ஸ்போர்டு இலாகாவிலே இருந்து பூம்புகார் கார்ப்ப ரேஷனுக்கு இப்போது ஒரு டெலக்ஸ் வந்திருக்கிறது. ஆக, இந்தக் கப்பலை வாங்கியிருந்தால், இந்நேரம் அந்தக் கப்பல் இங்கே வந்திருக்க முடியும். ஆனால், வாங்காமல் இருந்ததற்கு என்ன காரணம்? 13.1, 13.2 என்றிருந்து, பிறகு அதனுடைய விலை 1½ கோடி குறைக்கப்பட்டுவிட்டதன் காரணமாக, கொள்ளை தடுக்கப்பட்டது என்ற அந்த அளவிலேதான் இந்தக் கப்பல் வாங்கப்படாமல், கடைசியிலே மத்திய அரசாங்கத்திட மிருந்து கடிதம் வருகின்ற அளவிற்கு வந்திருக்கிறது.

'There are some reports that the Bulgarian Ship order has run into difficulties owing a price increase demanded by the Bulgarian Authorities. Could you kindly let us know by telex whether these reports are correct.

என்று கேட்கின்ற அளவிற்கு நிலைமை உருவாகியிருக் கின்றது. எனவே, இதுவரை இந்தக் கப்பல் வியாபாரத்தைச் செய்யாமல், இனிமேல் வாங்கப் போகிறோம் என்று சொன்னா லும் கூட, இந்த அக்டோபர் மாதம் வரை வாங்காமல் இருந்தது சரியல்ல.

அதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம், வாடகைக் கப்பல்களில் நிலக்கரி கொண்டுவர பல்வேறு செலவுகள் இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். தாங்கள் திட்டமிட்டபடி ஏறத்தாழ 4 கோடி ரூபாய்

தங்களுக்குக் கிடைக்க வேண்டிய கமிஷன்- பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் லஞ்சம், அது கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இந்த அளவுக்கு இந்தக் கப்பல் பேரத்தில் இவ்வளவு விளையாட்டுக்களை விளையாடி இருக்கிறார்கள். நான் முதலமைச்சரையும் சேர்த்துக் குற்றம் சாட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். விலையை உயர்த்தி கொள்ளையடிக்க சதி நடத்தப்பட்டது. அந்நியச் செலாவணி மீறல் என்கிற அளவுக்குக் கூட சட்டத்தை மீறுகிற முயற்சிகள் நடை பெற்றிருக்கின்றன. பல்கேரியாவில் இதற்குப் பெயர்- அட்ரஸ் கமிஷன் என்ற செல்லப் பெயரை வைத்திருக்கிறார்கள். பல்கேரியாவில் அட்ரஸ் கமிஷன் என்று வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் 22 மாநிலங்களில் இதுவரை நடைபெறாத மகா பெரிய ஊழல், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஊழல், அந்த இணையற்ற ஊழலை நடத்திக் காட்டிய நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.தான் என்னைப் பார்த்து 'ஊழலின் மொத்த உருவம்' என்று புதுக்கோட்டையில் பேசியதாக நான் கேள்விப்படுகிறேன். நாங்கள் இதை வாங்குகிறோம் என்று சொன்னாலும், அதே விலைக்கு வாங்கினாலும் இந்த நான்கு கோடி ரூபாய் கமிஷன் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது. வாங்காவிட்டாலும் பெரிய செலவு. தேவையற்ற செலவு. நம்முடைய மக்கள் வரிப்பணத்தில் இருந்து ஆகியிருக்கிறது என்ற அந்தக் குற்றத்திலிருந்து நீங்கள் தப்ப முடியாது. ஆகவே, ஊழல், ஊழல் என்று எங்களைப் பார்த்துப் பேசுகிற நீங்கள் இன்றைக்கு கடைந்தெடுத்த, ஜமக்காளத்தில் வடிகட்டிய ஊழல் பேர்வழிகளாக இருக்கிறீர்கள் என்று இந்தக் கண்டனத் தீர்மானத்தில் எடுத்துக்கூறி அமர்கிறேன். வணக்கம்.



பாராட்டுரைகள்

பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு

உரை : 76 **நாள் : 31.03.1962**

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத்தலைவர் அவர்களே, இன்றையதினம் ஒரு புனிதம் நிறம்பியதும், பொறுப்பு மிகுந்ததுமான ஒரு பதவியிலே அமர்ந்திருக்கும் தங்களை வாழ்த்தி வரவேற்று பாராட்டுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக நாங்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இந்த மாமன்றத்திலே இன்முகம் காட்டி, புன்னகை புரிந்து, எத்தகைய சிக்கல்களையும் தீர்க்க வழிகண்ட பெரியவர், மறைந்த திரு. கிருஷ்ணாராவ் அவர்களுடைய நல்ல திறமை வாய்ந்த முறைகளைப் பின்பற்றித் தாங்கள் எங்களை நடத்திச் செல்வீர்கள் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஐயமும் ஏற்படவில்லை. தாங்கள் திருநெல்வேலி மாவட்டத்திலே, பத்தமடைப் பள்ளியிலே பயின்று, இந்தப் பதவியை ஏற்கும் வரையில் பத்தமடைப் பாய் கூட்டுறவு ஸ்தாபனத்தினுடைய தலைவராகத் தாங்கள் இருந்தீர்கள் என்பதை எண்ணுகின்ற நேரத்தில், அந்தப் பாயைப் போன்ற மிருதுவான தன்மையை உங்கள் இருதயம் பெற்றிருக்கும் என்று நம்புகின்றேன். மிருதுவான இருதயம், மென்மையான இருதயம் இந்த மாமன்றத்தில் எங்களுக்கு நல்ல தீர்ப்புகளை அளிக்கும் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம். தங்களுடைய பெயருக்கேற்ப, எதிர்கட்சியைச் சேர்ந்த எங்களைச் செல்லமாக நடத்துவீர்கள் என்று கருதுகிறோம். அப்படியானால் ஆளும் கட்சிக்காரர்கள் செல்லமாக நடத்தப்படவேண்டாமா என்று ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் விழிகளால் எங்களைப் பார்த்துக் கேட்கிறார். ஆளும் கட்சிக்கு அதிகமான செல்லம் கொடுத்தால் பிள்ளை கெட்டுவிடும். ஆகவே,

அளிக்கும் செல்லத்தை இரு தரப்பாருக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக கூட்டுறவு இயக்கங்களில் தாங்கள் பணியாற்றிப் பெற்றிருக்கிற பயிற்சி காரணமாக இந்த மாமன்றத்தில் நல்ல கூட்டுறவையும் இங்கு இருக்கிற உறுப்பினர்களிடத்தில் தங்களால் ஏற்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன். எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் இந்தத் தடவை, முன்னை விட, அதிகமாக வந்திருந்தாலும், ஏறத்தாழ 70-க்குக் குறைந்தவர்கள்தான் எதிர் தரப்பில் அமர்ந்திருக்கிறோம். வள்ளுவர் கூறிய –

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து.

என்ற குறளுக்கேற்ப ஆளும் கட்சியினர் ஆட்சிக் சக்கரத்தின் அச்சாணியாக எதிர்க்கட்சியை எண்ணுவார்கள் என்று கருதுகிறேன். இது தேரைச் செலுத்துகிற சாரதிக்கு நன்றாகப் புரியும். அந்தக் காரணத்தினாலோ என்னவோ, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 'பார்த்தசாரதி' என்ற பெயரோடு வந்திருக்கிறார். எதிர்க்கட்சியாகிய எங்களை அச்சாணியாக ஆக்கிக்கொண்டு ஆட்சிச் சக்கரத்தை நல்ல முறையில் சுழற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் சபாநாயகருக்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஜனநாயகத்தில் ஒரு புது மரபை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிய எண்ணம் எப்படியோ அந்த வாய்ப்பு தவறி விட்டபோதிலும், ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சி தங்களுடைய நிழலாக இருக்க வேண்டும் என்று கருதாமல், எதிர்க்கட்சியை நிலைக்கண்ணாடியாகக் கருதி, ஆளும்கட்சியின் முகத்தில் இருக்கிற மருக்களையும் பருக்களையும் நிலைக்கண்ணாடியில் பார்த்து முகத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் இந்த மாமன்றத்தில் நல்ல நட்புறவோடு நாட்டுக்கான நல்ல பல காரியங்களைச் செய்ய தாங்கள் வழிகாட்டுவீர்கள் என்று நம்பி, விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொண்டு, வாழ்த்தி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு

உரை : 77 **நாள் : 06.07.1977**

கலைஞர் மு. கருணாநிதி: பேரவையின் தலைவர் அவர்களே! இந்தப் பேரவையில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, வரவேற்று, வாழ்த்திப் பாராட்டப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போலவே, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இளம் நண்பர் திருநாவுக்கரசு அவர்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாழ்த்தி, வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேரவையினுடைய மாண்புகளும், மரபுகளும் தாங்கள் அறியாதது அல்ல. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தப் பேரவையிலே தாங்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப் பேற்று ஆழ்ந்த அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுத் திகழ்கின்றீர்கள். நீங்கள் அமர்ந்திருக்கும் இந்த நாற்காலியின் சரித்திரத்தைப் புரட்டிப் பாராத்தால் 1922 ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும், வெல்லிங்டன் சீமாட்டியும் சென்னை மாநகரத்திலே அமர்ந்து, சென்னை மாகாண சட்டப் பேரவைக்கு, அப்போது கவுன்சில் என்று இதற்குப் பெயர், வழங்கிய, ஆடம்பரமான, அலங்காரமான நாற்காலியாகும். ஒருவேளை அந்த நாற்காலிதான் இப்போது இருக்கிறதோ? இல்லையோ? அது எனக்குத் தெரியாது. அந்த நாற்காலியை 1922ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும் அவருடைய துணைவியாரும் பரிசாக வழங்கினார்கள். அப்படி வழங்கிய நேரத்தில் வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டார்-' இந்த மாமன்றம் 1921 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது என்பதை அறிய மெத்த

மகிழ்ச்சியடைகிறேன்' என்று வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டு இந்த நாற்காலியை அப்போது பரிசாக வழங்கினார்கள் என்று சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

அப்பேர்ப்பட்ட, பெருமை மிகுந்த, நீண்டகால வர லாற்றுப் புகழ் வாய்ந்த ஒருநாற்காலியில் தாங்கள் இன்றைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். இந்த நாற்காலியைக் கடந்த காலத்தில் பல சான்றோர்களும், பல ஆன்றோர்களும், பல மேதைகளும் அலங்கரித்திருக்கிறார்கள். இந்த நாற்காலியில் அமர்ந்தவர்கள் அமைச்சர்களாக ஆனதும் உண்டு; அமைச்சர் களாக இருந்தவர்கள் இந்த நாற்காலியில் அமர்ந்ததும் உண்டு. தங்கள் நிலை என்னவோ எனக்குத் தெரியாது. எனினும் தாங்கள் மேலும் பல பொறுப்புக்களை ஏற்றிட வேண்டுமென்ற அவாவினைத் தெரிவித்து, இந்த மன்றத்திலே உங்களை வாழ்த்தி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவையின் முன்னவர் திரு. மனோகரன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதுபோல் ஆளும் கட்சிக்கும் எதிர் கட்சிக்கும் சம நிலையில் தாங்கள் தீர்ப்புக்களை வழங்குவீர்கள் என்றும், இரு கட்சிகளையும் சமமாக நடத்துவீர்கள் என்றும் நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. ஏனென்றால் தங்கள் கடந்தகால சட்டமன்ற வாழ்க்கையில் அடிக்கடி சபாநாயகரிடத்தில் தகராறு செய்பவர்கள் தாங்களாகவேதான் இருந்திருக்கிறீர்கள். அவைகளில் நியாயமான கோரிக்கைகள் இருந்திருக்கும் அல்லது சபாநாயகரால் வேறுவிதமாகத் தீர்ப்பளிக்கப்பட்ட கோரிக்கைகளும் இருந்திருக்கும். ஆனால் அதேநேரத்தில் சபாநாயகருக்கு அடங்கிச்செல்லும் பெருந்தன்மையையும் உங்களிடத்தில் நாங்கள் பல நேரங்களில் கண்டிருக்கிறோம். அந்தப் பெருந்தன்மை இன்றைக்கு நீங்கள் அமர்ந்திருக்கின்ற இருக்கைக்கு மேலும் புகழ் சேர்ப்பதாக அமையும் என்று கருது கிறேன். ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமாக, உங்களு டைய பெயரே முனு ஆதி; முனுவை ஆளும் கட்சிக்கும், ஆதியை எதிர்க்கட்சிக்கும் தாங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆதியில் இருந்த கட்சி அல்லவா? அப்படிப் பகிர்ந்தளிப்பீர்கள்

என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பிடில் வாசிக்கின்றபோது அதிலுள்ள வில்லைப்போன்று- இந்தப் பக்கம் இழுத் தால் ஒரு நாதம் வரும். அந்தப் பக்கம் இழுத்தால் இன்னொரு நாதம் கிளம்பும். அதேபோல் ஆளும் கட்சிப் பக்கம் இழுத்தாலும், எதிர்க்கட்சிப் பக்கம் இழுத்தாலும் இனிய நாதம் கிளம்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இந்தச் சட்டமன்றத்தை அப்படி நீங்கள் நடத்துவதற்கு எதிர்க்கட்சியின் சார்பில் குறிப்பாக அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படும். எங்களுடைய ஒத்துழைப்பு ஒவ்வொன்றும் உங்களுக்கு இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். துணைத் தலைவரைப் பொறுத்தவரையில் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்தப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க முன்வந்தார்கள். அந்த முறை இப்போது கடைப்பிடிக்கப்படவில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. இந்த மாமன்றத்திற்கு ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிற தங்களையும் துணைத் தலைவர் அவர்களையும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்கிறேன்.

பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு

உரை : 78 **நாள் : 25.04.1984**

கலைஞர் மு.கருணாநிதி : தலைவர் அவர்களே, தாங்கள் இன்று இந்த அவையினுடைய தலைவராக மீண்டும் பொறுப்பேற்று இருக்கையில் அமர்கிற நேரத்தில் 12 ஆண்டுகளுக்கு முன்பு 1972ஆம் ஆண்டு இதே ஏப்ரல் திங்களில் தாங்கள் மேலவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற நிகழ்ச்சி என்னுடைய நெஞ்சில் நிழலாடுகிறது. அப்போது கூறிய தங்களைப் பற்றிய சிறப்புரைகளை மீண்டும் நான் இங்கே நினைவுபடுத்துவது, தங்களோடு அந்தக் காலத்திலே விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும் என்றாலும்கூட, தங்களைப் போன்றவர்களுடைய வாழ்க்கையை இளைய தலைமுறையினர் தெளிவாக அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மீண்டும் நினைவூட்டுவது, என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன்.

1927ஆம் ஆண்டுதான் தாங்கள் சென்னையிலே நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் அன்சாரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் - காங்கிரஸ் கட்சியிலே தங்களை உறுப்பினராக ஆக்கிக் கொண்டீர்கள். அப்படி உறுப்பினராக ஆக்கிக்கொண்ட இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாம் சைமன் கமிஷன் பகிஷ்கரிப்புப் போராட்டம் கொழுந்துவிட்டு எரிந்த அந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள். 1930 ஆம் ஆண்டு உப்புச் சத்தியாகிரகத்திலே தாங்கள் பங்குகொண்டு அடக்குமுறைக்கு ஆளாகி போலீசாருடைய தடியடிப் பிரயோகத்தை ஏற்றுக் கொண்டு தங்களுடைய உடலிலே தியாகத் தழும்புகளை, விழுப்

புண்களைப் பெற்றவர்கள் நீங்கள். 1932ஆம் ஆண்டு, அன்றிருந்த அடக்குமுறைச் சட்டம், கூட்டம், ஊர்வலம் இவைகள் நடத்துவதற்கு தடை உத்தரவு என்ற பெயரால் 144-வது சட்டப்பிரிவை உபயோகித்த நேரத்தில் அந்த உத்தரவை மீறி அன்றைக்கு கைதுசெய்யப்பட்டு சிறைக்கோட்டம் சென்றீர்கள். அந்தக் காலக் கட்டத்திலேதான் விடுதலைப் போராட்ட இயக்கத்திலே தமிழனுக்கும் பங்கு இருக்க வேண்டும்; தமிழ் மொழிக்கும் அந்த விடுதலை வீர உணர்வை உருவாக்குகின்ற ஆற்றல் உண்டு என்பதை நிரூபிக்கின்ற வகையில் "தமிழா, துள்ளி எழு" என்கின்ற தலைப்புள்ள ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு, திருவல்லிக்கேணிப் பகுதியிலே அதைத் தங்கள் கையாலேயே விநியோகித்த நேரத்தில் கைது செய்யப்பட்டீர்கள். அதன் காரணமாகக் கொஞ்ச நாள் சிறைவாசம் அனுபவித்தீர்கள், 1941 ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, தாங்கள் அந்த எதேச்சாதிகார அரசாலே கைது செய்யப்பட்டீர்கள். 1942 விடுதலைப் போராட்டத்தில் தாங்கள் கைது செய்யப்பட்டு 15 மாதங்கள் சிறைச்சாலை, வேலூர் என்றும், தஞ்சாவூர் என்றும், அமராவதி என்றும் பல்வேறு சிறைச்சாலைகளில் அதிலும் தமிழகத்திலே இல்லாத வேறு மாநிலத்திலே உள்ள அமராவதி சிறைச்சாலையில், கொடுமையான சிறைச்சாலையில் 11 மாதங்கள் துன்பத்தை அனுபவித்து எடை குறைந்த நிலையில், ஆனாலும் எஃகு உள்ளம் மாறாத அளவு அன்றைக்குத் தியாக சீலராக அந்தச் சிறைச்சாலையிலே இருந்து வெளி வந்தீர்கள். இந்திய நாடு விடுதலை பெற்ற பிறகும்கூட, தங்களுடைய போராட்ட உணர்வு மங்கிவிடவில்லை. சுதந்திர இந்தியாவிலே போராடலாமா என்கின்ற அந்த எண்ணம் கிஞ்சித்தும் எழாமல், நல்லவை களுக்காக, தேவைகளுக்காக, உரிமைகளுக்காக எந்தக் காலத்திலும் போராடலாம் ; போராட்டத்திற்கும் சேர்த்துத்தான் சுதந்திரம் பெற்றிருக்கின்றோம் என்கின்ற அந்த உணர்வோடு, தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திலே இணைய வேண்டும் என்பதற்காகவும், திருத்தணி எல்லைப் பிரச்சனைக்காகவும், கன்னியாகுமாரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதற்காகவும் தாங்கள் நடத்திய போராட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் தங்களோடு தோளோடு தோள் நின்றது. எங்களை

ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே எங்களை எண்ணுகிற நேரத்தில் நான் இறும்பூதெய்துகின்றேன். ஒரு காங்கிரஸ்காரராக இருந்தீர்கள் என்பது மாத்திரமல்ல, கதர் சட்டை அணிந்த காரணத்தாலே நீங்கள் காங்கிரஸ்காரர் என்று நீங்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. பத்தோடு பதினொன்று. அத்தோடு இதுவொன்று என்கின்ற காங்கிரஸ்காரராக இருந்ததில்லை. பத்தரைமாத்துப் பசும்பொன்னாக காங்கிரஸ் இயக்கத்திலே தியாகச் சுடராக வாழ்ந்தீர்கள். நீங்கள் கதர் ஆடை உடுத்தி இருந்தாலும், நீங்களே தக்களியிலே நூல் நூற்று, இராட்டையிலே நூல் நூற்று அப்படிக் கதர் ஆடை உடுத்திய காங்கிரஸ் தியாகி நீங்கள். தேசத்திற்கு நீங்கள் ஆற்றியிருக்கிற தொண்டு அளவிடமுடியாத ஒன்றாகும், நீங்கள் யாத்திருக்கிற இலக்கியங்கள் சிலப்பதிகாரத்துக்கு நீங்கள் சேர்த்திருக்கின்ற சிறப்பு, கட்டபொம்மனுக்கு, கப்பலோட்டிய தமிழனுக்கு தமிழகத்திலே நீங்கள் தந்திருக்கிற வடிவம் - இவைகள் எல்லாம் என்றும் போற்றிப் பாராட்டத்தக்க ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்துகின்றேன். தாங்கள் மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இன்று நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடந்த 22 ஆண்டுகளாக இந்த அவை நடந்துகொண்டிருக்கிறது. இந்த 22 ஆண்டுகளாக இருந்து வந்த சம்பிரதாயம் இன்றுமுதல் மாற்றப்பட்டு தமிழிலே நடவடிக்கைகள் அனைத்தும் நடக்கிறதென்றால், அப்படிப்பட்ட சம்பிரதாயத்தை மாற்றிய பெருமை நமது மதிப்பிற்குரிய திரு. ம. பொ. சி அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழில் நடக்கவில்லை என்று சொன்னார்கள் என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். ஆக 1972ஆம் ஆண்டிலே தங்களை மேலவைத் துணைத் தலைவராக இங்கே உட்கார வைத்த அந்தக் காலக் கட்டத்திலே இந்த அவை தமிழிலே, தமிழுக்குச் சிறப்பம்சம் தந்து முக்கியத்துவம் தரப்பட்டு, நடக்குமென்கின்ற அந்த நிலைக்கு வித்திடப்பட்டுவிட்டது என்பதை நான் மறந்துவிட்டவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காகச் சொல்கின்றேன், தாங்கள் இந்த அவையிலே, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஒன்றைச் சொன்னீர்கள்.

"மேலவையிலே உறுப்பினராவது இது முதல் முறையல்ல, 20ஆண்டுகளுக்கு முன்பு, 1952-ல் மேலவைக்கு சட்டப் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தேன், அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள ஒரு மாறுதலை நான் பார்க்கிறேன், அன்று முதியவர்கள் நிறைந்திருந்தார்கள், இளைஞர்களிலே ஒருவனாக நான் வந்தேன், இன்று இளைஞர்கள் நிறைந்திருக்கின்றார்கள். முதியவர்களில் ஒருவனாக நான் வந்திருக்கிறேன்" என்று சொன்னீர்கள், இப்போது உங்கள் பட்டியலில் நானும் ஒருவனாகச் சேர்ந்திருக்கிறேன், நானும் நாவலர் அவர்களும் சேர்ந்திருக்கின்றோம், தாங்கள் 1971 ஆம் ஆண்டு....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்னைவிட இளைஞர்தான் நீங்களும்.

கலைஞர் மு. கருணாநிதி : 1971 ஆம் ஆண்டு, மயிலாப்பூர் மக்கள் உங்களை மறந்துவிட்ட நேரத்தில், உங்கள் இல்லம் நாடி நானும் நாவலர் அவர்களும் வந்தபோது, எங்களுடைய கண்ணீரால் உங்கள் கன்னத்தைக் குளிப்பாட்டினோம். கடந்தகால வரலாறுகள் என்றைக்கும் பசுமையாக நினைவிலே இருக்கும் என்பதை நானும் மறந்துவிடவில்லை, நாவலர் அவர்களும் மறந்துவிட முடியாது முயற்சித்தாலும். தாங்களும் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த நேரத்திலே, தாங்கள் இந்த அவையினுடைய துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றபோது, இன்னொன்றையும் சொன்னீர்கள்.

"சட்டப் பேரவையிலே நான் இடம்பெறத் தவறிவிட்ட பின்னர், மாநில பார்லிமெண்டரி அரசியலிலிருந்தே ஒதுங்கத்தான் நான் விரும்பினேன். ஆனால் மக்கள் மத்தியிலே இருந்து தொண்டுபுரிய விரும்பினேன். நான் விரும்புகின்ற கொள்கையை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே ஆளுங்கட்சியான தி.மு.க.வும், முதல்வர் கலைஞரும், அவரது அமைச்சரவையும், என் கருத்துக்களை நான் இந்த மன்றத்திற்கு வெளியே இருந்து சொல்வதைவிட, இந்த மன்றத்திலே வந்து சொல்வது மிகத் தேவை என்று எண்ணி, என்னுடைய உழைப்பு, இங்கு கொஞ்சம் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்று முதல்வர் கருதி, இந்த மாமன்றத்திற்கு என்னை வரவழைத்ததோடு இங்கு துணைத்

தலைவராக இருப்பதற்கும் வாய்ப்பளித்தனர். அதற்காக நன்றி" என்று சொன்னீர்கள். அந்த நன்றி உணர்வு என்றைக்கும் பட்டுப் போகாது, அன்று தாங்கள் மொழிந்த அந்த மொழி என்னுடைய உள்ளத்திலே என்றென்றைக்கும் பசுமையாக இருக்கும். இடையிலே எத்தனையோ புயல், எத்தனையோ சூறாவளிகள் எல்லாம் வீசினாலும்கூட, ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த மொழிகளுக்கு ஏற்ப, என்றென்றும் உங்களை மதிக்கின்றவன் என்கின்ற முறையில் அதைப் போலவே நீங்களும் மற்றவர்களை எத்தனையோ அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கிடையிலே மதிக்கக் கற்றவர்கள் என்ற முறையிலே இந்த மாமன்றத்தின் தலைவராகப் பொறுப் பேற்றிருப்பது சாலவும் பொருத்தமுடையது என்று கூறி, தங்களை மீண்டும் இந்தப் பொறுப்பினை, மேலவைத் துணைத் தலைவர், பிறகு தலைவர், மீண்டும் தலைவர் என்கின்ற அளவுக்கு தொடர்ந்து இந்தப் பொறுப்பினை தங்களுக்கு அளித்த ஆளுங் கட்சிக்கும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன்.

ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையிலே, கடந்த 6 ஆண்டுக்காலமாகவும், அதற்கு முன்னாலும் எங்களுடைய பிரச்சினைகள் வந்த காலத்திலே எல்லாம், அதிகமாக அக்கறை காட்டி, அன்பு பாராட்டி எங்களுக்கு வாய்ப்பு வழங்கி யிருக்கின்றீர்கள். அந்த வாய்ப்பினைத் தொடர்ந்து, அதிகமாகக்கூட வழங்கவேண்டும் என்று தங்களை இந்த நல்ல நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக ஒன்றைச் சொல்லியிருக்கின்றீர்கள். தங்களைப் பொறுத்த வரையிலே, தமிழகத்திலே அறியாதவர் ஒருவரும் இல்லை. ஆனால் தாங்கள் 1978ஆம் ஆண்டில் மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, இந்த மாநிலத்தின் முதல்வர் அவர்கள் கூறிய கருத்து என் மனதின் முன் வருகின்றது.

"தமிழைப் பேசி, தமிழை எழுதி, தமிழகத்திலே தமிழ்ப் புத்துணர்ச்சியை வளர்த்திருக்கின்றீர்கள் தமிழர்களால் அதிகமாக நேசிக்கப்படுகின்றீர்கள். தாங்களும் தமிழர்களை நேசிக்கின்றீர்கள். மாநிலத்தின் அரியாசனத்திலே, தங்களை தமிழை வீற்றிருக்கச் செய்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

தங்கள் பெயரைப்பற்றிக்கூட விமர்ச்சிக்கும்போது, சிவம் என்பதற்கு தர்மம் என்றும், ஞானம் என்பதற்கு பகுத்தறிவு என்றும் சொல்லி தர்மத்தை பகுத்தறிவால் ஆய்பவர்கள் என்று சொல்லி, தங்களைப் பாராட்டி மேலவையிலே நீதி, நேர்மையை நிலை நாட்டுவீர்கள் என்ற முறையிலே தங்களைப் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள். நான் சார்ந்திருக்கின்ற என் கட்சி சார்பிலும், மாநிலத்தில் பட்டதாரிகள் ஆசிரியர்கள் பெருமக்கள் சார்பிலும், தங்களை மீண்டும் மேலவைத் தலைவராகக் கொண்டுவந்ததற்கு பாராட்டுவதோடு, ஒரு கருத்தையும் கூற விரும்புகிறேன். தங்களுடைய சுய சரிதையிலே கல்வி என்பதற்கு ஒரு இலக்கணத்தைக் கூறியிருக்கின்றீர்கள்.

ஆர்வத்தால் வளர்வதுதான் கல்வி என்ற இலக்கணத்தை மால்கம் ஆதிசேஷையா அவர்கள் விமர்சிக்கும்போது சொன்னார்கள். மாநிலத்திலே எப்படி எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் கொடுக்கப்படுகிறதோ, அதுபோல நம்முடைய மாநிலத்திலே ஒரு காலத்திலே ம. பொ. சி. என்ற பட்டம் உருவாக்கப்பட்டு வழங்கப்படும் என்று கூறினார்கள்.

தங்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டத்தைக் கொடுத்து தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. அதுபோலவே, நாங்கள் இன்று தங்களை மேலவைத் தலைவராக ஏற்று எங்களைப் பெருமைப்படுத்திக்கொண்டதோடு மட்டுமல்ல, மேலவையையே நாங்கள் பெருமைப்படுத்தியிருக்கிறோம் என்று கூறி, முடிவாக தமிழ்த்தாய் வாழ்த்திலே கடைசி இரண்டு அடிகளிலே கூறியிருக்கிற வாசகத்தைக் கூற விரும்புகிறேன்:-

“உன் சீரினைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.”

என்ற அடிகளைக் கூறி, தாங்கள் வாழ்க, வாழ்க, என்று எங்கள் அமைப்பின் சார்பில் வாழ்த்தி, நன்றிகூறி முடிக்கிறேன்.



பேரவைச் செயலாளருக்குப் பாராட்டு

உரை : 79 **நாள் : 12.05.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பெற்று, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்களால் வழிமொழியப்பெற்றுள்ள பாராட்டு, வாழ்த்துத் தீர்மானத்தின் மீது சில கருத்துகளை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளேன். நம்முடைய அன்புக்கும், பாசத்துக்கும் உரிய செயலாளர் திரு. இராமசாமி அவர்கள் ஓய்வுபெற்று நம்மிடமிருந்து பிரிந்து செல்லுகிறார் என்பது போன்ற உணர்வுகளை இங்கே சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அவர்களுடைய அடக்கம், பண்பு, எளிமை, எல்லோரிடமும் பழகுகின்ற இனிய இயல்பு இவைகளை எல்லாம் இன்று நேற்று அல்ல, பல ஆண்டுக்காலமாக நான் இந்த அவையில் இருந்தவாறே உணர்ந்து இருக்கின்றேன். அவருடைய 35 ஆண்டுக்காலப் பணியில் ஒரு இரண்டு ஆண்டுக்காலம் தவிர 35 ஆண்டுக் காலம் வரையில் அவரை அருகில் இருந்து பார்க்கின்ற அந்த வாய்ப்பை இந்த அவையில் இருந்து நான் பெற்றவன். அவருடைய நேர்மையும், நாணயமும் என்றைக்குமே கேள்விக்குறியாக ஆனவைகள் அல்ல என்பதை எல்லாத் தலைவர்களுமே இங்கு திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். அதிலேயும் குறிப்பாக இந்த அவையிலே சரித்திரம் படைத்த சபாநாயகராக இருந்த நமது திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் தன்பால் செயலாளராக திரு. இராமசாமி அவர்கள் பணியாற்றிய நேரத்தில் எப்படியெல்லாம் பொறுமையைத் தனக்குப் போதித் தார் என்று இங்கே எடுத்துக்காட்டினார். இப்போதுதான் நமக்கேகூட அந்த உண்மை எல்லாம் தெரிந்தது. ஆத்திரவயப்பட்ட திரு. பாண்டியன் அவர்கள் சில நேரங்களிலே, அமைதி கண்டதற்குக் காரணமே நம்முடைய செயலாளர் இராமசாமி

அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உணர முடிகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் அவர் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கின்ற பாகுபாடு கருதாமல், ஆளும் கட்சி உறுப்பினர்கள், ஆளும் கட்சி அல்லாத கட்சிகளின் உறுப்பினர்கள் என்கின்ற வேற்றுமை பாராட்டாமல், தன்னுடைய பணியினை ஏற்று நடத்தி இருக்கின்றார். இங்கே அமர்ந்து இருக்கின்ற அ.தி.மு.க. நண்பர்களுக்கும், தி.மு.க. நண்பர்களுக்கும், காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் இந்த அவையிலே ஆளும் கட்சியாக இருந்தும் பழக்கம் உண்டு; எதிர்க்கட்சியாக இருந்தும் பழக்கம் உண்டு. வேறு கட்சிகளிலே உள்ளவர்கள்கூட, இன்றைக்கு ஜனதா தளத்திலே உள்ளவர்கள் கூட அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்து இருக்கிறார்கள். எனவே ஜனநாயகத்திலே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ப வைகள் மாறி மாறி வந்தால்தான் உண்மையான ஜனநாயகத்தி னுடைய இலக்கணமே போற்றப்படுவதாகப் பொருள் என்ற அந்த நிலையை உணர்ந்து, அதற்கேற்ப அவர்கள் எந்தவிதமான மாறுபாடும், வேறுபாடும் காட்டாமல் இரு தரப்பினரையும் சம நிலையிலே நடத்தி வந்து இருக்கின்றார்கள்.

நண்பர் திரு. பி.எச். பாண்டியன் ஒன்றை எடுத்துக் காட்டினார். மாநிலங்களவைத் தேர்தலில் அவர் எப்படி நடந்து கொண்டார் என்று. நாங்கள் எல்லாம் வெளியிலே இருந்து அந்தச் செய்திகளைக் கேள்விப்பட்டபோது, அவருடைய தராசு போன்ற அந்த நியாயத்தையும், அவர் அன்றைக்குக் கடைப் பிடித்த நேர்மையையும், எது வரினும், எவ்வளவு சுடுகணை வரினும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் நியாயத்தை நிலை நாட்டிய அந்த நிகழ்ச்சியும் எங்களுடைய நெஞ்சங்களில் எல்லாம் என்றென்றைக்கும் பசுமையாக இருக்கக்கூடியவைகளாகும்.

இந்த மாமன்றத்திலே அவர்கள் பல்வேறு பேரவைத் தலைவர்களோடு பழகியிருக்கின்றார்கள்; பல்வேறு அமைச்சர் களோடு பழகியிருக்கின்றார்கள்; பல்வேறு கட்சி சார்புடைய நண்பர்களோடு அவர்கள் பழகியிருக்கின்றார்கள். யாரும் ஒரு குறையாவது அவரைப்பற்றிச் சொல்லவியலாத அளவிற்கு- இது சம்பிரதாயத்திற்காக, அல்ல- பாராட்டுகின்ற நேரத்தில் குறைகளைச் சொல்லக்கூடாது என்பதற்காக அல்ல; உண்மையி லேயே மிகத்தெளிவாக அனைவரும் அவருடைய அருமை பெருமைகளை இங்கே எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து இன்றைக்கு நாம் அனைவரும் பாராட்டுகின்ற அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற அவர், எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, மற்றத் தலைவர்களெல்லாம் தொடர்ந்து சொன்னதைப் போல, தோற்றத்திலே அவர் வயதானவர் என்று யாராலும் கூற இயலாத அளவிற்கு, அத்தகைய பொலிவு கொண்டவர். இருந்தாலும் ஒரு மனிதனுடைய அவயவங்கள் வயதின் காரணமாகத் தளர்ந்துபோகிற நேரத்தில்தான் அனுபவங்கள் விறுவிறுப்பு அடைகின்றன. பழுத்துக் குலுங்குகின்றன. அந்த அனுபவங்கள் வயதாக வயதாகக் கிடைத்து, ஆனால் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுக்குத் தருவதற்கேற்ப அதற்குப் பிறகு அவர்களுடைய வயது ஆயுட்காலம் குறைந்துவிடுகின்ற காரணத்தால் அவைகளை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதையும் நம்மால் உணர முடிகின்றது.

இருந்தாலும் கூட, அனுபவங்கள் மனிதன் போய்விட்ட பிறகு அவனை விட்டுச்சென்று விடுகிற நிழலைப் போல அகன்று விடாமல் ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்குப் பிறகும் கூட அந்த அனுபவங்கள் நிலைத்து நிற்க அந்த மனிதன் தனக்குப் பின்னால் எச்சத்தை திருவள்ளுவர் கூறினாரே 'எச்சத்தால் காணப்படும்' என்று, அது பிள்ளைகளால் அல்ல; அவர்கள் விட்டுப்போகின்ற செயல்பாடுகள், கொள்கைகள், குணநலன்கள், பண்பாடுகள், இவைகளின் மூலம் காணலாம் என்பதற்கேற்ப அனைவரும் எடுத்துக்காட்டியதைப் போல இந்த அனுபவங்களையெல்லாம் அவர் நல்ல நூல்களாக வெளி யிட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்காலத்திலே பயன்படக்கூடிய வகையிலே அவைக ளெல்லாம் அமைந்திட வேண்டும்.

சில நண்பர்கள் இங்கே பேசும்போது, அவர்களை இந்த அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட் டார்கள். நல்லவைகள் எங்கு இருக்கின்றன என்று தேடிச் செல்லுகின்ற இந்த அரசு, அவைகள் அருகே இருந்தால் நிச்சயமாக விட்டுவிடாது என்பதை மாத்திரம் எடுத்துக்கூறி, அவரைப் பாராட்டி, வாழ்த்தி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்குப் பாராட்டு

உரை : 80 **நாள் : 23.05.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புமிகுந்த இந்த அவை தங்களைப் பேரவையின் தலைவராகவும், மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்களைப் பேரவையின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துள்ள இந்த இனிய நேரத்தில் தங்கள் இருவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறுகின்ற வகையில் சில கருத்துக்களை எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையின் உறுப்பினர்கள் பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்ள தற்காலிக அவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்து, இன்று தங்களுடைய பெயரை இந்த அவையில் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்" என்று அறிவித்து திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் குறளிலேயிருந்து எடுத்துக்காட்டிய அந்த வரிகளை இங்கு பாராட்டிப் பேசிய அனைவருமே திரும்பச் சொல்லிக் காட்டியிருக்கிறார்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளை மாண்புமிகு திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய தற்காலிகப் பொறுப்பை விட்டு அகலுகிற நேரத்திலே எடுத்துரைத்தார்கள். சிலர் இங்கே பாராட்டி உரையாற்றியபோது தாங்கள் அமைச்சராக வந்திருக்கவேண்டும் என்றும், திரு. இளம்வழுதி அமைச்சராக வந்திருக்கவேண்டும் என்றும் சொன்னது ஆளும் கட்சிக்கும், உங்களுக்குமிடையே கலகமூட்ட அல்ல என்பதை நான் மிகநன்றாக அறிவேன். உங்கள் இருவர் மீதும் அவர்கள் கொண்டுள்ள அன்பையும், பற்றையும், பாசத்தையும்தான் அது காட்டுகிறது. ஒருவேளை நீங்களும், திரு. இளம்வழுதியும் அமைச்சர்களாக இங்கே

அமர்ந்திருப்பீர்களேயானால், அவரவர்களுடைய தொகுதி களுக்காக எப்படியெல்லாம் உங்களிடத்திலே சண்டை போட்டிருப்பார்களோ அது எனக்குத் தெரியாது. அதிலிருந்து உங்களை மீட்பதற்காகத்தான் உங்களை அவைத் தலைவராகவும், திரு. இளம்வழுதியை துணைத் தலைவராகவும் இந்த மாமன்றம் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்த அவை பழம்பெருமை வாய்ந்த மிகத் தொன்மையான ஒரு அவை என்பதை நான் பல நேரங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இதற்கு முதலில் பிரிட்டிஷார் காலத்தில் கவுன்சில் என்றுதான் பெயர். பிறகுதான் இது சட்டமன்றமாக ஆகியிருக்கிறது. அசெம்பிளியாக ஆங்கிலத்திலே சொல்லாக்கம் பெற்றிருக்கிறது. 1919-ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலே இரட்டை ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தியபோது, இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களையும் விட்டுவிட்டு, அந்த இரட்டை ஆட்சி முறைக்கு இரண்டே இரண்டு மாநிலங்களைத்தான் ஜனநாயகப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுத்தது. அந்த இரண்டு மாநிலங்களில் ஒன்று பஞ்சாப் மாநிலம், மற்றொன்று நம்முடைய மாநிலம். நம்முடைய மாநிலம் என்று சொன்னால் இன்றைக்கு இருக்கின்ற தமிழ்நாடு அல்ல, அன்றைக்கு இருந்த சென்னை மாகாணம். அந்த இரண்டில் நடைபெற்ற ஜனநாயகப் பரிசோதனையில் இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி, பஞ்சாப் மாநிலத்தில் 'யூனியனிஸ்ட்' கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் அந்த ஜனநாயக பரிசோதனையிலே களத்திலே இறங்கின. இந்த மாநிலத்தில் திராவிட இயக்கத்தினுடைய முன்னோடியாக விளங்கிய நீதிக்கட்சி பெரும்பான்மையான இடங்கள் பெற்று, வென்று காட்டியது. அந்த நீதிக்கட்சி என்ற ஒரு பெரிய சமுதாயப் பேரியக்கத்தின் தூண்களிலே ஒருவர்தான் தங்களுடைய அருமைத் தந்தையார் தமிழவேள், பண்பாளர் திரு. பி. டி, ராஜன் அவர்கள் ஆவார்கள். அவர் 1929-ஆம் ஆண்டு அமைச்சராகவும் பொறுப்பேற்று தன்னுடைய பணிகளை, ஏற்றுக் கொண்ட நிர்வாகத்தை, ஒடுக்கப்பட்ட, அழுத்தப்பட்ட மக்களுக்கு நலன்களைச் சேர்ப்பதற்காக எவ்வளவு செம்மையாக நிறைவேற்றினார்கள் என்பதை வரலாறு இன்றைக்கும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள், டபிள்யு. பி.ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள், தங்கள் தந்தையார்

திரு. பி. டி. ராஜன் அவர்கள் கலந்துகொண்டு நிறைவேற்றிய புரட்சிகரமான பல தீர்மானங்களில் ஒன்றுதான் பெண்களுக்கும் இந்தச் சமுதாயத்தில் ஆண்களைப்போல் சொத்தில் சம உரிமை வழங்கவேண்டும் என்பதாகும். 1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தங்கள் தந்தையார் முன்னிலையில் தந்தை பெரியார் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம்தான் 1989-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்தது என்று நான் அன்றைக்கு நினைவுபடுத்திப் பேசியிருந்தேன்.

ஒரு புகழ் வாய்ந்த இயக்கத்தினுடைய பாரம்பரியம் மிக்க குடும்பம் தங்களுடைய குடும்பம். பாரம்பரியம்மிக்க குடும்பம் என்று இங்கே பலரும் தங்களுடைய குடும்பத்தைப் பாராட்டியபோது, செல்வச்செழிப்பு மிக்க குடும்பம் என்பதாலோ, அல்லது பணக்காரக் குடும்பம் என்பதாலோ, அல்லது அந்த வட்டாரத்திலே செல்வாக்கு மிகுந்த குடும்பம் என்பதாலோ அந்த பாராம்பரியம் என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தினார்கள் என்று நான் எண்ணவில்லை. தங்களுடைய பாரம்பரியம், தங்களுடைய தந்தையாருடைய பாரம்பரியம், திராவிட இயக்கத்தின் முன்னோடி இயக்கமான நீதிக் கட்சியினுடைய பாரம்பரியம் ஆகும். அந்தப் பாரம்பரியத்திலே வந்த தாங்கள் இந்த மாமன்றத்திலே எங்களுக்கு எல்லாம் நடுவராக இருந்து நல்ல தீர்ப்பு வழங்குகின்ற இருக்கையிலே அமர்ந்து இருக்கிறீர்கள்.

75 ஆண்டுகளுக்கு முன்பு, 1921 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாள் கென்ட் கோமகன் - "டியூக் ஆப் கென்ட்" - நமது மாநிலத்தில் அரசியல் சட்டத்தைத் தொடங்கி வைத்தார். நமது மாகாண கவுன்சில் ஜனநாயகவாதிகளுடைய பாராட்டைப் பெற்று விளங்குகிறது என்பதற்காக 1922ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதி, இங்கே உரையாற்றிய நம்முடைய அ.தி.மு.க. தலைவர் மாண்புமிகு திருநாவுக்கரசு குறிப்பிட்டதைப்போல, ''லார்ட் வெலிங்கடன்'' அவர்களும், அவர்களுடைய துணைவியாரும் இணைந்து நின்று ஒரு பரிசை இந்த அவைக்கு வழங்கினார்கள். அதுதான் தாங்கள் அமர்ந்துள்ள இந்த அழகான நாற்காலியாகும். அந்தப் பரிசளிப்பு விழாவிலே "லார்ட் வெலிங்டன்" ஆற்றிய உரை என்றென்றும் இந்த அவையிலே உள்ளவர்கள் நெஞ்சில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய உரையாகும். அந்த வாசகம் Lord Wellington Said :

"I realise the enormous advance that has been made in the conduct of the proceedings of the Legislative Council. I find that all your proceedings are carried out with all the customs and habits of parliamentary procedure in the House of Commons. It is my most sincere hope that all those who succeed you and sit in the Chair may uphold to the highest degree, the dignity and prestige of the Madras Legislative Council and I trust that they will always conduct the affairs with their decisions, good judgement and tact, which so eminently characterised our conduct of affairs."

அதாவது 'பேரவையின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நான் உணர்கிறேன். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினுடைய சம்பிரதாயத்தினுடைய நடைமுறைகளையும் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள் என்றும், உங்களுக்குப் பிறகு உங்களைத் தொடர்ந்து இந்த இருக்கையில் அமரப் போகிறவர்கள் இந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் மிக உன்னத கௌரவத்தையும் கண்ணியத்தையும் கட்டிக்காப்பார்கள் என்றும் இதுவரை இந்தச் சபையின் நடவடிக்கைகள் எப்படித் திறமையாக நடத்தப்பட்டதோ அது போலவே இனியும் இச்சபையை புத்திக்கூர்மையான தீர்ப்புகள், தீர்க்கமான முடிவுகள் மூலம் அவையை நடத்திச் செல்வார்கள் என்றும் நம்புகிறேன்'. இவ்வாறு 74 ஆண்டுகளுக்கு முன்பே லார்ட் வெலிங்டன் கருத்து கூறியிருக்கிறார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை நாம் விரட்டி விட்டோம் என்றாலும் அந்த மரபுகள், அவர்கள் கடைப்பிடித்த ஜனநாயக இலக்கணம் இவற்றை நாம் என்றைக்கும் போற்றத் தவறவில்லை என்ற காரணத்தினாலேதான் இந்த வாசகத்தை நான் இங்கே சுட்டிக்காட்டினேன். 1929ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று திவான் பகதூர் முனுசாமி நாயுடு அவர்களின் தலைமையிலே அமைச்சரவை அமைந்தபோது தங்களுடைய தந்தையார் பி.டி. ராஜன் அவர்கள் அதிலே அங்கம் வகித்தார். அதற்கு முன்பே முதன்முதலில் மதுரை மாவட்டத்தில் பிராமணர் அல்லாத தொகுதியிலே நடைபெற்ற தேர்தலில் தங்களுடைய தந்தையார் பி. டி, ராஜன் அவர்கள் 5000க்கு மேற்பட்ட வாக்குகள் - அதாவது அன்றைக்கு மொத்த வாக்குகளே மாகாணம் முழுவதும் 10 லட்சத்திற்குள் தான் என்ற நிலையிலேதான் இருந்தது. அதிலே மதுரை மாவட்டத்திலே நடைபெற்ற அந்தத் தொகுதியில் எல்லோரையும் விட அதிகமாக

5000-க்கு மேற்பட்ட வாக்குகளை வாங்கி தங்களுடைய தந்தையார் அன்றைக்கு வெற்றி பெற்றிருக் கிறார்கள். நான் சென்னை மாநகரத்தில் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சேப்பாக்கம் தொகுதியில் மக்களிடத்திலே வாக்குகளைக் கேட்டு வந்தபோது ஒரு வீட்டைக் காட்டினார்கள். அது நான் ஏற்கெனவே பார்த்து அறிந்து உணர்ந்த வீடுதான் என்றாலும்கூட அந்த வீட்டைக் காட்டினார்கள். ஒரு மண்டபம் போல அமைப்புடையது அந்த வீடு. அந்த வீட்டிற்குள் இருந்து ஒரு பெரியவர் வெளியே வந்தார். அவரது வயது 80க்கு மேல் இருக்கும். அவர்தான் இந்த இயக்கத்தை உருவாக்கிய நடேசனார் அவர்களுடைய தம்பி மகன் மணி என்பவர். அந்த 80 வயது பெரியவர் எனக்கு மாலை அணிவித்து இங்கேதான் 1912ம் ஆண்டு திராவிட சங்கம் உதயமானது என்று குறிப்பிட்டார்.

இப்படி 1912ஆம் ஆண்டு உதயமான திராவிட சங்கம் இன்றைக்கு பல வளர்ச்சிகளைப் பெற்று, பல மாறுதல்களைப் பெற்று, பல எதிர்ப்புகளுக்கு இடையிலேயும், பல சோதனைகளுக்கு இடையிலேயும் வீழாமல், தாழாமல் ஓங்கி உயர்ந்திருக்கிறது என்றால் அது அந்த இயக்கத்திற்கு தொடக்கத்திலே ஊட்டப்பட்ட உரம். அந்த உரம் ஊட்டிய முக்கியமானவர்களில் உங்களுடைய தந்தையாரும் ஒருவர். அவர்களுடைய அருமைப் புதல்வராகிய தாங்கள், இங்கே எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், தோழமைக் கட்சியிலே உள்ளவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல பண்பாளர் என்கின்ற அருமையான பட்டத்தைப் பெற்றவர்கள். அவர்கள் உங்களிடத்திலே கேட்டுக்கொண்டார்கள், அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள், ஆளுங்கட்சிக்குக் கால் பகுதி கொடுங்கள், எங்களுக்கு முக்கால் பகுதி ஒதுக்குங்கள் என்று சொன்னார்கள். அதுவும் ஒருவகையிலே சரிதான். எங்களுக்கு கால் கொடுங்கள். நாங்கள் எழுந்து நின்று பேசுவதற்குக் கால் கொடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு தீரன் அவர்கள் சொன்னார்கள். காதை அவர்களுக்கும், வாயை எங்களுக்கும் கொடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இங்கே வந்திருக்கின்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களானாலும், தோழமைக் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களானாலும் அவரவர்கள் ஒரு தொகுதியிலே இருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

பொதுப்பிரச்சினையைப் பேசுகின்ற நேரத்திலே வேண்டுமானால் தோழமைக் கட்சிக்கு, எதிர்க்கட்சிக்கு அதிக நேரத்தை ஒதுக்குவதும், தொகுதிப் பிரச்சினையைப் பேசுவதற்கு எல்லாத் தொகுதியிலேயும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் அளிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாவிட்டால் அவர்கள் தொகுதிப் பக்கமே போகமுடியாது. நிகழ்காலத் தேர்தலிலே நடைபெற்ற பல சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, நீங்கள் எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சை அப்படியே ஏற்றுக்கொண்டு அடுத்த தேர்தலில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் தொகுதிப்பக்கம் போக முடியாத ஒரு இக்கட்டை ஏற்படுத்திவிட வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. இளம்வழுதி, இன்றைக்கு மாண்புமிகு துணைத் தலைவராக ஆகியிருக்கிறார். அவரும் அமைச்சராக ஆகியிருக்கலாமே, ஒருவராக நின்று இங்கே போராடினாரே என்றெல்லாம் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நான், அவர் ஒருவராக நின்று இங்கே போராடியபொழுதெல்லாம் ஏடுகளில் எழுதி யிருக்கிறேன். மேடைகளில் பேசி இருக்கிறேன். 'என் தம்பி இளம்வழுதி இந்திரஜித்தினைப் போல நின்று போராடுகிறான்; அபிமன்யுவைப் போல நின்று போராடுகிறான்' என்று எழுதியிருக்கிறேன். அதைவிடவா இளம்வழுதிக்கு அமைச்சர் பதவி பெரிது என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). பெரிது என்று கருதுவாரேயானால், அதை இங்கே வெளிப்படையாகச் சொல்வாரேயானால் இப்பொழுதேகூட மாற்றித்தர நான் தயாராக இருக்கிறேன் என்று கூறி, பெருமைக்கும், பேரன்புக்கும், பண்புக்கும் பாத்திரமான பேரவைத் தலைவர் திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை வழங்குகிறேன். சிலர் தங்களை வாழ்த்த வயதில்லை என்று சொன்னார்கள். எனக்கு வயது இருக்கிறது. உங்களைவிட மூத்தவன் என்ற முறையிலே உங்களை நான் வாழ்த்துகிறேன். அதைப்போலவே துணைத் தலைவர் இளம்வழுதியையும் வாழ்த்துகிறேன். இந்த அவை எல்லா மாண்புகளோடும் சிறந்து விளங்க நல்ல முறையிலே வழிநடத்துங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொண்டு, மீண்டும் பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

சி. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பாராட்டு விழா

உரை : 81 **நாள் : 20.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியிருக்கின்ற பிரச்சினை உள்ளபடியே முக்கியமான பிரச்சினைதான். ஆனால், ஒரு தவறான அடிப்படையில் வெளிவந்துள்ள செய்தி குறித்து எழுதப்பட்டுள்ள பிரச்சினையாகவே நான் இதைக் கருதுகிறேன். ஏனென்றால் திரு.சி.சுப்பிரமணியம் அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது அளிக்கப்பட்டதை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறோம். ஆளுநர் உரை என்றால் அது முழுக்க, முழுக்க அரசாங்கத்தினுடைய உரைதான். அரசாங்கத்தினுடைய உரை முதலமைச்சரால்தான் தயாரிக்கப்படுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவார்கள். அந்த அறிக்கையி லேயே, திரு.சி.சுப்பிரமணியம் அவர்களுக்கும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், விஞ்ஞானி திரு.அப்துல் கலாம் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள 'பாரத ரத்னா' விருதுகளுக்காக அரசின் சார்பில் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, ஆளுநர் அந்த உரையைப் படிக்கும்பொழுதே அவையிலேயுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய கையொலி மூலமாக அவர்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, முக்கியமாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் நேரத்திலேதான் சி.எஸ்.அவர்களுக்கு அந்த 'பாரத ரத்னா' விருது அறிவிக்கப்பட்டது. நான் தேர்தல்

பிரச்சாரத்திற்காக சங்கரன்கோவிலுக்குச் சென்றுகொண்டிருந் தேன். செல்கின்ற வழியில் ஜனாதிபதியிடமிருந்து தொலை பேசிச் செய்தி வந்திருப்பதாகவும், உடனடியாக அவர்களை நான் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் எனக்கு அறிவிக்கப் பட்டது. சங்கரன்கோவில் செல்கின்ற வழியிலேயே ஓரிடத்திலே காரை நிறுத்தித் தங்கி, அங்கிருந்து தொலைபேசி மூலமாக ஜனாதிபதியிடத்திலே தொடர்புகொண்டு, என்ன என்று அறிந்து கொள்ள விரும்பியபொழுது, ஜனாதிபதியே என்னிடத்திலே பேசினார். அப்போது அவர், முறைப்படி ஒரு மாநிலத்திலே யுள்ள ஒரு முக்கியஸ்தர்களுக்கு இதுபோன்ற பெரிய விருது வழங்கும்போது முதலமைச்சர்களுக்குத் தெரிவிக்கவேண்டு மென்கிற அந்தக் கட்டுப்பாட்டுடன், என்னிடத்திலே தகவலைத் தெரிவித்தார். திரு. சி.எஸ். அவர்களுக்கு இந்த விருதினை வழங்கப்போகிறோம், அதை அறிவிக்க இருக்கிறோம் என்று என்னிடத்திலே தகவலைச் சொன்னார். நானும் பாராட்டி, மகிழ்ந்து, என்னுடைய உள்ளத்தை அவர்களுக்குப் புலப்படுத்தி, மகிழ்ந்து, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக அந்தச் செய்தியை அவருக்குத் தெரிவித்து, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேன்.

அதுமாத்திரமல்ல, சங்கரன்கோவில் சென்றேன். அங்கு நம்முடைய முன்னால் அமைச்சர் திரு.அருணாசலம் அவர்கள் போட்டியிடுகின்றார்கள். தேர்தல் பிரச்சாரக் கூட்டம். அந்தக் கூட்டத்திலே திரு.பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள். நானும் நம்முடைய அமைச்சர் திரு.ஆற்காடு வீராசாமி அவர்களும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். அந்தக் கூட்டத்திலேயே, நான் பேசத் தொடங்கியவுடனேயே, 'ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே குழுமி இருக்கின்ற மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டு, திரு.சி.எஸ். அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது கிடைக்கிறது. அதை ஜனாதிபதி அறிவித்தார்கள், வருகின்ற வழியிலே அந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது' என்று சொல்லிவிட்டு, 'அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்' என்று குறிப்பிட்டு, 'அவரை' பாராட்டும்முகத்தான் அங்கே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் கையொலி மூலமாக, அவர்

களுடைய பாராட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறே, குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், மேடையில் இருந்தவர்களும் கையொலி எழுப்பி அன்றைக்கே பாராட்டுத் தெரிவித்திருக்கின்றோம்.

அதுமாத்திரமல்ல. ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்ட அந்த வாசகங்களைக் கோடிட்டுக்காட்டி, திரு.சி.எஸ். அவர்களுடைய வீட்டிற்கு ஒரு ஆள் மூலமாகவே கவர்னர் உரையை அனுப்பி வைத்து, திரு.சி.எஸ்.அவர்களுக்கும் மற்றும் இருவருக்கும், யார் யார் ஆளுநர் உரையிலே பாராட்டப்பட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் அதை அனுப்பி வைத்திருக்கின்றேன். இவ்வளவுக்கும் பிறகு நான் பாராட்டவில்லையென்று சொன்னால், எப்பொழுதுமே என்னுடைய ஜாதகம் அப்படிப் பட்டது என்பதை மாத்திரம் சொல்லி அமைகின்றேன்.

இரங்கல் தீர்மானங்கள்

டாக்டர் சுப்பராயனுக்கு இரங்கல் தீர்மானம்

உரை : 82 நாள் : 29.10.1962

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதைப் போல், சிறைச்சாலையிலே மறைந்த மாவீரர்களின் செய்தியோடு, டாக்டர் சுப்பராயன் அவர்களும் மறைந்து விட்டார்கள் என்ற செய்தி எங்கள் இதயத்தைத் தாக்கியது. அவருடைய மறைவுக்காக ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை, இதய ஆழத்தில் வெளிப்படுகின்ற அன்பின் அடிப்படையிலே பாச உணர்ச்சியோடும், முழு மனதோடும் நான் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசியல் பெருந்தகையாளர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் அந்தக் காலத்திலேயே அறிவியக்கத்திலே நல்ல ஈடுபாடு கொண்டு, அறிவியக்கத்தினுடைய தலைசிறந்த கொள்கையை கடைப்பிடித்து, அதிலும் முக்கியமாக ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் கலப்புத் திருமணம் செய்து கொண்டு, தன் வாழ்க்கையை சீரிய முறையிலே நடத்திய பெருந்தகையாளர் ஆவார்கள். கலப்புத் திருமணம் போன்ற சமுதாய சீர்திருத்தங்களிலே அவருக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையை, அவருடைய பல்வேறு நடவடிக்கை களிலே இருந்து நாடு நன்கு உணரும்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் சமுதாய சீர்திருத்தத்திலே பற்று கொண்டது மாத்திரமல்ல. மொழியிலே நீங்காத பற்று

கொண்டு, அதன் அடையாளமாக அவர்கள் தமிழகத்தைவிட்டு வடக்கே சென்று அங்கே மத்திய அமைச்சராக ஆனாலும், அந்த நேரத்திலும்கூட அவர்களுடைய தமிழ்த் தொண்டு தமிழகம் முழுவதும் ஒளி வீச வேண்டுமென்றும், இந்தியத் துணைக் கண்டம் முழுதும் பரவ வேண்டுமென்றும், திருவள்ளுவர் படத்தையும், கவிச் சக்கரவர்த்தி பாரதியார் படத்தையும் அஞ்சல் தலைகளிலே வெளியிட்ட பெருமை டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கே உரியதாகும். பணவிடைத் தாள்களிலே தமிழ் மொழியைப் புகுத்துவதற்கு டாக்டர் சுப்பராயன் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் இன்றையத் தினம் மறைந்து விட்டாலும், அவருடைய காலத்திலே வெளியிட்ட திருவள்ளுவர் உருவ அஞ்சல் தலைகளும், பாரதியாருடைய உருவ அஞ்சல் தலைகளும், நம்முடைய கைகளிலே கிடைக்கும் பணவிடைத் தாள்களிலே ஒளிவிடும் அந்த தமிழ் மொழியும், அவர் இந்த நாட்டிலே நடத்திக் காட்டிய நிர்வாகத் திறனும் என்றென்றும் அழியாமல், மறைந்த மாவீரர் டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவம் நம்முடைய இதயத்திலே என்றென்றும் குடிகொண்டிருக்கும் என்று நம்புகிறேன். ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், டாக்டர் சுப்பராயன் அவர்களே ஒரு அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றாலும், அவர்களுடைய மக்கள் வேறு ஒரு அரசியல் இயக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு எந்தவிதத்திலும் அவர் தடையாக இல்லாமல், அவர்களுடைய அரசியல் பிரச்சினைகளிலே தலையிடாமல், அவர்களைக் கண்டிக்காமல், அந்தக் குடும்பத்தில் அவரவர்களுடைய அரசியல் பிரச்சினைகளுக்கு இடம் உண்டு என்ற வகையில், அவருடைய நல்ல பெருந்தன்மையை அவருடைய குடும்பத்திலேயே எடுத்துக்காட்டி, அந்தப் பெருந்தன்மையை நாட்டிலும் பரவ விடவேண்டும் என்று வழிவகுத்துக் காட்டிய பெரியவர் அவர். அப்படிப்பட்ட பெரியவரை நாம் இன்றையதினம் இழந்து மெத்த வேதனைக்கு உள்ளாகியிருக்கிறோம்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் மறையும் தறுவாயில், மாராட்டிய மாநிலத்தின் கவர்னராக இருந்து வந்தார். தமிழகத்திலே அவர் செய்து காட்டிய ஆற்றலையும், அவர் பெற்றுள்ள அறிவு மேம்பாட்டையும், அவர் கொண்டுள்ள நாட்டுப் பற்றையும் மராட்டிய மாநிலத்தில் பரப்புகிற நேரத்தில் திடீரென்று கலம் கடலில் கவிழ்ந்தது போல் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மறைந்து விட்டார் என்கின்ற சோகச் செய்தியை நாம் கேள்விப்பட நேர்ந்தது. அப்படிப்பட்ட பெரிய மனிதரை இழந்து தவிக்கிற அவருடைய குடும்பத்தினருக்கும், அவருடைய உற்றார், உறவினருக்கும், அன்பர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

அண்ணா மறைவுக்கு இரங்கல் தீர்மானம்

உரை : 83 நாள் : 21.2.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:-

''நமது தமிழகத்தின் தனிப்பெரும் தலைவராய்; தமிழ் மக்களின் அண்ணனாய்; தமிழ் மொழியின் காவலனாய்; தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் புதிய பாணியை வகுத்த பாவலராய்; வள்ளுவன் வகுத்த வாழ்க்கைக்கு ஓர் இலக்கணமாய்; தமிழ்ப் பண்புக்கு ஓர் உறைவிடமாய்; உண்மையான ஜனநாயக வாதியாய்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை வாழ்க்கையாய் அமைத்துக் கொண்டு இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்கும், தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் அதிலும் குறிப்பாக வசதியற்று சமூகத்தின் அடித் தளத்தில் கிடந்த மக்களுக்குத் தொண்டாற்றி இறுதிவரையில் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தவரும், நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராகவும், தமிழ்நாட்டு முதலமைச்சராகவும் இருந்தவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பாராத வகையில் அனுதாபத்தையும் ஆறாத் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அப்பெருந்தகை மறைவால் வருந்தும் அவரது துணைவியார் ராணி அம்மையாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.''

தலைவர் அவர்களே, பிப்ரவரித் திங்கள் மூன்றாம் நாள் நம்மையும் நாட்டு மக்களையும் நிலைகுலையச் செய்த நாளாகும். தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு புதிய வழியை வகுத்து, அவ்வழி நின்று ஜனநாயகக் கடமைகளைப் பேணிப் பாதுகாக்க

வேண்டுமென்று தன்னுடைய வாழ்க்கையை அதற்காக அர்ப்பணித்துக் கொண்ட தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று நம்மையெல்லாம் விட்டு மறைந்து விட்டார்கள். இந்த மாமன்றத்தில் 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரையிலும், அதற்குப்பிறகு கடந்த இரண்டு ஆண்டு காலமாக, ஆக ஏழு ஆண்டுகளும் குரலை ஒலித்து, அந்தக் குரலிலே உள்ள நயத்தாலும், கனிவாலும், குறள் வழியில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களாலும், எழுச்சிமிக்க எண்ணங்களாலும் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், உறுப்பினர்களுடைய பேரன்பையும் பாராட்டுதலையும் ஒருங்கே பெற்றவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். அவர்கள் தன்னுடைய வாழ்வில் எதிரியும் தன்னை மதிக்கத்தக்க அளவிற்கு, பாராட்டத்தக்க அளவிற்கு, புகழத்தக்க அளவிற்கு நடந்து காட்டி, அதைப்போல் மற்றவர்களும் நடந்து காட்ட வேண்டுமென்று எடுத்துக் காட்டுகின்ற ஒரு விளக்காக வாழ்ந்தவர் ஆவார்கள். அவர்கள் தமிழக அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இரண்டு ஆண்டு காலத்திலே முழு சுறுசுறுப்புடன், நல்ல உடல்நலத்தோடு ஓர் ஆண்டு காலம்தான் இயங்க முடிந்தது. அதற்குப் பிறகு அமெரிக்காவிற்குச் சுற்றுலா சென்று, அந்தச் சுற்றுலாவின்போது தமிழகத்தின் பெருமையையும், இந்தியத் துணைக்கண்டத்தின் பெருமையையும் வெளிநாடுகளிலே உயர்த்திக் காட்டி, அப்படி உயர்த்திக் காட்டியதன் மூலம் தமிழகத்தினுடைய பண்பை வெளிப்படுத்தி, வெற்றிகரமாகச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியபோது, தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, அகில இந்தியா பூராவுக்கும் பிரகாசமான ஒளிமிகும் நட்சத்திரமாகத் திகழ்வாரென்று பாராட்டுகளை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, எல்லா மக்களும் தெரிவித்த நேரத்தில், அவர்கள் மாண்பு உயர்ந்திருந்த நேரத்தில், திடீரென்று உடல் நலிவு ஏற்பட்டது. அதன் காரணமாக மீண்டும் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பி உடனே அவர்களுடைய உடல் நலிவு அறவே நீங்கிவிட்டது என்ற நம்பிக்கையோடு, மீண்டும் அண்ணா நமக்குக் கிடைத்து

விட்டார்கள், அவர்களுடைய பொற்காலத்திலேயே தமிழகத் திற்குத் தேவையான நல்ல பல காரியங்கள் செய்துகொள்ளலாம் என்ற பேராசையோடும், துணிவோடும் நாமெல்லாம் காத்திருந் தோம். ஆனால் இயற்கை அந்த எண்ணத்திலே மண்ணைப் போட்டு விட்டது. மீண்டும் உடல் நலிவு ஏற்பட்டதும், அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதும், எப்படியும் அண்ணா அவர்களுடைய உயிரை மீட்டுவிட வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழ் நாட்டு மருத்துவர்களும், வெளிநாட்டு மருத்துவர்களும் படாத பாடு பட்டதும், கட்சி நலனுக்கு அப்பாற் பட்டு, ஆஸ்திக நாஸ்திக சம்பிரதாயத்திற்கு அப்பாற்பட்டும் ஒருமித்த குரலில் ''அண்ணா அவர்கள் நலம் பெற வேண்டும்'', ''அண்ணா அவர்கள் நலம்பெற வேண்டும்'' என்று வாழ்த்திய வாழ்த்துக்கள் அத்தனையும் பயன் அற்றுப் போயின. பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவு 12-22 மணிக்கு அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து, வங்கக் கடல் அருகிலே கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நாம் இந்தச் சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழகத்தில் எந்தச் சம்பவம் ஏற்பட்டாலும் அந்தச் சம்பவம் அவர்களுடைய உள்ளத்தை எவ்வளவு குடைந் தெடுத்தது என்பதை அவர்களோடு பழகிவந்த தம்பிமார்களாகிய நாங்கள் நன்றாக அறிவோம். எதிர்க்கட்சி நண்பர்களும், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நன்றாக அறிவார்கள். குறிப்பாக, அவர்கள் உடல் நலம் பெற்று பூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மருத்துவர்கள் கூறிய நேரத்திலேகூட, தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்த நேரத்திலே அந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சென்னை சிறுவர் அரங்கத்திலே அவ்விழா நடந்தபோது, மருத்துவர்களும் மற்றவர் களும் அண்ணாவின் உடல் நலத்தையொட்டி அவ்விழாவிலே அவர்கள் கலந்துகொள்ள வேண்டாமென்று கூறியதைப் பொருட் படுத்தாது, ''இந்த விழாவில் கலந்துகொள்ளவேண்டாமென்று அனைவரும் கூறினார்கள். மருத்துவர்களும் கூறினார்கள். இந்த விழாவிலே கலந்துகொள்ளாத உடல். உயிர் இருந்தால் என்ன? போனால் என்ன? இந்த விழாவிலே எப்படியும் கலந்து கொள்ள

வேண்டுமென்ற எண்ணத்தில் நான் கலந்துகொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள். அவர்களின் உடல் பாதிக்கப்பட்ட நேரத்திலே வெண்மணிச் சம்பவம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு அந்தச் செய்தி அவர்களுடைய காதுக்கு எட்டியது முதல் மறுநாள் காலை 6 மணி வரை உண்ணாமல், உறங்காமல் தொலைபேசி மூலம் தஞ்சை அதிகாரிகளிடம் பேசுவதிலேயும், எங்களை உடனடியாக அங்கே சென்று நிலைமையை விசாரித்து அறியச் செய்வதிலேயும் நாட்டம் செலுத்தி, மனம் புழுங்கி, தூங்காமல் அந்த இரவெல்லாம் கழித்தார்கள். இனிய இளகிய, இரக்கம் கசியக் கூடிய இதயத்தைப் பெற்ற பேரறிஞர் இன்று நம்மிடத்திலே இல்லை. அவர்கள் விட்டுச் சென்ற அறிவுரைகள், அரசியல் பண்பு, நல்ல நெறிகள் கட்டிக் காக்கப்படவேண்டுமென்று கூறிய கடமை. கண்ணியம், கட்டுப்பாடு இவற்றையெல்லாம் போற்றிப் பாதுகாக்கவும் அவர்கள் வழிநின்று செயல்படுவதுதான், மறைந்த அந்த மாமேதை, தமிழகத்தின் தவப்புதல்வனுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதை ஆகும் என்று கூறி, என்னுடைய கண்ணீரை உங்களுடைய சார்பில் அவர்களுடைய காலடிகளிலே அபிஷேகித்து, இந்த அளவிலே என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

ராஜாஜிக்கு இரங்கல்

உரை : 84 **நாள் : 03.02.1973**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவையின் முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களையொட்டி அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மறைந்த பெரியவர், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த நாட்டின் கருவூலமாகவும், இந்தியப் பெருநாட்டில் மட்டுமல்லாமல் அனைத்துலக நாடுகளின் அன்பையும், மரியாதையையும் பெற்றவர்களாகவும் திகழ்ந்தவராவார்கள். அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதனை நாம் உணர்கின்றோம்.

தன்னுடைய வாழ்நாளில் மிகப்பெரும் பகுதியை பொதுவாழ்விற்காக வழங்கிவிட்டு, அந்தப் பொதுவாழ்விலே மிகுந்த துணிச்சலான கருத்துக்களையெல்லாம் நாட்டிற்கு எடுத்துச் சொல்லியவர்களாகவும், சொன்ன கருத்துக்களைச் செயற்படுத்திக் காட்டியவர்களாகவும், கருத்து மாறுபாடுகள், கட்சி மாச்சர்யங்கள் எவ்வளவுதான் குறுக்கிட்டாலும் அவைகள் மற்றவர்களோடு பழகுவதற்கு, நட்புரிமை காட்டுவதற்கு இடையூறாக இருத்தல் ஆகாது என்ற உயர்ந்த பண்பைக் கடைப்பிடித்தவர்களாகவும் மறைந்த இராஜாஜி அவர்கள் விளங்கினார்கள். அவர்களுக்கும், உத்தமர் காந்தியாருக்கும் இருந்த தொடர்பினையும், பண்டித ஜவஹர்லால் நேருவிற்கும், இராஜாஜி அவர்களுக்கு இருந்த நட்பினையும், இந்தியாவினுடைய தேசியப் போராட்ட இயக்கத்திலே கலந்த கொண்ட கடமை வீரர்களுக்கும், இராஜாஜி அவர்களுக்கும் இருந்த தொடர்பினையும் இங்கு பேசிய அனைவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கொண்டிருந்த தொடர்பு பாராட்டத்தக்கதாய், போற்றத்தக்கதாய், அனைவரும் சிலாகித்துப் பேசத்தக்கதாய் அமைந்திருந்தது. அந்தக் காரணத்தினால்தானோ என்னவோ, அண்ணா அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடக்கூடிய இந்த நாளில் இந்த மன்றத்திலே இராஜாஜி அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்ச்சியும் இணைந்திருக்கிறதோ என்று நாம் எண்ணிட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பொருத்தமான அளவில், மனம் விட்டுப் பேசக்கூடிய அரசியல் பெருந்தகையாளராய் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விளங்கினார்கள்.

அவர்களுடைய பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட எத்தனையோ கஷ்ட, நஷ்டங்களையெல்லாம் எப்படிச் சமாளித்தார்கள் என்பதை இங்கே இரங்கல் தீர்மானத்திலே பேசியவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பதிலே இராஜாஜி அவர்கள் வல்லவர் என்பதற்கு அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்திலே பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஈகை, இரக்கம் இவைகளைக் காட்டும் நேரத்திலேயும் கூடச் சற்று ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டுத்தான் அதை அவர்கள் காட்டுவார்கள் என்பதற்கு அவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அவர் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் ஒருநாள் திடீரென்று பாலக்காட்டிலிருந்து ஒரு குடும்பத்தினர் அவருடைய இல்லத்திற்கு வந்தார்கள். அவர் வழக்கறிஞர் பணிக்காகப் புறப்பட்ட நேரத்தில் அவர்கள் குறுக்கிட்டு ''நாங்கள் பாலக்கட்டிற்குச் செல்ல வேண்டும். திடீரென்று கையிலிருந்த பணம் பறிபோய்விட்டது. பாலக்காட்டிலே நான் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். எங்கள் குடும்பத்தினர் பாலக்காட்டிற்குச் செல்ல புகைவண்டிக்கான டிக்கெட் எடுப்பதற்குப் பணம் தேவை" என்று கேட்டார்களாம். உடனடியாக வழக்கறிஞர் இராஜாஜி அவர்கள், "மாலையில்தான் உங்களுக்கு இரயில். அதுவரையில் வீட்டிலே சாப்பிட்டு இருக்கலாம்" என்று கூற அவர்களும் மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள். அவர்களை இல்லத்திலே அமர வைத்துவிட்டு, கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய இராஜாஜி அவர்கள், கோர்ட்டிற்குச் செல்லாமல்

அஞ்சலகத்திற்குச் சென்று, அங்கிருந்து பாலக்காட்டிற்குத் தொடர்பு கொண்டார்கள். பாலக்காட்டில் ஹரிஹரன் என்ற ஆசிரியர் இருக்கிறாரா என்று கேட்டு, அப்படி ஹரிஹரன் என்ற ஆசிரியர் பாலக்காட்டிலே கிடையாது என்று தெரிந்து கொண்டு, நேரே கோர்ட்டிற்குப் போய் அங்கே அவர்களைப்பற்றி ஒரு வழக்கைக் கொடுத்து, அங்கிருந்து காவலர்கள் வந்து பாலக்காட்டுக்காரரைக் கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே வழக்கறிஞர் இராஜாஜி அவர்கள் அந்த ஏமாற்றுக்காரர்கள் மீது வழக்கைத் தொடரவும். நீதிபதி அவர்கள் சினம் கொண்டு 200 ரூபாய் அபராதம் விதிக்க, இராஜாஜி அவர்கள், 200 ரூபாயை அவர்களால் கட்ட முடியாது, கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டு, பிறகு 50 ரூபாய் அபராதம் என்று விதித்தார்கள். அதைப் பார்த்த அந்தப் பாலக்காட்டு ஹரிஹரன் என்பவர் 50 ரூபாய் கட்டக்கூடிய அந்தஸ்து இருந்தால் உங்கள் வீட்டிற்கு வந்து நான் ஏன் ஏமாற்றப் போகிறேன் என்று சொன்னதற்கு. மறுபடியும் இராஜாஜி அவர்கள் வாதாடி, அந்த அபராதத்தை 10 ரூபாயாகக் குறைத்து நீதிபதி உத்தரவு போட்டு விட்டு உள்ளே போன பிறகு, அந்த பத்து ரூபாயை இராஜாஜி அவர்களே கட்டி விட்டு, 'இனி மேல் இப்படி யாரையும் ஏமாற்றாதீர்கள்' என்று சொன்னதாக வாழ்க்கைச் சரித்திரத்தில் படித்துப் பார்த்தேன். இப்படி ஈகை, இரக்கம் காட்ட வேண்டிய நேரத்திலேயும்கூட அவர்கள் ஆராய்ந்துதான் சில முடிவுகளை எடுப்பார்கள். அப்படி எதிலும் ஆராய்ந்து முடிவெடுக்கும் அறிஞர் பெருமகனாகத் திகழ்ந்த இராஜாஜி அவர்கள் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை.

இங்கே முன்னவர் அவர்களும், மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல, அவர்கள் கட்சி, கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தனி அன்பை அனைவரிடத்திலும் காட்டுவார்கள். அவர்களுடைய இறுதிக் காலத்தில் இன்றைய ஆளுங்கட்சிக்கும், அவருடைய கொள்கைகளுக்கும், அவர் கட்சிக்கும் இருந்த தொடர்பு அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள், வீட்டிலே திடீரென்று அவருக்கு நோய் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தியை அறிந்ததும், நானும் நம்முடைய கல்வியமைச்சர் நாவலர் அவர்களும் அவர்களுடைய இல்லத்திற்குக் காலையிலே ஓடோடிச்

சென்றோம், அவர்கள் தன்னுடைய நோய்ச் செய்தியைக் கேள்விப்பட்டு நாங்கள் வந்ததாகக் கருதாமல் திருமணத்திற்கு அழைப்பதற்காக வந்திருக்கிறோம் என்று கருதி, நேற்றே வாழ்த்து அனுப்பிவிட்டேன், உடல் நலம் சரியில்லை, வருவதற்கு முடிய வில்லை, ஆகவே, பொறுத்துக்கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். பிறகு மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்ட பொழுது, நானும், கல்வியமைச்சரவர்களும், மற்றவர்களும் பார்த்தபொழுது என்னுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள் சொன்ன வார்த்தை, அவருடைய மக்களும், பேரப்பிள்ளையும், மருத்துவர்களும் சூழ்ந்திருந்த இடத்தில் சொன்ன வார்த்தை, இன்றைக்கும் என்னுடைய நெஞ்சிலே பதிந்துதான் இருக்கிறது. 'நம்முடைய நட்பை யாராலும், எந்தக் காலத்திலேயும் நீக்க முடியாது' என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு, 'உங்களை நான் கடைசி வரையில் கைவிட்டு விடமாட்டேன்' என்று சொன்னார்கள். இது 10,12, ஆண்டுக் காலமாக அவர்களுடன் பழகிய நேரத்தில், அவர்களுடைய பாச உணர்வினை, உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட எங்களுக்குத் தெளிவாகத் தெரியும். 62-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் முன்னேற்றக் கழகத்திற்கும், சுதந்திராக் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட முடியாமல் கடைசி நேரத்திலே உடைந்துவிட்டது என்றாலும், சில இடங்களில் அவர்கள் முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்ட இடங்களில் ஒன்று 62-ம் ஆண்டு தஞ்சாவூரிலே என்னுடைய தொகுதியாகும்.

தனிப்பட்ட முறையிலேயும், கட்சி ரீதியிலேயும் அண்ணா அவர்களிடத்திலும், இன்றைக்கு அமைச்சர்களாக வீற்றிருக்கின்ற அனைவரிடத்திலும் அவர்கள் காட்டிய அன்பும், பரிவும் எத்தனை ஆண்டுக் காலமானாலும் எங்களால் மறந்துவிடக்கூடிய ஒன்றல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் தமிழ்நாட்டினுடைய அரசியல் விமர்சனங்களை மாத்திரமல்ல, இந்தியப் பெருநாட்டுக்கான அரசியல் கருத்துக்களை மாத்திரமல்ல, அனைத்துலகத்திற்குத் தேவையான கருத்துக்களை எல்லாம் கூறியிருக்கிறார்கள். அனைத்து உலகத்திலும் பிரச்சினைகள் எழுகிற நேரத்தில் அதைப்பற்றி இராஜாஜி அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று உலகம் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தது என்று சொன்னால்

யாரும் அதை மறுத்துவிட முடியாது. அப்படிப்பட்ட பெருந்தகையாளர் இன்று நம்மிடத்தில் இல்லை என்பது பெரும் குறை. பெரியவர்கள் மறைந்து விடுகிறார்கள் என்றாலும், அவர்கள் தங்களுடைய கொள்கைகளால், கோட்பாடுகளால், பண்பால், பழக்க வழக்கத்தால், பழகுகின்ற எளிமை, இனிமை ஆகியவற்றால் என்றென்றும் நம்முடைய உள்ளங்களிலே நிறைந்து விடுகிறார்கள்.

அவர்களுக்கு நினைவாலயம் ஒன்று எழுப்புவது குறித்தும், சிலை அமைப்பது பற்றியும் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். வருகிற 15-ம் நாள் அன்று இந்தியாவின் குடியரசுத் தலைவர் அவர்கள் கிண்டியில், கவர்னர் மாளிகைத் தோட்டத்தில், காந்தியடிகள் மண்டபத்திற்கு அருகாமையில் இராஜாஜி அவர்களுடைய நினைவாலயத்திற்கான அடிக்கல்லை நாட்ட இருக்கிறார்கள். அந்த நினைவாலயத்திலே இராஜாஜி அவர்களுடைய திருவுருவச் சிலையும் அமைக்கப்பட இருக்கிறது. அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் அன்றைக்கே நடைபெற இருக்கிறது. அவர்கள் பிறந்த இல்லம் ஓசூரில் தொரப்பள்ளி என்ற இடத்தில் இருக்கிறது. அந்த இல்லத்தை அரசு வாங்கி மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவுச் சின்னமாக ஆக்கும் முயற்சிகளிலும் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசு வாங்குகிறது என்று கேள்விப்பட்டு, உரியவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அதிக விலை தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அது இராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னமாக அமைவதால் தகுந்த அக்கறை காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

இராஜாஜி அவர்கள், தமிழகத்திற்கு, இந்தியாவுக்கு, அனைத்து உலகத்திற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். இங்கு பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குப் பிரச்சினையில் இராஜாஜி அவர்கள் காட்டிய தீவிரத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீவிரத்திற்கு மதிப்பளிக்கும் வகையில், மரியாதை செலுத்துகின்ற வகையில் தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வருவார்களானால், இந்திய அரசு அந்த முயற்சியிலே ஈடுபடுமானால் அதற்கு முதலில் கை கொடுக்கின்ற அரசாக நம்முடைய தமிழக அரசு இருக்கும் என்பதை இராஜாஜி அவர்களுடைய பெயரால் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானத்திற்கிடையே நம்முடைய அருமை நண்பரும், இந்த மாமன்றத்தில் முன்னேற்றக் கழக உறுப்பினருமாக இருந்த திரு.கோபால் அவர்களின் மறைவுக்காகக் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீதும் அனைத்துக்கட்சித் தலைவர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கோபால் அவர்கள் மறைந்த பிறகு அவருடைய குடும்பம் எப்படி இருக்கிறது, குழந்தை குட்டிகள் எப்படிக் கஷ்டப்படுகின்றன, அவருடைய மனைவி ஆசிரியர் தொழில் செய்து குடும்பத்தை நடத்துகின்ற கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு திரு.கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். கோபால் அவர்களுடைய வாழ்க்கை, முன்னேற்றக் கழகத்தின் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு என்பதையும் இங்கு தெரிவித்து, அப்படிப்பட்ட அருமை நண்பர் கோபால் அவர்கள் இன்றைக்கு மறைந்துவிட்ட நிலையில் அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான பொறுப்பை அரசின் சார்பாக இல்லாவிட்டாலும், கழகத்தின் சார்பாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் கூறி கோபால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கிறோம் என்று சொல்லுவதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்ளும் காரியமாகத்தான் அது இருக்கிறது. இராஜாஜி அவர்கள் மறைவுக்காக இரங்கல் தெரிவிப்பது, அனுதாபம் கூறுவதும் தனிப்பட்ட ஒரு குடும்பத்திற்கு மட்டும் செய்யப்படுவது அல்ல. தமிழகத்தில் இருக்கும் எல்லா மக்களுக்கும், இந்தியப் பெருநாட்டில் இருக்கும் எல்லா மக்களுக்கும், இராஜாஜியின்பால் அன்பும், மதிப்பும் கொண்டு அனைத்துலக நாடுகளில் இருக்கும் அரசியல் மேதைகளுக்கும் தெரிவிக்க வேண்டிய அனுதாபமாகத் தான் அது இருக்கும் என்பதைத் தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன், வணக்கம்.

பொன்னப்ப நாடாருக்கு இரங்கல்

உரை : 85 **நாள் : 09.07.1977**

கலைஞர். மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த இரங்கல் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்களும் அந்த இரங்கலோடு இணைந்து ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில், குறிப்பாக நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து பணியாற்றிய பண்பாளர் பொன்னப்ப நாடார், அவர்கள், ஒரு உறுப்பினராக மாத்திரம் அவர் இங்கே இல்லை. வளர்ந்து வருகின்ற தலைவர்களுடைய வரிசையில் ஒருவராகத் தன்னை ஆக்கிக் கொள்கின்ற அளவுக்குத் தன்னுடைய தியாகத்தாலும், பழக்க வழக்கங்களாலும், மன இயல்புகளாலும் உயர்ந்தவர் என்ற முறையிலேதான் அவருக்கு இந்த மன்றத்தில் தனியாக ஒரு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டுமென்ற கருத்து எதிர்க்கட்சியில் உள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பேறு முதன்முதலாக இந்த மன்றத்திற்குக் கிடைக்கா விட்டாலும், சட்டமன்ற மேலவைக்கு நேற்றைய தினம் கிடைத்தது என்பதை எண்ணி ஓரளவு நான் மன ஆறுதல் பெறுகிறேன். இதைத்தான், முதல்நாள் இரங்கல் தீர்மானங்கள் வருகிற நேரத்தில் பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு இரங்கல்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்க் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. சற்றுக் காலதாமத மானாலும் கூட அரசுத் தரப்பில் அவை முன்னவர் அவர்கள் இந்த இரங்கல்தீர்மானத்தை இங்கு முன் மொழிந்தமைக்காக நான் என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு பல்வேறு அடக்கு முறைகளுக்கு ஆளானவர் மறைந்த பொன்னப்ப நாடார் அவர்கள். அதுமாத்திரமல்ல; அவை முன்னவர் குறிப்பட்டது

போல் தாய்த் தமிழகத்தோடு கன்னியாகுமரி மாவட்டத்தை இணைக்க வேண்டுமென்ற கடும் போராட்டத்தில் பல்வேறு அடக்குமுறைகளையும் ஏற்றுக் கொண்டு நேசமணி அவர்களுடைய தலைமையில் போர்க்களத்திலே நின்ற பெருமைக்குரியவர் பொன்னப்பநாடார் அவர்கள். அதையொட்டி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரமல்லாமல், தமிழ்ப் பகுதி எங்கும், தமிழ் வாழ்கின்ற இடம் எங்கும் தன்னுடைய பெயருக்கு ஒரு தனியான இடத்தை உருவாக்கிக் கொண்ட வராவார்கள். அப்படிப்பட்ட தியாகச் சீலரைப் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் தன்னுடைய அன்புக்குரியவராக வும், நம்பிக்கைக்குரியவராகவும் ஆக்கிக் கொண்டதில் எந்த வியப்பும் இருக்க முடியாது.

கன்னியாகுமரி மாவட்ட போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு மானியங்கள் வழங்க வேண்டுமென்பதிலும் அதே நேரத்திலே அந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு விருதுகள் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்து வார்கள். பொன்னப்பநாடார் அவர்கள் இந்த அவையிலே அவ்வாறு கருத்துக்கள் எடுத்துச் சொன்னபோது அவைகளைச் சிறிதும் புறக்கணிக்காது உடனடியாக அன்று இருந்த கழக அரசு நிறைவேற்றித் தந்தது. அவர் மனம் களிக்கின்ற வகையில், ஆனால், இன்றைக்கு அவர் மறைந்திருக்கும் நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்குத் தருவதாக வாக்களிக்கப்பட்டு, வழங்கப் பட்டு வந்த மானியங்கள் எல்லாம் அந்த வீரர்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையைக் காண்கிறோம். மறைந்த வருக்கு மரியாதை செலுத்துகின்ற வகையில் அவைகளைத் தொடர்ந்து அந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொன்னப்ப நாடார் அவர்களுடைய நினைவுக்கு அது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

இந்த அவையில் அவர் ஆற்றிய பணிகளை நேரில் இருந்து அறிந்தவன் நான். எதிர்க்கட்சி வரிசையில் அவரோடு அமர்ந்தும் அறிந்திருக்கிறேன். அவர் எதிர்க்கட்சியிலும், நாங்கள் ஆளும் கட்சியிலும் அமர்ந்திருந்த நேரத்திலும், அவருடைய பணிகளை அறிந்திருக்கிறேன். எந்தக் கருத்துக்களை

எடுத்துச் சொல்லும் நேரத்திலும் படபடப்புக்கோ, பரபரப்புக்கோ, பதைபதைப்புக்கோ ஆளாகாமல் நிதானமாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். சில நேரங்களில் அவரையும் கூட கோபம் ஆட்கொள்ளுவதுண்டு. புயலாக மாறுவார்; ஆனால், அடுத்த கணமே தென்றலாக மாறும் மனப்பண்பு இருந்தது. அப்படிப்பட்ட பெருந்தகையாளரை இழந்திருக்கும் குடும்பத்தாருக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் ஆறுதல் கூறும் வகையில் அவை முன்னவர் இங்கே கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்களும் இணைந்து வழிமொழிந்து அமர்கின்றேன். வணக்கம்.

முன்னாள் அமைச்சர் இராமையாவுக்கு இரங்கல்

உரை : 86 **நாள்: 13.08.1977**

கலைஞர். மு. கருணாநிதி: தலைவரவர்களே! மறைந்த முன்னாள் அமைச்சர் இராமையா அவர்கள், இந்த மாமன்றத்தில் பத்தாண்டு காலம் ஆட்சிப்பொறுப்பைக் காங்கிரஸ் ஏற்றிருந்தபொழுது மிகத்திறம்பட தன்னுடைய அமைச்சர் பணியை ஆற்றிய ஒரு பெருந்தகை ஆவார்கள். 1957 முதல் 1967 வரையில் அவர்கள் இங்கே அமைச்சராகப் பணியாற்றிய பொழுது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். அவர்கள் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே மாணவர் பருவத்திலேயே பங்குபெற்றவர் என்பதை நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். பங்கு பெற்றது மட்டுமல்லாமல் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளான நேரத்திலேயும் மனந்தளராமல் தியாகச் சுடர்களில் ஒருவராக அவர்கள் விளங்கினார்கள் என்பதையும் தமிழகம் நன்கறியும்.

1967க்குப் பிறகு அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபட்டார். தமிழகத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பையும் ஏற்றிருந்தார். அதன் பின்னர் குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் மாநில திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் பொறுப்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. அந்தப் பொறுப்பினையும் அவர் ஒழுங்குற நிறைவேற்றினார். அமைச்சராக இருந்த அந்தக் காலத்திலேயே எதிர் தரப்பிலே இருந்து எவ்வளவு ஆத்திரம் ஊட்டத்தக்க சொற்கள் அவரை நோக்கிப் பாய்ந்தாலும், மிகப் பொறுமையோடு பதில் கூறக்கூடிய ஒரு மனப்பக்குவத்தை அவர் பெற்றிருந்தார் என்பது அவரோடு பழகியவருக்கும், இந்த அவையில் அவர் இருந்த நேரத்தில்

இருந்தவருக்கும், மிக நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அதிலும் குறிப்பாக மானியக் கோரிக்கைகளில் பதில் சொல்லுகிற நேரத்தில் அவரும் திரு.கக்கன் அவர்களும் எல்லோருடைய பெயர்களையும் குறித்து வைத்துக்கொண்டு அவரவர்களுக்குத் திருப்தி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எல்லோருடைய பெயர்களையும் ஒருமுறை சொல்லி, அவரவர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்குப் பதில் அளித்தால் அந்தக் கேள்விகளை எழுப்பியவருக்குத் திருப்தி அளிக்கிறதோ இல்லையோ அந்தப் பதில் அளிப்பதால் தங்களுக்கு ஒரு மன ஆறுதல் ஏற்படுகிறது என்ற அளவில் இங்கே நடந்து கொண்ட அமைச்சர்களில் ஒருவராக மறைந்த இராமையா அவர்கள் திகழ்ந்தார்கள். அப்படிப்பட்டவரை இன்று நாம் இழந்திருக் கிறோம்.

நேற்று காலையிலே அவர் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று செய்தி கிடைத்தது. மாலையிலே சென்று காணலாம் என்று எண்ணி இருந்தபொழுது அவர் மறைந்துவிட்டார் என்ற நெஞ்சைக் குலுக்கும் செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இங்கே ஒன்றைச் சொல்லாமலிருக்க முடியாது. அவர் மறைந்த செய்தி அவருடைய கட்சியின் சார்பாகவாவது எங்களுக் கெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்குமானால் அனைவரும் அங்கே சென்று, அவருடைய புகழுடலுக்கு மலர் வளையம் வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கலாம். அந்த வாய்ப்பினை அளிக்காதது, இங்கே அவரோடு பழகினோம் என்ற அளவில் மாத்திரமல்ல. அவருடைய உற்ற நண்பர்களில் ஒருவர் என்ற முறையிலே, அவருடைய பிரிவானது உள்ளபடியே மிகவும் வருந்தத்தக்கது. எனினும் மறைந்தவர் என்றென்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கக்கூடியவர் என்ற முறையிலே அவருடைய குடும்பத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமர்கிறேன்.

சஞ்சீவ ரெட்டிக்கு இரங்கல்

உரை : 87 **நாள் : 16.07.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப் பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் மறைந்த மாமனிதர், இந்தியாவின் 6-வது குடியரசுத் தலைவர், பெருமதிப்பிற்குரிய நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களுடைய மாபுகழை இந்த மன்றத்தில் எடுத்துரைத்து இருக்கின்றார்கள். இந்த மாநிலத்திலே அவர்கள் இதே தலைமைச் செயலகத்தில் அமைச்சராக வீற்றிருந்த காலம் ஒன்று இருந்தது என்பதையும் இரங்கல் தீர்மானத்தில் உரையாற்றியவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

1989ஆம் ஆண்டு கழக ஆட்சி வந்தபோது நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் சென்னைக்கு வந்து எங்களிடத்திலே அவர்கள் வெளியிட்ட ஒரே ஒரு விருப்பம், இந்தக் கோட்டையில் தான் அமர்ந்து அமைச்சராக பணியாற்றிய அந்த அறையைப் பார்க்க வேண்டும் என்பதாகும். நானும், பேராசிரியர் அவர்களும், மற்ற அமைச்சர் பெருமக்களும் அவர் தங்கியிருந்த இடம் சென்று, அவரை அழைத்து வந்து, கோட்டையிலே விருந்து அளித்து அவர் தங்கிப் பணியாற்றிய அமைச்சர் அறையைக் காட்டியபோது, நின்ற நிலையிலேயே நெகிழ்ந்து போனார். குழந்தைபோல ஒரு ஆசைகூட அவருக்கு ஏற்பட்டது. "அந்த நாற்காலியிலே சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு எழுந்திருக்கிறேனப்பா" என்று சொல்லிவிட்டு, அவ்வாறே செய்தார். அந்த அளவிற்கு தமிழகத்தில், அவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, ஒரு பாச உணர்வை மனதிலே பதிய வைத்திருந்தார்.

அவர்கள் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு எத்தனை முறை சிறை சென்றார் என்ற எண்ணிக்கைக் கணக்கு அவருக்கும் தெரியாது, நமக்கும் தெரியாது. அந்த அளவிற்கு சிறைப்பறவையாக, இந்த தேச விடுதலைக்காகத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட பெரியவர் மறைந்த சஞ்சீவரெட்டி அவர்கள். அவர்கள் இந்த மாமன்றத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய திருவுருவப் படத்தை, அன்னாள் முதலமைச்சர், என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களால் அழைக்கப்பெற்று, திறந்துவைத்த நேரத்தில், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டதைப்போல, எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்திருக்கின்ற இடத்தில் நானும், நான் அமர்ந்திருக்கின்ற இடத்தில் மாண்புமிகு அன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் அமர்ந்திருந்த நிலை, அப்போது காமராஜர் அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய இந்தியாவின் குடியரசுத் தலைவராக விளங்கிய சஞ்சீவரெட்டி அவர்கள் ஆற்றிய உரை முழுவதும் தனக்குக் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அது விழா நிகழ்ச்சி என்ற காரணத்தால் சட்டமன்ற நடவடிக்கை ஏட்டில் பதிந்திருக்கப் பெறாமல் இருந்திருக்கக்கூடும். ஆனால் அந்த உரையின் சில பகுதிகளை அவர் பேசிய பகுதிகளை நான் தேடிஎடுத்து இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது நலன் என்றும் கருதுகின்றேன். பொருத்தம் என்றும் எண்ணுகிறேன். பெரிய பிரச்சினைகளை மாநிலங்கள் எப்படித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர் இங்கே ஆற்றிய உரையில், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, நாட்டிற்கு சமுதாயத்திற்குத் தேவையான அந்த அறிவுரையை ஒரு நிகழ்ச்சியின் மூலமாக அவர் சுட்டிக் காட்டினார். ".....Then there was a dispute about Tiruttani whether it should be in Andhra or in Tamil Nadu. As though it is going to Germany or America. Some such quarrel was there. Then Kamarajji one day told me - 'ஏதாவது பண்ணுவோம்ப்பா, இது என்ன ஒரு தாலுக்காவுக்காக சண்டையெல்லாம்' என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னதைக் குறிப்பிட்டு விட்டு மேலும் சொல்கிறார். "...and then, Panditji one day came. He was just leaving me near my car, caught hold of my hand and said - 'What is this Sanjeevi?

This is a small taluk. You are creating problems between Madras and Andhra'. I said - 'Panditji, you leave it to me and Kamarajji. If you have trust in us, you leave it to both of us and we will solve it'. It took a few months for us to solve it because we had to carry other people with us. Kamarajji had to carry the people of Tamil Nadu and I had to carry the people of Andhra also. Ultimately. you would not believe me, it was settled and I would not go into the details of how the dispute was settled. In the Andhra Assembly including the Opposition Leader, everybody supported the decision we took and the same thing happened in the Madras Assembly also. It was a unanimous decision. After all, Tiruttani had to come to Madras and other areas near Gummidipoondi had to go to Andhra. There was nothing wrong in it. There was no going out of India".

இதுதான் அவருடைய உரையில் மிக உன்னிப்பாக நாம் கவனித்து நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ளவேண்டிய சாராம்சமாகும். எதுவும் இந்தியாவை விட்டுப் போய்விடவில்லை; இங்கேயேதான் இருக்கிறது. இதற்கு நமக்குள் இவ்வளவு பெரிய போராட்டம் தேவையில்லை என்ற அந்தக் கருத்தை, எவ்வளவு அழகாக, நளினமாக இந்த அவையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தபோது அவர் எடுத்துக்கூறினார் என்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

அது மாத்திரமல்ல. 'எமர்ஜன்ஸி' – நெருக்கடிக்கால பிரகடனம் செய்யப்பட்ட நேரத்தில், அவர் எதிர் முனையிலேதான் இருந்தார். பெருந்தலைவர் காமராஜரும் அவ்வாறேதான். அப்போது பெருந்தலைவர் காமராஜரிடத்திலும், என்னிடத்திலும் தொடர்புகொண்டு, அடிக்கடி என்னைச் சந்திப்பது, திருமலைப் பிள்ளைத் தெருவிற்குச் சென்று பெருந்தலைவர் காமராஜரைச் சந்திப்பது, நெருக்கடி நிலையிலிருந்து இந்தியாவை மீட்க எப்படியெல்லாம் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று சிந்திப்பது, விவாதிப்பது, இவையெல்லாம் நிகழ்ந்த நேரம். நான் அப்போது அரசுப் பொறுப்பிலே இருந்த காரணத்தால், நெருக்கடி நிலையை எதிர்த்து, தமிழகத்திலேயுள்ள அமைச்சரவையே பதவி விலக வேண்டும் என்ற கருத்தை அவரிடத்திலே சொன்னபோது, "அவசரப்படாதே; பெருந்தலைவர் காமராஜரிடத்திலே கேட்டு

விட்டு நான் சொல்கிறேன்" என்று சொல்லி, பெருந்தலைவர் காமராஜரிடத்திலே கலந்து பேசிவிட்டு, நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள், மீண்டும் என்னை அழைத்து என்னிடத்திலே சொன்னது : "காமராஜர் சொல்கிறார், இப்போது இந்தியாவிலே, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூடிய இடம் ஒன்றாக, தமிழகம்தான் இருக்கிறது; அதையும் கெடுத்துவிடக் கூடாது என்று கருணாநிதியிடம் சொல் என்று என்னிடத்திலே காமராஜர் சொன்னார்". இவ்வாறு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் குறிப்பிட்டார்கள். பிறகு, நானும் மற்ற அமைச்சர்களும் கூடி, பெருந்தலைவர் காமராஜரைச் சந்தித்து அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம்.

இங்கே, பெருந்தலைவருடைய படத்தைத் திறக்க வந்தபோது, பேசிய இன்னொரு கருத்தையும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நானே, இந்த இரங்கல் தீர்மானத்தில் கூற, அந்தக் கருத்தைத் திரட்டி வைத்திருந்தேன். அவர் முந்திக் கொண்டார் என்றாலும் கூட, அதையும் நான் சொல்வது, பதிய வைப்பது, சிறப்புடையது என்பதற்காக, இங்கே சொல்ல விரும்புகிறேன். அப்போது அவர் பேசினார். அவர் குறிப்பிட்டதைப்போல, தன்னை அழைத்து படத்தைத் திறக்கச் செய்த, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிக்கூட அதிகம் பேசாமல், அன்றைக்கு அவர் என்னைப் பற்றிப் பேசியதற்குக் காரணம், நெருக்கடி நிலையை, அவரும், நானும், மற்றவர்களும் ஒரே அணியில் இருந்து எதிர்த்தவர்கள். அதற்காக எம்.ஜி.ஆர். அவர்கள் எந்த வருத்தமும் படவில்லை. அவருடைய முகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அதைத்தான் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த அளவிற்கு ஒரு சிறப்புறு அவையாக, அன்றைக்கு இந்த அவை நடைபெற்றது என்பதற்கு அது ஓர் அடையாளம். அப்போது சஞ்சீவ ரெட்டி அவர்கள் குறிப்பிட்டார்கள்; "காமராஜர் மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். சாதாரண மனிதராக இருந்தார். அவர் இந்த நாட்டைப் பற்றி மிகவும் கவலை கொண்டிருந்தார். அப்போது நெருக்கடி நிலை இருந்ததால், அவர் சிந்தனை அனைத்தும் நாட்டைப் பற்றியதாகவே இருந்தது. இப்போது யாரும் எதுவும் சொல்லலாம். ஏனென்றால், பதில் சொல்ல காமராஜர் இல்லை. அவர் தனது கடைசி காலத்தில், மகிழ்ச்சி இல்லாமலேயே இருந்து, இறந்தார். அவர் மறைந்தபோது, நெருக்கடி நிலை அமலில் இருந்ததால்,

அவர் மறைவுச் செய்தி கேட்டதும், உடனே என்னால் சென்னைக்கு வர முடியவில்லை. சாதாரண சஞ்சீவ ரெட்டிக்கு விமான டிக்கெட் எப்படிக் கிடைக்கும்? இருந்தாலும், கடைசி நேரத்தில் தாமதமாக சென்னைக்கு வந்து சேர்ந்தேன். கருணாநிதியும், அவருடைய அரசும் என்னை விமான நிலையத்திலிருந்து, காமராஜருடைய இறுதி யாத்திரை நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச் செல்ல உதவினார்கள். காமராஜர் இறந்தபிறகு, அனந்தப்பூரில் ஓர் இரங்கற் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அதில் பேச முயன்றேன். கூட்டம் நடத்த அனுமதி தரப்படவில்லை. கைதானாலும் பரவாயில்லை என்று தடையைமீறி கூட்டத்தை நடத்தினேன். அந்த நிகழ்ச்சியும், பேச்சும் பத்திரிகைகளில் வெளிவரவே இல்லை. ஆனால், அதே கூட்டத்தைச் சென்னையில் நடத்தியிருந்தால், அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி அனுமதி வழங்கியிருப்பார்; அந்த நிகழ்ச்சியும் பத்திரிகையில் இடம்பெறச் செய்திருப்பார்" என்று உள்ளமுருக அவர் குறிப்பிட்டது என்னைப் பாராட்டுவதற்காக இல்லை; நெருக்கடி நிலைமையினுடைய கொடுமையை எடுத்துக் கூறுவதற்காக.

எனவே, கடைசிவரையில், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும்கூட, நாடு, சமுதாயம், மக்கள் என்கிற அந்த அளவிலேயே அவருடைய சிந்தனை ஓட்டம் இருந்தது. இன்றைக்கு அவருடைய உருவம் நம் முன்னால் இல்லாவிட்டாலும், அவர் உள்ளத்திலேயிருந்து, முகிழ்த்தெழுந்து கிளம்பிய அந்தக் கருத்துக்களெல்லாம் நம்மோடுதான் இருக்கின்றன. அத்தகைய பெரியவரை, மாமனிதரை, இந்தியாவினுடைய ஆறாவது குடியரசுத் தலைவர் என்பதற்காக மாத்திரமல்ல; அவர் தேசத்தியாகி, விடுதலைப் போராட்ட தளபதி என்ற அளவில் நாம் என்றைக்கும் மனதிலே வைத்துப் போற்றுவோம் என்ற உறுதியை இந்த இரங்கல் தீர்மானத்திலே உரையாற்றிய அத்தனை பேருடைய நெஞ்சார்ந்த நினைவோடும் இணைந்து கூறி, அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்ற உறுதியோடு என் உரையை முடித்து அமைகிறேன்.



டாக்டர் சென்னா ரெட்டிக்கு இரங்கல்

உரை : 88 **நாள் : 24.01.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைப்பதற்கே நெஞ்சு அதிர்ச்சிக்கு ஆளாகின்ற நிலையில், தமிழகத்தின் ஆளுநராக இருந்து அனைவருடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான வராக விளங்கிய மறைந்துவிட்ட டாக்டர் சென்னா ரெட்டி அவர்களைப் பற்றி இந்த அவையில் இவ்வளவு விரைவில் இரங்கல் தீர்மானத்தைக் கொண்டு வரவும், அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் உரையாற்று வதுமான நிலை வருமென்று நாம் யாரும் கருதவில்லை. எதிர் பாராத அளவுக்குத் துயரத்தில் நம்மையெல்லாம் சென்னா ரெட்டி அவர்கள் ஆழ்த்திவிட்டு இயற்கை எய்திவிட்டார்கள். அவர் இன்று இல்லை என்றாலும்கூட புகழ் உருவில் தமிழகத்தில், ஆந்திரத்தில், ஏன், இந்திய நாட்டில் அவர் இன்றைக்கு இருக்கிறார் என்றே கொள்ளவேண்டும். அந்த அளவிற்கு அவருடைய புகழ் வடிவம் நிலைபெற்ற ஒன்றாக ஆகி இருக்கின்றது.

நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்திலும், அதைத் தொடர்ந்து தலைவர்கள் எல்லாம் இரங்கல் உரையாற்றிய நேரத்திலும் சென்னா ரெட்டி அவர்கள் வகித்த பதவிகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் அவர் கவர்னராகப் பதவி வகித்தார்; ஆந்திரத்தின் முதல்வராகப் பதவி வகித்தார்; மத்திய அமைச்சராகப் பதவி வகித்தார்; திட்டக்குழு துணைத் தலைவராகப் பதவி வகித்தார். இப்படி பதவி வகித்ததிலே

அவருக்கு ஏற்பட்ட பெருமைகளைவிட அவர் விரும்பிய பெருமையாக, நாடு என்றென்றும் நினைத்துக் கொண்டிருக்கின்ற பெருமையாக, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவர் பங்கு கொண்டதும், தொடர்ந்து ஹைதராபாத் நிஜாம் அவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியதும், அதன் காரணமாக இளமைப் பருவத்திலேயே அவர் சிறை சென்றதும், அதற்குப் பிறகும்கூட தெலுங்கானா போராட்டத்திற்காக அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, அதற்கென ஒரு தனி இயக்கமே கண்டு, அந்த இயக்கத்தின் சார்பில் 1968-69 ஆம் ஆண்டுகளில் அவர் போராடி, அந்தப் போராட்டத்தின் பலனாக மத்திய அரசே முன்வந்து தெலுங்கானாவுக்கு அவர் கோரிய உரிமைகளை விட்டுத்தர சம்மதித்தும், அவருடைய வாழ்க்கையிலே பொன்னான ஏடுகள் ஆகும், புரட்சிகரமான ஏடுகளாகும்.

அவர் தமிழகத்திலே ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் இந்த அரசு உருவானபோது அவர் அடைந்த அந்த மகிழ்ச்சியை, தொடர்ந்து அவர் அடைந்திடக்கூடிய நிலை இல்லாமல் இடையிலே தடைப்பட்டுவிட்டது உள்ளபடியே நமக்கெல்லாம் பெரும் சோகமாகும்.

அவரை பஞ்சாப் கவர்னராக, உத்திரப்பிரதேச கவர்னராக, இராஜஸ்தான் கவர்னராக கண்டபோது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல, கவர்னர் பதவி தேவையில்லை என்ற அந்தக் கருத்துக்கு மாற்றாக அவருடைய வாழ்க்கை முறை, செயல்முறை அவர் பதவி வகித்த அந்தப் பண்பு, இவைகள் எல்லாம் விளங்கின என்று எண்ணத்தக்க நிலையில் அவர் அங்கெல்லாம் பெரும்புகழ் பெற்றார். அதிலும் குறிப்பாக, பஞ்சாப் மாநிலத்திலே அந்தக் காலக்கட்டடத்திலே கவர்னர் பொறுப்பை ஏற்பதும், ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதும் சாதாரணமான காரியம் அல்ல. அதைப்போலவே, உத்திரப் பிரதேசத்தில் அவர் கவர்னராக இருந்தபோது எல்லா மாவட்டங்களுக்கும் அவர் சுற்றுப்பயணம் செய்ததும், மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக கவனித்ததும் இந்தியா முழுவதும் போற்றிய செயல்கள் ஆகும் லக்னோவிலிருந்து வெளி வந்த ஒரு இந்திப் பத்திரிகையில் அவரைப் பற்றி எழுதும் போது "A restless swimmer in the ocean of comfors and honour"

என்று குறிப்பிட்டது. மறைந்த சென்னா ரெட்டி அவர்களுடைய பொன் மொழிகளே "No delay, no postponement" என்பதுதான். தாமதம் கூடாது, தள்ளி வைப்பதும்கூடாது என்பதைத்தான் அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். அதைச் செயலிலும் காட்டிக் கொண்டிருப்பார்.

அவருடைய மறைவு எதிர்பாராத ஒன்று என்பது மாத்திர மல்ல, அவருடைய இல்லத்திலே ஒரு இனிய நிகழ்ச்சியிலே அவர் எங்களையெல்லாம் அழைத்தபோது சென்று, வாழ்த்தி, அவரோடு அமர்ந்து விருந்துண்டு, சென்னைக்குத் திரும்பிய பிறகு, இன்னொரு இனிய நிகழ்ச்சி அடுத்த நாள் நடைபெற இருக்கின்ற அந்தக் காலக்கட்டத்தில், இடையிலே அவர் மறைந்தார் என்ற துயர நிகழ்ச்சி, செய்தியாக வெளிவந்தது. முதலிலே பேத்திக்கும், அடுத்து பேரனுக்கும் திருமணம் நிச்சயித்து, நாள் குறித்து அழைப்பிதழ் எல்லாம் அனுப்பி வைத்துவிட்டு, பேத்தியினுடைய திருமணத்தை மிகுந்த உற்சாகத்தோடு நடத்தி முடித்துவிட்டு, எங்களையெல்லாம் வரவேற்று, பிறகு வழிஅனுப்பி வைத்துவிட்டு, பேரனுடைய திருமணம் நடைபெற இரண்டு நாட்கள் இருக்கும்போது இடையிலே அவர் திடீர் என்று மறைந்தார் என்பது, அந்தக் குடும்பத்தை எந்த அளவுக்கு உலுக்கக்கூடிய செய்தி என்பதை நாமெல்லாம் மிக நன்றாக அறிவோம். நல்ல போர் வீரராக, தளகர்த்தராக, நல்ல நிர்வாகியாக, நல்ல மனம் படைத்தவராக, எல்லாவற்றுக்கும் மேலாக எதையும் தாங்கும் இதயம் கொண்டவராக விளங்கிய சென்னாரெட்டி அவர்களுடைய மறைவு அனைவருக்கும் பேரிழப்பாகும். அந்த இழப்பை எண்ணி, அவருடைய மனைவியார், மக்கள் அனைவருக்கும், குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்து, வாழ்க சென்னா ரெட்டி அவர்களுடைய புகழ் என்று கூறி, அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாருக்குத் தொண்டராக, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தம்பியாக எங்களுக்

கெல்லாம் உடன்பிறப்பாக, அனைவருக்கும் உற்ற தோழராக விளங்கிய பெரியண்ணன் அவர்களுடைய மறைவு குறித்து இந்த அவையில் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தில் என்னையும் இணைத்துக் கொண்டு சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன்.

பெரியண்ணன் அவர்கள் என்னைவிட 6, 7 வயது இளையவர். அவரைவிட 6, 7 வயது மூத்தவனாக இருக்கின்ற நான் அந்த இளையவருடைய மறைவுக்கு ஓர் அனுதாபம் தெரிவிக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாகிவிட்டேனே என்பதை எண்ணி, எண்ணி கலங்குகின்றேன். இளமைக் காலத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தந்தை பெரியாருடைய கொள்கைகளை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்த வழிகாட்டுதலை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அந்த பொன்மொழியை இதயத்திலே இருத்தி, இயக்கத்திலே எத்தகைய சோதனைகள் வந்தாலும், வேதனைகள் வந்தாலும் அவைகளைப்பற்றிக் கவலைப்படாமல் மன உறுதியோடு இந்த இயக்கத்தைக் குன்றாமல், குறையாமல் வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டவர் மறைந்த பெரியண்ணன் அவர்கள் ஆவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல இளமைப் பிராயத்திலே அவர் இலங்கையிலே வாழ்ந்தார். அப்போதும் திராவிட இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்தார். அவர் இலங்கையிலே இருந்த அந்தக் காலக் கட்டத்தில்தான் சிங்கள சீறீ என்ற எழுத்து அழிப்புப் போராட்டம் இலங்கையில் தமிழர்களால் நடத்தப்பட்டது. சிங்கள அரசின் அந்த சீறீ என்ற எழுத்துத் திணிப்பை எதிர்த்து தமிழர்கள் அன்றைக்கு கலந்துகொண்டு கார்களில், பெயர்ப் பலகைகளில் இருந்த அந்த சீறீ என்ற எழுத்தை தார் கொண்டு, தூரிகை கொண்டு அழிப்பதற்கு முயன்றபோது போலீசாரால் பெரியண்ணன் கைது செய்யப்பட்டு அவர் கையிலே ஏந்தியிருந்த அதே தார் கலயத்திலே இருந்த தாரை எல்லாம் அவருடைய முகத்திலே ஊற்றப்பட்டு சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார் என்பது பெரியண்ணனுடைய போர்க்கால வரலாறுகளில் ஒரு பக்கம் ஆகும்.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஒன்றியம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம். அந்த ஒன்றியத்தினுடைய தலைவராக

இருந்து நல்ல நிர்வாகி, மக்கள் சேவகர் என்கிற புகழைப் பெற்றவர் பெரியண்ணன் என்பதை அனைவரும் அறிவார்கள்.

புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் என்பது மாத்திரம் அல்ல, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள எல்லாக் கட்சிக்காரர்களுடைய அன்பையும் அரவணைப்பையும் பெற்று எல்லோருக்கும் உதவுகின்ற மனப்பான்மையோடு தன்னை வளர்த்துக் கொண்டவர், இயக்கத்தை வளர்த்தவர், அவர்.

முதலில் தமிழகத்திலே ஒன்று, இரண்டு மாவட்டங்கள் புதிதாக அமைந்த நேரத்தில் புதுக்கோட்டையையும் தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்று குரல் எழுப்பிய அவர், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல் முதலாக புதுக் கோட்டையை தனி மாவட்டமாக ஆக்குவதற்கு முயற்சி எடுத்து அதிலே வெற்றி பெற்றவர்.


இன்னும் சொல்லவேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அங்கே ஒரு கட்டிடம் தேவை யாயிற்றே என்று எண்ணியபோது அருமை நண்பர் மறைந்த அன்பில் தர்மலிங்கம் அவர்களும், பெரியண்ணன் அவர்களும் முன்னின்று புதுக்கோட்டை மன்னருடைய மாளிகையையே மாவட்ட ஆட்சித் தலைவர், அலுவலகம் என்கின்ற அளவுக்கு அன்று ஆக்கித்தந்த அந்தப் பெருமைக்குரியவர்களில் பெரியண்ணனும் ஒருவர் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவர் இந்த இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டின் காரணமாக 1995-ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளின்போது அறிஞர் அண்ணா விருதினை தலைமைக் கழகம் அவருக்கு அளித்து மகிழ்ந்த நிகழ்ச்சி எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட நம்பிக்கைக்குரிய, நேர்மையான, நாணயமான, அழுத்தந்திருத்த மான, திடமான, உறுதி வாய்ந்த நெஞ்சம் கொண்ட பெரியண்ணனை நாங்கள் இழந்திருக்கின்றோம்.

இங்கே நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல அவர் உடல் நலிவுற்று மருத்துவமனையில் வேறு வழியில்லாமல் ஒரு காலை எடுக்க நேரிட்டது. நான் அதைப் பற்றிக்கூட அவருடைய படத்திறப்பு விழாவில் பேசும்போது சொன்னேன். பெரியண்ணன் ஒரு காலை

இழந்தார். ஆனால் நான் ஒரு கையை இழந்து நிற்கின்றேன் என்று அன்றைக்குக் குறிப்பிட்டேன். அந்த நிலை என் நெஞ்சத்திலே ஏற்படுத்தியுள்ள அந்தப் புண்ணை, அந்த வடுவை இன்றைக்கும் மாற்றுவதற்கு இயலாத நிலையில் நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

இந்த அவையிலுள்ள நம்முடைய அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும், மற்ற கட்சிகளுடைய தலைவர்களும் ஆற்றியிருக்கின்ற இரங்கல் உரையில் என்னுடைய உரையையும் இணைத்துக் கொண்டு அவரை இழந்து தவிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்களுக்கு மாத்திரம் அல்ல, கட்சிக்கு சார்பற்ற முறையில் எல்லா நண்பர்களுக்கும் இரங்கலைத் தெரிவிக்கின்ற இந்த அவையின் தீர்மானத்தோடு நானும் பங்குகொண்டு அவருடைய குடும்பத்தாருக்கு அவருடைய மனைவி, மக்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் வழங்கி இந்த அளவில் அமைகின்றேன். வணக்கம்.



தங்க பாண்டியன் மறைவுக்கு இரங்கல்

உரை : 89 நாள் : 13.10.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை இரண்டு தங்கங்களை இழந்து இருக்கிறது. ஒன்று தங்கபாண்டியன், மற்றொன்று தங்கவேல். தங்கவேல் அவர்கள் நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதியிலே இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் அவருடைய தொகுதி மக்களுக்காகவும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும் குரல் கொடுத்தவர். மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்து, தமிழகத்திலேகூட அல்ல, இலங்கையிலே பிறந்து, தமிழகத்திலே வாழ்ந்து, தமிழக மக்களோடு ஒன்றிக்கலந்து குறிப்பாக குன்னூர் தொகுதி மக்களுடைய சேவகனாக பணியாளனாக, உத்தம ஊழியனாக அருந்தொண்டாற்றியவர். அவருடைய மறைவால் துடித்துத் துவண்டு இருக்கின்ற அந்தக் குடும்பத்தாருக்கு இந்த அவையின் சார்பில் செலுத்தப்படுகின்ற இரங்கலில் நானும் என்னுடைய இதயத்தை இணைத்துக் கொள்கின்றேன்.

மற்றொரு அதிர்ச்சியாக, இந்த அவையில் அமைச்சராக வீற்றிருந்தவர், என்னுடைய தம்பிகளிலே ஒருவராக இடம் பெற்றிருந்தவர், இந்த இயக்கத்தின் தளபதியாகக் கடமை யாற்றியவர், கழகம் கட்டளை இட்டபோதெல்லாம் களம் சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்திலே மிசா கைதியாக ஓராண்டு காலம் அடைபட்டு அடக்குமுறையை ஏற்றவர், தங்கபாண்டியன் அவர்கள். இங்கே உரையாற்றிய எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல, எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக, அதே

நேரத்தில் கொள்கையை நிலைநாட்டுவதிலே வல்லவராக விளங்கியவர்.

அவர், தனக்குத் தரப்பட்ட பொறுப்புகளை ஏற்று ஆர்வத்தோடு நிறைவேற்றினார் என்பதற்கு அடையாளமாகத் தான், அவருடைய மறைவுகூட அமைந்துவிட்டது என்று சொன்னால், அது மிகையாகாது. அனைவரும் இங்கே சுட்டிக்காட்டியதற்கொப்ப, தமிழகத்திலே விரும்பத்தகாத அளவுக்கு நடைபெற்ற ஜாதி விரோதக் கலவரங்களை நேரிலே சென்று சமாதானப்படுத்தி, அமைதிப்படுத்துவதற்காக, அவர் அந்தப் பொறுப்பினை ஏற்று, அந்த மாவட்டங்களிலே சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோதுதான் நம்மைவிட்டு அவர் மறைய நேரிட்டது.

இவ்வளவு விரைவில் அவர் நம்மைவிட்டுப் பிரிவார் என்று யாருமே எதிர்பார்த்ததில்லை. இனிய பண்புகளுக்குச் சொந்தக்காரர்; அவர் பெரிய குடும்பம் ஒன்றிலே பிறந்தவர்; செல்வச் சீர்மிக்கக் குடும்பத்திலே பிறந்தவர் என்றாலும்கூட, ஏழைகளின் தோழனாகத்தான் அவர் இறுதிநாள்வரை வாழ்ந்தார் என்பதை எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அத்தகையவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு நான் இந்த அவையின் சார்பிலும், என் சார்பிலும், என்னுடைய ஆழ்ந்த துயரத்தை, இரங்கலை வெளிப்படுத்திக்கொள்கின்றேன்.

இன்று தங்களால் எடுத்துவைக்கப்பட்ட இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானம் இவற்றில், அன்னை தெரசா அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதைப்போல, பதினொரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்மைவிட்டு மறைந்தது பற்றியும் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். இவர்களிலே, குறிப்பாக அன்னை தெரசா பற்றி, மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த பி. சி. ராய் அவர்கள், அவருடைய பிறந்த நாளின்போது சுட்டிக்காட்டிய ஒரேயொரு வாசகத்தை மட்டும் இங்கே நான் எடுத்துக்காட்டுகின்றேன். பி. சி. ராய் சொல்கிறார், தன்னுடைய பிறந்த நாளின்போது – "இந்தப்

பிறந்த நாளில், இந்த முதிய வயதில், முதன் முதலாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ, அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தியடிகளின் நினைவுகூட எனக்கு வரவில்லை; என் அருமைத் தோழர், உயிருக்கும் உயிரான தோழர் ஜவஹர்லால் நேருவின் நினைவுகூட என் நெஞ்சில் ஏறவில்லை; எனக்கு நெருக்கமான உற்றார் உறவினருடைய நினைவுகூட எனக்கு வரவில்லை; ஆனால், எனது அலுவலகத்திற்குச் செல்லும் மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரேயொரு எளிய உருவம் வந்ததே; அதுதான் என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. அந்த உருவம், திக்கற்ற ஏழைகளையும் நோயாளிகளையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தெரசாவின் மெலிந்த உருவம்'' - என்று முதுபெரும் தலைவர்களில் ஒருவரான பி. சி. ராய் அவர்கள், அவருடைய பிறந்த நாளில் இப்படிக் கூறியிருக்கின்றார்.

அந்த அன்னையார் அவர்களை இழந்து உலகமே துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தங்கபாண்டியனை இழந்து தமிழகமே தாளாத துயரத்திலே ஆழ்ந்து இருக்கின்றது. தங்கவேலை இழந்து குன்னூர் தொகுதி மக்கள் ஆழ்ந்த துயரத்திலே குமுறிக்கொண்டிருக்கின்றார்கள். அந்தக் குடும்பங்களுக்கும், இவர்களை ஏற்றிப் போற்றி வாழ்ந்த இந்தியப் பெருமக்கள், தமிழகப் பெருமக்கள் அனைவருக்கும் இந்த அவையின் சார்பில் எடுத்துச்சொல்லப்பட்ட பல்வேறு இரங்கல் செய்திகளோடு என்னுடைய இரங்கல் செய்தியையும் இணைத்து அமைகின்றேன். வணக்கம்.

ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் மறைவுக்கு இரங்கல்

உரை : 90 **நாள் : 20.03.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.எம்.எஸ். என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற, அந்த மூன்று எழுத்துக்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய, தலைசிறந்த மார்க்சீயவாதியும், புரட்சியாளரும், இந்தியாவினுடைய மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய மறைவுச் செய்தி நேற்றையதினம் மதுரையிலேஇருந்த எனக்குக் கிடைத்தபோது அதிர்ச்சியுற்றேன்.

திரு.ஈ.எம்.எஸ். அவர்கள், தாங்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, 1939ஆம் ஆண்டு மாகாண சட்டமன்றத்திலே இடம் பெற்றிருந்தார் என்றாலும்கூட, அதற்குப்பிறகு அவருடைய பல்வேறு வகைப்பட்ட வளர்ச்சியின் காரணமாக இந்தியத் தொழிலாளர்கள் இயக்கத்தினுடைய இதயங்களில் எல்லாம் இடம்பெற்று விளங்கியவர் ஆவார்கள். இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, ஜனநாயக ரீதியிலே முதன்முதலாக ஒரு அரசை நிறுவிய பெருமை அவருக்கு உண்டு. இந்தியாவிலே என்று மாத்திரம் சொல்ல முடியாது, உலகத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜனநாயக ரீதியிலே தேர்தல்களிலே போட்டியிட்டு ஒரு அரசை நிறுவிய சிறந்த பெருமை திரு. ஈ.எம்.எஸ். அவர்களுக்கு உண்டு.

அதேபோல, அரசியல் சட்டத்தினுடைய 356-வது பிரிவின் தாக்குதலுக்கு ஆளான பெருமையும் அவருக்கு உண்டு. முதன்முதலாக அந்தத் தாக்குதலுக்கு ஆளானவர் அவர். அதிலே சோர்ந்துவிடாமல், அடுத்து பல தேர்தல்களில் ஈடுபட்டு, ஒரு ஐக்கிய முன்னணியை கேரள மாநில அளவிலே உருவாக்கி 1969ஆம் ஆண்டு வரையிலே கேரள முதலமைச்சராகத் திகழ்ந்தார்கள். அந்தக் கட்டத்திலேதான், ஏற்கெனவே தமிழக

அரசோடு ஒத்துழைத்து உருவாக்கப்பட்ட பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்திலேயிருந்த சில பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு நான் கேரளாவுக்குச் சென்று, திருவனந்த புரத்தில் அவரோடு ஒரு நாள் முழுவதும் விவாதிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தப் பிரச்சினையில், அதிகாரிகளோடு உட்கார்ந்து கலந்து பேசியபோது, எந்த முடிவையும் எங்களால் எடுக்க முடியவில்லை. நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்த திரு. ஈ.எம்.எஸ். அவர்கள் திடீரென்று என்னைப் பார்த்து, 'கொஞ்சநேரம் தனியாகப்' பேசினால் பிரச்சினை முடிந்து விடும். இரண்டு அரசுகளுடைய அதிகாரிகளையும் தயவுசெய்து வெளியே இருக்கச் சொல்லிவிட்டு நாம் பேசுவோமா' என்றார். 'சரி' என்று ஒத்துக்கொண்டேன். இருவரும் பேசினோம் 'பிரச்சினை' பரம்பிக்குளம் - ஆளியாறு பிரச்சினை, இரண்டு நிமிடங்களில் சுமுகமாக முடிவுற்றது. அதுமாத்திரம் அல்லாமல் - அவருக்கும் எனக்கும், மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கின்ற முறையிலே மாத்திரம் அல்லாமல், எதிர்க்கட்சிகளுடைய தலைவர்கள் என்கின்ற முறையிலேகூட நீண்டகாலப்பழக்கம் உண்டு.

குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், 1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில் ஈ.எம்.எஸ். அவர்களும், நானும் சென்னையிலே ஒரு கூட்டத்திலே கலந்து கொண்டோம். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள். 'நான் ஏன் இங்கே வந்து கருணாநிதியுடன் கூட்டத்திலே கலந்து கொள்கிறேன் என்றால், இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூடிய ஒரே ஒரு இடம், இப்பொழுது தமிழ்நாடாகத்தான் இருக்கிறது; எனவேதான் அந்தச் சுதந்திரக் காற்றை சுவாசிக்க தமிழகத்திற்கு வந்து இருக்கிறேன்' என்று அன்றைக்குக் குறிப்பிட்டு தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தினார்கள்.

இறுதிக்காலம் வரையிலே தான் சார்ந்த இயக்கத்திற்கு, தான் சிறப்போடு திகழ்ந்த இயக்கத்திற்கு, தான் உழைத்த இயக்கத்திற்கு, தான் வளர்த்த இயக்கத்திற்கு அவர் பணியாற்றினார் என்பதற்கு அடையாளமாக, மலையாள மொழியிலே வெளியிடப்படுகின்ற தேசாபிமானி என்ற அவருடைய சொந்தக் கட்சிப் பத்திரிகைக்குக் கடைசி நேரத்திலேகூட, அவர் உயிர்

பிரிவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்புகூட dictate செய்து, இரண்டு, மூன்று கட்டுரைகள் அந்தப் பத்திரிகையில் வெளிவருவதற்கு உதவி, அதற்குப் பிறகுதான் அவர் மரணப் படுக்கைக்குச் சென்றார், மரணமுற்றார் என்ற செய்தியை யெல்லாம் கேள்விப்படும்போது, 89 வயது வரையிலே, ஏறத்தாழ 70 ஆண்டுக்காலம் பொது வாழ்க்கைக்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்ட அந்தப் பெருமகனார், இந்தியாவினுடைய புரட்சியிலே தனக்கும் ஓர் அத்தியாயம் உண்டு என்கின்ற அளவிற்கு இடம்பெற்ற அந்தச் சீரிய செம்மலினுடைய மறைவு இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு மாத்திரமல்ல, முற்போக்குச் சிந்தனை உள்ள அனைவருக்கும் பேரிழப்பாகும். அதேநேரத்திலே நாணயமான அரசியல், நேர்மையான அரசியல் வேண்டும் என்று விரும்புகின்ற அத்தனை பேருக்கும் திரு. ஈ.எம்.எஸ். அவர்களுடைய இழப்பு ஒரு பெரும் இழப்பு ஆகும் என்றே நான் சொல்கிறேன்.

அவர், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் என்று அழைக்கப் பட்டாலும்கூட, நம்பூதிரி என்பது ஒரு சாதிப் பெயர். அந்தச் சாதிப் பெயரே தன்னுடைய பெயராக ஆகின்ற அளவிற்கு அதிலேயும் ஒரு புரட்சியை அவர் செய்துகாட்டி இருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

தந்தைப் பெரியார் அவர்கள் வைக்கத்திலே - நடத்திய - போராட்டம், நம்பூதிரிகளை எதிர்த்துத்தான் அந்தப் போராட்டத்தை நடத்தினார். அவ்வளவு பிற்போக்கானவர்கள் அங்கே நம்பூதிரிகள் என்ற பெயரில் இருந்தார்கள். அந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சியாளர் மின்னல் கீற்றுப்போலத் தோன்றி, சிவப்பு நட்சத்திரமாக இந்தியா முழுவதும் விளங்கி, ஏன் உலக அரங்கிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு விளங்கி, அந்த நட்சத்திரம் இன்றைக்கு உதிர்ந்துவிட்டது என்றாலும்கூட, நம்முடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றுவிட்ட நட்சத்திரமாக அவர் விளங்குகிறார் என்று கூறி அவருடைய இழப்பிற்காக ஆழ்ந்த இரங்கலை இந்தஅவையின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்து அமைகின்றேன்.

ஆண்டி அம்பலம் மறைவுக்கு இரங்கல்

உரை : 91 நாள்: 30.3.1999

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எதிர் வரிசையில் எந்நேரமும் என்னுடைய பார்வையிலே படுகின்ற அளவிற்கு அமர்ந்திருந்த அன்புக்குரிய நண்பரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டப்பேரவை உறுப்பினருமான ஆண்டி அம்பலம் அவர்கள் மறைந்த செய்தி நேற்று காலையிலே கிடைத்தவுடன் நாம் அனைவருமே பதறிப் போனோம். அவை முன்னவரும் கட்சிகளின் தலைவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல, அடக்கத்தின் மொத்த உருவமாக, நல்ல இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள். ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டியதைப் போல, அவருடைய பெயருக்கு ஏற்றாற்போல ஓர் ஆண்டியாகவே அரசியலிலே வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

தொகுதி மக்களிடத்திலே அவர் சார்ந்திருந்த கட்சிக்கு உள்ள செல்வாக்கைவிட தனிப்பட்ட முறையிலே அவருக்குள்ள செல்வாக்கு கட்சிக்கும் பயன்பட்டது என்பதை அவருடைய கட்சியிலே உள்ளவர்களே மறுக்கமாட்டார்கள். அந்த அளவுக்குத் தனிப்பெரும் செல்வாக்கோடும் அந்தத் தொகுதியிலே வாழ்ந்தவர். இன்னமும் அந்தத் தொகுதி மக்களுடைய நெஞ்சங்களிலே மறையாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவர் அரசியலிலே மாத்திரமல்ல. ஆன்மீகத் துறையி லும், சமுதாயத் துறையிலும் ஆழ்ந்த பற்றுகொண்டு அந்தப் பணிகளிலும், தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பெருந்தகை

ஆவார்கள். என்னைச் சந்திக்கின்ற நேரத்தில் எல்லாம் ஒரு முறையீடு- தொகுதியைப் பற்றிய நிலைகளை விவரித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கின்ற அளவிலே- வழங்குவது அவருடைய வாடிக்கை. அவற்றில் பலவற்றை அரசின் சார்பில் நிறைவேற்றிக் கொடுத்தாலும்கூட பலவற்றை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருந்தாலும்கூட அதற்கான விளக்கங்களை அளிக்கின்ற நேரத்திலே, அவை முன்னவர் குறிப்பிட்டதைப் போல, அதுகேட்டு ஆறுதல் அடையக் கூடியவர்; அதை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்: அதற்காக சற்றும் சீற்றம் கொள்ளாதவர்; வருந்தாதவர். அவர் இளமைக் காலத்திலே யிருந்து துடிப்பான ஓர் இளைஞனாகத் திகழ்ந்து பல்வேறு தேகப் பயிற்சிகள். விளையாட்டுக்கள் இவற்றிலே ஈடுபாடு கொண்டு உடல் ஆரோக்கியத்தையும் நல்ல முறையிலே பாதுகாத்து வந்தவர்தான். எனினும் திடீரென்று இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஒரு பெரிய குடும்பம் அவருடைய குடும்பம் என்பதை இங்கு உள்ளவர்கள் எல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

நல்ல எளிமை, அதே அளவுக்குப் பழகுவதிலே இனிமை. இந்தச் சட்டமன்றத்திலே என்றைக்காவது ஒரு நாள் உரத்த குரலிலே பேசி யாரையும் புண்படுத்தினார் என்ற நிலை என்றைக்குமே இல்லை என்ற அளவிற்கு, அவர் தொடர்ந்து 25 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்த அவையிலே பணி யாற்றினாலும்கூட அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற அந்த வாய்ப்பைப் பெற்றுள்ள நாங்கள் எல்லாம்கூட, அத்தகைய ஒரு சூழ்நிலை என்றைக்கும் உருவானதைக் கண்டதில்லை. அந்த அளவிற்கு உங்களுடைய உள்ளம் எல்லாம் கவர்ந்த ஒரு பெரியவர் மறைந்த ஆண்டி அம்பலம் அவர்கள் ஆவார்கள்.

அவருடைய குடும்பத்தைப் பற்றியும், அதற்குச் செய்ய வேண்டிய உதவிகளைப் பற்றியும் இங்கே எடுத்துக்கூறப் பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் கேட்டுக் கொள்வேன். இதுபோன்ற ஒரு பெரிய துக்க சம்பவம் நடைபெற்று, அந்தத் தலைவருக்காக இரங்கல் தீர்மானம் நிறை வேற்றுகிற நேரத்தில், அவரைப் பற்றிய குறிப்புகள்தான் அவைக் குறிப்பிலும், ஏடுகளிலும், ஏறவேண்டுமேயல்லாமல்.

வேறு - அவை சாராத வேறு - குறிப்புகள், அவருடைய குடும்பத்தைப் பற்றி, நிதியுதவி போன்ற கோரிக்கைகளை எழுப்பினால், ஆண்டி அம்பலம் என்ற ஒரு பெரியவருடைய மறைவு, மறைந்துபோய், திசை திருப்பப்பட்டு, வேறு திசையிலே சென்றுவிடும் என்கின்ற ஆதங்கம் எனக்கு உண்டு. எனவே இந்த மாமன்றத்திலே பணியாற்றுகின்ற உறுப்பினர் களுடைய மறைவு, அதன் காரணமாக எழுகின்ற சூழ்நிலை. இவற்றைப் பற்றியெல்லாம் பேச, முடிவுகளை எடுக்க, மாநில சட்டமன்ற மானியம் வருகின்ற நேரத்தில் பொதுவாக அதைப் பற்றி பேசலாம். என்ற கருத்தை மாத்திரம் சொல்லி -- இல்லையேல். பலரும் எடுத்துச்சொன்ன கருத்தை நான் அலட்சியப்படுத்திவிட்டேனோ என்று யாரும் கருதக்கூடாது என்பதற்காக, இன்றைக்கு ஒரே தீர்மானம் -- ஆண்டி அம்பலம் அவர்களுடைய மறைவுக்காக நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம் என்ற வகையிலே, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கு. உற்றார், உறவினருக்கு அந்தத் தொகுதி மக்களுக்கு, அவர் சார்ந்த இயக்கமான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு, அதன் தலைவருக்குத் தெரிவித்து அமைகிறேன்.

அப்துல் லத்தீப் மறைவுக்கு இரங்கல்

உரை : 92 **நாள் : 12.04.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல யார் யாருக்கு ஆறுதல் சொல்வது என்று புரியாத ஒரு நிலையில் நம்முடைய தமிழ்க் குடும்பத்தில் ஒரு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று திடீரென்று நின்றுவிட்டது என்பதற்கேற்ப நீண்டகாலம், ஏறத்தாழ 40 ஆண்டு காலம் தமிழக அரசியல் வரலாற்றில் தன்னுடைய தனி முத்திரையைப் பதித்து அருந்தொண்டாற்றிய என்னுடைய அன்புகெழுமிய நண்பர் அப்துல் சமது அவர்களுடைய மறைவு, இந்த அவையிலே உள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, தமிழகத்திலே உள்ள இஸ்லாமியப் பெருமக்களுக்கு மாத்திரமல்ல, இஸ்லாமியர் அல்லாத தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் பேரதிர்ச்சியாகும்.

அவை முன்னவர் அவர்கள் இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தபோது குறிப்பிட்டவாறு மாணவப் பருவத்திலிருந்தே அவர் சார்ந்த இயக்கம் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்றாலும்கூட, அவருடைய இயக்கத்தினுடைய தலைவராக கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களை ஏற்றுக்கொண்டிருந்தார் என்றாலும்கூட, திராவிட இயக்கத்தின் பால் பெரும் மதிப்பும், மரியாதையும், பேரன்பும் கொண்டு தந்தை பெரியாரிடத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில், எங்களிடத்தில் அவர் பழகியவிதம், அவர் வெளிப்படுத்திய பண்பாடு இவற்றை என்றைக்கும் மறக்க இயலாது. கடந்த, 2, 3 ஆண்டு காலத்தில் மாதம் ஒரு முறையாவது அவர் என்னை வந்து சந்தித்திருக்கிறார். பல்வேறு பிரச்சினைகள், தமிழ் நாட்டிலே மனித நேயம் ஓங்குவதற்கும், மத நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் ஆற்ற வேண்டிய காரியங்கள், இவற்றைப் பற்றி எல்லாம் பேசியிருக்கிறார்.

அண்மையிலேதான், கடந்த மாதத்தில், இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய பொன் விழாவைக் கொண்டாட வேண்டுமென்று திட்டமிட்டு, அவர் எண்ணியவாறு மிகச் சிறப்பாக அந்த விழாவைக் கொண்டாடினார். 1947 அல்லது 1949ஆம் ஆண்டில், 50 ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, தமிழகத்திலே, காயிதே மில்லத் அவர்களுடைய தலைமையிலே உருவான அந்தக் காலகட்டத்தில், இன்றைய இராஜாஜி மண்டபத்திலேதான், அதன் முதல் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது என்பதற்காக, இந்தப் பொன் விழாவையும், அதே இராஜாஜி மண்டபத்திலே நடத்த வேண்டுமென்ற ஆசையை என்னிடத்திலே வெளியிட்டு, அதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் அரசின் சார்பாக என்று அவர் வலியுறுத்தியபோது, நான் அதிலே சட்டதிட்டங்கள் எதையும் பார்க்காமல், ஒரு மாபெரும் அரசியல் கட்சி, காயிதே மில்லத் தலைமையிலே வந்த அரசியல் கட்சி, அதனுடைய பொன் விழா என்கிற அந்த அளவில் விழா என்ற நிலையிலே நடத்திக்கொள்வதற்கு அவர்களுக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் செய்து தந்தேன்.

பேராசிரியர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, கடந்த சில வாரங்களுக்கு முன்பு பொன் விழா நடத்தி முடிந்த பிறகு, இதயக் கோளாறின் காரணமாக மருத்துவமனையில் அவர் விளைந்து, நாங்கள் எல்லோரும் அவரைச் சென்று பார்த்தபோது, எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தார் என்பதையும் எண்ணிப் பார்க்கின்றேன். சில நாட்களுக்கு முன் திடீரென்று அவருடைய மூளை நரம்பு வெடித்து, பேசுவதற்கான சக்தியை இழந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு, கவலைக்கு இடமான சூழ்நிலையில் அவர் இருப்பதை அறிந்து, அன்று காலையிலே மருத்துவமனைக்குச் சென்று அவரைப் பார்த்தோம். அப்போது அவர் இவ்வளவு விரைவிலே எங்களைவிட்டுப் பிரிவார் என்று யாரும் எண்ணிடவில்லை. பிரிந்துவிட்டார் என்றாலும்கூட, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் சேர்க்கப்பட்டு, சிகிச்சை முடிந்து, சிகிச்சைக்கு நல்ல பயன் காட்டியதைப்போல, நல்ல மனம் படைத்தவராய், எதிரிகளாக கட்சிகளின் சார்பிலே இருந்தவர்களைக்கூட நண்பர்களாகக் கருதக்கூடியவராய், எந்தவகையிலும் தமிழகத்திலே மத வேறுபாடுகளால் எத்தகைய சிறு கிளர்ச்சிகூட விளையக்கூடாது என்று எண்ணுகின்ற உள்ளம் படைத்தவராய்த் திகழ்ந்த அவரை,

இன்று பிரிந்திருப்பது, அனைவருக்கும் பெரும் இழப்பாகும். குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஏற்பட்ட இழப்பு என்று கருத முடியாமல், அனைவருக்கும் பேரிழப்பாகும். எவ்வளவு கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட, காண்கிற நேரத்திலே அவற்றை யெல்லாம் ஓர் ஓரத்திலே ஒதுக்கி வைத்துவிட்டு, புன்னகை ததும்ப அவர் பேசுவதும், பழகுவதும் என்றைக்கும் மறக்க முடியாதவை ஆகும்.

இன்றுகூட காலையிலே, நானும் பேராசிரியரும், அமைச்சர் பெருமக்களும் சென்று அவருக்கு மரியாதை செலுத்துகிறபோதுகூட, ''உறங்குவது போலும் சாக்காடு'' என்று சொன்ன வள்ளுவருடைய குறள்தான் என் நினைவுக்கு வந்தது. அப்படித் தூங்குகிற நிலையிலேதான்' அவர் இயற்கையெய்திய அந்தக் காட்சியைத்தான் நான் இன்றைக்குக் காண நேர்ந்தது. அந்தப் பெரியவருடைய எண்ணம் நிறைவேற, அவருடைய அடியொற்றி அனைவரும் பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான் நாம் அவருக்குச் செலுத்தும் இரங்கல் என்று கூறி, இந்த அரசின் சார்பாக அவருடைய குடும்பத்தார்க்கும், உற்றார் உறவினர்க்கும், இயக்க நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. அப்துல் லத்தீப் அவர்களும் சொன்ன கருத்துக்களையொட்டி, அவையிலே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேண்டுமென்று விரும்பினார்கள். காலத்தின் அருமை கருதி, எல்லோரின் சார்பிலே இவர்கள் பேசிவிட்டார்கள் என்று சொல்லி, இவர்கள் தெரிவித்த இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அவருடைய கட்சியின் பொன் விழா நடந்த நேரத்தில், பலமுறை தொலைபேசியில் என்னிடம் தொடர்பு கொண்டு, சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இவ்வளவு விரைவிலே அவர் மறைந்து விடுவார் என்று யாருக்கும் தெரியாது.

தேனி மாவட்ட கோவில் விபத்து

உரை : 93 நாள் : 18.5.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கோயில் திருவிழாவில் ஏற்பட்ட துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தில் இறந்துவிட்டவர்களுடைய குடும்பத்திற்கும், காயம்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்கும் என்னுடைய இரங்கலையும், ஆறுதலையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தச் சம்பவம் குறித்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.அழகராஜா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் திரு.சந்தானம் அவர் களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் திரு.வேலாயுதம் அவர்களும், புதிய தமிழகம் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு.சுந்தரம் அவர்களும் இரங்கல் தெரிவித்திருப்பதோடு, இதுபோன்ற நிகழ்சிகளில் அரசு செய்திடவேண்டிய கடமையினையும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மூலமாகக் கிடைத்துள்ள செய்தியினை முதற்கண் இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

தேனி மாவட்டம் வீரபாண்டியிலே உள்ள கௌமாரி யம்மன் கோயில் திருவிழா கடந்த 11-5-1999 முதல் தொடங்கி

நடைபெற்று வருகிறது. நேற்று 17-5-1999 மாலை 4-45 மணியளவில், அக்னி tea Stall-tea stallக்குப் பெயரே அக்னி tea stall- அந்தக் கடையினுடைய மாஸ்டர் கணேசன் என்பவர் மண்ணெண்ணெய் Air Stoveல் pump செய்தபோது மண் ணெண்ணெய் வெளியே வந்து Burner-ல் தீப்பிடித்துச் சூடாகும் சமயம் ஒருவர் வந்து தனக்கு டீ கேட்ட நேரத்தில், மேற்படி கணேசனுடைய கவனம் திசை திரும்பி Stove-ஐக் கவனிக்காமல் விட்டுவிட்டதால் கூடுதலான மண்ணெண்ணெய் வெளியேறி, அதனால் தீப்பிடித்து அவரது தென்னை ஓலையால் வேயப்பட்ட கூரையிலே அந்தத் தீ பரவி, காற்று அதிகமாக வீசிய காரணத்தால் அருகிலுள்ள கடைகளுக்கும் தீ மளமளவென்று பரவியுள்ளது என்றும், பக்கத்திலேயிருந்த சிறுசிறு கடைகளெல்லாம் தீயில் உடனடியாக எரிந்துள்ளன. பெரும்பாலும் வளையல் கடைகள், பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் கடைகள், பழக் கடைகள், உணவுப் பொருட்கள் விற்கும் கடைகள்தான் எரிந்துள்ளன.

கோயில் சார்பாக 100 கடைகள்தான் ஏலம் விடப்பட் டுள்ளன. ஆனால் 300 கடைகள் எரிந்துவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. எல்லாம் தற்காலிகக் கடைகள் என்பதால், அதிக மதிப்புள்ள பொருட்கள் நாசமாகி இருக்க முடியாது என்றும் கூறப்படுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரின் மதிப்பீட்டின் படி, சுமார் 20 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் நாசமாகியிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மூன்று ஆண்களும், இரண்டு பெண் களும் இறந்திருக்கின்றார்கள். மற்றொருவர் இறந்திருக்கிறார். அவர் ஆணா பெண்ணா என்று அடையாளம் தெரியாத அளவுக்கு உடல் கருகிய நிலையிலே அந்தச் சடலம் இருக் கின்றது. பத்திரிகையொன்றில் 15 பேர் இறந்ததாக வந்துள்ள செய்தி தவறானது என்பதை அந்தப் பத்திரிகையாளர்களே காலையில் தொலைபேசி மூலமாக என்னுடைய செயலகத்திற்குத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த விபத்திலே மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளார்கள். அதில் ஒருவருக்கு 50 சதவீதக் காயமும், மற்றொருவருக்கு 55 சதவீதக் காயமும், இன்னொரு வருக்கு 15 சதவீதக் காயமும், ஏற்பட்டுள்ளது. மூவரும்

மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 50 சதவீதத்திற்கு மேற்பட்ட காயம் அடைந்தவர்களை, உள்ளபடியே மிகுந்த சிரமத்திற்கிடையிலேதான் பிழைக்கவைக்க முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

கோயிலுக்கும், தேருக்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. தேரில் இருந்த அம்மன் சிலை, உடனடியாக ஊராட்சி அலுவலகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பாதுகாப்பாக வைக்கப்பட்டது. விழாவின் கடைசி நாள் இன்று என்பதால் உடனடியாக அம்மன் சிலை தேருக்கு இன்று காலையிலே எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு கோயிலுக்குச் சென்று விழா முடிந்து, கொடிக் கம்பத்திலிருந்து கொடி இறக்கப்பட வேண்டும் என்று ஊர்க்காரர்கள் வலியுறுத்தியதின் பேரில், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரிகளும் அங்கு முகாமிட்டு, அதற்கான பணிகளையும், மற்றும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். நேற்று இரவும், இன்று காலையும் சுமார் 1,800 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீட்டு அளவை சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அலுவலர்கள் கணக்கிட்டுக் கொண்டுள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக அந்த இடத்திலேயே முகாமிட்டுள்ளார். இன்று பிற்பகல் அறநிலையத் துறை அமைச்சரும் அங்கே நேரடியாகச் செல்ல இருக்கின்றார்.

விழா நடைபெற்ற இடத்திலே வைக்கப்பட்டிருந்த ஒரு தீயணைப்பு வண்டியுடன் மேலும் நான்கு தீயணைப்பு வண்டிகளையும் உடனடியாக வரவழைத்து, தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது. தற்பொழுது அங்கே எந்தவிதமான பதற்றமும் இல்லையென்று செய்திகள் வந்துள்ளன.

இந்த நிகழ்வுகளைக் கணக்கிட்டு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் தருகின்ற விவரத்தின்படி அரசின் சார்பிலே முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படும் என்று தெரிவிப்பதோடு, முதல் கட்டமாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செங்கல்வராயன் மறைவுக்கு இரங்கல்

உரை : 94 நாள் : 17.11.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிந்துள்ள இரங்கல் மற்றும் ஆறுதல் தீர்மானங்களை வழிமொழிந்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானங்களை யொட்டி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், மறைந்தவர்கள்பால் தங்களுக்குள்ள அன்பையும், அவர்களுடைய இழப்பால் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஏற்பட்டுள்ள துன்பத்தையும் விளக்கி இருக்கிறார்கள். கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் நாடறிந்த பெரியவர்கள், நல்லவர்கள், வல்லவர்கள் பலரை நாம் இழந்து துன்பக் கடலிலே ஆழ்ந்திருக்கின்றோம். குறிப்பாக, கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், அவர்களுடைய அகவை 97 என்றாலும்கூட, இன்னும் சில ஆண்டுகாலம் இருந்து நமக்கு அறிவுரைகள் வழங்கவேண்டிய வாய்ப்பை நாம் பறிகொடுத்து விட்டோம் என்று எண்ணித்தான் வருந்த வேண்டியிருக்கின்றது. இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் இந்த மண்ணுக்காகப் போராடி, பலமுறை சிறை சென்ற பெருமகன் என்பது மாத்திரமல்ல, இந்த மண்ணின் அனைத்திந்திய ஆட்சி மொழியாக இந்தி மாத்திரமே இருக்கவேண்டும் என்ற ஒரு நிலையை மத்தியிலே காங்கிரசார் எடுத்தபோது, அதை வன்மையாக எதிர்த்து, ஆங்கிலமும் நீடிக்கவேண்டும் என்ற ஒரு பெரு நிலையை எடுத்த பெருமகனார் கிருஷ்ணசாமி பாரதி

அவர்கள் ஆவார்கள். அதை தன்னுடைய இறுதிக்காலம் வரையிலே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூறி வந்தார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அவருடைய குடும்பமே - இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல - இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தியாகக் குடும்பமாகும். அந்தக் குடும்பத்திலே தோன்றிய அந்தத் தோன்றல் இன்று படமாகி விட்டார். படமானாலும் இந்திய நாட்டினுடைய சுதந்திரத்திற்கு, மொழிப்பற்றுக்கு ஒரு பாடமாக விளங்குகிறார் என்பதை எண்ணி நாம் ஆறுதல் பெறுகின்றோம்.

செங்கல்வராயன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களோடு சேர்ந்து, இணைந்து பயின்று, நண்பராகப் பழகி, இறுதிவரையிலே அந்த நட்பைப் போற்றி, அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகும், இந்த இயக்கத்திற்கு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரும் தோழனாக விளங்கினார்கள்.

நான் கேள்விப்பட்டது சரியாக இருக்குமேயானால், தமிழ் மாநில காங்கிரஸ் என்ற அந்தக் கட்சி தோன்றியபோது, முதல் உறுப்பினராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டார் என்பதிலிருந்து, அவர் எந்த அளவிற்கு, அடைந்த சுதந்திரத்தை நல்ல முறையிலே பேணிப் பாதுகாக்கவேண்டும் என்பதிலே நம்பிக்கை வாய்ந்தவராக இருந்தார் என்பதை உணர முடிகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடற்கரையிலே நேதாஜியினுடைய சிலையைத் திறந்தபோது, அவருடைய முன்னிலையிலேதான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் அங்கே உரையாற்றும்போது சொன்னார்கள்: 'நேதாஜி அவர்களுடைய சொற்பொழிவை நான் மொழிபெயர்த்திருக்கிறேன்' என்ற பெருமிதத்தை அங்கே எடுத்து விளக்கினார்கள். இறுதிவரையிலே, அவர் மறைகின்ற சில வாரங்களுக்கு முன்பு வரையிலே, அவர்களுடைய குரல் தழுதழுத்ததில்லை. சிங்கத்தின் குரலாகவே ஒலித்துக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட பேச்சாற்றல் வாய்ந்தவர், நினைவாற்றல் வாய்ந்தவர். இத்தனைக்கும் மேலாக, நட்போடு பழகக்கூடியவர். அவர்

அரசியல் பண்பாடு தெரிந்தவர். அவரை இழந்தது தமிழகத்திற்கு பெரும் இழப்பு.

அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் இதே மாமன்றத்திலே உறுப்பினராக இருந்து - 1957ஆம் ஆண்டிலேயே எங்களோடு உறுப்பினராக அமர்ந்து, பல புரட்சிகரமான பேச்சுக்களை இந்த மன்றத்திலே வழங்கியவர். பிறகு அமைச்சராகப் பொறுப்பேற்றவர். மத்தியிலும், மாநிலத்திலும் அமைச்சராக இருந்து புகழ் எய்தியவர். இளம்பிராயத்திலேயே, குறிப்பாக, மகளிர் பொது வாழ்க்கைக்கு வருவதைப்பற்றிக் கேள்விக்குறி எழுந்திருந்த அந்தக் கால கட்டத்திலேயே தன்னைப் பொது வாழ்க்கைக்கு உரியவராக ஆக்கிக்கொண்டு, தந்தை பெரியாருடைய வழியில், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நெறியில் சுயமரியாதை இயக்கத்தைக் கட்டிக் காத்தவர். குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், பூரண கர்ப்பவதியாக இருந்தபோது - குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அன்றையதினம் தமிழகத்திலே கட்சி மாறுபாடு இல்லாத ஒரு புரட்சி நடைபெற்றபொழுது, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம்கூட அந்தக் கல்வித் திட்டம் கூடாது என்று ஆர்ப்பரித்த அந்தக் காலகட்டத்தில் - பூரண கர்ப்பவதியாக இருந்த அம்மையார் அவர்கள், அந்தக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிறைப் பட்டார்கள் என்பது, அவருடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய முக்கியமான அத்தியாயமாகும்.

நண்பர் இராகவானந்தம் - நான் நண்பர் இராகவானந்தம் என்று குறிப்பிடுவதன் காரணமே, என்னுடைய ஆருயிர் நண்பராக கடைசிகாலம் வரையிலே அவர்கள் விளங்கியவர்கள் ஆவார்கள். சுயமரியாதை இயக்கத்திலே பழுத்த பழம் அவர். அவரது இளம் பிராயத்திலிருந்தே தொழிலாளிகளுக்காகப் பாடுபடக்கூடிய அந்தத் தொண்டுள்ளம் வாய்ந்தவர், நாத்திகக் கொள்கை படைத்தவர். அதற்கு எடுத்துக்காட்டாக, அவருடைய பிள்ளைகளில் ஒரு பிள்ளைக்கு - எல்லோரும் புரட்சிக்காரர் களுடைய பெயர்களை இடுவார்கள் - ஆனால் அவர் தன்னுடைய பிள்ளைக்கு, 'கடவுள் இல்லை' என்றே பெயர்

சூட்டியிருந்தார். நான்கூட ஓரிடத்தில் சொன்னேன், 'வெங்கட்ராமன்' என்றால், முழுப் பெயரைச் சொல்லாமல், 'வெங்கட்' என்றோ, 'ராமன்' என்றோ சொல்வார்கள்.அதுபோல நீங்கள் 'கடவுள் இல்லை' என்ற பெயரை வைத்துவிட்டீர்கள். இதை அரைப் பெயராகச் சொல்கிறவர்கள், 'கடவுள்' என்று அழைத்தால் என்ன செய்வீர்கள், அல்லது 'இல்லை' என்று அழைத்தால் என்ன செய்வீர்கள் என்றுகூடக் கேட்டதுண்டு. அந்த அளவுக்குத் தன்னுடைய குழந்தைக்கே 'கடவுள் இல்லை' என்ற பெயர் வைத்த அப்பழுக்கற்ற நாத்திகராக, அதே நேரத்திலே தந்தை பெரியாருடைய கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற சுயமரியாதை வீரராக, அண்ணாவுடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்ட தளகர்த்தராக விளங்கியவர். அவர் இன்று இல்லை என்னும்பொழுது மிகவும் வேதனையடைகின்றோம்.

அன்பில் பொய்யாமொழி, என்னுடைய ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கம் என் கரம் பிடித்து விட்டுச்சென்ற பிள்ளை. நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், நான் திருச்சி மாவட்டப் பகுதியிலே சுற்றுப்பயணத்திலே ஈடுபட்டிருந்தபொழுது, அவர் என்கூட இரவு பதினோரு மணி வரையிலும் பேசிக்கொண்டிருந்து விட்டு, விடைபெற்று வீட்டுக்குச் சென்றார். செல்லும்போதுகூட - என்னுடைய குரல் வளத்திற்காக நான் அந்தச் சுற்றுப் பயணத்திலே திராட்சைப் பழங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன் - காய்ந்த திராட்சையை. அது நான் சாப்பிட்டுத் தீர்ந்துவிட்டது. அந்தக் கிண்ணத்தைப் பார்த்து விட்டு, 'அப்பா, காலையில் நான் அந்த திராட்சையை வாங்கி வருகின்றேன்' என்று சொல்லிப் போனவர்தான்: அவர் காய்ந்த திராட்சையாக ஆகிவிட்டார். அந்தப் பிள்ளையை இழந்து நான் பட்ட பாடும், படும் பாடும் எவ்வளவு என்பதை உணர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அதனை எடுத்துரைத்திருக் கின்றார்கள்.

அதைப்போல என்னுடைய ஆருயிர்த் தம்பி, பண்ணுருட்டி மணி, கட்டடத் தொழிலாளியாகத் தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்து, அந்த எளிய நிலையிலிருந்து இம்மியும் தன்னை மாற்றிக்கொள்ளாமல், பண்ணுருட்டி நகராட்சி

மன்றத் தலைவராக ஆகின்ற அளவுக்கு மக்களுடைய செல்வாக்கைப் பெற்று, நெல்லிக்குப்பம் தொகுதியிலேயிருந்து சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்குள்ள அனைவரும் போற்றிப் புகழ்கின்ற வகையிலே, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான பல சட்ட திட்டங்களை எல்லாம் எடுத்து விளக்குகின்ற ஆற்றலாளராக விளங்கியவர் மணி. அவரும், இன்னும் 40, 50 ஆண்டுகாலம் வாழவேண்டியவர். அதற்குள்ளாகத் தன்னுடைய வாழ்வைச் சுருக்கிக்கொண்டு போய்விட்டார். இவர்களுக்கெல்லாம் இரங்கலைத் தெரிவித்து, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஆறுதலை வழங்க வேண்டும். நமக்கு நாமே ஆறுதல் வழங்கிக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். அவர்களோடு சேர்த்து, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் தொடக்கத்திலே குறிப்பிட்ட, மறைந்த, சட்டப் பேரவையினுடைய முன்னாள் உறுப்பினர்கள் 18 பேர்களுடைய குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

ரங்கராஜன் குமாரமங்கலம் மறைவுக்கு இரங்கல்

உரை : 95 நாள் : 06.11.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பெற்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் வழிமொழியப்பெற்று, எல்லாக் கட்சிகளின் தலைவர்களாலும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப் பெற்றுள்ள இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக் களையும் இணைத்து, இந்த அவையினுடைய உணர்வுகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க உங்களோடு இணைந்து நானும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் 50 வயதுகூட நிறையப் பெறாத வயதில், 48 வயதில், இளம்பிராயத்தில் நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார். அரசியலிலே புகழ் வாய்ந்த ஒரு பெரும் குடும்பத்துச் செல்வர் அவர். அவருடைய தந்தை மோகன் குமாரமங்கலத்தை நான் நன்றாக அறிவேன். அவரோடு நன்கு பழகி இருக்கின்றேன். குறைந்த காலமேயானாலும்கூட ரங்கராஜன் குமாரங்கலம் அவர்களிடம் நிரம்பப் பழகுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர் வெற்றிபெற்ற திருச்சி நாடாளுமன்றத் தொகுதி பற்றி எந்நேரமும் கவலைப்படுவதையும் அந்தத் தொகுதிக்கு தொடர்ந்து நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று அக்கறை காட்டுவதிலேயும் எப்படிச் சிறந்து விளங்கினார் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். தமிழகத்திற்கு நிரம்பச் செய்ய வேண்டும், வளம் சேர்க்க வேண்டும என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றியவருடைய தொண்டு தொடர்ந்து நமக்குக் கிடைக்க முடியாமல் மறைந்துவிட்டார்.அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு, நண்பர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய ஆருயிர் இளவல் நாஞ்சிலார், தமிழக அரசினுடைய வருவாய்த் துறை அமைச்சர் மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின், பொதுவாக திராவிட இயக்கத்தின்

மூத்த தலைவர்களிலே ஒருவராக விளங்கியவர். அவர், நாடாளுமன்றத்திலே தனிக்கொடி நாட்டியவர் என்ற அளவிற்குப் புகழ் பெற்றவர், அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலும் மற்றும் உள்ள தலைவர்களிடத்திலும் அவர் எந்த அளவிற்குப் பழகினார் என்பதும், எவ்வளவு நற்பெயரை அவர்களிடத்திலே எடுத்தார் என்பதும்,நாஞ்சில் மனோகரன் என்றால் ஒரு தனி கவனத்தோடு, தனி ஆர்வத்தோடு அவரை டில்லி வட்டாரம் கவனித்தது என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன்.

அமைச்சராக இப்போது மாத்திரமல்ல - நிதி அமைச்சராக அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தபோதும், இப்போது இந்த அமைச்சரவையிலே அவர் இடம் பெற்றிருந்தபோதும், நிர்வாகப் பொறுப்புகளை எவ்வளவு நேர்மையோடு கவனித்தார். எந்த அளவிற்கு தயவுதாட்சணியம் இல்லாமல் நடந்துகொண்டார். எவ்வளவு பொறுப்புணர்வோடு நடந்துகொண்டார், என்பதையெல்லாம் நான் மிக நன்றாக அறிவேன். நான் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமேயானால், அமைச்சர்களிலேயே அவர் ஒருவர்தான், தான் ஆற்றுகின்ற பணிகளை ஒவ்வொரு மாதமும் குறிப்பு எடுத்து, புள்ளிவிவரத்தோடு எனக்குத் தகவலாகத் தரக்கூடியவர். அவர் வெளியூர் செல்வதாக இருந்தாலும்கூட எந்த ஊருக்குச் செல்கிறேன், எப்போது புறப்படுகிறேன் என்பதிலேயிருந்து, வந்து சேர்ந்துவிட்டால்கூட சென்னைக்கு வந்து சேர்ந்து விட்டேன் என்ற குறிப்பு வரையிலே எனக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கக் கூடியவர். அப்படி தன்னுடைய பணியை மிகக் கண்டிப்பாக கடமை உணர்வோடு ஆற்றிய என்னுடைய அருமை இளவலாக, அருமைத் தம்பியாக இருந்தவரை இழந்து, நீங்கள் எல்லாம் தெரிவிக்கின்ற அனுதாபம், ஆறுதல் இவற்றால் மாத்திரமே நானும் ஆறுதல் பெறுகிறேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொண்டு, அவருடைய குடும்பத்தாருக்கு இந்த அவையின் மூலமாக இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அன்பரசு, திராவிட இயக்கத்திலே ஒரு பகுத்தறிவாளராக தன்னைப் பதிவு செய்து கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர். எம்.ஜி.ஆருடைய தலைமையிலே பணியாற்றியவர், தம்பி திருநாவுக்கரசு தலைமையிலே இறுதிக் காலத்திலே பணியாற்றியவர். அவர் குறைந்தகாலமே இந்தச் சட்டமன்றத்திலே கடமையைச் செய்தார் என்றாலும்கூட அதுவே அவருடைய திறமைக்கு எடுத்துக்காட்டாக, ஆற்றலுக்கு உதாரணமாகத் திகழ்வதை இந்த அவையிலே உள்ள ஒவ்வொரு

உறுப்பினரும் அறிவீர்கள். அந்த அளவிற்கு அழுத்தந் திருத்தமாக, உறுதியோடு, கொள்கை உணர்வோடு கருத்துக்களை எடுத்துவைத்த பெருமை மறைந்த அன்பரசு அவர்களுக்கு உண்டு. அவருடைய மறைவிற்காக, அவருடைய குடும்பத்தாருக்கு, உற்றார் உறவினருக்கு, நண்பர்களுக்கு, குறிப்பாக அவருடைய கட்சியின் தலைவர் தம்பி திருநாவுக் கரசுவுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வல்லரசு, பார்வர்டு பிளாக் கட்சியினுடைய பொதுச் செயலாளர். தொடக்கக் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தோடு எந்தச் சூழ்நிலையிலும் உறவு மாறாமல் இருந்தவர். என்னிடத்திலே பேரன்பு செலுத்தியவர். எந்த நேரத்திலும் தொகுதிக்காகக் குரல் கொடுக்கக்கூடியவர். இந்த மன்றத்திலே குரல் கொடுத்தது மாத்திரமல்ல. தனியாக என்னைச் சந்தித்தாலும், மற்ற அமைச்சர்களைச் சந்தித்தாலும் தொகுதி, தொகுதி என்றே எப்பொழும் தொகுதிக்காகவே பணியாற்றிக் கொண்டிருந்தவர். உசிலம்பட்டி தொகுதியில் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டுக் கேட்டு, வராமல் இருந்த 58 கிராம வாய்க்கால் திட்டத்தைக் கொண்டுவர வேண்டு மென்பதற்காக அரும்பாடுபட்டு, அவரே பொதுப்பணித் துறை அமைச்சர் மூலமாக முயற்சி எடுத்து, அண்மையிலே தான் அந்த முயற்சியிலே வெற்றி பெற்று, அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பணி முடிந்து, அதனுடைய தொடக்க விழாவிற்கு அவர் இல்லாமல் மறைந்துவிட்டார் என்பது பெரும் சோகம்.வல்லரசு போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் வாய்த்தால் எப்படி இருக்கும் என்று எண்ணுகின்ற அளவிற்கு தொகுதிப் பணியை ஆற்றியவர் வல்லரசு அவர்கள். அவருடைய மறைவுக்காகவும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை, அவருடைய உற்றார் உறவினருக்கு, நண்பர்களுக்கு அவருடைய இயக்கத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இன்று இந்த நால்வரையன்னியில் மற்றும் கடந்த காலத்திலே இந்த அவையிலே பணியாற்றி மறைந்துவிட்ட பலருக்கும் நாம் இரங்கலைத் தெரிவித்திருக்கிறோம். அந்த இரங்கல் செய்தியோடு என்னுடைய இரங்கலையும் இணைத்து இந்த அளவில் அமர்கின்றேன். வணக்கம்.

சி. சுப்பிரமணியம் மறைவுக்கு இரங்கல்

உரை : 96 நாள் : 08.11.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுபெரும் அரசியல் அறிஞர், பாரத ரத்னா சி. சுப்பிரமணியம் அவர்களுடைய மறைவுக்காக இரங்கல் தீர்மானத்தை அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழிமொழிந்து, மற்ற கட்சிகளின் தலைவர்களும் ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றைய என்னுடைய மனோநிலை, உடல் நிலை , இரண்டையும் பொறுத்து இன்று அவைக்கே வர இயலுமா என்ற சூழ்நிலையிலே இருந்தேன். நேற்று இரவு 10-00 மணி முதல் நானும், அமைச்சர்களும், எங்களோடு மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் விடிய, விடிய காலையில் நான்கே முக்கால் மணி வரையிலே அப்பலோ மருத்துவமனையிலே இருந்து காலையிலேதான், விடியற்காலையிலேதான் வீடு திரும்பினோம். அவைக்கு வர இயலாத உடல்நிலை எனக்கு இருந்தாலும்கூட, ஒரு மகத்தான பெரியவருக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்கின்ற அந்த எண்ணம் உந்தித்தள்ள என்னுடைய கடமையை ஆற்றவேண்டும், ஒரு பெரிய மனிதருக்கு ஆற்றவேண்டிய கடமையை ஆற்றத் தவறினால் வாழ்விலே, குறிப்பாக, பொது வாழ்விலே நாம் செய்த பெரும் பிழையாகும் என்ற அந்த உணர்வோடு இந்த இரங்கல் தீர்மானத்தின் தொடர்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

90 அகவை நிரம்பிய மகத்தான மனிதர் சி.எஸ். அவர்கள் கோவை மாவட்டத்திலே, பொள்ளாச்சிக்குஅருகிலே உள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே பிறந்தவர். சிறிய கிராமத்திலே

பிறந்தவர் என்றாலும்கூட, இந்தப் பெரிய நாட்டின் தலைவர் களிலே ஒருவராகத் திகழ்ந்தவர். சட்டப் படிப்பை முடித்து வழக்கறிஞர் தொழிலிலே ஈடுபட்டு இருந்த சி.எஸ். அவர்கள், அண்ணல் காந்தியடிகளுடைய ஒத்துழையாமை இயக்கத்திலே கவரப்பட்டு வழக்கறிஞர் பதவியைப் பொருட்படுத்தாமல் தேசிய இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு விடுதலை ஆர்வத்தோடு பல போராட்டங்களில் ஈடுபட்டு தியாகத் தழும்புகளைப் பெற்றவர் மறைந்த சி.எஸ். அவர்கள் ஆவார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, 1952 ஆம் ஆண்டில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும், பின்னர் 1954ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும் நிதியமைச்சராக விளங்கி பெரும் புகழ் பெற்றவர். 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று, அப்பொழுதும் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய தலைமையிலே இந்த அவையிலே அவர்கள் நிதியமைச்சராக வீற்றிருந்தார்கள். அப்பொழுதுதான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல நிதிநிலை அறிக்கையை அவர்கள் இங்கே முன்வைத்து, இன்னும் ஒரு 3, 4 கோடி ரூபாய் சேர்ந்திருந்தால் சென்சுரி அடித்திருப்பேன், 100 கோடி ரூபாய் பட்ஜெட்டைக் கொடுத்திருப்பேன் என்று அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள். 1957 ஆம் ஆண்டு அவர்கள் இந்த அவையிலே அமைச்சராக, நிதியமைச்சராக இருந்தபோது, நானும், பேராசிரியரும் இந்த அவையிலே உறுப்பினர்களாக இருந்தோம் அன்றுதொட்டு அவரை நாங்கள் மிக நன்கு அறிவோம்.

1962-ல் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலிலே அவர்கள் பெருவெற்றி பெற்று, எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, பல பெரிய இரும்பு எஃகுத் தொழில்கள் இந்தியாவில் உருவாவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கினார்கள். பண்டித நேரு அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, லால் பகதூர் சாஸ்திரி தலைமையில் அமைந்த அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராகப் பொறுப் பேற்று, இங்கே நண்பர்களெல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, வேளாண் துறை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன்

அவர்களுடைய துணையோடு இந்தியாவிலே பசுமைப்புரட்சித் திட்டத்திற்கு வித்திட்ட பெருமைக்குரிய திருமகன் மறைந்த சி.எஸ். அவர்கள் ஆவார்கள். அந்த முயற்சியின் காரணமாகத் தான் பற்றாக்குறை நிலைமையிலேயிருந்த நமது நாட்டு உணவு நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சில ஆண்டுகளில் உணவில் தன்னிறைவு அடையக்கூடிய ஒரு சூழ்நிலையை சி.எஸ். அவர்கள் உருவாக்கினார்கள். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் மறைவுற்றதைத் தொடர்ந்து இந்திரா காந்தி அம்மையார் தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலும் சி.எஸ். அவர்கள் இடம் பெற்றார்கள். 1974-77 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவினுடைய நிதியமைச்சராக அவர்கள் விளங்கி, இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளிலே வங்கிகள் உருவாவதற்கு வழி வகுத்தார்கள். இன்றைக்கு கிராமப்புற வங்கிகள் எல்லாம் இருக்கின்றன என்றால், அதற்குக் காரணகர்த்தா 1974-77 வரையில் நிதியமைச்சராக அன்றைக்கு இருந்த சி.எஸ். அவர்கள்தான் என்று சொன்னால், அது மிகையாகாது. 1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியிலே ஒரு பிளவு ஏற்பட்டு, காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்த அந்த காலகட்டத்தில் சி.எஸ். அவர்கள் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய ஆதரவாளராக விளங்கினார்கள். ஆனாலும்கூட, இந்திரா காந்தி அவர்கள் Emergency - நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய பிறகு அதனால் ஏற்பட்ட விளைவுகளை அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள் என்பது வரலாற்றுக் குறிப்பாகும். அதற்குப் பிறகு 1979 ஆம் ஆண்டில் சரண்சிங் தலைமையிலே அமைந்த அமைச்சரவையில் சிறிது காலம் அவர்கள் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் விளங்கினார்கள். அதன் பின்னர், தீவிர அரசியலிலிருந்து விலகி இருந்த சி.எஸ். அவர்களை 1992 ஆம் ஆண்டில் மராட்டிய மாநில ஆளுநராக இருக்க வேண்டுமென்று கேட்டு, அவ்வண்ணம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அங்கேயும் அவர் தன்னுடைய நேர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய சம்பவம் ஒன்று உண்டு. அப்போது பிரதமர் நரசிம்மராவ் அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையிலே அவர் தெரிவித்த ஒரு கருத்தின் காரணமாக, அந்தக் கருத்து வெளியானதைத் தொடர்ந்து ஆளுநர் அலுவலக மரபை நிலைநாட்டும் வகையில் பதவியிலிருந்து விலகி, சிறந்த ஜனநாயக மரபைக் காத்த அந்தப் பெருமையும் சி.எஸ். அவர்களைச் சாரும்.

'தமிழால் முடியும்' என்ற ஒரு அருமையான புத்தகத்தைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியவர் சி.எஸ். அவர்கள். இந்தித் திணிப்பால், இந்தி ஆதிக்கத்தால், ஆங்கிலம் அறவே அகற்றப் படுவதால் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டு விடுவார்கள் என்பதற்காக நடைபெற்ற அந்த மாபெரும் கிளர்ச்சியில், அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாகவோ அல்லது எதிர்ப் பாகவோ அல்லாமல் அந்தக் கிளர்ச்சியினுடைய காரணத்தை அகில இந்தியாவிலே உள்ள காங்கிரஸ் தலைமை மத்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய, பதவியை அழகேசன் அவர்களோடு சேர்ந்து அன்றைக்குத் துறந்த பெருமைக்குரியவர் சி.எஸ். அவர்கள் ஆவார்கள்.

கடைசியாக கடந்த 6, 7 ஆண்டுகளாக அவர்கள் அரசியலில் ஈடுபாடு இல்லாதவராக இருந்தாலும்கூட, ஆன்மீகத் துறை, பொதுத்துறை, பொது வாழ்வுத் துறை, அரசியலிலே ஈடுபட்ட அத்தனை பேருக்கும் அறிவுரை வழங்குகின்ற துறை, இதிலே ஒரு ஆசானாகவே அவர்கள் விளங்கினார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த 5, 6 ஆண்டு காலத்தில் அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம் நான் என்றைக்கும் சேமித்து பொக்கிஷமாக வைக்க வேண்டிய கடிதங்களாகும். அந்த அளவிற்கு அறிவுரைகள், குறைகள் இருந்தால் அதனைச் சுட்டிக்காட்டுகின்ற மனப்பான்மை, அந்தக் குறைகளை எப்படி நிவர்த்திக்க வேண்டுமென்ற யோசனை சொல்கின்ற அந்த அறிவுக்கூறு இவை எல்லாம் அடங்கிய கடிதங்கள் ஏராளம் அவர்களால் எனக்கு எழுதப்பட்டிருக்கின்றன. அடிக்கடி அவரைச் சந்தித்து அவருடைய அறிவுரைகளைப் பெறுகின்ற வாய்ப்பை அண்மைக்காலமாக நான் பெற்றிருந்தேன். அந்த வாய்ப்பு இப்போது நழுவிவிட்டது என்கிற பெரு வருத்தத்திற்கிடையே உங்களிடையே நின்றுகொண்டிருக் கின்றேன். அவருடைய புகழ் என்றென்றும் நிலைக்கும், அவருடைய தியாகம் என்றென்றும் இந்தியத் திருநாட்டினுடைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்கின்ற அந்த உறுதியோடு அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய அருமைத் துணைவியாருக்கும், அவருடைய அருமைச் செல்வனுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகின்றேன்.

அபுல்ஹசன் எம்.எல்.ஏ. மறைவுக்கு இரங்கல்

உரை : 97 நாள் : 20.01.2001

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் வழியில் சில கருத்துக்களை கண்ணீரோடு கலந்து கூறிட நின்றுகொண்டிருக் கின்றேன். இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், என்னுடைய நெருங்கிய நண்பரும், பொது வாழ்க்கையிலே நீண்டகால அனுபவம் வாய்ந்தவரும், பொதுமக்களுடைய செல்வாக்கை நிரம்பப் பெற்றவருமான மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அபுல்ஹசன் அவர்கள் மறைந்துவிட்டார்கள் என்ற செய்தி பெரும் மனத்துயரத்திற்கு நம்மையெல்லாம் உள்ளாக்கியிருக்கின்றது.

அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் மாத்திரமல்ல, மயிலாடுதுறையினுடைய நகராட்சி மன்றத் தலைவராக இருந்து ஆற்றிய பணிகளும் என்றென்றும் மறக்க இயலாதவை. அவர்கள் அந்த மன்றத்தினுடைய தலைவராக இருந்து பணியாற்றிய காலத்தில் எல்லாம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த வாய்ப்பு எனக்கு இருந்த காரணத்தினால், அவர்கள் விடுத்த எந்த வேண்டுகோளையும் அலட்சியப் படுத்தாமல், மயிலாடுதுறை நகராட்சிக்குத் தேவையான அத்தனை காரியங்களையும் நான் செய்துகொடுத்தேன் என்பதுதான் அவரை இழந்திருக்கிற நேரத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள கடுகளவு ஆறுதல் என்பதை இங்கே கூற விரும்புகின்றேன்.

அவர்கள் இந்த அவையிலே எத்தனையோ முறை பேசியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து அவர்கள் பேசுகின்றார்கள் என்றாலும்கூட, அவர்களுடைய நியாயமான வாதங்களை எந்தவொரு நேரத்திலும் ஆத்திர வயப்பட்டவராக எடுத்து வைத்தவர் அல்ல. எல்லோரும் சிரிக்கத்தக்க அளவிற்கு, அவரால் யார் தாக்கப்படுகிறார்களோ அவர்களேகூட சேர்ந்து சிரிக்கின்ற அளவிற்கு, அவ்வளவு இலாவகமாக தன்னுடைய பேச்சை அமைத்துக்கொண்டு

உரையாற்றக்கூடிய திறமை பெற்றவர் மறைந்த அபுல்ஹசன் அவர்கள் ஆவார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் நான் கலந்துகொள்கின்ற பல நிகழ்ச்சிகளில், குறிப்பாக திருமண நிகழ்ச்சிகளில் அல்லது பொது நிகழ்ச்சிகளில் அல்லது அரசு நிகழ்ச்சிகளில் எல்லாம் அவரும் கலந்துகொண்டு ஆற்றிய உரைகள் எல்லாம் அரசுக்கு ஆலோசனை சொல்கின்ற உரைகளாகவும், ஆட்சி செய்கின்ற நற்காரியங்களை மேலும் ஊக்கப்படுத்துகின்ற உரைகளாகவும் அமைந்ததை என்னால் என்றைக்குமே மறக்க முடியாது.

இஸ்லாமியச் சமுதாயத்திலே, இனிய இயல்பும், இணையற்ற தொண்டுள்ளமும் கொண்டு வாழ்ந்த ஒரு நல்லவரை, வல்லவரை நாம் இப்போது இழந்திருக்கின்றோம். எனக்கு அவர் எவ்வளவு பெரிய நெருங்கிய நண்பர் என்பதை தஞ்சை மாவட்டத்திலுள்ள எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் மிக நன்றாக அறிவார்கள்.

நேற்றையதினமே நான் சொன்னேன். தங்களிடமும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமும், ''இன்று காலையிலே எனக்கு வேறு ஒரு முக்கியமான நிகழ்ச்சி இருக்கிறது, ஆகவே இன்று அவைக்கு நான் தாமதமாக வருவேன், மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்று நேற்றைக்கே நான் தங்கள் அறையிலே கேட்டுக்கொண்டேன். இருந்தாலும்கூட, இந்த நிகழ்ச்சிக்கு, அவருக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற இந்த நிகழ்ச்சிக்கு நான் வராமல் இருக்கக்கூடாது என்பதற்காக, நான் ஒத்துக்கொண்ட நிகழ்ச்சியை ஒரு மணி நேரம் தள்ளிவைத்துவிட்டு வந்தேன். என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அந்த அளவிற்கு என்னுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்ட அந்த உருவம், இனி இந்த அவையிலே இடம்பெறாது என்பதையும், இந்த அவையிலே இடம் பெறாவிட்டாலும்கூட, என்னுடைய அகத்திலே, உள்ளத்திலே என்றென்றும் இடம்பெறக்கூடிய உருவம் என்பதையும் இங்கே நினைவுபடுத்தி, அவரை இழந்து வாடுகின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களுக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், அபுல்ஹசன் அவர்களுடைய குடும்பத்தாருக்கும், உற்ற நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் என் சார்பிலும், தமிழகத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகின்றேன்.

குஜராத் நில நடுக்கம்

உரை : 98 நாள் : 30.01.2001

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசு நாளன்று குஜராத்தில் நடைபெற்ற நில நடுக்கம், அங்குள்ள பூமிப் பகுதியை மாத்திரம் பிளக்கவில்லை ; நம்முடைய நெஞ்சங்களை எல்லாம் பிளந்துவிட்ட கொடுமையான நிகழ்ச்சியாகும். பல்லாயிரக் கணக்கிலே உயிர்ச் சேதம், பொருள் சேதம் அங்கே ஏற்பட்டு, இந்திய பூபாகத்திலே உள்ள அனைத்து மக்களும் தங்களுக்கு உற்ற பாதிப்புபோல வருந்துகின்ற ஒரு சூழ்நிலையும் உருவாகி இருக்கிறது.

குஜராத்திலே புஜ் என்ற நகரமும், கட்ச் வளைகுடா பகுதியும் முழுவதும் நாசமடைந்துள்ளன. வர்த்தக நகரமான அகமதாபாத், ஜவுளித்தொழில் நகரமான சூரத், ராஜ்காட் போன்றவைகளும் இந்த நில நடுக்கத்தால் சிதறிக் கிடக்கின்றன என்று செய்திகள் வந்துள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், புஜ் நகரமே கான்கிரீட்களிலான குப்பைமேடாகக் காட்சியளிக்கிறது என்று அங்கிருந்து வருகின்ற செய்திகள் அறிவிக்கின்றன.

ஏறத்தாழ 550 கிராமங்கள் அறவே அழிந்துவிட்ட தாகவும், 70 கிராமங்களுக்கு இன்னும் மீட்புக் குழுவினர் செல்ல முடியாத அளவுக்கு அந்தப் பகுதிகளில் சாலைகளும், பாலங்களும் சேதமடைந்து கிடக்கின்றன என்ற செய்திகளும் ஈட்டி என நம்மைத் தாக்குகின்றன. தொடக்கத்திலே 500 பேருக்குமேல் உயிரிழந்தார்கள் என்று சொல்லப்பட்ட தகவல் பின்னர் இரண்டாயிரமாக, பத்தாயிரமாக, இருபதாயிரமாக,

முப்பதாயிரமாக நீண்டு கொண்டிருக்கிறது. சில ஏடுகளிலே இலட்சத்தைத் தாண்டும் இந்தக் கணக்கு என்று செய்திகள் வருவதையும் நாம் காணுகின்றோம்.

மத்திய அரசினால் தேசியப் பேரழிவு என அறிவிக்கப்பட்டுள்ள குஜராத் நிலநடுக்கத்தில் பாதிக்கப் பட்டவர்களை மீட்பதற்காக நமது நாட்டு இராணுவம் அழைக்கப்பட்டு மீட்புப் பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் வேகமாக நடைபெற்று வருகின்றன. இடிபாடுகளுக்கிடையிலே சிக்கியுள்ள பிணங்கள் தோண்டி எடுக்கப்படுகின்ற காட்சிகளையும் காயமடைந்தவர்கள் மருந்துவமனைகளிலே சேர்க்கப்பட்டு அவர்கள் துடிக்கின்ற காட்சிகளையும் நாம் T.V - க்களின் மூலமாகக் காணுகிற நேரத்தில் எப்படிப் பதைக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்கிறோம்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துவர மத்திய அரசினுடைய ஏற்பாட்டின் மூலம் 50 விமானங்களும் ஹெலிகாப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. காண்ட்லா துறைமுகத்திலே நிர்தேஷக், ஜமுனா ஆகிய இரண்டு கடற்படைக் கப்பல்கள் தற்காலிக மருத்துவமனைகளாகவே மாற்றி அமைக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், நிவாரணப் பணிகளுக்காக உணவுப் பொருள்களையும், ஆடைகள், கம்பளி, ஜமக்காளம் முதலியவைகளையும் மருந்துப் பொருள்களையும் திரட்டிக் கொண்டு குஜராத் நகரத்தை நோக்கி பல பகுதிகளிலே யிருந்து சிறப்பு இரயில்கள் இயக்கப்படுகின்றன.

இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து மீட்புப் பணிக்காக பல்வேறு குழுக்கள் வந்துள்ளன. இங்கிலாந்து தீயணைப்புப் படை அதிகாரி கெவின் செல்லியும், ஜெர்மனி குழுத்தலைவர் பி.ஸ்லக் அவர்களும் கடைசி மனிதனை மீட்கும் வரையில் தங்களுடைய பணி தொடருமென்று அறிவித்திருக்கின்றார்கள். சாதி, மத, இனம் கடந்த மனித நேய உணர்வு பீறிட்டு எழுவதன் காரணமாக இந்த நாடுகளிலிருந்தெல்லாம் நவீன கருவிகளோடு மோப்ப

நாய்களும் மீட்புக் குழுவினரும் வருகை தந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து அடுத்தடுத்து அதே மாநிலத்தில் நில அதிர்வுகளும் கடந்த 3 நாட்களில் ஏறத்தாழ 288 முறை ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காணும்பொழுதும், கேட்கும் பொழுதும் மேலும் மேலும் நாம் துடிக்கின்றோம்.

அஃதன்னியில் நேற்றையதினம், 29-1-2001 காலை 8.00 மணி அளவில் கர்நாடகாவிலும், தமிழ்நாட்டிலே தருமபுரி மாவட்டத்திலும் சில பகுதிகளிலே நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில் பெங்களூர், தும்கூர், மாண்டியா, கோலார், மைசூர் மாவட்டங்களில் நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்திலே ஓசூர், தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உத்தனப்பள்ளி, உளிமங்கலம், நாகனூர், ராயக்கோட்டை, பெண்ணாகரம் உட்பட பல பகுதிகளிலே இந்த அதிர்ச்சி ஏற்பட்டு 2 வினாடி நீடித்துள்ளது என்றும் இந்த அதிர்ச்சி 4.5 ரிக்டர் அளவு இருந்துள்ளது என்றும் செய்திகள் வந்துள்ளன.

நில நடுக்கம் காரணமாக பழைய ஏ.எஸ்.டி.சி. அட்கோ மாடி கார்னரில் விரிசம் ஏற்பட்டு உள்ளது. ஓசூர் சுண்ணாம்பு ஐபி, ஓசூர் தேர்பேட்டை, ராயக்கோட்டை, அட்கோ பகுதிகளிலும் வீடுகளிலே விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் காணும்போது இதை முன்கூட்டியே அறியக்கூடிய விஞ்ஞானம் இன்னும் - நம்முடைய நாட்டிலே மாத்திரம் அல்ல-உலகத்திலேயே ஏற்படாத இந்தச் சூழ்நிலையில், ஏற்படக்கூடும் என்கிற ஓரளவு அடையாளங் களையாவது தெரிந்துகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுக்க வேண்டியது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை நம்மால் உணராமல் இருக்க முடியவில்லை. அதைப்பற்றி இந்திய அரசு மாத்திரமல்ல, உலகம் முழுவதும் உள்ள எல்லா அரசுகளும் சிந்திக்க வேண்டிய ஒரு நேரம் வந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

நம்மைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாம் சிந்துகின்ற கண்ணீரோடு, நம்முடைய

காணிக்கையாக நம்மால் இயன்ற நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்து இருக்கின்றோம். அதனுடைய அடையாளமாகத்தான் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழக அரசின் சார்பிலே 5 கோடி ரூபாய் முதலிலே வழங்கப்பட்டது. இன்று மாத்திரமல்ல, நாம் பல ஆண்டு காலமாகவே, இந்தியாவிலே எந்தப் பகுதியிலே யாருக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும் உதவக்கூடிய அந்த மனப்பான்மையை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் சொல்லி யாருக்கும் புரிய வைக்கவேண்டிய அவசியம் இல்லை. கார்கில் போராட்டத்திற்கு 50 கோடி ரூபாயை வழங்கியது தமிழ்நாடு. அதைப்போலவே ஒரிசா மாநிலத்திலே அண்மையிலே நிகழ்ந்த புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 3 கோடி ரூபாய் மதிப்புள்ள வேட்டி, சேலைகளும், ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பால் பவுடரும் 44 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகளும், இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அவல், வெல்லம் போன்ற பொருட்களையும் ஒரிசாவுக்கு நாம் அனுப்பினோம். அதேபாணியிலே இப்போது அனுப்புவது ஓரளவுக்கு ஒப்பிடும்போது குறைவாகக்கூட இருக்கும். மேலும் அதிகமாக அனுப்ப வேண்டும் என்கின்ற அந்த உணர்வு நம்மிடையே எழுந்துள்ளது. அந்த உணர்வின் எதிரொலியாகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த அவையிலே இப்போது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள்.

அதனால்தான் நேற்றையதினம் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலேகூட நான் குறிப்பிட்டேன். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, பொருள் உதவி ஆகிய அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு முன்வந்துள்ளது என்றும் மேலும் தமிழக அரசின் மூலமாக நிவாரண நிதி வழங்க விரும்புவோர் 'குஜராத் நில நடுக்க நிவாரண நிதி' என்ற பெயரில் சென்னை, தலைமைச் செயலகத்திலே உள்ள பொதுத்துறைச் செயலாளர் பெயருக்கு காசோலைகளோ வங்கி வரைவோலைகளோ அனுப்புமாறு கேட்டுக்கொண்டேன். ஏனென்றால், இவற்றையெல்லாம்

894.8115
TAM

முதலமைச்சரிடத்திலே தர வேண்டுமென்று சொன்னால், அரசியல் காரணமாக பலருக்கு ஒரு தயக்கம் ஏற்படும் என்பதற்காகத்தான், அரசு பொது என்கின்ற வகையில் பொதுத் துறைச் செயலாளருக்கு, அவருடைய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். எனவே இதில் அரசியல் கட்சி வித்தியாசங்கள் பாராமல் அனைவரும் தங்களுடைய நிதியை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர்கள் தங்களுடைய ஒருமாத ஊதியத்தை வழங்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்குவார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சார்பாகவும், வழங்க வேண்டுமென்று மற்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அரசு அலுவலர்கள் ஒன்றியத்தின் சார்பாக நண்பர் சூரியமூர்த்தி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்களுடைய அரசு அலுவலர்கள் அத்தனை பேருடைய ஒருநாள் ஊதியத்தை இந்த நிதிக்கு வழங்குவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பிடித்தமே செய்து கொள்ளுங்கள். ஒருநாள் ஊதியத்தை பிடித்தம் செய்துகொண்டு எங்களுக்கு ஊதியம் அளியுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அதற்காக நன்றி பாராட்டி, மற்றவர்களும் இதற்குத் தங்களுடைய ஆதரவை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உயிரிழந்த குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் நம்முடைய நெஞ்சார்ந்த ஆறுதலை மிகுந்த உருக்கத்தோடு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வணக்கம்.

ANNA CENTENARY LIBRARY

